அவருடைய

மேன்மைக்கு

என்னுடைய

முழுமை

தினசரி தியானச் செய்திகள்

ஆஸ்வால்ட் சேம்பேர்ஸ்

தமிழாக்கம் : டி. எஸ். ஸ்பரிஜன்

வெளியீடு :

லைட் ஆப் ஹோப் மிஷன்

925, கிரீன் தெரு, நாகர்கோவில்

தமிழ்நாடு, இந்தியா

Copyright @ 1927 by the
Oswald Chambers Publication Association Limited

முதற் பதிப்பு : ஜூன், 1999 (2000 பிரதிகள்)

இரண்டாம் பதிப்பு : நவம்பர், 2002 (2000 பிரதிகள்)

திருத்திய பதிப்பு : டிசம்பர் 2015 (2000 பிரதிகள்)

விலை : ரூ. 150/-

Printed at Rainbow Printers, Sarguna Veethi,
Nagercoil-629 001 Phone : 224104

முன்னுரை

இந்த அனுதின தியானங்கள் பல ஆதாரங்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. முக்கியமாகக் கிளபார்மிலுள்ள வேதாகமப் பயிற்சிக் கல்லூரியில் 1911 – 1915 என்ற ஆண்டுகளிலும் பின்னர் 1915 அக்டோபர் முதல் 1917 நவம்பர் வரையிலும் கொடுக்கப்பட்ட விரிவுரைகளிலிருந்தும் மற்றும் எகிப்தில் ஸெயிடவுண் என்னுமிடத்தில் ஒய்.எம்.சி.ஏ. யில் இரவுதோறும் கொடுக்கப்பட்ட செய்திகளிலிருந்தும் அவைகள் தொகுக்கப்பட்டுள்ளன. 1917 நவம்பரில் என் கணவர் தேவனுடைய சமுகத்திற்குள் பிரவேசித்தார். அதுமுதல் அவருடைய செய்திகளில் அநேகம் புத்தகங்களாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இந்தத் தியானங்கள் திரட்டப்பட்ட மற்றும் பலச் செய்திகள் காலக்கிரமத்தில் பிரசுரிக்கப்படும்.

இப்புத்தகத்தின் அதிகமான பகுதிகளும் கல்லூரியில் தியான வேளைகளில் கொடுக்கப்பட்ட செய்திகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. அநேக மாணவர்களுக்கு அந்தத் தியான மணிநேரம் தேவனோடுள்ள அவர்கள் வாழ்க்கைக்குத் திருப்புமுனையாயிருந்தது.

ஆவிக்குரிய இரகசியத்தில் தேர்ச்சியடைந்தவர்களும், தேவனுக்குள் கிறிஸ்துவோடு மறைந்துள்ள வாழ்க்கை கொண்டவர்களுமாகிய சிலரிடமே மக்கள் மறுபடியும் மறுபடியும் திரும்பிவருவர். அவர்கள் பழங்கால மார்க்கத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும் சிலுவையின் ஆணிகளில் தொங்கவைக்கப்பட்டவர்களுமே (இராபர்ட் முரே மக்ஷேன்).

இந்த ஆக்கியோனுடைய போதனைகளுக்கு மக்கள் திரும்பி வருவார்கள் என்று உணர்ந்ததால் இந்தப் புத்தகம் பிரசுரிக்கப் படுகிறது. இந்தச் செய்திகள் அனுதினமும் தொடர்ந்து வல்லமையளிக்கும் ஜீவனையும் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலையும் கொண்டுவரட்டும் என்ற ஜெபத்தோடு இப்புத்தகம் அனுப்பப்படுகிறது.

B. C.

40, சர்ச் கிரசன்ட்
மஸ்வெல் ஹில்,
லண்டன் N. 10

அர்ப்பணம்

வேதாகமப் பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்கு

அவருடைய நாமத்தினிமித்தம் புறப்பட்டுப் போனார்கள்

பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்

ஆக்கியோன் அறிமுகம்

ஆஸ்வால்ட் சேம்பேர்ஸ் ஸ்காட்லாந்திலுள்ள ஆபர்டீன் நகரில் 1874 ஜூலை 14-ல் பிறந்தார். லண்டனில் பிரசித்திபெற்ற போதகராயிருந்த மறைதிரு சி. எச். ஸ்பர்ஜனுடைய ஊழியத்தில் இரட்சிக்கப்பட்டார். எடின்பரோ பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டம் படித்தார். பின்னர் 22-ம் வயதில் ஆண்டவருடைய ஊழியத்திற்கு அழைப்புப் பெற்று இறையியல் கற்றார். 1906 முதல் 1910 வரை அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஜப்பான் மற்றும் இங்கிலாந்திலும் அதைச் சார்ந்த நாடுகளிலும் சுற்றுப்பயணஞ்செய்து வேதத்தைப் போதித்தார்.

1910-ல் அவர் மணவாழ்வில் ஈடுபட்டார். அத்தம்பதிகளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

1911-ல் வேதாகமப் பற்சிக் கல்லூரியொன்றை லண்டனில் நிறுவினார். அதற்கு அவர் முதல்வராகவும், மனைவியார் நிர்வாகியாகவும் செயல்பட்டனர். முதலாம் உலக மகா யுத்தம் ஆரம்பித்ததால் அக்கல்லூரி 1915-ல் மூடப்பட்டது.

1915 அக்டோபரில் எகிப்திலுள்ள கெய்ரோ நகருக்கு அவர் குடும்பத்தோடு சென்றார். அங்கு அவர் பிரித்தானிய ஐக்கிய நாடுகளின் இராணுவத்தாருக்கு ஒய்.எம்.ஸி.ஏ.யின் போதகராகப் பணியாற்றினார். அங்குவைத்து 1917 நவம்பர் 15-ல் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். எளியமுறையில் அவரை அடக்கஞ்செய்ய அவருடைய மனைவியார் விரும்பியபோதிலும் சிறந்த இராணுவ மரியாதையோடு அவருடைய சரீரம் நல்லடக்கம் செய்யப்பட்டது. நவம்பர் 18-ம் தியதி நடைபெற்ற ஞாபகார்த்தக் கூட்டத்தில் அவருடைய உடன் ஊழியர்களும் அவரால் கிறிஸ்துவண்டை வழிநடத்தப்பட்ட போர்வீரர்களும் ஏராளமாய்க் கலந்துகொண்டனர்.

ஆஸ்வால்ட் சேம்பேர்ஸின் மரணத்துக்குப்பின் நாலரை வயதான மகளோடு இங்கிலாந்து திரும்பிய அவருடைய மனைவியார்

மறைந்துபோன தன்னுடைய கணவரின் ஊழியத்தில் தன் பங்கு என்னவென்று சிந்திக்க ஆரம்பித்தார்கள். நீதிமன்ற சுருக்கெழுத் தாளராகப் பணியாற்றிய அவர்கள் தன் கணவரோடு வாழ்ந்த ஏழு ஆண்டுகளும் அவருடைய பிரசங்கங்களில் பலவற்றை முழுமை யாகச் சுருக்கெழுத்தில் எழுதி வைத்திருந்தார்கள். ஆகவே, அப்பிரசங் கங்களைக் கணவருடைய மரணத்துக்குப்பின் ஏறக்குறைய அரை நூற்றாண்டுகள் புத்தகங்களாக வெளியிட்டார்கள். எனவேதான் ஆஸ்வால்ட் சேம்பேர்ஸ் ஒரேயொரு புத்தகத்தை எழுதியபோதிலும் அவருடைய பெயரில் முப்பதுக்கு அதிகமான புத்தகங்கள் வெளி வந்துள்ளன.

இந்நிலையில் தினசரி தியானப்புத்தகம் ஒன்றைத் தொகுப்பது தெய்வச் சித்தமென்பதை உணர்ந்த அவருடைய மனைவியார், கணவரது செய்திகளிலுள்ள சிறந்தக் கருத்துக்களைத் தெரிந்தெடுத்து அவைகளை ஒரு புத்தகமாக 1923-ல் வெளியிட்டார். அதுவே அவருடைய மேன்மைக்கு என்னுடைய முழுமை என்ற இந்தப் புத்தகம். முப்பதுக்கு அதிகமான மொழிகளில் இது பிரசுரிக்கப்பட்டு, உலகெங்கும் பல இலட்சக்கணக்கானப் பிரதிகள் விற்கப்பட்டுள்ளன. மிகவும் அதிகமாக விற்பனையாகிற மிகச்சிறந்த கிறிஸ்தவ இலக்கியங் களில் ஒன்றாக இன்றுவரையிலும் இது கருதப்படுகிறது.

முகவுரை

அவருடைய மேன்மைக்கு என்னுடைய முழுமை (My Utmost for His Highest) என்னும் தியான நூல் உலகத்திலுள்ள சிறந்த புத்தகங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஆஸ்வால்ட் சேம்பேர்ஸ் என்னும் பக்தன் தன்னுடைய இறையியல் கல்லூரியில் கூறிய கருத்துக்களே இப்புத்தகத்தில் அதிகம் இடம்பெற்றுள்ளன.

இப்புத்தகத்தைத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிடுமாறு ஒரு நண்பர் என்னிடம் கேட்டபோது நான் மகிழ்ச்சியோடு ஒத்துக் கொண்டேன். ஆனால் இவ்வேலையை நான் ஆரம்பித்தபோது மிகவும் தயக்கமடைந்தேன். ஏனெனில், இதில் கூறப்பட்டுள்ள கருத் துக்கள் மிகவும் ஆழமானவைகளாக இருப்பதோடு, இதன் மொழி நடையும் மிகவும் கடினமாய்க் காணப்பட்டது. எனினும் அந்த நண்பரது ஊக்கத்தால் நான் மனந்தளராது இப்பணியைத் தொடர்ந்து செய்தேன்.

சில ஆங்கிலச் சொற்களுக்குத் தகுந்த தமிழ்ச் சொற்கள் இல்லாத காரணத்தால் நானாகவே அவகளுக்காகச் சில தமிழ்ச் சொற்களைப் படைத்துள்ளேன். அவற்றில் ஆளத்துவம், ஒன்றித்தல் போன்றவை அடங்கும். மேலும் சில ஆங்கிலச் சொற்களுக்கு அகராதி யிலும் வேதப்புத்தகத்திலும் கூறப்பட்டுள்ள வார்த்தைகளோடு வழக் கத்தில் இருக்கும் வார்த்தைகளையும் ஒப்பிட்டு அவற்றில் தெளிவான வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளேன்.

இப்புத்தகத்தைத் தமிழில் வெளியிட ஊக்குவித்த என் நண்பர் போதகர் ஜோசையா பிலிப்புக்கும், மொழிபெயர்ப்பதில் உதவிய என் மனைவி இவான்ஜலினுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள் ளுகிறேன். இப்புத்தகத்தைத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிட அனுமதியளித்துதவிய ஆஸ்வால்ட் சேம்பேர்ஸ் வெளியீட்டு நிறுவனத்தாருக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

எல்லாம் வல்ல இறைவன் இப்பெரும் முயற்சியைக் கைகூடி வரப்பண்ணினார். அவருக்கே துதியும் கனமும் மகிமையும் உண்டாவ தாக. இப்புத்தகத்தை வாசிக்கும் ஒவ்வோருவரும் இதில் அடங்கியுள்ள ஆழமான கருத்துக்களைப் புரிந்து பயன்பெற ஆவியானவர் உதவி செய்யட்டும் என்னும் ஜெபத்தோடு இப்புத்தகத்தை வெளியிடுகிறோம்.

நாகர்கோவில்,
தமிழ்நாடு, இந்தியா.

D. S. ஸ்பர்ஜன்

திருத்திய பதிப்புக்கான முகவுரை

அவருடைய மேன்மைக்கு என்னுடைய முழுமை என்னும் இப்புத்தகம் இரண்டு பதிப்புக்களைத் தாண்டியது. அநேகத் தமிழ் அன்பர்கள் இந்தப் புத்தகத்தை எங்களிடமிருந்து பெற்று, அதனை வாசித்துப் பயனடைந்துள்ளனர். இப்போதும் இந்தப் புத்தகத்துக்காகப் பலரும் எங்களை அணுகுகின்றனர்.

இப்புத்தகம் இந்தியாவின் பிறமொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டு அச்சிடப்படுகின்றது. அவைகளைப்போன்று தமிழ்ப் புத்தகமும் இருக்கவேண்டும் என்னும் விருப்பத்தோடு புதிய அளவில் இப்புத்தகத்தை அச்சிட்டு வெளியிட எண்ணினோம். அதற்குத் தகுந்து புத்தகத்தின் பரிமாணத்தைப் பெருக்கினோம். இந்த மொழியாக்கத்தை சற்றுகூட விரிவாகத் திருத்தியமைக்க இது உதவியது.

மேலும், வாசிக்கிறவர்கள் புரிந்துகொள்ளத்தக்கதாகப் பல இடங்களில் வாக்கிய அமைப்புகளை மாற்றியமைத்தோம். புரிந்து கொள்ளமுடியாத சொற்றொடர்களைத் எளிமைப்படுத்தினோம். மற்றும், கடினமான பதங்களுக்குப்பதில் எளிதானப் பதங்களைப் பயன்படுத்தி யிருக்கிறோம். ஆயினும், சில இடங்களில் கருத்துக்கள் கருகலாக இருக்கின்றன என்பதை ஒத்துக்கொள்ளுகிறோம்.

இந்தத் திருத்திய பதிப்புக்கு இரண்டு உபகரணங்களைக் கூடுதலாகப் பயன்படுத்தினோம். ஆக்கியோன் ஆங்கிலேயர் என்ப தால், அவருடைய பதப்பிரயோகங்களைச் சரிவரப் புரிந்துகொள்ள பல இடங்களில் ஆக்ஸ்ஃபோர்டு ஆங்கில அகராதியைப் பயன்படுத் தினோம். அது மிகப் பயனுள்ளதாயிருந்தது என்பதைக் கண்டோம்.

மேலும், தற்கால தொழில்நுட்ப அறிவியலின் முன்னேற்றத் திற்கேற்ப இணயதளத்தையும் பயன்படுத்தினோம். தனி வார்த்தை களுக்குப் பொருள் கண்டுபிடிக்கவும் சொற்றொடர்களுக்கும் பதப்பிர யோகங்களுக்கும் கருத்துக்களைத் தெரிந்தெடுக்கவும் அது ஒத்தாசை யாயிருந்தது.

அதோடு, இப்புத்தகத்திலுள்ள கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ளத்தக்கதாகப் புத்தகத்தில் இடம்பெறாத சில வார்த்தைகளை/வாக்கியங்களை அடைப்புக் குறிகளுக்குள் போட்டிருக்கிறோம். இது வாசிப்பவர்களுக்குப் பயனுள்ளதாயிருக்கும் என்று நம்புகிறோம்.

இன்னும் அநேகர் இந்தப் புத்தகத்தின்வாயிலாக தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளட்டும் என்னும் ஜெபத்தோடு வாசகர்களை வாழ்த்திக்கொள்ளுகிறோம்.

நாகர்கோவில்,
தமிழ்நாடு, இந்தியா.

D.S. ஸ்பர்ஜன்

அறியாமல் புறப்பட்டுப் போவீர்களா?

தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான். எபி. 11:8.

மேற்கண்டவாறு நீங்கள் வெளியே சென்றிருக்கிறீர்களா? அவ்வாறு சென்றால், நீங்கள் என்ன செய்கிறீர்களென்று யாராவது உங்களிடம் கேட்டால் நேர்மையான பதில்கூறச் சாத்தியமில்லை. நீங்கள் என்ன செய்ய எதிர்பார்க்கிறீர்கள் என்னும் கேள்வி கிறிஸ்தவ ஊழியத்தில் வரும் பாடுகளில் ஒன்று. நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியாது; உங்களுக்குத் தெரிந்த ஒரே காரியம் தேவன் என்ன செய்கிறாரென்று அவருக்குத் தெரியும் என்பதே. தேவனுக்கு நேரான உங்களுடைய மனப் பான்மையைத் தொடர்பாகச் சரிபார்த்து தேவனை முழுவதும் நம்பினவர் களாய், எல்லாக் காரியங்களிலும் நாம் புறப்பட்டுப்போக ஆயத்தந்தானா என்று பார்க்கவேண்டும். இந்த மனநிலைதான் உங்களை நிரந்தரமான வியப்போடிருக்கச்செய்கிறது--தேவன் அடுத்து என்ன செய்யப்போகிறார் என்பது உங்களுக்குத் தெரியாது. நீங்கள் விழித்தெழும் ஒவ்வொரு காலையும் தேவன்பேரிலுள்ள நம்பிக்கையைக் கட்டி எழுப்பினவர்களாய் நீங்கள் புறப்பட்டுச் செல்லுகிறதாயிருக்கட்டும். உங்கள் ஜீவனுக்காகவும், சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள்--அதாவது நீங்கள் புறப்பட்டுச் செல்லுமுன் கவலைப்பட்ட காரியங்களுக்காக இனிக் கவலைப்படவேண்டாம் என்று இயேசு கூறினார்.

தேவன் என்ன செய்யப்போகிறார் என்று நீங்கள் அவரிடம் கேட்ட துண்டா? அவர் உங்களிடம் சொல்லமாட்டார். தேவன் என்ன செய்யப் போகிறார் என்று அவர் உங்களிடம் கூறுகிறதில்லை; அவர் யார் என்றுதான் உங்களுக்கு வெளிப்படுத்துவார். அற்புதம் செய்யும் ஆண்டவரில் நீங்கள் நம்புகிறீர்களா? அவ்வாறாயின், அவர் செய்கிற எக்காரியத்தைக்குறித்தும் ஒரு அணுவாகிலும் நீங்கள் ஆச்சரியப்படாததுவரை உங்களை அவருக்கு ஒப்படைத்துப் புறப்பட்டுச்செல்லுவீர்களா?

நீங்கள் தேவனுக்கு மிக அருகிலிருக்கும்போது தேவன் எவ்வாறிருக் கிறார் என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களோ அவ்வாறே அவர் இருக்கிறா ரென்று வைத்துக்கொள்வோம்; அப்படியானால், கவலைப்படுவது எத்தகைய அவமதிப்பு! தேவன்மீது சார்ந்து இடையறாது புறப்பட்டுப்போவது வாழ்க் கையின் மனப்போக்காயிருக்கட்டும்; அதைக்குறித்து உங்கள் வாழ்க்கையில் அழிவற்ற கவர்ச்சி இருக்கும், அது இயேசுவுக்குத் திருப்தியாயிருக்கும். உங்கள் விசுவாசத்தைப் பொறுத்தமட்டும், உங்களுக்கும் தேவனுக்கு மிடையே ஒன்றுமில்லாமலாகும்வரை பற்றுறுதிகள், விசுவாசக் கோட்பாடுகள், அனுபவங்கள் என்பவைகளைவிட்டுப் புறப்பட்டுப்போகக் கற்றுக்கொள்ள வேண்டும்.

மேகமும் மந்தாரமும்

மேகமும் மந்தாரமும் அவரைச் சூழ்ந்திருக்கிறது. சங்.97:2.

தேவஆவியினால் பிறந்திராத மனிதன், இயேசுவின் போதனைகள் எளிதானவை என்றே உங்களிடம் கூறுவான். ஆனால், நீங்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றபின் மேகமும் மந்தாரமும் அவனைச் சூழ்ந்திருக்கக் காண்பீர்கள். இயேசுகிறிஸ்துவின் போதனைகளோடு நாம் நெருங்கிய தொடர்புகொள்ளும்போது காரியங்களின் இத்தன்மையைக் குறித்து முதலில் ஆழ்ந்த அறிவு பெற்றுக்கொள்ளுகிறோம். நமக்குள்ளிருக்கும் தேவனுடைய ஆவியின் ஒளியினால் மாத்திரமே இயேசுவின் போதனைகளைப் புரிந்துகொள்ள சாத்தியமாகிறது. நமது பழமைப்பட்ட மார்க்கப்பற்றாகிய காலணிகளை நமது சாதாரணமான கால்களைவிட்டு கழற்றிவிடுகிறதும், நாம் தேவனை அணுகும்போதுள்ள எல்லாத் தேவையற்ற பழக்கமான நிலையை விட்டொழிகிறதுமான அனுபவம் நமக்கு ஒருபோதும் இல்லாதிருந்தால் நாம் எப்போதாவது தேவனுடைய சமுகத்தில் நின்றிருக்கிறோமாயென்பது கேள்விக்குறியாகிறது. பொறுப்பற்றவர்களும் நன்கு பழகியவர்களுமாகிய மக்கள் இயேசுகிறிஸ்துவுக்கு இதுவரை ஒரு போதும் அறிமுகப்படுத்தப்படாதவர்கள். இயேசுகிறிஸ்து எவைகளைச் செய்கிறார் என்று உணருகிற ஆச்சரியமான மகிழ்ச்சிக்கும் விடுதலைக்கும் பின்பு அவர் யார் என்பதை உணரமுடியாதபடி ஊடுருவிச்செல்லமுடியாத அந்தகாரம் உருவாகிறது.

நான் உங்களுக்குச் சொல்லுகிற வார்த்தைகளே ஆவியாயும் ஜீவனாயுமிருக்கிறது என்று இயேசு சொன்னார்; நான் முன்பு சொல்லிய வார்த்தைகள் என்று அவர் கூறவில்லை. வேதபுத்தகம் நமக்கு வெறும் வார்த்தைகளாக, மேகமும் மந்தாரமுமாயிருந்தது; ஆனால், குறிப்பிட்ட சூழ்நிலையில் இயேசு அவைகளை மறுபடியும் நமக்குக் கூறித்தருவதால் திடீரென அவ்வார்த்தைகள் ஆவியாயும் ஜீவனாயும் மாறுகின்றன. தேவன் அவ்வாறாகவே அவர் வார்த்தைகளின்மூலமே பேசுகிறாரேதவிர நம்மோடு தரிசனங்களினாலும் சொப்பனங்களினாலும் பேசவில்லை. வார்த்தைகள் என்னும் எளிய வழியின்மூலமே ஒரு மனிதன் தேவனை அணுகுகிறான்.

நான் இப்பொழுது உமக்குப்பின்னே ஏன் வரக்கூடாது?

பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே, நான் இப்பொழுது உமக்குப்பின்னே ஏன் வரக்கூடாது? என்றான். யோவான் 13:37.

நீங்கள் செய்ய விரும்புவதை ஏன் செய்யக்கூடாது என்பதைப் புரிந்துகொள்ளாத பல வேளைகள் உண்டு. தேவன் காலியாக இடத்தை விடும்போது அதை நிரப்பாதபடி கவனித்துக்கொண்டுக் காத்திருங்கள். பரிசுத்தமாகுதல் என்றால் என்ன என்பதை உங்களுக்குக் கற்பிக்கும்படிக் காலியிடம் வரலாம்; அல்லது பரிசுத்தமாகுதலுக்குப்பின் சேவையின் கருத்து என்ன என்பதை உங்களுக்குக் கற்பிக்க வரலாம். தேவனுடைய வழிநடத்துதலுக்குமுன் ஒருபோதும் ஓடாதீர்கள். சிறிதளவு ஐயம் இருக்குமானாலும், அதில் அவர் வழிநடத்தவில்லை. எப்பொழுதெல்லாம் சந்தேகம் இருக்கிறதோ அப்பொழுதெல்லாம் செயல்படாதேயுங்கள்.

ஆரம்பத்தில் தேவனுடைய சித்தம் என்ன என்பதை நீங்கள் தெளிவாகக் காணலாம்--ஒரு நட்பை முறிப்பது, ஒரு வியாபாரத்தொடர்பை அறுப்பது போன்ற ஏதாவதொன்றை நீங்கள் செய்வது தேவனுடைய சித்தமென்று தேவனுக்குமுன் நீங்கள் தெளிவாக உணருகிறீர்கள்; ஆனால், உணர்ச்சியின் உந்துதலில் அதைச் செய்யாதீர்கள். அப்படிச் செய்தால் பிரச்சனைகளில் முடிவடைவீர்கள், பிரச்சனைகளைச் சரிசெய்ய அநேக ஆண்டுகள் எடுக்கும். அக்காரியத்தைச் செய்து நிறைவேற்ற ஆண்டவருடைய காலத்துக்குக் காத்திருங்கள்; எவ்விதத் துயரமும் ஏமாற்றமும் ஏற்படாதபடி அவர் அதனைச் செய்து முடிப்பார். தேவனுடைய அனுமதிப்படியுள்ள சித்தத்திற்குரிய காரியங்களைப்பொறுத்தமட்டும் அவர் செயல்படுவதற்குக் காத்திருங்கள்.

பேதுரு தேவனுக்குக் காத்திருக்கவில்லை, சோதனை எங்கு வரும் என்று அவர் மனதில் முன்கணித்தார்; சோதனையோ அவர் எதிர்பாராத இடத்திலிருந்து வந்தது. உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன் என்றார். பேதுருவின் கூற்று யதார்த்தமானது, ஆனால் அறிவீனமானது. இயேசு அவருக்குப் பிரதியுத்தரமாகச் சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்றார். பேதுரு தன்னை அறிந்திருந்ததை விட அவனைக்குறித்த ஆழமான அறிவிலிருந்து இது சொல்லப்பட்டது. தன்னையோ, அல்லது தன்னுடைய ஆற்றலையோ பேதுரு அறியாத தினாலே அவர் இயேசுவைப் பின்பற்றக்கூடாதவராயிருந்தார். ஜென்ம சுபாவமான பக்தி நம்மை இயேசுவிடம் இழுக்கவும் அவரில் பரவசம் கொள்ளச்செய்யவும் போதுமானதாய் இருக்கலாம். ஆனால் அது நம்மை ஒருபோதும் சீஷர்களாக்காது. ஜென்மசுபாவமான பக்தி ஒரு இடத்தில் அல்லது இன்னொரிடத்தில் எப்போதும் மறுதலிக்கும்.

வல்லமையுள்ள வாழ்க்கையின் பிற்காலம்

நான் போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது, பிற்பாடு என் பின்னே வருவாய். யோவான் 13:36.

அவர் இதைச் சொல்லியபின்பு, அவனை நோக்கி: என்னைப் பின்பற்றிவா என்றார். மூன்று ஆண்டுகளுக்குமுன் இயேசு அவரிடம் என்னைப் பின்பற்றிவா என்றார், பேதுரு அவரை எளிதாகப் பின்பற்றினார், இயேசுவின்பேரிலுள்ள கவர்ச்சி அவர்மீதிருந்தது; அதைச் செய்ய பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசை அவருக்குத் தேவைப்படவில்லை. பிற்காலத்தில், அவர் இயேசுவை மறுதலிக்கும் இடத்துக்கு வந்தார்; அவர் இருதயம் உடைந்தது. அதற்குப்பின் அவர் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார், மறுபடியும் இயேசு அவரைப் பார்த்து, என்னைப் பின்பற்றிவா என்றார். இப்பொழுது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத்தவிர வேறு எந்த நபரும் அவருக்குமுன் இல்லை. முதலில் என்னைப் பின்பற்றிவா என்றதில் ஆவிக்குரிய ரகசியம் எதுவுமில்லை; அது வெளிப்புறமான பின்பற்றுதலே; ஆனால் இப்போதோ, உள்ளாக இரத்தசாட்சியாகும்படியான பின்பற்றுதல் (யோவான் 21:18 பார்க்க).

இரு அழைப்புகளின் இடைப்பட்ட காலத்தில் பேதுரு சபிக்கவும் சத்தியம்பண்ணவும் செய்து இயேசுவை மறுதலித்தார்; தனக்கும் தன் எல்லாத் தன்னிறைவுக்குமான முடிவுக்கு அவர் வந்துவிட்டார்; இனி அவர் மறுபடியும் சார்ந்திருக்க அவரில் ஒரு துரும்புபோலும் இல்லை; இத்தகைய ஆதரவற்ற நிலையில் உயிர்த்தெழுந்த ஆண்டவர் ஈவதைப் பெற்றுக் கொள்ள அவர் தகுதியாயிருந்தார். அவர்கள்மேல் ஊதி பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்றார். எத்தகைய மாற்றங்களைத் தேவன் உங்கள் வாழ்க்கையில் செய்திருந்தாலும் பரவாயில்லை, அவைகளை ஒருபோதும் சாராதேயுங்கள்; கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவாகிய ஒரு நபர் மீதும் அவர் அருளும் ஆவியானவர்மீதுமே உங்கள் வாழ்வைக் கட்டி எழுப்புங்கள்.

நம்முடைய எல்லாப் பிரதிக்கினைகளும் தீர்மானங்களும் மறுதலிப்பிலேயே முடிகின்றன; ஏனெனில், அவைகளை நிறைவேற்ற நம்மிடம் பெலனில்லை. கற்பனையிலல்ல, உண்மையாகவே நாம் நம்முடைய ஆற்றலின் இறுதிக்கு வரும்போது, பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளக் கூடியவர்களாகிறோம். பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்பதில் கைப்பற்றுவதின் கருத்து உண்டு. இப்பொழுது வாழ்க்கையில் ஒரு துருவ நட்சத்திரம் மாத்திரமேயுண்டு; அது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே.

ஆராதனை

பின்பு அவன் . . . பெத்தேல் தனக்கு மேற்காகவும் ஆயீ கிழக்காகவும் இருக்கக் கூடாரம்போட்டு, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான். ஆதி. 12:8.

தேவன் உங்களுக்குக் கொடுத்திருப்பதில் மிகச் சிறந்தவற்றை அவருக்குக் கொடுப்பதே ஆராதனையாகும். உங்களிடத்தில் இருக்கிற மிகச்சிறந்தவற்றை என்ன செய்கிறீர்களென்பதில் கருத்தாயிருங்கள். தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும்போதெல்லாம் அதை அன்பின் தானமாய் அவருக்குத் திரும்பக் கொடுத்துவிடுங்கள். தேவனுக்குமுன்பாகத் தியானம்பண்ண நேரம் எடுங்கள், அவர் தரும் ஆசீர்வாதங்களை ஆராதனையின் மனப்பூர்வச் செயலாக அவருக்கேத் திரும்பக் கொடுத்துவிடுங்கள். உங்களுக்காக ஒரு காரியத்தைச் சேர்த்து வைத்தால், (கீழ்ப்படியாமல்) சேர்த்துவைத்த மன்னா கெட்டுப்போனதுபோல, ஆவிக்குரியநிலையில் நீங்கள் சேர்த்துவைப்பவை கெட்டுப்போகும். ஆவிக்குரிய காரியம் எதையும் நீங்கள் உங்களுக்காக வைத்துக்கொள்ளத் தேவன் அனுமதிப்பதில்லை; தேவன் அதைப் பிறருக்கு ஆசீர்வாதமாக்கும்படி தேவனிடமே அது திரும்பக் கொடுக்கப்படவேண்டும்.

பெத்தேல் தேவனோடுள்ள கூட்டுறவின் அடையாளம்; ஆயீ உலகத்திற்கு அடையாளம். இரண்டுக்குமிடையே ஆபிரகாம் கூடாரம் போட்டார். தேவனோடு அந்தரங்கத்திலுள்ள நம்முடைய ஆழ்ந்த கூட்டுறவு தான் நாம் அவருக்காக வெளியரங்கமாய் நிறைவேற்றும் செயல்களின் மதிப்பின் அளவாகிறது. ஆத்திரம் எல்லா வேளைகளிலும் தவறு; தேவனை ஆராதிக்கத் தாராளமான நேரம் எப்போதும் உண்டு. தேவனோடு செலவிடப்படும் அமைதியான நாட்கள் கண்ணியாயிருக்கலாம். உலகத்தோடுள்ள நமது நேரம் எவ்வளவு இரைச்சலானதாயிருந்தாலும், நாம் தேவனோடு செலவிடும் நேரம் எப்போதும் அமைதலாய் இருக்கத்தக்கதாக நம்முடைய கூடாரங்களை நாம் போடவேண்டும். ஆராதனை, காத்திருத்தல், ஊழியம் என்ற மூன்று தனிநிலைகள் ஆவிக்குரிய வாழ்க்கையில் இல்லை. நம்மில் சிலர் ஆராதனையிலிருந்து காத்திருப்பதற்கும், காத்திருப்பதிலிருந்து ஊழியத்திற்கும் ஆவிக்குரிய தவளைகளைப்போலக் குதிக்கிறோம். இவை மூன்றும் ஒன்றாய்ச் செயல்படவேண்டுமென்பதே தேவனுடைய கருத்து. நம்முடைய ஆண்டவருடைய வாழ்க்கையில் அவை மூன்றும் எப்போதும் ஒன்றாகவே இருந்தன. அவர் ஆத்திரமற்றவராயும் இளைப்பாறாதவருமாய் இருந்தார். இது ஒரு கட்டுப்பாடு; இதை நாம் உடனடியாகக் கடைப்பிடிக்க முடியாது.

இயேசுவோடு நெருங்கிய உறவு

இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? யோவான் 14:9.

இவ்வார்த்தைகள் கண்டனமாகவோ அல்லது வியப்போடுகூடவோ கூறப்படவில்லை; பிலிப்பு முன்னே செல்ல இயேசு வழிநடத்தினார். நாம் நெருங்கிய உறவுகொள்ளும் இறுதியான நபர் இயேசு. பெந்தெகொஸ்தே நாளுக்குமுன் பிசாசுகளை மேற்கொள்ளவும், உயிர்மீட்சி உருவாக்கவும் தங்களுக்கு வல்லமையளித்த ஒருவராகவே இயேசுவை சீஷர்கள் அறிந்திருந்தார்கள் (லூக்.10:18-20 பார்க்கவும்). அது அற்புதமான நெருக்கம்; ஆயினும், அதைவிடக் கூடுதல் நெருங்கிய உறவு வரவேண்டியதிருந்தது: நான் உங்களைச் சிநேகிதர் என்றேன் என்று இயேசு கூறினார். நட்புறவு உலகத்தில் அரிது. எண்ணத்திலும் இதயத்திலும் ஆவியிலும் ஒத்திருப்பதே நட்பாகும். இயேசுகிறிஸ்துவோடு இந்த மிகவும் நெருக்கமான உறவுக்குள் பிரவேசிக்க நமக்கு இயலச்செய்வதே வாழ்க்கையின் முழுக்கட்டுப்பாடாகும். அவருடைய ஆசீர்வாதங்களை நாம் பெறுகிறோம்; அவருடைய வார்த்தைகளை நாம் அறிகிறோம்; ஆனால் அவரை நாம் அறிகிறோமா?

அவர்களைத் தொடர்ந்து வழிநடத்துவதற்காக, நான் போவது உங்களுக்கு நலமாயிருக்கும் என்று அந்த உறவிலே இயேசு சொன்னார். ஒரு சீஷன் இயேசுவோடு மிகவும் நெருங்கி நடப்பதற்கு நேரம் எடுக்கும் போது அது அவருக்கு மகிழ்ச்சியே. இயேசுகிறிஸ்துவோடுள்ள நெருங்கிய உறவின் வெளிப்பாடே கனிகொடுப்பது என்று எப்போதும் கூறப்படுகிறது (யோவான் 15:1-4).

நாம் இயேசுவோடு நெருங்கி வரும்போது நாம் ஒருபோதும் தனிமையிலில்லை; நமக்கு ஒருபோதும் பரிவு தேவைப்படாது; பரிதாபம் எதிர்பாராமல் எல்லா வேளைகளிலும் நம்முடைய இருதயத்தை அவரிடம் ஊற்றிவிடலாம். இயேசுவோடு நெருங்கி உறவாடுகிற ஒரு பரிசுத்தவான் தன் அடையாளத்தைப் பிறருக்கு விட்டுச்செல்வதில்லை; தடையில்லாத வழியில் இயேசுகிறிஸ்துவின் அடையாளத்தையே விட்டுச்செல்வான்; ஏனெனில், அவனுடைய இயற்கையின் சகல ஆழங்களும் இயேசுவால் திருப்தியாக்கப்பட்டுவிட்டன. அத்தகைய வாழ்க்கை விட்டுச்செல்லும் ஒரே முத்திரை நமது ஆண்டவரோடு நெருங்கிய உறவுள்ளவர்களுக்கு அவர் அளிக்கிற வல்லமையுள்ள, அமைதியான, தெளிந்த அறிவுள்ள வாழ்க்கை மாத்திரமே.

என்னுடைய பலி உயிருள்ளதுதானா?

அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, . . . தன் குமாரனாகிய ஈசாக்கைக் கட்டினான். ஆதி.22:9.

தேவன் நம்மிடத்திலிருந்து எதிர்பார்க்கிற இறுதிக் காரியம் உயிரற்ற பலியே என்று நாம் எண்ணுகிற பெருந்தவற்றைச் சித்தரிக்கும் சம்பவமே இது. இயேசு செய்த காரியத்தைச் சாத்தியமாக்கும், அதாவது நம்முடைய வாழ்க்கையைப் பலியிட நமக்குச் சாத்தியமாக்கும் மரணத்தின்வழியான பலியையே தேவன் விரும்புகிறார். ஆண்டவரே, உம்மோடுகூட மரணம் வரைச் செல்ல நான் ஆயத்தமாயிருக்கிறேன் என்று கூறுவதல்ல, என் வாழ்வைத் தேவனுக்குத் தியாகஞ்செய்வதற்காக உம்முடைய மரணத்தோடு ஒன்றிப்பதற்கு நான் ஆயத்தமாயிருக்கிறேன் என்று கூறவேண்டும். காரியங்களை விட்டுவிடத் தேவன் எதிர்பார்க்கிறார் என்று எண்ணுகிறவர்களைப் போலிருக்கிறோம்! இந்தப் பெருந்தவற்றிலிருந்து தேவன் ஆபிரகாமைச் சுத்திகரித்தார்; அதே நடைமுறை நம்முடைய வாழ்க்கைகளிலும் நடந்து கொண்டிருக்கிறது. காரியங்களை விட்டுவிடவேண்டும் என்பதற்காக அவைகளை விட்டுவிடவேண்டும் என்று தேவன் ஒரு இடத்திலும் சொல்ல வில்லை. அவரோடுள்ள வாழ்க்கையாகிய அனுபவிக்கத் தகுதியான ஒரே காரியத்தின்பொருட்டு அவைகளை விட்டுவிடத் தேவன் நம்மிடம் கூறுகிறார். வாழ்க்கையைத் தடுக்கிற கட்டுகளைத் தளர்த்துவதுதான் கேள்வி; இயேசுவின் மரணத்தோடு ஒன்றிப்பதால், அந்தக் கட்டுகள் கழன்றுபோனவுடனே, நாம் தேவனுக்காக நம்முடைய வாழ்க்கையைத் தியாகஞ்செய்யக் கூடியதாக அவரோடுள்ள உறவுக்குள் பிரவேசிக்கிறோம்.

மரணத்திற்காக உங்கள் வாழ்க்கையைத் தேவனிடம் கொடுப்பதால் அவருக்கு எந்தப் பயனுமில்லை. இயேசுவின் வழியாய் இரட்சிக்கப்பட்டதும் பரிசுத்தமாக்கப்பட்டதுமான உங்களுடைய சகல வல்லமையையும் அவர் அடைந்துகொள்ள அனுமதிப்பதாகிய ஜீவபலியாகவே அவர் உங்களை விரும்புகிறார். இதுதான் தேவனுக்குப் பிரியமான ஒரே காரியம்.

ஜெபத்தோடுள்ள தற்பரிசோதனை

உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், . . . குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக (என்று நான் ஜெபிக்கிறேன்). 1 தெச.5:23.

உங்கள் ஆவி.....முழுவதும் என்று கூறுகிறார். நாம் அடைய முடியாத நம்முடைய ஆளத்துவத்தின் மங்கலான பகுதிகளில் பரிசுத்த ஆவியானவரின் இரகசியமான செயல் நடைபெறுகிறது. 139-ம் சங்கீதம் வாசிக்கவும்: நீர் விடியற்காலங்களுக்குத் தேவன், பின்னிரவுகளுக்குத் தேவன், மலைச் சிகரங்களுக்குத் தேவன், கடலுக்கும் தேவன்; ஆனால், என் ஆண்டவரே, அதிகாலைகளைவிட அதிகத் தூரமான அடிவானமும், பூமியின் இரவுகளைவிட அதிக இருளும், எந்த மலையுச்சியையும்விட உயரமான சிகரங்களும், இயற்கையின் எந்தக் கடலையும்விட அதிகமான ஆழமும் என் ஆத்துமாவில் உண்டு--இவையெல்லாவற்றிற்கும் தேவனாயிருக்கிற நீர் என் தேவனாயிரும். உயரங்களையோ ஆழங்களையோ என்னால் எட்டமுடியாது, நான் கண்டுபிடிக்கமுடியாத நோக்கங்களுண்டு. நான் அடைந்துகொள்ளமுடியாத சொப்பனங்களுமுண்டு--என் தேவனே, என்னை ஆராய்ந்து பாரும் என்பதே சங்கீதக்காரனின் குறிப்பாகும்.

நாம் சென்றடைவதற்குக்கூடாத அதிகத் தூரமான கற்பனைகளைத் தேவனால் கோட்டைகட்டி அடைக்கமுடியும் என்று நாம் நம்புகிறோமா? இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்--இது உணர்வோடு செய்யப்படும் பாவத்தை மாத்திரம் குறிக்கும் என்று பொருட்படுமேயானால், தேவன் நமக்கு இரங்கட்டும்! பாவத்தால் மந்தமாக்கப்பட்ட மனிதன், அவனுக்குப் பாவத்தைக்குறித்த அறிவில்லை என்றே சொல்லுவான். தேவன் ஒளியிலிருப்பதுபோல நாமும் ஒளியிலே நடந்தால், பாவத்திலிருந்து கழுவப்படுதல் நம்முடைய ஆவியின் எல்லா உயரங்களுக்கும் ஆழங்களுக்கும் உரியது; இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையைப் போஷித்த அதே ஆவியானவர், நமது ஆவியின் வாழ்க்கையையும் போஷிப்பார். பரிசுத்த ஆவியானவருடைய மிகச் சிறந்த தூய்மையினால் தேவன் நம்மைக் கோட்டைகட்டிப் பாதுகாக்கும்போது மாத்திரமே இயேசுவின் வருகைமட்டும் ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம் களங்கமற்ற நேர்மையிலும் தேவனுடைய பார்வையில் கண்டனத்துக்கு அப்பாற்பட்ட தாயும் காக்கப்படும்.

தேவனுடைய இந்த ஆழமான சத்தியங்களில் தேவையான அளவு கருத்து செலுத்துவதற்கு நம்முடைய மனதை நாம் அனுமதிப்பதில்லை.

திறக்கப்பட்ட பார்வை

அவர்கள் . . . பெற்றுக்கொள்ளும்படியாக . . . அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு. அப்.26:18.

இயேசுகிறிஸ்துவின் சீஷனுடைய பிரச்சாரத்தைக்குறித்துப் புதிய ஏற்பாடு முழுவதிலுமுள்ள மிகச்சிறந்த சுருக்கமே இந்த வசனமாகும்.

அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும்படியாக என்ற வார்த்தைகளில் கிருபையின் முதலாம் தெய்வீகக் கிரியை தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. ஒரு மனிதன் ஆளத்துவ கிறிஸ்தவ அனுபவத்தில் தவறிப் போவானேயாகில், ஏறக்குறைய எப்போதும் அதன் காரணம் அவன் ஒருபோதும் ஒன்றையும் பெற்றுக்கொள்ளாததே. ஒரு மனிதன் இரட்சிக்கப் பட்டான் என்பதற்குரிய ஒரே அடையாளம் அவன் இயேசுகிறிஸ்துவினிடத் திலிருந்து ஏதாயினும் ஒன்றை அடைந்திருப்பதே. மக்கள் தங்களை இருளி லிருந்து ஒளிக்குத் திருப்பத்தக்கதாக அவர்களுடைய கண்களைத் திறப்பதே தேவ ஊழியர்களாக நமது பங்காகும்; ஆனால் அது இரட்சிப்பல்ல, உணர்த்தப்பட்ட ஒரு மனிதனின் முயற்சியாகிய மனமாற்றமே அது. பெயர்க்கிறிஸ்தவர்களில் அநேகரும் இந்த வகுப்புக்கு உட்பட்டிருக்கிறார்கள் என்று கூறுவது மிகைப்படுத்தப்பட்டது என்று நான் எண்ணவில்லை; அவர்கள் கண்கள் திறக்கப்பட்டிருக்கின்றன, ஆயினும் அவர்கள் எதையும் பெற்றுக்கொள்ளவில்லை. மனந்திரும்புதல் என்பது மறுபிறப்படைவதல்ல. இன்று நம்முடைய போதனைகளில் கவனிக்கப்படாத காரியங்களில் இது ஒன்று. ஒருவன் மறுபடியும் பிறக்கும்போது அது தன்னுடைய சொந்தத் தீர்மானத்தினால் அல்லவென்றும், சர்வ வல்லமையுள்ள தேவனிடத்தி லிருந்து ஏதோவொன்றைத் தானமாகப் பெற்றுக்கொண்டதினாலேயே என்றும் அவன் அறிகிறான். மக்கள் தங்கள் பிரதிக்கினைகளைப் பதிவு செய்கிறார்கள், தங்கள் உறுதிமொழிகளில் ஒப்பிடுகிறார்கள், அவற்றைக் கடைப்பிடிக்கத் தீர்மானிக்கிறார்கள்; ஆனால் இவை ஒன்றும் இரட்சிப்பல்ல. இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தில், தேவனிடமிருந்து ஏதோவொன்றை, அதாவது பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள இயலக்கூடிய இடத்திற்கு நாம் கொண்டுவரப்படுகிறோம் என்பதே இரட்சிப்பின் கருத்தாகும்.

அதன்பின்பு, கிருபையின் இரண்டாம் மகத்துவமான கிரியைத் தொடருகிறது--அது பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் மத்தியில் சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ளுவது. பரிசுத்தமாகுதலில், மறுபிறப்படைந்த ஆத்துமா தனக்குரியதான உரிமைகளை மனப்பூர்வமாக இயேசுகிறிஸ்துவிடம் ஒப்படைத்துவிட்டு, பிறரிடத்தில் தேவன் கொண்டிருக்கிற கரிசனையோடு தானும் முற்றிலும் ஒன்றித்துவிடுகிறது.

தேவனுக்கு நான் கீழ்ப்படிவதால் பிறர் கொடுக்கும் விலையென்ன?

சிரேனே ஊரானாகிய சீமோன் என்கிற ஒருவனைப் பிடித்து சிலுவையை ..... அவன்மேல் வைத்தார்கள். லூக்கா 23:26.

நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவோமானால், நாம் கொடுக்கிற விலை யைவிட பிற மக்கள் அதிகமான விலை கொடுக்கவேண்டியதுவரும்; அங்கு தான் வேதனை ஆரம்பிக்கிறது. நம்முடைய ஆண்டவரை நாம் நேசிக்கி றோமானால் கீழ்ப்படிதல் ஒருவிதத்திலும் நமக்கு இழப்பல்ல; அது ஒரு மகிழ்ச்சியே; ஆனால் தேவனை நேசியாதவர்களை அது மிகவும் அதிகம் பாதிக்கும். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவோமானால் பிறருடைய திட்டங்கள் கவிழ்க்கப்படும், அதினால் அவர்கள், இதையா கிறிஸ்தவமென்று அழைக் கிறாய்? என்று நம்மை இகழ்வார்கள். நாம் பாடுகளைத் தடுக்கமுடியும்; ஆனால், நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவோமானால் நாம் பாடுகளைத் தடுக்கக் கூடாது, விலைகொடுக்கப்பட நாம் அனுமதிக்கவேண்டும்.

இக்காரியத்தில் நமது மானிடப் பெருமைத் தன்னை உறுதிப்படுத் துவதால் யாரிடமிருந்தும் எதையும் நான் பெற்றுக்கொள்ளமாட்டேன் என்று கூறுகிறோம். நாம் பெற்றுக்கொண்டேயாகவேண்டும்; அல்லது நாம் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை. நமது ஆண்டவர் பிறரோடு கொண்டிருந்த உறவைத்தவிர வேறு எந்த உறவிலும் நாம் இருக்கும்படி எதிர்பார்க்க நமக்கு உரிமை இல்லை (லூக்கா 8:2,3 பார்க்க).

நாமே சகல பாரத்தையும் சுமப்போம் என்று நாம் சொல்லும்போது, ஆவிக்குரிய வாழ்க்கையில் தேக்கம் வருகிறது; அது நம்மால் கூடாது. அகில உலகத்துமான தேவனுடைய நோக்கத்தில் நாமும் ஈடுபடுகிறபடியால், நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவுடன் பிறர் பாதிக்கப்படுகிறார்கள். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவதில் உண்மையுள்ளவர்களாயிருந்து, சுயாதீனமாய் இருக்க மறுப்பதால் வரும் அவமானத்தை அனுபவிக்கப்போகிறோமா? அல்லது, பிறர் பாடனுபவிக்க நான் காரணமாயிருக்கமாட்டேன் என்று கூறப்போகிறோமா? நாம் தெரிந்துகொண்டால் தேவனுக்குக் கீழ்ப்படியாமை காண்பிக்க நம்மால் முடியும்; அது சூழ்நிலைக்குத் தற்காலிக நிவாரணம் கொண்டுவரலாம்; ஆனால், நமது ஆண்டவருக்கு நாம் சஞ்சலமாயிருப் போம்; அப்படியிருக்க, நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தால், நமது கீழ்ப்படித லினால் வரும் விளைவுகளைச் சந்திக்க வற்புறுத்தப்படுகிறவர்களின் காரியங்களை அவர் கவனித்துக்கொள்ளுவார். நம்முடைய கடமை கீழ்ப்ப டிவது மாத்திரமே; எல்லா விளைவுகளையும் அவரிடம் விட்டுவிடவேண்டும்.

நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படியும்போது இன்னின்னவைகள்தான் சம்பவிக்க நீங்கள் அனுமதிப்பீர்கள் என்று தேவனுக்கு உத்தரவிடும் விருப்பத்தைக்குறித்து ஜாக்கிரதையாயிருங்கள்.

நீங்கள் எப்போதாவது தேவனோடு தனித்திருந்ததுண்டா?

அவர் தம்முடைய சீஷரோடே தனித்திருக்கும்போது, அவர்களுக்கு எல்லாவற் றையும் விவரித்துச் சொன்னார். மாற்கு 4:34.

அவரோடு நம்முடைய தனிமை: இயேசு எப்பொழுதும் நம்மைத் தனியாக அழைத்துச்சென்று காரியங்களை நமக்கு விளக்கிச்சொல்வதில்லை; நாம் புரிந்துகொள்ளுவதற்கு ஏற்றவாறே அவர் காரியங்களை நமக்கு விவரிக் கிறார். மற்ற வாழ்க்கைகள் மாதிரிகளே. நம்முடைய சொந்த ஆத்துமா வைத் தெளிவுபடுத்தத் தேவன் தேவைப்படுகிறார். இது தாமதமான வேலை; ஒரு ஆணையோ பெண்ணையோ தமது நோக்கத்திற்குத்தகுந்து உருவாக் குவதற்குத் தேவன் எவ்வளவு காலமும், ஏன், நித்தியகாலமும் எடுக்குமளவு இது மிகவும் தாமதமாகிறது. தேவனுக்கு நாம் பயனுள்ளவர்களாவதற்குரிய ஒரே வழி நமது பண்புகளின் ஆழமான, மறைந்திருக்கிற பாகங்களின் வழியாக நம்மை நடத்திச்செல்ல அவரை அனுமதிப்பதே. நம்மைக்குறித்து நாம் எவ்வளவு அறியாமையிலிருக்கிறோம் என்பது வியப்புக்குரியதே! பொறாமையைக் காணும்போது அதை நாம் அறிவதில்லை; அதுபோலவே தான் சோம்பலும் பெருமையும். இயேசுவின் கிருபை கிரியைசெய்ய ஆரம் பிக்குமுன் இந்த உடல் இடங்கொடுத்திருந்த யாவற்றையும் அவர் நமக்கு வெளிப்படுத்துகிறார். தைரியத்தோடு உட்புறமாய்ப் பார்க்க நம்மில் எத்தனைபேர் கற்றிருக்கிறோம்?

நம்மை நாம் புரிந்துகொள்ளுகிறோம் என்கிற கருத்தை நம்மை விட்டு விலக்கவேண்டும்; அதுதான் இறுதியாக விட்டுப்போகவேண்டிய வஞ்சனையாகும். நம்மை அறிகிற ஒரேயொருவர் தேவன் மாத்திரமே. ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகப்பெரிய சாபம் வஞ்சனையே. நாம் தேவனுடைய பார்வையில் எவ்வாறு இருக்கிறோம் என்பதை எப்போதாவது கண்டிருப்போமேயாகில், ஐயோ, நான் மிகவும் தகுதியற்றவன் என்று ஒருபோதும் கூறமாட்டோம்; ஏனெனில், அவ்வாறு கூறுவதற்கே சாத்திய மற்றவர்கள் என்பதை நாம் அறிவோம். நாம் தகுதியற்றவர்கள் என்று நாம் நிச்சயமற்று இருப்பதால் தேவன் நம்மைத் தனிமைக்குக் கொண்டு வருமட்டும் நெருக்கிக்கொண்டிருப்பார். எங்கெல்லாம் பெருமை மற்றும் இறுமாப்பு என்பவை இருக்கிறதோ அங்கெல்லாம் இயேசு எதையும் விவரித்துக் கூறமுடியாது. நம்முடைய அறிவுக்குரிய அகங்காரம் பாதிக்கப் படும்போதுள்ள ஏமாற்றத்தின்வழியாகவும், இருதயத்தின் ஏமாற்றத்தின் வழியாகவும் கொண்டுசெல்வார். அவர் நம்மோடு தனிமையில் சந்திப்பார் என்று நாம் எண்ணாத காரியங்களாகிய தகாத இடங்களில் நாம் வைத்தி ருக்கிற ஆசைகளை அவர் நமக்கு வெளிப்படுத்துவார். வகுப்பறையில் நாம் பல காரியங்களுக்குச் செவிகொடுக்கிறோம்; ஆனால் அவை நமக்கு இன்னும் விளக்கவுரைகள் அல்ல. அவைகளுக்காகத் தேவன் நம்மைத் தனிமையில் சந்திக்கும்போதுமாத்திரமே அவைகள் விளக்கவுரைகளாகும்.

நீங்கள் எப்போதாவது தேவனோடு தனித்திருந்ததுண்டா?

அவர் தனித்திருக்கிறபோது, பன்னிருவரோடுங்கூட . . . அவரிடத்தில் கேட்டார்கள். மாற்கு 4:10.

நம்மோடு அவருடைய தனிமை: உபத்திரவம், துயரம் அல்லது சோதனை, ஏமாற்றம், வியாதி அல்லது ஏமாற்றிய அன்பு, உடைந்த நட்பு அல்லது புதிய தோழமை என்பவைமூலம் தேவன் நம்மைத் தனிமைக்குக் கொண்டு வரும்போது--அவர் நம்மை முற்றிலும் தனிமையில் கொண்டுவரும்போது, நாம் வாயடைத்துப்போய், ஒரு கேள்வியும் கேட்கமுடியவில்லை; அப்போது அவர் விளக்கமளிக்க ஆரம்பிக்கிறார். இயேசுகிறிஸ்து பன்னிருவருக்குப் பயிற்சியளித்ததைக் கவனிக்கவும். புறமேயிருந்த மக்கள் கூட்டம் அல்ல, சீஷர்களே குழப்பமடைந்தார்கள். அவர்கள் இயேசுவிடம் அடிக்கடி கேள்வி கேட்டார்கள், அவரும் அவர்களுக்குத் தொடர்ந்து காரியங்களை விளக்கிக் கூறினார்; ஆயினும் அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றபின் மாத்திரமே யாவையும் புரிந்துகொண்டார்கள் (யோவான் 14:26 பார்க்கவும்).

நீங்கள் தேவனோடு வாழ்ந்துகொண்டிருந்தால், உங்களுக்குத் தெளிவாகியிருக்கிற ஒரே காரியம், மற்றும் தெளிவாகவேண்டுமென்று தேவன் விரும்பும் ஒரே காரியம், அவர் உங்கள் சொந்த ஆத்துமாவோடு இடைபடும் முறையே. உங்களுடைய சகோதரனின் துக்கங்களும் மனக் கலக்கங்களும் உங்களுக்கு முற்றிலும் குழப்பமாகவேயிருக்கும். தேவன் நமது சொந்த இருதயத்தின் குறைகளை நமக்குக் காண்பிக்குமட்டும் அடுத்தவர் எங்கிருக்கிறார் என்று அறிந்திருக்கிறோமென்று கற்பனை செய்கிறோம். பரிசுத்த ஆவியானவரால் நம் ஒவ்வொருவரிலும் தெளிவாக்கப்படவேண்டிய பிடிவாதமும் அறிவீனமும் உள்ள ஏராளம் பாகங்கள் உண்டு; இயேசு நம்மைத் தனிமையில் கொண்டுவரும்போதுமாத்திரமே இது நடக்கும். இப்போது நாம் அவரோடு தனித்திருக்கிறோமா? அல்லது பயனற்ற எண்ணங்களாலும் தேவனுடைய ஊழியத்தில் ஏற்படும் தவறான நட்புக்களாலும், நம்முடைய உடலைக்குறித்த தேவையற்றக் கருத்துக்களாலும் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறோமா? அறிவிலுள்ள இரைச்சலான கேள்விகள் எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு, அவரோடு தனித்திருக்கும்வரை இயேசுவால் ஒன்றையும் விவரித்துத்தர முடியாது.

தேவனால் அழைக்கப்பட்டவர்கள்

யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்? . . . அதற்கு நான் இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன். ஏசா. 6:8.

அந்த அழைப்பைத் தேவன் ஏசாயாவுக்காகக் கொடுக்கவில்லை; யார் நமது காரியமாய்ப் போவான் என்று தேவன் கூறியதை ஏசாயா தற்செயலாகக் கேட்டார். தேவனுடைய அழைப்பு சிறப்பான சிலருக்கானது அல்ல; அது ஒவ்வொருவருக்குமுரியது. தேவனுடைய அழைப்பை நான் கேட்கிறேனா இல்லையா என்பது என் செவிகளின் நிலையைச் சார்ந்தது; நான் என்ன கேட்கிறேன் என்பது என் மனநிலையைப் பொறுத்தது. அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் சிலர்; அதாவது சிலர் மாத்திரமே தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகத் தங்களை நிரூபிக்கிறார்கள். இயேசுகிறிஸ்துவழியாய்த் தேவனோடுள்ள உறவுக்கு வந்து, அதன்மூலம் அவர்கள் தன்மை மாற்றப்பட்டு, அவர்கள் செவிகள் திறக்கப்பட்டு, யார் நமது காரியமாய்ப் போவான் என்று மிருதுவான தொனியில் கேட்கப்படும் கேள்விக்கு எப்போதும் செவிகொடுக்கிறவர்களே அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். ஒரு மனிதனைத் தேவன் தெரிந் தெடுத்து, இப்போது நீ போ என்று சொல்வதில்லை. தேவன் ஏசாயாவை வலுக்கட்டாயமாக நிர்ப்பந்திக்கவில்லை; ஏசாயா தேவனுடைய சமுகத்தில் இருந்தார், அவர் அழைப்பைத் தற்செயலாகக் கேட்டார்; இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்று மனப்பூர்வமான சுயாதீனத்தில் சொல்லுவதுதவிர வேறு ஒன்றுமில்லை என்று அவர் உணர்ந்தார்.

தேவன் நிர்ப்பந்தங்களோடும் வேண்டுதல்களோடும் வருவார் என்று எதிர்பார்க்கிற நினைவை உங்கள் மனதிலிருந்து எடுத்துவிடுங்கள். நமது ஆண்டவர் தமது சீஷர்களை அழைத்தபோது, வெளிப்புறமிருந்து எதிர்க்க முடியாத எந்த நிர்ப்பந்தமுமிருந்ததில்லை. என்னைப் பின்பற்றிவா என்ற அவருடைய அமைதியானதும் உணர்ச்சிபூர்வமுமான வற்புறுத்தல் எல்லா சக்தியும் முழுவிழிப்போடிருந்த மக்களிடமே கூறப்பட்டன. தேவனோடு நம்மை முகமுகமாகக் கொண்டுவந்து நிறுத்த நாம் தேவஆவியானவரை அனுமதிப்போமானால், ஏசாயா கேட்டதுபோலவே தேவனுடைய மிருதுவான சத்தத்தை நாமும் கேட்போம்; அப்போது பூரண சுயாதீனத்தோடு, இதோ, நான் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்று நாமும் கூறுவோம்.

நீங்கள் வெண்மையில் நடக்கிறீர்களா?

நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு..... கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ரோமர் 6:4.

வெண்ணிற அடக்கம், அதாவது பழைய வாழ்க்கையை அடக்கஞ் செய்வதின்வழி கடந்துசெல்லாமல், பூரண பரிசுத்தமாகுதலின் அனுபவத் திற்குள் ஒருவரும் பிரவேசிக்கிறதில்லை. இத்தகைய மரணத்தின் நெருக்கடி ஒருபோதும் ஏற்பட்டிராவிட்டால் பரிசுத்தமாகுதல் வெறும் தரிசனமே. ஒரு வெண்ணிற அடக்கம், அதாவது இயேசுகிறிஸ்துவின் ஜீவனுக்குள்ளான உயிர்த்தெழுதலாகிய ஒரேயொரு உயிர்த்தெழுதலுக்கான ஒரு மரணம் நடந்தேயாகவேண்டும். அத்தகைய வாழ்க்கையை ஒன்றும் நிலைகுலையச் செய்வதில்லை; அவருக்குச் சாட்சியாயிருக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத் துக்காக அந்த வாழ்க்கை தேவனோடு ஒன்றாயிருக்கும்.

உங்களுடைய கடைசி நாட்களுக்கு நீங்கள் மெய்யாகவே வந்தி ருக்கிறீர்களா? உங்களுடைய உணர்ச்சிகளில் கடைசி நாட்களுக்கு அடிக்கடி நீங்கள் வந்திருக்கலாம்; ஆனால், செயல்பாட்டில் நீங்கள் வந்தி ருக்கிறீர்களா? உங்கள் அடக்கத்துக்கு நீங்கள் உற்சாகத்தோடு செல்ல முடியாது, அல்லது உற்சாகத்தோடு மரிக்கவும் முடியாது. உங்கள் மூட்சு நிற்பதே மரணமாகும். நீங்கள் இதுவரை இருந்ததுபோல, கடும் முயற்சி செய்கிற, அக்கறையுள்ள கிறிஸ்தவர்களாயிருப்பதை நிறுத்தத் தேவனோடு ஒத்துக்கொள்ளுகிறீர்களா? நாம் கல்லறைத்தோட்டத்தைச் சுற்றிவருகிறோம்; ஆனால் மரிக்க எப்போதும் மறுக்கிறோம். மரிக்கக் கடும் முயற்சிசெய்வ தல்ல, அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம் என்றதின்படி மரிக்கவேண்டும்.

உங்களுக்கு வெண்மையான அடக்கம் நடைபெற்றிருக்கிறதா? அல்லது உங்கள் ஆத்துமாவை பக்திபூர்வமாக வஞ்சிக்கிறீர்களா? கடைசி நாள் என்று நீங்கள் குறிப்பிடக்கூடிய ஒரு நிலைமை, அதாவது, ஆம், அந்த வேளையில் அந்த வெண்மையான அடக்கத்தில் நான் தேவனோடு ஒப்பந்தஞ் செய்தேன் என்று கண்டிப்போடும் அசாதாரண நன்றியோடும் நினைவுகூரக்கூடிய ஒரு நாள் உங்கள் வாழ்க்கையில் உண்டா?

நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது என்று பவுல் எழுதினார். ஆகவே, தேவனுடைய சித்தம் என்னவென்று நீங்கள் உணரும்போது, பரிசுத்தமாகுதலுக்குள்ளே நீங்கள் இயற்கையாகவே பிரவேசிப்பீர்கள். அந்த வெண்ணிற அடக்கத்தினூடே இப்பொழுது கடந்துசெல்ல நீங்கள் ஆயத்தந்தானா? இதுதான் பூமியில் உங்கள் கடைசி நாள் என்று அவரோடு ஒத்துக்கொள்ளுகிறீர்களா? நீங்கள் ஒத்துக்கொள்ளும் நேரம் உங்களைப் பொறுத்ததே.

தேவனுடைய இயல்பின் சத்தம்

யாரை நான் அனுப்புவேன் . . . என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். ஏசா.6:8.

தேவனுடைய அழைப்பைக்குறித்து நாம் பேசும்போது, மிகவும் முக்கியமான கருத்தாகிய அழைக்கிற நபரின் இயல்பை நாம் மறந்துபோக வாய்ப்புண்டு. கடலின் அழைப்பு, பர்வதங்களின் அழைப்பு, மகாப்பெரிய பனிக்கட்டிப் பாறைகளின் அழைப்பு போன்றவை உண்டு; ஆனால், இந்த அழைப்புக்களை சிலரே கேட்கின்றனர். அழைப்பு எதிலிருந்து வருகிறதோ அதின் தன்மையின் வெளிப்படுத்தலே அந்த அழைப்பு; அதே தன்மை நம்மில் இருந்தால்மட்டுமே நாம் அந்த அழைப்பைப் பதிவுசெய்யமுடியும். தேவனுடைய அழைப்பு அவருடைய தன்மையின் வெளிப்படுத்தலே, நமது தன்மையின் வெளிப்படுத்தலல்ல. தேவனுடைய அழைப்பின் இழைகள் தெய்வாதீனமாக நம்மில் நெய்யப்படுகின்றன; அதை நாமே உணருகிறோம், வேறு யாருமல்ல. ஏதோவொரு குறிப்பிட்ட காரியத்தில் தேவனுடைய தொனி நமக்குள் செலுத்தப்படுகிறது; அதைக் குறித்து யாரிடமும் கலந்தாலோசிப்பதால் பயனில்லை. அந்த ஆழமான உறவை நம்முடைய ஆத்துமாக்களுக்கும் தேவனுக்குமிடையே நாம் காத்துக்கொள்ளவேண்டும்.

தேவனுடைய அழைப்பு என்னுடைய தன்மையின் எதிரொலியல்ல; என் விருப்பங்களும் தனிப்பட்ட இயற்கையான மனநிலையும் கவனிக்கப்படுவதில்லை. என் தனிப்பட்ட இயல்பான மனநிலையைக் கவனித்து, நான் எதற்குத் தகுதியாக்கப்பட்டவன் என்று சிந்திக்கும்வரை தேவனுடைய அழைப்புக்கு நான் ஒருபோதும் செவிசாய்ப்பதில்லை. ஆனால், நான் தேவனோடுள்ள உறவுக்குள் கொண்டுவரப்படும்போது, ஏசாயா இருந்த அதே நிலையில் நான் இருக்கிறேன். ஏசாயா கடந்துசென்ற பயங்கர நெருக்கடியினிமித்தம் அவருடைய ஆத்துமா தேவனோடுள்ள இசைவுக்குக் கொண்டுவரப்பட்டபடியால், அவருடைய வியப்புற்ற ஆத்துமாவில் தேவனுடைய அழைப்பை அவர் பதிவுசெய்தார். நம்மில் பெரும்பான்மையானோரும் நம்மைத்தவிர வேறு எதற்கும் செவிகொடுப்பதில்லை; ஆகவே, தேவன் கூறுகிறது எதையும் நம்மால் கேட்கமுடிகிறதில்லை. தேவனுடைய அழைப்பின் எல்லைக்குள் கொண்டுவரப்படவேண்டுமானால் நாம் அளவிடற்கரிய நிலையில் மாற்றப்படவேண்டும்.

இயற்கை வாழ்க்கையின் அழைப்பு

தம்முடைய குமாரனை . . . எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது. கலாத்.1:16.

தேவனுடைய அழைப்பு ஒரு குறிப்பிட்ட சேவைக்கான அழைப்பு அல்ல; நான் தேவனுக்காக என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறேன் என்பதை அவருடைய தன்மையோடுள்ள தொடர்பு என்னை உணரச்செய்கிறது என்பது தேவனுடைய அழைப்புக்கான என் விளக்கமாயிருக்கலாம். தேவனுடைய அழைப்பு அவருடைய தன்மையை யதார்த்தமாய் வெளிப்படுத்துகிறது; என்னுடைய தன்மைக்கு எது தகுயாயிருக்கிறதோ அதன் விளைவே சேவை. தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும்பொருட்டாக (அதாவது அர்ப்பணத்தோடு வெளிப்படுத்தும்பொருட்டாக), அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது என்று இயற்கையான வாழ்க்கையின் அழைப்பை அப்போஸ்தலனாகிய பவுல் கூறினார்.

மிஞ்சி நிரம்பிய பக்திப் பொங்கிவழிவதே சேவையாகும்; ஆழ்ந்த கருத்தில் கூறினால், அதற்கு எந்த அழைப்பும் கிடையாது; அது என் வாழ்க்கையின் எளிய பங்கு, தேவனுடைய இயற்கையோடு நான் ஒன்றிப்பதின் எதிரொலி அது. சேவை என் வாழ்க்கையின் இயற்கையான பகுதியேயாகும். தேவன் என்னைத் தம்மோடுள்ள உறவுக்குள் கொண்டு வருகிறார்; அதன்மூலம் நான் அவருடைய அழைப்பைப் புரிந்துகொள்ளுகிறேன், நான் மனப்பூர்வமாக அவர்பேரிலுள்ள கலப்பற்ற அன்பினால் காரியங்களைச் செய்கிறேன். தேவனுடைய அழைப்பைக் கேட்ட ஒரு இயற்கையின் மனப்பூர்வமான அன்பின் தானமே தேவனைச் சேவிப்பது. என்னுடைய இயற்கைக்குப் பொருத்தமாயிருப்பதை வெளிப்படுத்துவதே சேவை; தேவனுடைய அழைப்பு அவருடைய தன்மையை வெளிப்படுத்துகிறது; அதன் விளைவாக, நான் தேவனுடைய தன்மையைப் பெற்று, அவருடைய அழைப்பைக் கேட்கும்போது, தெய்வீக இயற்கையின் சத்தம் தேவனுடைய தன்மையிலும் என் தன்மையிலும் ஒலிப்பதினால், இரண்டும் ஒன்றித்துச் செயல்படுகின்றன. தேவகுமாரன் என்னில் தம்மை வெளிப்படுத்துகிறார்; அப்போது, அவர்பேரிலுள்ள பக்தியினால் என் வாழ்க்கையின் சாதாரண வழிகளிலும் அவரைச் சேவிக்கிறேன்.

அவர் கர்த்தர்

தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என்தேவனே! என்றான். யோவான் 20:28.

தாகத்துக்குத்தா என்று இயேசு கேட்டார். இயேசுகிறிஸ்துவை நாம் திருப்திசெய்யவேண்டியவர்களாயிருக்க, நம்மில் எத்தனைபேர் அவர் நம்முடைய தாகத்தைத் தீர்க்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்? நம்மைத் திருப்திசெய்ய அவரிடமிருந்து மொண்டுகொள்ளாமல், இறுதிச் சொட்டுவரை செலவிட்டவர்களாய், இப்போது நாம் ஊற்றிக்கொடுக்கவேண்டும். நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்--நம்முடைய கர்த்தராகிய இயேசு நம்மை எங்கு வைத்தாலும், அவர்மீது நாம் வைக்கிற களங்கமற்ற, விட்டுக்கொடுக்காத, பலன் எதிர்பார்க்காத பக்தியுள்ள வாழ்க்கை அவரைத் திருப்திப்படுத்தும் என்பதே அதன் கருத்தாகும்.

இயேசுகிறிஸ்துவிலுள்ள பக்தியோடு போட்டியிடுகிற எதைக்குறித்தும் ஜாக்கிரதையாயிருங்கள். இயேசுவின்மீதுள்ள பக்திக்கு மிகவும் அதிகம் போட்டியாயிருப்பது அவருக்காகச் சேவைசெய்வதே. வண்டல்வரைக் குடிப் பதைவிட சேவைசெய்வது எளிதானதே. தேவனுடைய அழைப்பின் ஒரே நோக்கம் தேவனுடைய திருப்தியே; அவருக்கு ஏதாவது செய்வதற்கான அழைப்பல்ல. நாம் தேவனுக்காகப் போராடும்படி அனுப்பப்படவில்லை; அவருடைய போராட்டங்களில் அவரால் பயன்படுத்தப்படும்படி அனுப்பப் படுகிறோம். இயேசுகிறிஸ்துவைவிட சேவைக்கு நாம் அதிக பக்தியுள்ளவர் களாயிருக்கிறோமோ?

தரிசனமும் அந்தகாரமும்

திகிலும் காரிருளும் அவனை மூடிக்கொண்டது. ஆதி.15:12.

எப்பொழுதெல்லாம் தேவன் ஒரு பரிசுத்தவானுக்குத் தரிசனம் கொடுக்கிறாரோ அப்பொழுதெல்லாம் அவனைத் தம்முடைய கரத்தின் நிழலிலே வைக்கிறதுபோலவே தோன்றுகிறது; பரிசுத்தவானின் கடமை அமர்ந்திருந்து செவிகொடுப்பதே. மிகையான ஒளியிலிருந்து வரும் ஒரு இருள் உண்டு; அவ்வேளைதான் செவிகொடுக்கவேண்டிய நேரம். இருளாயிருக்கும்போது தேவன் ஒளி அனுப்பும்படிக் காத்திராமல், நல்ல புத்தி மதிக்குச் செவிகொடுப்பதற்கு எடுத்துக்காட்டு ஆதியாகமம் 16-ம் அதிகாரம். தேவன் ஒரு தரிசனம் தரும்போது, இருள் அதைப் பின்தொடருமானால், காத்திருங்கள். தேவனுடைய வேளைக்காகக் காத்திருப்பீர்களானால், அவர் கொடுத்த தரிசனத்துக்கொத்தவாறு உங்களை அவர் ஆக்குவார். தேவன் தமது வாக்கை நிறைவேற்ற ஒருபோதும் உதவிசெய்ய முயற்சியாதீர்கள். ஆபிரகாம் பதின்மூன்று அமைதலின் ஆண்டுகளைக் கடந்தார்; அந்த ஆண்டுகளில் எல்லாத் தன்னிறைவும் அழிக்கப்பட்டது; பகுத்தறிவின் வழிகளைச் சாரும் எந்த சாத்தியதையும் விட்டுவைக்கப்படவில்லை. அந்த அமைதலின் ஆண்டுகள் அதிருப்தியின் காலமாயிராமல் பயிற்சியின் காலமாயிருந்தது. மகிழ்ச்சி மற்றும் நம்பிக்கை போன்றவற்றை நீங்களாக மேம்படுத்தாதேயுங்கள்; தேவனுக்காகக் காத்திருங்கள் (ஏசாயா 1:10,11).

எனக்கு மாம்சத்தில் ஏதாவது நம்பிக்கை உண்டா? அல்லது, என்னிலும் தேவமனிதர்களிலும், புத்தகங்கள், ஜெபங்கள், பரவச அனுபவங்கள் என்பவற்றிலும் நம்பிக்கைவைக்கும் அனுபவத்துக்கு அப்பாற்பட்டவனாகிவிட்டேனா? இப்போது என்னுடைய நம்பிக்கை தேவனுடைய ஆசீர்வாதங்களில் அல்லாமல், அவரில்தானா வைக்கப்பட்டுள்ளது? நான் சர்வவல்லமையுள்ள தேவன் என்றார் அவர்--சர்வவல்லமையுள்ள தேவன் என்றால் ஏல் ஷடாய், அதாவது தாயும் தந்தையுமான தேவன். தேவன் தத்ரூபமானவர் என்று அறிகிறதாகிய ஒரே காரியத்துக்கே நாம் எல்லாரும் பயிற்சியளிக்கப்படுகிறோம். தேவன் தத்ரூபமானவுடனே மற்ற மக்கள் நிழலாகிவிடுவார்கள். பிற பரிசுத்தவான்கள் செய்கிறவைகளும் சொல்லுகிறவைகளும் ஒன்றும் தேவன்மீது கட்டப்பட்ட ஒருவரின் அமைதியை ஒருபோதும் கெடுக்கமுடியாது.

எல்லாவற்றுக்கும் நீங்கள் ஆயத்தந்தானா?

ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான். யோவான் 3:3.

சிலவேளைகளில் நாம் ஜெபக்கூட்டத்திற்கு ஆர்வமாயிருக்கிறோம்; ஆனால் காலணிகளைச் சுத்தஞ்செய்வதற்கு விரும்பமாட்டோம்!

ஆவியானவரால் மறுபடியும் பிறப்பது தேவனுடைய தெளிவான செயல்; அது காற்றைப்போல புதிரானது, தேவனைப்போன்றே அதுவும் வியப்புக்குரியது. அது எங்கு ஆரம்பிக்கிறது என்று நமக்குத் தெரியாது; அது நம்முடைய ஆளத்துவ வாழ்க்கையின் ஆழத்தில் மறைந்திருக்கிறது. உன்னதத்திலிருந்து மறுபடியும் பிறப்பதென்பது நிலையான, நிரந்தரமான, நித்தியமான ஒரு ஆரம்பம்; தேவனுடைய ஜீவனின் தொடர்பான ஆச்சரியமாக அது சிந்தனையிலும் உரையாடலிலும் வாழ்க்கையிலும் எப்போதும் புதுமையளிக்கிறது. புதுமையற்ற அனுபவம் தேவனோடு தொடர்பற்ற நிலையைக் காட்டுகிறது--நான் இக்காரியத்தைச் செய்தேயாகவேண்டும், இல்லையென்றால் இது ஒருபோதும் செய்யப்படமாட்டாது என்று கூறுவது அந்த அனுபவத்தின் முதல் அடையாளமாகும். இந்நிமிடம் நாம் புதுமையாய்ப் பிறந்திருக்கிறோமா? அல்லது மட்கிப்போனவர்களாய் ஏதாவது செய்யவேண்டும் என்று நமது மனதைக் கிளறுகிறோமா? புதுமைக் கீழ்ப்படிதலிலிருந்து வராமல், பரிசுத்த ஆவியிலிருந்து உண்டாகிறது; தேவன் ஒளியில் இருப்பதுபோல, கீழ்ப்படிதல் நம்மை ஒளியில் வைக்கிறது.

தேவனோடுள்ள உங்களுடைய உறவை அக்கறையோடு காத்துக் கொள்ளுங்கள். நாம் ஒன்றாயிருப்பதுபோல அவர்களும் (சீஷர்களும்) ஒன்றாயிருக்கவேண்டும் என்று இயேசு சீஷர்களுக்காகப் பிதாவிடம் ஜெபித்தார்--இடையில் ஒன்றுமிருக்கக்கூடாது. இயேசுகிறிஸ்துவுக்காக வாழ்க்கை முழுவதையும் நிரந்தரமாகத் திறந்துவைத்துக்கொள்ளுங்கள்; அவரோடு பாசாங்குசெய்யாதீர்கள். தேவனைத்தவிர வேறெந்த ஆதாரத்திலிருந்தாவது நீங்கள் உங்கள் ஜீவனை மொண்டுகொள்ளுகிறீர்களா? தேவனைத்தவிர வேறு எதிலாவது நீங்கள் சார்ந்திருக்கிறீர்களேயானால் அவர் எப்போது போய்விட்டார் என்பதை ஒருபோதும் அறியமாட்டீர்கள்.

ஆவியினால் மறுபடியும் பிறப்பது என்பது நாம் சாதாரணமாகக் கருதுவதைவிட மிகவும் ஆழமான கருத்தைக்கொண்டது. அது நமக்கு ஒரு புதிய தரிசனத்தைக் கொடுக்கிறது, தேவனுடைய ஜீவனை நிரந்தரமாக அளித்து, நம்மை எல்லாவற்றுக்கும் புதுமையாகக் காத்துக்கொள்ளுகிறது.

தேவன் நினைத்திருக்கிறதைத் திரும்ப நினைவுகூருங்கள்

உன் இளவயதின் பக்தியை . . . நினைத்திருக்கிறேன். எரே.2:2.

முன்பு நான் இருந்ததுபோலவே இப்போதும் நான் தேவனிடத்தில் தன்னிச்சையாய் இரக்கமுள்ளவனாயிருக்கிறேனா? அல்லது, தேவன் என்னிடம் இரக்கமாயிருப்பதை மாத்திரம் எதிர்பார்க்கிறேனா? அவருடைய இருதயம் என் நிமித்தம் உற்சாகப்படும் சின்னச்சின்னக் காரியங்களால் நான் நிறைந்திருக்கிறேனா? அல்லது காரியங்கள் எனக்குக் கடினமாகப் போகிறது என்பதற்காகச் சிணுங்குகிறேனா? தேவன் உயர்வாக மதிக்கிற வைகளை மறந்துபோகிற ஆத்துமாவில் மகிழ்ச்சியில்லை. தாகத்துக்குத்தா என்று கேட்பதினால் இயேசுகிறிஸ்து என்னையும் தேவைப்படுகிறார் என்று எண்ணுவது பெரிய காரியம். கடந்த வாரத்தில் நான் அவருக்கு எவ்வளவு கருணை காட்டியுள்ளேன்? என்னுடைய வாழ்க்கையில் அவருடைய புகழுக்காகப் பாசமுள்ளவனாயிருந்திருக்கிறேனா?

இப்போது நீங்கள் என்னில் அன்பாயிருக்கவில்லை; ஆனால் நீங்கள் என்னில் அன்பாயிருந்த காலத்தை நான் நினைவுகூருகிறேன் என்றும், நீ வாழ்க்கைப்பட்டபோது உனக்கிருந்த நேசத்தை நினைத்திருக் கிறேன் என்றும் ஆண்டவர் தம்முடைய ஜனத்தோடு கூறுகிறார். இயேசு கிறிஸ்துவிலுள்ள என் பக்தியைத் தெளிவுபடுத்த மிகவும் கடினமாக நான் முயற்சித்த ஆரம்பகாலத்தைப்போல, இப்போதும் அவர்மீதுள்ள மட்டுமீறிய பாசத்தால் நான் நிறைந்திருக்கிறேனா? அவரைத்தவிர வேறு எதையும் நான் பொருட்படுத்தாதிருந்த காலத்தை நான் நினைவுகூருகிற நிலையில் அவர் என்னைக் காண்கிறாரா? நான் அந்த நிலையில்தானிருக்கிறேனா? அல்லது, அவரை நேசிக்கிற காரியத்தில் அதிக அறிவாளியாகிவிட்டேனா? நான் எங்கே செல்லுகிறேன் என்பதைக் கணக்கிடாதவாறு நான் அவரில் அன்புகூருகிறேனா? அல்லது, எவ்வளவு சேவை நான் அவருக்குச் செய்ய வேண்டுமென்று சிந்தனை செய்துகொண்டு எனக்கு உரிமையான மரியா தைக்காகக் காத்திருக்கிறேனா?

என்னைக்குறித்து தேவன் என்ன நினைத்திருக்கிறார் என்பதை நான் மீண்டும் நினைவுக்குக் கொண்டுவரும்போது, அவர் முன்பு எனக்கு யாராய் இருந்தாரோ அவ்வாறு அவர் இப்போது இல்லை என்று கண்டு கொள்வேனேயானால், அது என்னில் வெட்கத்தையும், அவமானத்தையும் உண்டாக்கட்டும்; ஏனெனில், அந்த வெட்கம் மனந்திரும்புதலை உண்டு பண்ணக்கூடிய தெய்வீகத் துக்கத்தை என்னில் கொண்டுவரும்.

நான் எதை நோக்கிப்பார்க்கிறேன்?

என்னை நோக்கிப்பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். ஏசா.45:22.

தேவன் தம்முடைய ஆசீர்வாதங்களோடு நம்மிடம் வந்து நம்மை இரட்சிக்க நாம் எதிர்பார்க்கிறோமா? என்னை நோக்கிப்பார்த்து இரட்சிப்படையுங்கள் என்று அவர் கூறுகிறார். ஆவிக்குரிய நிலையில் அதிகக் கடினமாயிருப்பது தேவன்மீது மனதை ஒருமுகப்படுத்துவதே; அதைக் கடினமாக்குவது அவருடைய ஆசீர்வாதங்களே. உபத்திரவங்கள் ஏறக்குறைய எப்போதும் நம்மைத் தேவனை நோக்கிப்பார்க்க வைக்கிறது; ஆனால் ஆசீர்வாதங்கள் நம்மை வேறு எங்கோ பார்க்கும்படிச் செய்ய வாய்ப்புண்டு. மனது, இருதயம், சரீரம் என்பவற்றின் உணர்ச்சிகள் இயேசுகிறிஸ்துவில் ஒருமுகப்படுத்தப்படும்வரை உங்கள் எல்லா அக்கறைகளையும் ஒடுக்குங்கள் என்பதே மலைப்பிரசங்கப் போதனையின் சுருக்கமாகும்.

ஒரு கிறிஸ்தவன் எவ்வாறிருக்கவேண்டும் என்கிற கருத்து நம்மில் பலருடைய மனதில் இருக்கிறது; எனவே, நமது சிந்தைகளைத் தேவனில் ஒருமுகப்படுத்தாதபடி பக்தர்களின் வாழ்க்கைகள் தடையாகின்றன. இந்த வழியில் இரட்சிப்பு இல்லை; அது போதுமான அளவு எளியதுமில்லை. என்னை நோக்கிப்பாருங்கள், அப்பொழுது நீங்கள் என்றாவது இரட்சிப்படைவீர்கள் என்றல்ல, நீங்கள் உடனே இரட்சிக்கப்பட்டாயிற்று. தேவன்மீது ஒருமுகப்படும்போது நாம் எதைத் தேடுகிறோமோ அதைக் கண்டடைவோம். என்னை நோக்கிப்பார்த்து இரட்சிப்படையுங்கள் என்று தேவன் இடையறாது சொல்லிக்கொண்டிருக்கிறார்; நாமோ வேறு காரியங்களில் நம்மை ஈடுபடுத்திக்கொண்டு, தேவனிடம் சிடுசிடுப்பாகிறோம். நாம் தேவனை நோக்கிப்பார்க்கும்போது நம்முடைய பாடுகளும் சோதனைகளும், இந்த வேனிற்காலம் அல்லது நாளையத்தினம் என்ன செய்வோம் என்று நமது மனதில் தோன்றுகிற தேவையற்ற சிந்தனைகளும் மாய்ந்துபோம்.

நீங்கள் விழித்தெழும்பி தேவனை நோக்கிப்பாருங்கள். உங்கள் நம்பிக்கையை அவரில் கட்டியெழுப்புங்கள். உங்களை நெருக்குகிற எண்ணற்ற காரியங்கள் இருந்தாலும் பரவாயில்லை, அவற்றையெல்லாம் தீர்மானமாய் ஒதுக்கிவிட்டு அவரை நோக்கிப்பாருங்கள். என்னை நோக்கிப்பாருங்கள்--நீங்கள் அவரை நோக்கிப்பார்க்கும் அந்த நிமிடமே இரட்சிப்பு உங்களுடையது.

பகுத்தறிவினால் மறுரூபமாகுதல்

நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, . . . அந்தச் சாயலாகத்தானே . . . மறுரூபப்படுகிறோம். 2 கொரி.3:18.

தேவனுக்குமுன்பாக ஒரு கிறிஸ்தவன் இத்தகைய ஒளிவுமறைவு அற்றவனாயிருப்பதினால், அவனுடைய வாழ்க்கை மற்ற வாழ்க்கைகளுக்கு முகம்பார்க்குங் கண்ணாடியாய் மாறுவதே அவனுடைய கவனிக்கத்தகுந்த பண்பாகும். ஆவியானவரால் நிறைவதால் நாம் மறுரூபமாக்கப்படுகிறோம்; நோக்கிப்பார்ப்பதினால் நாம் முகம் பார்க்கும் கண்ணாடிகளாகிறோம். கர்த்தருடைய மகிமையை ஒரு மனிதன் நோக்கிக்கொண்டிருப்பானானால் அதை நீங்கள் எப்போதும் அறிவீர்கள்; அவன் ஆண்டவருடைய சொந்தத் தன்மையைக் காட்டும் கண்ணாடி என்று உங்கள் உள்ளான ஆவியில் உணருவீர்கள். உங்களிலிருக்கிற அந்தக் கண்ணாடியை கறைப்படுத்தக் கூடிய எதைக்குறித்தும் ஜாக்கிரதையாயிருங்கள்; அது கொஞ்சங்குறைய எப்போதும் நல்ல காரியமாயிருக்கும், ஆயினும் அது மிகச் சிறந்ததாயிராத நல்ல காரியம்.

என்னுடைய வாழ்க்கையையும் உங்களுடைய வாழ்க்கையையும் தேவனுக்கு நேராகக் கருத்தோடு திறந்து வைப்பதே நம்முடைய வாழ்க்கையின் தங்கப் பிரமாணமாகும். மற்று எல்லாக் காரியங்களும்--வேலை, உடை, உணவு, பூமியிலுள்ள எல்லாக் காரியங்களும்--அந்த ஒன்றுதவிர எல்லாம் புறக்கணிக்கப்படவேண்டும். பிற காரியங்களின் நெருக்கம் நாம் இவ்வாறு தேவனைக் கூர்ந்துநோக்குவதை எப்போதும் மறைக்கச்செய்யும். நாம் வாழ்க்கை முழுவதையும் ஆவிக்குரிய நிலையில் காத்துக்கொண்டு, நோக்கிப்பார்க்கிற இடத்தில் நம்மைப் பராமரிக்கவேண்டும். மற்றக் காரியங்கள் தங்கள் வாய்ப்புப்படி வந்துபோகட்டும், மற்ற மக்கள் தங்கள் மனம்போல விமர்சிக்கட்டும், ஆனால் கிறிஸ்துவோடு தேவனுக்குள் மறைந்திருக்கிற வாழ்க்கையை எக்காரியமும் மறைத்துவிட ஒருபோதும் அனுமதியாதீர்கள். தேவனில் நிலைத்திருக்கிற உறவிலிருந்து ஆத்திரமாய் ஒரு போதும் வெளியேறாதீர்கள். அதுதான் தடுமாறக்கூடிய ஒரே காரியம்; ஆனால் அவ்வாறு நடக்கக்கூடாது. கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கர்த்தருடைய மகிமையைக் கண்டுகொண்டிருக்கக் கற்றுக்கொள்ளுவதே கிறிஸ்தவ வாழ்க்கையின் மிகக் கடுமையான கட்டுப்பாடாகும்.

ஆதிக்கஞ்செலுத்தும் வழிநடத்துதல்

உன்னை . . . ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன். அப்.26:16.

தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் பவுல் கண்ட தரிசனம் ஒரு கடந்துபோகிற உணர்ச்சியல்ல; அவருக்குத் தெளிவாகவும், திட்டமாகவும் வழிகாட்டிய தரிசனமாகுமது; எனவே, நான் அந்தப் பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை என்று அவர் கூறினார். உன்னுடைய முழு வாழ்க்கையும் என்னால் அடக்கி ஆட்கொள்ளப்படவேண்டும்; என் குறிக்கோள், இலக்கு மற்றும் நோக்கந்தவிர உனக்கு வேறொன்றும் வேண்டாம் என்று ஆண்டவர் பவுலிடம் கூறினதுபோலக் கருத்தாகிறது. நான் அவனைத் தெரிந்துகொண்டேன் என்றும் அவர் கூறினார்.

நாம் ஆவிக்குரியவர்களாயிருப்போமானால், மறுபடியும் பிறந்த பின் நாம் எவ்வாறிருக்கவேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கிறார் என்ப தைக்குறித்து நம்மெல்லாருக்கும் தரிசனமுண்டு; தரிசனத்திற்குக் கீழ்ப்படி யாமலிருக்கவும் அது அடைந்துகொள்ளமுடியாதது என்று சொல்லாம லிருக்கவும் கற்றுக்கொள்வதே மிகப்பெரிய காரியமாகும். தேவன் உலகத்தை மீட்டுக்கொண்டாரென்று அறிவதும், இயேசு செய்துள்ள எல்லாவற்றையும் ஆவியானவர் என்னில் பயனுள்ளதாக்குவாரென்று அறிவதும்மட்டும் போதாது; அவரோடுகூட நான் ஆளத்துவமான உறவு கொள்ள ஒரு அடிப்படை எனக்கு இருக்கவேண்டும். ஒரு செய்தியோ அல்லது கொள்கையோ அறிவிக்கும்படி பவுலிடம் கொடுக்கப்படவில்லை; இயேசுகிறிஸ்துவோடு தெளிவான, ஆளத்துவமான, ஆதிக்கஞ்செலுத்தும் உறவுக்கே அவர் கொண்டுவரப்பட்டார். உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன் என்ற 16-ம் வசனம் மிகுதியாக மனதில் பதியவேண்டியது. அங்கே ஆளத்துவ உறவு அன்றி வேறொன்றுமில்லை. பவுல் தன்னை ஒரு கொள்கைக்கல்ல, ஒரு நபருக்கே அர்ப்பணித்தார். அவர் முற்றிலும் இயேசுகிறிஸ்துவுக்கே சொந்தம்; அவர் வேறொன்றையும் காணவுமில்லை, வேறொன்றுக்காக வாழவுமில்லை. இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரை யேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித் திருந்தேன் என்றே அவர் கூறினார்.

தேவனுக்கு இடங்கொடுங்கள்

தேவன் . . . பிரியமாயிருந்தபோது. கலாத்.1:15,16.

தேவனுடைய ஊழியர்கள் என்கிற நிலையில் அவருக்கு இடங் கொடுக்க நாம் கற்றுக்கொள்ளவேண்டும்--தேவன் தம்முடைய சித்தத்தை நிறைவேற்ற நாம் சுயாதீனங்கொடுக்கவேண்டும். இன்னின்ன காரியங்கள் நடக்குமென்று நாம் கணக்கிட்டும் மதிப்பிட்டும் கூறுகிறோம்; ஆனால், தேவன் தெரிந்துகொள்ளுகிறதுபோல உள்ளே வருவதற்கு இடங்கொடுக்க நாம் மறந்துபோகிறோம். அவர் வருவாரென்று நாம் ஒருபோதும் எதிர்பார்த் திராதமுறையில், நம்முடைய கூட்டங்களிலோ நாம் பிரசங்கிக்கும்போதோ தேவன் வருவாரேயாகில் நாம் அதிர்ச்சியடைவோமா? ஏதாவது குறிப்பிட்ட வழியில் தேவன் வரவேண்டுமென்று எதிர்பாராதீர்கள்; அவரையே எதிர்பா ருங்கள். அதுதான் அவருக்கு இடங்கொடுக்கும் வழியாகும். அவர் வருவ தற்குக் காத்திருங்கள்; ஆனால், ஒரு குறிப்பிட்ட வழியில் வரவேண்டு மென்று காத்திராதீர்கள். நாம் தேவனை எவ்வளவு அதிகமாக அறிந்திருந் தாலும், நாம் கற்கவேண்டிய சிறந்த பாடம் அவர் எந்த நிமிடத்திலும் பலாத்காரமாகப் பிரவேசிப்பாரென்பதுவே. இந்த ஆச்சரியத்தின் சூழலை நாம் கவனிக்கத் தவற வாய்ப்புண்டு; ஆயினும், வேறு எந்த வழியிலும் தேவன் ஒருபோதும் செயல்படுகிறதில்லை. திடீரென தேவன் வாழ்க்கையைச் சந்திக்கிறார்--தேவனுக்குப் பிரியமாயிருந்தபோது என்று வாசிக்கிறோமே.

தேவனுடைய எதிர்பாரா அதிர்ச்சியளிக்கும் சக்தி, வலது கையிலும் இடது கையிலும் வெளிப்படத்தக்கதாக, நீங்கள் அவரோடுள்ள தொடர்பில் உங்கள் வாழ்க்கையை நிரந்தரமாகக் காத்துக்கொள்ளுங்கள். எதிர்நோக்கி யுள்ள நிலையில் எப்போதும் இருங்கள்; தேவன் தம்முடைய விருப்பப்படி உங்களுக்குள் பிரவேசிக்க எப்போதும் இடம் ஆயத்தமாய் வைத்துக் கொள்ளப்பாருங்கள்.

மறுபடியும் பார்த்து அர்ப்பணம் செய்யுங்கள்

காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? மத்.6:30.

நாம் எளிமையற்றவர்களாயிருந்தால் இயேசுவின் ஒரு எளிய கூற்று எப்போதும் நமக்குப் புதிராயிருக்கலாம். இயேசுவின் எளிமையினால் நாம் எவ்வாறு எளிமையாகப்போகிறோம்? அவருடைய ஆவியைப் பெற்று, அவரை அறிந்து அவர்மீது சார்ந்தவர்களாய், அவர் தேவனுடைய வார்த்தைகளைக் கொண்டுவரும்போது அதற்குக் கீழ்ப்படிவதின்மூலம், நம்முடைய வாழ்க்கை பிரமாதமாக எளிமையடையும். நீங்கள் உங்களுடைய உறவைத் தேவனோடு சரியாகக் காத்துக்கொண்டால், காட்டுப் புல்லுக்கு உடுத்துவிக்கிற உங்கள் பிதா உங்களுக்கு அதிலும் சிறப்பாய் உடுத்துவிப்பார் என்பதைச் சிந்தியுங்கள் என்று இயேசு கூறுகிறார். ஆவிக்குரிய அன்னியோன்னியத்தில் நாம் பின்வாங்கிப்போகிற ஒவ்வொருவேளையும் அதின் காரணம், இயேசுகிறிஸ்து வைவிடக் கூடுதலாய் நாம் அறிந்திருக்கிறோமென்கிற அகந்தையே. உலகக் கவலைகள் நமக்குள் வர நாம் அனுமதித்திருக்கிறோம்; நமது பரலோகத் தந்தை நமக்கு மிகவும் அதிகமாகச் செய்வாரென்பதை மறந்துவிட்டோம்.

ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்--அவைகளிலிருக்கிற வாழ்வின் கொள்கைக்குக் கீழ்ப்படிகிறதே அவைகளின் ஒரே நோக்கம்; எனவே தேவன் அவைகளைப் பேணுகிறார். நீங்களும் தேவனோடு சரியான உறவு கொண்டு, உங்களிலிருக்கிற தேவ ஆவியானவருக்குக் கீழ்ப்படிந்தால் உங்கள் இறகுகளை அவர் கவனித்துக்கொள்வார் என்றே இயேசு கூறினார்.

காட்டுப்புஷ்பங்களைக் கவனித்துப்பாருங்கள்--அவைகள் வைக்கப் பட்ட இடங்களில் வளருகின்றன. நம்மில் பலரும் நாம் வைக்கப்படும் இடத்தில் வளர மறுக்கிறோம்; அதன்பலனாக, நாம் ஒரு இடத்திலும் வேர்கொள்வ தில்லை. தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற வாழ்க்கைக்கு நாம் கீழ்ப்படிவோ மேயானால், மற்றெல்லாக் காரியங்களையும் அவர் கவனித்துக்கொள்வார் என்று இயேசு கூறினார். இயேசுகிறிஸ்து நம்மிடம் பொய் சொல்லியிருக் கிறாரா? அதிகக் கூடுதலான ஆசீர்வாதங்களை நாம் அனுபவிக்கவில்லை யென்றால், அதன் காரணம் தேவன் நமக்குத் தந்திருக்கிற வாழ்க்கைக்கு நாம் கீழ்ப்படியவில்லை, மற்றும் குழப்பமான சிந்தைகளில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதே. தேவனுடைய ஊழியத்தில் கவனம் செலுத்துவதற்கு முற்றிலும் சுதந்தரமாயிருப்பதற்குப்பதில் தேவனைக் கேள்விகளினால் விசாரப்படுத்த எவ்வளவு நேரத்தைச் செலவிடுகிறோம்? ஒரு குறிப்பிட்ட காரியத்துக்கு என்னை இடையறாது பிரித்துவைப்பதே அர்ப்பணத்தின் கருத்தாகும். நம்மை என்றென்றைக்குமாக அர்ப்பணிக்கமுடியாது. என் வாழ்வில் அனுதினமும் தேவனைக்குறித்துச் சிந்திக்க என்னை இடையறாது வேறுபடுத்துகிறேனா?

மறுபடியும் பார்த்து சிந்தனைசெய்யுங்கள்

உங்கள் ஜீவனுக்காகக் . . . கவலைப்படாதிருங்கள். மத்.6:25.

உலகக்கவலைகளும், ஐசுவரிய மயக்கமும், வேறு காரியங்களின் பேரிலுள்ள இச்சைகளும் உள்ளே பிரவேசித்துத் தேவன் நமக்குள் வைக்கிற எல்லாவற்றையும் நெருக்கிப்போடும் என்பது வலியுறுத்தப்படவேண்டிய எச்சரிப்பாகும். இத்தகைய ஆக்கிரமிப்பின் காலங்கள் நம்மைத் தாக்குவதிலிருந்து நாம் ஒருபோதும் விடுதலையடைவதில்லை. அந்த ஆக்கிரமிப்பு உடை மற்றும் உணவு போன்றவைகளில் வராமலிருந்தால், பணத்தாலோ அல்லது பணமின்மையாலோ வரும், நண்பர்களாலோ அல்லது நண்பர்களின்மையாலோ வரும்; அல்லது கடினமான சூழல்கள் போன்றவற்றால் வரும். எக்காலத்தும் நிதானமான ஆக்கிரமிப்பாயிருக்கும் அது; இத்தகைய ஆக்கிரமிப்புகளுக்கெதிராகத் தேவனுடைய ஆவியானவர் கொடி உயர்த்த நாம் அனுமதிக்காவிட்டால் இக்காரியங்கள் ஜலப்பிரவாகம்போல வரும்.

உங்கள் ஜீவனைக்குறித்துக் கவலைப்படவேண்டாம். நீங்கள் கவலைப்படவேண்டிய ஒரேயொரு காரியமேயுண்டு, அது என்னோடுள்ள உறவு மாத்திரமே என்று நமது கர்த்தர் கூறுகிறார். அது அபத்தமானது; நான் எவ்வாறு வாழப்போகிறேன் என்று நான் சிந்திக்கவேண்டும்; நான் எவைகளை உண்பேன், எவைகளைக் குடிப்பேன் என்று நான் சிந்திக்க வேண்டும் என்றுதான் பகுத்தறிவு சத்தமாய்க் கூவுகிறது. நீங்கள் அவ்வாறு சிந்திக்கக்கூடாதென்று இயேசு கூறுகிறார். நம்முடைய தனிப்பட்டச் சூழ்நிலைகளை அறியாத ஒருவர் இவ்வாறு கூறினார் என்ற எண்ணத்துக்கு இடங்கொடுக்கிறதில் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். நாம் அறிகிறதைவிட நம்முடைய சூழ்நிலைகளை இயேசுகிறிஸ்து மிகவும் நன்றாக அறிகிறார்; அக்காரியங்கள் மட்டும் நம்முடைய வாழ்க்கையின் ஒரே அக்கறையாய் இருக்கும்படியாக அவைகளைக்குறித்துச் சிந்திக்கவேண்டாமென்று இயேசு கூறினார். போட்டி வரும்போதெல்லாம் தேவனோடுள்ள உங்கள் உறவுக்கு முதலிடம் கொடுப்பதில் நிச்சயமாயிருங்கள்.

அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும். எவ்வளவு தீமைகள் இன்று உங்களைப் பயமுறுத்த ஆரம்பித்திருக்கின்றன? எந்த வகையான இழிவான குட்டிப்பிசாசுகள் உங்களுக்குள் எட்டிப்பார்த்துக் கூறுகின்றன--அடுத்தமாதம் நீ என்ன செய்யப்போகிறாய்?--இந்த வேனிற்காலம்? ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள் என்று இயேசு சொல்லுகிறார். மறுபடியும் கவனித்துச் சிந்தனை செய்யுங்கள். உங்களுடைய பரம பிதா உங்களுக்கு எல்லாவற்றிலும் கூடுதலாகச் செய்வார் என்பதில் உங்கள் சிந்தையை வையுங்கள்.

ஒருவர் இயேசுவை இவ்வாறு துன்பப்படுத்தமுடியும் என்பதை நம்புவது அரிது

சவுலே, சவுலே, நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்? அப்.26:14.

தேவனுக்காக என்னுடைய சொந்த வழியில் செயல்படுகிறேனா? பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலுமுள்ள ஞானஸ்நானத்தின் அனுபவத்திற்குள் நாம் கொண்டுவரப்படுமட்டும் இந்தக் கண்ணியிலிருந்து ஒருபோதும் நாம் விடுதலைபெறமுடியாது. பிடிவாதமும் கடின சித்தமும் இயேசுகிறிஸ்துவை எப்போதும் புண்படுத்தும். வேறு யாரையும் அது காயப்படுத்தாமலிருக்கலாம்; ஆனால், அது அவருடைய ஆவியைப் புண்படுத்துகிறது. நாம் பிடிவாதமும் கடின சித்தமும் கொண்டு, நம்முடைய சொந்தப் பேராவல்களில் மனதை வைக்கும்போதெல்லாம் இயேசுவை நாம் புண்படுத்துகிறோம். நம்முடைய உரிமைகளுக்காக நாம் போராடி, இன்னின்னவைகளைத்தான் செய்ய எண்ணுகிறோம் என்று அழுத்தமாகக் கூறும் ஒவ்வொருநேரமும் இயேசுவை நாம் துன்பப்படுத்துகிறோம். நமது சுயகௌரவத்தைச் சாரும்போதெல்லாம், நாம் அவருடைய ஆவியை முறைதவறாமல் எரிச்சல்படுத்தித் துக்கப்படுத்துகிறோம்; நாம் எப்போதும் துன்பப்படுத்திக்கொண்டிருந்தது இயேசுவைத்தான் என்று அறியும்போது, அதிகமாய் என்னை நொறுக்கும் வெளிப்படுத்தல் இதுவாய்த்தானிருக்கும்.

நான் உங்களுக்குத் தேவனுடைய வசனத்தைக் கையளிக்கும் போது அந்த வசனங்களில் நான் அதிக ஆர்வமிக்கவனாயிருக்கிறேனா? அல்லது என் வாழ்க்கை நான் கற்பிக்கிறதாக உரிமைப்படுகிற காரியங் களைப் பொய்யாக்குகிறதா? நான் பரிசுத்தமாகுதலைக் கற்பிக்கலாம்; ஆயினும் இயேசுகிறிஸ்துவைத் துன்பப்படுத்துகிற ஆவியாகிய சாத்தானின் ஆவியை வெளிப்படுத்தலாம். இயேசுவின் ஆவி ஒரேயொரு காரியத்தைக் குறித்தே விழிப்புணர்வு கொண்டுள்ளது; அது பிதாவோடு பூரணமாய் ஒன்றாயிருப்பதே; நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் என்று அவர் கூறுகிறார். நான் செய்கிறவைகள் எல்லாம், தெய்வபக்தியுள்ளவனாயிருக்கவேண்டும் என்ற சுயசித்தத்தின் தீர்மானத்தையல்ல, அவரோடுள்ள பூரண ஒன்றிப்பையே அடிப்படையாகக்கொண்டிருக்கவேண்டும். இதனால் நான் எளிதாய்த் தவறாகப் பயன்படுத்தப்படலாம், அல்லது எளிதாக முந்தப்படலாம்; அல்லது எளிதாக அசட்டைபண்ணப்படலாம்; ஆனால், அவர் நாமத்தினிமித்தம் நான் என்னை இவைகளுக்கு ஒப்புக்கொடுக்கும்போது, நான் இயேசு கிறிஸ்து துன்பப்படுத்தப்படுவதைத் தடுக்கிறேன்.

ஒருவர் திட்டமாக அறியாமையில் இருக்கமுடியும் என்பதை நம்புவது அரிது

ஆண்டவரே, நீர் யார்? அப்.26:15

கர்த்தர் பலத்த கரத்தினால் இவ்வாறு என்னோடு பேசினார் என்று ஏசாயா சொன்னார். நம்முடைய ஆண்டவர் பேசும்போது தப்பமுடியாது; புரியும் திறனைக் கைப்பற்றியே அவர் எப்போதும் வருகிறார். தேவனுடைய சத்தம் நேரடியாக உங்களுக்கு வந்ததுண்டா? அப்படி வந்ததுண்டானால், நீங்கள் மிகவும் நன்றாக அறிந்திருக்கிற மொழியில், உங்கள் செவிகளின் வழியாயல்லாமல், உங்கள் சூழ்நிலைகளினூடே அவர் சத்தம் உங்களோடு பேசுகிற மிகவும் நெருக்கமான அழுத்தத்தை நீங்கள் புரிந்துகொள்ளாமல் இருக்கமுடியாது.

நமது சொந்த விசுவாசத்திலுள்ள தீர்மானமான நம்பிக்கையைத் தேவன் அழிக்கவேண்டும். இதைத்தான் நான் செய்யவேண்டுமென்று எனக்குத் தெரியும் என்று நாம் கூறும்போது, நம்முடைய அறிவீனத்தின் ஆழத்தை நமக்கு வெளிப்படுத்துவதின்மூலம், தேவனுடைய சத்தம் திடீரென்று நம்மை மேற்கொள்ளும் நிலையில் பேசுகிறது. அவரைச் சேவிக்க நாம் தீர்மானித்த அதே முறையில் அவரைப்பற்றிய நம்முடைய அறிவீனத்தைக் காண்பித்திருக்கிறோம். அவருடையதல்லாத ஆவியில் நாம் இயேசுவைச் சேவிக்கிறோம்; அவருக்காக வக்காலத்து வாங்குவதால் நாம் அவரைப் புண்படுத்துகிறோம்; ஆண்டவருடைய உரிமைகளைப் பிசாசின் ஆவியில் உந்தித்தள்ளுகிறோம். நமது வார்த்தைகள் சரியாய் இருப்பதுபோலத் தொனிக்கின்றன; ஆனால் ஆவி பகைவனின் ஆவியாய் இருக்கிறது. நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று இயேசு யாக்கோபையும் யோவானையும் அதட்டினார். நம்முடைய ஆண்டவருடைய சீஷர்களிலிருக்கும் அவருடைய ஆவி 1 கொரி.13-ல் விவரிக்கப்பட்டுள்ளது.

என் சொந்த வழியில் நான் இயேசுவைச் சேவிக்க வைராக்கிய மாகத் தீர்மானித்ததின்மூலமாக நான் அவரைத் துன்பப்படுத்திக்கொண் டிருக்கிறேனா? நான் என்னுடைய கடமையைச் செய்திருக்கிறேன் என்று உணர்ந்தாலும், அதைச் செய்ததில் நான் அவரைப் புண்படுத்தியிருந்தால் அது என் கடமையல்ல என்று எனக்கு நிச்சயமாகலாம்; ஏனெனில், அது சாந்தமும் அமைதியுமான ஆவியை அல்ல, தன்னிறைவுடைய ஆவியையே ஆதரிக்கிறது. இனிமையற்றது எதுவோ அது நம்முடைய கடமையென்று கற்பனை செய்கிறோம்! தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன் என்ற நம்முடைய ஆண்டவரின் ஆவியைப் போன்றதா அது!

கீழ்ப்படிதலினால் ஏற்படும் தடுமாற்றம்

சாமுவேல் ஏலிக்கு அந்தத் தரிசனத்தை அறிவிக்கப் பயந்தான். 1 சாமு.3:15.

அதிர்ச்சியூட்டும் முறையில் தேவன் நம்மோடு அரிதாகப் பேசுகிறார்; ஆனால் நாம் எளிதில் தவறாகப் புரிந்துகொள்ளும் முறையில் அவர் நம்மோடு பேசுவதால், இது தேவனுடைய சத்தந்தானா என்று நான் ஆச்சரியப்படுகிறேன் என்று நாம் கூறுகிறோம். ஆண்டவர் பலத்த கரத்தினால், அதாவது சூழலின் நெருக்கத்தினால், தன்னோடு பேசினதாக ஏசாயா கூறினார். தேவன்தாமே நம்மோடு பேசுவதுதவிர வேறொன்றும் நம்முடைய வாழ்க்கையைத் தொடாது. அவருடைய கரத்தைப் பிரித்தறிகிறோமா? அல்லது நிகழ்வை மாத்திரமா?

கர்த்தாவே, சொல்லும் என்று கூறும் பழக்கத்தில் பிரவேசியுங்கள், அப்போது வாழ்க்கை வசீகரமாக மாறும். சூழ்நிலைகள் நெருக்கும் ஒவ்வொரு வேளையிலும், கர்த்தாவே, சொல்லும் என்று கூறுங்கள்; செவிகொடுக்க நேரம் செலவிடுங்கள். சிட்சை கட்டுப்பாட்டைவிட மேலானது; அது, கர்த்தாவே, சொல்லும் என்று கூறுமிடத்திற்கு என்னைக் கொண்டுவருவதற்குக் குறிக்கப் பட்டது. தேவன் உங்களோடு பேசின காலத்தை நினைவுகூருங்கள். அவர் சொன்னதை மறந்துவிட்டீர்களா? அது லூக்கா 11:13, அல்லது 1 தெச.5:23 தானா? நாம் கவனித்துக் கேட்கும்போது நமது செவிகள் கூர்மையாகின்றன; நாமும் இயேசுவைப்போல இடைவிடாது தேவனுடைய சத்தத்தைக் கேட்போம்.

தேவன் எனக்குக் காண்பித்துள்ளதை என்னுடைய ஏலிக்கு நான் கூறட்டுமா? அங்குதான் கீழ்ப்படிதலின் தடுமாற்றம் வருகிறது. ஏலிபோன்று நமக்குத் தெரிந்த சிறந்த மக்களைக் காப்பாற்றவேண்டும் என்ற எண்ணத்தால், முதிர்ச்சியற்ற முன்கருதல் கொண்டவர்களாகி, தேவனுக்குக் கீழ்ப்படியாமை காண்பிக்கிறோம். ஏலியிடம் சொல்லவேண்டுமென்று சாமுவேலிடம் தேவன் கூறவில்லை; அதை அவராகவே தீர்மானிக்கவேண்டியதாயிருந்தது. உங்களுக்குத் தேவன் தரும் அழைப்பு உங்களுடைய ஏலியைப் புண்படுத்தலாம்; இன்னொருவர் வாழ்க்கையில் துன்பத்தைத் தடுக்க நீங்கள் முயற்சி செய்வீர்களானால், அது உங்களுடைய ஆத்துமாவுக்கும் தேவனுக்கும் இடையே ஒரு தடங்கலாக மாறும். உங்கள் வலது கரத்தை வெட்டவும், உங்கள் கண்ணைப் பிடுங்கவும் நீங்கள் தடைசெய்தால், அது உங்களுக்கு ஆபத்தாய் முடியலாம்.

தேவன் தமக்குமுன்பாக உங்களைத் தீர்மானிக்கச் செய்யும் எந்தக் காரியத்தைக்குறித்தும் இன்னொருவருடைய ஆலோசனையை ஒருபோதும் கேளாதேயுங்கள். ஆலோசனை கேட்டால் நீங்கள் ஏறக்குறைய எப்போதும் சாத்தானோடு ஒத்துப்போவீர்கள். உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணவில்லை என்று பவுல் கூறினார்.

உங்களுடைய அழைப்பை நீங்கள் காண்கிறீர்களா?

சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவன். ரோமர் 1:1.

நம்முடைய அழைப்பு தேவனுடைய சுவிசேஷத்தை அறிவிக்கிறவர் களாகும்படிக்கேதவிர முக்கியமாகப் பரிசுத்தமான ஆண்களும் பெண்களு மாக வாழும்படிக்கல்ல. மிகவும் முக்கியமான ஒரே காரியம் தேவனுடைய சுவிசேஷம் நிலையான உண்மை என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும். மானிட நன்மையும், பரிசுத்தமும், மோட்சமும், நரகமும் அல்ல, மீட்புதான் சத்தியம்; இதை உணர்ந்துகொள்ளும் தேவைதான் கிறிஸ்தவ ஊழியர்களு டைய இன்றைய மிகவும் முக்கியமானத் தேவை. மீட்புதான் ஒரே சத்தியம் என்ற வெளிப்படுத்தலுக்கு ஊழியர்களாகிய நாம் பழகிக்கொள்ளவேண்டும். தனிநபர் பரிசுத்தம் விளைவேதவிர காரணமல்ல; மீட்பின் பலனாகிய தனிநபர் நற்பண்பில் நம்முடைய நம்பிக்கையை வைப்போமானால் பரிசோதனை வரும்போது நாம் தோல்வியடைவோம்.

என்னை நானே பிரித்தெடுத்தேன் என்று பவுல் கூறவில்லை, தேவனுக்குப் பிரியமானபோது அவர் என்னைப் பிரித்தெடுத்தார் என்றே கூறினார். தன்னுடைய நற்பண்பில் பவுல் உணர்ச்சிமிக்க ஆர்வம் வைக்க வில்லை. நம்முடைய சொந்த ஆளத்துவ பரிசுத்தத்தில் நமது கண்கள் இருக்கும் காலம்வரை மீட்பின் உண்மையின் அடுத்து நாம் ஒருபோதும் வரமாட்டோம். தேவனையல்ல, தங்கள் சொந்த நீதியையே விரும்புகிறபடி யால் அநேக ஊழியர்கள் ஆரோக்கியம் இழக்கிறார்கள். மானிட வாழ்க்கை இருக்கிறபடியே அதன் அசுத்தத்தின் சார்பில் மீட்பின் கடுமையான யதார்த் தத்தோடு தொடர்புகொள்ள என்னை அழைக்காதீர்கள்; எனக்குத் தேவை என்னுடைய பார்வையில் என்னைச் சற்றுகூட விரும்பப்படத்தக்கவனாக்க எதையாவது தேவன் செய்யவேண்டும் என்பதே என்று கூறுகிறோமா?. இவ்வாறு பேசுவது தேவனுடைய சுவிசேஷம் என்னைத் தொட ஆரம்பிக்க வில்லை என்பதின் அடையாளமாகும்; தேவனுக்காகத் துணிச்சலான அர்ப் பணம் கிடையாது. என்னுடைய சொந்தப் பண்புகளில் மாத்திரம் என் ஆர்வம் இருக்கும்போது தேவன் என்னை விடுவிக்கமுடியாது. பவுல் தன்னைக்குறித்து எண்ணாதவராயிருந்தார்; அவர் துணிச்சலுடன் முற்றும் துறந்தார்; ஒரு திட்டத்துக்காகத் தேவனால் பிரித்தெடுக்கப்பட்டார்--அது தேவனுடைய சுவிசேஷத்தை அறிவிப்பதே (ரோமர் 9:3 பார்க்க).

தேவனுடைய அழைப்பு

ஞானஸ்நானத்தைக் கொடுக்கும்படி கிறிஸ்து என்னை அனுப்பவில்லை; சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே அனுப்பினார். 1 கொரி.1:17.

தேவனுடைய அழைப்பு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே என்று பவுல் இங்கு கூறுகிறார்; ஆனால், பவுலின் கருத்தில் சுவிசேஷம் என்றால் என்ன என்பதை நினைவில்கொள்ளுங்கள்; அது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளான மீட்பின் யதார்த்தமே. பரிசுத்தமாகுதலையே நமது பிரசங்கத்தின் முடிவான நோக்கமாக்க வாய்ப்புண்டு. பவுல் எடுத்துக் காட்டுக்காகத் தன் சொந்த அனுபவத்தைக் குறிப்பிடுகிறாரேதவிர, ஒரு போதும் அதைக் காரியத்தின் கடைத்தொகையாக்கவில்லை. இரட்சிப் பையோ பரிசுத்தமாகுதலையோ பிரசங்கிக்கும்படி நாம் ஓரிடமும் கட்டளை பெறவில்லை; இயேசுகிறிஸ்துவை உயர்த்தும்படிக்கே நாம் ஆணைபெற் றிருக்கிறோம் (யோவான் 12:32). என்னைப் பரிசுத்தவானாக்குவதற்காக இயேசுகிறிஸ்து மீட்பின் பாடுகளை அனுபவித்தார் என்று கூறுவது பரிகா சத்துக்குரியது. முழு உலகத்தையும் மீட்டு, குற்றமற்றதாகவும் மறு வாழ்வு பெற்றதாகவும் தேவனுடைய அரியணைக்கு முன்பாக நிறுத்தவே இயேசு மீட்பின் பாடுகளை அனுபவித்தார். மீட்பை நமக்கு அனுபவமாக்கமுடியும் என்னும் உண்மை மீட்பின் யதார்த்தத்தின் வல்லமைக்கு எடுத்துக்காட்டே; ஆனால், அது மீட்பின் முடிவல்ல. தேவன் மனிதத் தன்மையுடையவராய் இருப்பாராகில், நம்முடைய இரட்சிப்புக்காகவும் பரிசுத்தமாகுதலுக்காகவும் நாம் நிரந்தரமாக ஏறெடுக்கிற விண்ணப்பங்களினால் அவர் எவ்வளவாய் இருதயவேதனையும் சோர்பும் அடைந்திருப்பார்! காலைமுதல் இரவுவரை நமக்கான காரியங்களுக்காக--நான் விடுதலையாக்கப்படவேண்டிய சில காரியங்களுக்காக அவருடைய வலிமையைப் பாரப்படுத்துகிறோம்! தேவனு டைய சுவிசேஷத்தின் மூலக்கோட்பாட்டை நாம் தொடும்போது, அற்பமான, தனிப்பட்ட முறையீடுகளினால் அவருக்கு நாம் இனிமேல் ஒருபோதும் தொந்தரவு கொடுக்கமாட்டோம்.

பவுலுடைய வாழ்க்கையின் தீவிர விருப்பம் தேவனுடைய சுவிசேஷத்தை அறிவிப்பதாயிருந்தது. தேவனுடைய சுவிசேஷத்துக்கு உண்மையுள்ளவனாய் அசையாது நிலைத்திருக்கத் துயரங்களும் ஏமாற் றங்களும் உபத்திரவங்களும் அவருக்கு உதவியதால், அந்த ஒரேயொரு காரணத்துக்காக அவற்றை அவர் மனப்பூர்வமாக வரவேற்றார்.

அழைப்பின் ஏவுதல்

சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ. 1 கொரி.9:16.

தேவனுடைய அழைப்புக்குச் செவிகொடாமலிருப்பதைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும். இரட்சிக்கப்பட்ட எல்லாரும் சத்தியத்துக்கு சாட்சிகூற அழைக்கப்படுகிறார்கள்; ஆனால், அது பிரசங்கிப்பதற்குரிய அழைப்பு அல்ல, அது பிரசங்கத்தில் வரும் ஒரு எடுத்துக்காட்டு மாத்திரமே. சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கான நெருக்குதல் பவுலில் உண்டாக்கிய கடும் வேதனைகளை அவர் குறிப்பிடுகிறார். பவுல் இந்தத் தொடர்பில் கூறுவதை, இரட்சிப்புக்காகத் தேவனிடம் வரும் மக்களுக்கு ஒருபோதும் பயன்படுத்தாதேயுங்கள். இரட்சிக்கப்படுவதைவிட எளிதான காரியம் வேறொன்றும் இல்லை; ஏனெனில், அது தெய்வீகக் கிரியை: என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களை இரட்சிப்பேன் என்கிறார் தேவன். சீஷத்துவத்தின் நிபந்தனைகளை ஆண்டவர் இரட்சிப்பின் நிபந்தனைகளாக ஒருபோதும் விதிக்கவில்லை. இயேசுகிறிஸ்துவின் சிலுவைமூலமாக நாம் இரட்சிப்புக்குத் தீர்க்கப்படுகிறோம்; ஆனால், யாதொருவன்....வெறுக்காவிட்டால் என்ற சொற்றொடரிலிருந்து, சீஷத்துவத்துக்கு அதோடுசேர்ந்து தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டென்றாகிறது.

இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனாக ஆக்கப்படுவதைக்குறித்தே பவுலின் வார்த்தைகள் குறிப்பிடுகின்றன; நாம் என்ன செய்வோம், எங்கு போவோம் என்று நம்முடைய அனுமதி ஒருபோதும் கேட்கப்படுவதில்லை. தேவன் தம்மைப் பிரியப்படுத்த நம்மை நொறுக்கப்பட்ட அப்பமாயும், ஊற்றப்பட்ட ரசமாயுமாக்குகிறார். சுவிசேஷத்துக்காகப் பிரித்தெடுக்கப்படுவது என்றால் தேவனுடைய அழைப்புக்குச் செவிகொடுப்பது என்று கருத்தாகும்; ஒருவன் அந்த அழைப்பைத் தற்செயலாகக் கேட்க ஆரம்பிக்கும்போது கிறிஸ்து என்ற பெயருக்குத்தகுதியான வியாகுலம் ஆரம்பிக்கிறது. சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவன் என்ற ஒரேயொரு காரியம் தவிர, ஒவ்வொரு ஆர்வமும் முளையிலே கிள்ளப்படுகிறது; வாழ்க்கையின் ஒவ்வொரு விருப்பமும் தணிக்கப்படுகிறது; ஒவ்வொரு கண்ணோட்டமும் முற்றும் அணைக்கப்பட்டு துடைத்து அழிக்கப்படுகிறது. தனக்கு அழைப்பு வந்ததும் வேறு எந்தத் திசையிலும் காலடியெடுத்துவைக்க முயற்சிக்கிற ஆத்துமாவுக்கு ஐயோ! தேவனுடைய சுவிசேஷத்தை அறிவிக்கிறதைக் குறித்து அக்கறையுள்ள ஏதாவது ஆணாவது, பெண்ணாவது இங்கு உண்டோ என்று பார்க்கவும், தேவன் உங்களை இறுகப்பிடிக்கிறாரா என்று பார்க்கவுமே இந்தக் கல்லூரி இருக்கிறது. தேவன் உங்களை இறுகப்பிடிக்கும்போது போட்டியாளர்களைக்குறித்துக் கவனமாயிருங்கள்.

உறவுகளில் உணரப்பட்ட தடை

நாங்கள் . . . உலகத்தின் குப்பையைப்போல . . . ஆனோம். 1 கொரி.4:9-13.

இந்த வார்த்தைகள் மிகைப்படுத்திக் கூறப்பட்டவையல்ல. சுவிசேஷ ஊழியர்கள் என்று அழைத்துக்கொள்ளுகிற நமக்கு இந்த வார்த்தைகள் உண்மையாயிராததின் காரணம் பவுல் அவைகளைப் பயன்படுத்துவதற்கான துல்லியமான உண்மையை மறந்துவிட்டார் என்பதல்ல; நாம் குப்பை ஆக்கப்பட அனுமதிக்காத அநேகத் தனித்த உறவுகள் நமக்கிருக்கின்றன என்பதுவே காரணம். கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவது என்பது பரிசுத்தமாகுதலின் தெளிவல்ல; சுவிசேஷத்துக்காகப் பிரித்தெடுக்கப்படுவதின் தெளிவே அது.

உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாதீர்கள் என்று பேதுரு கூறுகிறார். நாம் சந்திக்கிறவைகளைக்குறித்து அவைகள் புதுமையென்று எண்ணுவோமேயானால் அதன் காரணம் நாம் கோழையான இருதயம் கொண்டவர்களாயிருக்கிறோம். தூய்மைக்கேட்டிலிருந்து நம்மை விலக்கி வைக்கும் பகுத்தறிவுள்ள உறவுகள் நமக்கு இருக்கின்றன--நான் குனிய மாட்டேன், வளையமாட்டேன் என்று நீங்கள் கூறலாம். நீங்கள் அவ்வாறு செய்யத் தேவையில்லை; நீங்கள் விருப்பப்பட்டால், மயிரிழையில் இரட்சிக்கப்படமுடியும்; சுவிசேஷத்துக்காகப் பிரித்தெடுக்கப்பட்ட ஒருவனாகத் தேவன் உங்களைக் கணக்கிட நீங்கள் மறுக்கமுடியும். அல்லது, சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதற்காகப் பூமியின் அருவருப்பான அழுக்கைப்போல நான் நடத்தப்பட்டாலும் எனக்குக் கவலையில்லை என்று நீங்கள் கூறலாம். தேவனுடைய சுவிசேஷம் யதார்த்தமென்பதற்கு இரத்தசாட்சியாகும்படிச் செல்லவும் ஆயத்தமுள்ளவர்களே இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர். வெறும் தார்மீகமான ஆணோ அல்லது பெண்ணோ, இழிவு, துன்மார்க்கம், துரோகம் போன்றவற்றை எதிர்கொள்ளும்போது, அதினால் ஏற்படும் தாக்கம் மனித நற்பண்புக்கு மிகவும் வெறுப்பாயிருக்கிறபடியால், அந்த இருதயம் நம்பிக்கையிழப்பினால் அமைதியாகிவிடுகிறது. மிக மோசமான வர்களும் துன்மார்க்கரும் தேவனுடைய அன்பின் ஆழம்வரைச் செல்ல முடியாது என்பதே அவருடைய மீட்பின் அதிசயம். தன்னை எத்தகைய அற்புதமான மனிதனாக ஆக்கமுடியும் என்பதைக் காண்பிக்க அல்ல, அவருடைய குமாரனைத் தன்னில் வெளிப்படுத்தவே தேவன் தன்னைப் பிரித்தெடுத்தாரென்று பவுல் கூறுகிறார்.

ஆளத்துவ வல்லமையின் ஆட்கொள்ளும் மகத்துவம்

கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது. 2 கொரி.5:14.

கிறிஸ்துவின் அன்பினால் அவர் கீழ்ப்படுத்தப்பட்டதாகவும் ஆட்கொள்ளப்பட்டதாகவும், இடுக்கி பிடிப்பதுபோலப் பிடிக்கப்பட்டதாகவும் பவுல் கூறுகிறார். தேவனுடைய அன்பினால் இறுகப்பிடிக்கப்படுவதென்றால் என்ன என்பதை நம்மில் மிகச் சிலரே அறிகிறோம்; நமது அனுபவத்தின் கட்டுப்பாட்டால் மாத்திரமே நாம் உறுதியாகப் பிடிக்கப்படுகிறோம். ஆனால் பவுலின் தொடுவானத்தில் வேறொன்றும் இல்லாதிருக்கும்வரை பவுலைப் பிடித்திருந்த ஒரே காரியம் தேவனுடைய அன்பே. கிறிஸ்துவினுடைய அன்பு என்னை நெருக்கி ஏவுகிறது--அந்தச் சுரத்தை ஒரு ஆணிலோ பெண்ணிலோ நீங்கள் கேட்டால், நீங்கள் அதை ஒருபோதும் தவறாகப் புரிந்துகொள்ள வாய்ப்பில்லை. அந்த நபரின் வாழ்க்கையில் தேவனுடைய ஆவி தடையின்றி செயல்படுகிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

தேவனுடைய ஆவியால் நாம் மறுபடியும் பிறக்கும்போது, தேவன் நமக்கு என்ன செய்திருக்கிறார் என்பதைக் கூறுவதே சாட்சியாகும், அதுவும் சரியே. ஆனால் பரிசுத்தஆவியின் ஞானஸ்நானம் அதை என்றென்றுமாக அழித்துவிடுகிறது; அப்போது, நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்று இயேசு என்ன கருத்தில் கூறினார் என்பதைப் புரிந்துகொள்ள ஆரம்பிக்கிறோம். இயேசு என்ன செய்யக்கூடும் என்பதற்குச் சாட்சியல்ல--அது ஆரம்ப சாட்சி--எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றே கூறினார். நேரிடுகிறவைகள் எல்லாம், புகழ்ச்சியோ பழியோ, அல்லது உபத்திரவமோ பாராட்டுதலோ அவருக்கு நேரிடுகிறதாகவே நாம் எடுத்துக்கொள்வோம். இயேசுகிறிஸ்துவின் ஆளத்துவ வல்லமையின் மகத்துவத்தினால் நெருக்கி ஏவப்படாத யாரும் அவருக்காக இவ்வாறு நிற்க முடியாது. முக்கியமானது இந்த ஒரு காரியமே; ஆனால், கிறிஸ்தவ ஊழியர் உணர்ந்துகொள்ளுகிற இறுதியான காரியம் இதுதான் என்பது வியப்புக்குரியது. கிறிஸ்துவின் அன்பினால் இறுகப்பிடிக்கப்பட்டதாகப் பவுல் கூறுகிறார்; ஆகையால்தான் அவர் செயல்பட்டபடியே செயல்பட்டார். மனிதர் அவரைப் பயித்தியக்காரன் என்றோ அல்லது தெளிந்த புத்தியுள்ளவன் என்றோ அழைக்கலாம், ஆனால் அவர் அதைக்குறித்துக் கவலைப்படவில்லை; அவர் வாழ்ந்தது ஒரேயொரு காரியத்துக்காகவே, அது தேவனுடைய நியாயாசனத்தைக் குறித்தும், கிறிஸ்துவின் அன்பைக்குறித்தும் மனிதருக்கு அறிவுறுத்தவே. வாழ்க்கையில் பலன் கொடுக்கும் ஒரே காரியம் கிறிஸ்துவின் அன்புக்கான அர்ப்பணிப்பே; அந்த வாழ்க்கை ஒருபோதும் நம்முடைய தனிப்பட்ட பரிசுத்தத்தைக்குறித்தல்ல, தேவனுடைய பரிசுத்தத்தையும் வல்லமையையுங் குறித்த முத்திரையை இந்த உலகுக்கு விட்டுச்செல்லும்.

நீங்கள் வார்க்கப்பட ஆயத்தந்தானா?

மேலும், உங்கள் விசுவாசமாகிய பலியின்மேலும் ஊழியத்தின்மேலும் நான் வார்க்கப்பட்டுப்போனாலும், நான் மகிழ்ந்து, உங்களனைவரோடுங்கூடச் சந்தோஷப்படுவேன். பிலிப்.2:17.

விசுவாசிகளின் ஊழியத்துக்காகப் பலியிடப்பட--பிறருடைய விசுவாசமாகிய பலியின்மீது உங்கள் இரத்தத்தைப் பானபலியாக ஊற்றிக் கொடுக்க உங்களுக்கு விருப்பந்தானா? அல்லது, நான் தற்சமயம் பலியிடப்பட ஒப்புக்கொடுக்கமாட்டேன், என் ஊழியத்தைத் தேவன் தெரிந்து கொள்ள நான் விரும்பவில்லை; என்னுடைய சொந்தப் பலியின் இடத்தை நானே தெரிந்துகொள்ளவேண்டும்; சரியான தரத்து மக்கள் என்னைக் கவனித்துப் பார்த்து, நன்றாய்ச் செய்தாய் என்று கூறவேண்டும் என்பதே என் விருப்பம் என்று கூறுவீர்களா?

தனித்தப் பாதையில் மதிப்புள்ள வீரத்தோடு செல்வது ஒரு காரியம்; ஆனால், தேவன் உங்களுக்காக வகுத்திருக்கும் திட்டம் பிறருடைய பாதங்களுக்கு அடியில் கால்மிதியாயிருப்பதென்றால் அது வேறொரு காரியம். தாழ்ந்திருப்பது எப்படி என்று எனக்குத் தெரியும் என்று நீங்கள் கூறும்படித் தேவன் உங்களைக் கற்பிக்க விரும்பினாரானால், அந்த நிலையில் உங்களைப் பலியிடப்பட ஒப்புக்கொடுக்க நீங்கள் ஆயத்தந்தானா? நீங்கள் சேவித்த ஆத்துமாக்களின்தொடர்பில் நீங்கள் மறுபடியும் எண்ணப்படாத அளவிற்கு, ஏற்றச்சாலில் தொங்கும் துளிபோல, மிகவும் அற்பமானவர்களாயிருக்க ஆயத்தந்தானா? செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும், ஊழியங்கொள்ளும்படித் தேடாமல், ஊழியஞ்செய்யவும் உங்களுக்கு விருப்பந்தானா? பரிசுத்தவான்களாய்த் தொடர்ந்துகொண்டே இழிவான கடமைகளைச் செய்ய சில பரிசுத்தவான்களால் கூடாது; ஏனெனில், அது அவர்கள் மதிப்பிற்குப் பங்கம் என்று கருதுகிறார்கள்.

நீங்கள் வார்க்கப்பட ஆயத்தந்தானா?

நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன். 2 தீமோ.4:6.

நான் இப்பொழுதே வார்க்கப்பட ஆயத்தம். இது உணர்ச்சிகளின் அடிப்படையிலல்ல, சித்தத்தின் அடிப்படையில் செய்யப்பட்ட நடவடிக்கை. நீங்கள் வார்க்கப்பட ஆயத்தம் என்று தேவனிடத்தில் கூறுங்கள்; அதன் பின்விளைவுகள் எதுவுமாயிருக்கட்டும் என்று விட்டுவிடுங்கள்; தேவன் எதைத் தெரிந்துகொள்ளுகிறதாயிருந்தாலும், இப்போது அதைக்குறித்துச் சிறிதளவேனும் பராது இல்லை. ஒரு நபர் இன்னொருவருக்கு உதவி செய்யமுடியாதபடி உங்களைத் தனிப்பட்ட நெருக்கடி வழியாகக் கடத்தி விடுவார். வெளிப்புறமாக வாழ்க்கை பழையதுபோலிருக்கலாம்; ஆனால், மாற்றம் சித்தத்திலேயே. சித்தத்தில் நெருக்கடிவழிக் கடந்து செல்லுங்கள்; பின்னர் நெருக்கடி வெளிப்புறமாக வரும்போது, கிரயத்தைக்குறித்த எண்ணம் வராது. இத்தகைய நிலையில் நீங்கள் தேவனோடு சித்தத்தில் நடவடிக்கைச் செய்யாதிருந்தால், உங்களுக்காக நீங்களே அனுதாபத்தைத் தட்டிஎழுப்பும் நிலையை அடைவீர்கள்.

பலியைக் கொண்டுபோய் பலிபீடத்தின் கொம்புகளில் கயிறுகளால் கட்டுங்கள். பலிபீடம் என்றால் நெருப்பு--அது தேவன் ஆரம்பிக்காத எல்லா உறவுகளையும், தேவனுக்குள் இணைக்கப்படாத எல்லா இணைப் புக்களையும் அழிக்கும் ஒரே நோக்கத்துக்காக எரித்து, சுத்திகரித்து, தனிமைப்படுத்துகிறது. நீங்கள் அதை ஒழிக்கவேண்டியதில்லை; தேவன் ஒழிப்பார். நீங்கள் பலியைப் பலிபீடத்தின் கொம்புகளில் கட்டுங்கள்; நெருப்பு எரிய ஆரம்பிக்கும்போது, சுயபட்சாதாபத்துக்கு இடங்கொடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். இத்தகைய நெருப்பின்வழியாகக் கடந்துசென்ற பின் உங்களைத் துன்புறுத்துவதும், மனச்சோர்படையச்செய்வதும் ஒன்று மில்லை. நெருக்கடி எழும்பும்போது, காரியங்கள் வழக்கமாகச் செய்தது போல இனிமேல் உங்களைத் தொடமுடியாது என்பதை உணர்ந்துகொள்ளு கிறீர்கள். உங்களுடைய நெருப்பின் வழி என்ன?

நீங்கள் வார்க்கப்பட ஆயத்தமென்று தேவனிடம் கூறுங்கள்; அப்போது, தேவன் எவ்வாறு இருப்பார் என்று நீங்கள் எப்போதும் கற்பனை செய்தீர்களோ அவ்வாறெல்லாம் அவர் இருப்பதாகத் தேவன் தம்மை நிரூபிப்பார்.

மனச்சோர்பாகிய கட்டுப்பாடு

நாங்கள் நம்பியிருந்தோம். இவைகள் சம்பவித்து இன்று மூன்று நாளாகிறது. லூக்கா 24:21.

சீஷர்கள் கூறிய ஒவ்வொரு உண்மையும் சரியானது; ஆனால் அந்த உண்மைகளிலிருந்து அவர்கள் எடுத்த முடிவுகள் தவறானவை. ஆவிக்குரிய நிலையில் சோர்பை நினைவூட்டும் எதுவும் எப்போதும் தவறு தான். சோர்பும் நெருக்கடியும் என்னைச் சந்திக்குமேயானால் குற்றஞ் சாட்டப்படவேண்டியவன் நானே; தேவன்மீதோ பிறர்மீதோ பழிபோடக்கூடாது. இரண்டிலொரு ஆதாரத்திலிருந்து மாத்திரமே மனச்சோர்பு உண்டாகிறது--ஒன்றில் நான் ஒரு இச்சையைத் திருப்திசெய்திருக்கிறேன், அல்லது அப்படிச் செய்யவில்லை. உடனடியாக நான் அடையவேண்டும் என்பதே இச்சையாகும். ஆவிக்குரிய இச்சை, பதிலளிக்கும் தேவனைத் தேடுவதற் குப்பதில், தேவனிடத்திலிருந்து பதிலை அதிகாரத்தோடு கேட்கவைக்கிறது. தேவன் எதைச் செய்வாரென்று நான் நம்பிக்கொண்டிருந்தேன்? ஆனால் இன்று--நேரடியான நிகழ்காலம்--மூன்றாம் நாள், அவர் அதைச் செய்ய வில்லை; ஆகவே, நான் சோர்வுறுவதும், தேவனைக் குற்றஞ்சாட்டுவதும் நியாயம் என்று எண்ணுகிறேன். தேவன் ஜெபத்திற்குப் பதிலளிக்கிறவர் என்பதில் அழுத்தம்வைக்கும்போதெல்லாம் நாம் வழிவிலகிப்போகிறோம். பதிலையல்ல, தேவனையே பற்றிக்கொள்ளுகிறோம் என்பதே ஜெபத்தின் பொருளாகும். சரீர ஆரோக்கியமுடையவர்களாயிருந்து மனச்சோர்படைவது கூடாதகாரியம். மனச்சோர்பு வியாதியின் அடையாளம்; அதே காரியம் ஆவிக்குரிய நிலையிலும் உண்மை. ஆவிக்குரிய நிலையில் மனச்சோர்பு தவறு; அதற்கு எப்போதும் பொறுப்பேற்கவேண்டியவர்கள் நாமே.

பரத்திலிருந்து தரிசனங்களையும், தேவனுடைய வல்லமையின் நிலநடுக்கங்களையும், இடிமுழக்கங்களையும் நாம் எதிர்பார்க்கிறோம்; (நாம் எதிர்பார்க்கிறோம் என்பதை நாம் மனச்சோர்பு அடைந்திருக்கிறோம் என்ற உண்மை தெளிவாக்குகிறது); சாதாரணக் காரியங்களிலும் நம்மைச் சுற்றி யுள்ள மனிதர்களிலும் எக்காலத்தும் தேவன் இருக்கிறார் என்பதை நாம் ஒருபோதும் உணருவதில்லை. நமக்கு மிகவும் அருகாமையிலுள்ள கடமை யைச் செய்வோமானால், நாம் அவரைக் காண்போம். சாதாரணக் காரி யங்களில் இயேசுகிறிஸ்துவின் தெய்வீகம் உணரப்படுகிறதென்று நாம் கற்றுக்கொள்ளும்போது, தேவனுடைய மிகவும் அற்புதமான வெளிப்படுத் தல்களில் ஒன்று வருகிறது.

உடனடி மற்றும் உறுதியான பரிசுத்தமாகுதல்

சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. 1 தெச.5:23.

பரிசுத்தமாக்கப்படுவதற்காக நாம் ஜெபிக்கும்போது இந்த வசனங்களின் திட்டஅளவைச் சந்திக்க நாம் ஆயத்தமா? பரிசுத்தமாக்கப்படுதல் என்ற சொல்லை நாம் சாதாரணமாக எண்ணுகிறோம். பரிசுத்தமாகுதலுக்கு என்ன விலைகொடுக்கவேண்டுமோ அதற்கு நாம் ஆயத்தமா? பூமியிலுள்ளவைகளில் நமது எல்லா ஆர்வங்களையும் அதிகமாகக் குறைப்பதும், தேவனிலுள்ள நமது எல்லா ஆர்வங்களையும் மிகப்பெரிய அளவில் விசாலமடையச்செய்வதும் அதன் விலையாகும். தேவனுடைய கண்ணோட்டத்தில் தீவிரமாக ஒருமுகப்படுவதே பரிசுத்தமாகுதலின் பொருள். அதாவது சரீரம், ஆவி, ஆத்துமா என்பவற்றின் ஒவ்வொரு சக்தியும் கட்டுப்படுத்தப்பட்டு, தேவனுடைய நோக்கத்துக்காகமாத்திரமே காக்கப்படவேண்டும் என்பதே அதன் கருத்து. எவைகளுக்காகத் தேவன் நம்மைப் பிரித்தெடுத்தாரோ அவைகளையெல்லாம் அவர் நம்மில் செயல்படுத்த நாம் ஆயத்தமா? அவருடைய கிரியை நம்மில் நிறைவேற்றப்பட்டபின், இயேசு தன்னைத் தேவனுக்காகப் பிரித்துவைத்ததுபோல, நாமும் நம்மைப் பிரித்துவைக்க ஆயத்தமா? அவர்களுக்காக நான் என்னைப் பரிசுத்தமாக்குகிறேன் என்று இயேசு கூறினார். தேவனுடைய கண்ணோட்டத்தில் பரிசுத்தமாகுதலின் கருத்தை நாம் புரியாததாலேயே நம்மில் சிலர் பரிசுத்தமாகுதலின் அனுபவத்திற்குள் பிரவேசிக்கவில்லை. இயேசுவை ஆளுகைசெய்த மனநிலை நம்மையும் ஆளத்தக்கதாக அவரோடு ஒன்றிப்பதே பரிசுத்தமாகுதலின் கருத்தாகும். அதற்கு விலைகொடுக்க நாம் ஆயத்தமா? அதற்குரிய விலை நம்மில் தேவனால் உண்டாயிராத அனைத்துமே.

அப்போஸ்தலனாகிய பவுல் ஏறெடுத்த இந்த ஜெபத்தின் வீச்சுக்குள் தன்னார்வமாக ஈடுபட நாம் ஆயத்தமா? கிருபையினால் இரட்சிக்கப்பட்ட ஒரு பாவியை எவ்வளவு பரிசுத்தமாக்க உம்மால் முடியுமோ, அவ்வளவு பரிசுத்தமாக என்னையும் ஆக்கும் என்று சொல்ல நாம் ஆயத்தமா? இயேசு பிதாவோடு ஒன்றாயிருந்ததுபோல நாமும் அவரோடு ஒன்றாயிருக்கவேண்டுமென்று அவர் ஜெபித்தார். ஒரு மனிதனில் இருக்கும் ஆவியானவரின் ஒரேயொரு தன்மை அவனில் இயேசுகிறிஸ்துவுக்குரிய தெய்வீகச் சாயல் இருப்பதும், அவரைப்போலில்லாத அனைத்திலிருந்தும் அவன் விடுதலையடைவதுமே. நம்மில் பரிசுத்த ஆவியானவர் கிரியைசெய்ய அவருக்காக நம்மைப் பிரித்துவைக்க (பரிசுத்தப்படுத்த) நாம் ஆயத்தமா?

ஆவிக்குரிய சோர்வடைந்துவிட்டீர்களா?

அநாதி தேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை. ஏசா. 40:28.

சோர்ந்துபோவதென்றால் மிகமுக்கியமான சத்துவங்கள் முற்றிலும் பயனற்றுப்போவது. ஆவிக்குரிய சோர்வு ஒருபோதும் பாவத்தினால் வராது, சேவையினாலேயே வருகிறது; நீங்கள் சோர்படைகிறீர்களா இல்லையா என்பது நீங்கள் எங்கிருந்து உங்களுக்குத் தேவையானவைகளைப் பெற்றுக்கொள்ளுகிறீர்கள் என்பதைப் பொறுத்திருக்கிறது. என் ஆடுகளை மேய்ப்பாயாக என்று இயேசு பேதுருவிடம் கூறினார்; ஆனால், ஆடுகளுக்கு உணவளிக்கப் பேதுருவிடம் அவர் ஒன்றும் கொடுக்கவில்லை. மற்ற ஆத்துமாக்கள் தேவனிடமிருந்து உணவைப் பெற்றுக்கொள்ளக் கற்றுக்கொள்ளுமட்டும் நீங்கள் அவர்களுக்கு உணவூட்டமாயிருப்பதே, நொறுக்கப்பட்ட அப்பமாயும் ஊற்றப்பட்ட இரசமாயும் மாறும் செயல்முறை. அவர்கள் உங்களைக் கடைசிச் சொட்டுமட்டும் வற்றச்செய்யவேண்டும். உங்களுக்குத் தேவையான ஊட்டத்தை நீங்கள் பெற்றுக்கொள்ளக் கருத்தாயிருங்கள்; அல்லது நீங்கள் வெகுசீக்கிரம் முற்றும் களைத்துப் போவீர்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஜீவனை நேரடியாக மொண்டுகொள்ள மற்ற ஆத்துமாக்கள் கற்றுக்கொள்ளுமுன் உங்கள் வழியாகவே அவர்கள் அதை மொண்டுகொள்ளவேண்டும்; அவர்கள் தேவனிடமிருந்து ஊட்டத்தைப் பெற்றுக்கொள்ளக் கற்றுக்கொள்ளுமட்டும் உங்களிடமிருந்துதான் அவர்கள் உறிஞ்சிஎடுக்கவேண்டும். தேவனுடைய ஆட்டுக்குட்டிகளுக்கும் அவருடைய ஆடுகளுக்கும், அதோடு தேவனுக்குங்கூட மிகச்சிறந்தவர்களாயிருக்க நாம் தேவனுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நீங்கள் தேவனுக்குச் சேவைசெய்யும் முறை உங்களைக் களைப்புக்கு ஒப்புக்கொடுத்துவிட்டதா? அப்படியானால், உங்கள் விருப்பங்களையெல்லாம் ஒன்றுதிரட்டுங்கள். சேவையை நீங்கள் எங்கிருந்து ஆரம்பித்தீர்கள்? உங்கள் சொந்த அனுதாபத்திலிருந்தா, அல்லது இயேசுகிறிஸ்துவின் மீட்பின் அடிப்படையிலிருந்தா? உங்கள் பாச உணர்ச்சிகளின் அடிப்படையை நீங்கள் இடையறாது திரும்பிப் பாருங்கள், வல்லமையின் ஆதாரம் எங்கிருக்கிறது என்பதை நினைவுகூருங்கள். ஆண்டவரே, நான் அதிகக் களைப்படைந்துவிட்டேன் என்று சொல்ல உங்களுக்கு உரிமையில்லை. உங்களைக் களைப்படையச்செய்யவே அவர் உங்களை இரட்சித்துப் பரிசுத்தமாக்கினார். தேவனுக்காக நீங்கள் களைப்படையுங்கள்; ஆனால், உங்களுக்குத் தேவையானவைகள் அவரிடமிருந்து வருகின்றன என்பதை நினைத்துக்கொள்ளுங்கள். என்னுடைய புதிய நீரூற்றுக்களெல்லாம் உம்மிடத்தில் இருக்கின்றன.

தேவனைக்குறித்த உங்கள் கற்பனை குறைந்துவிட்டதா?

உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்; அவைகளைச் சிருஷ்டித்தவர் யார்? ஏசா.40:26.

ஏசாயாவின் காலத்திலிருந்த தேவஜனம் விக்கிரகங்களின் முகத்தைப் பார்த்துத் தங்கள் கற்பனாசக்தியை இழந்துவிட்டார்கள், ஆகையால் ஏசாயா அவர்கள் வானங்களை எட்டிப் பார்க்கும்படிச்செய்தார்; அதாவது, அவர்களுடைய கற்பனைத்திறத்தைச் சரியாகப் பயன்படுத்த ஆரம்பிக்கும் படிச்செய்தார். இயற்கை ஒரு பரிசுத்தவானுக்குப் புனிதமானது. நாம் தேவனுடைய பிள்ளைகளானால், நமக்கு இயற்கையில் சிறந்த பொக்கிஷ முண்டு. நமது குறைவுபட்ட கற்பனாசக்தியைப் பயன்படுத்தி உணரக்கூடுமேயானால், அடிக்கிற ஒவ்வொரு காற்றிலும், வருடத்தின் ஒவ்வொரு இரவிலும் பகலிலும், ஆகாயத்தின் ஒவ்வொரு அடையாளத்திலும், பூமியில் ஒவ்வொரு மலர் விரிகிறதிலும் ஒவ்வொரு இலை உதிர்கிறதிலும் தேவன் நம்மிடம் உண்மையாகவே வருகிறார்.

கற்பனையைச் சிறைப்படுத்துவதே ஆவிக்குரிய ஒருமைப்பாட்டின் அடையாளமாகும். உங்கள் கற்பனை ஒரு விக்கிரகத்தின் முகத்தை நோக்குகிறதா? அந்த விக்கிரகம் நீங்களா? உங்கள் பணியா? ஒரு ஊழியக்காரன் எவ்வாறிருக்கவேண்டும் என்ற உங்கள் கருத்தா? நீங்கள் இரட்சிக்கப்பட்டுப் பரிசுத்தமாக்கப்பட்ட அனுபவமா? அவ்வாறாயின் தேவனைக்குறித்த உங்கள் கற்பனைத் தவறு; எனவே, பாடுகளை நீங்கள் சந்திக்கும்போது, உங்களுக்குப் பலமிருக்காது, இருளில் சகித்துக்கொள்ள மட்டுமே உங்களால்முடியும். உங்கள் கற்பனாசக்தி குறைவுபடுமானால், உங்கள் சொந்த அனுபவத்தைத் திரும்பிப் பாராதேயுங்கள்; உங்களுக்குத் தேவை தேவனே. உங்களைவிட்டும், உங்கள் விக்கிரகங்களின் முகத்தைவிட்டும், உங்கள் கற்பனாசக்தியை அழித்துக்கொண்டிருக்கிறவைகளைவிட்டும் வெளியே வாருங்கள். உங்களைத் தட்டி எழுப்புங்கள்; ஏசாயா மக்களைக் கண்டித்ததை ஏற்றுக்கொண்டு, உங்கள் கற்பனையை மனப்பூர்வமாகத் தேவனுக்கு நேராகத் திருப்புங்கள்.

ஜெபங்கள் பயனற்றுப்போவதின் காரணங்களில் ஒன்று கற்பனாசக்தி இல்லாதிருப்பதும் தேவனுக்குமுன்பாக மனப்பூர்வமாக நம்மை நிறுத்த வல்லமையற்றுப்போவதுமே. ஆளத்துவ தொடர்புகொள்ளுவதை விட பரிந்துபேசும் அனுபவத்தில் எவ்வாறு நொறுக்கப்பட்ட அப்பமாயும் ஊற்றப்பட்ட இரசமாயுமிருக்கமுடியும் என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு பரிசுத்தவான் தன்னைத் தன் சுயத்துக்கு வெளியே, இதுவரை அவன் அனுபவித்திராத உறவுகளுக்குள் நிலைப்படுத்தத் தேவன் கொடுக்கிற வல்லமையே கற்பனாசக்தியாகும்.

தேவனிலுள்ள உங்கள் நம்பிக்கை மயங்கிமடிகிறதா?

உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர். ஏசா.26:3.

உங்கள் கற்பனை தேவன்மீது நிலைத்திருக்கிறதா? அல்லது அது குன்றிப்போகிறதா? ஒரு ஊழியக்காரனுடைய வாழ்க்கை சோர்படையவும் சாரமற்றுப்போகவும் மிகவும் முக்கியமான காரணங்களில் ஒன்று சிந்தனை குன்றிப்போவதே. தேவனுக்குமுன் உங்களைக் கொண்டுசெல்ல உங்கள் சிந்தனைகளை நீங்கள் ஒருபோதும் பயன்படுத்தவில்லையென்றால், இப்போதே அதைச் செய்ய ஆரம்பியுங்கள். தேவன் வருவதற்குக் காத்திருப் பதால் பயனில்லை; உங்கள் கற்பனாசக்தியை விக்கிரகங்களின் முகத்தை விட்டுத் தூர அகற்றிவிட்டு அவரை நோக்கிப்பார்த்து இரட்சிக்கப்படுங்கள்.

கற்பனாசக்தி தேவன் நமக்குத் தந்துள்ள மிகச்சிறந்த ஈவாகும்; அது முற்றுமாக அவருக்கே அர்ப்பணிக்கப்படவேண்டும். உங்களுடைய எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்தியிருப்பீர் களேயானால், சோதனையின் காலம் வரும்போது விசுவாசத்துக்கு அது மிகப்பெரிய சொத்தாயிருக்கும்; ஏனெனில், உங்கள் விசுவாசமும் தேவ னுடைய ஆவியும் ஒன்றுசேர்ந்து செயல்படும். தேவனுடைய தன்மைக்குத் தகுதியான கருத்துக்களை இயற்கையில் நடைபெறுகிற சம்பவங்களோடு, அதாவது சூரிய உதயங்களும் மற்றும் அதன் அஸ்தமனங்களும், சூரியன் மற்றும் நட்சத்திரங்கள், மாறும் காலங்கள் போன்றவைகளோடு தொடர்பு படுத்தக் கற்றுக்கொள்ளுங்கள்; அப்போது உங்கள் கற்பனை ஒருபோதும் உங்கள் உணர்ச்சிகளின் கட்டுப்பாட்டில் இராது; ஆனால் அது எப்போதும் தேவனுடைய சேவையிலேயே ஈடுபடும்.

எங்கள் பிதாக்களோடுங்கூட நாங்களும் பாவஞ்செய்து,..... நினையாமல் போனோம் என்று கூறுகிறீர்களா?--எங்கு நீங்கள் தூங்கச் சென்றீர்களோ அந்த இடத்தில் ஒரு குத்துவாளை வையுங்கள். இப்போது தேவன் என்னோடு பேசவில்லை என்கிறீர்களா? அல்ல, அவர் பேசிக் கொண்டுதானிருக்கவேண்டும். நீங்கள் யாருடையவர்கள் என்றும் நீங்கள் யாரைச் சேவிக்கிறீர்கள் என்றும் நினைவுகூருங்கள். பழைய நினைவு கூருதலால் உங்களைத் தூண்டுங்கள்; அப்போது தேவன்பேரிலுள்ள உங்கள் பாசம் பத்துமடங்காகப் பெருகும்; அதன்பின் ஒருபோதும் உங்கள் கற்பனாசக்தி வற்றிப்போகாது, அது உயிரடைந்து உற்சாகங்கொள்ளும், உங்கள் நம்பிக்கை கூறிஅறிவிக்கமுடியாதஅளவு பிரகாசமடையும்.

நான் செவிகொடுக்கவேண்டுமா?

மோசேயை நோக்கி: நீர் எங்களோடே பேசும், நாங்கள் கேட்போம்; தேவன் எங்களோடே பேசாதிருப்பாராக, பேசினால் நாங்கள் செத்துப்போவோம் என்றார்கள். யாத்.20:19.

நாம் மனப்பூர்வமாகத் தேவனுக்குக் கீழ்ப்படியாமை காண்பிப்பது இல்லை; நாம் செய்வது அவருக்குக் கவனம் செலுத்தாதிருப்பதே. தேவன் அவருடைய கற்பனைகளை நமக்குக் கொடுத்திருக்கிறார்; அவைகள் அங்கிருந்தாலும், மனப்பூர்வமான கீழ்ப்படியாமையின் காரணத்தாலல்ல, அவரை நேசித்து மதிப்பளிக்காததினாலே அவைகளில் நாம் ஒரு கவனமும் செலுத்துவதில்லை. நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் என்று இயேசு கூறினார். நாம் தேவனைத் தொடர்பாக அவமதித்துக்கொண்டிருந்தோம் என்று உணருவோமானால், அவருக்குக் கவனஞ்செலுத்தவில்லை என்கிற காரணத்தால் நாம் வெட்கத்தாலும் அவமானத்தாலும் மூடப்படுவோம்.

நீர் எங்களோடு பேசும், தேவன் எங்களோடு பேசவேண்டாம். தேவனுடைய ஊழியக்காரர்களுக்குமாத்திரம் நாம் செவிகொடுக்க முன்னுரிமை கொடுப்பதினால் நாம் தேவனை எவ்வளவு குறைவாக நேசிக்கிறோமென்று காண்பிக்கிறோம். தனிநபர் சாட்சிகளுக்குச் செவிகொடுக்க நாம் ஆசிக்கிறோம்; ஆனால், தேவன்தாமே நம்மோடு பேசவேண்டுமென்று நாம் விரும்புகிறதில்லை. தேவன் நம்மோடு பேசக்கூடாதபடி நாம் ஏன் திகிலடைகிறோம்? ஏனென்றால், தேவன் பேசுவாரேயானால், ஒன்றில் அவர் சொல்லும் காரியம் செய்யப்பட்டேயாகவேண்டும், அல்லது நாம் அவருக்குக் கீழ்ப்படியமாட்டோம் என்று அவரிடம் கூறவேண்டும் என்று நாம் அறிவோம். ஊழியக்காரருடைய சத்தத்தைமாத்திரம் நாம் கேட்போமானால், அது தவிர்க்க முடியாததல்ல என்று உணருவதோடு, அது பெரும்பாலும் தேவனுடைய சத்தியம் என்பதை நாம் மறுக்காவிட்டாலும், அது உங்கள் சொந்தக் கருத்துமாத்திரமே என்று நாம் கூறவும்முடியும்.

தேவன் என்னைத் தம்முடைய பிள்ளையாக நடத்தினாலும் நான் எப்போதும் அவரை அசட்டைசெய்து, அவரை இழிவுபடுத்துகிறேனா? நான் அவருக்குச் செவிகொடுக்கும்போது, அவர்மீது சுமத்தின அவமானம் என்மீது திரும்பிவருகிறது--கர்த்தாவே, நான் ஏன் மந்தமானவனாகவும் பிடிவாதமுள்ளவனாகவும் இருந்தேன்? நாம் தேவனுக்குச் செவிகொடுப்போமேயானால் எப்போதும் ஏற்படும் விளைவு இதுதான். நாம் அவருக்குச் செவிகொடுப்பதால் வரும் மெய்யான மகிழ்ச்சி, அவருக்குச் செவிகொடுக்க அதிகத் தாமதித்துவிட்டதற்கான அவமான உணர்ச்சியோடு கலந்திருக்கும்.

செவிகொடுக்கும் பக்தி

சொல்லும்; அடியேன் கேட்கிறேன். 1 சாமு.3:10.

தேவன் கூறிய ஒரு காரியத்திற்குத் திட்டமாக நான் செவிகொடுத்ததால் அவர் கூறுகிற எல்லாவற்றிற்கும் செவிகொடுப்பேனென்றாகாது. தேவன் கூறுகிறவைகளுக்குநேராக என் இருதயமும் மனதும் உணர்ச்சியற்றிருப்பதே நான் அவரை நேசிக்கவுமில்லை மதிக்கவுமில்லை என்பதை அவருக்குக் காண்பிக்கும் வழியாகும். நான் என் சிநேகிதனை நேசித்தால், அவன் என்ன தேவைப்படுகிறான் என்பதை உள்ளுணர்விலே கண்டுபிடிக்கிறேன்; நான் உங்களைச் சிநேகிதர் என்றேன் என்றார் இயேசு. இந்த வாரத்தில் என் ஆண்டவருடைய ஏதாவது கட்டளைக்குக் கீழ்ப்படியாமை காண்பித்திருக்கிறேனா? அது இயேசுவின் கட்டளை என்று நான் உணர்ந்திருப்பேனேயானால் அதற்கு நான் மனதாரக் கீழ்ப்படியாமை காண்பித்திருக்கமாட்டேன்; ஆனால், தேவன் கூறுகிறவைகளுக்குச் செவிகொடுக்கக் கூடாதபடி நம்மில் அநேகர் அவருக்கு அவமரியாதை காண்பிக்கிறோம்; எனவே, அவர் ஒருபோதும் பேசாமலிருந்தால் நலமாயிருந்திருக்கும்!

நான் எப்பொழுதும் தேவனுக்குச் செவிகொடுக்கிறேன் என்பதும் அவர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறாரென்று அறிவதுமான (யோவான் 11:41) நிலையில் இயேசுகிறிஸ்துவோடு ஒன்றித்திருப்பதே என் ஆவிக்குரிய வாழ்க்கையின் இலக்காகும். நான் இயேசுகிறிஸ்துவோடு இணைந்திருப்பேனேயானால் எக்காலத்தும் செவிகொடுக்கும் பக்தியினால் நான் தேவனுக்குச் செவிசாய்க்கிறேன். ஒரு மலரோ, ஒரு மரமோ அல்லது தேவனுடைய ஒரு ஊழியக்காரரோ தேவனுடைய செய்தியை எனக்கு அறிவிக்கலாம். ஆனால், நான் செவிகொடுப்பதற்குத் தடையாயிருப்பது, மற்றக் காரியங்களில் மட்டுமீறிய கரிசனைகொள்வதே. நான் தேவனுக்குச் செவிகொடுக்கமாட்டேன் என்பதல்ல, தகுந்த இடத்தில் நான் பக்திவைக்கவில்லை. நான் பொருட்களிலும் சேவையிலும் நம்பிக்கைகளிலும் பக்தியுள்ளவனாயிருக்கிறேன்; எனவே, தேவனுக்கு விருப்பமானவைகளை அவர் கூறலாம்; ஆனால் நான் அவருக்குச் செவிகொடுக்கிறதில்லை. கர்த்தாவே சொல்லும்; அடியேன் கேட்கிறேன் என்று கூறுவது எப்போதும் குழந்தைத் தன்மையாகும். செவிகொடுக்கும் இந்தப் பக்தியை நான் விருத்திபண்ணியிராவிட்டால் குறிப்பிட்டவேளை மாத்திரமே நான் அவருடைய சத்தத்தைக் கேட்கமுடியும்; மற்றவேளைகளில் நான் செய்தாகவேண்டும் என்று நான் சொல்லுகிற பிறகாரியங்களில் மட்டுமீறிய கரிசனைகொள்வதினால், நான் அவருக்குச் செவிகேளாதவனாகிவிடுகிறேன், நான் ஒரு குழந்தையின் வாழ்க்கை வாழவில்லை. இன்றைக்கு நான் தேவனுடைய சத்தத்தைக் கேட்டிருக்கிறேனா?

செவிகொடுத்தலாகிய கட்டுப்பாடு

நான் உங்களுக்கு இருளிலே சொல்லுகிறதை நீங்கள் வெளிச்சத்திலே சொல்லுங்கள்; காதிலே கேட்கிறதை நீங்கள் வீடுகளின்மேல் பிரசித்தம் பண்ணுங்கள். மத்.10:27.

தேவனுக்குக் கவனஞ்செலுத்துவதை நமக்குக் கற்றுக்கொடுக்க சிலவேளைகளில் இருளாகிய கட்டுப்பாட்டினூடே அவர் நம்மைக் கடத்து கிறார். பாடும் பறவைகள் இருளிலே பாடும்படி கற்றுக்கொடுக்கப்படுகிறது; அதுபோல, நாம் தேவனுக்குச் செவிகொடுக்கக் கற்றுக்கொள்ளுமட்டும் அவருடைய கரங்களின் நிழலிலே வைக்கப்படுகிறோம். நான் உங்களுக்கு இருளிலே சொல்லுகிறதை--எங்கே தேவன் உங்களை இருளுக்குள் வைக்கிறார் என்பதைக் கவனித்திருங்கள்; நீங்கள் அங்கே இருக்கும்போது உங்கள் வாயை அடைத்துக்கொள்ளுங்கள். உங்கள் சூழலிலோ, அல்லது தேவனோடுள்ள உங்கள் வாழ்க்கையிலோ நீங்கள் இப்பொழுது இருளில் இருக்கிறீர்களா? அவ்வாறாயின் அமைதலாயிருங்கள். நீங்கள் இருளில் வாய் திறந்தால் தவறான மனநிலையில் பேசுவீர்கள்; இருள் செவிகோடுப் பதற்கான காலம். அதைப்பற்றிப் பிற மக்களிடம் பேசவேண்டாம், இருளின் காரணத்தை அறியப் புத்தகங்களைப் படிக்கவேண்டாம்; செவிகோடுத்துக் கவனியுங்கள். நீங்கள் பிறரிடம் பேசிக்கொண்டிருந்தால் தேவன் சொல்லு கிறதை நீங்கள் கேட்கமுடியாது. நீங்கள் இருளில் இருக்கும்போது, கவனி யுங்கள், நீங்கள் ஒளியில் வரும்போது வேறே ஒரு நபருக்கான அரிதான செய்தியைத் தேவன் உங்களுக்குத் தருவார்.

ஒவ்வொரு இருளின் காலத்துக்குப்பிறகும் மகிழ்ச்சியும் துக்கமும் கலந்து வருகிறது; (மகிழ்ச்சி மாத்திரமே இருக்குமானால், நாம் தேவனைக் கேட்டிருக்கிறோமா என்று நான் ஐயப்படுகிறேன்)--தேவன் பேசுகிறதைக் கேட்கிறதினால் மகிழ்ச்சி உண்டாகிறது, முக்கியமாக அதை நான் கேட்க எவ்வளவோ நீண்ட காலம் ஆகிவிட்டதே! அதைப் புரிந்துகொள்ளாதபடி எவ்வளவு மந்தமுள்ளவனாயிருந்திருக்கிறேன்! ஆயினும் ஆண்டவர் இத்தனை நாட்களும், வாரங்களும் அதைப் பேசிக்கொண்டேயிருந்திருக் கிறாரே! என்ற உணர்வால் துக்கம் ஏற்படுகிறது. தேவனுக்குச் செவிகொடுக் கத்தக்கதான மென்மையான இருதயத்தைக் கொண்டுவரும் தாழ்மை யாகிய ஈவைத் தேவன் இப்போது உங்களுக்குத் தருகிறார்.

என் சகோதரனுக்கு நான் காவலாளியோ?

நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதில்லை. ரோமர் 14:7.

ஆவிக்குரியநிலையில் தேவனுக்குமுன் பிற ஆத்துமாக்களுக்கு நீங்களே பொறுப்பென்று எப்போதாவது உங்களுக்குத் தோன்றியதுண்டா? எடுத்துக்காட்டாக, என்னுடைய வாழ்க்கையில் தேவனைவிட்டு தனித்து விலகுவதை அனுமதிப்பேனேயானால், என்னைச் சுற்றியுள்ள எல்லாரும் துன்பப்படுவார்கள். உன்னதங்களிலே அவரோடேகூட உட்காருகிறோம் என்றும், ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப்பாடு படும் என்றும் பவுல் கூறுகிறார். சரீரபிரகாரமான சுயநலத்தையோ, மனதின் சோம்பலையோ, தார்மீக மந்தமான நிலையையோ, ஆவிக்குரிய அழுத்தத் தையோ உங்களில் அனுமதிப்பீர்களானால், உங்கள் கூட்டத்தில் உள்ள ஒவ்வொருவரும் பாடுபடுவார்கள். இத்தகைய ஒரு அளவுகோலை நீங்கள் நியமித்தால் யார்தான் இவைகளுக்குப் போதிய திறமையுள்ளவர்களாயிருக்க முடியும் என்று நீங்கள் கேட்கலாம். நமக்குப் போதிய திறமை தேவனிடத் திலிருந்து, அவரிடத்திலிருந்து மாத்திரமே வரும்.

நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்று இயேசு கூறினார். நரம்பிலும் மனதிலும் தார்மீகத்திலும் ஆவிக்குரியதிலும் நம்மிடமுள்ள ஒவ்வொரு மில்லிகிராம் சக்தியையும் இயேசுகிறிஸ்துவுக்காகச் செலவிட நம்மில் எத்தனைபேர் ஆயத்தம்? தேவனுடைய கருத்தின்படி சாட்சியாயி ருப்பது என்ற வார்த்தையின் பொருள் அதுவே. அதற்குக் காலம் எடுக்கும்; நீங்கள் உங்களுக்குள்ளே பொறுமையாயிருங்கள். தேவன் நம்மைப் பூமியில் விட்டுவைத்திருக்கிறார்--எதற்காக? இரட்சிக்கப்பட்டுப் பரிசுத்தமாக் கப்படுவதற்காகவா? அல்லவே, அவருக்காகச் சாட்சியாயிருக்கவே. நான் அவருக்காக நொறுக்கப்பட்ட அப்பமாயும் ஊற்றப்பட்ட இரசமாயும் மாற ஆயத்தமா? என்னால் இயன்றமட்டும் ஆண்களையும் பெண்களையும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சீஷராக்குகிற நோக்கந்தவிர மற்றெல்லாக் கோணங்களிலும் இந்த யுகத்திற்கும் வாழ்க்கைக்கும் நான் அழிந்துபோக ஆயத்தமா? தேவனுடைய சொல்லிமுடியாத இரட்சிப்புக்கு நான் நன்றி கூறும் வழி அவருடைய ஊழியனாக வாழ்வதே. நம்மில் எவரும் களிம் புள்ள வெள்ளியாகத் தூக்கியெறியப்படுவது எளிதாக சாத்தியம் என்பதை நினைவுகூரவேண்டும்; மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான் எந்த விதத்திலும் ஆகாதவனாய்ப் போகக்கூடாது.

ஆவிக்குரிய ஆரம்பத்தின் ஏவுதல்

மரித்தோரை விட்டு எழுந்திரு. எபே.5:14.

தொடக்க முயற்சி எல்லாம் அகத்தூண்டுதலாலல்ல. ஒரு மனிதன் உங்களிடம்: தைரியப்படுங்கள், தயக்கத்தைக் கழுத்தைப்பிடித்து வெளியே எறிந்துவிடுங்கள், காரியத்தை விடாதீர்கள் என்று சொல்லலாம்; அது சாதாரண மானிட உற்சாகமாகும். ஆனால், தேவனுடைய ஆவியானவர் வந்து, தைரியப்படுங்கள் என்ற கருத்தில் சொல்லும்போது அந்தத் தொடக்க முயற்சி ஏவப்பட்டது என்று கண்டுகொள்ளுகிறோம்.

நாம் இளைஞர்களாயிருக்கும்போது நம்மெல்லாருக்கும் அநேக கனவுகளும் இலட்சியங்களும் இருக்கின்றன; ஆனால், அவற்றைச் செயல்படுத்துவதற்குரிய திறமை நமக்கில்லையென்பதை எப்போதாவது கண்டுகொள்ளுகிறோம். நாம் செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறவை களைச் செய்யமுடியவில்லை; எனவே, நம்முடைய கனவுகளும் இலட்சியங் களும் மரித்துப்போனதுபோல நாம் அமைதலாயிருக்க வாய்ப்புண்டு; அப்போது தேவன் நம்மிடம் வந்து, மரித்தோரைவிட்டு எழுந்திரு என்று கூறவேண்டியதாயிருக்கிறது. தேவனுடைய ஏவுதல் நமக்கு வரும்போது, அது அற்புதமான வல்லமையோடு வருவதால், மரித்தோரிலிருந்து எழும் பவும் அசாத்தியமான காரியத்தைச் செய்யவும் நம்மால் இயலுகிறது.

நாம் தைரியப்பட்டபிறகு மாத்திரமே, ஜீவனும் ஆற்றலும் வருகிறது என்பதே ஆவிக்குரிய ஏவுதலின் சிறப்பான காரியம். வெற்றிகொள்ளும் வாழ்க்கையைத் தேவன் நமக்குக் கொடுப்பதில்லை; நாம் வெற்றிகொள்ளும் போதே தேவன் வாழ்வளிக்கிறார். தேவனுடைய ஏவுதல் வந்து, அவர் நம்மைப் பார்த்து, மரித்தோரைவிட்டு எழுந்திரு என்று கூறும்போது, நாம் எழும்பியே ஆகவேண்டும்; தேவன் நம்மைத் தூக்கிவிடுவதில்லை. நமது ஆண்டவர் சூம்பின கையையுடைய மனிதனைப் பார்த்து, உன் கையை நீட்டு என்றார்; அவன் அவ்வாறு செய்தவுடனே அவனுடைய கரம் ஆரோக் கியமடந்தது; ஆனால், அவன் தொடக்கமுயற்சி செய்யவேண்டியதிருந்தது. நாம் வெற்றிகொள்ளும்போது, தேவனுடைய ஆவியினால் ஏவப்படுகிறோம் என்பதைக் கண்டுகொள்ளுவோம்; ஏனெனில், அவர் உடனடியாக வாழ்வு அளிக்கிறார்.

மனச்சோர்புக்கு எதிரான முனைப்பு

எழுந்திருந்து போஜனம்பண்ணு. 1 இராஜா.19:5.

தேவதூதன் எலியாவுக்கு ஒரு தரிசனத்தைக் கொடுக்கவில்லை, அல்லது வேதவசனங்களை அவருக்கு விளக்கவில்லை, அல்லது விசேஷ மான எதையுஞ்செய்யவில்லை; மிகவும் சாதாரணமான காரியத்தைச் செய்யும்படிக்கே அவர் எலியாவிடம் கூறினார், அதாவது எழுந்திருந்து போஜனம்பண்ணு என்பதே அது. நாம் ஒருபோதும் மனச்சோர்பு அடைய வில்லையென்றால், நமக்கு உயிரில்லை என்றாகிறது; ஒருபோதும் மனச் சோர்பு அடையாதிருப்பது பளிங்குக்கல்லின் தன்மை. மனிதஇனத்தவன் மனச்சோர்பு அடையும் இயல்பு வாய்ந்தவன்; இல்லாவிட்டால் பெரும் மகிழ்ச்சியடையும் ஆற்றல் இருக்கமுடியாது. மனச்சோர்படையச்செய்யத் திட்டமிட்டக் காரியங்களுண்டு; மரணத்தைச் சார்ந்த காரியங்கள் அவை; உங்களைக்குறித்து மதிப்பீடு செய்யும்போது, மனச்சோர்பைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றலை எப்போதும் கணக்கிலெடுத்துக்கொள்ளுங்கள்.

தேவஆவியானவர் வரும்போது, அவர் நமக்குத் தரிசனங்களைத் தருவதில்லை; கருதத்தக்கவைகளில் மிகவும் சாதாரண காரியங்களைச் செய்யும்படி அவர் நம்மிடம் கூறுகிறார். தேவனுடைய படைப்பில் சாதாரண மானதும் சிறப்பற்றதுமான காரியங்களைவிட்டு மனச்சோர்பு நம்மைத் தூர அகற்ற வாய்ப்புண்டு; ஆனால் தேவன் வரும்போதெல்லாம் மிகவும் இயற்கையான எளிய காரியங்களைச் செய்யவே அவர் ஏவுகிறார்-தேவன் அவைகளில் இருக்கிறாரென்று நாம் ஒருபோதும் கற்பனைசெய்திராத காரியங்கள் அவைகள்; ஆனால், அவைகளைச் செய்யும்போது தேவன் அங்கிருக்கிறார் என்று காண்கிறோம். இவ்வழிமுறையில் நமக்கு வருகிற ஏவுதல் மனச்சோர்புக்கு எதிரான தொடக்க முயற்சியேயாகும்; எனவே, அதற்கு அடுத்த காரியத்தை நாம் செய்யவேண்டும், அதைத் தேவனுடைய ஏவுதலோடு செய்யவேண்டும். மனச்சோர்பை மேற்கொள்ளுவதற்காக நாம் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்வோமானால் அச்சோர்பை நாம் அதிகரிக் கிறோம்; ஆனால், அந்தக் காரியத்தைச் செய்யவேண்டுமென்று தேவ ஆவியானவர் நமது உள்ளுணர்வில் உணரச்செய்வதினால் நாம் அதைச் செய்வோமானால் மனச்சோர்பு போய்விடுகிறது. நாம் எழுந்து கீழ்ப்படிந்த வுடன், வாழ்வில் ஒரு உன்னதமான நிலைக்குள் நாம் பிரவேசிக்கிறோம்.

நம்பிக்கையிழப்புக்கு எதிரான முனைப்பு

எழுந்திருங்கள், போவோம். மத்.26:46.

விழித்திருக்கவேண்டிய வேளையில் சீஷர்கள் தூங்கச்சென்றார்கள்; ஆனால், அவர்கள் என்ன செய்திருந்தார்கள் என்பதை உணர்ந்தபோது, அது நம்பிக்கையிழப்பை ஏற்படுத்தியது. சரிசெய்யப்படக்கூடாதவைகளைக் குறித்த அறிவு நம்மை நம்பிக்கையிழக்கச்செய்ய வாய்ப்புண்டு; அப்போது நாம், இப்போது எல்லாம் முடிந்துவிட்டது; இன்னும் முயற்சிப்பது பயனற்றது என்று கூறுகிறோம். இவ்விதமான நம்பிக்கையிழப்பு விதிவிலக்கானது என்று கற்பனைசெய்வோமானால், நாம் தவறுகிறோம்; இது மிகவும் சாதாரணமான மனித அனுபவம். செய்வதற்கு மிகச்சிறந்த வாய்ப்பிருந்த ஒரு காரியத்தை நாம் செய்யவில்லை என்பதை உணரும்போதெல்லாம் நம்பிக் கையிழப்புக்குள் நாம் மூழ்க வாய்ப்புண்டு; அப்போது இயேசுகிறிஸ்து வந்து, இப்போது தூங்குங்கள், அந்த வாய்ப்பு என்றென்றைக்கும் நஷ்டப் பட்டுவிட்டது, அதை நீங்கள் மாற்றமுடியாது, எனவே, எழுந்திருந்து அடுத்த காரியத்திற்குச் செல்லுங்கள் என்று சொல்லுகிறார். கடந்த காலம் தூங் கட்டும், ஆனால் அது கிறிஸ்துவின் மடியில் தூங்கட்டும்; தடுத்துநிறுத்த முடியாத எதிர்காலத்துக்குள் அவரோடுகூடப் பிரவேசியுங்கள்.

இத்தகைய அனுபவங்கள் நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கை யிலும் உண்டு. நாம் நம்பிக்கையிழப்பில் இருக்கிறோம், நடந்துவிட்ட நிகழ்ச்சிகளால் வருகிற நம்பிக்கையிழப்பு அது; அதிலிருந்து நம்மை நாமே வெளியே தூக்கியெடுக்க நம்மால் கூடாது. இந்தச் சந்தர்ப்பத்தில் சீஷர்கள் சந்தேகத்துக்கிடமில்லாமல் மன்னிக்கமுடியாத ஒரு காரியத்தைச் செய்தார்கள்; இயேசுவோடு விழித்திருப்பதற்குப்பதில் அவர்கள் தூங்கச் சென்றுவிட்டார்கள்; ஆனால், அவர்களுடைய நம்பிக்கையிழப்புக்கு எதிரான ஆவிக்குரிய முனைப்போடு அவர் அவர்களிடம் வந்து, எழுந்து அடுத்த காரியத்தைச் செய்யுங்கள் என்றார். நாம் தேவனால் ஏவப்படுவோ மேயானால், அடுத்த காரியமென்ன? அவரைப் பூரணமாய் நம்பி, அவருடைய மீட்பின் அடிப்படையில் ஜெபிப்பதே.

தோல்வியடைவோமோ என்ற உணர்ச்சி உங்கள் புதிய செயலைக் கறைப்படுத்த ஒருபோதும் அனுமதிக்கவேண்டாம்.

இழிதொழிலுக்கு எதிரான முனைப்பு

எழும்பிப் பிரகாசி. ஏசா.60:1.

தேவன் இல்லை என்கிறதைப்போல, நாம்தான் முதல் அடி எடுத்து வைக்கவேண்டும். நமக்கு உதவும்படி தேவனுக்காகக் காத்திருப்பதில் பயன் இல்லை, அவர் உதவமாட்டார்; ஆனால், நாம் எழும்பினவுடனே அவர் அங்கிருக்கிறார் என்பதைக் காண்கிறோம். தேவன் ஏவும்பொழுதெல்லாம் தொடக்க முயற்சிசெய்வது தார்மீகச் செயல். நாம் அக்காரியத்தைச் செய்யவேண்டும், ஒன்றும் செய்யாமல் படுத்துக்கிடக்கக்கூடாது. நாம் எழும்பிப் பிரகாசிப்போமானால் எந்த இழிவான தொழிலும் தெய்வீகத்தால் மறுரூபப்படுத்தப்படும்.

ஒழுக்கம் இருக்கிறதென்பதற்குரிய மிகச்சிறந்த உரைகற்களில் ஒன்று இழிதொழிலாகும். உயர்வானது என்று கருதக்கூடிய எக்காரியத்துக்கும் அதிகத் தூரத்திலுள்ளதுதான் இழிதொழில்--மிகவும் இழிவான அழுக்கான காரியங்கள்; நாம் அவைகளோடு தொடர்புகொள்ளும்போது உடனடியாக நாம் உண்மையாகவே ஆவிக்குரியவர்களா இல்லையா என்பதை அறிகிறோம். யோவான் 13-ஐ வாசியுங்கள்; மனித அவதாரம் எடுத்த தேவன் செம்படவர்களின் கால்களைக் கழுவியதாகிய மிகவும் இழிவான செயலைச் செய்ததை அங்கு காண்கிறோம்; அதன்பின் அவர், ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள் என்று கூறினார். இவ்வாறு, தேவனுடைய ஒளி தன்மீது விழுந்த எந்த இழிவான தொழிலினூடேயும் கடந்துசெல்ல அவருடைய ஏவுதல் தேவை. சில மக்கள் ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்கிறார்கள்; அவர்கள் அதைச் செய்கிற வழிமுறையினால், அது பிற்காலத்தில் என்றென்றுமாக புனிதமாகிறது. அது மிகவும் சாதாரணமான காரியமாயிருக்கலாம்; ஆனால், அவர்கள் அதைச் செய்கிறதை நாம் கண்டபின் அது வித்தியாசமாகிறது. கர்த்தர் ஒரு காரியத்தை நம் வழியாகச் செய்யும்போது அவர் அதை எப்போதும் மறுரூபப்படுத்துகிறார். நம்முடைய ஆண்டவர் தம்மீது நம்முடைய மானிட சரீரத்தை எடுத்து அதை மறுரூபப்படுத்தினார்; எனவே, ஒவ்வொரு பரிசுத்தவானுக்கும் மானிட சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாகிவிட்டது.

கனவு காண்பதற்கு எதிரான முனைப்பு

எழுந்திருங்கள், இவ்விடம்விட்டுப் போவோம் வாருங்கள். யோவான் 14:31.

ஒரு காரியத்தை ஏற்றவாறு செய்யும்பொருட்டு அதைக்குறித்துக் கனவு காண்பது சரிதான். ஆனால், அதைச் செயல்படுத்திக்கொண்டிருக்க வேண்டிய வேளையில் அதைக்குறித்துக் கனவுகண்டுகொண்டிருப்பதுதான் தவறு. அந்த வேதபாகத்தில் வருகிற அற்புதமான காரியங்களை நமது ஆண்டவர் தம்முடைய சீஷர்களுக்குக் கூறியபின், அவர்கள் தூரச்சென்று அவைகள் எல்லாவற்றையுங்குறித்துத் தியானிக்கும்படி அவர் கூறியிருக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்த்திருக்கலாம்; ஆனால், காலத்தைக் கவலை யின்றிக் கழிக்க நம்முடைய ஆண்டவர் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. தேவனுக்கு என்ன வேண்டும் என்பதை அறியும்படி அவரோடு தொடர்பு கொள்ளும்போது கனவு காண்பது சரிதான்; ஆனால், நாம் செய்யும்படிக் கூறப்பட்ட காரியங்களைக்குறித்துக் கனவுகாண்பதில் காலத்தைச் செலவிட நாம் நாட்டங்கொள்ளுவோமானால், அது தவறான காரியம்; தேவனுடைய ஆசீர்வாதம் ஒருபோதும் அதில் இருப்பதில்லை. தேவனுடைய முனைப்பு எப்போதும் இத்தகைய கனவுகாண்பதற்கு எதிரான தாற்றுக்கோலின் தன்மையில் வருகிறது; அந்தத் தாற்றுக்கோல், இருக்கவோ, நிற்கவோ செய்யாதீர்கள்; செல்லுங்கள் என்றே நமக்குக் கட்டளையிடுகிறது.

நாம் தேவனுக்குமுன்பாக அமைதலாய்க் காத்திருக்கும்போது, தனித்திருக்க நீங்கள் வாருங்கள் என்று அவர் அழைப்பாரானால், அது அவருடைய விருப்பத்துக்கேற்ற நிலை அடைவதற்கு அவருக்கு முன்பான தியானமாகும்; ஆனால் தேவன் பேசியபின் வெறும் கனவு வாழ்க்கையில் நீடிப்பதைக்குறித்து எப்போதும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அவரே உங்கள் சகலக் கனவுகள், களிப்புக்கள் மற்றும் இன்பங்கள் என்பவற்றின் ஆதாரமாயிருக்க அனுமதியுங்கள்; சென்று அவர் சொல்லியிருப்பதற்குக் கீழ்ப்படியுங்கள். நீங்கள் ஒருவரை நேசிக்கும்போது உட்கார்ந்து, நீங்கள் நேசிக்கிறவரைக்குறித்தே எக்காலத்தும் கனவுகண்டுகொண்டேயிருக்க மாட்டீர்கள், நீங்கள் சென்று ஏதோ ஒன்றை அவருக்காகச் செய்வீர்கள்; அதைத்தான் நாம் செய்யவேண்டுமென்று இயேசுகிறிஸ்து எதிர்பார்க்கிறார். தேவன் பேசியபின்னர் கனவுகண்டுகொண்டிருப்பது நாம் அவர்மேல் நம்பிக்கைவைக்கவில்லை என்பதற்குரிய அறிகுறி.

தேவனுக்காக எப்போதாவது உணர்ச்சிவசப்பட்டதுண்டா?

என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள். மாற்கு 14:6.

மானிட அன்பு ஒரு நபரை அவருக்குமிஞ்சிக் கொண்டுசெல்ல வில்லையென்றால் அது அன்பல்ல. அன்பு எப்போதும் விவேகமுள்ளதும், ஞானமுள்ளதும், புத்திநுட்பமுள்ளதும், கணிக்கிறதுமாயிருந்து, ஒருபோதும் அதற்குமிஞ்சிக் கொண்டுபோகப்படவில்லையானால் அது அன்பேயில்லை. அது பிரியமாயிருக்கலாம், அல்லது உணர்ச்சியின் வேகமாயிருக்கலாம்; ஆனால் அதில் அன்பின் உண்மையான இயல்பு இல்லை.

நான் தேவனில் அன்புகூருகிறேன் என்பதற்காகத்தவிர, அது என் கடமை அல்லது அது பயனுள்ளது அல்லது அதில் ஏதாவதொன்று இருக்கிறது என்கிற காரணங்களுக்காக நான் எதையாவது தேவனுக்காகச் செய்யும்படி அதிகம் தூண்டப்படுகிறேனா? தேவனுக்கு விலையுள்ளதானப் பொருட்களை நான் அவருக்குக் கொண்டுவரமுடியும் என்பதை எப்போ தாவது உணர்ந்திருக்கிறேனா? அல்லது, எண்ணற்ற காரியங்கள் நான் செய்யவேண்டியதிருக்க, அவருடைய மீட்பின் சிறப்பைச்சுற்றி வெட்டியாய்க் காலத்தைச் செலவிடுகிறேனா? அற்புதமென்று பதிவுசெய்யப்படக்கூடிய புனிதமானவைகளும், பிரமாண்டமானவைகளுமான காரியங்களல்ல, நான் என்னை தேவனுக்கு முற்றும் ஒப்படைத்திருக்கிறேன் என்பதை அவருக்குத் தெளிவுபடுத்தும் எளியதும் சாதாரணமுமான காரியங்களே செய்யவேண் டியவை. பெத்தானியா மரியாள் கர்த்தராகிய இயேசுவின் இருதயத்தில் உருவாக்கியதை நான் எப்போதாவது உருவாக்கியிருக்கிறேனா?

நாம் தேவனை எவ்வளவு உத்தமமாய் நேசிக்கிறோம் என்பதற் குரிய அர்ப்பணத்தின் தெளிவுகளை நாம் கொடுக்கிறோமா என்பதைக் காண அவர் காத்திருப்பதைப்போலக் காணப்படும் சிலவேளைகளுண்டு. ஆளத்துவ பரிசுத்தத்தைவிட ஆண்டவருக்காக நம்மை முற்றிலும் துறந்து விடுவது கூடுதல் விலையுள்ளது. ஆளத்துவப் பரிசுத்தம் நமது சொந்தத் தூய்மையில் கண்களைப் பதிக்கிறது; தேவனைத் துக்கப்படுத்திவிடக்கூடா தென்கிற பயத்தில் நாம் நடக்கிற, பேசுகிற, பார்க்கிற விதத்தைக்குறித்து அதிகக் கரிசனைகொள்ளுகிறோம்; நாம் தேவனுக்காக முற்றிலும் துறந் ததும், பூரண அன்பு அந்தப் பயத்தைப் புறம்பேதள்ளும். என்னைக் கொண்டு ஏதாவது பயனுண்டா? என்னும் கருத்துக்கு நாம் முடிவுகட்ட வேண்டும். நாம் பயனுள்ளவர்கள் அல்ல என்று தீர்மானிப்போமானால் அது ஏறக்குறைய உண்மையாயிருக்கலாம். பயனுள்ளவர்களாயிருக்கிறோ மாவென்பது ஒருபோதும் கேள்வியல்ல, தேவனுக்கு விலைமதிப்புள்ளவர் களாயிருக்கிறோமா என்பதே கேள்வி. நாம் நம்மை ஆண்டவரிடம் ஒப்படைக்கும்போது அவர் எக்காலத்தும் நம்மூலம் செயல்படுவார்.

ஆவிக்குரிய விடாமுயற்சியாகிய கட்டுப்பாடு

நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள். சங்.46:10.

விடாமுயற்சி என்பது சகிப்புத்தன்மைக்கு மேலானது; அது சகிப்புத் தன்மையும் நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற காரியம் நடக்கப்போகிறது என்கிற பூரண நிச்சயமும் ஒன்றுசேர்ந்ததாகும். விடாமுயற்சி என்பது, விழுந்து விடக்கூடாது என்று அதிகமாகப் பயப்படும் பலவீனத்தினால் தொங்கிக்கொண்டிருப்பதைவிடச் சிறந்தது. தன் கதாநாயகன் வெற்றி கொள்ளப்படப்போகிறார் என்பதை நம்புவதற்கு மறுக்கும் ஒரு மனிதனின் மிகவும் உயர்ந்த முயற்சியே விடாமுயற்சியாகும். தான் ஆக்கினைக்கு உள்ளாக்கப்படுவோம் என்பதல்ல, இயேசுகிறிஸ்து தோற்கடிக்கப்படுவாரோ, அவர் சுட்டிக்காட்டிய காரியங்களாகிய அன்பு, நீதி, மன்னிப்பு மற்றும் மனிதர்கள் மத்தியில் இரக்கம் போன்றவை இறுதியில் வெற்றி அடையாமற் போகுமோ என்பதுதான் ஒரு சீஷனுடைய மிகப்பெரிய அச்சம்; அவர் சுட்டிக்காட்டின காரியங்கள் மாயமான நம்பிக்கைபோலத் தோன்றுகிறது. அப்போது, ஒன்றுஞ்செய்யாமல் தொங்கிக்கொண்டிருக்க அல்ல, தேவன் ஒருநாளும் தோற்கடிக்கப்படமாட்டார் என்கிற நிச்சயத்தில் மனப்பூர்வமாகச் செயல்படும்படி ஆவிக்குரிய விடாமுயற்சிக்கு அழைப்பு வருகிறது.

நம்முடைய நம்பிக்கைகள் தற்சமயம் ஏமாற்றப்படுகிறதேயானால் அவைகள் சுத்திகரிக்கப்படுகின்றன என்று கருத்தாகிறது. மனிதனுடைய மனது எக்காலத்திலும் எதிர்பார்க்கிறதும் கனவுகாண்கிறதுமான எந்த உன்னத நோக்கமும் நிறைவேறாமற்போவதில்லை. வாழ்க்கையின் மிகப் பெரிய முயற்சிகளில் ஒன்று தேவனுக்காகக் காத்திருக்கும் முயற்சியே. என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்ட படியினால் என்று வாசிக்கிறோம்.

ஆவிக்குரியநிலையில் விடாமுயற்சியோடு நிலைத்திருங்கள்.

சேவை செய்வதற்கானத் தீர்மானம்

அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், . . .வந்தார். மத்.20:28.

சேவையைக்குறித்துப் பவுலின் கருத்தும் நமது ஆண்டவருடைய கருத்தும் ஒன்றே: நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன் என்று இயேசுவும், நாங்களோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்று பவுலும் கூறினார்கள். இறைப்பணிக்கு அழைக்கப்பட்ட ஒருவர் பிறமனிதரைவிட வேறுபட்ட நபராக இருக்கும்படி அழைக்கப்பட்டவர் என்ற கருத்து நமக்கிருக்கிறது. ஆனால் இயேசுகிறிஸ்துவின் கருத்துப்படி அந்த நபர் மற்ற மனிதர்களுடைய கால்மிதியாகும்படி அழைக்கப்பட்டிருக் கிறார்; அவர் அவர்களுடைய ஆவிக்குரிய தலைவர், ஆனால் ஒருபோதும் அவர்களுக்கு மேலதிகாரியல்ல. எனக்குத் தாழ்ந்திருக்கவும் தெரியுமென்று பவுல் கூறினார். இதுதான் சேவையைக்குறித்தப் பவுலின் கருத்து--என் இறுதிச் சொட்டுவரை என்னையே உங்களுக்காகச் செலவுபண்ணுவேன்; நீங்கள் எனக்குப் புகழ்ச்சி தரலாம், அல்லது என்மீது பழி சுமத்தலாம்; அதைக்குறித்து எனக்கு எந்தக் கவலையுமில்லை; இயேசுகிறிஸ்துவை அறியாத ஒரு மனிதன் இருக்கும்வரை அவன் அவரை அறியுமட்டும் அவனைச் சேவிக்க நான் அவனுக்குக் கடனாளி என்பதே. பவுலுடைய ஊழியத்தின் முக்கிய காரணம் மக்கள்மேலுள்ள அன்பல்ல, கிறிஸ்துவின் மீதுள்ள அன்பே. மனுக்குலத்தைக் காரணமாக்கி நம்மை நாம் அர்ப்ப ணிப்போமானால், நாம் சீக்கிரம் நெருக்கப்பட்டவர்களும், உள்ளம் உடைந் தவர்களுமாவோம்; ஏனெனில், மனிதரிடமிருந்து அதிகம் நன்றிக்கேடே அடிக்கடி நமக்குக் கிடைக்கும்; ஆனால், தேவன்பேரிலுள்ள அன்பே நம்முடைய நோக்கமாயிருக்குமானால், நாம் சகமனிதர்களுக்குச் சேவை செய்வதிலிருந்து எந்த நன்றிக்கேடும் நம்மைத் தடைசெய்யாது.

தன்னோடு இயேசுகிறிஸ்து எவ்வாறு செயல்பட்டார் என்ற பவுலின் உணர்வே பிறரைச் சேவிக்க அவர் தீர்மானித்ததின் இரகசியமாயிருந்தது. முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமைசெய் கிறவனுமாயிருந்தேன்--மக்கள் என்னை எவ்வாறு நடத்தினாலும், நான் இயேசுகிறிஸ்துவை எவ்விதப் பகைமையோடும் விரோதத்தோடும் நடத்தி னேனோ அவ்விதப் பகைமையோடும் விரோதத்தோடும் அவர்கள் என்னை ஒருபோதும் நடத்தமாட்டார்கள் என்று அவர் கூறினார். நம்முடைய இழிவு, சுயநலம் மற்றும் பாவம் என்பவற்றின் இறுதிவரை இயேசுகிறிஸ்து நமக்குச் சேவைசெய்திருக்கிறார் என்று நாம் உணரும்போது, பிறரிடருந்து நாம் அனுபவிக்கிற ஒன்றும் அவர்நிமித்தம் நாம் பிறருக்குச் சேவை செய்யும் தீர்மானத்தைத் தடைசெய்யாது.

தியாகத்தின் மகிழ்ச்சி

மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும் விரும்புகிறேன். 2 கொரி.12:15.

பரிசுத்த ஆவியானவர் தேவஅன்பை நம்முடைய இருதயங்களில் ஊற்றியிருக்கும்போது, பிற மக்களிடம் இயேசுகிறிஸ்துவுக்குள்ள அக்கறையோடு நாமும் ஒன்றித்துவிட மனப்பூர்வமாக ஆரம்பிக்கிறோம்; இயேசுகிறிஸ்துவுக்கு இங்கிருக்கிற ஒவ்வொரு இனமனிதனோடும் கரிசனையுண்டு. கிறிஸ்தவ ஊழியத்தில் நம்முடைய ஆர்வங்களால் வழிநடத்தப்பட நமக்கு உரிமையில்லை; இயேசுகிறிஸ்துவோடுள்ள நமது உறவின் மிகப் பெரிய பரிசோதனைகளில் இது ஒன்றாகும். என் பரலோக நண்பருக்காக என் ஜீவனைக் கொடுப்பதே தியாகத்தின் மகிழ்ச்சி; அதைத் தூர எறிவதல்ல; ஒரு குறிக்கோளுக்காக அல்ல, அவருக்காகவும், அவருக்குப் பிறமனிதர் மீதுள்ள அக்கறைக்காகவும் மனப்பூர்வமாக என் ஜீவனைக் கொடுக்கிறேன். ஒரேயொரு நோக்கத்துக்காகவே பவுல் தன்னைச் செலவிட்டார்--இயேசுகிறிஸ்துவுக்காக மக்களை ஆதாயம்பண்ணுவதே அந்த நோக்கம். பவுல் எக்காலத்திலும் இயேசுவுக்குநேராய்க் கவரப்பட்டார், ஒருபோதும் தனக்கு நேராயல்ல. எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன் என்று அவர் கூறியுள்ளார்.

நான் தேவனோடு தனித்திருந்து என் பரிசுத்த வாழ்க்கையை விருத்திசெய்யவேண்டும் என்று ஒரு நபர் கூறும்போது, அவர் அதற்கப் புறம் தன் அயலாருக்குப் பயனுள்ளவரல்ல; அவர் மனிதருடைய பொதுவான ஒழுக்கிலிருந்து அதிக உயரத்திலுள்ள மேடையில் தன்னை வைக்கிறார். பவுல் புனிதத்துவமான ஆளானார்; அவர் எங்கு சென்றாலும் இயேசுகிறிஸ்து அவருடைய வாழ்க்கைக்கு உதவியாயிருந்தார். நம்மில் அநேகரும் நம்முடைய நோக்கங்களுக்காகவே செயல்படுவதினால் இயேசுகிறிஸ்து நம்முடைய வாழ்க்கைக்கு உதவிசெய்யமுடிவதில்லை. நம்மை நாம் இயேசுவுக்கு முற்றும் அர்ப்பணிப்போமானால் சேவை செய்ய நமக்கென்றுத் தனி நோக்கம் ஒன்றுமிராது. பவுலுடைய வாழ்க்கைக்கு வல்லமையின் ஆதாரம் இயேசுவுக்கான அர்ப்பணமாயிருந்ததால் எந்த வெறுப்புமில்லாமல் கால்மிதியாயிருக்க அவருக்குத் தெரியும் என்று அவர் சொன்னார். இயேசுகிறிஸ்துவுக்கு அல்ல, ஆவிக்குரியநிலையில் நம்மை விடுதலைசெய்கிற காரியங்களுக்கு நம்மை அர்ப்பணிக்க வாய்ப்புண்டு. அதுவல்ல பவுலின் குறிக்கோள்: என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவைவிட்டுச் சபிக்கப்பட்டவனாகவேண்டுமென்று விரும்புவேனே என்று அவர் கூறினார்--இந்தக் கூற்று தான்தோன்றித்தனமானதும், அளவுக்குமிஞ்சியதும்--அப்படித்தானே? காதலிக்கும் ஒரு மனிதன் இவ்வாறு பேசுவது மிகைப்படுத்துவதல்ல; இயேசுகிறிஸ்துவில் பவுல் அவ்வளவு அதிகமாய் அன்புகூர்ந்தார்.

சேவையில் தரித்திரம்

நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்புகூருகிறேனோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்புகூரப்படுகிறேன். 2 கொரி.12:15.

இயல்பான அன்பு கொஞ்சமாவது பிரதிபலனை எதிர்பார்க்கிறது; ஆனால் பவுலோ, நீங்கள் என்னில் அன்புகூர்ந்தாலும் கூராவிட்டாலும் நான் கவலைப்படவில்லை; உங்கள் நிமித்தம் மட்டுமல்ல, உங்களைத் தேவனிடம் சேர்க்கவும் நான் என்னையே முழுவதும் வெறுமையாக்க ஆயத்தம் என்று கூறுகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் தரித்திரரானாரே என்று பவுல் எழுதினார்; துல்லியமாக இதைப்போன்றதே சேவையைக்குறித்த பவுலின் கருத்தும்--நான் எவ்வளவு மட்டுமீறி என்னைச் செலவுசெய்கிறேன் என்பதைக்குறித்து நான் கவலைப் படவில்லை; அதை நான் மகிழ்ச்சியோடு செய்வேன் என்பதே. அது பவுலுக்கு ஆனந்தமான காரியமாயிருந்தது.

தேவனுடைய ஊழியக்காரரைக்குறித்தத் திருச்சபையின் கருத்து இயேசுகிறிஸ்துவின் கருத்தல்ல; பிற மனிதருடைய சேவகராயிருந்து நாம் அவரைச் சேவிக்கிறோம் என்பதே அவருடைய கருத்து. இயேசுகிறிஸ்து பொதுவுடமைவாதிகளை மிஞ்சிய பொதுவுடமைவாதி. அவருடைய அரசில் பெரியவனாயிருப்பவன் எல்லாருக்கும் ஊழிக்காரனாயிருப்பான் என்று அவர் கூறினார். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதல்ல, சீஷர்களுடைய கால் களைக் கழுவுகிறதே பரிசுத்தவானின் மெய்யான பரிசோதனை; அதாவது, மனிதருடைய மதிப்பீட்டில் கணக்காகாவிட்டாலும், தேவனுடைய மதிப்பீட்டில் எல்லாமுமாயிருக்கிற காரியங்களைச் செய்கிறதே. தேவன் பிறரில் காண் பிக்கிற கரிசனைக்காகத் தன்னைச் செலவிடுவதில் பவுல் பிரியப்பட்டார்; அதற்குரிய விலையைக்குறித்து அவர் கவலைப்படவில்லை. பொருளாதா ரத்தைக்குறித்தக் கருத்துக்களோடு நாம் உள்ளே வருகிறோம்--ஒருவேளை அங்கு செல்லுவது தேவனுடைய சித்தமேயானால், சம்பளத்தின் காரியம் என்ன? காலநிலை எவ்வாறிருக்கும்? நான் எவ்வாறு பேணப்படுவேன்? இவைகள் எல்லாம் நாம் ஒதுக்கீட்டோடு தேவனைச் சேவிக்கிறோம் என்ப தற்குரிய அடையாளங்களாகும். அப்போஸ்தலனாகிய பவுலுக்கு எந்த ஒதுக்கீடும் இருந்ததில்லை. புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவானைக்குறித்த இயேசுகிறிஸ்துவின் கருத்தையே பவுல் தன் வாழ்வில் கைக்கொண்டார்; அதாவது, சுவிசேஷத்தை மட்டும் போதிக்கிற ஒருவனல்ல, பிறருடைய வாழ்வுக்காக இயேசுகிறிஸ்துவின் கரங்களில் நொறுக்கப்பட்ட அப்பமாயும் ஊற்றப்பட்ட இரசமாயும் மாறுகிறவனே அந்தப் பரிசுத்தவான்.

இயேசுவைக்குறித்த தாழ்வான சந்தேகங்கள்

ஆண்டவரே மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே. யோவான் 4:11

தேவன் கூறுகிறவைகளின் அற்புதம் என்னை வியப்பிலாழ்த்து கிறது, ஆனால் அவைகளை வாழ்க்கையில் நடைமுறையிலாக்க அவர் என்னை எதிர்பார்க்கமுடியாது என்று நாம் கூறலாம். இயேசுகிறிஸ்துவின் நற்பண்புகளின் அடிப்படையில் அவரைக் கணக்கிடும்போது அவரைவிட பக்தியில் சிறந்தவர்களாக நம்மை நாம் எண்ணுகிறோம். உம் கருத்துக்கள் உன்னதமானவை, அவை என்னை வியப்புறச்செய்கின்றன. ஆனால் நடைமுறையில் செயல்படுத்தமுடியாதவை என்று இயேசுகிறிஸ்துவைக் குறித்து நம்மில் ஒவ்வொருவரும் சில சந்தர்ப்பங்களில் சிந்திக்கிறோம். நாம் தேவனோடு ஈடுபடுவதைக்குறித்துப் பேசும்போது, உங்களுக்குத் தேவையான பணத்தை எங்கிருந்து பெற்றுக்கொள்ளப்போகிறீர்கள்? எவ்வாறு நீங்கள் கவனிக்கப்படப்போகிறீர்கள்? என்கிற கேள்விகள் நம்மிடம் கேட்கப்படுகிறதிலிருந்து, இயேசுவைக்குறித்து மேலே கூறிய சந்தேகங்கள் ஆரம்பிக்கின்றன. அல்லது நம்முடைய காரியம் அவரால் கூடாது என்று இயேசுவிடம் கூறும்போது அவைகள் நம்மிடமிருந்து ஆரம்பிக்கின்றன. ஆண்டவரில் நம்பிக்கைவையுங்கள் என்று சொல்லுவது எல்லாம் நன்றா யிருக்கிறது; ஆனால் மனிதர் வாழவேண்டுமே; மொண்டுகொள்ள இயேசு விடம் ஒன்றுமில்லையே; இவைகளை நமக்குத் தரவும் அவரிடம் ஒன்றுமில் லையே என்று நாம் கூறலாம். இயேசுவைகுறித்து எந்தத் தப்பெண்ணமும் எனக்கு இல்லை, என்னைத்தான் நான் சந்தேகிக்கிறேன் என்கிற உங்க ளுக்குள்ளிருக்கும் ஆவிக்குரிய வஞ்சனையைக்குறித்து ஜாக்கிரதையாயி ருங்கள். நம்மில் எவருக்கும் நம்மைக்குறித்து ஒருபோதும் சந்தேகம் கிடையாது. நம்மால் எவைகளைச் செய்யமுடியாது என்பது நமக்குத் திட்டமாய்த் தெரியும். ஆண்டவரைக்குறித்தே நாம் சந்தேகங்கொள்ளு கிறோம். நம்மால் செய்யக்கூடாததை அவரால் செய்ய இயலும் என்ற கருத்து நம்மைப் புண்படுத்துகிறது.

ஆண்டவரால் அதை எவ்வாறு செய்ய இயலும் என்று என்னைத் துருவி ஆராய்வதினாலே தவறான கருத்து உண்டாகிறது. என் சொந்தத் தாழ்வு மனப்பான்மையின் ஆழத்திலிருந்தே என்னுடைய கேள்விகள் எழும்புகின்றன. என்னிலுள்ள இந்தத் தவறான கருத்துக்களை நான் கண்டுபிடிப்பேனானால், அவைகளை ஒளிக்குக் கொண்டுவந்து, அவை களை அறிக்கையிட்டு, ஆண்டவரே உம்மைச் சந்தேகித்தேன்; என்னுடைய புத்தியைத்தவிர உம்முடைய புத்தியில் நான் நம்பிக்கை வைக்கவில்லை; உம்முடைய சர்வ வல்லமையைக்குறித்த என்னுடைய அளவிற்குட்பட்ட அறிவுதவிர, அதில் நான் நம்பிக்கைவைக்கவில்லை என்று கூறவேண்டும்.

தரித்திரமாக்கப்பட்ட இயேசுவின் ஊழியம்

எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்? யோவான் 4:11

கிணறு ஆழமாயிருந்தது. சமாரியப் பெண் அறியாத ஆழமிது. மனித இயற்கை, மனித வாழ்க்கை போன்ற உங்களிலுள்ள கிணறுகளின் ஆழங்களை ஆராய்ந்துபாருங்கள். இயேசு ஒன்றும் செய்யக்கூடாதபடி அவருடைய ஊழியத்தைத் தரித்திரமாக்கிக்கொண்டிருக்கிறீர்களா? அளக்க முடியாத பிரச்சனையாகிய ஒரு கிணறு உங்களுக்குள்ளிருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இயேசு வந்து, உங்கள் இருதயம் கலங்காதிருப் பதாக என்று கூறுகிறார். அப்போது நீங்கள் உங்கள் தோளைத் துலுக்கி, ஆண்டவரே, கிணறு ஆழமாயிருக்கிறது, அதிலிருந்து அமைதியும் ஆறு தலும் மொண்டுவர உம்மால் கூடாது என்று கூறுகிறோம். அப்படியல்ல, அவர் உன்னதத்திலிருந்து அவைகளைக் கொண்டுவருவார். மனிதத் தன்மையாகிய கிணறுகளிலிருந்து இயேசு ஒன்றும் மேலே கொண்டுவர மாட்டார். கடந்த காலங்களில் அவர் நமக்குச் செய்ய நாம் அனுமதித்த காரியங்களை நாம் நினைவுகூருவதாலும், மெய்யாகவே இக்காரியத்தைச் செய்ய நான் தேவனை எதிர்பார்க்கமுடியாதென்று கூறுவதாலும் இஸ்ர வேலரின் பரிசுத்தரை நாம் மட்டுப்படுத்துகிறோம். அவர் செய்வார் என்று இயேசுவின் சீடர்களாக நாம் விசுவாசிக்கவேண்டிய காரியமே அவருடைய சர்வ வல்லமையைப் பாரப்படுத்துகிற காரியமாகும். அவர் சர்வ வல்லவர் என்பதை மறக்கும் அந்த நொடியில் அவருடைய ஊழியத்தை நாம் குறைவுபடுத்துகிறோம்; தரித்திரம் நம்மிலிருக்கிறதேயொழிய அவரிலில்லை. ஆறுதல்படுத்துகிறவராக அல்லது அனுதபிக்கிறவராக இயேசுவிடம் நாம் வருகிறோமேயொழிய சர்வ வல்லவராக அவரிடம் நாம் வருவதில்லை.

நமக்கு சர்வவல்ல கிறிஸ்து இல்லாத காரணத்தினாலேயே நம்மில் சிலர் கிறிஸ்தவத்தின் தகுதியற்ற மாதிரிகளாயிருக்கிறோம். நம்மிடம் கிறிஸ் தவத் தன்மைகளும் அனுபவங்களும் இருக்கின்றன; ஆனால் இயேசு கிறிஸ்துவுக்கான ஒப்படைப்பில்லை. கடினமான சூழ்நிலைகளில் நாம் அகப்படும்போது, மெய்யாகவே அவரால் ஒன்றுஞ்செய்யமுடியாது என்று கூறி, அவருடைய ஊழியத்தைக் குறைவுபடுத்துகிறோம்; ஆழமான நீரூற்றுக்குள் கஷ்டத்தோடு இறங்கி நாமாகவே தண்ணீர் மொள்ள முயற் சிக்கிறோம். சோர்போடு அமர்ந்து, இதைச் செய்யமுடியாது என்று கூறுவ தால் வரும் திருப்தியைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். இயேசுவை நோக்கிப் பார்த்தால் எல்லாம் கூடும் என்பது உங்களுக்குத் தெரியும். உங்கள் முழுமையடையாமையாகிய கிணறு ஆழமாயிருக்கிறது; ஆனால் அதைப் பார்ப்பதைவிட்டுவிட்டு முயற்சித்து அவரையே நோக்கிப் பாருங்கள்.

இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

இதினாலே . . . விசுவாசிக்கிறோம் . . . இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்கள் என்றார். யோவான் 16:30,31.

இப்பொழுது நாங்கள் விசுவாசிக்கிறோம் என்ற மக்களிடம் இயேசு, நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் என்னைத் தனித்துவிடும் காலம் வருகிறது என்று கூறினார். அநேக கிறிஸ்தவ ஊழியர்கள் இயேசுவைத் தனித்து விட்டுவிட்டு, கடமை உணர்ச்சியாலோ, அல்லது தங்களுடைய சொந்தப் பகுத்தறிவின் அடிப்படையில் எழும்பியுள்ள தேவை உணர்ச்சி யாலோ அவரைச் சேவிக்கச் சென்றிருக்கிறார்கள். இதற்குரிய காரணம் இயேசுவின் உயிர்த்தெழுந்த ஜீவன் இல்லாததே. அந்த ஆத்துமா அதன் சொந்த மார்க்கம்சார்ந்த அறிவாற்றலிலே சாய்ந்ததினால், தேவனோடுள்ள நெருக்கமான தொடர்பைவிட்டு வெளியேறிவிட்டது. அதில் எந்தப் பாவமு மில்லை, அதற்கு எந்தத் தண்டனை குறிக்கப்படவுமில்லை; ஆனால், அந்த ஆத்துமா இயேசுகிறிஸ்துவை அறிவதை எவ்வாறு தான் தடங்கல் செய்தோம் என்பதையும், அதினால் தனக்குத்தானே குழப்பங்களையும் துக்கங்களையும் பாடுகளையும் உண்டாக்கினதையும் உணரும்போது, வெட்கத்தோடும் மனஸ்தாபத்தோடும் அந்த நபர் திரும்பிவரவேண்டும்.

எல்லாக் காரியங்களிலும் நாம் இயேசுவிடம் ஆலோசிக்கும் பழக் கத்திற்குள் வரத்தக்கதாக, அவருடைய உயிர்த்தெழுந்த ஜீவனை இன்னும் அதிக ஆழமான நிலையில் சார்ந்திருப்பது தேவை; அதற்குப்பதில், நமது பகுத்தறிவுக்குரிய பல தீர்மானங்களைச் செய்துவிட்டு, அவற்றை ஆசீர் வதிக்கும்படி தேவனிடம் கேட்கிறோம். அதை அவர் செய்யமுடியாது, அது அவருடைய எல்லைக்குள் இல்லை; அது யதார்த்தத்திலிருந்து துண்டிக்கப்பட்டுவிட்டது. நாம் கடமை உணர்ச்சியினால் ஒரு காரியத்தைச் செய்வோமானால் இயேசுகிறிஸ்துவுக்குப் போட்டியாக ஒரு அளவுகோலை நாம் வைக்கிறோம். நாம் மேலதிகாரிகளாகிறோம், இக்காரியத்தில் இப்போது நான் இதையும் அதையும் செய்யவேண்டும் என்று கூறுகிறோம். இயேசு வின் உயிர்த்தெழுந்த ஜீவனை அரியணையில் அமர்த்துவதற்குப்பதில் நம்முடைய கடமை உணர்ச்சியையே அரியணையில் அமர்த்துகிறோம். மனச்சாட்சியின் ஒளியில் அல்லது கடமை உணர்ச்சியின் ஒளியில் நடக் கும்படி நமக்குக் கூறப்படவில்லை; ஆனால், தேவன் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடக்கவேண்டும் என்றே கூறப்பட்டுள்ளது. கடமை உணர்ச்சியினால் நாம் எதையாவது செய்யும்போது, வாதத்தைக்கொண்டு அதை நியாயப்படுத்தலாம்; ஆனால் ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்து எதை யாவது செய்யும்போது அதற்கு எந்த வாதமும் சாத்தியமில்லை; ஆகையால் தான் பரிசுத்தவான் எளிதாகப் பரிகசிக்கப்படமுடியும்.

ஆண்டவர் உங்களுக்கு என்ன செய்யவேண்டும்?

ஆண்டவரே, நான் பார்வையடையவேண்டும். லூக்கா 18:41.

உங்களைத் தொந்தரவு செய்கிறதுமட்டுமல்லாமல் உங்களைத் தொந்தரவாக்குகிறதுமான காரியம் என்ன? அது எப்போதும் நீங்களாக சமாளிக்கமுடியாத ஏதாவது ஒரு காரியமே. அந்தக் குருடனைப் பேசாமல் இருக்கும்படி மக்கள் அதட்டினார்கள்; அவனோ மிகவும் அதிகமாய்க் கூப்பிட்டான். ஆண்டவரையே நேருக்குநேர் சந்திக்கும்வரைத் தொடர்ந்து தொந்தரவு கொடுப்பதில் விடாப்பிடியாயிருங்கள்; பகுத்தறிவைத் தெய்வ மாக்காதேயுங்கள். நாம் எதிரிடுகிற நம்புவதற்கு அரிதான காரியத்தைப் பொறுத்தமட்டும் அவர் நமக்கு என்ன செய்யவேண்டுமென்றிருக்கிறோம் என்று இயேசு நம்மிடம் கேட்கும்போது, அவர் பகுத்தறிவின் வழிகளில் செயல்படுகிறவரல்ல, இயற்கையைக் கடந்த வழிகளில் செயல்படுகிறவர் என்பதை நினைவுகூரவேண்டும்.

கடந்தகாலத்தில் எவைகளை ஆண்டவர் நமக்காகச் செய்யும்படி அவரை அனுமதித்தோம் என்பதை நினைவுகூர்ந்து, எவ்வாறு நாம் அவரை மட்டுப்படுத்துகிறோம் என்பதைக் கவனியுங்கள்: நான் எப்போதும் அங்கு தோல்வி அடைந்தேன், இன்னும் எப்போதும் தோல்வி அடைவேன் என்று எண்ணுகிறோம்; அதின் பலனாக, இக்காரியத்தைச் செய்யும்படி ஆண்டவரிடம் கேட்பது முட்டாள்தனமானது என்று எண்ணி நம்முடைய தேவைகளுக்காக நாம் கேட்பதில்லை. ஒரு காரியம் அசாத்தியமானால், அக்காரியத்தைத்தான் நாம் கேட்கவேண்டும். அசாத்தியமான காரியம் அல்லவென்றால், அது உண்மையாக ஒரு தொந்தரவு அல்ல. முற்றிலும் கூடாதவைகளையும் தேவன் செய்வார்.

இந்த மனிதன் பார்வையடைந்தான். பழைய வாழ்க்கையில் ஒன்றும் மீந்திராதவாறு நீங்கள் கர்த்தரோடு முழுவதும் ஒன்றித்துவிடுவதே உங்களுக்கு மிகவும் அசாத்தியமான காரியம். நீங்கள் அவரிடம் கேட்டால் அவர் அதைச் செய்வார். ஆனால், அவர் சர்வவல்லவர் என்று விசுவா சிக்கும் இடத்துக்கு நீங்கள் வரவேண்டும். விசுவாசம் இயேசு சொல்லுகிற வைகளிலல்ல, அவரிலேயே வைக்கப்படவேண்டும்; அவர் சொல்லுகிறவை களை மாத்திரம் நாம் ஆராய்ந்துபார்த்தால் நாம் ஒருபோதும் விசுவாசிக்க மாட்டோம். நாம் ஒருமுறை இயேசுவைக் காண்போமானால், சுவாசிப்பது எவ்வளவு இயற்கையோ அவ்வளவு இயற்கையாக அசாத்தியமான காரியத்தை அவர் செய்வார். நம்முடைய சொந்த இருதயத்தின் திட்டமிட்ட மதிகேட்டின்மூலமாகவே நம்முடைய வியாகுலம் உண்டாகிறது. நாம் விசுவாசிக்கமாட்டோம்; படகைக் கரையோடு கட்டியிருக்கிற கயிற்றைத் துண்டிக்கமாட்டோம்; விசாரப்படுகிறதற்கே முன்னுரிமை கொடுக்கிறோம்.

நேரடியான கேள்வி

நீ என்னை நேசிக்கிறாயா? யோவான் 21:17.

பேதுரு இப்போது ஒன்றும் அறிவிக்கவில்லை (மத்.26:33-35). இயற்கைத் தனித்தன்மை அறிக்கைசெய்கிறது, அறிவிக்கிறது; ஆனால், இயேசுகிறிஸ்துவின் கேள்வியினால் ஏற்பட்ட வேதனையினால் மாத்திரமே தனிநபரின் அன்பு கண்டுபிடிக்கப்பட்டது. இயற்கையான எந்த மனிதனும் ஒரு நல்ல மனிதனை நேசிப்பதுபோலப் பேதுருவும் இயேசுவை நேசித்தார். அது இயற்கை மனநிலைக்குரிய அன்பு; அது ஒரு ஆளத்துவத்துக்குள் ஆழமாகச் செல்லலாம், ஆனால் அது அந்த நபரின் மையப்பகுதியைத் தொடாது. உண்மையான அன்பு ஒருபோதும் எதையும் வெளிப்படையாகத் தெரிவிக்காது. என்னை மனுஷர் முன்பாக அறிக்கைபண்ணுகிறவன் எவனோ என்று இயேசு கூறினார்; வார்த்தைகளினால் மாத்திரம் அறிக்கை பண்ணுவது அல்ல, அவனுடைய எல்லாச் செயல்களினாலும் அவருடைய அன்பை அறிக்கையிடவேண்டும்.

நம்மைக்குறித்த ஒவ்வொரு வஞ்சகத்தாலும் நாம் வருந்தினால் தவிர தேவனுடைய வசனம் நம்மில் தன் விருப்பத்தை நிறைவேற்றுவ தில்லை. பாவம் எக்காலத்திலும் புண்படுத்தக்கூடியதைவிட அதிகமாய்த் தேவனுடைய வசனம் புண்படுத்துகிறது; ஏனெனில், பாவம் உணர்ச்சியை மழுங்கச்செய்கிறது. இயேசுவால் புண்படுத்தப்படுவது கருதத்தக்கவைகளில் மிகவும் நேர்த்தியான வேதனையாகிறதுவரை ஆண்டவருடைய கேள்வி உணர்ச்சியை அதிகரிக்கச்செய்கிறது. அது இயற்கையானமுறையில் புண்படுத்துவதுமட்டுமல்லாமல், ஆவிக்குரியமுறையிலும் அது மிகவும் ஆழமாகப் புண்படுத்துகிறது. கர்த்தருடைய வசனம் ஆவியையும் ஆத்து மாவையும் வேறுபிரிக்கக்கூடியவாறு ஊடுருவுகிறது; அங்கு வஞ்சகம் மீந்திருக்கமுடியாது. ஆண்டவரின் கேள்வியினால் எளிதாக உணர்ச்சிவசப் படுவதற்கு எந்த சாத்தியமுமில்லை; ஆண்டவர் உங்களிடம் நேராகப் பேசும்போது, அதினால் ஏற்படும் நோவு பயங்கரமாயிருப்பதால் இனிமை யான காரியங்கள் கூற உங்களால் முடியாது. ஆண்டவருடைய வார்த்தை அவருடைய பிள்ளைகளுக்கு வரும்போது, அது அவர்களைப் புண்படுத்து வதைக் காணாமலிருக்கமுடியாது; ஆனால், அந்தக் காயத்தின் காலம் வெளிப்படுத்தலின் பெரிய வேளையாகும்.

ஆண்டவர் தரும் காயத்தை உணர்ந்திருக்கிறீர்களா?

மூன்றாந்தரம் அவர் அவனை நோக்கி: . . . நீ என்னை நேசிக்கிறாயா என்றார். யோவான் 21:17.

உங்கள் வாழ்க்கையின் உண்மையான உணர்ச்சி தங்கியுள்ள இடத்தில், அதாவது உங்கள் தனித்தன்மையின் மையத்தில் ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்ட காயத்தை உணர்ந்திருக்கிறீர்களா? பிசாசு ஒருபோதும் அங்கு காயப்படுத்துவதில்லை, பாவமோ மனிதப் பாசமோ அங்கு காயப் படுத்துவதில்லை; தேவனுடைய வசனந்தவிர வேறெதுவும் அந்த இடம்வரை சென்றடைவதில்லை. என்னை நேசிக்கிறாயா என்று இயேசு மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே பேதுரு துக்கப்பட்டார். தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையின் உண்மையான மையத்தில் இயேசுவுக்குநேராய் பக்தியுள்ள வராயிருந்தார் என்ற உண்மைக்கு அவர் விழிப்பூட்டப்பட்டார்; எனவே, பொறுமையாய்க் கேள்வி கேட்டதின் கருத்து என்ன என்பதை அவர் காண ஆரம்பித்தார். பேதுருவின் மனதில் துரும்பளவு ஏமாற்றமும் விட்டு வைக்கப்படவில்லை; அவர் மறுபடியும் ஒருபோதும் ஏமாற்றப்படமுடியாது. அங்கு உணர்ச்சிவசப்பட்டக் கூற்றுக்கு எந்த இடமுமில்லை, மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் எந்த இடமுமில்லை. அவர் எவ்வளவதிகம் ஆண்டவரை நேசித்தார் என்று உணர அது அவருக்கு வெளிப்படுத்தலாயிருந்தது; எனவே, பிரமிப்புடன் அவர், ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந் திருக்கிறீர் என்று கூறினார். அவர் இயேசுவை எவ்வளவதிகமாய் நேசித்தார் என்பதைப் பேதுரு காண ஆரம்பித்தார்; அதை உறுதிப்படுத்துவதற்கு, அதைப்பார் இதைப்பார் என்று அவர் கூறவில்லை. இயேசுகிறிஸ்துவைத் தவிர மேலே வானத்திலோ அல்லது கீழே பூமியிலோ வேறு யாருமில்லை என்னுமளவுக்கு அவர் அவ்வளவு அதிகமாய் ஆண்டவரை நேசித்தார் என்பதைத் தானாகக் கண்டுபிடிக்கப் பேதுரு ஆரம்பித்தார்; ஆனால், ஊடுருவியதும் காயப்படுத்தியதுமான ஆண்டவரின் கேள்விகள் வரும்வரை அவர் அதை அறியவில்லை. ஆண்டவருடைய கேள்விகள் எப்போதும் என்னை எனக்கு வெளிப்படுத்துகிறது.

பேதுருவோடு இயேசுகிறிஸ்து பொறுமையாகவும் நேரடியாகவும் செயல்பட்ட திறமைதான் என்னே! சரியான தருணம்வரையிலும் நமது ஆண்டவர் ஒருபோதும் கேள்விகள் கேட்பதில்லை. அரிதாக, ஆனால் பெரும்பாலும் ஒருமுறை, அவருடைய நேரடியான கேள்விகளினால் அவர் நம்மைப் காயப்படுத்துகிறதான கடினமான சூழ்நிலைக்கு ஆண்டவர் கொண்டுவருகிறார்; அப்போதுதான் எந்த அறிக்கையும் எப்போதும் வெளிப் படுத்தக்கூடியதைவிட மிகவும் அதிக ஆழமாக நாம் அவரை நேசிக்கிறோம் என்பதைக் கண்டுகொள்ளுவோம்.

விடுவிக்கப்படாத தேடுதல்

என் ஆடுகளை மேய்ப்பாயாக. யோவான் 21:17.

இது விருத்தியாகிக்கொண்டிருக்கும் அன்பு. தேவனுடைய அன்பு படைக்கப்பட்டதல்ல, அது தேவனுடைய தன்மை. நாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்போது, தேவனுடைய அன்பு நம்மில் வெளிப்படுத்தப் படுவதற்காக அவர் நம்மைத் தேவனோடு இணைக்கிறார். ஒரு ஆத்துமா வுக்குள் வாசஞ்செய்யும் பரிசுத்த ஆவியானவரால் அந்த ஆத்துமா தேவனோடு ஒன்றுபடுவது அதன் முடிவல்ல; இயேசு பிதாவோடு ஒன்றாயி ருந்ததுபோல, நாமும் பிதாவோடு ஒன்றாயிருப்பதே குறிக்கோள். எத்தகைய ஒருமைப்பாடு இயேசுகிறிஸ்து பிதாவோடு கொண்டிருந்தார்? நமக்காகச் செலவிடப்படும்படிப் பிதா குமாரனை இந்த உலகத்துக்கு அனுப்புமளவு அவர்களுக்குள்ளே ஒருமைப்பாடு இருந்தது; ஆகவே, பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்றார் இயேசு.

ஆண்டவருடைய காயப்படுத்தின கேள்வியின் வெளிப்பாட்டினால், தான் அவரை நேசிப்பதாக பேதுரு இப்போது உணர்ந்தார்; அதன்பின் வருகிறது அடுத்த குறிப்பு--உன்னை ஊற்றிவிடு. என்னை எவ்வளவாய் நேசிக்கிறாய் என்று நீ சாட்சி கூறாதே; நீ பெற்றுக்கொண்ட அதிசயமான வெளிப்படுத்தலைக்குறித்துத் தம்பட்டம் அடிக்காதே--ஆனால், நீ என் ஆடுகளை மேய்ப்பாயாக. அசாதாரணமாக வேடிக்கைக்குரிய கொஞ்சம் ஆடுகள் இயேசுவுக்கு உண்டு; அவைகளில் சில சகதியினால் அழுக்கும், அசுத்தமுமான ஆடுகள்; சில நிந்தைக்குரிய விகாரமான ஆடுகள்; சில ஆடுகள் வழிதவறிப்போனவை! தேவ அன்பைச் சலிப்படையச்செய்வது சாத்தியமானதல்ல; என்னிலிருக்கும் அன்பு அதே ஆதாரத்திலிருந்து எழும்புமேயானால், அதைச் சலிப்படையச்செய்வதும் சாத்தியமானதல்ல. இயற்கைத் தனித்துவத்தினால் ஏற்பட்ட வேறுபாடுகளுக்குத் தேவனுடைய அன்பு ஒரு கவனமுஞ்செலுத்துவதில்லை. நான் என் ஆண்டவரை நேசிப் பேனேயானால் இயற்கையான உணர்ச்சிகளால் நான் வழிநடத்தப்படக் கூடாது; நான் அவருடைய ஆடுகளை மேய்க்கவேண்டும். இந்தக் கட்டளை யிலிருந்து எந்த விடுபாடோ விடுதலையோ இல்லை. இயல்பான மனித அனுதாபத்தின்வழியில் செயல்பட்டு தேவனுடைய அன்புக்குப் போலியாகச் செயல்படுவதைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும்; ஏனெனில், அது தேவனுடைய அன்பைத் தூஷிப்பதில் முடிவடையும்.

இது என்னைக்குறித்து உண்மையாயிருக்கமுடியுமா?

ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன். அப்.20:24.

தரிசனம் இல்லாமல் தேவனைச் சேவிப்பது மிகவும் சுலபமானது, அழைப்பு இல்லாமல் அவருக்காக உழைப்பதும் கூடுதல் சுலபமானது; ஏனெனில், அப்போது தேவன் என்ன தேவைப்படுகிறாரென்று கவலைப் படமாட்டீர்கள்; கிறிஸ்தவத்தின் உருக்கத்தால் மேற்பூச்சுமானம் செய்யப்பட்ட வழிகாட்டியே உங்கள் பகுத்தறிவு. நீங்கள் தேவனுடைய அழைப்பை ஒருபோதும் உணரவில்லையென்றால், கூடுதல் செழிப்பும் வெற்றியும் உடையவர்களாய், அதிக ஓய்வெடுக்கும் மனநிலையில் இருப்பீர்கள். ஆனால், ஒருமுறை இயேசுகிறிஸ்துவிடமிருந்து கட்டளையைப் பெற்றால், தேவன் என்ன விரும்புகிறாரென்பதின் நினைவு எப்போதும் தாற்றுக் கோலைப்போலச் செயல்படும்; அதன்பின் பகுத்தறிவின் அடிப்படையில் அவருக்காகச் செயல்பட ஒருபோதும் உங்களால் முடியாது.

நான் மெய்யாக எனக்கு அருமையாக எண்ணுகிறது என்ன? நான் இயேசுகிறிஸ்துவினால் இறுகப்பிடிக்கப்பட்டிருக்கவில்லையென்றால், நான் சேவையை அருமையாக எண்ணுவேன், தேவனுக்குக் கொடுக்கும் காலத்தை அருமையாக எண்ணுவேன், என்னுடைய பிராணனை எனக்கு அருமையாக எண்ணுவேன். தான் பெற்ற ஊழியத்தை நிறைவேற்ற மாத்திரம் பவுல் தன்னுடைய பிராணனை அருமையாக எண்ணினதாக அவர் கூறினார்; தன்னுடைய சக்தியை வேறு எந்தக் காரியத்திற்கும் பயன்படுத்த அவர் மறுத்தார். தன்னைக்குறித்துச் சிந்திக்கக் கேட்டுக்கொள் ளப்பட்டபோது, பவுல் பண்போடு எரிச்சல்கொண்டதையே அப்போஸ்தலர் 20:24 கூறுகிறது; அவர் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றுவதைத்தவிர வேறெந்த நோக்கத்துக்கும் அவர் முற்றும் அலட்சியமானவராயிருந்தார். நடைமுறைச் செயல்பாடு தேவனுக்குரிய அர்ப்பணத்துக்கு எதிரான போட்டி யாகலாம்; ஏனெனில், நடைமுறைச் செயல்பாடு இந்த வாதத்தையே அடிப்படையாகக்கொண்டது--நீங்கள் இங்கு எவ்வளவு பயனுள்ளவர்கள் என்பதை நினைத்துக்கொள்ளுங்கள், அல்லது--அந்தக் குறிப்பிட்டவகை ஊழியத்தில் நீங்கள் எவ்வளவு பயனுள்ளவர்களாய் இருப்பீர்கள் என்பதை எண்ணிப்பாருங்கள். அந்த மனப்பான்மை நாம் எங்கு செல்லவேண்டும் என்பதற்கு இயேசுகிறிஸ்துவை வழிகாட்டியாய் வைக்காமல், நாம் எங்கு அதிகப் பயனுள்ளவர்களாயிருப்போம் என்கிற நம்முடைய தீர்ப்பையே வழிகாட்டியாய் வைக்கிறது. நீங்கள் பயனுள்ளவர்களா என்று ஒருபோதும் சிந்தியாதேயுங்கள்; நீங்கள் உங்களுடையவர்களல்ல, அவருடையவர்கள் என்பதை எப்போதும் சிந்தித்துக்கொள்ளுங்கள்.

அவர் உண்மையாகவே கர்த்தர்தானா?

என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், . . . நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன். அப்.20:24.

ஒரு காரியத்தை வெற்றிகரமாகச் செய்வதல்ல, நான் எதற்காகப் படைக்கப்பட்டு மறுபடியும் பிறப்பிக்கப்பட்டேனோ அதன் பூரண நிறைவேறுதலே மகிழ்ச்சியின் பொருள். எதைச் செய்யும்படி பிதா நமது ஆண்டவரை அனுப்பினாரோ அதைச் செய்ததிலே அவருடைய மகிழ்ச்சியிருந்தது; பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று அவர் சொன்னார். நான் ஆண்டவரிடத்திலிருந்து ஊழியத்தைப் பெற்றிருக்கிறேனா? அப்படியானால், அந்த ஊழியத்தை நிறைவேற்றுவதற்குமட்டும் என் பிராணனை அருமையாக எண்ணுமளவு அந்த ஊழியத்துக்கு நான் உண்மையுள்ளவனாயிருக்கவேண்டும். நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே என்று இயேசு சொல்லுகிறதைக் கேட்பதும், எதைச் செய்வதற்காக அவர் உங்களை அனுப்பினாரோ அதை நீங்கள் செய்திருக்கிறீர்கள் என்பதை அறிவதும் கொண்டுவரும் மன நிறைவை எண்ணிப்பாருங்கள்! வாழ்க்கையில் நம் யாவருக்கும் தகுதியான பணியைக் கண்டுகொள்ளவேண்டும்; ஆவிக்குரியநிலையில், ஆண்டவரிடமிருந்து நம்முடைய ஊழியத்தை நாம் பெற்றுக்கொள்ளும்போது அதைக் கண்டுகொள்ளுகிறோம். இதைச் செய்வதற்கு நாம் இயேசுவோடு நெருங்கிய தோழமைகொள்ளவேண்டும்; சொந்த இரட்சகர் என்பதைவிட அவரைக் கூடுதல் அறியவேண்டும். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்று பவுலைக்குறித்துச் சொல்லப்பட்டது.

நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? அப்படியானால், என் ஆடுகளை மேய்ப்பாயாக. சேவையைத் தெரிந்துகொள்ளமுடியாது, நமது ஆண்டவருடைய கட்டளைக்குமட்டும் பூரண விசுவாசம் காட்டவேண்டும்; தேவனோடு நீங்கள் நெருங்கிய தொடர்பில் இருக்கும்போது, நீங்கள் பகுத்தறிந்ததற்கு உண்மையாயிருக்கவேண்டும். நீங்கள் கர்த்தராகிய இயேசுவிடமிருந்து ஒரு ஊழியத்தைப் பெற்றிருப்பீர்களானால், ஒருபோதும் அழைப்பல்ல தேவை என்பதை நீங்கள் அறிவீர்கள்; தேவை சந்தர்ப்பமே. நீங்கள் அவரோடு உண்மையான தொடர்பிலிருந்தபோது நீங்கள் பெற்றுக்கொண்ட ஊழியத்திற்கு உண்மையாய் இருப்பதே அழைப்பு. வெவ்வேறு விதமான தொடர் ஊழியங்கள் உங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கிறதென்று இதனால் குறிப்பாகாது; வேறு வகைகளான சேவைக்கான கோரிக்கைகளை நீங்கள் புறக்கணிக்கவேண்டுமென்றே இதனால் கருத்தாகிறது.

அற்பமான பொருட்களின் கூட்டத்தினிடையில்

மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும். 2 கொரி.6:4.

தரிசனமும் பார்வையாளரும் இல்லாதபோது அடுத்த காலடி எடுத்து வைக்க சர்வவல்லவருடைய கிருபை தேவை--வேதவசனத்தைத் தியானிப் பதில் அடுத்த காலடி, நீங்கள் கற்பதில் அடுத்த காலடி, நீங்கள் வாசிப்பதில் அடுத்த காலடி, உங்கள் சமையலறைப்பணியிலும் அடுத்த காலடி; தேவனி டமிருந்து தரிசனமும், ஆர்வமும், பார்வையாளரும் இல்லாதபோது உங்க ளுடைய கடமையில் அடுத்த காலடியெடுத்துவைக்கவும் சர்வவல்லவருடைய கிருபை தேவை. சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதைவிட அந்தக் காலடி எடுத்து வைப்பதற்கு தேவனுடைய அளவுகடந்த கிருபை தேவை; அதை அவரிட மிருந்து மனப்பூர்வமாக மொண்டுகொள்ளுவதும் தேவை.

இயேசுகிறிஸ்து மனுவுரு எடுத்ததின் சாராம்சம் எதுவோ அதில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் பங்கெடுக்கவேண்டும்; அக்காரியத்தை அவன் மனுக்குலத்தின் யதார்த்த நிலைக்குள் கொண்டுவந்து, கரங்களினால் செயல்படுத்தவேண்டும். தரிசனமோ முன்னேற்றமோ இல்லாமல், வெறும் வழக்கமானச் சுற்றுக்களும் அற்பமான பணிகளும் இருக்கும்போது நாம் சோர்பும் பலவீனமும் அடைகிறோம். மறைவிடத்தில் நிதானமாகவும் விடா முயற்சியோடும் உழைப்பதுவே தேவனுக்கும் மனிதருக்கும் முடிவாகப் பயனுள்ள காரியமாகும்; வாழ்க்கை நொறுக்கப்படாமல் காப்பதற்குரிய ஒரே வழி தேவனை நோக்கினவர்களாய் வாழுவதே. உங்கள் ஆவிக்குரிய கண்கள் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்குநேராகத் திறந்துவைக்க தேவனை வேண்டிக்கொள்ளுங்கள்; அப்போது இழிவான தொழில் உங்களை ஊக்க மற்றவர்களாக்குவது சாத்தியமல்ல. முக்கியமற்றதும் பயனற்றதுமான சிந்த னையிலிருந்து தொடர்பாக விலகிச்சென்று, யோவான் சுவிசேஷம் 13-ம் அதிகாரத்தை (இயேசு சீஷர்களின் கால்களைக் கழுவினதை) ஆராய்ச்சி செய்யுங்கள்.

அதைரியமடையாத பிரகாசம்

இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. ரோமர் 8:37.

பரிசுத்தவானைத் தேவனுடைய அன்பிலிருந்து பிரித்துவைக்கிறது போலவோ அல்லது அவர்களுக்கிடையில் வருகிறதுபோலவோ பெரும்பாலும் தோன்றக்கூடியக் காரியங்களைக்குறித்துப் பவுல் கூறுகிறார்; ஆனால், சிறப்பான காரியம் என்னவென்றால், பரிசுத்தவானுக்கும் தேவனுடைய அன்புக்குமிடையே ஒன்றும் வரமுடியாது. இக்காரியங்கள் ஆத்துமாவின் தியானத்துக்கான பயிற்சிக்கும் தேவனுக்குமிடையே வரக்கூடும், வரவும் செய்கிறது; தனிப்பட்ட வாழ்க்கையைத் தேவனைவிட்டுப் பிரிக்கலாம்; ஆனால், அவைகளில் ஒன்றும் தேவனுடைய அன்புக்கும் பரிசுத்தவான் களுடைய ஆத்துமாவுக்குமிடையே குறுக்கிடமுடியாது. நமது கிறிஸ்தவ விசுவாசத்தின் வலுவான அடித்தளம் கல்வாரிச் சிலுவையில் வெளிப்படுத் தப்பட்ட நமது தகுதிக்கு மிஞ்சியதும் அளக்கமுடியாததுமான தேவனுடைய அன்பின் அதிசயமே; அந்த அன்புக்கு நாம் ஒருபோதும் தகுதியானவர்க ளாகமுடியாது, தகுதியாகமாட்டோம். அக்காரணத்தால், நம்மை மேற்கொள் ளப்போகின்றன என்று தோன்றுகிற அதே காரியங்கள் இல்லாதிருந்தால் நாம் அடைந்திருக்கமுடியாத மகிழ்ச்சியோடு இவையெல்லாவற்றிலேயும் நாம் முற்றும் ஜெயங்கொள்ளுகிறோம் என்று பவுல் கூறுகிறார்.

சாதாரண நீச்சல்காரனை அச்சுறுத்துகிற பொங்கிவரும் அலைகள் திறமையான நீச்சல் வீரனுக்கு, அவைகளின்வழியாக எளிதாகப் புகுந்து சென்ற, அதிஉன்னத மகிழ்ச்சியை அளிக்கின்றன. அதை நம் சூழலுக்கு ஒப்பிடுவோம்; இன்னல்கள், பாடுகள், மற்றும் கொடுமைகள்--பொங்கிவரும் அலைகள்போன்ற--இதே காரியங்கள் நம்மில் அளவுகடந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றன; அவைகள் போரிடுவதற்குரிய காரியங்கள் அல்ல. இவையெல்லாவற்றிலேயும், இவைகள் இருந்தபோதிலுமல்ல, இவைகளின் மத்தியில் நாம் அவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாகிறோம். ஒரு பரிசுத்தவான் உபத்திரவம் இருந்தாலுமல்ல, உபத்திரவத்தினால் கர்த்தருக்குள் மகிழ்ச்சியை அறிகிறான். எங்களுக்கு உண்டான சகல உபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன் என்றார் பவுல்.

அதைரியமடையாத பிரகாசம் நிலையற்ற எக்காரியத்திலும் கட்டப் படாமல், ஒன்றும் மாற்றஞ்செய்யக்கூடாத தேவஅன்பிலேயே கட்டப்பட் டுள்ளது. வாழ்க்கையின் அனுபவங்கள், அவைகள் பயங்கரமானவைகளோ சலிப்பூட்டுகிறவைகளோ, எவையானாலும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிலுள்ள தேவனுடைய அன்பைத் தொட வல்லமையற்றவை.

ஒப்படைக்கப்பட்ட வாழ்க்கை

கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன். கலாத்.2:20.

பாவத்தை மட்டுமல்ல, காரியங்களைக்குறித்தத் தன்னுடைய எல்லாக் கண்ணோட்டங்களையும் விட்டுவிட ஆயத்தமாகும்வரை ஒருவரும் இயேசுகிறிஸ்துவோடு எக்காலத்திலும் ஐக்கியப்படுத்தப்படமுடியாது. பரிசுத்த ஆவியானவரால் உன்னதத்திலிருந்து பிறக்கிறது என்றால், ஏதாவது ஒன்றைப் பற்றிக்கொள்ளுமுன் சிலவற்றைக் கைவிடவேண்டும்; முதல் நிலைகளில் கைவிடப்படவேண்டியது எல்லாப் பாசாங்குகளுமே. நன்மை, உண்மை மற்றும் முயற்சி என்பவற்றையல்ல, இயல்பான கடினப் பாவத்தையே அவரிடம் கையளிக்கவேண்டுமென்று நம்முடைய கர்த்தர் விரும்புகிறார்; அதை மாத்திரமே நம்மிடமிருந்து அவரால் எடுத்துப்போட முடியும். நம்முடைய பாவத்திற்குப்பதில் அவர் என்ன கொடுக்கிறார்? உண்மையும் உறுதியுமான நீதியே! ஆனால், நாம் முக்கியமானவர்கள் என்கிற எல்லாப் பாசாங்கையும், தேவன் நம்மைக் கவனிக்க நாம் தகுதியுள்ளவர்களென்ற எல்லாக் கோரிக்கைகளையும் விட்டுவிடவேண்டும்.

அதற்குப்பின், விட்டுவிடப்படவேண்டியவைகள் இன்னும் எவைகள் இருக்கின்றன என்று தேவனுடைய ஆவியானவர் நமக்குக் காண்பிப்பார். எல்லாக் கட்டங்களிலும் என்மேலுள்ள என்னுடைய உரிமைக்கான கோரிக்கையை விட்டுவிடவேண்டியது வரலாம். என்னுடைய உடைமைகளெல்லாவற்றின்மேலுள்ள என் பற்று, என்னுடைய பாசங்கள்மேலும் மற்றும் அனைத்தின்மேலுமுள்ள என் பற்று என்பவற்றை நான் கைவிட்டு, இயேசு கிறிஸ்துவின் மரணத்தோடு ஐக்கியப்பட நான் ஆயத்தந்தானா?

நம்முடைய துறத்தலுக்குமுன் நாம் கடந்துசெல்லவேண்டிய ஒரு கடுமையான வேதனையுள்ள ஏமாற்றத்தின் உணர்விலிருந்து விடுபடும் அனுபவம் எப்போதும் உண்டு. ஆண்டவர் தன்னைக் காண்கிறதுபோல ஒரு மனிதன் தன்னை உண்மையாகவே காணும்போது, அவனை அதிர்ச்சிக்குள்ளாக்குவது மாம்சத்தின் அருவருப்புக்குரிய பாவங்களல்ல, இயேசு கிறிஸ்துவுக்கு எதிரான அவனுடைய இருதயத்திலுள்ள பெருமையின் பயங்கரத் தன்மையே. ஆண்டவருடைய வெளிச்சத்தில் அவன் தன்னைக் காணும்போது அவமானமும், திகிலும், மனக்கசப்பான பாவ உணர்ச்சியும் வெளிப்படுகிறது.

ஒப்படைத்தலைக்குறித்தக் கேள்வியை எதிர்கொள்ளுவீர்களானால், நெருக்கடியின் வழியாகக் கடந்து செல்லுங்கள், எல்லாவற்றையும் துறந்து விடுங்கள்; அப்போது தேவன் உங்களிடத்தில் எதிர்பார்க்கிற எல்லாவற்றுக்கும் உங்களைத் தகுதி ஆக்குவார்.

மறுதலிப்பின் காலம்

நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ? யோவான் 6:67.

ஊடுருவும் கேள்வி இது. ஆண்டவர் மிகவும் எளிய முறையில் பேசும்போது அவருடைய வார்த்தைகள் நமக்குக் கூடுதல் தெளிவாகின்றன. இயேசு யாரென்பது நமக்குத் தெரியும்; இருந்தபோதிலும் அவர், நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ? என்று கேட்கிறார். எக்காலத்தும் நாம் இயேசுவுக்குநேராகத் துணிச்சலான மனப்பான்மையைக் காக்கவேண்டும்.

அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள் என்று வாசிக்கிறோம். அவர்கள் இயேசுவோடுகூட நடப்பதிலிருந்து பின்வாங்கிப்போனார்கள்; பாவத்திற்குள் அல்ல, ஆனால் பழைய் வாழ்க்கைக்குச் சென்றார்கள். இன்றும் அநேகர் இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்வதில் செலவுபண்ணவும், செலவுபண்ணப்படவுஞ்செய்கிறார்கள், ஆனால் அவர்கள் அவரோடு நடக்கவில்லை. நாம் இயேசுகிறிஸ்துவோடு ஒன்றாயிருக்கவேண்டுமென்கிற ஒரே காரியத்துக்காக நம்மைத் தேவன் உறுதியாய் வைத்திருக்கிறார். பரிசுத்தமாக்கப்பட்டபின் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் கட்டுப்பாடு இந்நிலையிலேயே இருக்கிறது. தேவன் என்ன தேவைப்படுகிறார் என்னும் உணர்வைத் தெளிவாகவும் அழுத்தமாகவும் உங்களுடைய ஆத்துமாவுக்கு அவர் தருவாரானால், வேறு எந்தக் குறிப்பிட்ட ஒழுங்கிலும் அந்த உறவில் உங்களைக் காத்துக்கொள்ள முயற்சிசெய்யாதீர்கள், இயேசுகிறிஸ்துவில் முற்றிலும் சாருகிற இயல்பான வாழ்க்கை வாழ்ந்துகொள்ளுங்கள். தேவனோடுள்ள வாழ்க்கையை அவருடைய வழிதவிர வேறு எந்த வழியிலும் வாழுவதற்கு முயற்சிசெய்யாதீர்கள்; அந்த வழி அவருக்குநேரான பூரண பக்தியே. எனக்குத் தெரியாது என்பதை நான் அறிந்திருக்கிறேன் என்ற நிச்சயம்--அதுதான் இயேசுவோடு வாழும் வாழ்க்கையின் இரகசியமாகும்.

தனக்கும் உலகத்துக்கும் இரட்சிப்பு அளிக்கிற ஒருவராகவே பேதுரு இயேசுவைக் கண்டார். அவரோடு நாமும் உடன்ஊழியர்களாய் இருக்கவேண்டுமென்றே நமது ஆண்டவர் விரும்புகிறார்.

வச.70. பேதுருவின் அழைப்பை இயேசு அவருக்கு நினைவுபடுத்தினார். நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ? என்ற கேள்விக்கு பிறருக்காக நாம் பதில்கூறமுடியாது.

செய்தியுடையவர்களாயும் செய்தியாயும் இருங்கள்

திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு. 2 தீமோ.4:2.

நாம் வாய்க்கால்களாக மாத்திரம் இருக்க அல்ல, தேவனுடைய புத்திரரும் புத்திரிகளுமாயிருக்க இரட்சிக்கப்பட்டோம். நாம் ஆவிக்குரிய ஊடகங்களாக அல்ல, ஆவிக்குரிய செய்தியாளர்களாக மாற்றப்பட்டோம்; செய்தி நம்மிலேயே ஒரு பாகமாயிருக்கவேண்டும். தேவனுடைய குமாரன் அவருடைய சொந்தச் செய்தியாகவேயிருந்தார், அவருடைய வார்த்தைகள் ஆவியாயும் ஜீவனாயுமிருந்தன; அவருடைய சீஷர்கள் என்கிற நிலையில் நம்முடைய வாழ்க்கை நம் செய்தியின் தூயச் சான்றாயிருக்கவேண்டும். ஜென்ம சுபாவமான இருதயம் எந்த அளவு சேவையும் செய்யக்கூடும்; ஆனால், ஒரு வாழ்க்கை அதன் செய்தியின் தூயச் சான்றாய் மாறுமுன், பாவஉணர்வால் உடைந்ததும், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றதும், தேவனுடைய நோக்கத்துக்குள் நொறுக்கப்பட்டதுமான ஒரு இருதயம் தேவை.

சாட்சிகொடுப்பதற்கும், பிரசங்கிப்பதற்குமிடையே வேற்றுமையுண்டு. தேவஅழைப்பை உணர்ந்தவரும், தேவனுடைய சத்தியத்தை அறிவிக்கத் தன்னுடைய சகல வல்லமையையும் பயன்படுத்தத் தீர்மானித்துள்ளவருமே பிரசங்கியாவார். நம்மைத் தேவன் நம்முடைய வாழ்க்கைக்கான சொந்தக் கருத்துக்களிலிருந்து வெளியே எடுத்து, பெந்தெகொஸ்தே நாளுக்குப்பின் சீஷர்களுக்குச் செய்ததுபோலவே, நம்மையும் உருவாக்கி உபயோகிக்க நொறுக்குகிறார். பெந்தெகொஸ்தே அனுபவம் சீஷர்களுக்கு எதையும் கற்றுக்கொடுக்கவில்லை; அது அவர்கள் போதித்ததின் அவதாரமாகவே அவர்களை ஆக்கிற்று--நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.

நீங்கள் பேசும்போது தேவன் பரிபூரண சுயாதீனம் எடுக்கட்டும். தேவனுடைய செய்தி பிறருடைய ஆத்துமாக்களை விடுதலைசெய்யுமுன், அந்த விடுதலை உங்களில் செயல்படவேண்டும். உங்கள் கருத்துக்களைச் சேகரியுங்கள்; நீங்கள் பேசும்போது அவைகளை எரிந்து பிரகாசிக்கச் செய்யுங்கள்.

தரிசனம்

நான் அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை.
அப்.26:19.

நாம் தரிசனத்தை இழப்போமானால் நாம் மாத்திரமே அதற்குப் பொறுப்பு; ஆவிக்குரிய ஒழுக்கே நாம் தரிசனத்தை இழக்கும் வழியாகும். தேவனைக்குறித்த நமது நம்பிக்கையை நடைமுறைப் பிரச்சனைகளில் நாம் பயன்படுத்தாவிட்டால், அது தேவன் நமக்குத் தந்துள்ள தரிசனத்தின் முடிவாயிருக்கும். பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியும் ஒரே வழி, அவருடைய மேன்மைக்கு நம்முடைய முழுமையையும் அர்ப்பணிப்பதே; தரிசனத்தைத் தொடர்பாகவும் தீர்மானத்தோடும் நினைவுகூருவதினால்மாத்திரமே இது செய்யப்படமுடியும். நமது ஜெபவேளைகளிலும், தியானக்கூட்டங்களிலும் மாத்திரம் அல்ல, ஒவ்வொரு நிமிடத்தின் அறுபது வினாடியும், ஒவ்வொரு மணிநேரத்தின் அறுபது நிமிடமும் பரிசோதனைக்குரியதாகும்.

அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு. நாம் ஒரு தரிசனத்தை நிறைவேற்றமுடியாது; அது தானாக நிறைவேறுமட்டும் அதைக்குறித்த சிந்தனையிலேயே வாழவேண்டும். நாம் நடைமுறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் தரிசனத்தை மறந்துபோகிறோம். ஆரம்பத்தில் நாம் தரிசனம் கண்டோம்; ஆனால் அதற்காகக் காத்திருக்கவில்லை; நடைமுறைச் செயலுக்குள் நாம் விரைந்து சென்றோம்; தரிசனம் நிறைவேறியபோதோ அதை நாம் காணவில்லை. தாமதிக்கிற தரிசனத்துக்காகக் காத்திருப்பது தான் தேவனுக்குநேரான நமது பக்தியின் சோதனை. நாம் நடைமுறைச் செயலில் அகப்பட்டு, தரிசனத்தின் நிறைவேறுதலைத் தவறவிடும்போது, நமது ஆத்துமாக்களின் நலம் ஆபத்துக்குள்ளாகிறது.

தேவனுடைய புயல்காற்றுகளைக் கவனித்திருங்கள். தம்முடைய பக்தர்களைத் தேவன் விதைக்கிற ஒரே வழி அவருடைய சுழற்காற்றுகளே. நீங்கள் விதையற்ற தோடாய் நிரூபிக்கப்போகிறீர்களா? நீங்கள் கண்டவை களின் வெளிச்சத்தில் உண்மையாகவே வாழுகிறீர்களா அல்லவா என்பதை அது சார்ந்திருக்கும். தேவன் உங்களை வெளியே அனுப்பிவிடட்டும்; அவர் அவ்வாறு செய்யும்வரை நீங்கள் எங்கும் செல்லாதீர்கள். நீங்களாக உங்களுக்கென்று ஒரு இடத்தைத் தெரிந்துகொள்ளுவீர்களானால், நீங்கள் வெறும் பயனற்ற தோடு என்று நிரூபிப்பீர்கள். ஆனால், தேவன் உங்களை விதைத்தால் நீங்கள் அதிகப் பலன் கொடுப்பீர்கள்.

தரிசனத்தின் வெளிச்சத்தில் பாதங்களின் நடையைப் பயிற்சிப்பது இன்றியமையாததாகும்.

முற்றிலும் துறத்தல்

அப்பொழுது பேதுரு அவரை நோக்கி: இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே, என்று சொல்லத்தொடங்கினான். மாற்கு 10:28.

துறத்தல் தமக்காகவே என்றும், அதிலிருந்து சீஷர்கள் பெற்றுக் கொள்ளும் எதற்காகவுமல்ல என்பதே நமது ஆண்டவர் அளித்த பதிலின் கருத்தாகிறது. நான் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படவேண்டும், பரிசுத்தமாக்கப்படவேண்டும் என்பதற்காக நான் என்னைத் தேவனிடத்தில் ஒப்படைக்கப்போகிறேன் என்பதுபோன்ற வணிக நோக்குள்ள துறத்தலைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும். அவைகளெல்லாம் தேவனோடு ஒப்புரவாகியிருப்பதின் விளைவு; ஆனால், அந்த ஆவி கிறிஸ்தவத்தின் அடிப்படையான தன்மையிலிருந்து வந்தது அல்ல. துறத்தல் எதற்காகவும் அல்லவேயல்ல. நாம் வணிக நோக்குள்ளவர்களாக்கப்பட்டிருப்பதால், நாம் அவருக்காக மாத்திரம் தேவனிடத்தில் செல்லாதபடி, அவரிடமிருந்து எதையாவது அடையவேண்டும் என்பதற்காகவே செல்லுகிறோம். அது, அல்ல ஆண்டவரே, நீர் எனக்கு வேண்டாம், எனக்கு நான் வேண்டும்; ஆனால் சுத்தமாகிப் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனான நான்தான் வேண்டும்; நான் உம்முடைய காட்சியகத்தில் வைக்கப்பட்டு, இதுதான் தேவன் எனக்குச் செய்திருக்கிறார் என்று சொல்லக்கூடியவனாகவேண்டும் என்று கூறுவதுபோலாகிறது. கூடுதலாகத் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காகமட்டும் நாம் எதையாவது தேவனிடம் ஒப்படைப்போமானால் நம்முடைய ஒப்படைத்தலில் ஆவியானவருக்கு இடமில்லை; அது வெறும் வணிக நோக்குள்ள சுயநலமே. இயேசுகிறிஸ்துவுக்குத் தனிப்பட்ட முன்னுரிமையளிக்கும் உண்மையான ஒப்படைத்தலில், நாம் பரலோகத்தை ஆதாயஞ்செய்கிறோம், பாவத்திலிருந்து விடுதலைசெய்யப்பட்டிருக்கிறோம், தேவனுக்குப் பயனுள்ளவர்களாக்கப்பட்டிருக்கிறோம் என்ற கருத்துக்களுக்கு இடமில்லை.

இயற்கை உறவுகளாலேற்படும் தடைகளை நாம் எதிரிடும்போது இயேசுகிறிஸ்து எங்கே? நம்மில் அநேகரும் அவரைக் கைவிட்டுவிட்டு, ஆம், ஆண்டவரே, நான் உம்முடைய அழைப்பைக் கேட்டேன்; ஆனால் என் தாய், என் மனைவி மற்றும் என் சுயஆர்வம் போன்றவை பாதையில் இருப்பதால் இனி என்னால் மேலே செல்லமுடியாது என்று கூறுகிறோம். அப்போது இயேசு, நீ என் சீஷனாயிருக்கமுடியாது என்கிறார்.

இயற்கை பக்தியைவிடத் துறத்தல் மேலாயிருக்கிறதா என்பதே அதின் சோதனை. சோதித்துப் பாருங்கள், துறத்தலினால் நீங்கள் புண்படுத்திய எல்லாரையும் தேவனுடைய சொந்தத் துறப்பு அரவணைத்திடும். தேவனுக்கு அர்ப்பணிப்பதை நிறுத்தாதபடி எச்சரிக்கையாயிருங்கள். நம்மில் பலரும் தரிசனத்தில் அர்ப்பணிக்கிறதைமட்டும் அறிந்திருக்கிறோம்.

தேவனுடைய துறத்தல்

தேவன், . . . தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான் 3:16.

இரட்சிப்பு என்பது வெறும் பாவத்திலிருந்து விடுதலையடைவதோ அல்லது ஆளத்துவப் பரிசுத்த அனுபவமோ அல்ல; தேவனுடைய இரட்சிப்பு என்பது சுயத்திலிருந்து முற்றிலும் விடுதலையடைவதும் அவரோடு ஐக்கிய மாவதுமே. இரட்சிப்பைக்குறித்த என்னுடைய அனுபவத்தின் அடிப்படையி லுள்ள அறிவு பாவத்திலிருந்து விடுதலையும் ஆளத்துவ பரிசுத்தமும் என்பதாயிருக்கும்; ஆனால், தேவஆவியானவர் என்னைத் தேவனுடைய ஆளத்துவத்தைக்குறித்த அறிவுக்குள் கொண்டுவந்திருக்கிறார் என்பதும், என்னைவிடப் பன்மடங்கு சிறந்த ஏதோ ஒன்றினால் நான் உணர்ச்சிவசப் பட்டிருக்கிறேன் என்பதுமே இரட்சிப்பின் பொருளாகும்; தேவனுடைய தியாகத்திற்குள்ளாக நான் கவரப்பட்டுள்ளேன்.

பரிசுத்தத்தைக்குறித்து அல்லது பரிசுத்தமாகுதலைக்குறித்துப் பிரசங்கிக்கவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று கூறுவது முக்கிய நோக்கத்தை விட்டு விலகிப்போவதாகும்; இயேசுகிறிஸ்துவை அறிவிக்கவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். பாவத்திலிருந்து இரட்சித்து நம்மை அவர் பரிசுத்தமாக்குகிறார் என்பது தேவனுடைய அற்புதமான தியாகத்தினுடைய விளைவின் ஒரு பாகமாகும்.

தன்னுடைய சொந்த முயற்சியைக்குறித்த உணர்வை அர்ப்பணம் ஒருபோதும் விளைவிப்பதில்லை; ஏனெனில், நாம் யாருக்காக அர்ப்பணஞ் செய்கிறோமோ அவராலே வாழ்க்கை முழுவதும் ஆட்கொள்ளப்படுகிறது. அர்ப்பணத்தைக்குறித்து நீங்கள் ஒன்றும் அறியாவிட்டால் அதைப்பற்றிப் பேசுவதில் எச்சரிக்கையாயிருங்கள்; தேவன் தன்னை முற்றிலுமாய்க் கொடுத்தார் என்றுதான் யோவான் 3:16 பொருள்படுகிறது என்பதை நீங்கள் சரிவர உணரும்வரையிலும் அர்ப்பணத்தைக்குறித்து நீங்கள் ஒன்றும் அறியமுடியாது. தேவன் கணக்குப்பாராதபடி தன்னை நமக்குக் கொடுத்தது போலவே, நம்முடைய அர்ப்பணத்தில் நாம் நம்மைத் தேவனுக்குக் கொடுக் கிறோம். நம்முடைய வாழ்க்கை தேவனோடு உறவுகொண்டுள்ளபடியால் அர்ப்பணிப்பின் விளைவுகள் ஒருநாளும் நம்முடைய பார்வையில் வராது.

கீழ்ப்படிதல்

எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை.... ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே .....அடிமைகளாயிருக்கிறீர்கள். ரோமர் 6:16.

என்மீது ஆதிக்கஞ்செலுத்தும் சக்தியைச் சோதனை செய்வதில் நான் செய்யவேண்டிய முதலாங்காரியம், அவ்வாறு ஆதிக்கஞ்செலுத்தப் படுவதற்கு நானே இணங்குவதால் அதற்கு நானே பொறுப்பு என்னும் விரும்பப்படாத உண்மையை ஒப்புக்கொள்வதே. நான் எனக்கு அடிமை யாயிருப்பேனானால் அதற்குப் பழி என்மீதே; ஏனெனில், கடந்தகாலத்தில் ஒரு கட்டத்தில் எனக்கு நானே என்னை விட்டுக்கொடுத்திருப்பேன். அது போலவே, நான் தேவனுக்குக் கீழ்ப்படிகிறேனானால், நான் என்னை அவருக்கு விட்டுக்கொடுத்ததாலேயே நான் அவ்வாறு செய்கிறேன்.

குழந்தைப்பருவத்தில் சுயநலத்துக்கு விட்டுக்கொடுப்பீர்களானால், பூலோகத்தில் மிகவும் கவர்ச்சிகரமான கொடுமையாக அதைக் கண்டு கொள்ளுவீர்கள். விட்டுக்கொடுப்பதால் உருவான மனநிலையின் அடிமைத் தனத்தைத் தகர்க்கும் ஒரு வல்லமையும் மனித ஆத்துமாவில் இல்லை. இச்சையின் தன்மையிலான ஏதாவது ஒன்றுக்கு நீங்கள் ஒரு வினாடி இணங்கிப்பாருங்கள்; (ஒன்றை நான் உடனடியாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமே இச்சை என்பதை நினைத்துக்கொள்ளுங்கள்; அது மாம்சத்தின் இச்சையாயிருக்கலாம் அல்லது மனதின் இச்சையாயிருக் கலாம்); ஒருமுறை இணங்கிவிட்டால், இணங்கினதற்காக உங்களை நீங்களே வெறுத்தாலும், நீங்கள் அக்காரியத்துக்கு கொத்தடிமையாகி விட்டீர்கள். மனித ஆற்றலினால் விடுதலையடையவேமுடியாது; மீட்பில் மாத்திரமே விடுதலையுண்டு. உங்களை அடக்கியாளுகிற சக்தியை உடைக் கக்கூடிய ஒரே ஒருவராகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு மிகவும் வினயத்தோடு உங்களை நீங்கள் விட்டுக்கொடுக்கவேண்டும். சிறைப்பட்ட வர்களுக்கு விடுதலை.....பிரசித்தப்படுத்த.....என்னை அபிஷேகம் பண்ணினார் என்று இயேசு கூறினார்.

நான் விரும்பினால் அந்தப் பழக்கத்தை விட்டுவிடுவேன் என்னும் கருத்து மிகவும் ஏளனத்துக்குரியது; அது உங்களால் கூடாது; ஏனெனில், அந்தப் பழக்கத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாக இணங்கிவிட்டபடியால், அது உங்கள்மேல் முற்றிலும் ஆளுகைசெய்கிறது என்பதைக் காண்பீர்கள். அவர் எல்லா விலங்கையும் ஒடிப்பார் என்று பாடுவதும் அதே வேளையில், வெளிப்படையாக நீங்கள் உங்களுக்கு அடிமையாக வாழ்க்கை வாழுவதும் எளிது. எந்த மனித வாழ்க்கையிலுமுள்ள எல்லாவித அடிமைத்தனத் தையும் இயேசுவுக்கு இணங்குதல் முறித்துவிடும்.

திகைப்பாகிய கட்டுப்பாடு

அவர்கள் திகைத்து, அவருக்குப் பின்னே, பயத்தோடே போனார்கள். மாற்கு 10:32.

ஆரம்பத்தில், இயேசுகிறிஸ்துவைக்குறித்து நாம் எல்லாம் அறிந்திருக்கிறோம் என்ற நிச்சயம் நமக்கு இருந்தது; எல்லாவற்றையும் விற்றுவிட்டு, அன்பின் துணிச்சலால் வெளியே புறப்பட்டுச்சென்றது மகிழ்ச்சியாயிருந்தது; ஆனால், இப்போதோ நமக்குத் தீர நிச்சயமில்லை. இயேசு நமக்கு அதிகம் முன்னால் போகிறார்; அவர் அன்னியராய்த் தோன்றுகிறார். இயேசு அவர்களுக்கு முன்னே நடந்துபோனார்; அவர்கள் திகைத்தார்கள்.

ஒரு சீஷனுடைய இருதயத்தை மையம்வரைக் குளிரச்செய்து, முழு ஆவிக்குரிய வாழ்க்கையையும் மூச்சுவாங்க வைக்கும் ஒரு தன்மை இயேசுவிடம் உண்டு. முகத்தைக் கல்போலாக்கி, தீர்மானத்தோடு நடக்கிற இந்த விநோத மனிதர் என்னில் திகிலுண்டாக்குகிறார். அவர் இனிமேல் ஆலோசகரும் தோழரும் அல்ல; நான் ஒன்றும் அறிந்திராத ஏதோ ஒரு கண்ணோட்டத்தில் அவர் அதிகக் கரிசனைக் காண்பிக்கிறார்; அவரைப் பற்றி நான் வியப்படைகிறேன். நான் அவரைப் புரிந்திருக்கிறேன் என்ற நம்பிக்கை ஆரம்பத்தில் எனக்கிருந்தது; ஆனால் இப்போது எனக்கு அந்த நிச்சயமில்லை. இயேசுகிறிஸ்துவுக்கும் எனக்குமிடையே தூரம் உண்டென்பதை உணர ஆரம்பிக்கிறேன்; அவரோடு இனி நான் பழகமுடியாது. அவர் எனக்கு முன்னாலே போகிறார்; அவர் ஒருபோதும் திரும்பிப்பார்க்கவில்லை; அவர் எங்கே போகிறாரென்பதைக்குறித்து எனக்கு எந்த அறிவுமில்லை; இலக்கு அரிதாக அதிகத் தூரத்திலாகிவிட்டது.

மனிதன் அனுபவிக்கக்கூடிய ஒவ்வொரு பாவம் மற்றும் துக்கத்தின் ஆழத்தை இயேசுகிறிஸ்து அளக்கவேண்டியதிருந்தது; அதுதான் அவரை வியப்புக்குரியவராகத் தோன்றவைக்கிறது. இந்தக் கோணத்தில் அவரைக் காணும்போது நாம் அவரை அறிகிறதில்லை, அவருடைய வாழ்க்கையின் இயல்பை நாம் உணர்வதில்லை, அவரை எவ்வாறு பின்பற்ற ஆரம்பிக்கவேண்டுமென்று நமக்குத் தெரிவதில்லை. விந்தையான ஒரு தலைவராய் அவர் முன்னே செல்கிறார், அவரோடு நமக்கு ஒரு தோழமையுமில்லை.

திகைப்பாகிய கட்டுப்பாடு சீஷத்துவ வாழ்க்கையில் மிகவும் இன்றியமையாதது. ஆபத்து என்னவென்றால், நமக்குச் சொந்தமான கொஞ்ச நெருப்புக்குத் திரும்பச்சென்று, அதில் ஆர்வம் மூட்டுவது (ஏசாயா 1:10,11 பார்க்க). திகிலாகிய இருள் வரும்போது, அது நீங்கும்வரை சகித்திருங்கள்; ஏனெனில், அதிலிருந்து இயேசுவைப் பின்பற்றுதல் வரும்; அது சொல்லி முடியாத மகிழ்ச்சியாயிருக்கும்.

எஜமான் விசாரணை செய்கிறார்

நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்குமுன்பாக வெளிப்பட வேண்டும். 2 கொரி.5:10.

நாம் எல்லாரும், அதாவது போதகரும் ஜனங்களும், ஒன்றுபோல கிறிஸ்துவின் நியாயாசனத்திற்குமுன்பாக வெளிப்படவேண்டும் என்று பவுல் கூறுகிறார். இங்கு, இப்போது இயேசுகிறிஸ்துவின் ஒளியில் வாழக் கற்றுக் கொண்டால், தேவன் உங்களில் நிறைவேற்றிய கிரியையினால் நியாயத் தீர்ப்பு இறுதியில் உங்களை மகிழ்ச்சியடையச் செய்யும். கிறிஸ்துவின் நியாயாசனத்தை உறுதியாய் எதிர்கொண்டவர்களாய் உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிற மிகவும் பரிசுத்தருடைய ஒளியில் இப்போது நடவுங்கள். நீங்கள் எவ்வளவு பரிசுத்தவான்களாயிருந்தாலும், பிறிதொரு ஆத்துமாவைக்குறித்த தவறான மனநிலை உங்களைச் சாத்தானின் ஆவியில் முடிவடையச்செய்யும். மாம்சீகமான ஒரு தீர்ப்பு நீங்கள் செய்தால், அதன் முடிவு உங்களில் நரகமே. எனவே, உடனே அதை ஒளிக்குக் கொண்டுசென்று, ஆண்டவரே, அதில் நான் குற்றவாளி என்று சொல்லுங்கள். நீங்கள் அப்படிச் செய்யாவிட்டால் எப்போதும் இருதயம் கடினப்படும். பாவத்தில் உறுதிப்படுவதே பாவத்திற்குரிய தண்டனை. பாவத்துக்காகத் தண்டிப்பது தேவன் மாத்திரம் அல்ல; பாவியில் பாவம் தன்னை உறுதிப்படுத்தி, முழுச் சம்பளத்தையும் செலுத்துகிறது. போராடுவதும், ஜெபிப்பதும் சில காரியங்கள் செய்வதை நிறுத்த உங்களுக்கு உதவாது; கிரமமாக நீங்கள் அவைகளில் பழக்கப்பட்டுவிடுவதால், அவைகள் பாவம் என்று அறியாதிருப்பதே பாவத்தின் தண்டனை. நமக்குள் வருகிற பரிசுத்த ஆவியானவர்தவிர பாவத்தின் இயற்கையான விளைவுகளை வேறெந்த வல்லமையும் மாற்றமுடியாது.

அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியில் நடக்கவேண்டும் என்று வேதம் கூறுகிறது. இன்னொரு நபரைக்குறித்து நாம் எவ்வாறு எதிர்பார்க்கிறோமோ அவ்வாறு நாம் நடப்பதே ஒளியில் நடப்பது என்று நம்மில் பலரும் எண்ணுகிறோம். இன்று மிகவும் ஆபத்தான பரிசேயநிலை மாய்மாலமல்ல, அறியாமல் செய்யும் உண்மையற்ற வாழ்க்கையே.

ஊழியர்களுடைய உன்னத ஆர்வம்

அதினிமித்தமே.....அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம். 2 கொரி. 5:9.

ஒரு ஆங்கில மொழிபெயர்ப்பில் (KJV), நாடுகிறோம் என்றல்ல உழைக்கிறோம் என்று பவுல் கூறுகிறதாக அந்த வசனம் குறிப்பிடுகிறது. தலையாய குறிக்கோளை முன்நிறுத்துவது கடின வேலையாகும். இதன் கருத்து என்னவென்றால், ஆத்துமாக்களை ஆதாயஞ்செய்வது அல்லது சபைகளை நிறுவுவது அல்லது உயிர்மீட்சிக் கூட்டங்களை நடத்துவது என்பவைகளைக் குறிக்கோளாகக்கொள்ளாமல், தேவனுக்குப் பிரியமானவர் களாயிருக்கப் பேராவல்கொள்ளும் ஒரே உயர்ந்த குறிக்கோளுக்காக ஆண்டுமுழுவதும் வாழுவதாகும். ஆவிக்குரிய அனுபவக் குறைவல்ல, இலட்சியத்தைச் சரியாகக் காத்துக்கொள்ள உழைக்காததே தோல்விக்கு வழிநடத்துகிறது. வாரத்தில் ஒரு முறையாவது நீங்கள் தேவனுக்குமுன்பு சோதனை செய்து, அவர் விரும்புகிற நிலையில் உங்கள் வாழ்க்கையை வைத்திருக்கிறீர்களா என்று பாருங்கள். தன்னுடைய ஆசானின் அங்கீகாரப் பார்வையைப் பெற்றுக்கொள்ளக்கூடுமானால், பார்வையாளர்களுடைய அங்கீகாரத்துக்குக் கவலைப்படாத ஒரு பாடகரைப்போன்றே பவுலிருந்தார்.

தேவனுக்குப் பிரியமாயிருக்கிறதாகிய மையக் கருத்திலிருந்து சிறித ளவேனும் விலகியிருக்கும் எந்தப் பேராவலும் முடிவாக நம்மை ஆகாதவர் களாக்கிவிடும். பேராவல் உங்களை எங்கு வழிநடத்துகிறது என்பதைப் பகுத்தறியக் கற்றுக்கொள்ளுங்கள்; அப்போது கர்த்தராகிய இயேசுகிறிஸ் துவை நோக்கியவர்களாய் வாழுவது ஏன் இவ்வளவு தேவை என்பதைக் கண்டுகொள்ளுவீர்கள். நான் வேறொரு வழியை எடுப்பதற்கு என் சரீரம் என்னை ஆக்காதபடி, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துவதில் நான் தொடர்ந்து கவனமாயிருக்கிறேன் என்று பவுல் கூறுகிறார் (1 கொரி.9:27).

எல்லாவற்றையும் தலையாய குறிக்கோளுக்கு ஒத்திருக்கும்படிச் செய்யவும், அது நின்றுவிடாதபடி பரிபாலிக்கவும் நான் கற்றுக்கொள்ள வேண்டும். அந்தரங்கத்தில் தேவனுக்கு எவ்வளவு விலையுள்ளவனாயிருக் கிறேனோ அவ்வளவு விலைதான் பொதுமக்கள் மத்தியிலும். தேவனைப் பிரியப்படுத்துவதும், அவரால் அங்கீகரிக்கப்படுவதுந்தானா நான் அடைய விரும்பும் தலையாய குறிக்கோள்? அல்லது மிகச்சிறந்ததாகத் தோன்றி னாலும் இதைவிடக் குறைவானதா என் குறிக்கோள்?

இந்நிலைக்கு என்னை நான் எழுப்புவேனா?

பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம். 2 கொரி. 7:1.

இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால் என்று இந்த வசனம் ஆரம்பிக்கிறது. தேவனுடைய வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலை நான் உரிமைகொண்டாடுகிறேன், அது சரிதான், ஆனால், அது மனிதருக்குரிய பக்கம் மாத்திரமே; தேவனுடைய பக்கமோ, இந்த வாக்குத்தத்தங்களின்மூலம் தேவனுக்கு என்மீதுள்ள உரிமையை நான் கண்டுகொள்ளுகிறேன். எடுத்துக்காட்டாக, என்னுடைய சரீரம் பரிசுத்த ஆவியானவருடைய ஆலயம் என்று புரிந்துகொள்ளுகிறேனா? அல்லது, தேவனுடைய ஒளியைத் தன்மீது தாங்கக்கூடாத ஏதாவது பழக்கம் என் சரீரத்திலுண்டா? பரிசுத்தமாகுதலினால் தேவகுமாரன் என்னில் உருவாகியிருக்கிறார்; எனவே, அவருக்குக் கீழ்ப்படிவதின்மூலமாக என்னுடைய மாம்சீக வாழ்க்கையை ஆவிக்குரிய வாழ்க்கையாக நான் மாற்றவேண்டும். மிகச் சிறிய காரியம்வரையிலும் தேவன் நம்மைக் கற்பிக்கிறார். தேவன் தடை செய்ய ஆரம்பிக்கும்போது, மாம்சத்தோடும் இரத்தத்தோடும் ஆலோசனை பண்ணாதேயுங்கள், உடனடியாக உங்களைச் சுத்திகரியுங்கள். அனுதின வாழ்க்கையிலும் உங்களைச் சுத்தமாகக் காத்துக்கொள்ளுங்கள்.

தேவனுடைய தன்மைக்கு ஒத்து என்னுடைய மாம்சமும் ஆவியும் மாறுகிறதுவரை, அவைகளின் சகல அசுத்தத்திலிருந்தும் நான் என்னைச் சுத்திகரிக்கவேண்டும். என்னுடைய ஆவியின் சிந்தை, என்னிலிருக்கிற தேவகுமாரனுடைய வாழ்க்கையோடு பூரண இணக்கத்தில் இருக்கிறதா? அல்லது என் அறிவாற்றலில் நான் பணிவற்றவனாயிருக்கிறேனா? தமக்கான உரிமையிலிருந்து ஒன்றும் கூறாமல், பிதாவுக்குத் தன் ஆவியைத் தொடர்பாக ஒப்புவிக்கத்தக்கதாக உள்ளான விழிப்பைக் காத்துக்கொண்ட கிறிஸ்துவின் சிந்தையை உருவாக்குகிறேனா? என்னுடைய ஆவியை அவருடைய ஆவியோடு இசைவாக வைத்துக்கொள்ளும் பொறுப்பு எனக்கு உண்டு; அப்போது, வேறு எக்காரியத்திலும் கவனம் செலுத்தாமல், பிதாவின் சித்தத்துக்குப் பூரண அர்ப்பணிப்போடு அவர் வாழ்ந்த நிலைக்கு இயேசு என்னையும் படிப்படியாக உயர்த்துகிறார். தேவனுக்குப் பயப்படுவதில் இத்தகைய பரிசுத்தமாகுதலை நான் பூரணப்படுத்துகிறேனா? தேவன் தம்முடைய சித்தத்தை என்னில் நிறைவேற்றுகிறாரா? மற்ற மக்கள் என் வாழ்க்கையில் தேவனை அதிகமதிகமாகக் காண ஆரம்பிக்கிறார்களா?

தேவனோடு கருத்தாயிருங்கள்; மகிழ்ச்சியோடு எஞ்சியவைகளைத் தனியே விடுங்கள். நடைமுறையில் தேவனுக்கு முதலிடம் கொடுங்கள்.

விசுவாசத்தில் ஆபிரகாமின் வழி

தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான். எபி. 11:8.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவனோடுள்ள தனிநபர் உறவு பிரிவினையில் வெளிப்பட்டது; ஆபிரகாம் தன் நாட்டையும், நண்பரையும், இனத்தவரையும் விட்டுப் பிரிந்ததினால், அவருடைய வாழ்க்கையில் அது அடையாளமாயிற்று. நமக்கு மிகவும் அருமையானவர்கள் தேவனோடு தனிநபர் உறவு இல்லாமலிருப்பார்களானால், அவர்கள் காரியங்களைப் பார்க்கிற முறையிலிருந்து மனதளவிலும் தார்மீகத்திலும் வேறுபடுவதைப் போன்றதே இன்றைய பிரிவினையாகும். இதை இயேசுகிறிஸ்து அழுத்திக் கூறியுள்ளார் (லூக்கா 14:26 பார்க்க).

தான் எங்கே நடத்தப்படுகிறது என்பதை விசுவாசம் ஒருபோதும் அறிவதில்லை; ஆனால் நடத்துகிறவராகிய ஒரு நபரை அது நேசிக்கிறது, அறிகிறது. அது விசுவாச வாழ்க்கை; அது புத்தியையோ பகுத்தறிவையோ சார்ந்த வாழ்க்கையல்ல; நம்மைப் போகும்படிச் செய்கிறவர் யார் என்பதை அறிகிற வாழ்க்கை அது. ஒரு நபரைக்குறித்த (தேவனைக்குறித்த) அறிவே விசுவாசத்தின் வேர்; தேவன் நம்மை வெற்றிக்குநேராக வழிநடத்துவது நிச்சயம் என்கிற கருத்து மிகப்பெரிய கண்ணிகளில் ஒன்றாகும்.

விசுவாச வாழ்க்கையில் இறுதிக்கட்டம் பண்பையடைவது. பண்பில் கடந்துபோகிற அநேக உருவ மாற்றங்கள் உண்டு; நாம் ஜெபிக்கும்போது, தேவனுடைய ஆசீர்வாதம் நம்மை மூடுவதாக உணருகிறோம், அப்போது தற்காலிகமாக நாம் மாற்றப்படுகிறோம்; பின்னால் நாம் சாதாரணமான நாட்களுக்கும் வழிகளுக்கும் திரும்புகிறோம், மகிமை மறைகிறது. விசுவாச வாழ்க்கை என்பது செட்டைகளை அடித்து உயர எழும்பும் வாழ்க்கையல்ல, அது நடந்தாலும் சோர்ந்து போகாத வாழ்க்கையே. அது பரிசுத்தமாகு தலைக்குறித்தக் காரியம் அல்ல; பரிசுத்தமாகுதலுக்கும் எல்லையற்ற அளவுக்கு அப்பால் கடந்த ஒன்றும், சோதிக்கப்பட்டதும் நிரூபிக்கப்பட்டதும் சோதனையை ஜெயித்ததுமான விசுவாசத்தைக்குறித்த காரியம். ஆபிரகாம் பரிசுத்தமாகுதலுக்கு எடுத்துக்காட்டல்ல; அவர், உண்மையான தேவன்மீது கட்டப்பட்டதும், சோதிக்கப்பட்டதுமான விசுவாச வாழ்க்கையின் மாதிரியாய் இருக்கிறார். ஆபிரகாம் தேவனை விசுவாசித்தார்.

தேவனோடுள்ள நட்பு

நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? ஆதி.18:18.

அதின் களிப்புக்கள்: ஜெபத்தில் தேவனுடைய பிரசன்னத்தை இடைக் கிடையே உணருகிறதோடு ஒப்பிடும்போது, அவரோடுள்ள உண்மையான நட்பினால் கிடைக்கும் களிப்பையே இந்த அதிகாரம் வெளிப்படுத்துகிறது. தேவனுடைய சித்தத்தை அவர் உங்களுக்குக் காட்டும்படி அவரை நீங்கள் கேட்கத் தேவைப்படாதவாறு அவரோடு நெருங்கிய தொடர்பில் இருப்பதே விசுவாச வாழ்க்கையின் இறுதி நிலையை அடுத்துவிடுவதாகும். நீங்கள் தேவனோடு சரியான உறவில் இருப்பீர்களானால், அதுவே சுதந்திரம், விடுதலை மற்றும் மகிழ்ச்சியின் வாழ்க்கையாகும்; நீங்களே தேவனுடைய சித்தம்; தேவன் தடைசெய்யாததுவரை, உங்களுடைய எல்லாப் பகுத்தறிவுத் தீர்மானங்களும், உங்களுக்கு அவருடைய சித்தமாகவேயிருக்கும். உங்கள் தீர்மானங்கள் தவறாயிருக்குமேயானால் தேவன் அவைகளை எப்போதும் தடுப்பார் என்று அறிந்தவர்களாய், அவரோடுள்ள பூரண மகிழ்ச்சியான நட்பில் நீங்கள் காரியங்களைத் தீர்மானியுங்கள்; அவர் தடுக்கும்போது உடனே நிறுத்திவிடுங்கள்.

அதின் கஷ்டங்கள்: ஆபிரகாம் ஜெபிப்பதை ஏன் இடையில் நிறுத்தினார்? தேவன் அவருடைய விருப்பத்தை அனுமதிக்குமட்டும் அவர் தைரியமாய்த் தொடரத்தக்கதாக அதுவரை அவர் போதுமானஅளவு நெருங்கிய உறவில் இல்லாதிருந்தார்; தேவனோடுள்ள அவருடைய உறவில் தேவைப்பட்டது ஏதோ ஒன்று இன்னும் இருந்தது. நாம் ஜெபத்தை இடையிலே நிறுத்தி--ஒருவேளை இது தேவனுடைய சித்தமாய் இல்லாதிருக்கலாம், எனக்குத் தெரியவில்லை என்று கூறும்போதெல்லாம்--நாம் சென்றடையவேண்டிய நிலை இன்னொன்றுண்டு. இயேசுவைப்போலவும், நாம் ஒன்றாயிருப்பது போல அவர்களும் ஒன்றாயிருக்கவேண்டுமென்று இயேசு நம்மைக்குறித்து விரும்பியதைப்போலவும், நாம் தேவனோடு நெருக்கமான பழக்கங்கொள்ள வில்லை. நீங்கள் இறுதியாக எதற்காக ஜெபித்தீர்கள் என்பதை நினைத்துப் பாருங்கள்--உங்கள் விருப்பத்துக்கா அல்லது தேவனுக்கா நீங்கள் பக்தி காண்பித்தீர்கள்? ஏதாவது ஆவிக்குரிய வரத்தைப் பெற்றுக்கொள்ளவா, அல்லது தேவனை அடையவா நீங்கள் தீர்மானித்தீர்கள்? உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்குமுன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். கேட்பதின் நோக்கம் நீங்கள் தேவனை இன்னும் நன்றாக அறிவதே. கர்த்தரிடத்தில் மனமகிழ்ச் சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார் (சங்.37:4). தேவனையே பூரணமாய் அறிந்துகொள்ளுவதற்குத் தொடர்ந்து ஜெபித்துக்கொண்டிருங்கள்.

ஆர்வமா அல்லது ஒன்றித்தலா?

கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன். கலாத்.2:20.

ஆவிக்குரிய நிலையில் கண்டிப்பானத் தேவை பாவத்தன்மையை மரணத்துக்கு ஒப்படைப்பது; அதாவது, நமது எல்லா உணர்ச்சிவசப்பட்ட கருத்துக்களையும், அறிவுசார்ந்த நம்பிக்கைகளையும் என்மீது எனக்குரிய உரிமைக்கான கோரிக்கையாகிய பாவத்தன்மைக்கு எதிரானத் தார்மீகத் தீர்ப்பாகத் திருப்புவதாகும். நான் கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப் பட்டேன் என்று பவுல் கூறுகிறார். நான் இயேசுகிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றத் தீர்மானித்திருக்கிறேன் என்றோ, அவரைப் பின்செல்ல முயற் சிப்பேன் என்றோ பவுல் கூறாதபடி, அவருடைய மரணத்தில் அவரோடேகூட ஒன்றித்துவிட்டேன் என்றே அவர் கூறுகிறார். அத்தகையத் தார்மீகத் தீர்மானத்துக்கு நான் வந்து, அதன் அடிப்படையில் செயல்படும்போது, கிறிஸ்து எனக்காகச் சிலுவையில் செய்தவையெல்லாம் என்னிலே நிறை வேற்றப்படுகின்றன. நான் என்னைத் தேவனுக்கு நிபந்தனையின்றி ஒப்பு விப்பது இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தத்தைப் பரிசுத்தஆவியானவர் எனக்குப் பகிர்ந்தளிக்க வாய்ப்பளிக்கிறது.

ஆயினும் நான் பிழைத்திருக்கிறேன் என்றும் பவுல் கூறுகிறார். தனித்தன்மை தொடர்ந்திருக்கிறது; ஆனால், முக்கிய பாகமாயிருக்கிறதும் ஆளுகைசெய்கிறதுமான மனச்சார்பு முற்றிலும் மாற்றப்பட்டுவிட்டது. அதே மனித சரீரம் தங்கியிருக்கிறது; ஆனால், பழய சாத்தானின் தன்மையாகிய என்மேலுள்ள என் உரிமை அழிக்கப்பட்டுவிட்டது.

நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ என்று பவுல் தொடர்ந்து கூறுகிறார். நான் பிழைக்க வாஞ்சிக்கிறதும் பிழைக்க ஜெபிக் கிறதுமான அந்த வாழ்க்கை என்று கூறாதபடி, என் சாவுக்குரிய சரீரத்தில் நான் இப்போது வாழுகிறதும் மனிதர் காணக்கூடியதுமான வாழ்க்கையில் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன் என்று அவர் கூறுகிறார். ஒரு ஆங்கில மொழிபெயர்ப்பில் தேவகுமாரனின் விசுவாசம் என்று கூறப்படுகிறது. இந்த விசுவாசம் இயேசுகிறிஸ்துவிலுள்ள பவுலின் விசுவாசமல்ல; பவுலுக்குத் தேவகுமாரனால் பகிர்ந்தளிக்கப்பட்ட விசுவாசம். அது முன்புபோல இப்போது விசுவாசத்திலுள்ள விசுவாசமல்ல, அது அறியப்பட்ட எல்லா வரம்புகளையும் குதித்துத்தாண்டிய விசுவாசம்; தேவகுமாரனுடைய விசுவாசத்தைப்போன்ற விசுவாசம் அது.

கொழுந்துவிட்டு எரியும் இருதயம்

நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா? லூக்கா 24:32.

கொழுந்துவிட்டு எரிகிற இருதயத்தின் இந்த இரகசியத்தை நாம் கற்றுக்கொள்ளவேண்டும். திடீரென்று இயேசு நமக்குமுன் தோன்றுகிறார், நெருப்புகள் மூட்டப்படுகின்றன, நாம் அற்புதமான தரிசனங்களைக் காண்கிறோம்; பின்பு எக்காரியத்தையும் அனுபவிக்கும் கொழுந்துவிட்டு எரிகிற இருதயத்தின் இரகசியத்தைப் பாதுகாக்க நாம் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் இயேசுவில் நிலைத்திருக்கும் இரகசியத்தைக் கற்றுக்கொள்ளாவிடில், சாதாரணமானக் கடமைகளும் மக்களுங்கொண்ட கவர்ச்சியற்றதும், சலிப்பூட்டுகிறதும், இருண்டதுமான சிறப்பற்ற நாட்கள் கொழுந்துவிட்டு எரிகிற நம்முடைய இருதயத்தை குளிரச்செய்யும்.

விசுவாசிகளாக நாம் அனுபவிக்கும் துயரங்களில் மிகுதியானவை பாவத்தினால் வராமல், நமது சொந்த இயற்கையின் விதிகளைக்குறித்த அறிவீனத்தினாலேயே வருகின்றன. எடுத்துக்காட்டாக, ஒரு உணர்ச்சி தன் விருப்பம்போலச் செயல்பட அனுமதிக்கலாமா என்பதற்குரிய ஒரே சோதனை அந்த உணர்ச்சியின் பின்பலன் என்னவாயிருக்குமென்பதைக் கவனிப்பதே. அந்தப் பின்பலன் தேவன் கண்டனஞ்செய்யக்கூடிய ஏதோ ஒன்றானால், அதைத் தொடர்ந்து அனுமதியாதேயுங்கள். ஆனால், அது தேவனுடைய ஆவியினால் தூண்டப்பட்ட உணர்ச்சியானால், அதை உங்கள் வாழ்க்கையில் சரிவரச் செயல்பட அனுமதிக்கவில்லையென்றால், அது குறைந்த நிலையிலே செயல்படும். அவ்வாறுதான் அதிக உணர்ச்சி வசப்படும் மக்கள் படைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு உணர்ச்சியைத் தகுந்த நிலையில் பயன்படுத்தவில்லையென்றால், அது எவ்வளவு உன்னதமாயிருக்கிறதோ அவ்வளவு ஆழமாக அதன் சீரழிவு இருக்கும். தேவனுடைய ஆவியானவர் உங்களை ஏவியிருப்பாரேயாகில், விளைவுகள் எவ்வாறிருந்தாலும், அக்காரியங்களில் தவிர்க்கமுடியாத காரியங்களைக் கூடிய அளவு நிறைவேற்றுங்கள். மறுரூபமலையில் நாம் தங்கியிருக்கமுடியாது, ஆனால், அங்கு பெற்ற ஒளிக்கு நாம் கீழ்ப்படியவேண்டும்; அதின் அடிப்படையில் நாம் செயல்படவேண்டும். தேவன் ஒரு தரிசனம் கொடுக்கும்போது, என்ன விலை கொடுக்கவேண்டியதுவந்தாலும், அத்தரிசனத்தின் படியே செயல்படுங்கள்.

நம் விருப்பம்போலத் தூண்டமுடியாது
இருதயத்திலிருக்கும் நெருப்பை,
ஆவி காற்றைப்போல இப்போதும் வீசுகிறது,
அது மர்மமாக நம் ஆத்துமாவில் தங்குகிறது;
ஆழ்ந்த அறிவோடு தீர்மானிக்கிற கடமைகள்
அந்தகார நாட்களிலும் நிறைவேற்றப்படும்.

நான் மாம்சசிந்தை உடையவனா?

பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிற படியால், நீங்கள் மாம்சத்துக்குரியவர்களல்லவா? 1 கொரி.3:3.

ஜென்ம சுபாவமான மனிதர் யாரும் மாம்சீகத்தைக்குறித்து ஒன்றும் அறிவதில்லை. மறுபிறப்பின்போது நமக்குள் வந்த ஆவிக்கு விரோதமாக மாம்சம் இச்சிப்பதும், மாம்சத்துக்கு விரோதமாக ஆவி இச்சிப்பதும் மாம்சீகத்தை உண்டாக்குகிறது. ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள் என்று பவுல் கூறுகிறார்; அப்போது மாம்சீகம் மறைந்துபோகும்.

நீங்கள் சண்டையிடுகிறவர்களும், அற்பமான காரியங்களைக் குறித்து எளிதாகக் கலங்குகிறவர்களுமா? விசுவாசிகள் யாரும் ஒருபோதும் அப்படியிருப்பதில்லை என்று எண்ணலாம். அப்படி இருப்பார்களென்று பவுல் கூறுகிறார்; மேற்கூறிய காரியங்களை அவர் மாம்சீகத்தோடு தொடர்புபடுத்து கிறார். உடனடியாக உங்களில் எரிச்சல் உண்டாக்கும் ஏதாவது சத்தியம் வேதத்தில் உண்டா? நீங்கள் இன்னும் மாம்சத்துக்குரியவர்கள் என்பதற்குரிய நிரூபணம் அது. பரிசுத்தமாகுதல் செயல்படுத்தப்படுமானால் அத்தகைய ஆவியின் எந்தச் சுவடும் மீந்திராது.

தேவஆவியானவர் உங்களில் தவறான ஏதாவது காரியத்தைக் கண்டுபிடிப்பாரானால் அதைச் சரிசெய்யும்படி உங்களிடம் அவர் கேட்க மாட்டார்; ஒளியை ஏற்றுக்கொள்ளும்படி அவர் உங்களைக் கேட்பார், அவர் அதைச் சரிசெய்வார். ஒளியின் பிள்ளை தவறுகளை உடனடியாக அறிக்கை செய்து, ஆண்டவருக்குமுன்பாகத் திறந்தநிலையில் நிற்பார்; இருளின் பிள்ளையோ, ஆகா, அதற்கு நான் விளக்கம் கூறமுடியும் என்பார். வெளிச்சம் உதித்து, தவற்றைக்குறித்த பாவஉணர்வு உண்டாகும்போது ஒளியின் பிள்ளையாய் இருங்கள், தவற்றை அறிக்கைசெய்யுங்கள், தேவன் அதன்மீது நடவடிக்கை எடுப்பார்; ஆனால், உங்களை நியாயப்படுத்து வீர்களானால் நீங்கள் அந்தகாரத்தின் பிள்ளைகள் என்று நிரூபிக்கிறீர்கள்.

மாம்சீகம் போய்விட்டது என்பதின் சான்று என்ன? ஒருபோதும் உங்களை ஏமாற்றாதேயுங்கள்; மாம்சீகம் போய்விட்டால் அது சிந்திக்கக் கூடியவைகளில் மிகப்பெரிய சத்தியமாயிருக்கும். தேவனுடைய கிருபையின் அற்புதத்தை உங்களுக்கு நீங்களே நிரூபிப்பதற்கு அநேக சந்தர்ப்பங்களை நீங்கள் பெற்றுக்கொள்ளத் தேவன் செய்வார். நடைமுறைச் சோதனையே ஒரே நிரூபணம். ஏன்? இது முன்னே நடந்திருக்குமானால், கடுஞ்சினத்தின் ஆவி இருந்திருக்கும் என்று சொல்லுவீர்கள். உங்களுக்காகத் தேவன் உட்புறமாகச் செய்திருக்கிறவைகளைக்குறித்துப் பூமியில் அதிகம் ஆச்சரியப் படுகிறவராக நீங்கள் இருப்பதற்குத் தவறமாட்டீர்கள்.

அவருடைய நோக்கத்திற்குள் சிறுகுதல்

அவர் பேருகவும் நான் சிறுகவும் வேண்டும். யோவான் 3:30.

நீங்கள் ஒரு ஆத்துமாவுக்குத் தேவையானவர்களாவீர்களானால், நீங்கள் தேவனுக்குப் பயனற்றவர்கள். ஊழியர்களாக உங்கள் பெரிய பொறுப்பு மணவாளனின் தோழர்களாய் இருப்பதே. இயேசுகிறிஸ்துவின் உரிமைகளை அறிகிற ஒரு ஆத்துமாவை நீங்கள் காண்பீர்களானால், உங்கள் செல்வாக்கு சரியான திசையில் இருந்தது என்பது உங்களுக்குத் தெரியும்; அந்த நபரின் கடின வேதனைகளைத் தடுப்பதற்குக் கைநீட்டுவதற்குப்பதில் இயேசுகிறிஸ்துவிடமிருந்து அந்த ஆத்துமாவைத் தூரப்படுத்த பூமியிலோ நரகத்திலோ எந்தச் சத்துவமும் இல்லாமலாகுமட்டும் அந்த வேதனைகள் பத்துமடங்கு வலிமையுடையதாகும்படி ஜெபியுங்கள். திரும்பத் திரும்ப நாம் தேவனைத் தடுத்து, இதுவும்அதுவும் கூடாது என்று கூறுகிறோம். மணவாளனுக்குத் தோழர்களாக நிரூபிப்பதற்குப்பதில், நமது அனுதாபத்தை நாம் தடையாக வைக்கிறோம்; ஒருநாள் அந்த ஆத்துமா நம்மைப் பார்த்து, அந்த நபர் திருடனாயிருந்தார், நான் இயேசுவில் வைத்திருந்த பாசஉணர்ச்சிகளைத் திருடிவிட்டார், நான் இயேசுவைக்குறித்த என் தரிசனத்தை இழந்துவிட்டேன் என்று கூறக்கூடும்.

தவறான காரியத்தில் ஒரு ஆத்துமாவுடன் சேர்ந்து சந்தோஷப்படுவதில் எச்சரிக்கையாயிருங்கள், ஆனால் சரியான காரியத்தில் நீங்கள் சந்தோஷப்படக் கருத்தாயிருங்கள். மணவாளனுடைய தோழனோ,..... மணவாளனுடைய சத்தத்தைக்குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்த சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று. அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் என்று யோவான் கூறினார். இது துக்கத்தோடு அல்ல, மகிழ்ச்சியோடு கூறப்பட்டது--எப்படியும் மணவாளனை அவர்கள் காண்பார்களே! இதுதான் தன்னுடைய சந்தோஷம் என்று யோவான் கூறுகிறார். இதுதான் ஊழியக்காரர் முற்றிலும் அழிக்கப்படும் அனுபவம்; அவர் மறுபடியும் நினைக்கப்படுவதில்லை.

இன்னொருவருடைய வாழ்க்கையில் மணவாளனுடைய சத்தத்தைக் கேட்கும்வரை உங்கள் விலைமதிப்பு எவ்வளவு என்பதைக் கவனித்திருங்கள். அது எத்தகைய நாசத்தையோ, வருத்தத்தையோ, ஆரோக்கியக் குறைவையோ கொண்டுவருகிறது என்பதைக்குறித்து ஒருபோதும் கவலைப்படாதேயுங்கள்; அவருடைய சத்தத்தைக் கேட்டதும் தெய்வீக உவகையுடன் சந்தோஷப்படுங்கள். இயேசுகிறிஸ்து ஒரு ஆத்துமாவை இரட்சிக்குமுன் அதை உடைக்கிறார் என்பதை அடிக்கடி நீங்கள் காணக்கூடும் (மத்.10:34 பார்க்கவும்).

உலகில் மிக மென்மையான ஊழியம்

மணவாளனுடைய தோழன். யோவான் 3:29.

நன்மையும் தூய்மையும் தங்களுக்குநேராக ஒருபோதும் கவனத்தைக் கவரக்கூடாது, அவை இயேசுகிறிஸ்துவிடம் இழுக்கும் காந்தங்களாய் மாத்திரம் இருக்கவேண்டும். என்னுடைய பரிசுத்தம் அவருக்குநேராக இழுக்காவிட்டால் அது சரியான ஒழுங்கிலுள்ள பரிசுத்தமல்ல; அது கட்டுப்பாடற்ற பாசத்தைத் தட்டி எழுப்பி, ஆத்துமாக்களைத் தவறான இடத்துக்கு வழிநடத்தும் செல்வாக்கே. ஒரு சிறந்த பரிசுத்தவான் இயேசுகிறிஸ்துவைக் குறித்துக் கூறாமல், கிறிஸ்து தனக்குச் செய்தவைகளைமாத்திரம் கூறுவாரானால், அவர் ஒரு தடையாகவே இருக்கக்கூடும்; அந்த மனிதர் எவ்வளவு சிறந்த பண்புள்ளவர் என்ற அவரைக்குறித்த அபிப்பிராயத்தையே அவர் விட்டுச்செல்வார்; அது மணவாளனுடைய உண்மையான தோழனாய் இருப்பதல்ல; எக்காலத்தும் நானே பெருகுகிறேன், அவரல்ல.

மணவாளனோடுள்ள இந்த நட்பையும் பக்தியையும் பராமரிக்க வேண்டுமானால், கீழ்ப்படிதல் உட்பட மற்று எல்லாக் காரியங்களையும்விட, அறமுறையானதும் ஜீவாதாரமுமான அவரோடுள்ள உறவைக்குறித்தே நாம் மிகவும் கருத்துள்ளவர்களாயிருக்கவேண்டும். சிலவேளைகளில் கீழ்ப்படிவதற்கு ஒன்றுமேயிராது; இயேசுகிறிஸ்துவோடு ஜீவாதாரமான தொடர்பைக் காத்துக்கொள்ளுவதும், அதற்கு ஒன்றும் குறுக்கிடாமல் கவனித்துக் கொள்ளுவதும் மாத்திரமே செய்யப்படவேண்டிய ஒரே காரியமாகும். எப்போதாவதுதான் நாம் கீழ்ப்படியவேண்டும். நெருக்கடி வரும்போது தேவனுடைய சித்தம் என்னவென்று நாம் கண்டுபிடிக்கவேண்டும்; ஆனால் வாழ்வின் அதிக பாகமும் மனப்பூர்வமான கீழ்ப்படிதலல்ல, மணவாளனின் தோழன் என்ற உறவைப் பராமரிப்பதே. இயேசுகிறிஸ்துவின்மேலுள்ள ஆத்துமாவின் ஒருமுகசிந்தையைத் தவிர்ப்பதற்குக் கிறிஸ்தவ ஊழியம் ஒரு முகாந்தரமாயிருக்கலாம். மணவாளனுடைய தோழராயிருப்பதற்குப்பதில், நாம் அனுபவமற்ற முன்கருதலுள்ளவர்களாக மாறுகிறோம்; அவருடைய ஆயுதங்களைப் பயன்படுத்தும்பொழுதே நாம் அவருக்கெதிராகச் செயல்படக்கூடும்.

தனிநபர் பரிசுத்தத்தால் தரிசனம்

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். மத்.5:8.

பரிசுத்தம் என்பது குற்றமின்மையல்ல; அதைவிட அதிகக் கூடுத லானது. தேவனோடுள்ள ஆவிக்குரிய ஒருமைப்பாட்டைப் பேணுவதாலுள்ள விளைவே பரிசுத்தமாகும். பரிசுத்தத்தில் நாம் வளரவேண்டும். தேவனோ டுள்ள வாழ்க்கை சரியாயிருக்கலாம், உள்ளான பரிசுத்தம் கறைப்படாமல் மிஞ்சலாம்; ஆயினும் அவ்வப்போது வெளிப்புறமுள்ள பொலிவில் கறை ஏற்படலாம். இந்த சாத்தியத்திலிருந்து தேவன் நம்மைப் பாதுகாப்பதில்லை; ஏனெனில், தனிநபர் பரிசுத்தத்தினால் தரிசனத்தைக் காத்துக்கொள்ளும் தேவையை இதனால் நாம் உணருகிறோம். தேவனோடுள்ள நம்முடைய வாழ்க்கையின் ஆவிக்குரிய பொலிவு மிகச் சிறிதளவேனும் பழுதுபட்டால் நாம் மற்ற எல்லாவற்றையும் விட்டுவிட்டு அதைச் சரிசெய்யவேண்டும். தரிசனம் நற்பண்பைச் சார்ந்திருக்கிறது என்பதை நினைவுகூரவேண்டும்; ஏனெனில், இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.

தேவன் தமது தெய்வீகக் கிருபையினாலே நம்மைப் பரிசுத்தமுள் ளவர்களாக்குகிறார்; ஆனால், நாம் பேணவேண்டிய ஒரு காரியம் உண்டு: அது பிறமக்களோடும் பிறகண்ணோட்டங்களோடும் தொடர்புகொள்ளுவதற் குரிய இந்த சரீர வாழ்க்கையே, அக்காரியங்கள் கறைப்பட வாய்ப்புண்டு. உள்ளான பரிசுத்த ஸ்தலம் தேவனுக்குநேராகச் சரியாய்க் காக்கப்படுவது மாத்திரமல்ல, வெளிப்பிரகாரங்களும் தேவன் தமது கிருபையால் நமக்குக் கொடுக்கிற சுத்தத்துக்குப் பூரண இசைவாய்க் கொண்டுவரப்படவேண்டும். வெளிப்பிரகாரம் கறைப்பட்டவுடனே ஆவிக்குரிய அறிவாற்றல் மங்கலடை கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோடு தனிநபர் தொடர்பை நாம் விடாது வைத்துக்கொள்ளப்போகிறோமானால் நாம் செய்யவும் எண்ணவும் ஒதுக்க வேண்டிய சில காரியங்கள் உண்டு என்று பொருட்படும்; முறையான சில காரியங்களைக்கூட நாம் தொடாமல் வெறுத்து ஒதுக்கவேண்டும்.

அந்த மனிதன், அந்த மனுஷி கிறிஸ்து இயேசுவுக்குள் பூரணரா யிருக்கிறார்கள்! அந்த நண்பர், அந்த உறவினர் கிறிஸ்து இயேசுவுக்குள் பூரணராயிருக்கிறார்கள்! என்று உங்களுக்குள் சொல்லிக்கொள்வதே பிறமக்களோடுள்ள தொடர்பில் தனிநபர் பரிசுத்தத்தைக் கறைப்படாமல் காத்துக்கொள்ளும் நடைமுறையாகும்.

தனிநபர் ஒழுக்கத்தினால் வரும் தரிசனம்

இங்கே ஏறிவா, இவைகளுக்குப்பின்பு சம்பவிக்கவேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன். வெளி.4:1.

சுயஒழுக்கத்தின் உயர்ந்த பழக்கத்தினாலேயே உன்னத மனநிலை உருவாகிறது. உங்கள் வாழ்க்கையின் புறம்பானவைகளில் நீங்கள் அறிந்துள்ளதில் மிகவும் உயர்ந்ததற்கொத்து வாழுவீர்களானால், சிநேகிதனே, இன்னும் மேலே ஏறிச் செல் என்றுதான் தேவன் தொடர்பாகக் கூறுவார். சோதனையில் தங்கப்பிரமாணம் இன்னும் உயரச் செல்லுங்கள் என்பதே. நீங்கள் இன்னும் கூடுதல் உயரத்தைச் சென்றடையும்போது பிற சோதனைகளையும் தனித்தன்மைகளையும் சந்திப்பீர்கள். சாத்தான் சோதனையில் ஏற்றத்தின் சூழ்ச்சியையே பயன்படுத்துகிறான்; தேவனும் அவ்வாறே செய்கிறார்; ஆனால் விளைவு வேறுபட்டது. பிசாசு உங்களை உயரமான இடத்தில் வைக்கும்போது, மாம்சமும் இரத்தமும் ஒருபோதும் பொறுக்க முடியாத பரிசுத்தத்தைக்குறித்த கருத்தை நீங்கள் வற்புறுத்தும்படி அவன் செய்கிறான். அது ஆவிக்குரிய கழைக் கூத்தாட்டம்; நீங்கள் சமநிலையில் நடக்கிறீர்கள், நகரத் துணியமாட்டீர்கள்; ஆனால், தேவன் உங்களைத் தமது கிருபையால் உன்னதங்களுக்கு உயர்த்தும்போது, தொங்கிக்கொண்டிருக்கவேண்டிய ஒரு சிகரத்தைக் காண்பதற்குப்பதில், எளிதாக நடமாடக் கூடிய விசாலமான ஒரு பீடபூமியையே கண்டுகொள்வீர்கள்.

உங்களுடைய ஆவிக்குரிய வரலாற்றில், இந்த வாரத்தைக் கடந்த ஆண்டின் இதே வாரத்தோடு ஒப்பிட்டு, ஆண்டவர் உங்களை எவ்வாறு கூடுதல் உயரத்துக்கு அழைத்திருக்கிறார் என்பதைப் பாருங்கள். கூடுதல் உயர்வான கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்படி நாம் ஒவ்வொருவரும் கொண்டுவரப்பட்டுள்ளோம். நீங்கள் உடனடியாக நிறைவேற்றமுடியாத ஒரு சத்தியத்தையும் தேவன் ஒருபோதும் உங்களுக்குத் தராதிருக்கட்டும்; எப்போதும் அதை நடைமுறைப்படுத்துங்கள், அதன் ஒளியில் நடவுங்கள்.

நீங்கள் பின்வாங்கிப்போகவில்லை என்பதைக்கொண்டல்ல, ஆவிக்குரிய நிலையில் நீங்கள் எங்கிருக்கிறீர்கள் என்ற உள்ளறிவு உங்களுக்கு இருக்கிறது என்பதைக்கொண்டே கிருபையில் உங்கள் வளர்ச்சி அளக்கப்படுகிறது; உங்களோடு நேரடியாக அல்ல, உங்கள் நடத்தையின் உள்ளுணர்வுக்கே இங்கே ஏறிவா என்று தேவன் சொல்லுகிறதை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்.

நான் செய்யப்போகிறதை ஆபிரகாமிடமிருந்து மறைப்பேனோ என்று ஆண்டவர் கூறினார். தேவன் செய்வதை அவர் நமக்கு வெளிப்படுத்தத்தகுந்த இடத்துக்கு நம்முடைய நடத்தையில் நாம் வளருமட்டும் அவர் அதை நம்மிடமிருந்து மறைக்கவேண்டியதே.

ஏதோ தப்பெண்ணம் அங்கில்லையா?

நாம் மறுபடியும் யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள் என்றார். அதற்குச் சீஷர்கள்: . . . மறுபடியும் நீர் அவ்விடத்திற்குப் போகலாமா என்றார்கள். யோவான் 11:7,8.

இயேசுகிறிஸ்து சொல்லுகிறதை நான் புரிந்துகொள்ளாதிருக்கலாம், அதினால், அவர் சொன்னதில் தவறிவிட்டார் என்று கூறுவது ஆபத்து. தேவனுடைய ஒரு வார்த்தைக்கு நான் கீழ்ப்படிவது இயேசுவுக்கு அவமதிப்பு கொண்டுவரும் என்று எண்ணுவது ஒருபோதும் சரியல்ல. அவருக்குக் கீழ்ப்படியாமலிருப்பதே அவருக்கு அவமதிப்பு கொண்டுவரும் ஒரே காரியம். பகிரங்கமான அவமானத்துக்கு அவர் ஆளாவதைத் தடுக்கும் உண்மையான விருப்பத்திலிருந்து எழுந்தாலுங்கூட, நான் செய்யவேண்டுமென்று அவர் தெளிவாகத் தூண்டுகிற காரியத்தின் இடத்தில் அவருடைய கௌரவத்தைக்குறித்த என்னுடைய கருத்தை வைப்பது ஒருபோதும் சரியல்ல. தேவனிடத்திலிருந்து வரும் அறிவுரை அமைதியாகவும் விடாப்பிடியாகவும் இருப்பதினால் அது அவரிடத்திலிருந்துதான் வருகிறது என்று அறிகிறேன். அதற்கு ஆதரவாகவும் எதிராகவும் உள்ள வாதங்களை சீர்தூக்கவேண்டிய போதும், அதைக்குறித்து ஐயப்பாடும் விவாதமும் வரும்போதும், தேவனிடமிருந்து வராத ஒரு காரியத்தை நான் உட்புகுத்துகிறேன்; எனவே, அந்த ஆலோசனை சரியானதல்ல என்கிற முடிவுக்கு நான் வருகிறேன். நம்மில் பலரும் இயேசுகிறிஸ்துவைக்குறித்த நமது எண்ணங்களுக்கு விசுவாசமுடையவர்களாய் இருக்கிறோம்; ஆனால் நம்மில் எத்தனைபேர் அவருக்கு விசுவாசமுடையவர்களாய் இருக்கிறோம்? நான் ஒன்றையும் காணாத இடத்துக்குப் புறப்பட்டுச் செல்வதே கிறிஸ்துவிலுள்ள உண்மையான விசுவாசத்தின் பொருள் (மத்.14:29 பார்க்க); என் அறிவைக்கொண்டு முதலாவதாக ஆயத்தங்கள் செய்வதே என் கருத்துக்களில் விசுவாசம் வைப்பதின் பொருளாகும். புத்திபூர்வமாகப் புரிந்துகொள்வதல்ல விசுவாசம்; வழியேதும் நான் காணாதிருந்தும் ஒரு நபரிடத்தில் மனப்பூர்வமாக என்னை ஒப்படைப்பதே விசுவாசமாகும்.

இயேசுவில் விசுவாசம் வைத்து அடியெடுத்து வைக்கவேண்டுமா, அல்லது நீங்களாக அந்தக் காரியத்தைச் செய்யும் வழியைக் காணுமட்டும் காத்திருக்கவேண்டுமா என்று விவாதிக்கிறீர்களா? துணிச்சலான மகிழ்ச்சியோடு அவருக்குக் கீழ்ப்படியுங்கள். அவர் ஒன்றைச் சொல்லும்போது நீங்கள் விவாதிக்க ஆரம்பிக்கிறீர்களானால், அதன் காரணம், அவருடைய கௌரவமல்லாததை அவருடைய கௌரவம் என்று நீங்கள் கருதுகிறீர்கள். உங்கள் விசுவாசம் இயேசுவின்மீதா? அல்லது அவரைக்குறித்த உங்கள் கருத்தின்மீதா? அவர் சொல்லுகிறவைகளுக்கு விசுவாசமாயிருக்கிறீர்களா? அல்லது அவரிடமிருந்து ஒருபோதும் வராத கருத்துக்களோடு சமரசம் செய்ய முயற்சிக்கிறீர்களா? அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள்.

நமது ஆண்டவரின் எதிர்பாராத சந்திப்புக்கள்

ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள். லூக்கா 12:40.

ஒரு கிறிஸ்தவ ஊழியக்காரனுடைய மிகப்பெரிய தேவை இயேசு கிறிஸ்துவை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சந்திக்க ஆயத்தமாயிருப்பதாகும். நமது அனுபவம் எதுவாயிருந்தாலும், இது எளிதல்ல. இயேசுகிறிஸ்துவை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சந்திக்கும்படி ஆயத்தமாகாதவாறு, அவருடைய ஊழியத்தில் ஈர்க்கப்படுவதற்கெதிராகப் போராட்டமே தவிர பாவம் அல்லது பாடுகள் அல்லது சூழ்நிலைகளுக்கு எதிராக அல்ல. நம்முடைய நம்பிக்கையையும் நமது விசுவாசப்பிரமாணத்தையும் நாம் பயனுள்ளவர்களாயிருக்கிறோமா என்கிற கேள்வியையும் சந்திக்கிறதல்ல, அவரைச் சந்திப்பதுதான் ஒரே பெரிய தேவை.

நாம் இயேசுவை எதிர்பார்க்குமிடத்தில் அவர் அரிதாக வருகிறார்; நாம் சற்றும் எதிர்பாராத இடத்திலே, எப்பொழுதும் பொருத்தமற்ற தொடர்புகளில் அவர் தோன்றுகிறார். ஆண்டவரின் எதிர்பாராத சந்திப்புக்களுக்கு ஆயத்தமாயிருப்பதே ஒரு ஊழியக்காரன் தேவனுக்கு உண்மையாயிருப்பதற்குரிய ஒரே வழியாகும். சேவையல்ல, இயேசுகிறிஸ்துவை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எதிர்பார்த்திருக்கும் ஆழமான ஆவிக்குரிய யதார்த்தமே முக்கியம். இந்த எதிர்பார்ப்பு நம்முடைய வாழ்க்கையில் குழந்தையின் ஆச்சரியத்தைப்போன்ற நிலைமையைக் கொடுக்கும்; அதை நாம் பெற்றுக் கொள்ளவே அவர் விரும்புகிறார். நாம் இயேசுகிறிஸ்துவைச் சந்திக்க ஆயத்தமுள்ளவர்களாய் இருக்கவேண்டுமானால், பக்தியின் வேஷத்தை (அதாவது மார்க்கத்தை உயர்தர கலாச்சாரமாகப் பயன்படுத்துவதை) விட்டுவிட்டு உண்மையில் ஆவிக்குரியவர்களாய் மாறவேண்டும்.

நீங்கள் வாழுகிற சமயம்சார்ந்த காலத்தின் அழைப்பைத் தவிர்த்து, இயேசுவை மாத்திரம் நோக்கினவர்களாய், அவர் தேவைப்படுகிறவைகளின் மேல் உங்கள் இருதயத்தை வைத்து, அவரைப்போல சிந்திப்பீர்களானால், நீங்கள் நடைமுறைக்கொவ்வாதவர்கள் என்றும், மனக்கோட்டை கட்டுகிறவர்கள் என்றும் அழைக்கப்படுவீர்கள்; ஆனால், சகிக்கமுடியாத பகலின் வெப்பத்தில் அவர் வெளிப்படும்போது, நீங்கள் மாத்திரம் ஆயத்தமாயிருப்பீர்கள். உலகில் எக்காலத்திலும் வாழ்ந்த மிகச்சிறந்த பரிசுத்தவான் உட்பட யாரையும் நம்பாதீர்கள்; இயேசுகிறிஸ்துவை நீங்கள் நோக்கிப் பார்ப்பதை அவர் தடுப்பாரேயானால் அவரைத் தவிர்த்துவிடுங்கள்.

பரிசுத்தமா? அல்லது தேவனுக்குநேரான கடினமா?

விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார். ஏசா.59:16.

நம்மில் பலரும் ஜெபிப்பதை விட்டுவிட்டு தேவனுக்குநேராகக் கடினப் படுவதின் காரணம், ஜெபத்தில் நமக்கு உணர்ச்சிபூர்வமான அக்கறை மாத்திரம் இருப்பதே. நாம் ஜெபிக்கிறோமென்று கூறுவது கேட்க நன்றாய்த் தானிருக்கிறது; ஜெபிப்பது பயனுள்ளதென்றும், நாம் ஜெபிக்கும்போது நமது மனது அமைதி அடைகிறது மற்றும் நமது ஆத்துமா புத்துணர்ச்சியடைகிறது என்றும் நமக்குக் கூறுகிற ஜெபத்தைக்குறித்தப் புத்தகங்களை நாம் படிக்கி றோம்; ஆனால், ஜெபத்தைப்பற்றிய அத்தகைய எண்ணங்களைக்குறித்து தேவன் ஆச்சரியப்படுகிறாரென்று ஏசாயா குறிப்பிடுகிறார்.

ஆராதனையும் மன்றாட்டும் இணைந்திருக்கவேண்டும்; ஒன்றில் லாமல் அடுத்தது சாத்தியமல்ல. நாம் யாருக்காக ஜெபிக்கிறோமோ, அவரைக் குறித்து கிறிஸ்து கொண்டுள்ள சிந்தையைப் பெற்றுக்கொள்ளுவதற்கு நம்மை உயர்த்துவதுதான் விண்ணப்பஞ்செய்வதாகும். அடிக்கடி தேவனை ஆராதிப்பதற்குப்பதில், ஜெபம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைக்குறித்த அறிக்கையை ஆயத்தஞ்செய்கிறோம். நாம் ஆராதிக்கிறோமா? அல்லது, நீர் இதை எவ்வாறு செய்யப்போகிறீரென்று எனக்குத் தெரியவில்லை என்று தேவனோடு தர்க்கிக்கிறோமா? நாம் தேவனை ஆராதிக்கவில்லை என்பதற்கு இது நிச்சயமான அடையாளம். நாம் தேவனை மறக்கும்போது, கண்டிப்பும் பிடிவாதமும் உள்ளவர்களாகிறோம். நம்முடைய சொந்த விண்ணப்பங்களை தேவனுடைய சிங்காசனத்தில் வீசிவிட்டு, அவர் என்ன செய்யவேண்டுமென்று நாம் விரும்புகிறதை அவருக்கு உத்தரவிடுகிறோம். நாம் தேவனை ஆராதிப் பதுமில்லை, கிறிஸ்துவின் சிந்தையை உருவாக்கத் தேடுவதுமில்லை. நாம் தேவனுக்குநேராகக் கடினமாயிருப்போமானால், பிறமக்களுக்கு நேராகவும் நாம் கடினமாக மாறுவோம்.

நாம் யாருக்காக ஜெபிக்கிறோமோ, அவரைக்குறித்த தேவனுடைய சிந்தையோடுள்ள தொடர்பில் நாம் கொண்டுவரப்படும்படி, தேவனைப் பற்றிக் கொள்ள நம்மை உயர்த்தத்தக்கதாக நாம் தேவனை ஆராதிக்கிறோமா? தேவனோடுள்ள தூய்மையான உறவில் நாம் வாழுகிறோமா? அல்லது நாம் கடினமும் பிடிவாதமும் உள்ளவர்களாயிருக்கிறோமா?

தகுதியாக விண்ணப்பம் பண்ணுகிறவன் ஒருவனுமில்லை--நீங்கள் விண்ணப்பம் பண்ணுகிற ஒருவனாயிருங்கள்; நீங்கள் தேவனை ஆராதிக் கிறவர்களும், அவரோடுள்ள தூய்மையான உறவில் வாழுகிறவர்களுமான ஒருவராயிருங்கள். மன்றாடுகிறதாகிய வேலையில் பிரவேசியுங்கள்; அது ஒரு வேலை, அது சகல ஆற்றலையும் வருத்துகிறதும் கண்ணி இல்லாதது மான வேலை என்பதை மறவாதிருங்கள். சுவிசேஷத்தை அறிவிப்பதில் கண்ணி உண்டு; விண்ணப்பம் பண்ணுகிறதில் கண்ணி ஒன்றும் இல்லை.

ஜாக்கிரதையா? அல்லது நம்மில் மாய்மாலமா?

மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல்செய்யக்கடவன், அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார்; யாருக்கென்றால், மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்கே. 1 யோவான் 5:16.

தேவனுடைய ஆவியானவர் நம்மில் செயல்படும் வழியைக் குறித்து நாம் கவனமற்றிருந்தால், நாம் ஆவிக்குரிய மாய்மாலக்காரராக மாறுவோம். மற்ற மக்கள் எங்கு தோல்வியடைகிறார்கள் என்பதைக் காண்கிறோம்; நமது பகுத்தறிவை அவர்களுக்கான மன்றாட்டாக மாற்றுவதற்குப் பதில், அவர்களை ஏளனமாக விமர்சிக்கிறோம். நம்முடைய மதிநுட்பத்தின் மூலமாய் அல்ல, தேவஆவியானவருடைய நேரடி ஊடுருவலினாலேயே நமக்கு வெளிப்படுத்தல் கொடுக்கப்பட்டது; வெளிப்படுத்தலின் ஆதாரத்தைப் பற்றி கவனமுள்ளவர்களாயிராவிட்டால், விமர்சிக்கும் மையங்களாய் நாம் மாறுவதோடு, மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்காக நாம் வேண்டுதல்செய்யவேண்டுமென்றும், அப்போது அவர் அவர்களுக்கு ஜீவனைக் கொடுப்பாரென்றும் தேவன் சொன்னதை மறந்துபோகிறோம். நீங்களாக தேவனை ஆராதிக்குமுன், மற்றவர்களைச் சரிசெய்ய முயற்சி செய்வதில் உங்கள் காலம் முழுவதையும் செலவிடும் மாய்மாலக்காரராய் இராதபடி கருத்தாயிருங்கள்.

பரிசுத்தவான்களாகத் தேவன் நம்மீது எக்காலத்தும் வைத்துள்ள மிகவும் மெல்லிய பாரங்களில் ஒன்று மற்ற ஆத்துமாக்களைக்குறித்துப் பகுத்தறியும் பாரமே. அந்த ஆத்துமாக்களின் பாரத்தைத் தேவனுக்குமுன் கொண்டுசெல்லவும், அவர்களைக்குறித்த கிறிஸ்துவின் சிந்தையை நாம் நம்மில் உண்டாக்கவுமே காரியங்களைத் தேவன் நமக்கு வெளிப்படுத்துகிறார்; அவருடைய வழியில் நாம் அவர்களுக்காகப் பரிந்துபேசும்போது, மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களின் ஜீவனை நமக்குக் கொடுப்பதாகத் தேவன் கூறியுள்ளார். நம்முடைய சிந்தைகளோடுத் தெடர்பு கொள்ள நாம் தேவனைக் கொண்டுவருவதல்ல, நாம் யாருக்காக மன்றாடுகிறோமோ அவரைக்குறித்துத் தேவன் தமது சிந்தையை நமக்கு வெளிப்படுத்தக்கூடியதுவரை நம்மை நாம் உயர்த்தவேண்டும்.

தம்முடைய ஆத்தும வியாகுலத்தை இயேசுகிறிஸ்து நம்மில் காண்கிறாரா? நாம் யாருக்காக ஜெபிக்கிறோமோ அம்மக்களைக்குறித்த அவருடைய கருத்தை அறிந்துகொள்ள நாம் உயர்த்தப்பட்டு, அவரோடு ஒன்றிக்குமட்டும் அவரால் அதைக் காணமுடியாது. மன்றாடுகிறவர்களாக நம்மைக்குறித்து இயேசுகிறிஸ்து பூரணத் திருப்திகொள்ளத்தக்கதாக நாம் முழு இருதயத்தோடு வேண்டுதல்செய்யக் கற்றுக்கொள்ளுவோமாக!

பிறருக்குநேராக நேர்மையா, அல்லது கல்நெஞ்சா?

கிறிஸ்துவே . . . நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே. ஆவியானவர்..... பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறார். ரோமர் 8:34,27.

கிறிஸ்து வேண்டுதல் செய்யும்படிக்கு எப்பொழுதும் உயிரோடிருக் கிறார், ஆவியானவர் பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறார் என்கிற வசனங்களைவிட வேண்டுதல் செய்கிறவர்களாவதற்குக் கூடுதல் வாதங்கள் நமக்குத் தேவையா? ஆவியானவர் தேவனுடைய பிள்ளை களுக்குக் கற்றுக்கொடுத்ததுபோல, நாமும் விண்ணப்பமாகிய சேவையைச் செய்வதற்குத்தகுந்து சகமனிதரோடு நெருங்கிய உறவில் வாழுகிறோமா? நாம் இருக்கிற சூழ்நிலைகளில் ஆரம்பிப்போம்--நமது குடும்பங்கள், நமது தொழில், நமது நாடு, நம்மையும் பிறரையும் பாதிக்கிற நிலையிலுள்ள தற்கால நெருக்கடி--இக்காரியங்கள் நம்மை நொறுக்குகின்றனவா? இவை தேவனுடைய சமுகத்தைவிட்டு நம்மை நெருக்கித்தள்ளி ஆராதனைக்கு நேரமில்லாமல் ஆக்குகின்றனவா? அப்படியானால் அவைகளை நிறுத்தி வைப்போம்! பிறரோடுள்ள நம்முடைய உறவு வேண்டுதலினால் பராமரிக்கப் படும்படி தேவனோடு உயிருள்ள உறவுக்குள் பிரவேசிப்போம்; அதன்மூலம் தேவன் அவருடைய அற்புதங்களைச் செயல்படுத்துவார்.

தேவனுடைய சித்தத்தைச் செய்யும் உங்கள் ஏக்கத்தில் அவரை முந்தாதிருக்க எச்சரிக்கையாயிருங்கள். ஆயிரத்தொரு செயல்களில் நாம் அவருக்கு முன்னாக ஓடுகிறோம்; அதின் விளைவாக, மக்களாலும் கஷ்டங் களாலும் மிகவும் அதிகம் பாரம் அடைவதினால் நாம் தேவனை ஆராதிப்ப தில்லை, மன்றாடுவதில்லை. பாரமும் அழுத்தமும் நம்மீது வந்து, நாம் ஆராதிக்கும் மனநிலையில் இல்லாதிருப்போமானால், அது தேவனுக்கு நேரான இருதயக்கடினத்தை உண்டாக்குவது மாத்திரமல்ல, நம்முடைய ஆத்துமாவில் சோர்பைக் கொண்டுவரும். நாம் நேசிக்காத மக்களோடு தேவன் நம்மைத் தொடர்பாக அறிமுகஞ்செய்கிறார்; நாம் தேவனை ஆராதித்தாலன்றி நாம் செய்யும் இயல்பான காரியம் அவர்களை இரக்க மற்று நடத்துவது, அவர்களுக்கு ஈட்டி குத்துவதுபோன்று ஒரு வசனத்தைச் சொல்லுவது, அல்லது துரிதமாக தேவனுடைய ஒரு ஆலோசனையை அவர்களிடம் கூறிவிட்டு அங்கிருந்து போய்விடுவதாகும். இரக்கமற்ற கிறிஸ்தவன் நம்முடைய ஆண்டவருக்கு அதிக வேதனையாய்த்தான் இருப்பான்.

நம்முடைய ஆண்டவரும் பரிசுத்த ஆவியானவரும் செய்கிற மன்றாட்டுப்போல் இருக்கிறதா நம்முடைய மன்றாட்டு?

சிறப்புறும் மகிமை

கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கு . . . என்னை அனுப்பினார். அப்.9:17.

பவுல் பார்வையடைந்தபோது, இயேசுகிறிஸ்துவின் ஆளத்துவத்தைக்குறித்து ஆவிக்குரிய உள்ளறிவு பெற்றார்; எனவே, அவருடைய பிற்கால வாழ்க்கை மற்றும் அவருடைய போதனை முழுவதும் இயேசுகிறிஸ்துதவிர வேறொன்றுமில்லை--இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன் என்று அவர் கூறினார். இயேசுகிறிஸ்துவின் முகம் தவிர வேறொரு கவர்ச்சியும் பவுலின் மனதையும் ஆத்துமாவையும் பற்றிக்கொள்ள அவர் அனுமதிக்கவில்லை.

இயேசுகிறிஸ்துவைக்குறித்தத் தரிசனத்தில் வெளிப்படுத்தப்பட்ட ஒழுக்கத்தின் வலிமைகுன்றாத நிலையைக் கடைசிப் படிவரைப் பராமரிக்க நாம் கற்றுக்கொள்ளவேண்டும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தனக்குத் தெளிவாக்குவதும், தேவனுடைய நோக்கங்களைப் பிறருக்குத் தெளிவாக்குவதுமே ஒரு ஆவிக்குரிய நபருடைய நிரந்தரமானத் தன்மையாகும். வாழ்க்கையின் முனைப்பான ஆவல் இயேசுகிறிஸ்துவே. இத்தன்மையை ஒரு மனிதனில் நீங்கள் காணும்போதெல்லாம், அவர் தேவனுடைய இருதயத்துக்குப் பிரியமான மனிதர் என்று உணருகிறீர்கள்.

இயேசுகிறிஸ்துவைக்குறித்த ஆழ்ந்த அறிவிலிருந்து உங்களைத் திசைதிருப்ப எதற்கும் இடங்கொடாதேயுங்கள். நீங்கள் ஆவிக்குரியவர்களா, இல்லையா என்பதற்கான சோதனை அதுவே. இயேசுகிறிஸ்துவைத்தவிர மற்றக் காரியங்கள் உங்களுக்கு அதிகக் கவர்ச்சியாய்த் தோன்றுமானால், நீங்கள் ஆவிக்குரியவர்களல்ல என்று பொருளாகிறது.

இயேசுவை என் கண்கள் நோக்கியபின்,
மற்றெல்லாம் கண்களுக்கு மறைந்துவிட்டன;
என் ஆவியின் தரிசனம் கட்டவிழ்ந்தது,
சிலுவையில் அறையப்பட்டவரை நோக்கியபோது.

நீ அறிந்திருந்தாயானால்!

இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந் தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது. லூக்கா 19:42.

இயேசு வெற்றியோடு எருசலேமுக்குள் பிரவேசித்தார், பட்டணம் அஸ்திவாரம் முதல் அசைந்தது; ஆனால், பரிசேயத்தின் பெருமையாகிய ஒரு அந்நிய தெய்வம் அங்கிருந்தது; அது மார்க்கப்பற்றும் நேர்மையும் கொண்டதாயிருந்தாலும், அது வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையே.

என்னுடைய நாளாகிய இன்று என் கண்களைக் குருடாக்குவது எது? என்னிடம் ஒரு அந்நிய தெய்வம் உண்டா?--அது அருவருப்பான அரக்கனல்ல, என்னை ஆட்சிசெய்கிற மனநிலையே. பலவேளைகளில் தேவன் என்னை அந்நிய தெய்வத்தோடு முகாமுகமாகக் கொண்டுவந்தார்; இணங்கவேண்டியதோ என்று எண்ணினேன், ஆனால் நான் அவ்வாறு செய்யவில்லை. நான் நெருக்கடியை மயிரிழையில் சமாளித்தேன், இன்னும் அந்நிய தெய்வம் என்னிடம் இருக்கக் கண்டேன்; என்னுடைய சமாதானத்துக்கேற்றவைகளை நான் காணக்கூடாதவனாயிருக்கிறேன். பரிசுத்த ஆவியானவர் தடையில்லாதபடி நம்மை நெருங்கக்கூடிய இடத்தில் நாம் இருக்கக்கூடியதாயிருந்தும், தேவனுடைய பார்வையில் நம்முடைய ஆக்கினையைக் கூட்டுவது திடுக்கிடக்கூடிய காரியமாகும்.

நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும்--தேவன் இருதயத் தோடு நேரடியாக இடைபடுகிறார், அதற்குப்பின்னால் இயேசுவின் கண்ணீர் உண்டு. இந்த வார்த்தைகள் குற்றத்துக்குரிய பொறுப்பை மறைமுகமாகக் குறிப்பிடுகின்றன; நாம் காணாதவைகளுக்குத் தேவன் நம்மைப் பொறுப் பாக்குகிறார். இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக் கிறது--ஏனெனில், மனநிலை ஒருபோதும் சரணடையவில்லை. "அப்படி இருந்திருக்கலாம்" என்பதின் அளக்கமுடியாத துக்கந்தான் என்னே! அடைக்கப்பட்ட கதவுகளைத் தேவன் ஒருபோதும் திறப்பதில்லை. வேறு கதவுகளைத் தேவன் திறக்கிறார்; ஒருபோதும் அடைக்கத் தேவைப்படாத கதவுகளும், ஒருபோதும் கறைப்படுத்தப்படக்கூடாத கற்பனைகளுமாகிய சில கதவுகளை நாம் அடைத்திருக்கிறோம் என்று தேவன் நம்மை நினைவு படுத்துகிறார். கடந்தகாலத்தைத் தேவன் நினைவுபடுத்தும்போது ஒருபோதும் பயப்படாதேயுங்கள். நினைவு அதன் விருப்பப்படி செயல்படட்டும். அது கண்டித்து, சிட்சித்து, துக்கப்படுத்துகிற தேவனுடைய ஊழியக்காரனாயிருக் கிறது; அப்படி இருந்திருக்கலாம் என்பதைத் தேவன் வருங்காலத்துக்கான அற்புதமானக் கலாச்சாரமாக மாற்றுவார்.

அவநம்பிக்கையின் அந்த ஓரங்கள்

இதோ, நீங்கள் சிதறுண்டு (போகும்) . . . . . காலம் வரும். யோவான் 16:32.

இயேசு சீஷர்களைக் கடிந்துகொள்ளவில்லை, அவர்களுடைய விசுவாசம் மெய்யானது; ஆனால் அது தடுமாறினது, அது நடைமுறைக் காரியங்களில் செயல்படவில்லை. சீஷர்கள் தங்கள் சொந்த ஆர்வங்களுக்குச் சிதறிப்போனார்கள்; இயேசுகிறிஸ்துவில் ஒருக்காலும் இருந்திராத ஆவல்களில் அவர்கள் ஊக்கம் காண்பித்தார்கள். பரிசுத்தமாகுதல்மூலமாக நாம் தேவனோடு பரிபூரண உறவுக்குள் வந்தபின், நம்முடைய விசுவாசம் நடைமுறைக் காரியங்களில் செயல்படவேண்டும். சேவைக்குள் அல்ல, உட்புறமான பாழ்நிலைகளுக்குள் நாம் சிதறடிக்கப்பட்டு, தேவனுடைய ஆசீர்வாதங்களுக்குள்ளான மரணத்தின் கருத்தை அறிந்துகொள்வோம். இதற்கு நாம் ஆயத்தமா? இதை நாம் தெரிந்துகொள்வதில்லை, நாம் அங்கு கொண்டுவரப்படுவதற்காகத் தேவனே நம் சூழ்நிலைகளைத் திட்டமிடுகிறார். அந்த அனுபவம்வழியாக நாம் கடந்துசெல்லும்வரை நம்முடைய விசுவாசம் உணர்ச்சிகளினாலும் ஆசீர்வாதங்களினாலும் தாங்கப்படுகிறது. அந்நிலை நாம் சென்றடையும்போது தேவன் நம்மை எங்கு வைத்தாலும், உள்ளான பாழ்நிலை எவ்வாறிருந்தாலும், எல்லாம் நன்றாயிருக்கிறதென்று நாம் தேவனை ஸ்தோத்தரிக்கமுடியும். இதுதான் நடைமுறையில் செயல்படுத்தப்படும் விசுவாசம்.

என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும் என்று இயேசு கூறினார். இயேசுவின் முன்கருதலைச் சிதறடிப்பதினால் அவரைத் தனியே விட்டிருக்கிறோமா? நம்முடைய சூழ்நிலையில் தேவனைக் காணவில்லை என்ற காரணத்தால் நாம் அவரைத் தனியே விடுகிறோமா? தேவனுடைய திருச்சித்தப்படியே அந்தகாரம் வருகிறது. தேவன் தமது சித்தத்தின்படியே நம்மில் செயல்படுவதற்கு அனுமதிக்க நாம் ஆயத்தந்தானா?--வெளியரங்கமான ஆசீர்வாதங்களிலிருந்து வேறுபடுத்தப்பட நாம் ஆயத்தந்தானா? இயேசுகிறிஸ்து நம்முடைய கர்த்தராகுமட்டும் சுயநலமான இலக்குகள் நமக்குண்டு; நம்முடைய விசுவாசம் மெய்தான், ஆனால் இதுவரையிலும் அது நிலையானதல்ல. தேவன் ஒருபோதும் ஆத்திரப்படுகிறவரல்ல; நாம் காத்திருப்போமானால், அவரில் அல்ல, அவருடைய ஆசீர்வாதங்களில் நாம் ஆர்வங்கொள்ளுகிறோம் என்பதைத் தேவன் நமக்குச் சுட்டிக்காண்பிக்கிறதை நாம் கண்டுகொள்ளுவோம். தேவனுடைய ஆசீர்வாதங்களைக் குறித்த உணர்வு அடிப்படையானது.

திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்று இயேசு கூறினார். நமக்குத் தேவை ஆவிக்குரிய மனோதிடமே.

அவருடைய வியாகுலமும் நம்முடைய கூட்டுறவும்

இயேசு அவர்களோடே கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்து, சீஷர்களை நோக்கி: ... நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள் என்று சொன்னார். மத்.26:36,38.

கெத்செமனேயின் வியாகுலத்தை நாம் ஒருபோதும் அளக்க முடியாது; ஆனால் குறைந்தது அதை நாம் தவறாகப் புரிந்துகொள்ளாம லிருக்கவேண்டும். தேவனும் மனிதனும் ஒருவராய்ப் பாவத்தை நேருக்கு நேர் சந்தித்ததாலுண்டான வியாகுலமே அது. சொந்த அனுபவத்தில் கெத்செமனேயைக்குறித்து நமக்கு ஒன்றும் தெரியாது. கெத்செமனேயும் கல்வாரியும் நிகரற்ற ஏதோவொன்றின் அடையாளமாயிருக்கின்றன; அவை நமக்கு ஜீவனுக்கான நுழைவாயில்.

கெத்செமனேயில் இயேசு அஞ்சியது சிலுவை மரணத்தைக்குறித் தல்ல; மரிக்கும் நோக்கத்தோடேயே வந்ததாக அவர் மிகவும் அழுத்தமாகக் கூறினார். மனிதகுமாரனாக அதை நிறைவேற்றமுடியாதோ என்றுதான் கெத்செமனேயில் அவர் பயப்பட்டார். தேவகுமாரனாக அதை அவர் நிறைவேற்றமுடியும்--சாத்தான் அங்கு அவரைத் தொடமுடியாது; அவர் ஒரு தனித்துவிடப்பட்ட நபராக மாத்திரம் அதை நிறைவேற்றட்டும் என்பதே சாத்தானின் பலமானத் தாக்குதல்; அவ்வாறாயின் அவர் இரட்சகரல்ல என்பதே பொருளாகும். (வனாந்தரத்தின்) சோதனையின் வெளிச்சத்தில் (கெத்செமனேயின்) வியாகுலத்தைக்குறித்த அறிக்கையை வாசியுங்கள்: அதற்குப்பின் சாத்தான் சிலகாலம் அவரைவிட்டு விலகிப்போனான் என்று அங்கு வாசிக்கிறோம். கெத்செமனேயில் அவன் அவரிடம் திரும்பிவந்தான், மறுபடியும் தோல்வியடைந்தான். மனிதகுமாரனாக நமது ஆண்டவரைச் சாத்தான் இறுதியாகக் கடுமையாய்த் தாக்கியது கெத்செமனேயில்தான்.

உலகத்தின் இரட்சகராகத் தமது நோக்கத்தை நிறைவேற்றியதில் தேவகுமாரன் அடைந்த வியாகுலமே கெத்செமனேயின் வியாகுலமாகும். நாம் தேவனுடைய பிள்ளைகளாவதைச் சாத்தியமாக்க அவர் கொடுத்த முழுக் கிரயத்தையும் வெளிப்படுத்துவதற்காகத் திரைச்சீலை விலக்கப் பட்டது. அவருடைய வியாகுலம் நாம் எளிமையாய் இரட்சிப்படைவதற்கான அடிப்படை. கிறிஸ்துவின் சிலுவை மனிதகுமாரன் அடைந்த வெற்றி. அது நம்முடைய ஆண்டவர் வெற்றிபெற்றார் என்பதற்கு மட்டுமல்ல, அவர் மனுக்குலத்தை இரட்சிப்பதற்கு வெற்றிபெற்றார் என்பதின் அடையாளமுமாகும். மனிதகுமாரன் அனுபவித்த வியாகுலத்தினால் ஒவ்வொரு மனிதனும் இப்போது தேவனுடைய சமுகத்திற்குள் செல்லலாம்.

தேவனுக்கும் பாவத்திற்குமிடையேயுள்ள மோதல்

அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். 1 பேதுரு 2:24.

பாவத்தின்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்படுத்தப்பட்டதே இயேசுவின் சிலுவையாகும். இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக்குறித்து, அது இரத்தசாட்சி மரணம் என்ற கருத்தை ஒருபோதும் சகித்துக்கொள்ளாதீர்கள். சிலுவை ஒரு ஒப்புயர்வற்ற வெற்றியே; அந்த வெற்றியினால் நரகத்தின் அஸ்திவாரங்கள் அசைக்கப்பட்டன. இயேசுகிறிஸ்து சிலுவையில் எதைச் செய்தாரோ அதைவிடக் கூடுதல் காலத்துக்கும் நித்தியத்துக்கும் நிச்சயமானது வேறொன்றுமில்லை: அவர் மனுக்குலம் முழுவதையும் தேவனோடுள்ள சரியான உறவுக்கு மறுபடியும் திருப்பிக்கொண்டுவந்தார். மனித வாழ்க்கைக்கு மீட்பை அவர் அடிப்படையாக்கினார்; அதாவது அவர் ஒவ்வொரு மனிதகுமாரனும் தேவனோடுள்ள தோழமைக்குள்ளாகும் படியான வழிவகுத்தார்.

சிலுவைமரணம் இயேசுவுக்குத் தற்செயலாய் நடந்ததல்ல; அவர் திட்டமிட்டு அதற்காகவே வந்தார். அவர் உலகத்தோற்றத்துக்குமுன்னே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி. அவதாரத்தின் முழுக்கருத்தும் சிலுவையே. பாவமான குமாரனிலிருந்து மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனை வேறுபிரிக்காதிருக்க எச்சரிக்கையாயிருங்கள். அவதாரம் மீட்பின் நோக்கத்துக்காகவே. பாவத்தை அழிக்கும் நோக்கத்துக்காகவே தேவன் அவதாரமானார், தன் சொந்த ஆற்றலை நிறைவேற்றுவதற்காக அல்ல. சிலுவை காலத்துக்கும் நித்தியத்துக்கும் மையம்; அந்த இரண்டின் புதிருக்குரிய விடையும் அதுவே.

கல்வாரிச் சிலுவை ஒரு மனிதனுடைய சிலுவையல்ல, அது தேவனுடைய சிலுவையே; தேவனுடைய சிலுவையை மனித அனுபவத்தில் ஒருபோதும் புரிந்துகொள்ளமுடியாது. தேவனுடைய இயற்கை வெளிப்படுத்தப்பட்டதே சிலுவை, அது மனுக்குலத்தின் எந்தத் தனிநபரும் தேவனோடு ஐக்கியத்துக்குள் பிரவேசிக்கக்கூடிய நுளைவாயில். நாம் சிலுவையண்டை அடையும்போது, அதைக் கடந்துசெல்வதில்லை; சிலுவையை நுளைவாயிலாகக்கொண்ட வாழ்க்கையில் நாம் தங்கியிருக்கிறோம்.

இரட்சிப்பின் மையம் இயேசுவின் சிலுவையே; இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளுவது எளிதாயிருப்பதின் காரணம் தேவன் பெரிய கிரயம் கொடுத்ததே. தேவனும் பாவ மனிதனும் மோதி நொறுங்கி ஒன்றுசேருகிற இடமே சிலுவை; அங்கு ஜீவனின் வழி திறக்கிறது; ஆனால் நொறுங்குவது தேவனுடைய இருதயமே.

நமக்கு ஏன் தெளிவாகக் கூறப்படவில்லை

அவர் அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும், நீங்கள் கண்டவைகளை ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்று கட்டளையிட்டார். மாற்கு 9:9.

மனிதகுமாரன் உங்களில் உயிர்த்தெழுகிறதுவரைக்கும், அதாவது வரலாற்றில் வந்த கிறிஸ்து கற்பித்தவைகளை நீங்கள் புரிந்துகொள்ளுமளவுக்கு உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் ஜீவன் உங்களை ஆட்கொள்ளுமட்டும் நீங்கள் ஒன்றும் சொல்லவேண்டாம். நீங்கள் உள்ளான மனிதனில் சரியான நிலைக்கு வரும்போது, இயேசு கூறிய வார்த்தைகள் உங்களுக்கு மிகவும் தெளிவாயிருப்பதினால் அதை முன்னே கண்டுகொள்ளவில்லையே என்று நீங்கள் வியப்படைவீர்கள். முன்னே அவைகளைத் தாங்கக்கூடிய மனநிலையில் இல்லாதிருந்தபடியால் உங்களால் அவைகளைப் புரிந்து கொள்ளமுடியவில்லை.

நம்முடைய ஆண்டவர் இக்காரியங்களை மறைக்கிறதில்லை; ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் தகுந்த நிலை அடையுமட்டும், அவைகள் தாங்கமுடியாதவை. இன்னும் அநேகங் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள் என்று இயேசு கூறினார். நாம் ஒரு குறிப்பிட்ட வார்த்தையைத் தாங்கிக்கொள்ளுவதற்குமுன், அவருடைய உயிர்த்தெழுந்த ஜீவனோடுள்ள கூட்டுறவு வேண்டும். இயேசுவின் உயிர்த்தெழுந்த ஜீவன் பகிர்ந்துகொடுக்கப்படுவதைக்குறித்து நமக்கு ஏதாவது தெரியுமா? நாம் தெரிந்திருக்கிறோமென்பதின் தெளிவு, அவருடைய வார்த்தைகள் நமக்கு வியாக்கியானிக்கக் கூடியவையாகின்றன. தேவனுடைய ஆவி நம்மில் இல்லையென்றால் அவர் நமக்கு ஒன்றையும் வெளிப்படுத்தமுடியாது. பிடிவாதமான மனோபாவம் தேவன் நமக்கு எதையாவது வெளிப்படுத்துவதை வெற்றிகரமாகத் தடைசெய்யும். ஒரு உபதேசத்தைக்குறித்து நாம் ஒரு தீர்மானம் எடுத்திருந்தால், அதன்பின் அந்த உபதேசத்தில் தேவனுடைய ஒளி நமக்கு வராது, நாம் அதைப் பெற்றுக்கொள்ளமுடியாது. ஆனால், அவருடைய உயிர்த்தெழுந்த ஜீவன் நம்மில் முழுச்சுயாதீனம் எடுக்கும்போது, இவ்வாறுள்ள மந்தநிலை உடனடியாக முடிவடையும்.

ஒருவருக்கும் சொல்லவேண்டாம்--மறுரூபமலையில் தாங்கள் கண்டதைப் பலர் கூறுகிறார்கள். அவர்கள் தரிசனத்தைக் கண்டார்கள், அதற்கு அவர்கள் சாட்சிகூறுகிறார்கள்; ஆனால், அவர்கள் வாழ்க்கை அதற்கு ஒத்துப்போகவில்லை, மனிதகுமாரன் அவர்களில் இன்னும் உயிர்த்தெழவில்லை. அவர் எப்போது உங்களிலும் என்னிலும் உருவாகப் போகிறார் என்று நான் வியப்படைகிறேன்.

அவருடைய உயிர்த்தெழுதலின் இறுதி நோக்கம்

கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா? லூக்கா 24:26.

நமது ஆண்டவரின் சிலுவை அவருடைய ஜீவனுக்குள்ளான நுளைவாசல்: அவருடைய ஜீவனை எனக்கு வழங்க இப்போது அவருக்கு வல்லமையுண்டு என்பதே அவருடைய உயிர்த்தெழுதலின் கருத்தாகும். நான் உன்னதத்திலிருந்து மறுபடியும் பிறக்கும்போது, உயிர்த்தெழுந்த ஆண்டவரிடமிருந்து அவருடைய ஜீவனையே நான் பெறுகிறேன்.

அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்ப்பதே நமது ஆண்டவருடைய உயிர்த்தெழுதலின் நோக்கமாகும். அந்த நோக்கத்தை அவர் நிறைவேற்றியது நம்மைத் தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாக்கும் உரிமையை அவருக்குக் கொடுத்தது. தேவகுமாரனுக்குத் தேவனோடு இருக்கிற அதே உறவு நமக்குத் தேவனோடு ஒருபோதும் இருக்கிறதில்லை; ஆனால், புத்திரத்துவ உறவுக்குள் குமாரனால் நாம் கொண்டுவரப்பட்டுள்ளோம். நமது ஆண்டவர் மரித்தோரிலிருந்து எழுந்த போது ஒரு முற்றிலும் புதிய வாழ்க்கைக்கு, அதாவது அவர் மானுடவதாரம் எடுப்பதற்குமுன் அவர் வாழ்ந்திராத வாழ்க்கைக்கு அவர் உயிர்த்தெழுந்தார். முன்பு ஒருபோதும் இருந்திராத ஒரு வாழ்க்கைக்கே அவர் உயிர்த்தார்; நம்முடைய பழைய வாழ்க்கைக்கல்ல, அவருடைய உயிர்த்தெழுந்த வாழ்க்கைக்கே நாம் எழுப்பப்பட்டுள்ளோம் என்றே அவருடைய உயிர்த்தெழுதல் நமக்குப் பொருளாகிறது. ஒரு நாள் அவருடைய மகிமையான சரீரத்தை ஒத்த சரீரத்தை நாம் அடைவோம்; ஆனால், இப்போது அவருடைய உயிர்த்தெழுதலின் பலாபலனை அறியவும், புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடக்கவும் நம்மால் முடியும். நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அறியவேண்டும் என்று பவுல் கூறினார்.

நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங்கொடுத்தீர் என்று இயேசு ஜெபித்தார். மனுமக்களில் இங்கு, இப்போதே செயல்படுகிற நித்தியஜீவனுக்கு அனுபவரீதியான பெயரே பரிசுத்த ஆவியானவர். பிராயச்சித்தத்தை நமது அனுபவத்திற்குப் பயன்படுத்த செயல்படும் வல்லமைகொண்ட தெய்வீகமே பரிசுத்த ஆவியானவர். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! நாம் ஆவியானவருக்குக் கீழ்ப்படிவோமானால், இயேசுவிலிருக்கும் அதே தன்மையை நமக்குள்ளே அவர் உருவாக்குகிறாரென்பது மகிமையும் மகத்துவமுமான உண்மை.

நான் அவரைக் கண்டிருக்கிறேனா?

அதன்பின்பு அவர்களில் இரண்டுபேருக்கு....மறுரூபமாய்த் தரிசனமானார். மாற்கு 16:12.

இரட்சிக்கப்படுவதும் இயேசுவைக் காண்பதும் ஒரே காரியம் அல்ல. இயேசுவை ஒருபோதும் கண்டிராத அநேகர் தேவனுடைய கிருபைக்குப் பங்காளிகளாயிருக்கிறார்கள். நீங்கள் இயேசுவை ஒருமுறை கண்டால் ஒருபோதும் மாறுதல் இல்லாமல் இருக்கமுடியாது; முன்பு வழக்கமாய்க் கவர்ச்சியாயிருந்த காரியங்கள் இப்போது அப்படி இருப்பதில்லை.

நீங்கள் இயேசுவை யாராய்க் காண்கிறீர்கள் என்பதையும், அவர் உங்களுக்கு என்ன செய்திருக்கிறார் என்பதையும் எப்போதும் வேறுபடுத்துங்கள். அவர் உங்களுக்குச் செய்திருக்கிறதைமாத்திரம் நீங்கள் அறிவீர்களானால், உங்கள் தேவன் போதுமான அளவு பெரியவரல்ல; ஆனால், இயேசு இருக்கிறபிரகாரமாக அவருடைய தரிசனத்தை நீங்கள் பெற்றால், அனுபவங்கள் வந்து போகலாம், நீங்களோ அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல நிலைத்திருப்பீர்கள். பிறவிக் குருடனுக்கு இயேசு காணப்பட்டு, தன்னை அவனுக்கு வெளிப்படுத்தினதுவரை அவர் யார் என்று அவன் அறியாதிருந்தான். எவர்களுக்கு இயேசு எதையாவது செய்திருக்கிறாரோ அவர்களுக்கு அவர் வெளிப்படுகிறார்; ஆனால், அவர் எப்போது வருவார் என்று நாம் உத்தரவிடமுடியாது. திடீரென்று எந்தத் தருணத்திலும் அவர் தோன்றுவார்--இப்பொழுது நான் (அவரைக்) காண்கிறேன் என்பீர்கள்.

இயேசு உங்களுக்கு வெளிப்படுவதுபோல உங்கள் நண்பருக்கும் வெளிப்படவேண்டும்; உங்கள் கண்களினால் வேறு ஒருவரும் இயேசுவைக் காணமுடியாது. எங்கு ஒருவர் இயேசுவைக் கண்டும் மற்றவர் காணவில்லையோ அங்கு ஒற்றுமைக் குலைவு உண்டாகிறது. தேவன் உங்கள் நண்பரைக் கொண்டுவராவிட்டால் உங்களால் அவரைக் கொண்டுவர முடியாது. நீங்கள் இயேசுவைக் கண்டிருக்கிறீர்களா? அப்படியானால் மற்றவர்களும் அவரைக் காணவேண்டுமென்று நீங்கள் விரும்புவீர்கள். அந்த சீஷர்கள் போய் அதை மற்றவர்களுக்கு அறிவித்தார்கள்; அவர்களையும் அவர்கள் நம்பவில்லை என்று வாசிக்கிறோம். மற்றவர்கள் நம்பாவிட்டாலும் நீங்கள் அறிவிக்கவேண்டும்.

நான் சொல்வேனானால் நீ நிச்சயம் நம்புவாய்!
நான் கண்டதை மாத்திரம் சொல்வேனானால்!
நான் எப்படிச் சொல்லுவேன், நீ எப்படி ஏற்றுக்கொள்வாய்,
நானிருந்த நிலைக்கு உன்னை அவர் கொண்டுவருமட்டும்?

பாவத்தைக்குறித்த தார்மீகத் தீர்மானம்

நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். ரோமர் 6:6

உடன் சிலுவையில் அறையப்படுதல்: என்னில் பாவம் கொல்லப்படவேண்டும் என்னும் தீர்மானத்தை நான் செய்திருக்கிறேனா? பாவத்தைக்குறித்தத் தார்மீகத் தீர்மானத்துக்கு வருவதற்கு நீண்ட காலம் எடுக்கும்; ஆனால், இயேசுகிறிஸ்து உலகத்தின் பாவத்துக்காக மரித்ததுபோல, பாவம் என்னில் மரிக்கவேண்டும் என்று நான் தீர்மானிக்கும்நேரம் என் வாழ்வில் மகாப் பெரிய தருணம்; பாவம் கட்டுப்படுத்தப்படவும் ஒடுக்கப்படவும் எதிர்க்கப்படவும் செய்யப்படாமல், அது சிலுவையில் அறையப்படவேண்டும். இத்தகையத் தீர்மானத்துக்கு இன்னொருவரை ஒருவரும் கொண்டுவரமுடியாது. நாம் உறுதியாக நம்பவைக்கப்படலாம், மார்க்கரீதியாகவும் நம்பவைக்கப்படலாம்; ஆனால், நாம் செய்யவேண்டியதெல்லாம் பவுல் இங்கு வற்புறுத்திக் கூறுகிற தீர்மானத்துக்கு வருவதே.

உங்களைத் தட்டிஎழுப்புங்கள்; தேவனோடு தனித்திருக்கக் காலம் எடுங்கள், மனப்பூர்வமான தீர்மானம் எடுத்து, ஆண்டவரே, பாவம் என்னில் மரித்துவிட்டது என்று நான் அறியுமட்டும் என்னைத் தம்முடைய மரணத்தோடு ஒன்றித்துவிடும் என்று ஜெபியுங்கள். பாவம் உங்களில் கொலை செய்யப்படவேண்டும் என்கிற தார்மீகத் தீர்மானஞ்செய்யுங்கள்.

இது பவுலின் பாகத்தில் ஒரு தெய்வீகமான எதிர்பார்த்தல் அல்ல, அடிப்படையும் உறுதியுமான அனுபவமே. பாவத்தின் தன்மை என்ன என்பதை நான் அறியுமட்டும், தேவனுடைய ஆவியானவர் என்னை ஆராய்ந்தறிவதற்கு அனுமதிக்க நான் ஆயத்தந்தானா?--பாவத்தின் தன்மை என்னில் வசிக்கிற தேவனுடைய ஆவிக்கு விரோதமாக இச்சிக்கிற காரியந்தான். அப்படியாயின், அந்தப் பாவத்தன்மை இயேசுவின் மரணத்தோடு ஒன்றிக்கவேண்டும் என்ற தேவனுடைய தீர்ப்பை நான் ஒத்துக்கொள்வேனா? சித்தத்தைக்குறித்த இந்த அடிப்படைப் பிரச்சனைக்கு தேவனுக்கு முன்பாக நான் முடிவுசெய்யாவிட்டால் பாவத்துக்கு மரித்தவனாக என்னை நான் கணக்கிடமுடியாது.

என் மாம்சத்திலும் இரத்தத்திலும் கிறிஸ்துவின் ஜீவன்மட்டுமே மீந்திருக்கும்வரை அவரோடு சிலுவையில் அறையப்பட்ட மகிமையான சிலாக்கியத்திற்குள் நான் பிரவேசித்திருக்கிறேனா? கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்.

தார்மீகத் தெய்வீகம்

ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர் களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். ரோமர் 6:5.

உடன் உயிர்த்தெழுதல்: நான் இயேசுவோடு சிலுவையிலறையப்படும் அனுபவத்தின்வழியாகக் கடந்துசென்றிருக்கிறேன் என்பதற்குரிய சான்று அவரைப்போன்ற திட்டமான சாயல் எனக்கிருப்பதே. எனக்குள் பிரவேசிக்கிற இயேசுவின் ஆவி, என் தனி வாழ்க்கையைத் தேவனுக்காகத் திரும்பவும் ஒழுங்குபடுத்துகிறது. தேவனுடைய ஜீவனை எனக்குப் பகிர்ந்தளிக்கும் அதிகாரத்தை இயேசுவின் உயிர்த்தெழுதல் அவருக்குக் கொடுத்திருக்கிறது; எனவே, அவருடைய ஜீவனின் அடிப்படையிலேயே என்னுடைய அனுபவம் சார்ந்த வாழ்க்கைக் கட்டப்படவேண்டும். இப்பொழுதே நான் இயேசுவின் உயிர்த்தெழுந்த ஜீவனைப் பெறமுடியும்; அது பரிசுத்தத்தின்மூலமாகத் தன்னைக் காண்பிக்கும்.

இயேசுவின் மரணத்தில் அவரோடு ஒன்றிக்கவேண்டுமென்ற தகுதி யானத் தீர்மானம் எடுத்தபின்னர், அவருடைய உயிர்த்தெழுந்த ஜீவன் என் இயற்கை சுபாவத்தின் எல்லாப் பாகங்களிலும் பிரவேசிக்கிறது என்பதே அப்போஸ்தலனாகிய பவுலின் எழுத்துக்களில் ஆரம்பம் முதல் முடிவுவரை உள்ள கருத்து. சாவுக்குரிய சரீரத்தில் தேவகுமாரனுடைய வாழ்க்கை வாழுவதற்குச் சர்வ வல்லமை தேவை. பரிசுத்த ஆவியானவரை வீட்டில் விருந்தாளியாகத் தங்கவைக்கமுடியாது; அவர் எங்கும் பிரவேசிப்பார். என்னுடைய பழைய மனிதன் (பாவப் பாரம்பரியம்) இயேசுகிறிஸ்துவின் மரணத்தோடு ஒன்றிக்கவேண்டுமென்று நான் தீர்மானித்ததும், பரிசுத்த ஆவியானவர் என்னை ஆட்கொள்ளுகிறார். எல்லாக் காரியத்தின் கட்டுப் பாட்டையும் அவர் எடுத்துக்கொள்ளுகிறார்; ஒளியில் நடந்து, அவர் வெளிப் படுத்தும் எல்லாவற்றுக்கும் கீழ்ப்படிவதே என்னுடைய கடமை. பாவத்தைக் குறித்தத் தகுதியானத் தீர்மானம் நான் எடுத்ததும், உண்மையாக நான் பாவத்துக்கு மரித்ததாக எண்ணுவது எளிது; ஏனெனில், அங்கு நான் இயேசுவின் ஜீவனை எக்காலத்திலும் காண்கிறேன். மனுக்குலத்தில் ஒரே யொரு இனம் இருப்பதுபோல, இயேசுவின் பரிசுத்தமாகிய ஒரேயொருவிதப் பரிசுத்தம் மாத்திரமே உண்டு; அவருடைய பரிசுத்தமே எனக்கு ஈவாக அளிக்கப்பட்டது. தமது குமாரனுடைய பரிசுத்தத்தைத் தேவன் எனக்குள் வைக்கிறார், அதால் நான் ஆவிக்குரியநிலையில் ஒரு புதிய ஒழுங்குக்குச் சொந்தமாகிறேன்.

தார்மீக ஆட்சி

மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை,... அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார். அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும்,.....தேவனுக்கென்று பிழைத்திருக்கிற வர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள். ரோமர் 6:9,10,11.

உடன் நித்திய ஜீவன்: மனிதனாக இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தின ஜீவனே நித்தியஜீவன்; நாம் தேவனால் பிறக்கும்போது நமது சாவுக்குரிய சரீரத் திலும் அதே ஜீவன் வெளிப்படுகிறது, அதன் நகல் அல்ல. நித்தியஜீவன் தேவன் தரும் ஒரு ஈவல்ல, நித்தியஜீவன் தேவனாகிய ஈவே. பாவத்தைக் குறித்தத் தார்மீகத் தீர்மானத்தை நாம் செய்ததும், இயேசுவில் வெளிப்பட்ட சக்தியும் வல்லமையும் தேவனுடைய கிருபையால் நம்மிலும் வெளிப்படும்.

பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடை வீர்கள் என்று இயேசு சொன்னார்--பெலன் பரிசுத்தஆவியிலிருந்து வரும் ஒரு ஈவல்ல; பெலன் பரிசுத்த ஆவியானவரே, அவர் பகிர்ந்துகொடுக்கிற ஒன்றல்ல அது. இயேசுவோடு ஒன்றிக்கும்படி நாம் தீர்மானஞ்செய்ததும், இயேசுவிலிருந்த ஜீவன் அவருடைய சிலுவையின்வழியாக நமக்குரியதா கிறது. நாம் தேவனோடு ஒப்புரவாகிறது கடினமாயிருக்கிறதானால், அதன் காரணம் நாம் பாவத்தைக்குறித்து நிச்சயமானத் தீர்மானம் செய்யாததே. நாம் தீர்மானம் செய்ததும் உடனடியாக தேவனுடைய பரிபூரண ஜீவன் உள்ளே வருகிறது. நாம் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்பட எல்லையில்லாத அளவு ஜீவனைக் கொடுக்கவே இயேசு வந்தார். நித்திய ஜீவனுக்குக் காலத்தோடு எந்தத் தொடர்புமில்லை, இயேசு இந்தப் பூமியில் வாழ்ந்த ஜீவனே அது. நித்திய ஜீவனின் ஒரே உற்பத்தியிடம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே.

மிகவும் பெலவீனமான பரிசுத்தவானுங்கூட, தன்னை விட்டுக் கொடுக்க ஆர்வமாகும்போது, தேவகுமாரனுடைய தெய்வீக வல்லமையை அனுபவிக்கமுடியும். சுயசக்தியிலுள்ள நம்பிக்கை எள்ளளவு இருந்தாலும் அது இயேசுவின் ஜீவனை மங்கச்செய்யும். நாம் நம்மை விட்டுக்கொடுத்துக் கொண்டேயிருக்கவேண்டும், அப்போது தேவனுடைய சிறந்த பரிபூரண ஜீவன் நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பாகத்தையும் மெதுவாக, ஆனால் நிச்சயமாக ஆட்கொள்ளும்; அப்பொழுது நாம் இயேசுவோடிருந் தவர்களென்று மக்கள் அறிந்துகொள்வார்கள்.

நிலைமைகளுக்கேற்றவாறு என்ன செய்யவேண்டும்?

கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு. சங்.55:22.

சரியான பாரம் சுமப்பதையும் தவறான பாரம் சுமப்பதையும் நாம் பிரித்தறியவேண்டும். பாவப்பாரத்தை அல்லது சந்தேகப்பாரத்தை நாம் ஒருபோதும் சுமக்கக்கூடாது; ஆனால், தேவனால் நம்மீது வைக்கப்பட்ட பாரங்களுண்டு, அவற்றை அகற்ற அவர் உத்தேசிக்கமாட்டார்; அவற்றை அவர்மீது நாம் திரும்பப் புரட்டித்தள்ளவேண்டுமென்று அவர் விரும்புகிறார். கர்த்தர் உங்களுக்குக் கொடுத்ததை அவர்மீது வைத்துவிடுங்கள் என்று ஒரு மொழிபெயர்ப்புக் கூறுகிறது. தேவனுக்காக வேலையை மேற்கொண்டு, அவருடைய கரிசனையைப் புரியாமலிருப்போமானால் கடமை உணர்ச்சி அதிக அளவில் நம்மை நொறுக்கும்; ஆனால் அவர் நம்மீது வைத்ததைத் திரும்ப அவர்மீது புரட்டித்தள்ளுவோமானால், அவரைக்குறித்த அறிவை நமக்குள் கொண்டுவந்து, கடமை உணர்ச்சியை அவர் நம்மைவிட்டு அகற்றிவிடுவார்.

அநேக ஊழியர்கள், இயேசுகிறிஸ்துவோடு நெருங்கிய உறவு கொள்ளாமல், மிகுந்த தைரியத்தோடும் அதிக உற்சாகத்தோடும் புறப்பட்டுச் சென்றிருக்கிறார்கள்; எனவே, சிறிது காலத்திற்குள் அவர்கள் நொறுக்கப் பட்டார்கள். பாரத்தை என்ன செய்வதென்று அவர்கள் அறியவில்லை; அது களைப்பைக் கொண்டுவருகிறது--எத்தகைய ஆரம்பத்திற்கு எவ்வளவு கசப்பான முடிவு! என்று மக்கள் கூறுகிறார்கள்.

உங்கள் பாரத்தை ஆண்டவர்மீது புரட்டிவையுங்கள் என்று ஒரு பாடல் உண்டு--நீங்களே எல்லாவற்றையும் சுமந்துகொண்டிருக்கிறீர்கள்; நீங்கள் அதின் ஒரு பாகத்தை மனப்பூர்வமாகத் தேவனுடைய தோளின்மீது வையுங்கள். கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும் என்று வசனம் சொல்லுகிறது. அவர் உங்களுக்குக் கொடுத்த பாரத்தை அவரிடம் ஒப்படை யுங்கள்; அதைத் தூர எறியாதீர்கள், அதையும், அதோடு உங்களையும் அவர்மீது சுமத்துங்கள்; தோழமையின் உணர்வு பாரத்தை இலகுவாக்கும். பாரத்திலிருந்து உங்களை ஒருபோதும் பிரிக்காதீர்கள்.

ஏவப்பட்ட மேற்கொள்ளப்படாமை

என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். மத்.11:29.

கர்த்தர் தான் நேசிக்கிறவர்களை சிட்சிக்கிறார். நாம் புகாரளிப்பது எவ்வளவு அற்பத்தனமானது! நாம் கர்த்தரோடு ஐக்கியம் கொள்ளக்கூடிய இடத்திற்கு அவர் நம்மைக் கொண்டுவர ஆரம்பிக்கிறார்; நாமோ, ஆண்டவரே, நான் மற்ற மக்களைப்போலிருக்கட்டும்! என்று புலம்பிக் கூறுகிறோம். நுகத்தின் ஒரு பாகத்தை நாம் எடுக்கும்படி இயேசு கேட்கிறார்-என் நுகம் மெதுவானது, என் பக்கத்திற்குப் பக்கமாக வா, நாம் சேர்ந்து இழுப்போம் என்று அவர் கூறுகிறார். அவ்விதமாக நீங்கள் இயேசுவோடு ஒருமைப்பட்டிருக்கிறீர்களா? அப்படியானால் தேவனுடைய கரத்தின் அழுத்தத்துக்காக அவருக்கு நன்றி செலுத்துவீர்கள்.

சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார். தேவன் வந்து நம்முடைய அதிகப்படியான உணர்வுகளிலிருந்து நம்மை வெளியே எடுக்கிறார்; நம்முடைய பராதியளித்தல் துதியின் பாடலாக மாறுகிறது. தேவனுடைய பெலனை அறிவதற்குள்ள ஒரேவழி இயேசுவின் நுகத்தை நம்மீது எடுத்துக்கொண்டு அவரிடம் கற்றுக்கொள்வதே.

கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பெலன். பரிசுத்தவான்கள் தங்கள் மகிழ்ச்சியை எங்கிருந்து பெற்றுக்கொள்ளுகிறார்கள்? சில பரிசுத்தவான்களை நாம் அறிந்திருக்கவில்லையென்றால் அவர்களைப் பற்றி நாம், அவனுக்கு அல்லது அவளுக்கு சுமப்பதற்கு ஒன்றுமில்லை என்று கூறக்கூடும். முகத்திரையை உயர்த்திப் பாருங்கள். அங்கு தேவனுடைய சமாதானம், ஒளி மற்றும் மகிழ்ச்சி இருக்கின்றன என்பது, பாரமும் அங்கு இருக்கிறது என்பதற்குரிய தெளிவாகும். தேவன் வைக்கிற பாரம் திராட்சைப் பழங்களைப் பிழிகிறது, இரசம் வெளியே வருகிறது; நம்மில் அநேகரும் திராட்சரசத்தை மாத்திரம் பார்க்கிறோம். பூமியிலோ பாதாளத்திலோ உள்ள எந்த வல்லமையும் மனித ஆவியிலிருக்கும் தேவனுடைய ஆவியை வெல்லமுடியாது, அது உள்ளாக வெற்றிகொள்ளமுடியாத அனுபவம்.

உங்களுக்குள் புலம்புதலின் ஆவி இருக்குமானால் அதைக் கருணையின்றி உதைத்துத் தள்ளிவிடுங்கள். தேவனுடைய பெலனில் பெலவீனமாய் இருப்பது நேரிடையான குற்றம்.

ஒருமுகப்படுத்துதலில் பின்வாங்குதல்

மேடைகளோ இஸ்ரவேலிலிருந்து தகர்க்கப்படவில்லை; ஆனாலும், ஆசாவின் இருதயம் அவன் நாட்களிலெல்லாம் உத்தமமாயிருந்தது. 2 நாளா.15:17.

புறம்பான கீழ்ப்படிதலில் ஆசா அரைகுறையாயிருந்தான், முக்கிய மானதில் அவன் சரியாயிருந்தான், ஆனால், அவன் முற்றிலும் சரியாயி ருக்கவில்லை. அது மிகவும் முக்கியமானதல்ல என்று நீங்கள் கூறுகிற காரியத்தைக்குறித்து ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு முக்கியமற்ற காரியம் தேவனுக்கு மிகவும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கலாம். தேவனுடைய பிள்ளைகளுக்கு ஒன்றும் முக்கியமற்ற காரியமல்ல. ஒரே காரியத்தைத் தேவன் நமக்குக் கற்பிப்பதற்கு முயற்சிப்பதில் நம்மில் சிலர் இன்னும் எவ்வளவு காலம் அவரைக் காத்திருக்கச்செய்யப்போகிறோம்? அவர் ஒருபோதும் பொறுமை இழக்கிறதில்லை. நான் தேவனோடு ஒப்புர வாகியிருக்கிறேன் என்பது எனக்குத் தெரியும் என்று நீங்கள் கூறுகிறீர்கள், ஆனால் மேடைகள் இன்னும் அகற்றப்படவில்லை; நீங்கள் கீழ்ப்படிதல் காண்பிக்காத ஏதோ ஒரு காரியம் இருக்கிறது. என் இருதயம் தேவனுக்கு நேராகச் சரியாய்த்தான் இருக்கிறது என்று நீங்கள் மறுப்புரைக்கிறீர்களா? எனினும், தேவன் உங்களைச் சந்தேகப்படச்செய்த ஏதாவது காரியம் உங்கள் வாழ்க்கையில் உண்டா? சந்தேகம் எப்போது ஏற்படுகிறதோ, அது எதுவாயிருந்தாலும் உடனே அதை விட்டுவிலகுங்கள். ஒன்றும் சாதாரணமாகச் சிறிதல்ல.

உங்கள் சரீர வாழ்க்கையோடும், அறிவின் வாழ்க்கையோடும் தொடர்புள்ள ஏதாவது காரியங்களைப்பற்றி நீங்கள் உங்கள் கவனத்தை ஒருமுகப்படுத்தாமலேயிருக்கிறீர்களா? முக்கியமானதில் நீங்கள் சரியாயிருக் கிறீர்கள், ஆனால் நீங்கள் அஜாக்கிரதையாயிருக்கிறீர்கள்; உங்கள் சிந்த னையின் போக்கில் பின்வாங்குதல் ஏற்பட்டிருக்கிறது. உங்கள் இருதயம் துடித்துக்கொண்டிருக்கிறதிலிருந்து எப்படி விடுமுறைத் தேவையில்லையோ அதுபோல உங்களுக்கும் ஆவிக்குரிய கவனத்திலிருந்து விடுமுறைநாள் தேவையில்லை. நீங்கள் ஒழுக்கத்துக்கு விடுமுறை எடுத்துவிட்டு ஒழுக்க மாய் இருக்கமுடியாது; அதுபோலத்தான் நீங்கள் ஆவிக்குரிய விடுமுறை எடுத்துவிட்டு ஆவிக்குரியவர்களாய் இருக்கமுடியாது. நீங்கள் அவருக்கு முற்றிலும் சொந்தமானவர்களாய் இருக்கவேண்டுமென்று தேவன் விரும் புகிறார்; நீங்கள் உங்களைத் தகுதியுள்ளவர்களாகக் காத்துக்கொள்ள விழித்திருக்கவேண்டும் என்பதே அதன் பொருள். அதற்கு நீண்ட காலம் எடுக்கும். நம்மில் சிலர் ஏறத்தாழ இரண்டு நிமிட காலத்தில் எண்ணற்ற ஏற்றங்களைக் கடந்துசெல்ல எதிர்பார்க்கிறோம்.

நீங்கள் கீழே வரமுடியுமா?

ஒளி உங்களோடிருக்கையில்.....ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள். யோவான் 12:36.

நம்முடைய உன்னதமான நிலையைவிடச் சிறப்பாக உணருகிற சில தருணங்கள் நம்மெல்லாருக்கும் உண்டு; அப்போது நாம், நான் எதற்கும் தகுதியுள்ளவனாக உணருகிறேன், நான் எப்போதும் இவ்வாறு இருக்கக்கூடுமானால் நலமாயிருக்கும்! என்று கூறுகிறோம். ஆனால் நாம் அவ்வாறு இருக்கவேண்டியவர்களல்ல. நாம் சிறப்பான நிலையை உணராத வேளைகளில் நாம் எந்தச் சூழ்நிலையைப் பகுத்தறியும் திறமைக் களவு வாழவேண்டுமோ அந்த உள்ளுணர்வின் தருணங்கள் அவைகள். இந்த சாதாரண உலகத்தில் உன்னத அனுபவம் இல்லாதவேளையில் நம்மில் அநேகரும் வாழத் தகுதியற்றவர்கள். உன்னத அனுபவத்தில் வெளிப்படுத்தப்பட்ட நிலைக்கு நம்முடைய சாதாரண வாழ்க்கையைக் கொண்டுவரவேண்டும்.

உன்னத அனுபவத்தில் உங்களுக்குள் தூண்டப்பட்ட உணர்ச்சி ஒருபோதும் மறைந்துபோக அனுமதியாதேயுங்கள். உங்கள் அறிவுக் குரியப் பாதங்களைத் தட்டு மாடத்தில் வைத்துவிட்டு, நான் இருப்பதற்குரிய எத்தனை அற்புதமான மனநிலையிது என்று கூறாதேயுங்கள். உடனடி செயல்படுங்கள்; நீங்கள் பின்னால் எதையும் செய்யாமலிருக்கக்கூடும் என்பதால், எதையாவது செய்யுங்கள். ஒரு ஜெபக்கூட்டத்திலிருக்கும்போது ஒரு காரியத்தைச் செய்யும்படி தேவன் உங்களுக்குக் காட்டுகிறாரானால், நான் அதைச் செய்வேன்! செய்வேன்! என்று கூறாதேயுங்கள். உங்கள் கழுத்துப் பெடரியைப் பிடித்து, உங்களில் உருவாகியுள்ள சோம்பலை உதறித்தள்ளுங்கள். உச்சகட்ட அனுபவத்திற்கான ஆர்வத்தில், சோம்பல் எப்போதும் காணப்படுகிறது; மலையிலுள்ள அனுபவத்துக்கு நம்மை ஆயத்தப்படுத்துவதைக்குறித்து நாம் பேசுகிறோம். மந்தாரமான நாளிலும் நாம் மலையில் கண்டதற்கு ஒத்தவாறு வாழக் கற்றுக்கொள்ளவேண்டும்.

ஒருமுறை உங்களைக் குழப்பமடையச் செய்ததினால் முற்றும் விட்டுக்கொடாதேயுங்கள்; மறுபடியும் அதை அடையுங்கள். திரும்பிச்செல்ல முடியாதபடி நீங்கள் வந்த வழியை அழித்துவிடுங்கள், உங்கள் சொந்தச் செயலாக உங்களை ஆண்டவருக்கு முற்றும் அர்ப்பணித்துக்கொடுங்கள். உங்கள் தீர்மானங்களை ஒருபோதும் சரிபாராதேயுங்கள்; ஆனால் உங்கள் உன்னத அனுபவத்தின் அடிப்படையில் நீங்கள் உங்கள் தீர்மானங்களைச் செய்யப்பாருங்கள்.

கழுத்தா, ஒன்றுமில்லையா?

அவர் கர்த்தர் என்று சீமோன்பேதுரு கேட்டவுடனே,... தன் மேற்சட்டையைக் கட்டிக்கொண்டு கடலிலே குதித்தான். யோவான் 21:7.

எல்லாவற்றையும் மனப்பூர்வமாகவும், உறுதியோடும், துணிச்சலோடும் துறந்துவிட்ட ஏதாவது உச்சநிலை உங்களுக்கு எப்போதாவது ஏற்பட்டதுண்டா? அது சித்தத்தின் உச்சநிலை. நீங்கள் பலமுறைப் புறம்பாக அதுவரை வந்தடைந்திருந்தாலும் அது பயனற்றது. துறத்தலின் உண்மையான, ஆழமான உச்சநிலை புறம்பேயல்ல, உள்ளாக எட்டுகிறது. புறம்பான காரியங்களை விட்டுவிடுவது முழுமையான அடிமைத்தனத்தில் இருப்பதின் அடையாளமாயிருக்கலாம்.

உங்களுடைய சித்தத்தை மனப்பூர்வமாக இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்படைத்திருக்கிறீர்களா? இது சித்தத்தின் பரிவர்த்தனை, உணர்ச்சிக்குரியதல்ல; பரிவர்த்தனையின் மிகவும் விலையேறப்பெற்ற பாகம் மாத்திரமே உணர்ச்சி. உணர்ச்சியை நீங்கள் முதலில் அனுமதித்தால், நீங்கள் ஒருபோதும் பரிவர்த்தனை செய்யமாட்டீர்கள். பரிவர்த்தனை எதுவாயிருக்க வேண்டுமென்று ஆண்டவரைக் கேட்காதேயுங்கள்; மேலெழுந்தவாரியான இடத்திலோ அல்லது ஆழமான இடத்திலோ நீங்கள் காண்கிற காரியத்தின் படியே அதைச் செய்யுங்கள்.

பெரிய அலைகளில் இயேசுகிறிஸ்துவின் தொனியை நீங்கள் கேட்டிருந்தால், உங்கள் நம்பிக்கைகள் மறைந்து போகட்டும், உங்கள் எண்ணங்கள் மறைந்து போகட்டும்; ஆனால் அவரோடுள்ள உங்கள் உறவைப் பேணிக்கொள்ளுங்கள்.

ஆயத்த நிலை

தேவன் அவனை ... கூப்பிட்டார். அவன்: இதோ, அடியேன் என்றான். யாத். 3:4.

தேவன் பேசும்போது, நம்மில் பலரும் குழப்பமான நிலையிலுள்ள மனிதர்களைப்போலிருக்கிறோம், நாம் ஒரு மறுமொழியும் கொடுப்பதில்லை. மோசேயின் பதில் அவர் எங்கோ இருந்தார் என்பதை வெளிப்படுத்தியது. தேவனோடுள்ள சரியான உறவும், நாம் தற்போது எங்கிருக்கிறோமென்ற அறிவுமே ஆயத்தநிலையின் கருத்தாகும். நாம் எங்குபோக ஆசிக்கிறோம் என்பதைத் தேவனிடத்தில் கூறுவதில் அதிக மும்முரமாயிருக்கிறோம். தேவனுக்கும் அவருடைய ஊழியத்துக்கும் ஆயத்தமாயிருக்கும் ஆணோ பெண்ணோதான் அழைப்பாணை வரும்போது பரிசைத் தட்டிச்செல்லும் நபராயிருப்பார்கள். பரபரப்பான ஏதோ பெரிய சந்தர்ப்பத்தைக்குறித்தக் கருத்தோடு நாம் காத்திருக்கிறோம்; அது வரும்போது, இதோ, நான் இருக்கிறேன் என்று வேகமாகக் கூறுகிறோம். இயேசுகிறிஸ்து செல்வாக்கில் ஓங்கும்போதெல்லாம் நாம் அவரோடிருக்கிறோம்; ஆனால், ஒதுக்கிடமான கடமைகளுக்கு நாம் ஆயத்தமில்லை.

மிகச்சிறிய காரியத்தையும், அல்லது மகாப்பெரிய காரியத்தையும் எந்த வேறுபாடுமில்லாமல் செய்ய ஆயத்தமாயிருப்பதே ஆண்டவருக்கான ஆயத்தநிலையின் கருத்தாகும். நாம் என்ன செய்யவேண்டுமென்பதை நாம் தெரிந்துகொள்ளமுடியாது; தேவனுடைய திட்டம் எதுவாயிருந்தாலும் நாம் ஆயத்தத்தோடு அங்கிருக்கிறோம். ஏதாவது கடமை எழும்பும்போது, நமது ஆண்டவர் அவருடைய பிதாவின் சத்தத்தைக் கேட்டதுபோல நாமும் தேவனுடைய சத்தத்தைக் கேட்கிறோம், அவர்பேரிலுள்ள நமது அன்பின் விழிப்போடு அதற்கு ஆயத்தப்படுகிறோம். இயேசுவோடு அவருடைய பிதா செய்ததுபோல, இயேசுவும் நம்மோடு செய்ய எதிர்பார்க்கிறார். மனதிற்கு உகந்த கடமைகளிலோ அல்லது இழிவான கடமைகளிலோ, அவருக்கு விருப்பமான இடத்தில் அவர் நம்மை வைக்கலாம்; ஏனெனில், ஐக்கியம் பிதாவுக்கும் அவருக்குமிடையேயுள்ளதுபோன்றது. நாம் ஒன்றாயிருப்பது போல அவர்களும் ஒன்றாயிருக்கவேண்டுமென்று இயேசு ஜெபித்தார்.

தேவன் எதிர்பாராமல் திடீரென்று செய்யும் சந்திப்புக்கு ஆயத்தமா யிருங்கள். எப்போதும் ஆயத்தமாயிருக்கும் ஒருவர் பின் ஆயத்தமாகத் தேவையில்லை. தேவன் அழைக்கும்போது ஆயத்தப்படுவதற்காக நாம் வீணாக்கும் காலத்தைக்குறித்து எண்ணிப்பாருங்கள்! ஆயத்தமான ஒரு ஆத்துமாவைச் சூழ்ந்திருக்கும் எல்லாக் காரியங்களின் சின்னமே எரியும் முட்செடி; அது தேவனுடைய பிரசன்னத்தால் கொழுந்துவிட்டு எரிகிறது.

பெரும்பாலும் நிகழக்கூடாததில் அல்லவா?

யோவாப் அப்சலோமின் பட்சம் சாயாதவனாயிருந்தும், அதோனியாவின் பட்சம் சாய்ந்திருந்தான். 1 இராஜா.2:28.

யோவாப் தாவீதுக்கு முற்றிலும் விசுவாசமும் உண்மையும் உள்ள வனாயிருந்து, கவர்ச்சியும் பேராசையுங்கொண்ட அப்சலோம் பக்கம் திரும் பாமல் பெரிய சோதனையில் வெற்றிகொண்டான்; ஆனால், அவனுடைய வாழ்க்கையின் இறுதிக்கட்டத்தில் கோழையனான அதோனியாவின்பக்கம் திரும்பினான். ஒருவர் பின்வாங்கிப்போன அதே இடத்தில் துல்லியமாக யாரும் பின்வாங்கிப்போகக்கூடும் என்ற உண்மையைக்குறித்து எப்போதும் விழிப்புள்ளவர்களாயிருங்கள் (1 கொரி.10:13 பார்க்க). நீங்கள் பெரிய நெருக்கடியைக் கடந்து சென்றிருக்கிறீர்கள்; இப்போது மிகமிக அற்பமான காரியங்களைக்குறித்து விழிப்புள்ளவர்களாயிருங்கள்; அப்படிப்பட்ட சிறிய காரியங்களில் விழுந்துபோனவர்கள் உண்டு என்பதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளுங்கள்.

மிகவும் கடினமான நெருக்கடிகளைக் கடந்துசென்றபின் நான் உலகக்காரியங்களுக்குத் திரும்புவேனென்பது பெரும்பாலும் நடக்கக்கூடிய காரியமல்ல என்று நாம் கூற வாய்ப்புண்டு. எங்கு சோதனை வருமென்று முன்கணிப்புச் செய்யாதீர்கள்; பெரும்பாலும் நிகழக்கூடாததுதான் ஆபத்து. ஒரு பெரிய ஆவிக்குரிய சம்பவத்துக்குப் பின்விளைவாக மிகவும் எதிர்பார்க் காத சம்பவம் நடைபெற ஆரம்பிக்கிறது; அது அதிகாரஞ் செலுத்தவில்லை; ஆயினும் அது அங்கிருக்கிறதென்பதை மறந்துபோகாதீர்கள், நீங்கள் எச்சரிக்கப்படாவிட்டால் அது உங்களைத் தடுக்கி விழச்செய்யும். பெரிதும் கடுமையுமான சோதனைகளில் நீங்கள் ஆண்டவருக்கு உண்மையாயி ருந்தீர்கள்; இப்போது மறைமுகமான ஆபத்துக்களுக்கு எச்சரிக்கையாயி ருங்கள். அச்சத்தோடு முன்னோக்கிப்பார்த்து, ஆரோக்கியமற்றநிலையில் உங்களைத்தானே உள்ளாய்வு செய்யாதீர்கள்; ஆனால் விழிப்புள்ளவர் களாயிருங்கள்; தேவனுக்குமுன்பாக உங்கள் நினைவாற்றலைக் கூர்மை யாக்கிக்கொள்ளுங்கள். பாதுகாக்கப்படாத பெலன் இருமடங்கு பலவீனம், ஏனெனில், அங்குதான் எதிர்பாராதநிலையில் சோதனைத் தாக்கும். நாம் வேதத்தில் வாசிக்கிற கதாபாத்திரங்கள், தங்கள் பெலவீனங்களிலல்ல, பலமான இடங்களிலேயே விழுந்தார்கள்.

தேவனுடைய பலத்தினாலே நாம் காக்கப்பட்டிருக்கிறோம். அதுதான் ஒரே பாதுகாவல்.

ஒரு பரிசுத்தவான் தேவனைப் பழிக்கக்கூடுமா?

தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே. 2 கொரி.1:20.

நம்முடைய திறமையை நாம் குறைவாக மதிப்பிட சாத்தியமுண்டு என்பதற்கு எச்சரிக்கையாக மத்தேயு 25-ல் குறிப்பிடப்பட்டுள்ள தாலந்து களின் உவமையை இயேசு கூறினார். இந்த உவமைக்கு இயற்கைத் திறமைகளோடு எந்தத் தொடர்புமில்லை, இது பெந்தெகொஸ்தே வரமாகிய பரிசுத்தஆவியோடு தொடர்புகொண்டது. நம்முடைய ஆவிக்குரிய ஆற்றல் களைக் கல்வியினாலோ அறிவினாலோ அளக்கக்கூடாது; ஆவிக்குரிய காரியங்களில் நம்முடைய ஆற்றல் தேவனுடைய வாக்குத்தத்தங்களினால் அளக்கப்படுகிறது. நாம் பெற்றுக்கொள்ளும்படி தேவன் விரும்புவதற்குக் குறைவாக நாம் அடைந்தால், ஊழியக்காரன் எஜமானைப் பழித்ததுபோல, நாமும் வெகு சீக்கிரத்தில் தேவனைப் பார்த்து, நான் செயல்படுவதற்கு எனக்கு நீர் கொடுக்கிற பெலனைவிடக் கூடுதலாய் என்னிடம் எதிர்பார்க் கிறீர்; என்னிடம் நீர் அதிகமாய்த் தேவைப்படுகிறீர்; நான் வைக்கப்பட் டிருக்கிற இடத்தில் உமக்கு உண்மையாயிருக்கமுடியாது என்று குற்றஞ் சாட்டுவோம். தேவனுடைய சர்வவல்ல ஆவியானவரைப் பொறுத்தமட்டிலும், என்னால் கூடாது என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். இயற்கை ஆற்றலின் வரையறைக் குறுக்கிட ஒருபோதும் அனுமதியாதீர்கள். நாம் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருக்கிறோமானால் பரிசுத்த ஆவியானவருடைய கிரியைகள் நம்மில் வெளிப்படவேண்டுமென்றே தேவன் எதிர்பார்க்கிறார்.

அந்த ஊழியக்காரன் தான் செய்த எல்லாக் காரியங்களிலும் தன்னை நியாயப்படுத்தியதோடு, எஜமானனையோ, நீர் கொடுக்கிறதைவிட அளவுக்கு மிஞ்சி கேட்கிறீர் என்று எல்லாவிதத்திலும் அவரைக் கண்டனஞ் செய்தான். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியை யும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என்று அவரே சொல்லியிருக்க, கவலைப்பட்டுத் தேவனைப் பழிக்கிறோமா? என் கஷ்டத்தில் என்னை ஆதரவற்றுக் கைவிடுவதே உம்முடைய நோக்கம் என்று எனக்குத் தெரியும் என்றவாறு அந்த ஊழியக்காரன் குறிப்பிட்டதே கவலைப்படுவதின் கருத்து. சோம்பலுள்ளவன் எனக்குப் பொருத்தமான ஒரு வாய்ப்புக் கிடைக்கவில்லை என்று இயற்கை யாகவே குறைகாண்பான்; ஆவிக்குரிய சோம்பலுள்ளவன் தேவனில் குற்றங்காண்பான். சோம்பலுள்ள மக்கள் சுதந்தரமான வழியில் எப்போதும் துணிந்து செயல்படுவார்கள்

ஆவிக்குரிய காரியங்களில் நம்முடைய ஆற்றல்கள் தேவனுடைய வாக்குறுதிகளால் அளக்கப்படுகின்றன என்பதை ஒருபோதும் மறவாதீர். தம் வாக்குறுதிகளை நிறைவேற்ற தேவனால் கூடுமா? நம்முடைய பதில் பரிசுத்த ஆவியானவரை நாம் பெற்றிருக்கிறோமா என்பதைச் சார்ந்தது.

இப்போது ஆண்டவரைப் புண்படுத்தாதீர்!

பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? யோவான் 14:9.

நாம் அப்பாவிகளல்ல என்பதைக்குறித்து நமதாண்டவர் அடிக்கடி ஆச்சரியப்படக்கூடும். நம்முடைய சொந்தக் கருத்துக்களே நம்மை மூடர்களாக்குகின்றன; நாம் அப்பாவிகளாயிருக்கும்போது ஒருபோதும் மூடர்களாகிறதில்லை, நாம் எப்போதும் பகுத்தறிகிறோம். ஆழமான இரகசியத்தின் வெளிப்படுத்தலை பிலிப்பு எதிர்பார்த்தார், ஆனால் அவர் அறிந்திருந்த ஒரு நபரில் அல்ல. தேவனுடைய இரகசியம் நடைபெறப்போகிறதில் அல்ல, இப்போதே இருக்கிறது; கொந்தளிப்பான சம்பவத்தில் அதை நாம் தற்போது தேடுகிறோம். இயேசுவுக்குக் கீழ்ப்படிவதில் நமக்குத் தயக்கமில்லை; ஆயினும், நாம் கேட்கிற கேள்விகளினால் அவரை நாம் புண்படுத்தலாம். ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்கிற கேள்விக்கு, இதோ, இருக்கிறார்; அவர் எப்போதும் இங்கேயே இருக்கிறார், அல்லது வேறெங்குமில்லை என்று நேரடியாகப் பதில் வருகிறது. தேவன் தம்முடைய பிள்ளைகளுக்குத் தம்மை வெளிப்படுத்த நாம் எதிர்பார்க்கிறோம்; தேவன் தம்முடைய பிள்ளைகளில் மாத்திரம் தம்மை வெளிப்படுத்துகிறார். மற்ற மக்கள் வெளிப்படுத்தலைக் காண்கிறார்கள், தேவனுடைய பிள்ளை காண்பதில்லை. நாம் தேவனைக்குறித்த விழிப்புணர்ச்சியடைய விரும்புகிறோம்; நமது உணர்ச்சியைக்குறித்த விழிப்புணர்ச்சியடைந்தும் புத்தியுள்ளவர்களாய்த் தொடருவது கூடாத காரியம். அனுபவங்களைத் தரும்படி நாம் தேவனிடம் கேட்போமேயானால், அல்லது அனுபவத்தைக்குறித்த உணர்வு முன்னேற்றத்தைத் தடைசெய்யுமேயானால் நாம் ஆண்டவரைப் புண்படுத்துகிறோம். நாம் கேட்கிற கேள்விகளே இயேசுவை வேதனைப்படுத்துகின்றன; ஏனெனில், அவைகள் ஒரு குழந்தைக்குரிய கேள்விகளல்ல.

உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக என்று இயேசு கூறினார். என்னுடைய இருதயம் கலங்கும்படி நான் அனுமதித்து, இயேசுவை நான் புண்படுத்துகிறேனா? இயேசுவின் பண்பை நான் விசுவாசிக்கிறேனானால், என்னுடைய விசுவாசத்துக்கு ஏற்றவாறு நான் வாழுகிறேனா? ஏதாவது காரியம் என் இருதயத்தைக் குழப்பவும், ஆரோக்கியமற்ற கேள்விகள் உள்ளே பிரவேசிக்கவும் நான் அனுமதிக்கிறேனா? எல்லாக் காரியங்களும் தேவனிடத்திலிருந்து வருகின்றன என்று ஏற்றுக்கொள்ளத்தக்க ஐயமற்ற உறவுக்கு நான் வரவேண்டும். தேவன் எப்போதாவது வழிநடத்துகிறவரல்ல, அவர் எப்போதும் நிகழ்காலத்தில் வழிநடத்துகிறார். ஆண்டவர் இப்போது இங்கிருக்கிறார் என்றும், விடுதலை உடனடியென்றும் அறியுங்கள்.

மங்கிப்போகிற ஒளி

நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் காண்கிறோம். 2 கொரி.3:18.

ஒரு தேவஊழியன் தான் தனியாயிருக்கிறார் என்பதை ஒருபோதும் அறியாத நிலையில் மிகவும் அதிகமாகத் தனித்து நிற்கவேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்பக் கட்டங்களில் மனச்சோர்புகள் வரும், முன்பு ஒளியாயிருந்த மக்கள் அணைந்துபோகிறார்கள், வழக்கமாக நம் பக்கம் நின்றவர்கள் கடந்துபோகிறார்கள். நாம் தனிமையாக நிற்கிறோம் என்பதை ஒருபோதும் உணராதவாறு அத்தகைய நிலையில் பழகிக்கொள்ள வேண்டும். எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள்.....கர்த்தரோ எனக்குத் துணையாக நின்றார் (2 தீமோ.4:16,17) என்று பவுல் கூறுகிறார். மங்கிப் போகிற ஒளியிலல்ல, ஒருபோதும் அணையாத ஒளியில் நமது விசுவா சத்தை நாம் கட்டவேண்டும். பெரிய மனிதர் மரிக்கும்போது, அவர்கள் சென்றேயாகவேண்டுமென்று நாம் அறியுமட்டும் நாம் துக்கப்படுகிறோம்; ஆயினும், நாமாகத் தேவனுடைய முகத்தை நோக்கிப்பார்க்கிறதொன்றே மீந்திருக்கும் ஒரே காரியமாகும்.

உங்களைக்குறித்தும் உங்களுடைய உபதேசத்தைக்குறித்தும் தேவனுடைய முகத்தைக் கண்டிப்பாக பார்ப்பதிலிருந்து உங்களைத் தடுக்க ஒன்றையும் அனுமதியாதீர்கள்; நீங்கள் போதிக்கும் ஒவ்வொரு நேரமும் நீங்கள் போதிக்கப்போகிறவைகளைக்குறித்து முதலாவது தேவனுடைய முகத்தைப் பார்க்கக் கவனமாயிருங்கள்; அப்போது ஆரம்பம்முதல் முடிவு வரை மகிமை தங்கியிருக்கும். தேவனுடைய முகத்தை எப்போதும் பார்த்து விட்டு, அதன்பின் மக்களிடம் பேசும்படிச் செல்கிறவரே கிறிஸ்தவ ஊழியர். கிறிஸ்துவின் ஊழியச் சிறப்பியல்பு நிலைத்திருக்கிற மகிமையே. தன்னோடு அவர் (தேவன்) பேசினதினாலே தன் முகம் பிரகாசித்திருப்பதை அவன் அறியாதிருந்தான் என்று மோசேயைக்குறித்து எழுதப்பட்டிருக்கிறது.

நமது ஜயப்பாடுகளை அணிவகுப்பு நடத்தவோ, தேவனோடுள்ள நமது வாழ்க்கையில் மறைந்திருக்கிற பரவசத்தை வெளிப்படுத்தவோ நாம் ஒருபோதும் அழைக்கப்படவில்லை. தேவனோடு எக்காலத்தும் இசைவாய் இருப்பதே ஊழியருடைய வாழ்க்கையின் இரகசியமாகும்.

ஊழியத்தை ஆராதித்தல்

தேவனுக்கு உடன்வேலையாட்கள். 1 கொரி.3:9.

தேவன்மீது கருத்தைச் செலுத்துவதைத் தடுக்க ஏதுவாயிருக்கிற அவருக்கான எந்த ஊழியத்தைக்குறித்தும் ஜாக்கிரதையாயிருங்கள். அநேகக் கிறிஸ்தவ ஊழியர்கள் தங்கள் ஊழியத்தை ஆராதிக்கிறார்கள். ஊழியருடைய ஒரே கரிசனை தேவன்மீது சிந்தையைப் பதிக்கிறதாயிருக்க வேண்டும்; அதன் கருத்து என்னவென்றால் மனது, தார்மீகம் மற்றும் ஆவிக்குரியதுபோன்ற வாழ்க்கையின் எஞ்சிய பாகங்கள் வழிதவறிப்போன குழந்தையல்ல, ஆராதிக்கிற குழந்தையின் சுதந்தரம்போன்று சுயாதீனமாயி ருக்கும். தேவன்மீது இத்தகைய மனமார்ந்ததும் முதன்மையுமான சிந்தை இல்லாத ஊழியக்காரர் தன் ஊழியத்தால் பாரப்பட வாய்ப்புண்டு; அவரது சரீரம், மனது மற்றும் ஆவியின் எந்தப் பாகத்திலும் சுயாதீனமற்றவராவார்; அதன் விளைவாக, அவர் களைத்தவராய் நசுங்கிப்போவார். வாழ்க்கையில் சுயாதீனமும் மகிழ்ச்சியும் இல்லை; தேவனுடைய ஆசீர்வாதங்கள் தங்கமுடி யாதபடி நரம்புகளும் மனதும் நொறுங்குமளவுக்குப் பாரமடைகின்றன. அதன் மறுபக்கமும் அதுபோல உண்மையே; ஒருமுக சிந்தனை தேவன் மீது இருக்குமானால் வாழ்க்கையின் சகலப் பாகங்களும் சுயாதீனமடைந்து தேவனுடைய ஆதிக்கத்துக்குள்மட்டும் காணப்படும். ஊழியத்துக்கான எந்தப் பொறுப்பும் உங்கள்மீது இல்லை. உங்களுடைய பொறுப்பெல்லாம், தேவனோடு உயிருள்ளதும் இடைவிடாததுமான தொடர்பைக் காத்துக்கொள் வதும், அவருக்கு நீங்கள் கொடுக்கும் ஒத்துழைப்பை எதுவும் தடைசெய்ய நீங்கள் அனுமதியாதபடி பார்த்துக்கொள்ளுவதுமே. பரிசுத்தமாகுதலுக்குப் பின்னுள்ள சுதந்திரம் குழந்தையின் சுதந்திரமே; வழக்கமாக வாழ்க்கையை அழுத்தியிருந்த எல்லாக் காரியங்களும் போய்விட்டன. உங்கள் உடன் ஊழியராகிய தேவனுக்கு முற்றிலும் சமர்ப்பிக்கிறதாகிய ஒரே காரியத்துக் காகவே நீங்கள் சுதந்திரம்பெற்றிருக்கிறீர்கள் என்பதை நினைவுகூரக் கருத்தாயிருங்கள்.

நாம் எங்கே வைக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கவும், அல்லது தேவன் எதற்காக நம்மைத் தகுதிப்படுத்துகிறார் என்று முன்கூட்டியே அபிப்பிராயப்படவும் நமக்கு உரிமையில்லை. தேவன் சகலத்தையும் திட்ட மிடுகிறார்; தேவன் நம்மை எங்கெங்கு வைத்தாலும், நமக்குக் குறிக்கப்பட்ட ஊழியத்தில் முழு இருதயத்தோடு பக்தியை ஊற்றிவிடுவதே நமது ஒரே பெரிய நோக்கமாகும். செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் முழுப் பெலத்தோடே செய் என்று வேதம் கூறுகிறது.

சுகபோகத்திற்கெதிரான எச்சரிப்பு

ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப் படாமல். லூக்கா 10:20.

கிறிஸ்தவ ஊழியர்களாக நமக்கு உலகப்பற்றல்ல கண்ணி, பாவமு மல்ல நமக்குக் கண்ணி; ஆவிக்குரிய சுகபோகமே கண்ணி: அதாவது, நாம் வாழுகிற மார்க்கத்துக்குரிய காலத்தின் மாதிரியையும் அச்சையும் பின்பற்றி, ஆவிக்குரிய வெற்றிமீது ஆசையோடு பார்ப்பதே. தேவனுடைய அங்கீகாரந்தவிர வேறெதையும் தேடவேண்டாம்; அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே போங்கள். வெற்றிகரமான ஊழியத்தில் சந்தோஷப்படவேண்டாமென்று இயேசு தம்முடைய சீஷர்களிடம் கூறினார்; ஆனால், இதுதான் நம்மில் பலரும் சந்தோஷப்படுகிற ஒரே காரியமாகத் தோன்றுகிறது. இத்தனை ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டுப் பரிசுத்தமாக்கப் பட்டார்கள், தேவனுக்கு ஸ்தோத்திரம், இப்போது எல்லாம் நன்றாயிருக்கிறது என்ற வணிகநோக்கு நமக்கு இருக்கிறது. தேவனுடைய கிருபை எங்கு அஸ்திவாரம் போட்டதோ அந்த இடத்தில் நமது வேலை ஆரம்பிக்கிறது; நாம் ஆத்துமாக்களை இரட்சிக்கவேண்டாம், அவர்களை சீஷர்களாக்க வேண்டும். இரட்சிப்பதும் பரிசுத்தமாக்குவதும் தேவனுடைய தெய்வீகக் கிருபையின் கிரியையே; மக்கள் தங்களைத் தேவனுக்கு முழுவதும் ஒப்புக் கொடுக்குமட்டும் அவர்களை சீஷர்களாக்குவதே அவருடைய சீஷர்களாக நம்முடைய வேலையாகும். தேவனுடைய ஆவியினால் விழிப்புணர்ச்சி பெற்ற நூறுபேரைவிட அவருக்கு முழுவதும் அர்ப்பணித்த ஒரு ஆத்துமா அவர் பார்வையில் கூடுதல் விலையுள்ளது. தேவனுடைய ஊழியர்களாக நாம் ஆவிக்குரிய நிலையில் நம்மைப்போன்ற ஊழியர்களை உருவாக்க வேண்டும்; அதுதான் ஊழியர் என்பதற்கு நம்மைக்குறித்த தேவனுடைய சாட்சியாகும். தேவன் தம்முடைய கிருபையினால் நம்மை ஒரு குறிப்பிட்ட நிலைக்குக் கொண்டுவருகிறார்; அந்த நிலையைப் பிறரிடம் உருவாக்குவது நம்முடைய பொறுப்பாகும்.

ஒரு ஊழியக்காரர் கிறிஸ்துவோடு தேவனுக்குள் மறைந்திருக்கிற வாழ்க்கை செய்யாவிட்டால் அவர் ஆவியானவர் தங்கும் ஒரு சீஷனாயிருப் பதற்குப்பதில், எரிச்சலூட்டும் சர்வாதிகாரியாயிருக்க வாய்ப்புண்டு. நம்மில் பலரும் சர்வாதிகாரிகளாயிருக்கிறோம், நாம் மக்களுக்கும் கூட்டங்களுக்கும் ஆணையிடுகிறோம். இயேசு ஒருபோதும் அவ்வாறு நம்மிடம் ஆணையிடு கிறதில்லை. நம்முடைய ஆண்டவர் சீஷத்துவத்தைக்குறித்துப் பேசின போதெல்லாம், நீங்கள் கட்டாயம் செய்யவேண்டும் என்ற அழுத்தமான வற்புறுத்தல் இல்லாதபடி, அவர்களுடைய விருப்பத்துக்கு அவர் இடம் கொடுத்தார். சீஷத்துவத்துக்குத் தெரிந்தெடுக்கும் உரிமையுண்டு.

சமயம் வாய்த்தால் ஜாக்கிரதையாயிரு

சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாயிரு. 2 தீமோ.4:2.

சமயம் வாய்க்காதபோது ஜாக்கிரதையாயிருக்கும் ஆரோக்கியமற்ற மனநிலையால் நம்மில் பலரும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். காலம் என்பது நேரத்தைக் குறிப்பிடாமல் நம்மையே குறிப்பிடுகிறது. எனவே, சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் என்பது நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் என்றே கருத்தாகிறது. நாம் விரும்புகிற காரியத்தைமாத்திரம் செய்வோமேயானால் நம்மில் சிலர் என்றென்றைக்கும் ஒரு காரியமும் செய்யமாட்டோம். தெய்வீக ஏவுதல் பெற்றாலொழிய எதையும் செய்ய மறுக்கிற, ஆவிக்குரிய மண்டலத்தில் பணியமர்த்தத் தகுதியற்றவர்களும், ஆவிக்குரிய நிலையில் தளர்ந்தவர்களும் இருக்கிறார்கள். நாம் ஏவப்பட்டாலும் அல்லாவிட்டாலும் நம்முடைய திறமைக்களவு செயல்படுவதே நாம் தேவனோடு சரியான உறவுகொண்டிருக்கிறோம் என்பதற்குரியச் சான்று.

அபூர்வமான அனுபவங்களை விக்கிரகங்களாக்குவது கிறிஸ்தவ ஊழியர்களுடைய கண்ணிகளில் ஒன்றாகும். தேவனுடைய ஆவியானவர் ஒரு அகத்தூண்டுதலின் தருணத்தை அல்லது பகுத்தறிவின் திறமையை உங்களுக்குக் கொடுக்கும்போது, நான் எப்போதும் தேவனுக்காக இவ்வாறே இருப்பேன் என்று கூறுகிறீர்கள். ஆனால், நீங்கள் எப்போதும் அவ்வாறு இருக்கமாட்டீர்கள்; அவ்வாறு நீங்கள் இருக்காதபடி தேவன் கவனித்துக் கொள்வார். அந்தத் தருணங்கள் முற்றிலும் தேவனுடைய ஈவே. நீங்கள் தெரிந்துகொள்ளும்போதெல்லாம் அவைகளை உங்களுக்கு நீங்களே கொடுக்கமுடியாது. என்னால் இயன்றவரைமட்டுந்தான் நான் செய்வேன் என்று நீங்கள் கூறினால் தேவனுக்கு சகிக்க இயலாத பாரமாகிறீர்கள்; தேவன் உங்களைத் தொடர்ந்து ஏவிக்கொண்டேயிராவிட்டால், நீங்கள் ஒருபோதும் ஒன்றும் செய்யமாட்டீர்கள். உங்கள் வாழ்க்கையின் மிகச்சிறந்த நேரங்களைத் தெய்வமாக்குவீர்களானால், தேவன் உங்கள் வாழ்க்கையை விட்டு கிரமமாக மாய்ந்துபோவதைக் காண்பீர்கள்; உங்களுக்கு மிகவும் அருகாமையிலிருக்கும் கடமையைச் செய்யுமட்டும் மற்றும் உங்களுடைய அரிய தருணங்களை விக்கிரகங்களாக மாற்றாதிருக்கக் கற்றுக்கொள்ளுமட்டும் அவர் ஒருபோதும் உங்களிடம் திரும்ப வரமாட்டார்.

மிகச்சிறந்த ஏற்றம்

ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு,.... நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு. ஆதி.22:2.

ஒரு நபர் தேவனுடைய சித்தத்தை எவ்வாறு வியாக்கியானிக்கிறார் என்பதை இயல்பு தீர்மானிக்கிறது (சங்.18:25,26 பார்க்க). தன்னுடைய குமாரனைக் கொலைசெய்வதே தேவனுடைய ஆணையின் கருத்து என்று ஆபிரகாம் வியாக்கியானித்தார்; கடுமையான சோதனையினால் ஏற்பட்ட வேதனையால் மட்டுமே அந்த மரபை அவரால் விடமுடிந்தது. வேறெந்த முறையிலும் அவருடைய விசுவாசத்தைத் தேவனால் சுத்திகரிக்கமுடிய வில்லை. தேவன் சொல்லுகிறதற்கு நம்முடைய உண்மையான நம்பிக்கை யின்படி நாம் கீழ்ப்படிவோமானால், அவரைத் தவறாகப் புரியவைக்கிற அந்த மரபுகளிலிருந்து அவர் நம்மைத் தப்புவிப்பார்: நாம் விடுவிக்கப்பட வேண்டிய இவ்வாறான பலத் தவறான நம்பிக்கைகள் உண்டு: எடுத்துக் காட்டாக, தாய் தன் குழந்தையை அளவுக்கதிகமாக நேசித்ததினால் தேவன் அதை எடுத்துக்கொண்டார் என்பது பிசாசின் பொய்! அது தேவனுடைய உண்மையான இயல்பைக் கேலிசெய்வதாகும். நாம் ஒப்புயர்வற்ற ஏற்றம் ஏறி, தேவனைக்குறித்தத் தவறான மரபுகளிலிருந்து விடுதலைபெறுவதைத் தடைசெய்யப் பிசாசால் கூடுமானால், அவன் அவ்வாறு செய்வான்; ஆனால், நாம் தேவனுக்கு விசுவாசமுள்ளவர்களாய் இருப்போமானால், நாம் அவரைக் குறித்தச் சிறந்த அறிவைப் பெற்றுக்கொள்ளும்படியாகக் கடுஞ்சோதனை களினூடே அவர் நம்மைக் கடத்திச்செல்வார்.

தேவனுக்காக எதையும் செய்ய ஆயத்தமாயிருந்ததே ஆபிரகாம் தேவனில் வைத்த விசுவாசத்தின் சிறப்பு. எந்த நம்பிக்கைக்கும் எதிராகச் செல்லவேண்டியது வந்தபோதிலும், தேவனுக்குக் கீழ்ப்படிய அவர் ஆயத்த மாயிருந்தார். ஆபிரகாம் தன்னுடைய நம்பிக்கைகளுக்குப் பக்தனாயிருக்க வில்லை; இல்லையென்றால், அவர் ஈசாக்கைக் கொன்றுவிட்டு, (தன்னைத் தடுத்தி தேவதூதனுடைய சத்தம் பிசாசினுடைய சத்தம் என்று கூறியிருக் கலாம். அது ஒரு மார்க்கப்பித்தனுடைய மனநிலை. நீங்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய்த் தொடர்ந்தால், தன்னைக்குறித்த அறிவின் உள்ளறைக்கு அவர் ஒவ்வொரு தடைகளினூடேயும் உங்களை அழைத்துச் செல்வார்; அதற்கு நம்பிக்கைகளையும் பாரம்பரிய பற்றுறுதிகளையும் விட்டுவிடவேண்டும். உங்களைச் சோதிக்கும்படி ஆண்டவரிடம் கேட்க வேண்டாம். நான் எதையும் செய்வேன், நான் உம்மோடு மரிக்கச் செல்வேன் என்று பேதுரு அறிக்கையிட்டதுபோல ஒருபோதும் அறிக்கை யிடாதீர்கள். ஆபிரகாம் அத்தகைய பிரகடனம் ஒன்றும் செய்யவில்லை; அவர் தேவனுக்கு உண்மையுள்ளவராய் இருந்தார்; தேவன் அவருடைய விசுவாசத்தைச் சுத்திகரித்தார்.

உங்களுக்கு என்ன வேண்டும்?

நீ உனக்குப் பெரிய காரியங்களைத் தேடுகிறாயோ? எரே.45:5.

நீங்கள் உங்களுக்குப் பெரிய காரியங்களைத் தேடுகிறீர்களோ? பெரிய நபராகும்படித் தேடவில்லை, ஆனால், உங்களுக்காகத் தேவனிடமிருந்து பெரிய காரியங்களைத் தேடுகிறீர்கள். தேவனுடைய ஈவுகளைப் பெற்றுக்கொள்ளுவதை விட அவரோடு நீங்கள் நெருங்கிய உறவிலிருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார், அவரை நீங்கள் அறியவேண்டுமென்று அவர் தேவைப்படுகிறார். பெரிய காரியம் தற்செயலான நிகழ்வு; அது வரும், போகும். தற்செயலான எக்காரியத்தையும் தேவன் நமக்குக் கொடுக்கிறதில்லை. தேவனையல்ல, அவர் கொடுக்கிறதையே தேவைப்படுவதைத்தவிர அவரோடு சரியான உறவுக்குள் பிரவேசிப்பதைவிட எளிதானது வேறொன்றுமில்லை.

தேவனிடம் தேவைகளைக் கேட்கும் அனுபவம்வரைமாத்திரம் நீங்கள் வந்திருக்கிறீர்களேயானால், அப்பணத்தின் முதல் அனுபவம்வரை இன்னும் நீங்கள் வரவில்லை; உங்களுடைய சொந்தக் கண்ணோட்டத்தில் நீங்கள் கிறிஸ்தவனாகியிருக்கிறீர்கள். நான் பரிசுத்த ஆவிக்காக தேவனிடம் கேட்டேன்; ஆனால், நான் எதிர்பார்த்த இளைப்பாறுதலும் சமாதானமும் அவர் எனக்குக் கொடுக்கவில்லை என்று சொல்லுகிறீர்களா? நீங்கள் ஆண்டவரைத் தேடவேயில்லை, உங்களுக்காகச் சில காரியங்களை நீங்கள் தேடுகிறீர்கள் என்று உடனடியாக அவர் காரணத்தைக் காண்பிக்கிறார். கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்று இயேசு கூறினார். உங்களுக்குத் தேவையானதைத் தேவனிடம் கேளுங்கள்; நீங்கள் ஒரு சரியான காரியத்துக்காகக் கேட்காவிட்டால் நீங்கள் கேட்கமுடியாது. நீங்கள் தேவனிடம் கிட்டிச்சேரும்போது பொருட்களுக்காகக் கேட்கிறதை நிறுத்துவீர்கள். ஏனெனில், உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே, உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். அப்படியானால் ஏன் கேட்கவேண்டும்? தேவனை அறிந்துகொள்ளவே நீங்கள் கேட்கிறீர்கள்.

ஆண்டவரே, பரிசுத்த ஆவியினால் என்னை ஞானஸ்நானப்படுத்தும் என்று நீங்கள் உங்களுக்குப் பெரிய காரியங்களைத் தேடுகிறீர்களோ? தேவன் அவ்வாறு செய்யாவிட்டால், நீங்கள் உங்களை அவருக்குப் போதுமானவாறு அர்ப்பணிக்கவில்லை; நீங்கள் செய்ய விரும்பாத ஏதோவொன்று உண்டு. தேவனிடமிருந்து உங்களுக்கு என்ன வேண்டும்? அது உங்களுக்கு ஏன் வேண்டும்? என்று உங்களையே நீங்கள் கேட்க ஆயத்தந்தானா? முடிவானப் பூரணத்துக்காக இக்காலப் பூரணத்தை தேவன் எப்போதும் புறக்கணிக்கிறார். இப்போதே அவர் உங்களை ஆசீர்வாதமும் மகிழ்ச்சியுமுள்ளவர்களாக்கக் கருதவில்லை; நாம் ஒன்றாயிருப்பதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கவேண்டும் என்ற நிலையில் நித்திய பூரணத்தை அவர் எக்காலத்தும் திட்டமிடுகிறார்.

உங்களுக்கு என்ன கிடைக்கும்?

நீ போகும் சகல ஸ்தலங்களிலும் உன் பிராணனை உனக்குக் கிடைக்கும் கொள்ளைப்பொருளாகத் தருகிறேன். எரே.45:5.

உன் பிராணனை உனக்குத் தருகிறேன் என்பதே தம்மை நம்புகிறவர்களுக்குரிய ஆண்டவரின் அசைக்கமுடியாத செய்தியாகும். தன் ஜீவனைவிடக் கூடுதல் மனிதனுக்கு என்ன வேண்டும்? அதுவே இன்றியமையாத காரியமாகும். உங்கள் பிராணனைக் கொள்ளைப்பொருளாகத் தருகிறேன் என்று சொல்லும்போது, நீங்கள் எங்கெங்கு சென்றாலும், நரகத்துக்குள் போனாலுங்கூட, நீங்கள் ஜீவனோடு திரும்பிவருவீர்கள், ஒன்றும் உங்கள் ஜீவனுக்குத் தீமை செய்யமுடியாது என்பதே பொருள். நம்மில் பலரும் காரியங்களைக் கண்காட்சியாக்குவதில் சிக்கியுள்ளோம்; அது சொத்துக்களையும் உடைமைகளையுமல்ல ஆசீர்வாதங்களையே. இவைகளெல்லாம் போய்விடும்; ஆனால், ஒருபோதும் போகக்கூடாத மிகக் கம்பீரமான ஏதோவொன்று உண்டு, அது தேவனுக்குள் கிறிஸ்துவோடு மறைந்திருக்கும் ஜீவனே.

தேவன் உங்களைத் தம்மோடுள்ள ஐக்கியத்திற்குள் கொண்டுவர அவரை அனுமதிக்கவும், பெரிய காரியங்கள் என்று நீங்கள் எண்ணுகிறவைகளில் இனிமேல் கவனத்தைச் செலுத்தாதிருக்கவும் ஆயத்தந்தானா? உங்களை முற்றும் துறக்க ஆயத்தந்தானா? எதையுங்குறித்துக் கேள்வி கேட்க மறுப்பதே அர்ப்பணத்தின் பரிசோதனை. ஊகங்களைக்குறித்து ஜாக்கிரதையாயிருங்கள். இதைக்குறித்து என்ன? என்ற கேள்வியை அனுமதித்தவுடனே உங்களை அர்ப்பணிக்கவில்லை, நீங்கள் உண்மையில் தேவனை நம்பவில்லை என்று பொருளாகிறது. நீங்கள் அர்ப்பணித்தவுடன் தேவன் என்ன செய்யப்போகிறாரென்பதைக்குறித்து நீங்கள் இனிமேலும் சிந்திக்க மாட்டீர்கள். எந்தக் கேள்வியும் கேட்கும் உரிமையை நீங்கள் உங்களுக்கு மறுப்பதே அர்ப்பணித்தலின் கருத்தாகும். உங்களை நீங்கள் முற்றிலும் தேவனுக்கு அர்ப்பணிப்பீர்களானால் தேவன் உடனே, உன் பிராணனை உனக்குக் கிடைக்கும் கொள்ளைப்பொருளாகத் தருகிறேன் என்பார். மக்கள் வாழ்க்கையில் சலிப்படைவதின் காரணம், தேவன் அவர்களுக்கு எதையும் கொடுத்திராததே; அவர்கள் தங்கள் பிராணனைக் கொள்ளைப்பொருளாகப் பெற்றிருக்கவில்லை. அந்நிலையிலிருந்து வெளியே வருவதற்குரிய வழி தேவனுக்குத் துறத்தலே. நீங்கள் உங்களைத் தேவனுக்குப் பூரணமாய் அர்ப்பணம் செய்துமுடிக்கும்போது, பூமியிலேயே நீங்கள்தான் அதிக ஆச்சரியமும் மிகுந்த மகிழ்ச்சியுமுள்ள படைப்பாயிருப்பீர்கள்; தேவன் உங்களை முற்றிலும் அடைந்துகொண்டார், அவர் உங்களுக்கு உங்கள் பிராணனைத் தந்திருக்கிறார். நீங்கள் அந்த அனுபவத்திலில்லையென்றால், ஒன்றில் அது கீழ்ப்படியாமையாயிருக்கலாம், அல்லது தேவையான அளவு எளிமையாகும்படி நீங்கள் மறுக்கிறதாயிருக்கலாம்.

நிச்சயமின்மையின் பெருந்தகமை

இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை. 1 யோவான் 3:2.

இயல்பாகவே நாம் நன்கு வரையறுக்கிறவர்களும், ஆய்வு திறமிக்கவர்களுமாகையால் நிச்சயமின்மையைக் கெட்டகாரியமாகவே எண்ணுகிறோம். நாம் ஏதாவது நோக்கத்தைப் போய்ச்சேர்ந்தாகவேண்டும் என்று கற்பனை செய்கிறோம்: ஆனால், அது ஆவிக்குரிய வாழ்க்கையின் தன்மையல்ல. நமது நிச்சயமின்மையில் நாம் நிச்சயங்கொண்டிருக்கிறோம் என்பதே ஆவிக்குரிய வாழ்க்கையின் தன்மை; அதின்பலனாக நாம் எங்கும் கூடுகட்டுகிறதில்லை. நான் அந்த நிலையிலிருந்திருப்பேனேயானால்.....என்று கூறுகிறது பொது அறிவு. நாம் ஒருபோதும் இருந்திராத ஒரு நிலையில் நம்மைப் பாவித்துக்கொள்ள நம்மால் முடியாது.

நிச்சயம் பகுத்தறிவு வாழ்க்கையின் அடையாளம்; கிருபையுள்ள நிச்சயமின்மையே ஆவிக்குரிய வாழ்க்கையின் அடையாளம். தேவனைக் குறித்து நிச்சயங்கொள்வதென்பது நம்முடைய எல்லா வழிகளிலும் நாம் நிச்சயமற்றிருக்கிறோம் என்று பொருட்படும்; மறுநாள் என்ன பிறப்பிக்கும் என்பதை நாம் அறியோம். இது பொதுவாகத் துக்கத்தின் பெருமூச்சோடு சொல்லப்படுகிறது; ஆனால், இது உணர்ச்சிவசமான எதிர்பார்ப்பின் வெளிப்பாடாயிருக்கவேண்டும். அடுத்த அடியைக்குறித்து நமக்கு நிச்சயமில்லை, ஆனால், தேவனைக்குறித்த நிச்சயம் நமக்குண்டு. நம்மைத் தேவனுக்கு அர்ப்பணித்து, கைக்கெட்டுகிற கடமையைச் செய்தவுடனே, நம்முடைய வாழ்க்கையை அவர் வியப்புக்களால் எக்காலத்திலும் நிரப்புவார். ஒரு சமயக்கோட்பாட்டுக்கு நாம் ஆதரவாளர்களாகும்போது, ஏதோவொன்று மரணமடைகிறது; நாம் தேவனை விசுவாசிக்கவில்லை, அவரைக்குறித்த நம்முடைய விசுவாசத்தைமாத்திரம் நாம் விசுவாசிக்கிறோம். நீங்கள் குழந்தைகளைப்போல் ஆகாவிட்டால்.....என்று இயேசு கூறினார். ஆவிக்குரிய வாழ்க்கை ஒரு குழந்தையின் வாழ்க்கை. தேவனைக்குறித்து ஐயம் நமக்கில்லை, ஆனால், அவர் அடுத்தாற்போல் என்ன செய்யப் போகிறார் என்பதைக்குறித்த ஐயம் நமக்குண்டு. நம்முடைய விசுவாசத்தில் மாத்திரம் நாம் நிச்சயங்கொண்டால் பெருமைக்குகந்தவர்களும் கண்டிப்பானவர்களுமாகி, நமது கருத்துக்களே இறுதியானவை எனக் கூறுவோம்; ஆனால், நாம் தேவனோடு சரியான உறவிலிருக்கும்போது, வாழ்க்கை இயல்பானதும் மகிழ்ச்சி நிறைந்ததுமான நிச்சயமின்மையாலும் எதிர்பார்ப்புக்களாலும் நிறைந்திருக்கும்.

என்னைக்குறித்த சில காரியங்களில் விசுவாசியுங்களென்றல்ல, என்னிடத்தில் விசுவாசமாயிருங்களென்று இயேசு கூறினார். எல்லாவற்றையும் அவரிடம் விட்டுவிடுங்கள்; அவர் உள்ளே எவ்வாறு வருவார் என்பது நிச்சயமற்றிருந்தாலும், அவர் வருவார். அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருங்கள்.

அன்பின் தன்னிச்சையான இயல்பு

அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது.....1 கொரி.13:4-8.

அன்பு திட்டமிடப்படுவதல்ல, அது சுயேட்சையாக ஏற்படுகிறது; அதாவது, அது அசாதாரண வழிகளில் திடீரென்று தோன்றுகிறது. பவுல் குறிப்பிடும் அன்பின் வகையில் வரையறுக்கத்தக்க நிச்சயம் எதுவுமில்லை. இப்போது நான் ஒரு தீங்கும் நினைக்கப்போவதில்லை, நான் சகலத்தையும் நம்பப்போகிறேன் என்று நாம் கூறமுடியாது. அன்பின் தன்மையே சுயேட்சையாக ஏற்படுவதுதான். இயேசுவின் கருத்துக்களை ஒரு அளவுகோலாக நமக்கு முன் நாம் வைக்கிறதில்லை; ஆனால், அவருடைய ஆவியானவர் அவர் சித்தம்போல நம்மில் செயல்படும்போது, நமது அறிவில்லாமலே அவருடைய அளவுகோலின்படி நாம் வாழுவோம்; நாம் கடந்த காலங்களை ஆய்வுசெய்யும்போது, ஒரு குறிப்பிட்ட உணர்ச்சியில் அக்கறையற்றிருந்த தன்மையைக்குறித்து ஆச்சரியப்படுவோம்; அது உண்மையான அன்பின் தன்னிச்சையான இயல்பு அங்கிருந்தது என்பதின் அடையாளம். நமக்குள் இருக்கும் தேவனுடைய ஜீவனைப்பொறுத்த எல்லாக் காரியத்திலும் அது நிறைவேறியபின்புமாத்திரமே அதன் தன்மை கண்டறியப்படும்.

அன்பின் நீரூற்றுக்கள் நம்மில் அல்ல, தேவனிலேயே உள்ளன. நம்முடைய இருதயங்களில் இயற்கையாகத் தேவனுடைய அன்பைத் தேடுவது அபத்தமானது; பரிசுத்த ஆவியினாலே நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டால் மாத்திரமே, தேவ அன்பு அங்கிருக்கும்.

நாம் தேவனை எவ்வளவாய் நேசிக்கிறோம் என்பதை அவருக்கு நிரூபிக்க முயற்சிப்போமானால், நாம் அவரை நேசிக்கவில்லையென்பதின் நிச்சயமான அடையாளம் அது. நம்முடைய அன்பின் தன்னிச்சையான இயல்பே அவருக்குநேரான நம்முடைய அன்பின் சான்று, அது இயற்கையாகவே வருகிறது. கடந்த காலங்களை ஆய்வுசெய்யும்போது, நாம் ஏன் சில காரியங்களைச் செய்தோம் என்று கூறமுடியாது; நம்மிலுள்ள தேவனுடைய அன்பின் தன்னிச்சையான இயல்புக்கிசைய அவைகளைச் செய்தோம். அன்பின் நீரூற்றுக்கள் பரிசுத்த ஆவியிலிருப்பதால் (ரோமர் 5:5) தேவனுடைய ஜீவன் இந்தத் தன்னிச்சையான முறையில் தன்னை வெளிப்படுத்துகிறது.

உணர்ச்சியல்ல, உள்ளறிவு

நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். 2 கொரி.5:6.

சில காலம் தேவனுடைய கரிசனையைக்குறித்து உணருகிறோம்; அதன்பின், தேவன் நம்மைத் தம்முடைய பணியில் பயன்படுத்த ஆரம்பிக்கும்போது, நாம் பரிதாபமிக்கப் பார்வையை எடுத்து, சோதனை மற்றும் வேதனைகளைக்குறித்தே பேசுகிறோம்; பிறரால் அறியப்படாத மக்களாக இரவிலும் பகலிலும் நமது கடமைகளைச் செய்யவைக்கத் தேவன் முயற்சிக்கிறார். கூடுமானவரையிலும் நம்மில் யாரும் ஆவிக்குரிய காரியங்களில் அறியப்படாதவர்களாயிருப்பதில்லை. தேவன் வானத்தை அடைத்திருக்கும் போது நம் கடமையை நாம் செய்யக்கூடுமா? நம்மில் சிலர் எப்போதும் தலைமேல் வெண் ஒளிவட்டம் கொண்டு பிரகாசமாக்கப்பட்ட பரிசுத்தவான்களாய் இருக்கவும், தேவனுடைய பரிசுத்தவான்கள் நம்மோடு எல்லா வேளைகளிலும் இடைபடவுமே ஆசிக்கிறோம். மிகவும் கவர்ச்சிகரமான பரிசுத்தவான் பயனுள்ளவனல்ல, அவன் இயற்கைக்கு விபரீதமானவன், அன்றாட வாழ்வுக்குத் தகுதியற்றவன், முற்றும் தேவனைப்போலிராதவன். நாம் முதிர்ச்சியற்ற தேவதூதர்களாயிராமல், நாம் உன்னதத்திலிருந்து பிறந்திருக்கிறபடியால், இடர்பாடுகளை எதிர்த்துநிற்பதற்காக, உலகத்தின் பணியை அளவுகடந்த அதிக வல்லமையோடு செய்வதற்கான ஆண்களும் பெண்களுமாய் இங்கிருக்கிறோம்.

நம்முடைய ஊழியத்தின் அபூர்வமான தருணங்களை மறுபடியும் அறிமுகப்படுத்த முயற்சிப்போமானால், நாம் தேவைப்படுவது தேவனல்ல என்பதின் அடையாளமே அது. தேவன் வந்து பேசிய தருணங்களை வழிபடுகிறோம், அதை அவர் மறுபடியும் செய்ய நாம் வற்புறுத்துகிறோம்; ஆனால், நாம் செய்யவேண்டுமென்று தேவன் எதிர்பார்ப்பது விசுவாசித்து நடப்பதே. தேவன் எனக்குத் தரிசனமாகும்வரை நான் கூடுதல் ஒன்றும் செய்யமுடியாது என்று நம்மில் எத்தனைபேர் சரணடைந்தவர்களைப்போல கூறியிருக்கிறோம்? தேவன் ஒருபோதும் அவ்வாறு தரிசனமாகார்; ஆனால், எந்த ஏவுதலும் இல்லாமலும், தேவனுடைய எதிர்பாராத எந்தத் தொடுதலும் இல்லாமலும் நாம் எழும்பவேண்டும். அப்போது, ஏன், தேவன் எப்போதும் அங்கிருந்தார், நான் ஒருபோதும் அறியாமற்போனேன் என்கிற ஆச்சரியம் உண்டாகும். அரிதான அனுபவங்களுக்காக வாழவேண்டாம்; அவைகள் எதிர்பாராது நிறைவேறும். தேவன் நமக்குக் கொடுக்கிற தெய்வீக ஏவுதலின் தொடுதல்களினாலே நாம் தவறிப்போகும் ஆபத்து நமக்கில்லை என்று அவர் காணும்போது, அவர் அவற்றை நமக்குக் கொடுக்கிறார். நமது தெய்வீக ஏவுதலின் தருணங்களை ஒருபோதும் நம்முடைய திட்டஅளவாக ஆக்கக்கூடாது; நம்முடைய திட்டஅளவு நம்முடைய கடமையே.

பொறுமையைக்குறித்தப் பேரார்வம்

அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு. ஆப.2:3.

அலட்சியமாயிருப்பதல்ல பொறுமை; எல்லாத் தாக்குதல்களுக்கும் ஈடுகொடுக்கிற மிகுதியாகப் பலமான பாறையின் கருத்தையே பொறுமை குறிக்கிறது. தேவனுடைய தரிசனமே பொறுமைக்கு ஆதாரம்; ஏனெனில், அது தார்மீகமான உந்துதலைக் கொடுக்கிறது. மோசே தேவதரிசனத்தைப் பெற்றதினால் நிலைத்திருந்தாரேதவிர, உரிமைக்கும் கடமைக்குமான இலட்சியம் அவருக்கு இருந்ததினால் அல்ல. அவர் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்தார். தேவதரிசனம் பெற்ற ஒரு மனிதர் ஒரு இலக்குக்கோ, குறிப்பிட்ட பிரச்சனைக்கோ தன்னை சமர்ப்பிப்பதில்லை; அவர் தேவனுக்கே தன்னை சமர்ப்பிப்பார். தரிசனம் தேவனிடத்திலிருந்து வந்ததா என்பதை நீங்கள் எப்போதும் அறிந்துகொள்வீர்கள்; ஏனெனில், ஏவுதல் அந்தத் தரிசனத்தோடு வரும். எல்லாக் காரியங்களும் தேவனால் சக்தியூட்டப்படுகிறபடியால், அவைகள் வாழ்வுக்கு விசாலமானவைகளாயும் தெம்பூட்டுகிறவைகளாயும் வருகின்றன. தம்முடைய குமாரனுக்குத் தேவன் தம்மிடமிருந்து ஒரு வார்த்தையுமில்லாமல் வனாந்தரத்தில் நடைமுறையில் ஒரு சோதனையின் காலம் கொடுத்ததுபோல, உங்களுக்கும் ஆவிக்குரிய நிலையில் ஒரு சோதனையின் காலம் தருவாரேயானால் சகித்துக்கொள்ளுங்கள்; நீங்கள் தேவனைத் தரிசிப்பதினால் உறுதியாயிருக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு. நாம் தரிசனம் பெற்றிருக்கிறோமென்பதற்குத் தெளிவு நாம் பற்றிப்பிடித்திருப்பதைவிட அதிக உயரம் கை நீட்டுவதே. ஆவிக்குரிய நிலையில் திருப்திகொள்ளுவது தவறான காரியம். கர்த்தருக்கு நான் என்னத்தைச் செலுத்துவேன் என்று கேட்ட சங்கீதக்காரன், இரட்சிப்பின் பாத்திரத்தை எடுப்பேன் என்று முடிக்கிறார். நான் அடைந்தாயிற்று, இப்போது நான் முற்றிலும் பரிசுத்தமாக்கப்பட்டேன், இப்போது என்னால் நிலைத்திருக்கமுடியுமென்று நம்மில் நாம் திருப்திப்பட வாய்ப்புண்டு. அப்போதே நாம் அழிவின் பாதையிலிருக்கிறோம். நாம் அடைந்ததைவிடக் கூடுதலாக எட்டிப்பிடிக்க நாம் முயற்சிக்கவேண்டும். நான் அடைந்தாயிற்று என்றோ அல்லது முற்றும் தேறினவனானேன் என்றோ பவுல் கூறவில்லை. நாம் அனுபவித்ததைமாத்திரம் பெற்றிருப்போமானால் நம்மிடம் ஒன்றுமில்லை; ஆனால், தேவதரிசனத்தின் ஏவுதல் பெற்றிருப்போமானால், நாம் அனுபவிக்கக்கூடியதைவிடக் கூடுதல் நமக்கு உண்டு. ஆவிக்குரிய நிலையில் ஓய்வு எடுக்கும் ஆபத்தைக்குறித்து ஜாக்கிரதையாயிருங்கள்.

இன்றியமையாத விண்ணப்பம்

எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி....எபே.6:18.

நாம் விண்ணப்பத்தில் ஈடுபட்டிருக்கும்போது, தேவனுக்கு நாம் காண்பிக்கும் கீழ்ப்படிதலினாலே மற்ற மக்கள் நாம் நினைத்ததைவிட அதிகக் கிரயம் கொடுக்கவேண்டியதுவரும் என்பதைக் கண்டுகொள்ளலாம். நம்முடைய ஜெபத்தின் பலனாக தேவன் முற்றிலும் வேறுபட்ட கோளத்துக்குக் கிரமமாக உயர்த்திக்கொண்டிருந்த மக்களுக்காக அனுதாபத்துடன் விண்ணப்பஞ்செய்ய ஆரம்பிப்பது ஆபத்து. பிறரிடத்தில் தேவன் கொண்டிருக்கிற அக்கறையோடு ஒன்றிப்பதிலிருந்து அவர்களோடுள்ள அனுதாபத்திற்குத் திரும்பும்போதெல்லாம் தேவனோடுள்ள இன்றியமையாத தொடர்பு போய்விட்டது; பிறருக்கான நம்முடைய அனுதாபத்தையும் அவர்களுக்கான நம்முடைய கருதுதலையும் நாம் வழியில் தடையாக வைத்துவிட்டோம், அது வேண்டுமென்றே தேவனைக் கண்டனஞ்செய்கிறதாகும்.

தேவனைக்குறித்த பூரண நிச்சயம் நமக்கு இல்லாவிட்டால் கருத்தோடு விண்ணப்பஞ்செய்வது சாத்தியமல்ல; தேவனோடுள்ள நம்முடைய உறவை மிகவும் அதிகமாகச் சிதறடிப்பது தனிநபர்மீதுள்ள அனுதாபமும், தனிநபரைக்குறித்தத் தப்பெண்ணமுமே. தேவனோடு ஐக்கியப்படுவதே விண்ணப்பத்தின் திறவுகோலாகும்; தேவனோடு நாம் ஐக்கியப்பட்டிருப்பதை எப்போதாவது நிறுத்துவோமானால் அது பாவத்தினாலல்ல, பிறரோடுள்ள அனுதாபத்தினாலேயே. தேவனோடுள்ள நம்முடைய உறவில் பாவம் குறுக்கிடுவது பெரும்பாலும் நிகழக்கூடியதல்ல; ஆனால், அனுதாபம் அவ்வாறு செய்யும்--அக்காரியம் சம்பவிக்க நான் அனுமதிக்கமாட்டேன் என்று நம்மைக் கூறவைக்கும், நமக்குநேராகவோ அல்லது பிறருக்குநேராகவோ உள்ள அனுதாபமே அது. உடனடியாக தேவனோடுள்ள நமது இன்றியமையாத தொடர்பு அற்றுப்போகும்.

விண்ணப்பஞ்செய்வது உங்கள் சுயத்துக்காக ஜெபிப்பதற்கு நேரத்தையோ விருப்பத்தையோ தருவதில்லை. உங்களைக்குறித்த எண்ணம் தள்ளிவைக்கப்படவில்லை, ஏனெனில், உங்களைக்குறித்த எண்ணத்துக்கு இடமேயில்லை. பிறருடைய வாழ்க்கையில் தேவன் கொண்டுள்ள அக்கறையோடு நீங்கள் முழுமையாகவும் பூரணமாகவும் ஒன்றித்துவிட்டீர்கள்.

விண்ணப்பஞ்செய்வதற்கான தேவனுடைய அழைப்பே பகுத்துணர்வாகும், ஒருபோதும் குற்றங்கண்டுபிடிக்க அல்ல.

பிரதிநிதித்துவ விண்ணப்பம்.

ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு..... அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறது. எபி. 10:19,20.

நம்முடைய சொந்த அனுதாபங்களைத் தேவனுடைய சமுகத்தில் கொண்டுவருவதும், நாம் கேட்கிறவைகளை அவர் செய்யவேண்டுமென்று கேட்பதுமே விண்ணப்பத்தின் கருத்து என்று கற்பனைசெய்வதில் எச்சரிக்கையாயிருங்கள். நமது கர்த்தர் நமக்குப்பதில் பாவமானார் என்கிற ஒரே காரணத்தினாலேயே நாம் தேவனண்டை அணுகமுடியும். இயேசுவின் இரத்தத்தினாலேயே மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் தைரியம் நாம் பெற்றிருக்கிறோம்.

ஆவிக்குரிய பிடிவாதமே விண்ணப்பத்துக்கு மிகவும் ஆற்றல் வாய்ந்த தடையாகும்; ஏனெனில், நம்மிலும் பிறரிலுமுள்ள ஆவிக்குரிய பிடிவாதத்தைக்குறித்த அனுதாபத்தின் அடிப்படையில் அதன் பிராயச்சித்தஞ்செய்யப்படவேண்டிய தேவையைச் சிந்திக்கிறதில்லை. பிராயச்சித்தத்தை அடிப்படையாகக்கொள்ளத் தேவைப்படாத சரியும் ஒழுக்கமுமான ஏதோ சில காரியங்கள் நம்மில் உண்டு என்ற எண்ணம் நமக்கு இருக்கிறது; இந்தக் கருத்தால் உருவாக்கப்பட்ட மந்தமான பிரதேசத்தில் நாம் விண்ணப்பஞ்செய்யமுடியாது. தேவன் பிறரில் காண்பிக்கிற அக்கறையோடு நாம் ஒன்றிப்பதில்லை, தேவனிடம் எரிச்சல்கொள்ளுகிறோம்; நம்முடைய சொந்தக் கருத்துக்களோடு நாம் எப்போதும் ஆயத்தமாயிருக்கிறோம், விண்ணப்பம் நம்முடைய இயற்கையான அனுதாபத்தின் மேன்மைபாராட்டுதலாகின்றன. இயேசு பாவமாக்கப்பட்டார் என்பதின் கருத்து, நம்முடைய அனுதாபங்கள் எல்லாம் அடிப்படையாக மாற்றப்பட்டுவிட்டன என்று நாம் உணரவேண்டும். பிறர்மீது நமக்குள்ள இயற்கையான அனுதாபத்துக்குப் பதில் தேவன் அவர்கள்மீது கொண்டுள்ள அக்கறையை மனதார ஏற்றுக்கொள்வதே பிரதிநிதித்துவ விண்ணப்பமாகும்.

நான் பிடிவாதமுள்ளவனா, அல்லது பதிலீடு செய்யப்பட்டவனா? கடுகடுப்புள்ளவனா, அல்லது தேவனோடு பரிபூரண உறவு கொண்டவனா? நான் சிடுசிடுப்புள்ளவனா, அல்லது சீரான ஆவிக்குரியவனா? என் சொந்த வழியில் செல்லத் தீர்மானித்திருக்கிறேனா? அல்லது அவரோடு ஒன்றிக்கத் தீர்மானித்திருக்கிறேனா?

அன்பின் பாதாளத்தின்மேல் நியாயத்தீர்ப்பு

நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது. 1 பேதுரு 4:17.

இரட்சிப்பு மனிதனுடைய எண்ணமல்ல, தேவனுடைய சிந்தனை என்பதைக் கிறிஸ்தவ ஊழியர்கள் ஒருபோதும் மறந்துபோகக்கூடாது; எனவே, அது ஆழங்காணமுடியாத பாதாளம். இரட்சிப்பு தேவனுடைய மகாப்பெரிய ஆலோசனை, அது ஒரு அனுபவமல்ல. நம்முடைய இவ்வுலக வாழ்க்கைக்குள் இரட்சிப்பு பிரவேசிக்கிற நுளைவாசல் மட்டுமே அனுபவம். அனுபவத்தை ஒருபோதும் போதிக்காதீர்கள்; அதன் பின்னிலுள்ள தேவனுடைய மகாப்பெரிய ஆலோசனையைப் போதியுங்கள். நாம் பிரசங்கிக்கும் போது மனிதன் எப்படி நரகத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, ஒழுக்கமாயும் தூய்மையாயும் வாழமுடியுமென்று அறிவிப்பதில்லை; நாம் தேவனைக் குறித்த நற்செய்தியை அறிவிக்கிறோம்.

இயேசுகிறிஸ்துவின் போதனைகளில் நியாயத்தீர்ப்பைக்குறித்தக் கருத்து எப்போதும் வெளிப்படுத்தப்பட்டது; அது தேவனுடைய அன்பின் அடையாளம். தேவனிடம் சேருவது கடினமாயிருக்கிற ஆத்துமாவுக்காக ஒருபோதும் அனுதபிக்கவேண்டாம்; குற்றப்படுத்தப்படவேண்டியவர் தேவன் அல்ல. ஏன் கடினமாயிருக்கிறது என்கிற காரணத்தைக் கண்டுபிடிப்பது நம்முடைய கடமையல்ல; தவறு என்ன என்பதைத் தேவஆவியானவர் காண்பிக்கத்தக்கதாக, தேவனைக்குறித்த சத்தியத்தைக் கூறிக்கொடுக்க வேண்டும். பிரசங்கத்தின் மிகவும் சிறப்பான சோதனை என்னவென்றால் அது எல்லாரையும் நியாயத்தீர்ப்புக்குக் கொண்டுவருகிறதா என்பதே. தேவஆவியானவர் ஒவ்வொருவரையும் தமக்காகக் கண்டுபிடிக்கிறார்.

நாம் நிறைவேற்றுவதற்கு அவரால் நம்மை ஆற்றல்படுத்தமுடியாத ஒரு கட்டளையை இயேசு நமக்குக் கொடுத்திருந்தால் அவர் பொய்யராவார்; நம்முடைய இயலாமையைக் கீழ்ப்படிதலுக்குத் தடையாக்குவோமானால், அவர் கணக்கிலெடுத்திராத ஏதோவொன்று உண்டென்று நாம் தேவனிடம் கூறுகிறதாகப் பொருளாகிறது. நமது ஆற்றலில் நாம் வைக்கும் நம்பிக்கையின் ஒவ்வொரு பாகமும் தேவனுடைய வல்லமையால் அழிக்கப்பட வேண்டும். பூரணமாய்ப் பெலவீனன் என்ற உணர்வும், தேவனைச் சார்ந்துள்ள நிலையும் தேவஆவியானவர் தம்முடைய வல்லமையை விளங்கச் செய்யும் வாய்ப்பாக எப்போதும் இருக்கும்.

சுவிசேஷத்தின் பாதாளத்தில் சுயாதீனம்

கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள். கலாத்.5:1.

ஒரு ஆவிக்குரிய சிந்தையுள்ள மனிதர், இதையும் அதையும் விசுவாசியுங்கள் என்ற கோரிக்கையோடு உங்களிடம் வரமாட்டார்; ஆனால் இயேசுவின் நிலைக்கு உங்கள் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தும்படிக்கே கோரிக்கை விடுப்பார். வேதபுத்தகத்தை விசுவாசிக்கும்படி நாம் கேட்கப்பட வில்லை; வேதபுத்தகம் யாரை வெளிப்படுத்துகிறதோ அந்த நபரை விசுவா சிக்கும்படிக்கே நாம் கேட்கப்படுகிறோம் (cf.யோவான் 5:39,40). கருத்தின் சுயாதீனத்தையல்ல, மனச்சாட்சியின் சுயாதீனத்தையே அறிவிக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவின் சுயாதீனத்தால் நாம் விடுதலை அடைந்திருந்தால், இயேசுகிறிஸ்துவின் ஆதிக்கத்தை உணருகிற விடுதலை யாகிய அதே விடுதலைக்குள் பிறரும் கொண்டுவரப்படுவார்கள்.

இயேசுவின் வாழ்க்கைத்தரத்தைக்கொண்டே எப்போதும் உங்கள் வாழ்க்கையை அளக்கவேண்டும். அவருடைய நுகம்தவிர வேறு எந்த நுகத்துக்கும் உங்கள் கழுத்தை நீட்டாதீர்கள்; இயேசுகிறிஸ்து சுமத்துகிற நுகம்தவிர வேறு நுகத்தை பிறர்மீது வைக்காதிருக்கக் கருத்தாயிருங்கள். எல்லோரும் நாம் பார்க்கிறதுபோல பார்க்காவிட்டால், அவர்கள் தவறாய்த் தான் இருக்கவேண்டும் என்கிற எண்ணத்திலிருந்து நம்மை விடுவிக்க தேவனுக்கு அதிகக் காலமாகிறது. அது ஒருபோதும் தேவனுடைய கருத்து அல்ல. ஒரேயொரு விடுதலை மாத்திரமே உண்டு; அந்த விடுதலை இயேசு நம்முடைய மனச்சாட்சியில் கிரியைசெய்து, நாம் சரியானதைச் செய்வதற்கான ஆற்றலளிக்கும் விடுதலையே

பொறுமையை இழக்காதீர்கள்; தேவன் உங்களோடு எவ்வளவு பொறுமையோடும் சாந்தத்தோடும் இடைபட்டார் என்பதை நினைத்துக்கொள் ளுங்கள்; ஆனால், அதற்காகத் தேவனுடைய சத்தியத்தைக் கலப்படமாக்கா தீர்கள். அவருடைய சத்தியம் தானாகவே செயல்படட்டும், அதற்காக இரங்கல் தெரிவிக்காதீர்கள். நீங்கள் புறப்பட்டுப்போய் சீஷராக்குங்கள் என்று இயேசு சொன்னாரேதவிர, உங்கள் கருத்தை ஏற்றுக்கொள்ளும் படிச் செய்யுங்கள் என்று அவர் சொல்லவில்லை.

நித்தியத்துக்காகக் கட்டுதல்

உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து, ...அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப்பாராமலிருப்பானோ? லூக்கா 14:28,30.

நாம் கணக்குப்பார்க்கவேண்டிய செல்லுஞ்செலவைக்குறித்து நம் ஆண்டவர் குறிப்பிடாது, அவர் கணக்குப்பார்த்த செலவைக்குறித்தே அவர் குறிப்பிட்டார். நாசரேத்தின் அந்த முப்பது ஆண்டுகள், நன்மதிப்பும் அவமானமும் பகையுமான அந்த மூன்றாண்டுகள், கெத்செமனேயின் ஆழ்ந்த அளவிடமுடியாத வியாகுலம், கல்வாரியின் கடுந்தாக்குதல் என்பவைகளே அந்தச் செலவுகள்; இந்த அச்சாணியிலேயே முழுக் காலமும், நித்தியமும் சுழல்கின்றன. இயேசுகிறிஸ்து இந்தச் செல்லுஞ் செலவைக் கணக்குப்பார்த்திருந்தார். ஏனெனில், இந்த மனுஷன் கட்டத்தொடங்கி, முடிக்கத் திராணியில்லாமற்போனான் என்று இறுதியில் மனிதர் அவரைப் பார்த்து நகைக்கக் கூடாதல்லவா!

எந்த ஆண்களிலும் பெண்களிலும் நமது ஆண்டவர் எல்லாவற்றையும் செய்து நிறைவேற்றியிருக்கிறாரோ அவர்களையே அவர் தமது வல்லமையான கட்டுமான நிறுவனங்களில் பயன்படுத்தப்போகிறார் என்றே 26,27,33 என்ற வசனங்களில் சீஷத்துவத்தைக்குறித்து அவர் கூறிய நிபந்தனைகள் பொருட்படுகின்றன. யாதொருவன் என்னிடத்தில் வந்து .....வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான் என்று அவர் கூறினார். இவ்வுலகிலுள்ள எந்த நெருக்கமான கட்டுகளுக்கும் அப்பால் ஆளத்துவமாகவும் ஆர்வத்தோடும் அர்ப்பணத்தோடும் அவரை நேசிக்கிற ஆண்களையும் பெண்களையும் மட்டுமே தமது கட்டுமானப்பணிகளில் பயன்படுத்துவதாக நமது ஆண்டவர் குறிப்பாக உணர்த்துகிறார். இந்த நிபந்தனைகள் கடுமையானவை, ஆனால் அவை மகிமையானவை.

நாம் கட்டுவதெல்லாம் தேவனால் பரிசோதிக்கப்படும். அவர் அக்கினி கொண்டு பரிசோதிக்கும்போது, இயேசுவாகிய அஸ்திவாரத்தின்மீது நம்முடைய சொந்தமான ஏதாவது திட்டத்தைக் கட்டியிருக்கக் காண்பாரோ? இந்நாட்கள் மிகப்பெரிய தொழில்முயற்சியின் நாட்கள்; நாம் தேவனுக்காகச் செயல்பட முயற்சிக்கும் நாட்கள்; அதில் கண்ணியிருக்கிறது. ஆழ்ந்தக் கருத்தில் சொன்னால், நாம் தேவனுக்காக ஒருபோதும் செயல்படமுடியாது. அவருடைய தொழில்முயற்சிகளிலும் கட்டுமானத் திட்டங்களிலும் இயேசு நம்மை அவருடைய கட்டுப்பாட்டுக்குள் முற்றும் கொண்டுவருகிறார்; தான் எங்கு வைக்கப்படவேண்டுமென்று உரிமைகோர எந்த ஆத்துமாவுக்கும் உரிமையில்லை.

விசுவாசத்தின் பொறுமை

என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்ட படியினால். வேளி.3:10.

பொறுமை சகித்துக்கொள்வதைவிட மேலானது. ஒரு வில்லாளரின் கையில் வில்லும் அம்பும் இருப்பதுபோலவே தேவனுடைய கரத்தில் ஒரு விசுவாசியின் வாழ்க்கையும் இருக்கிறது. பரிசுத்தவான் காணக்கூடாத ஏதோ ஒன்றுக்கு நேராக தேவன் குறிவைத்து நாணை இழுத்து வில்லை வளைக்கிறார்; என்னால் இனிமேல் சகித்துக்கொள்ளமுடியாது என்று விசுவாசி சிலவேளைகளில் கூறலாம். ஆனால், தேவன் அதைப் பொருட் படுத்தாமல், அவருடைய இலக்குப் பார்வையில் வரும்வரையிலும் நாணை இழுத்து, அதன்பின் அம்பை எய்கிறார். உங்களைத் தேவனுடைய கரத்தில் ஒப்படையுங்கள். தற்சமயம் உங்களுக்குப் பொறுமை எதற்குத் தேவை? விசுவாசத்தின் பொறுமையினால் இயேசுகிறிஸ்துவோடுள்ள உங்கள் உறவைக் காத்துக்கொள்ளுங்கள். அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன் என்று யோபுவோடுசேர்ந்து கூறுங்கள்.

விசுவாசம் பரிதாபப்படும் உணர்ச்சி அல்ல; அது தேவன் பரிசுத்த மான அன்பாயிருக்கிறார் என்கிற உண்மையில் கட்டப்பட்ட உறுதியான, திடமான நம்பிக்கையே. தற்சமயத்தில் நீங்கள் அவரைக் காணமுடியாது; அவர் என்ன செய்கிறார் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவும்முடியாது; ஆனால் நீங்கள் அவரை அறிந்திருக்கிறீர்கள். தேவன் பரிசுத்தமான அன்பாயிருக்கிறார் என்கிற நித்திய சத்தியத்தில் உறுதிப்பட்டதினால் வருகிற மனதின் நிதானம் இல்லாத இடத்தில் கப்பற்சேதம் நிகழ்கிறது. விசுவாசம் என்பது உங்கள் வாழ்க்கையின் வீரமுள்ள முயற்சி; தேவன்மீதுள்ள அசட்டுத் துணிச்சலான நம்பிக்கையோடு நீங்கள் குதித்துவிடுங்கள்.

நம்மை இரட்சிப்பதற்காக இயேசுகிறிஸ்துவுக்குள் தேவன் எல்லாவற் றுக்கும் துணிந்து செயல்பட்டார்; எனவே அவர்மீதுள்ள முற்றும் துறந்த நம்பிக்கையில் நாமும் எல்லாவற்றுக்கும் துணிந்து செயல்படவே அவர் எதிர்பார்க்கிறார். நம்மில் அந்த விசுவாசம் இதுவரையிலும் செயல்படாத பாகங்கள், அதாவது தேவனுடைய ஜீவனால் தொடப்படாத இடங்கள் உண்டு. இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையில் இத்தகைய பாகங்கள் எதுவும் இருந்ததில்லை; எனவே நம்முடைய வாழ்க்கையிலும் ஒன்றும் இருக்கக் கூடாது. உம்மை அறிவதே நித்திய ஜீவன் என்று இயேசு சொன்னார். சந்திக்கவேண்டிய எக்காரியத்தையும் தடுமாறாமல் சந்திக்கும் வாழ்க்கையே நித்திய ஜீவனின் உண்மையான கருத்து. இந்தக் கருத்தை நாம் எடுத்தால், வாழ்க்கை வீரகாவியமாகவும், எப்போதும் அற்புதமான காரியங்களைக் காணும் மகிமையான சந்தர்ப்பமாகவும் இருக்கும். வல்லமையின் இந்த மையப் பகுதிக்கு நம்மைக் கொண்டுவர தேவன் நம்மைப் பயிற்றுவிக்கிறார்.

எட்டாத பிடிப்பு

தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள். நீதி.29:18.

இலட்சியத்துக்கும் தரிசனத்துக்குமிடையே வேறுபாடு உண்டு. ஒரு இலட்சியத்துக்குத் தார்மீக உத்வேகமில்லை; ஆனால் தரிசனத்துக்கு அது உண்டு. இலட்சியத்துக்குத் தங்களை ஒப்புவித்த மக்கள் எதையும் செய்வது அரிது. ஒருவர் தன் கடமையை வேண்டுமென்றே புறக்கணிப்பதை நியாயப் படுத்தத் தெய்வீகத்தைக்குறித்தத் தன் கருத்தைப் பயன்படுத்தலாம். தேவன் நீதியும் இரக்கமுமுள்ள தேவனாகையால் எல்லாம் சரியாயிருக்கும் என்று யோனா விவாதித்தார். எனக்குத் தேவனைக்குறித்தச் சரியான கருத்து இருக்கலாம், என் கடமையை நான் செய்யாமலிருக்க அதுவே காரணமா யிருக்கலாம். ஆனால், எங்கெங்கெல்லாம் தரிசனம் உண்டோ, அங்கு நேர்மையான வாழ்க்கையுண்டு; ஏனெனில், தரிசனம் தார்மீக ஊக்கத்தைப் பகிர்ந்தளிக்கிறது.

இலட்சியம் தாலாட்டுப்பாடி அழிவுக்குக் கொண்டுசெல்லலாம். உங்களை ஆவிக்குரிய நிலையில் மதிப்பீடு செய்து, உங்களிடமிருப்பது இலட்சியங்கள் மட்டுந்தானா, அல்லது உங்களிடம் தரிசனம் இருக்கிறதா என்று கவனியுங்கள்.

ஆஹா, ஒரு மனிதன் பற்றிப்பிடிப்பதைவிட
அவன் எட்டுவது மிகைப்பட வேண்டும்.
அல்லாவிட்டால் பரலோகம் ஏன் தேவை?

தரிசனமில்லாத இடத்தில்.....நாம் தேவனைக்குறித்தக் காட்சியை இழக்கும்போது நாம் பொறுப்பற்றவர்களாக ஆரம்பிக்கிறோம், குறிப்பிட்டக் கட்டுப்பாடுகளை நிராகரிக்கிறோம், ஜெபத்தை விட்டுவிடுகிறோம், சின்னக் காரியங்களில் தேவனுடைய தரிசனத்தை இழந்துவிடுகிறோம், நம்முடைய சொந்த முயற்சிப்படி செயல்பட ஆரம்பிக்கிறோம். நம்மிடமிருப்பதை நமது சொந்தக் கரங்களிலிருந்து நாம் உண்போமேயானால், தேவன் உள்ளே வருவதற்கு எதிர்பாராதபடி நம்முடைய முனைப்புப்போல நாம் செயல்படு வோமேயானால் நாம் கீழ்நோக்கிச்செல்லும் பாதையிலிருக்கிறோம், நாம் தரிசனத்தை இழந்துவிட்டோம். தேவனைப்பற்றிய நம்முடைய தரிசனத்தி லிருந்து எழும்புகிறதுதானா நம்முடைய இன்றைய மனோநிலை? தேவன் இதுவரை செய்த காரியங்களைவிடப் பெரிய காரியங்களைச் செய்ய நாம் எதிர்பார்க்கிறோமா? நம்முடைய ஆவிக்குரிய மனோபாவத்தில் புதுமையும் விறுவிறுப்பும் காணப்படுகிறதா?

நீங்களாக முதல் அடி எடுத்துவையுங்கள்

உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தை.....கூட்டி வழங்குங்கள். 2 பேதுரு 1:5,7.

கூட்டுங்கள் என்னும்போது நாம் செய்யவேண்டிய ஏதோ ஒன்று உண்டு எனப் பொருட்படுகிறது. தேவன் செய்கிறவைகளை நம்மால் செய்ய முடியாதென்பதையும், நம்மால் செய்யமுடிகிறவைகளைத் தேவன் செய்ய மாட்டார் என்பதையும் மறந்துபோகிற ஆபத்து நமக்குண்டு. நாமாக நம்மை இரட்சிக்கவோ நம்மைப் பரிசுத்தப்படுத்தவோ முடியாது, தேவனே அதைச் செய்வார்; ஆனால், தேவன் நமக்கு நல்ல பழக்கங்களைத் தரமாட்டார், அவர் நமக்கு நற்பண்புகளைத் தரமாட்டார், நம்மை நேர்மையாக நடக்க வைக்கமாட்டார். இவைகளையெல்லாம் நாமே செய்யவேண்டும்; தேவன் நமக்குள் செய்துள்ள இரட்சிப்பை நாம் நிறைவேற்றவேண்டும். கூட்டுவது என்னும்போது காரியங்களைச் செய்யப் பழக்கப்படுத்திக்கொள்வதாகும்; ஆரம்பக் கட்டத்தில் அது கடினம். ஆயினும், முதல் அடி எடுத்துவைப்பது ஒரு ஆரம்பமாகும், அது நீங்கள் போகவேண்டிய வழியை உங்களுக்கு நீங்களே போதித்தலாகும்.

வழியை நீங்கள் மிகவும் நன்றாய் அறிந்திருக்கும்போது அதைக் குறித்து விசாரிக்கும் மனப்பான்மையைப்பற்றி ஜாக்கிரதையாயிருங்கள். முனைப்பு எடுங்கள், தயங்குவதை நிறுத்துங்கள், முதல் அடி எடுத்துவை யுங்கள். தேவன் பேசும்போது உறுதியாயிருங்கள், அவர் சொல்லுகிறவை களில் விசுவாசத்தோடு உடனடி செயல்படுங்கள்; ஒருபோதும் உங்கள் தீர்மானங்களைத் திரும்பிப்பாராதீர்கள். ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்யும்படி தேவன் சொல்லும்போது நீங்கள் தயங்குவீர்களானால், நீங்கள் கிருபையில் நிலைகொண்டிருப்பதற்கு ஆபத்தை ஏற்படுத்துகிறீர்கள். முதற்படி எடுத்து வையுங்கள், அதை நீங்களாகவே செய்யுங்கள், உங்கள் சித்தத்தோடு இப்போதே காலடி எடுத்துவையுங்கள்; திரும்பிப் போவதை அசாத்தியமாக்குங்கள். அக்கடிதத்தை எழுதுவேன், அக்கடனைக் கொடுத் துத்தீர்ப்பேன் என்று தீர்மானித்தபின், அதில் பின்வாங்குவதற்கான வழியை அடைத்துவிடுங்கள், அவைகளை இன்றியமையாதவைகளாக்குங்கள்.

எல்லாக் காரியங்களைக்குறித்தும் தேவனுக்குச் செவிகொடுக்க நாம் பழகிக்கொள்ளவேண்டும்; தேவன் என்ன சொல்லுகிறார் என்பதைக் கண்டறியும் பழக்கத்தை உண்டாக்கவேண்டும். நெருக்கடி வரும்போது, நாம் சுயேச்சையாகத் தேவனிடம் திரும்புகிறோமானால், அந்தப் பழக்கம் உருவாகிவிட்டது என்பதை நாம் அறிவோம். நாம் இதுவரை அடைந்திராத இடத்திலிருந்து அல்ல, நாம் இருக்கிற இடத்திலிருந்து முதல் அடி எடுத்து வைக்கவேண்டும்.

கால்விரல் நுனிமீது நின்றும் நீங்கள் எட்டமாட்டீர்கள்

சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். 2 பேதுரு 1:7.

நம்மில் அநேகருக்கும் அன்பு வரையறையற்றது; நாம் அன்பைக் குறித்துப் பேசும்போது என்ன கருதுகிறோம் என்று நமக்குத் தெரிவதில்லை. ஒருவர்மேல் ஒருவர் தலையாய முன்னுரிமை வைத்தலே அன்பு; ஆவிக்குரிய நிலையில் அந்த முன்னுரிமை தமக்குக் கொடுக்கப்படவேண்டும் என்று இயேசு தேவைப்படுகிறார் (cf.லூக்கா 14:26). பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்படும்போது, இயேசு கிறிஸ்து எளிதாக முதலிடம் வகிக்கிறார்; அதற்குப்பின்பு பேதுரு கூறிய இக்காரியங்களை மேம்படுத்த நாம் பயிற்சிசெய்யவேண்டும்.

தேவன் செய்கிற முதலாவது காரியம் பாசாங்கையும் பக்திமானாய் நடிப்பதையும் என்னிலிருந்து வெளியேற்றுவதே. நான் அன்புகூரத் தகுதி உடையவனாயிருந்ததினாலல்ல, அன்புகூருவது தேவனுடைய இயல்பாய் இருப்பதினாலேயே தேவன் என்னில் அன்புகூர்ந்தார் என்று பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்துகிறார். இப்போது அதே அன்பை நீ பிறரிடம் காட்டு; அதாவது நான் உன்னில் அன்புகூர்ந்ததுபோல நீயும் பிறரில் அன்புகூரவேண்டும். நீ கனப்படுத்த விரும்பாத ஏராளம் மக்களை நான் உன்னைச்சூழக் கொண்டுவருவேன், நான் உன்னிடம் காண்பித்ததுபோல, என்னுடைய அன்பை அவர்களிடம் நீ காண்பிக்கவேண்டும் என்று அவர் என்னிடம் கூறுகிறார். உங்கள் கால்விரல் நுனிகளில் நின்று அதை நீங்கள் எட்டமுடியாது. நம்மில் சிலர் அவ்வாறு செய்ய முயற்சித்தோம், ஆனால் நாம் சீக்கிரம் களைத்துப்போனோம்.

தேவன் நீடிய சாந்தமுள்ளவர். நான் என்னை ஆராய்ந்துபார்த்து, அவர் என்னை நடத்துகிறமுறைகளைக் காணட்டும். என்னுடைய எல்லாப் பாவம், இழிவு, சுயநலம் மற்றும் தவறுகளின் மத்தியிலும் தேவன் என்னில் முற்றுமுடிய அன்புகூர்ந்தார் என்கிற அறிவு, நானும் அதே நிலையில் அன்புகூரும்படி என்னை உலகத்துக்குள் அனுப்பும். எனக்குநேரான தேவனுடைய அன்பு வற்றிப்போகாதது; தேவன் என்னில் அன்புகூர்ந்ததின் அடிப்படையில் நானும் பிறரில் அன்புகூரவேண்டும். நான் கோபப்படும் அதே நொடிப்பொழுதில் கிருபையில் வளருவது நிற்கிறது. நான் கோபப்படும் காரணம் விசித்திரமான ஒருவரோடு வாழவேண்டியது வந்ததே. ஆனால், நான் தேவனுக்கு எவ்வளவு ஒவ்வாதவனாயிருந்தேன் என்பதை எண்ணிப் பாருங்கள்! கர்த்தராகிய இயேசுவின் ஜீவனும் அவருடைய இனிமையும் எப்போதும் ஊற்றப்படத்தக்கதாக அவரோடு ஒன்றிக்க நான் ஆயத்தமா? மாம்சீக அன்பானாலும், தெய்வீக அன்பானாலும் பேணப்படாவிட்டால் அது நிலைத்திராது. அன்பு தானாகவே ஏற்படுகிறது; ஆனால் அது பயிற்சியினால் பேணப்படவேண்டும்.

பழக்கங்களில்லாத பழக்கத்தை உண்டாக்குங்கள்

இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை....வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. 2 பேதுரு 1:8.

ஒரு பழக்கத்தை உருவாக்க நாம் ஆரம்பிக்கும்போது அதைக் குறித்த உணர்வுள்ளவர்களாய்த்தான் இருக்கிறோம். நாம் ஒழுக்கமும் பொறுமையும் தேவபக்தியும் உள்ளவர்களாகிக்கொண்டேயிருக்கிறோமென்று உணருகிற சந்தர்ப்பங்களுண்டு, ஆனால், அது ஒரு கட்டம் மாத்திரமே; அங்கு நாம் நின்றுவிட்டால் ஆவிக்குரிய போலித்தற்பெருமையின் கர்வங் கொள்வோம். எனவே, அறியத்தக்க ஒரு பழக்கமும் இல்லாமலாவதற்காக ஒவ்வொரு பழக்கத்தையும் அப்பியாசிக்கும்வரையிலும், ஆண்டவருடைய ஜீவனுக்குள் எல்லாவற்றையும் களைந்துவிடுவதே பழக்கங்களைப்பொறுத்த மட்டிலும் சரியான செயல். நாம் இதுமட்டும் கூட்டாத சில நற்பண்புகள் இருக்குமாகையால், நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை எப்போதும் உள்ளான ஆராய்ச்சியினால் தீர்மானிக்கப்படவேண்டும். இறுதியாக உறவு முற்றிலும் எளிமையானதொன்றாயிருக்கவேண்டும்

குறிப்பிட்ட நேரங்களில் ஜெபிக்கும் பழக்கம், அல்லது வேதத்தை வாசிக்கும் பழக்கம் போன்ற சிறிய கிறிஸ்தவப் பழக்கம் உங்கள் கடவுளாய் இருக்கலாம். பழக்கம் அடையாளப்படுத்துவதை ஆராதியாமல், பழக்கத்தை ஆராதிக்க ஆரம்பிக்கும்போது உங்கள் பிதா எவ்வாறு அந்தத் தருணங் களைக் கவிழ்த்துப்போடுகிறார் என்பதைக் கவனித்துப்பாருங்கள்--அதை நான் இப்பொழுதே செய்யமுடியாது, நான் ஜெபித்துக்கொண்டிருக்கிறேன்; இது நான் தேவனோடு செலவிடும் ஒரு மணி நேரம் என்று நீங்கள் கூறலாம். அல்ல, அது நீங்கள் உங்கள் பழக்கத்தோடு செலவிடும் ஒரு மணி நேரம். உங்களில் குறைவுபடுகிற ஒரு தன்மையுண்டு. அந்தக் குறைவைக் கண்டுபிடித்து, உங்களில் கூட்டப்படவேண்டிய நற்பண்புக்கு ஒத்தவாறு உங்களைப் பயிற்சிக்கும் தருணத்தைத் தேடிக்கொள்ளுங்கள்.

அன்பு என்பது வெளிப்படையான ஒரு பழக்கமும் இல்லை என்று பொருளாகும்; பழக்கங்களைக் களைந்து, பயிற்சியினால் உங்களை அறியாமலே காரியங்களைச் செய்கிற நிலைக்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். நீங்கள் மனதாரப் பரிசுத்தமாயிருக்கிறீர்களானால், செய்யக்கூடாது என்று நீங்கள் எண்ணுகிற சில காரியங்கள் உண்டு, சில உறவுகளில் நீங்கள் சிக்கலாயிருக்கிறீர்கள்; எனவே, கூட்டப்படவேண்டிய ஏதோவொன்று இருக் கிறது. கர்த்தராகிய இயேசு வாழ்ந்த வாழ்க்கை மாத்திரமே இயற்கைக்கு அப்பாற்பட்டது; அவர் எங்கும் தேவனோடு மகிழ்ச்சியாயிருந்தார். நீங்கள் தேவனோடு மகிழ்ச்சியாயிருக்கக்கூடாத இடம் ஏதாவது உண்டா? அவரை நீங்கள் ஆதாயஞ்செய்யுமட்டும் அந்தக் குறிப்பிட்டச் சூழலில் தேவன் பலவந்தமாகப் பிரவேசிக்கட்டும்; அப்போது வாழ்க்கை ஒரு குழந்தையின் எளிமையான வாழ்க்கையைப்போல ஆகும்.

ஒரு நல்ல மனச்சாட்சியின் பழக்கம்

தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சி. அப்.24:16.

நமக்குள்ளிருக்கிற தேவகுமாரனின் வாழ்க்கைக்கே தேவனுடைய கற்பனைகள் கொடுக்கப்பட்டுள்ளன; அதின்பலனாக, அவருடைய குமாரன் உருவாக்கப்பட்டிருக்கிற மனிதத் தன்மைக்கு அவருடைய கற்பனைகள் கடினமானவை; ஆனால், நாம் கீழ்ப்படிந்தவுடனே அவைகள் தெய்வீக எளிமை அடைந்துவிடுகின்றன.

நான் அறிந்துள்ளதில் மிகவும் உன்னதமானதோடு தன்னை இணைக்கிறதும், நான் அறிந்துள்ளதில் மிகவும் உன்னதமானது நான் எவைகளைச் செய்யவேண்டுமென்று தேவைப்படுகிறதோ அவைகளைச் சொல்லுகிறதுமான என்னிலிருக்கும் இயற்கைத்திறனே மனச்சாட்சியாகும். தேவனுக்கு நேராகவோ அல்லது அது மிகவும் உன்னதமானதாகக் கருதுகிறதற்கு நேராகவோ நோக்கிப்பார்க்கிற ஆத்துமாவின் கண் அது; எனவே, மனச்சாட்சி வெவ்வேறு ஆட்களில் வெவ்வேறு விதமாகப் பதிவுசெய்கிறது. நான் நிதானத்துடன் தேவனுடைய சமுகத்தை எதிர்கொள்ளுகிற பழக்கமுள்ளவனானால் என் மனச்சாட்சி தேவனுடைய குறைவற்ற கற்பனையை எப்போதும் எனக்கு அறிமுகப்படுத்துவதோடு, நான் என்ன செய்யவேண்டுமென்றும் சுட்டிக்காட்டும். நான் கீழ்ப்படிவேனா என்பதுதான் குறிப்பு. தவறு செய்யாதபடி நான் நடக்கத்தக்கதாக என் மனச்சாட்சியை நான் கூர்மையாக வைக்க முயற்சி எடுக்கவேண்டும். எல்லாச் சூழ்நிலைகளிலும் என் மனதின் ஆவி புதிதாக்கப்படவும், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று உடனடியாகப் பகுத்தறியவுந் தக்கதாக தேவகுமாரனோடு பூரண ஒத்துணர்வோடு நான் வாழவேண்டும்.

நுட்பமான காரியங்கள்வரையிலும் தேவன் எப்போதும் நம்மைக் கற்பிக்கிறார். நான் என்ன செய்யவேண்டும் என்பதை அறிய, ஆவியானவரின் மிகவும் மெல்லிய குரலையும் கேட்பதற்கு என் செவி கூர்மையாயிருக்கிறதா? பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். இடிமுழக்கம் போன்ற சத்தத்தோடு அவர் வரமாட்டார்; அவருடைய சத்தம் மிகவும் மிருதுவாயிருப்பதினால் அதைக் கவனியாதிருப்பது எளிது. மனச்சாட்சியை அவருக்கு நேராக உணர்வுள்ளதாகக் காத்துக்கொள்ளும் ஒரே காரியம் உட்புறத்தில் தேவனுக்கு நேராகத் திறந்தநிலையிலிருக்கும் தொடர்பானப் பழக்கமே. விவாதம் நடக்கும்போது விட்டுவிலகுங்கள். நான் ஏன் இதைச் செய்யக்கூடாது என்று கேட்டால் நீங்கள் தவறான தடத்தில் இருக்கிறீர்கள். மனச்சாட்சி பேசும்போது விவாதத்திற்கு சாத்தியமில்லை. தேவனோடுள்ள உள்ளான உறவை மங்கலாக்க எதையும் அனுமதிப்பது உங்களுக்கு ஆபத்து. அது எதுவாயிருந்தாலும் விட்டுவிடுங்கள், உங்கள் உள்ளான காட்சியைத் தெளிவாகக் காத்துக்கொள்ளக் கவனமாயிருங்கள்.

ஒவ்வாததை ரசிக்கும் பழக்கம்

கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு. 2 கொரி.4:10.

தேவனுடைய கிருபை நம்மில் செய்துள்ளவைகளை வெளிப்படுத்தும்படி நாம் நல்ல பழக்கங்களை உருவாக்கவேண்டும். நரகத்திலிருந்து இரட்சிக்கப்படுவது அல்ல முக்கியம், நம்முடைய சாவுக்குரிய சரீரங்களில் தேவகுமாரனுடைய ஜீவனை வெளிப்படுத்தவே நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்பதே முக்கியம்; அவருடைய ஜீவனை நாம் வெளிப்படுத்துகிறோமா இல்லையா என்பதை ஒவ்வாத காரியங்களே நம்மை வெளிக்காட்டச் செய்கின்றன. தேவகுமாரனுடைய இன்றியமையாத இனிமையை நான் வெளிப்படுத்துகிறேனா? அல்லது, அவரில்லாமல் என்னுடைய சுயத்தின் அடிப்படையான எரிச்சலை வெளிப்படுத்துகிறேனா? தேவகுமாரனுடைய ஜீவன் தன்னை என்னில் வெளிப்படுத்தும்படி நான் அனுமதிக்கும் ஆர்வமிக்க உற்சாகமே, ஒவ்வாதவைகளையும் நான் ரசிக்க இயலச்செய்யும் ஒரே காரியமாகும். ஒரு காரியம் எவ்வளவு ஒவ்வாததாயிருந்தாலும், ஆண்டவரே, இந்தக் காரியத்தில் உமக்குக் கீழ்ப்படிய நான் பிரியப்படுகிறேன் என்று கூறுங்கள்; உடனடியாக தேவகுமாரன் முன்னே வருவார்; அப்போது இயேசுவை எது மகிமைப்படுத்துமோ அது என்னுடைய மானிட வாழ்க்கையில் வெளிப்படும்.

எந்த விவாதமும் கூடாது. ஒளிக்கு நீங்கள் கீழ்ப்படிந்தகணத்தில் அக்காரியத்தைத் தேவகுமாரன் உங்கள்மூலம் வற்புறுத்துவார்; நீங்கள் விவாதிப்பீர்களானால், தேவனுடைய ஆவியைத் துக்கப்படுத்துவீர்கள். தேவகுமாரனுடைய ஜீவனை வெளிப்படுத்தத்தக்கதாக உங்களை நீங்கள் தகுதியாகக் காத்துக்கொள்ளவேண்டும்; ஆனால் தன்னிரக்கத்துக்கு இடங்கொடுத்தால் உங்களை நீங்கள் தகுதியாகக் காத்துக்கொள்ளமுடியாது. நம்முடைய சூழ்நிலைகள்தான் தேவகுமாரன் எவ்வளவு அற்புதமாகப் பூரணர் மற்றும் அசாதாரணமாகப் பரிசுத்தர் என்பதை வெளிப்படுத்தும் வழிகள். இருதயத்தைத் துடிக்கவைக்கவேண்டிய காரியம் தேவகுமாரனை வெளிப்படுத்தும் புதிய வழிமுறை. ஒவ்வாததைத் தெரிந்துகொள்வது ஒரு காரியம்; ஆனால் தேவனுடைய திட்டப்படி ஒவ்வாததற்குள் செல்லுவது இன்னொரு காரியம். தேவன் உங்களை அங்கு வைப்பாரேயானால் அவர் தாராளமாகப் போதுமானவர்.

தேவகுமாரனுடைய ஜீவனை வெளிக்காட்டத் தகுதியாக உங்கள் ஆத்துமாவைக் காத்துக்கொள்ளுங்கள். கடந்தகால நினைவுகளில் ஒரு போதும் வாழாதீர்கள்; தேவவசனம் எப்போதும் உங்களில் உயிருள்ளதாயும் செயல்படுகிறதாயும் இருக்கட்டும்.

எதிர்பாராத சவாலைச் சந்திக்கும் பழக்கம்

தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்ன தென்று.... நீங்கள் அறியும்படிக்கு. எபே.1:18,19.

தேவகுமாரன் உங்கள் மாம்ச சரீரத்தில் வெளிப்படும்படி நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள் என்பதை நினைவுகூருங்கள். தேவனுடைய பிள்ளை களாகும்படி நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டிருப்பதை உணர்ந்துகொள்ளு வதற்கு உங்கள் வல்லமையின் முழுச்சத்துவத்தைப் பயன்படுத்துங்கள்; ஒவ்வொரு வேளையிலும் எதிர்பாராத சவாலைச் சந்தியுங்கள்.

உங்களுடைய இரட்சிப்புக்காக நீங்கள் ஒன்றும் செய்யமுடியாது, ஆனால், அதை வெளிப்படுத்த நீங்கள் ஏதாவது செய்தாகவேண்டும்; தேவன் உங்களுக்குள் செய்துள்ளவைகளை நீங்கள் புறம்பே வெளிப்படுத்த வேண்டும்; உங்கள் நாவு, மூளை மற்றும் நரம்புகள்மூலமாக நீங்கள் வெளிப்படுத்துகிறீர்களா? நீங்கள் இன்னும் அதே பரிதாபத்துக்குரிய சிடுசிடுப்பானவர்களாய் உங்கள் சொந்த வழியில் நிலைகொண்டால், தேவன் உங்களை இரட்சித்து பரிசுத்தமாக்கினார் என்று கூறுவது பொய்.

தேவன் ஒரு தலைசிறந்த பொறியாளர்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன் என்று கூறி, நீங்கள் சில பாடுகளின்மேல் தாவிக் குதிக்கமுடியுமா என்று பார்க்கும்படி, அவைகள் உங்களுக்கு வரும்படி தேவன் அனுமதிக்கிறார். நீங்கள் அவருடைய மகனாகவோ மகளாகவோ இருப்பதற்குரிய எந்த நிபந்தனைகளிலிருந்தும் அவர் உங்களைப் பாது காக்கமாட்டார். உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகைக்கவேண்டாம் என்று பேதுரு கூறியுள்ளார். சந்தர்ப்பத்துக்கேற்றவாறு செயல்படுங்கள். உங்கள் மாம்சீக சரீரத்தில் தேவன் தம்மை வெளிப்படுத்தும் வாய்ப்பைத் தேவனுக்குக் கொடுக்கும் எதுவும் உங்களை எவ்வாறு புண்படுத்தினாலும் பரவாயில்லை.

இனிமேல் தேவன் நம்மில் புலம்பலைக் காணவேண்டாம்; ஆவிக் குரிய ஊக்கமும் உடல் வலிமையும் நிறைந்து, அவர் கொண்டுவருகிற எதையும் எதிரிட ஆயத்தமுள்ளவர்களாய் அவர் நம்மைக் காணட்டும். நம்முடைய மாம்சீக சரீரத்தில் தேவகுமாரன் வெளிப்படத்தக்கதாக நாமாகப் பயிற்சிசெய்யவேண்டும். தேவகுமாரன் வெளிப்படவேண்டும் என்பதும், தேவனுக்குக் கட்டளையிடுதல் அகன்றுபோவதுமே வாழ்க்கையின் ஒரே நோக்கமாகும். நமது ஆண்டவர் ஒருபோதும் பிதாவுக்கு உத்தரவிட வில்லை, நாமும் தேவனுக்கு உத்தரவிட இங்கிருக்கவில்லை; அவருக்கு விருப்பமானதை அவர் நம்மூலம் நிறைவேற்ற அவருடைய சித்தத்துக்கு நம்மை ஒப்புவிக்கவே நாம் இங்கிருக்கிறோம். இதை நாம் உணரும்போது, பிறருக்கு உணவளிக்கவும் ஊட்டமளிக்கவும் நம்மை நொறுக்கப்பட்ட அப்பமாயும் ஊற்றப்பட்ட இரசமாயும் அவர் மாற்றுவார்.

தனமாகிய பழக்கம்

திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்கள். 2 பேதுரு 1:4.

வாக்குத்தத்தங்களினாலே நாம் தெய்வீகத் தன்மைக்குப் பங்குள்ள வர்களாக்கப்பட்டிருக்கிறோம்; எனவே, நம்முடைய மனிதத்தன்மையில் தெய்வீகத் தன்மையைப் பழக்கங்களால் திறமையாய்க் கையாளவேண்டும்; தேவன் செய்திருக்கிற முன்னேற்பாடுகளை அறியும் பழக்கமே உருவாக்கப் படவேண்டிய முதலாவது பழக்கம். ஐயோ, அதற்கு என்னால் உதவிசெய்ய முடியாது என்று நாம் கூறுகிறோம்--மிக மோசமானப் பொய்களில் ஒன்று அந்த வாக்கியத்தில் அடங்கியிருக்கிறது. இயற்கை மண்டலத்தில் பணத் தைக்குறித்துப் பேசுவது கட்டுப்படுத்தமுடியாத இழிவானது, ஆவிக்குரிய மண்டலத்திலும் அவ்வாறே; ஆயினும் நம் பரமபிதா நமக்கு ஒரு ரூபாய் கொடுத்துவிட்டு நம்மை வெட்டிவிடுகிறவர் போலல்லவோ நாம் பேசுகிறோம்! ஒரு நாளின் முடிவில், நான் எப்படியோ கடந்துவிட்டேன், ஆனால் அது கடும் போராட்டமாயிருந்தது என்று கூறுவது உண்மையான அடக்கத்தின் அடையாளமென்று எண்ணுகிறோம். சர்வவல்லமையுள்ள தேவன் எல்லாம் கர்த்தராகிய இயேசுவுக்குள் நமக்குரியவர்! நாம் அவருக்குக் கீழ்ப்படிந்தால், மணலின் இறுதி பரலையும் தூரத்து நட்சத்திரத்தையும் பாரப்படுத்தியாவது அவர் நம்மை ஆசீர்வதிக்கிறார். புறம்பான சூழல்கள் கடினமாயிருந்தால் நமக்கென்ன? அவைகள் ஏன் அப்படி இருக்கக்கூடாது? நாம் தன்னிரக்கத் திற்கு இடங்கொடுத்து, துன்பங்களைத் தாராளமாக அனுபவிப்போமானால் தேவனுடைய செல்வங்களை நம்முடைய வாழ்க்கையிலிருந்து நாம் விரட்டு கிறோம், பிறரும் தேவனுடைய முன்னேற்பாட்டுக்குள் பிரவேசிக்காமல் நாம் தடைசெய்கிறோம். தன்னிரக்கமாகிய பாவத்தைவிட இழிவான பாவம் வேறொன்றில்லை; ஏனெனில், அது தேவனை நீக்கிவிட்டு தன்னலத்தை சிங்காசனத்தில் அமர்த்துகிறது. முறுமுறுப்பை உமிழும்படி அது நம்முடைய வாய்களைத் திறக்கிறது; நம்முடைய வாழ்க்கைகள் பேராசையுள்ள ஆவிக் குரிய கடற்பஞ்சாய் மாறுகின்றன; வனப்பும் உதாரத்துவமுமான எதுவும் அவைகளில் இல்லை.

தேவன் நம்மில் திருப்தியடைய ஆரம்பிக்கும்போது, அவரிலேயே நமது எல்லாப் புதிய நீரூற்றுக்களும் இருக்கின்றன என்பதை நாம் அறியும்வரை, கற்பனைச் சொத்துக்கள் என்ற நிலையில் எல்லாவற்றையும் வறுமையாக்குவார். தேவனுடைய மகத்துவமும் கிருபையும் வல்லமையும் நம்மில் வெளிப்படாவிட்டால் தேவன் நம்மைக் குற்றப்படுத்துவார். எல்லாக் கிருபையையும் பெருகப்பண்ண தேவனால் கூடும்; எனவே, தேவனுடைய கிருபையைப் பிறருக்குத் தாராளமாகக் கொடுக்கக் கற்றுக்கொள்ளுங்கள். தேவனுடைய தன்மையால் முத்திரை குத்தப்படுங்கள், அப்போது அவரது ஆசீர்வாதங்கள் எக்காலத்தும் உங்கள்மூலம் வரும்.

அவருடைய பரமேறுதலும் நம்முடைய ஐக்கியமும்

அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். லூக்கா 24:51.

மறுரூபமானதற்குப்பின் நமது ஆண்டவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களுக்கு ஒத்த அனுபவம் ஏதும் நமக்கில்லை. அதுமுதல் நமது ஆண்டவருடைய வாழ்க்கை மொத்தமாக நமக்காக ஈடுசெலுத்தியதே. அவர் மறுரூபமான காலம்வரை ஒரு மனிதனுடைய வழக்கமான பூரண வாழ்க்கை வெளிப்படுத்தினார்; மறுரூபமான அனுபவத்திற்குப்பின்னுள்ள கெத்செமனே, சிலுவை, உயிர்த்தெழுதல் என்பவையெல்லாம் நமக்கு அந்நியமானவை. அவருடைய சிலுவை மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் தேவனுடைய ஜீவனுக்குள் பிரவேசிக்கக்கூடிய வாசலே; அவருடைய உயிர்த்தெழுதலின்மூலம் எந்த மனிதனுக்கும் நித்தியஜீவனை அளிக்கும் உரிமை அவருக்கு உண்டு; அவர் பரமேறியதின்மூலம் நமது ஆண்டவர் பரலோகத்திற்குள் பிரவேசித்து, அதின் வாசலை மனுக்குலத்துக்குத் திறந்துவைத்திருக்கிறார்.

அவர் பரத்துக்கேறிய மலையில் மறுரூபமாகுதல் முற்றுப்பெற்றது. மறுரூபமலையிலிருந்து இயேசு பரலோகத்திற்குச் சென்றிருப்பாரேயாகில் அவர் தனித்தே சென்றிருப்பார்; அப்போது அவர் நமக்கு ஒரு மகிமையான உருவமாக மாத்திரமே இருந்திருப்பார். ஆனால், அவர் அந்த மகிமையின் அனுபவத்துக்கு முதுகுகாட்டி, விழுந்துபோன மனுக்குலத்தோடு தம்மை ஒன்றித்திட மலையிலிருந்து இறங்கிவந்தார்.

பரத்துக்கேறியது மறுரூபமானதின் நிறைவுபெறுதலே; நம்முடைய ஆண்டவர் இப்போது தம்முடைய முதல்நிலை மகிமைக்குள் திரும்பிச்சென்றார்; ஆனால், அவர் தேவகுமாரனாகமாத்திரம் திரும்பிச் செல்லவில்லை; தேவகுமாரனாகவும் மனிதகுமாரனாகவும் அவர் தேவனிடத்திற்குத் திரும்பிச் சென்றார். மனிதகுமாரன் பரத்துக்கேறியதினிமித்தம் எவரும் தேவனுடைய சிங்காசனத்துக்கு நேரடியாகப் பிரவேசிக்கும் சுயாதீனமுண்டு. மனிதகுமாரனாக சர்வவல்லவர், சர்வவியாபி, சர்வஞானி என்ற தன்மைகளை மனப்பூர்வமாக அவர் தனக்குள் மட்டுப்படுத்தினர். இப்போது அவைகள் வரம்பில்லாத நிறைவான வல்லமையோடு அவருக்குரியவைகளாயிருக்கின்றன. மனிதகுமாரனாக இயேசுகிறிஸ்துவுக்கு தேவனுடைய சிங்காசனத்தில் சகல அதிகாரமும் உண்டு. பரமேறிய நாள்முதல் இன்றுவரையிலும் அவர் இராஜாதிராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாயிருக்கிறார்.

ஜாக்கிரதையான பகுத்தறிவில்லாய்மை.

ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள் .... காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள். மத்.6:26,28.

காட்டுப் புஷ்பங்களைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் எவ்வாறு வளருகின்றன! அவை சாதாரணமாக இருக்கின்றன! கடல், காற்று, சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களைச் சிந்தித்துப்பாருங்கள்; அவையெல்லாம் இருக்கின்றன; அவைகள் எத்தகையத் தொண்டாற்றலில் ஈடுபடுகின்றன! நாம் இசைவுள்ளவர்களாகவும் பயனுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும் என்ற நம்முடைய தன்னறிவான முயற்சியின்மூலம் தேவன் நம்வழியாகச் செயல்படுத்தத் திட்டமிட்ட செல்வாக்கை அடிக்கடிக் கெடுத்துவிடுகிறோம். ஆவிக்குரியநிலையில் விருத்தியடைய ஒரேயொரு வழி மாத்திரமே உண்டு என்றும், அது தேவன்மீது சிந்தையைப் பதிப்பது என்றும் இயேசு கூறினார். பிறருக்குப் பயனுள்ளவர்களாயிருக்கவேண்டும் என்று நீங்கள் கவலைப் படாதீர்கள், என்னில் விசுவாசியுங்கள் என்பதே இயேசு கூறியதின் கருத்து; அதாவது உற்பத்தியிடத்தில் கவனத்தைச் செலுத்துங்கள், அப்போது உங்களிலிருந்து ஜீவத் தண்ணீரின் நதிகள் பாயும். நம்முடைய இயற்கை வாழ்க்கையின் நீரூற்றுக்களைப் பகுத்தறிவால் அடையமுடியாது; ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சி நாம் அதைக் கவனித்துக்கொண்டிருப்பதில் சார்ந்திராமல், பரலோகத்தில் இருக்கிற நம்முடைய பிதாவில் சிந்தையை ஒருமுகப்படுத்துவதையே சார்ந்திருக்கிறது என்று இயேசு கற்பிக்கிறார். நாமிருக்கிற சூழ்நிலைகளை நமது பரலோகப்பிதா அறிகிறார்; அவர்மீது நம்முடைய சிந்தையை ஒருமுகப்படுத்திக்கொண்டிருப்போமானால் லீலிப் புஷ்பங்களைப்போல நாமும் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளருவோம்.

நம்முடைய கவனத்தைக் கவர்ந்து, நம்மைத் தடுத்து நிறுத்தி நம்மோடு உரையாடுகிறவர்கள் அல்ல நம்முடைய வாழ்க்கையில் அதிகச் செல்வாக்குச் செலுத்துகிறவர்கள்; வானத்தின் நட்சத்திரங்களைப்போலவும், காட்டுப் புஷ்பங்களைப்போலவும் பூரணமாக எளியதும் போலிப்பகட்டற்றதுமான வாழ்க்கை செய்கிறவர்களே அப்படிச் செய்வார்கள். நம்மை வார்த்து உருவமைக்கிற வாழ்க்கைகள் அவைகளே.

நீங்கள் தேவனுக்குப் பயனுள்ளவர்களாயிருக்கவேண்டுமானால், இயேசுகிறிஸ்துவோடு சரியான உறவுகொள்ளுங்கள்; அப்போது நீங்கள் வாழும் ஒவ்வொரு நிமிடமும் நீங்கள் அறியாமலே அவர் உங்களைப் பயன்படுத்துவார்.

சேதத்திலிருந்து நான் எழும்புகிறேன்

கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? ரோமர் 8:36.

ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பாகத் தேவன் மனிதனை வைப்பதில்லை; ஆபத்தில் நானே அவனோடிருப்பேன் என்றே அவர் கூறுகிறார். ஒரு மனிதனுடைய வாழ்க்கையை நடப்பிலுள்ள எத்தகையப் பிரச்சனைகள் மிகவும் தீவிரமான நிலையில் பற்றிப்பிடித்தாலும் பரவாயில்லை, அவைகளில் ஒன்றாகிலும் தேவனோடு அவனுக்குள்ள உறவைவிட்டு அவனைப் பிரிக்கமுடியாது. இவையெல்லாவற்றிலேயும் நாம் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே என்று பவுல் கூறுகிறார். கற்பனையான காரியங்களைக்குறித்துப் பவுல் பேசவில்லை, நடப்பிலுள்ள காரியங்களையே அவர் குறிப்பிடுகிறார்; அவை எல்லாவற்றின் மத்தியிலும் சிறந்த வெற்றியாளர்களாயிருக்கிறோம் என்று அவர் சொல்லுகிறார்; அது நம்முடைய சூட்சியினாலும் அல்ல, தைரியத்தினாலும் அல்ல, அவைகளில் ஒன்றும் இயேசுகிறிஸ்துவுக்குள்ளாகத் தேவனோடுள்ள நமது தொடர்பை பாதிக்காது என்பதுதவிர வேறு எதினாலும் அல்ல. சரியோ, தவறோ, நாமிருக்கிற இடத்தில், துல்லியமாக நாமிருக்கிற அதே நிலையில் நாம் இருக்கிறோம். தன்னுடைய சூழ்நிலையில் இது இல்லாதிருக்கட்டும் என்று விரும்புகிற எதையாவது பெற்றிராத கிறிஸ்தவனுக்காக நான் துக்கப்படுகிறேன்.

உபத்திரவமோ....? உபத்திரவம் ஒருபோதும் சிறப்பானதல்ல; ஆனால் உபத்திரவம் எதுவுமாயிருக்கட்டும்--களைப்படையவும் கசப்படையவும் சோர்படையவும் செய்யலாம்; ஆனால், அது நம்மைத் தேவனுடைய அன்பைவிட்டு பிரிக்கமாட்டாது. கவலைகளும் உபத்திரவங்களும் தேவன் உங்களை நேசிக்கிறார் என்ற உண்மையிலிருந்து உங்களைப் பிரிக்க ஒருபோதும் அனுமதியாதீர்கள்.

வியாகுலமோ....? தேவனுடைய அன்பு என்பது பொய், நீதி என்று ஒன்று இல்லை என்று எல்லாக் காரியங்களும் கூறும்போது தேவனுடைய அன்பு உண்மையாயிருக்கமுடியுமா?

பஞ்சமோ...? நாம் தேவனுடைய அன்பில் நம்பிக்கை வைப்பதோடு, பட்டினியாயிருந்தாலும் எல்லாவற்றிலும் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கமுடியாதா?

ஒன்றில் இயேசுகிறிஸ்து வஞ்சகர், பவுல் ஏமாற்றப்பட்டார்; அல்லது, எல்லாம் தேவனுடைய தன்மைக்கு எதிராயிருக்கும்போதும், தேவனுடைய அன்பைப் பற்றிக்கொள்ளும் மனிதருக்கு ஏதோ அசாதாரணமான சம்பவம் நடக்கிறது. இக்காரியங்களில் ஒவ்வொன்றின் எதிரிலும் வாதங்களெல்லாம் வாயடைக்கப்பட்டுவிட்டன. இவைகளுக்கெல்லாம் ஒரு காரணம் மாத்திரமே உண்டு, அது கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய அன்பே. சேதத்திலிருந்து ஒவ்வொரு முறையும் நான் எழும்புகிறேன்.

நிஜத்தின் மண்டலம்

உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள். லூக்கா 21:19.

ஒரு நபர் மறுபடியும் பிறக்கும்போது, அவருடைய சிந்தனையிலோ அல்லது விவாதத்திலோ சில காலம் முன்புபோல அதே வலிமையிருக்காது. கிறிஸ்துவின் சிந்தையை உருவாக்க, புதிய வாழ்க்கையை வெளிப்படுத்த நாம் முயற்சிக்கவேண்டும். உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்து மாக்களைக் காத்துக்கொள்ளுங்கள் என்று பேதுரு கூறுகிறார். தேவன் நமக்குள் வைத்திருக்கிற புதிய ஜீவனுக்கு ஒத்தவாறு ஆத்துமாவைக் கட்டியெழுப்பிக்கொண்டிருப்பதற்குப்பதில், நம்மில் பலரும் கிறிஸ்தவ வாழ்க் கையின் வாசற்படியில் நிற்பதையே மிகுதியாக விரும்புகிறோம். எவ்வாறு நாம் உருவாக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நாம் அறியாதிருக்கிறபடியால் தோல்வியடைகிறோம்; கட்டுப்படுத்தப்படாத நம்முடைய இயற்கையை விமர்சிப்பதற்குப்பதில், பிசாசை விமர்சிக்கிறோம். நாம் விழிப்பூட்டப்பட்டால் என்னவாயிருப்போம் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள்!

நாம் ஜெபிக்கக்கூடாத ஏதோ சில காரியங்கள் உண்டு--எடுத்துக் காட்டாக உணர்ச்சிநிலைகள்; உணர்ச்சிநிலைகள் ஜெபத்தினால் போகாது, அவைகளை மிதித்துத் தள்ளவேண்டும். உணர்ச்சிநிலைகள் ஒழுக்கத்தைச் சார்ந்ததல்ல, கொஞ்சங்குறைய எப்போதும் அதன் இருப்பிடம் இயற்பியல் நிலையே. இயற்பியல் நிலையிலிருந்து எழும்புகிற உணர்ச்சிநிலை களுக்குச் செவிகொடாதிருப்பது தொடர்பான முயற்சியே; அவைகளுக்கு ஒரு வினாடிபோலும் சரணடையாதீர்கள். நம்மைநாமே பிடரியைப் பிடித்து உலுக்கவேண்டும், அப்போது, நம்மால் முன்பு செய்யமுடியாதவை என்று நாம் கூறியவைகளை இப்போது செய்யமுடியும் என்று கண்டுகொள்வோம். ஆனால், நாம் அப்படிச் செய்யமாட்டோம் என்பதே நம்மில் பலருக்கும் சாபத்துக்குரிய காரியமாகும். ஆவிக்குரிய தைரியம் மனுவுருவானதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை.

விசுவாசத்தைக்குறித்த தெய்வீக வாதங்கள்

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். மத்.6:33.

இயேசுவின் இந்த வார்த்தைகளைப் பார்த்தவுடனே அவை மானிட செவிகள் எக்காலத்திலும் கேட்டதில் மிகவும் புரட்சிகரமான கருத்து என்று நாம் காண்கிறோம். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தைத் தேடவேண்டும். நம்மில் ஆழமான ஆவிக்குரிய அனுபவம் உள்ளவர்களுங்கூட, நான் வாழவேண்டும், நான் ஏராளம் பணம் சேர்க்கவேண்டும், நான் நன்றாய் உடுக்கவேண்டும், நான் உண்ணவேண்டும் என்று நாம் நேர்எதிராகவே தர்க்கிக்கிறோம். நம்முடைய வாழ்க்கையின் மிகப்பெரிய கரிசனை தேவனுடைய ராஜ்யம் இல்லை, வாழ எவ்வாறு நம்மைத் தகுதியாக்கலாம் என்பதே. ஆனால் இயேசுவோ வரிசையைத் தலைகீழாக மாற்றுகிறார்: முதலாவது தேவனோடு சரியான உறவுவோடிருங்கள், உங்கள் வாழ்க்கையின் முக்கிய அக்கறையாக அதைப் பேணிக்கொள்ளுங்கள், உங்கள் கரிசனையின் விசாரத்தை மற்றக் காரியங்களில் ஒருபோதும் வைக்காதீர்கள்.

உங்கள் ஜீவனுக்காகக் கவலைப்படாதிருங்கள். வாழ்க்கையின் தேவைகளைக்குறித்து விசாரப்படுவது அவருடைய பார்வையில் முற்றிலும் நியாயமற்றது என்று நம்முடைய ஆண்டவர் சுட்டிக்காண்பிக்கிறார். ஒன்றைக்குறித்தும் கவலைப்படாதிருக்கிறவன் பாக்கியவான் என்று இயேசு கூறவில்லை; அந்த மனிதன் மதிகேடன். ஒரு சீஷன் தேவனோடுள்ள உறவைத் தன்னுடைய வாழ்க்கையில் மேலோங்கிய ஒருமுகசிந்தனையாக்கவேண்டுமென்றும், அதோடு ஒப்பிடும்போது பிறகாரியங்களைக் குறித்துக் கவனமாகக் கவலையற்றிருக்கவேண்டுமென்றுமே இயேசு கற்பித்தார். நீங்கள் என்னத்தை உண்பீர்கள், என்னத்தைக் குடிப்பீர்கள் என்னும் எண்ணங்கள் உங்கள் வாழ்க்கையை ஆட்கொள்ளுகிறவைகளாயிருக்கக் கூடாது; தேவன் பேரிலேயே நீங்கள் முற்றிலும் சிந்தைகொள்ளவேண்டும் என்று இயேசு கூறுகிறார். என்ன உண்கிறோம் என்ன குடிக்கிறோம் என்பதில் சிலமனிதர் கவலையீனமாயிருக்கிறார்கள்; அதினால் அவர்கள் நோயாளிகளாகிறார்கள்; என்ன உடுக்கிறோம் என்பதில் அவர்கள் கவனஞ் செலுத்தவில்லை, எனவே, எந்த நிலையில் அவர்கள் தோன்றக்கூடாதோ அந்நிலையில் அவர்கள் தோன்றுகிறார்கள்; தங்கள் உலகக் கடமைகளில் அவர்கள் கவனக்குறைவாயிருக்கிறார்கள், தேவன் அவர்களை அதற்குப் பொறுப்பாக்குகிறார். தேவனோடுள்ள உறவுக்கு முதலிடம் கொடுப்பதும், மற்றெல்லாக் காரியங்களுக்கும் இரண்டாமிடம் கொடுப்பதுந்தான் வாழ்க்கையின் முக்கியமான கரிசனை என்று இயேசு கூறுகிறார்.

இந்த வசனங்களில் கூறப்பட்டுள்ள இயேசுவின் உபதேசத்தோடு நம்மை இணக்கத்துக்குக் கொண்டுவர ஆவியானவருக்கு இடங்கொடுப்பதே கிறிஸ்தவ வாழ்க்கையின் கடினமான கட்டுப்பாடுகளில் ஒன்றாகும்.

இப்போது இது விளக்கமளிக்கிறது

அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும்,....நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன். யோவான் 17:21.

நீங்கள் ஏகாந்தமான வழியில் சென்றுகொண்டிருக்கிறீர்களானால், யோவான் 17-ஐ வாசியுங்கள்; நீங்கள் எங்கே இருக்கிறீர்களோ அங்கே ஏன் இருக்கிறீர்கள் என்பதை அது துல்லியமாக விளக்கும்--இயேசு பிதாவோடு ஒன்றாயிருக்கிறதுபோல நீங்களும் பிதாவோடு ஒன்றாயிருக்க வேண்டுமென்று அவர் ஜெபித்தார். தேவன் அந்த ஜெபத்திற்குப் பதிலளிக்க நீங்கள் உதவுகிறீர்களா? அல்லது உங்கள் வாழ்க்கைக்கு வேறு ஏதாவது நோக்கம் உண்டா? நீங்கள் சீஷர்களாய் மாறியபின்னர் முன்புபோல சுயாதீனமாயிருக்கமுடியாது.

நம்முடைய ஜெபத்திற்குப் பதிலளிப்பதல்ல தேவனுடைய நோக்கம்; நம்முடைய ஜெபத்தின்மூலம் தேவனுடைய சிந்தையைப் பகுத்தறிகிறோம்; இது யோவான் 17-ல் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவன் கட்டாயம் பதிலளிக்கவேண்டிய ஒரு ஜெபமுண்டு, அது நாம் ஒன்றாயிருப்பதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கவேண்டும் என்று இயேசு செய்த ஜெபமே. நாம் இயேசுகிறிஸ்துவோடு அந்த அளவு நெருக்கமாயிருக்கிறோமா?

நம்முடைய திட்டங்களைக்குறித்து தேவன் அக்கறைப்படுவதில்லை; இந்தத் துக்கத்தை அல்லது இந்த மனக்கலக்கத்தை நீங்கள் அனுபவிப் பீர்களா? என்று அவர் கேட்பதில்லை. அந்தக் காரியங்களை அவர் தன் சொந்த நோக்கத்திற்காய் அனுமதிக்கிறார். நாம் அனுபவிக்கிற காரியங்கள், ஒன்றில் நம்மைக் கூடுதல் இனிமையும் நன்மையும் மேன்மையுங்கொண்ட ஆண்களும் பெண்களுமாய் மாற்றும்; அல்லது விமர்சிக்கிறவர்களும் குற்றங்கண்டுபிடிக்கிறவர்களுமாய், நம்முடைய சொந்த வழியைக் கூடுதல் வற்புறுத்துகிறவர்களுமாய் ஆக்கும். நடைபெறும் சம்பவங்கள் ஒன்றில் நம்மைப் பிசாசுகளாக மாற்றும், அல்லது பரிசுத்தவான்களாக மாற்றும்; அது முற்றிலும் நாம் தேவனோடு கொண்டுள்ள உறவைப் பொறுத்ததே. உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக என்று நாம் கூறுவோமேயாகில், யோவான் 17-ல் காண்கிறதுபோல, நம்முடைய பிதா தம்முடைய சொந்த ஞானத்தின்படியே செயல்படுகிறார் என்று அறிவதினால் வரும் ஆறுதலைப் பெறுகிறோம். தேவனுடைய சித்தம் என்ன என்பதை நாம் புரியும்போது தீங்கு செய்கிறவர்களும் நம்பிக்கையற்றவர்களும் ஆகமாட்டோம். இயேசு பிதாவோடு ஒன்றாயிருந்ததுபோல நாமும் பிதாவோடு முற்றிலும் ஒன்றாயி ருக்கவேண்டுமென்றே அவர் நமக்காக ஜெபித்தார். நம்மில் சிலர் அந்த அனுபவத்தைவிட்டுத் தூரப்பட்டிருக்கிறோம், ஆயினும் நாம் தேவனோடு ஒன்றாகிறதுவரையிலும் தேவன் நம்மைத் தனியே விடமாட்டார், ஏனெனில் இயேசு நாம் அவ்வாறிருக்கவேண்டுமென்று ஜெபித்தார்.

ஜாக்கிரதையான அவிசுவாசம்

என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள். மத்.6:25.

ஒரு சீஷனின் பகுத்தறிவுக்குரிய ஜாக்கிரதை அவிசுவாசம் என்று இயேசு சுருக்கிக் கூறினார். நாம் தேவனுடைய ஆவியைப் பெற்றிருக்கிறோமானால், இந்த உறவுமுறையிலே, இந்தத் திட்டமிடப்பட்ட விடுமுறையிலே, இந்தப் புதியப் புத்தகங்களிலே தேவனுக்கு எங்கு இடம்கொடுத்திருக்கிறீர்கள் என்று ஆவியானவர் அழுத்திக் கேட்பார். நாம் தேவனை நமது முதன்மை மதிப்புக்குரியவராக்கக் கற்றுக்கொள்ளும்வரை ஆவியானவர் எப்போதும் இந்தக் கேள்வியை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டேயிருப்பார். மற்ற காரியங்களுக்கு நாம் முதலிடம் கொடுக்கும்பொழுதெல்லாம் குழப்பமுண்டு.

கவலைப்படாதிருங்கள் என்று கூறும்போது, முன்யோசனையினால் வரும் அழுத்தத்தை உங்கள்மேல் எடுக்கவேண்டாமென்றே கருத்தாகிறது. கவலைப்படுவது என்பது தவறு மட்டுமல்ல அது நம்பிக்கைத் துரோகம்; ஏனெனில், தேவன் நம்முடைய வாழ்க்கையின் நடைமுறை விவரங்களைப் பேணமுடியும் என்று நாம் எண்ணாததே கவலைப்படுவதின் கருத்தாகும்; அது நம்மை விசாரப்படுத்துவதைத்தவிர ஒருபோதும் வேறொன்றுமில்லை. விதைக்கப்படுகிற வசனங்களை எவைகள் நெருக்கிப்போடுமென்று இயேசு சொன்னார் என்று நீங்கள் எப்போதாவது கவனித்தது உண்டா? பிசாசா? அல்ல, உலகக் கவலைகளே. எப்போதும் சிறிய விசாரங்களே நெருக்கிப் போடுகின்றன. நான் காணக்கூடாதவைகளை நான் நம்பமாட்டேன் என்று கூறும்போதுதான் நம்பிக்கைத் துரோகம் ஆரம்பிக்கிறது. நம்பிக்கைத் துரோகத்துக்கு எதிரான ஒரே நிவாரணம் ஆவியானவருக்குக் கீழ்ப்படிவதே.

துறந்துவிடுங்கள் என்பதே இயேசு தமது சீஷர்களுக்குக் கூறிய முக்கிய செய்தியாகும்.

நம்பிக்கையிழப்பின் மகிழ்ச்சி

நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன். வெளி.1:17.

யோவான் அப்போஸ்தலனைப்போல இயேசுகிறிஸ்துவை நீங்கள் மிக நெருக்கமாக அறிந்திருக்கலாம்; பழக்கமான எந்த இயல்புமில்லாமல் திடீரென்று அவர் தோன்றினால், நீங்கள் செய்யக்கூடிய ஒரே காரியம் செத்தவனைப்போல அவர் பாதத்தில் விழுவதே. அவருடைய மாட்சிமையில் அல்லாமல் வேறு வழிகளில் தேவன் தம்மை வெளிப்படுத்தமுடியாதத் தருணங்களுண்டு; உங்களை நம்பிக்கையிழப்பின் மகிழ்ச்சிக்குக் கொண்டு வருவது அவருடைய தரிசனத்தின் பயங்கரத்துவமே; தேவனுடைய கரத்தால் மட்டுமே நீங்கள் எப்போதாவது தூக்கிவிடப்படக்கூடும்.

அவர் தமது வலதுகரத்தை என்மீது வைத்தார். பயங்கரமான நிலையிலும் ஒரு தொடுதல் வருகிறது; அது இயேசுகிறிஸ்துவின் வலதுகரம் என்று உங்களுக்குத் தெரியும். கட்டுப்பாடு, சீர்திருத்தல் மற்றும் சிட்சையின் வலதுகரமோ அல்ல அது, நித்திய பிதாவின் வலதுகரமே. அவருடைய கரம் உங்கள்மீது வைக்கப்படும்போதெல்லாம், சொல்லுதற்கரிய சமாதானம் மற்றும் ஆறுதல் உண்டாகும்; அவருடைய நித்திய புயங்கள் உங்களுக்கு ஆதாரம் என்ற உணர்வு, பேணுதலும் ஆறுதலும் பெலனும் நிறைந்தது. அவருடைய தொடுதல் ஒருமுறை வந்தால், உங்களை ஒன்றும் மறுபடியும் பயத்துக்குள் தள்ளமுடியாது. பரமேறிய எல்லா மகிமையின் மத்தியிலும் கர்த்தராகிய இயேசு சாமானிய ஒரு சீஷனிடம் பேசும்படியும், பயப்படாதே என்று கூறும்படியும் வந்தார். அவருடைய இரக்கம் அளவிடமுடியாத இனிமையானது. நான் அவரை அவ்வாறு அறிந்திருக்கிறேனா?

நம்பிக்கையிழப்பை உண்டாக்குகிறவைகளில் சில காரியங்களைக் கவனியுங்கள். எந்த மகிழ்ச்சியோ, ஆர்வத்தின் எல்லையோ, பிரகாசமான எதையுங்குறித்த ஒரு நம்பிக்கையோ இல்லாத நம்பிக்கையிழப்பு உண்டு; ஆனால், என்னிடத்தில், அதாவது என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்க வில்லை என்பதை அறியும்போது, நம்பிக்கையிழப்பின் மகிழ்ச்சி வருகிறது. தேவன் தம்மை வெளிப்படுத்தும்போது, அவருக்குமுன்பாக சாஷ்டாங்கமாய் விழவேண்டிய ஏதோ என்னில் உண்டென்றும், நான் எப்போதாவது தூக்கி விடப்படவேண்டுமானால், அது தேவனுடைய கரத்தினால் மட்டுமே என்றும் அறியும்போது மகிழ்ச்சியடைகிறேன். அசாத்தியத்தின் எல்லைக்கு நான் வருமட்டும் தேவன் எனக்காக ஒன்றும் செய்யமுடியாது.

தன்னலத்தின் சோதனை

நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன். ஆதி.13:9.

நீங்கள் தேவனில் விசுவாச வாழ்க்கை வாழ ஆரம்பித்தவுடனே, கவர்ச்சிகரமானதும் சொகுசானதுமான எதிர்பார்ப்புக்கள் உங்களுக்குமுன் திறக்கும், இக்காரியங்களெல்லாம் உங்களுக்கு உரிமையானவைகளே; ஆனால், நீங்கள் விசுவாச வாழ்க்கை வாழுகிறீர்களானால், உங்களுடைய உரிமைகளை மனமார விட்டுக்கொடுக்கிற உரிமையை அமல்படுத்தி, உங்களுக்காகத் தேவன் தேரிந்துகொள்ள அனுமதிப்பீர்கள். நீங்கள் விசுவாச வாழ்க்கை நடத்தாவிட்டால், உங்களுடைய சொந்த நலனைக் கருதுவதே சரியும் தகுதியுமானதாய்த் தோன்றும் சோதனையின் இடத்துக்குள் செல்ல ஆண்டவர் சிலவேளை உங்களை அனுமதிப்பார்; ஆனால், நீங்கள் விசுவாச வாழ்க்கை செய்தால், மகிழ்ச்சியோடு உங்களுடைய உரிமைகளை விட்டுக்கொடுத்துவிட்டு, தேவனே உங்களுக்காகத் தெரிந்துகொள்ள விட்டு விடுவீர்கள். தேவனுடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிவதினால் மாம்சத்துக்குரிய வைகள் ஆவிக்குரியவைகளாக மறுரூபமாகும் ஒழுங்குமுறையே இது.

உரிமையை வாழ்க்கையின் வழிகாட்டலாக ஆக்கும்போதெல்லாம், அது ஆவிக்குரிய உள்ளுணர்வை மழுக்கிப்போடும். தேவன்பேரிலுள்ள விசுவாச வாழ்க்கையின் பெரிய எதிரி பாவமல்ல, போதிய அளவு நன்மையாயிராத நன்மையே. நல்லது எப்போதும் மிகச் சிறந்ததற்குப் பகைவன். (லோத்துவுக்குப்பதில்) ஆபிரகாம் தெரிந்துகொள்ளுவது இந்த உலகத்தில் மிகவும் புத்திபூர்வமான காரியமாகத் தோன்றியிருக்கலாம்; அது அவரது உரிமை, அவர் தெரிந்துகொள்ளாததற்கு அவரைச்சுற்றி வாழ்ந்த மக்கள் அவரை மதிகேடன் என்றே கருதியிருப்பார்கள். தேவன் நமக்காகத் தெரிந்து கொள்ளும்படி அவரில் சார்ந்திருப்பதற்குப்பதில், நமக்குச் சரியென்று தோன்றுகிறதை நாம் தெரிந்துகொள்ளுவதற்கு முன்னுரிமை கொடுப்பதால் நம்மில் பலரும் ஆவிக்குரிய காரியத்தில் முன்னேறுவதில்லை. தேவன்மீது கண்களைப் பதித்த நிலைக்கு ஒத்து நடக்க நாம் கற்றுக்கொள்ளவேண்டும். எனக்கு முன்பாக நட என்று அவர் கூறியுள்ளாரே.

இயேசு கற்பித்ததுபோலச் சிந்தியுங்கள்

இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். 1 தெச.5:17.

ஜெபம் என்றால் என்னவென்று மனதில் நாம் கொண்டிருக்கும் கருத்தின்படியே நாம் ஜெபத்தைக்குறித்துச் சரியாகவோ தவறாகவோ சிந்திக்கிறோம். ஜெபம் நமது சுவாசப்பையிலுள்ள மூச்சும் இருதயத்திலிருந்து வெளியேறும் இரத்தமும் என்று எண்ணுவோமானால் நாம் சரியாகச் சிந்திக்கிறோம். இரத்தம் தொடர்ச்சியாக ஒழுகுகிறது, மூச்சுவிடுதல் இடைவிடாமல் தொடர்கிறது; நாம் அதை உணர்வதில்லை; அவைகள் எப்போதும் நடந்துகொண்டேயிருக்கும். தேவனோடுள்ள பரிபூரண இணைப்பில் இயேசு நம்மை வைத்திருப்பதை நாம் எப்போதும் உணர்வதில்லை, ஆனால், நாம் அவருக்குக் கீழ்ப்படிகிறோமானால் அவர் எப்போதும் அவ்வாறு செய்கிறார். ஜெபம் ஒரு பயிற்சியல்ல, அதுவே ஜீவன். திடீரென ஏறெடுக்கப்படும் குறுகிய ஜெபத்தைத் தடுக்கும் காரியங்களைக்குறித்து ஜாக்கிரதையாயிருங்கள். இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். எப்போதும் தேவனோடு உங்கள் இருதயத்தில் குறுகிய ஜெபம் ஏறெடுக்கும் குழந்தையைப்போன்ற பழக்கத்தைக் காத்துக்கொள்ளுங்கள்.

ஜெபம் பதிலளிக்கப்படாது என்று இயேசு ஒருபோதும் கூறவில்லை; ஜெபம் எப்போதும் பதிலளிக்கப்படுமென்கிற அளவற்ற நிச்சயம் அவருக்கு இருந்தது. ஜெபத்தைக்குறித்து இயேசு கொண்டிருந்த சொல்லிமுடியாத நிச்சயத்தை ஆவியானவரால் நாம் அடைந்திருக்கிறோமா? அல்லது, தேவன் ஜெபத்துக்குப் பதிலளிக்காதிருந்ததாகத் தோன்றிய தருணங்களைத் தான் எண்ணுகிறோமா? கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான் என்று இயேசு கூறினார். நாமோ, ஆனால்...ஆனால் என்று சொல்லுகிறோம். நாம் விரும்புகிற மண்டலத்தில் ஜெபத்திற்குப் பதிலின் உடனடி வெளிப்பாடு எப்போதும் பின்தொடராவிட்டாலும், தேவன் ஜெபத்திற்குச் சிலவேளைகளில் அல்ல, எல்லாவேளைகளிலுமே மிகச்சிறந்த முறையில் பதிலளிக்கிறார். ஜெபத்திற்குத் தேவன் பதிலளிக்கும்படி நாம் எதிர்பார்க்கிறோமா?

இயேசு கூறுகிற காரியங்களை நாம் கலப்படமாக்க விருப்பப்பட்டு, அவைகளுக்குப் பகுத்தறிவுக்குத் தகுந்த ஏதேனும் கருத்துக் கொடுப்பதே நமக்கு ஆபத்தாகும்; பகுத்தறிவுக்குரியதானால் அது அவர் கூறுவதற்குப் போதுமான முக்கியமானதல்லவே. ஜெபத்தைக்குறித்து இயேசு கூறுகிற காரியங்கள் எல்லாம் தெய்வீக வெளிப்படுத்தல்களே.

வாழ்ந்திருக்கும் வாழ்க்கை

நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள். லூக்கா 24:49.

சீஷர்கள் பெந்தெகொஸ்தே நாள்வரை காத்திருக்கவேண்டிவந்தது தங்கள் சொந்த ஆயத்தத்திற்கு மாத்திரமல்ல; வரலாற்று நிலையில் கர்த்தர் மகிமைப்படும்வரைக்கும் அவர்கள் காத்திருக்கவேண்டியதிருந்தது. அவர் மகிமைப்பட்ட உடன்தானே என்ன நடந்தது? அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார் என்று பேதுரு கூறினார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை என்று யோவான் 7:39-ல் குறிப்பிட்டிருக்கிறது நமக்குப் பொருந்தாது; ஏனென்றால், பரிசுத்த ஆவி அருளப்பட்டாயிற்று, கர்த்தர் மகிமைப்பட்டு விட்டார்; காத்திருப்பது தேவனுடைய முன்கருதலையல்ல, நம்முடைய தகுதியையே சார்ந்திருக்கிறது.

பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னும் பரிசுத்த ஆவியானவரின் செல்வாக்கும் ஆற்றலும் செயல்பட்டுக்கொண்டேயிருந்தன; ஆனால் அவர் இங்கு இல்லை. நம்முடைய ஆண்டவர் பரத்துக்கேறியதின்மூலம் மகிமைப் பட்டவுடனே பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்துக்குள் வந்தார், அதன் பின் எப்போதும் இங்கேயே தங்கியிருக்கிறார். அவர் இங்கிருக்கிறார் என்கிற வெளிப்பாட்டை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். பரிசுத்த ஆவியானவரை ஏற்றுக்கொள்வது ஒரு விசுவாசியின் தொடர்ச்சியான மனநிலையே. நாம் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளும்போது, பரத்துக்கேறிய ஆண்டவரிடமிருந்து உயிர்ப்பிக்கிற ஜீவனைப் பெற்றுக்கொள்ளுகிறோம்.

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமல்ல மக்களை மாற்றுவது, பரத்துக்கேறிய கிறிஸ்துவின் வல்லமை பரிசுத்தஆவியினால் மக்களுடைய வாழ்க்கைக்குள் பிரவேசித்து அவர்களை மாற்றுகிறது. புதிய ஏற்பாடு வேறுபடுத்தாததை நாம் அடிக்கடி வேறுபடுத்துகிறோம். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் இயேசுகிறிஸ்து நீங்கலான ஒரு அனுபவம் அல்ல; அது பரத்துக்கேறிய கிறிஸ்துவின் சான்றே.

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் காலத்தைக்குறித்தோ நித்தியத் தைக்குறித்தோ உங்களைச் சிந்திக்கவைப்பதில்லை; ஏனென்றால், அந்த அனுபவம் அற்புதமானதும் மகிமையுமான தற்காலமே. உம்மை அறிவதே நித்திய ஜீவன். அவரை அறிய இப்போதே ஆரம்பியுங்கள்; ஒருபோதும் நிறுத்திவிடாதீர்கள்.

சந்தேகப்படாத வெளிப்படுத்தல்

அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங் கேட்கமாட்டீர்கள். யோவான் 16:23.

அந்த நாள் என்பது எப்போது? பரத்துக்கேறிய கர்த்தர் உங்களைப் பிதாவோடு ஒன்றாக்குகிற நாளே அது. இயேசு பிதாவோடு ஒன்றாயிருக் கிறதுபோல, அந்த நாளிலே நீங்களும் பிதாவோடு ஒன்றாவீர்கள்; அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங் கேட்கமாட்டீர்கள் என்று இயேசு கூறினார். இயேசுவினுடைய உயிர்த்தெழுதலின் ஜீவன் உங்களில் வெளிப்படுமட்டும் நீங்கள் அதையும் இதையும் கேட்கத் தேவைப்படுவீர்கள்; ஆனால், சிலகாலம் சென்றபின் எல்லாக் கேள்விகளும் போய்விட்டதாகக் காண்பீர்கள்; கேட்பதற்கு உங்களிடம் எந்தக் கேள்வியும் இருப்பதாகத் தோன்றாது. இயேசுவின் உயிர்த்தெழுந்த ஜீவனில் முழுமையாய்ச் சாரும் அனுபவத்திற்கு நீங்கள் வந்துவிட்டீர்கள்; அது உங்களைத் தேவனுடைய நோக்கத்தோடுள்ள பூரணமான தொடர்புக்குள் கொண்டுவருகிறது. அந்த வாழ்க்கை இப்போது நீங்கள் வாழுகிறீர்களா? இல்லாவிட்டால் நீங்கள் ஏன் அவ்வாறு வாழக்கூடாது?

உங்கள் அறிவிற்குப் புரியாத அநேகக் காரியங்கள் இருக்கலாம்; ஆனால் அவைகள் உங்கள் இருதயத்துக்கும் தேவனுக்குமிடையே வராது. அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒரு கேள்வியுங் கேட்கமாட்டீர்கள்--உங்களுக்குத் தேவையுமில்லை; தேவன் தம்முடைய சித்தத்துக்கிசையக் காரியங்களை வெளிப்படுத்துவார் என்கிற முழு நிச்சயம் உங்களுக்குண்டு. யோவான் 14:1 உங்கள் இருதயத்தின் உண்மையான நிலைமையாய் வந்துவிட்டது, எனவே கேட்கவேண்டிய கேள்விகள் எதுவுமில்லை. ஏதாவது காரியம் உங்களுக்கு மறைபொருளாயிருப்பதோடு, அது உங்களுக்கும் தேவனுக்குமிடையில் வருகிறதானால், அதற்கு உங்கள் அறிவில் விளக்கம் தேடாதீர்கள், உங்கள் மனநிலையில் விளக்கம் தேடுங்கள்; அந்தக் காரியம் தான் தவறு. உங்கள் மனநிலை இயேசுவின் வாழ்க்கைக்கு அடிபணிய சம்மதித்துவிட்டால், உங்கள் அறிவாற்றல் பூரணமாய்த் தெளிவாகும், அப்போது பிதாவுக்கும் அவருடைய பிள்ளைக்குமிடையே எந்தத் தூரமும் இல்லாத இடத்தை நீங்கள் அடைவீர்கள்; ஏனெனில், கர்த்தர் உங்கள் இருவரையும் ஒன்றாக்கியிருக்கிறார்; அந்த நாளிலே நீங்கள் ஒரு கேள்வியுங் கேட்கமாட்டீர்கள்.

தொந்தரவு செய்யப்படாத உறவு

அந்த நாளில் நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்கள்... பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார். யோவான் 16:26,27.

அந்த நாளில் நீங்கள் என் நாமத்தினாலே, அதாவது என் தன்மையில் வேண்டிக்கொள்வீர்கள் என்றார் இயேசு. என் நாமத்தை ஒரு மந்திர வார்த்தையாகப் பயன்படுத்துவீர்கள் என்றல்ல, என்னோடு நெருங்கிய உறவுகொள்வதினால் என்னோடு ஒன்றித்துவிடுவீர்கள் என்று அவர் கூறினார். அந்த நாள் என்பது பின்னால் உள்ள ஒரு நாளல்ல, இங்கேயே, இப்போதே என்ற கருத்துக்கொண்ட நாள். பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார் என்றும் கூறப்பட்டுள்ளது--இந்த ஐக்கியம் நிறைவும் பூரணமுமானது. புறம்பான குழப்பங்களிலிருந்து வாழ்க்கை விடுவிக்கப்படுமென்று நம்முடைய ஆண்டவர் கருத்துக்கொள்ளவில்லை; அவர் பிதாவின் இருதயத்தையும் மனதையும் அறிந்திருக்கிறதுபோலவே, தேவனுடைய ஆலோசனைகளை அவர் நமக்கு வெளிப்படுத்தக்கூடிய உன்னதங்களுக்குப் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின்மூலம் நம்மை அவர் உயர்த்தமுடியும்.

நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வது எதுவோ--அந்த நாள் என்பது தேவனுக்கும் பக்தனுக்குமிடையே முறியாத உறவின் நாள். அவருடைய பிதாவின் சமுகத்தில் இயேசு கறையற்றவராய் நின்றதுபோலவே, பரிசுத்த ஆவியினாலுள்ள ஞானஸ்நானத்தினால்வரும் வல்லமையான விளைவினால், நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கவேண்டும் என்று இயேசு ஜெபித்த அத்தகைய உறவுக்குள் நாமும் உயர்த்தப்படமுடியும்.

அதை அவர் உங்களுக்குக் கொடுப்பார் என்றும் இயேசு கூறினார். தேவன் நம்முடைய ஜெபத்தை அங்கீகரிப்பார் என்று இயேசு சொல்லுகிறார். எத்தகைய அறைகூவல் இது! இயேசுவின் உயிர்த்தெழுந்த மற்றும் பரத்துக்கேறிய வல்லமையினாலும், அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலும் இயேசுவைப்போல நாமும் நம்முடைய சுய சித்தத்தின் அடிப்படையில், தேவனுடைய பூரணமான கர்த்தத்துவ சித்தத்தோடு ஒன்றித்துவிடுமளவிற்கு பிதாவோடுள்ள உறவுக்குள் உயர்த்தப்படமுடியும். அந்த அற்புதமான நிலையில் இயேசுகிறிஸ்துவால் நாம் வைக்கப்பட்டு, அவருடைய நாமத்தில், அதாவது பரிசுத்த ஆவியினால் நமக்கு ஈவாகக் கொடுக்கப்பட்டுள்ள அவருடைய தன்மையில், நாம் தேவனிடத்தில் ஜெபிக்கமுடியும்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார் என்றார் இயேசு. இயேசுகிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை அவருடைய சொந்தக் கூற்றுக்களால் பரிசோதிக்கப்படுகிறது.

ஆம், ஆனால்....

ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன், ஆனாலும்.... லூக்கா 9:61.

உங்களுடைய பகுத்தறிவுக்கு மிகப்பெரிய சோதனையாயிருக்கும் ஒரு காரியத்தைச் செய்யும்படி தேவன் உங்களிடம் கூறுவாரேயானால் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? பின்தங்குவீர்களா? மாம்சத்துக்குரிய மண்டலத்தில் ஏதாவதொன்றைச் செய்யும் பழக்கத்தில் நீங்கள் சிக்கி விட்டால், அப்பழக்கத்தை நீங்கள் தீர்மானத்தோடு முறிக்கும்வரை அதை ஒவ்வொரு வேளையும் செய்துகொண்டேயிருப்பீர்கள்; ஆவிக்குரிய காரியத் திலும் இந்நிலை உண்மையே. இயேசுகிறிஸ்து தேவைப்படுகிறதற்கு நீங்கள் திரும்பத்திரும்ப வருகிறீர்கள்; ஆனால் அக்காரியத்தைப் பொறுத்தமட்டும், நீங்கள் தீர்மானமாய்க் கைவிடும்வரை எல்லாவேளைகளிலும் பின்திரும்பி விடுகிறீர்கள்; ஆம், ஆனால்--ஒருவேளை இந்தக் காரியத்தில் தேவனுக்கு நான் கீழ்ப்படிவேனானால் இன்னின்ன காரியங்களைக்குறித்து என்ன? ஆம், என் பகுத்தறிவைப் பயன்படுத்தத் தேவன் அனுமதிப்பாரானால் அவருக்குக் கீழ்ப்படிவேன்; ஆனால், இருளில் காலடி எடுத்துவைக்கும்படி என்னிடம் கேட்காதீர்கள் என்றெல்லாம் நாம் கூறக்கூடும். ஜென்ம சுபாவ முள்ள மனிதன் வெளிப்படுத்துகிற போட்டியான அசட்டுத் துணிச்சலைத் தம்மை நம்புகிற மனிதரிடம் இயேசுகிறிஸ்து எதிர்பார்க்கிறார்.

தகுதியான எதையாவது ஒரு மனிதன் செய்யப்போகிறானானால், அவன் துணிந்து தாவிக்குதிக்கவேண்டிய வேளைகளுண்டு; அதுபோலவே, ஆவிக்குரிய உலகத்தில் பகுத்தறிவுக்கேற்றதாக நீங்கள் கருதுவதை விட்டு விட்டு, அவர் சொல்லுகிறதற்குள் குதிக்கவேண்டுமென்று இயேசுகிறிஸ்து எதிர்பார்க்கிறார்; நீங்கள் அதைச் செய்தவுடனே, அவர் சொல்லுகிறது பகுத்தறிவைப்போன்று உறுதியாகப் பொருத்தமானது என்று நீங்கள் காண்பீர்கள். பகுத்தறிவின் சட்டத்தில் இயேசுகிறிஸ்துவின் கூற்றுப் பைத்தியமாய்த் தோன்றலாம்; அவைகளை விசுவாசத்தின் சட்டத்துக்குமுன் கொண்டுவாருங்கள், அவைகள் தேவனுடைய வார்த்தைகள் என்று பயபக்தி யான ஆவியில் கண்டுகொள்ள ஆரம்பிப்பீர்கள். தேவனில் முழுவதுமாய் நம்பிக்கைவையுங்கள், துணிகர முயற்சிக்கு அவர் உங்களைக் கொண்டு வரும்போது, அதை ஏற்றுக்கொள்ளக் கருத்தாயிருங்கள். நெருக்கடியில் புறஜாதிகளைப்போல நாம் செயல்படுகிறோம்; தேவனுடைய நம்பத்தக்கத் தன்மையில் தன் விசுவாசத்தைத் தக்கவைக்கும் துணிச்சல் ஒரு கூட்டத்தில் ஒருவருக்கே உண்டு.

தேவன் முதலாவது

நம்பிக்கையில் தேவனுக்கு முதலிடம் கொடுங்கள்: *மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் (இயேசு) அறிந்திருந்தபடியால்.... அவர்களை நம்பி இணங்கவில்லை. யோவான் 2:25,24.*

நமது ஆண்டவர் ஒரு மனிதனையும் நம்பவில்லை; ஆயினும் அவர் எந்த மனிதனைக்குறித்தும் ஒருபோதும் சந்தேகப்பட்டதில்லை, ஒரு போதும் கசப்புக்கொண்டதில்லை, ஒருபோதும் நம்பிக்கையிழந்ததுமில்லை; ஏனெனில், நம்பிக்கையில் அவர் தேவனையே முதலாவதாக வைத்திருந் தார்; எந்த மனிதனுக்கும் தேவ கிருபை என்ன செய்யமுடியும் என்பதை அவர் பூரணமாய் நம்பினார். நான் முதலாவதாக மனிதரில் நம்பிக்கை வைப்பேனேயானால் எல்லோரையுங்குறித்த நம்பிக்கையிழப்பில் நான் முடிவடைவேன்; ஒரு மனிதனும் ஒருபோதும் ஆகமுடியாத நிலையில், அதாவது பூரணமாக சரியாயிருக்கும் நிலையில், மனிதன் இருக்கவேண்டு மென்று வற்புறுத்துவதினால், நான் கசப்புக்கொள்வேன். தேவ கிருபையில் தவிர உங்களிலோ மற்று யாரிலோ நம்பிக்கை வைக்காதீர்கள்.

தேவனுடைய தேவைகளுக்கு முதலிடம் கொடுங்கள்: *தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன். எபி.10:9.*

ஒரு மனிதன் எது தேவையென்று காண்கிறானோ அதற்கே கீழ்ப்படி கிறான்; நம்முடைய ஆண்டவருடைய கீழ்ப்படிதலோ அவருடைய பிதாவின் சித்தத்துக்கே. நாம் செய்யும்படி ஏதாவது ஊழியத்தைப் பெற்றாகவேண்டும்; புறஜாதிகள் தேவனற்றவர்களாய் மரிக்கிறார்கள்; நாம் போய் அவர்களுக்கு அவரைக்குறித்துக் கூறவேண்டும் என்பது இன்றைய கூக்கிரலாயிருக்கிறது. எல்லாவற்றுக்கும் முன்னதாக தேவனுடைய தேவைகள் நம்மில் நேரடியாக சந்திக்கப்படுவதைக்குறித்து நாம் எண்ணவேண்டும். நீங்கள் காத்திருங்கள் என்று இயேசு தம் சீஷர்களிடம் கூறினர். இந்தக் கல்வியின் நோக்கம் தேவனுடைய தேவைகளோடு நம்மைச் சரியானத் தொடர்புகொள்ளச் செய்வதே. நம்மில் தேவனுடைய தேவைகள் சந்திக்கப்படும்போது, வேறு எங்கேயாகிலுமுள்ள அவருடைய தேவைகளை நாம் கண்டுகொள்ள அவர் வழிதிறப்பார்.

தேவனுடைய பொறுப்புக்கு முதலிடம் கொடுங்கள்: *இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளு கிறான். மத்.18:5.*

தேவன் தன்னை எனக்கு ஒரு பிள்ளையாகக் கொடுக்கிறாரென்பதே அவர் என்னிடம் ஒப்புவித்த பொறுப்பாகும். என்னுடைய தனித்தாள் வாழ்க்கை ஒரு பெத்லகேமாயிருக்க தேவன் எதிர்பார்க்கிறார். எனக்குள்ளே வாசஞ்செய்யும் தேவகுமாரன் என் இயற்கை வாழ்க்கையைக் கிரமமாக மறுரூபப்படுத்த நான் அனுமதிக்கிறேனா? தமது குமாரன் என் மனித மாம்சத்தில் வெளிப்படுவதே தேவனுடைய இறுதி நோக்கமாகும்.

தடுமாறச் செய்யும் கேள்வி

மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா? எசேக்.37:3.

அந்தப் பாவியைப் பரிசுத்தவானாக மாற்றமுடியுமா? திருக்குள்ள அந்த வாழ்க்கையைச் சரிசெய்யமுடியுமா? ஒரேயொரு பதில் மாத்திரமே உண்டு: ஆண்டவரே, நீர் அறிவீர், நான் அறியேன். மார்க்கம் சார்ந்த பகுத்தறிவை ஒருபோதும் உதைத்துக்கொண்டு, ஆம், சிறிதுகூட வேதம் வாசிப்பதாலும், ஜெபிப்பதாலும், தியானிப்பதாலும் இதை எவ்வாறு செய்ய முடியுமென்று நான் காண்கிறேன் என்று கூறாதீர்கள்.

தேவனில் நம்பிக்கைவைப்பதைவிட ஏதாயினும் ஒன்றைச் செய்வது மிகவும் எளிது; நாம் அச்சத்தை ஏவுதலென்று தவறாக எண்ணுகிறோம். ஆகையால்தான் தேவனோடு உடன் ஊழியக்காரர்களாய் இருக்கிறவர்கள் மிகக் குறைவு, அவருக்காகச் செயல்படுகிறவர்கள் ஏராளம். நாம் தேவனில் நம்பிக்கைவைப்பதைவிட அவருக்காகச் செயல்படுவதையே தெரிந்து கொள்ளுகிறோம். என்னால் செய்யக்கூடாததைத் தேவன் செய்வாரென்கிற முழுநிச்சயம் எனக்கு உண்டா? தேவன் எனக்கு ஏதாவது செய்திருக்கிறார் என்பதை நான் எந்த அளவு உணரவில்லையோ அந்த அளவுக்கு நான் மனிதரைக்குறித்து நம்பிக்கை இழக்கிறேன். நான் காண்கிற யாரைக் குறித்தும் நம்பிக்கை இழக்காதவாறு, என்னுடைய அனுபவம் தேவனுடைய ஆற்றலையும் பலத்தையும் அற்புதமாய் உணருகிறதா? ஏதாவது ஆவிக் குரிய கிரியை என்னில் செய்யப்பட்டுள்ளதா? பயத்தின் அளவு ஆளத்துவ ஆவிக்குரிய அனுபவத்தின் குறைபாட்டின் அளவே.

இதோ, என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறப்பேன் என்று ஆண்டவர் கூறுகிறார். தேவனில்லாத மனித இயற்கை எவ்வாறிருக்கும் என்பதைத் தேவன் உங்களுக்குக் காண்பிக்கவேண்டு மானால், உங்களில்தானே உங்களுக்கு அதைக் காண்பிக்கவேண்டும். தேவகிருபை இல்லாவிட்டால் நீங்கள் எப்படிப்பட்டவர்கள் என்கிற காட்சியைத் தேவஆவியானவர் உங்களுக்குக் கொடுத்திருந்தால், தேவஆவியானவர் செயல்படும்பொழுது மாத்திரமே அவர் அதைச் செய்வார்! நீங்கள் எவ்வளவு தீயவர்களாய் இருக்க சாத்தியமுண்டு என்று அறிகிறீர்களோ அதற்குப் பாதி அளவு தீயவர்களான உண்மையான குற்றவாளிகள் ஒருவருமில்லை என்பதைக் கண்டுகொள்வீர்கள். என்னுடைய பிரேதக்குழி தேவனால் திறக்கப்பட்டுவிட்டது; என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று அறிகிறேன். தேவனுடைய கிருபை இல்லா விட்டால் மனித இயற்கை எத்தகையது என்று தேவனுடைய ஆவியானவர் தொடர்ந்து வெளிப்படுத்துகிறார்.

உங்களைப் பயப்படுத்துவது எது?

கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ. சங்.25:12

உங்களைப் பயப்படுத்துவது எது? ஒன்றுமில்லை என்று நீங்கள் சொல்லுவீர்கள்; ஆனால், ஏதோ ஒன்று நம்மெல்லாரையும் பயப்படுத்து கிறது; பொதுவாக அது நாமாயிருக்கலாம், அல்லது நாம் கிறிஸ்தவர்களா னால் நமது அனுபவமாயிருக்கலாம். நாம் கர்த்தருக்குப் பயப்படவேண்டு மென்று சங்கீதக்காரர் கூறுகிறார். தேவனைக்குறித்துச் சிந்தித்துக்கொண்டி ருப்பதல்ல, நமது வாழ்க்கையின் நிரந்தர விழிப்புணர்வு அவராய் இருக்க வேண்டும். உள்ளும் புறம்புமான நமது வாழ்க்கைமுழுவதும் தேவனுடைய பிரசன்னத்தால் நிறைந்திருக்கவேண்டும். ஒரு குழந்தையின் விழிப்புணர்வு தாயாரால் நிறைந்திருப்பதால், அக்குழந்தை நினைவில் தன் தாயைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிராவிட்டாலும், ஆபத்து வரும்போது அதற்கு நிலைத்தி ருக்கிற உறவு தாயாருடையதே. அதுபோல, எக்காரியத்தையும் தேவனோடு தொடர்புபடுத்திப் பார்ப்பதற்காக நாமும் தேவனுக்குள் பிழைக்கிறவர்களாய், அசைகிறவர்களாய், வாழுகிறவர்களாய் இருக்கவேண்டும்; ஏனென்றால், நிலைத்திருக்கிற தேவனுடைய விழிப்புணர்வு எப்போதும் தன்னை முன்னி லைப்படுத்தும்

நாம் தேவனால் நிறையப்பட்டிருப்போமேயாகில் கவலைகள், உபத் திரவம், விசாரங்கள்போன்ற வேறொன்றும் நமக்குள் பிரவேசிக்கமுடியாது. கவலைப்படுதலாகிய பாவத்தைக்குறித்து நமது ஆண்டவர் ஏன் அழுத்திக் கூறினார் என்பதை நாம் இப்போது காண்கிறோம். தேவன் நம்மைச் சுற்றியிருக்கும்போது நாம் எப்படி முற்றிலும் அவிசுவாசங்கொண்டிருக்கத் துணியமுடியும்? தேவனால் நிறைந்திருப்பது பகைவனுடைய எல்லாத் தாக்குதல்களுக்கும் எதிரான சக்திவாய்ந்த அரணை அடைந்திருப்பதாகும்.

அவன் ஆத்துமா நன்மையில் தங்கும். உபத்திரவம், மனஸ்தாபம் அவதூறு போன்றவைகளின் மத்தியில் நம்முடைய ஜீவன் கிறிஸ்துவோடு தேவனுக்குள் மறைந்திருக்குமேயானால், அவர் நம்மை சமாதானமாய்க் காத்துக்கொள்ளுவார். தேவனுடைய அந்த நிலைத்திருக்கும் தோழமை யைக்குறித்த அற்புதமான வெளிப்பாட்டை நாமாக இழந்துபோகிறோம். தேவன் நம்முடைய அடைக்கலம்--அந்தப் புகலிடம்வழியாக ஒன்றும் கடந்துவர முடியாது.

கர்த்தருடைய இரகசியம்

கர்த்தருடைய இரகசியம் (நட்பு) அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது. சங்.25:14.

ஒரு நண்பனின் அடையாளமென்ன? தன்னுடைய அந்தரங்கத் துக்கங்களை உங்களிடம் கூறுகிறார் என்பதா? அல்ல, அவரது அந்தரங்க சந்தோஷங்களை உங்களிடம் கூறுகிறார் என்பதே. அநேகர் தங்களுடைய அந்தரங்கத் துக்கங்களை உங்களிடம் பகிர்ந்துகொள்ளுவார்கள்; ஆனால், நெருங்கிய உறவின் இறுதி அடையாளம் அந்தரங்க சந்தோஷங்களைப் பகிர்ந்துகொள்ளுவதே. தம்முடைய ஏதாவது மகிழ்ச்சியை தேவன் நம்மிடம் சொல்ல அவரை நாம் எப்போதாவது அனுமதித்திருக்கிறோமா? அல்லது, தேவன் நம்மோடு பேசுவதற்கு இடங்கொடாமல் நம்முடைய இரகசியங்களை நாம் அவரோடு தொடர்பாகக் கூறிக்கொண்டேயிருக்கிறோமா? நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்பத்தில் தேவனோடுள்ள வேண்டுதல்களால் நாம் நிறைந்திருக்கிறோம்; அதன்பின், நம்மைத் தம்மோடுள்ள உறவுக்குள் கொண்டுவரவேண்டுமென்றும், தம்முடைய நோக்கங்களோடு நம்மைத் தொடர்புகொள்ளச்செய்யவேண்டுமென்றும் அவர் விரும்புகிறாரென்று கண்டுகொள்ளுகிறோம். நாம் தேவனுடைய இரகசியங்களைப் பிடித்துக் கொள்ளத்தக்கதாக உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக என்று இயேசு கிறிஸ்து கற்பித்த ஜெபத்தைக்குறித்தக் கருத்தோடு அவ்வாறு நாம் ஒருங்கிணைந்திருக்கிறோமா? மிகச்சிறிய காரியங்கள்தான் தேவனை நமக்குக் கூடுதலாகப் பிரியமானவராக்கும் காரியங்களேதவிர அவருடைய மிகப் பெரிய ஆசீர்வாதங்களல்ல; ஏனென்றால், நம்மோடு அவருக்குள்ள அற்புதமான நெருக்கத்தை அவைகள் காண்பிக்கின்றன; நமது தனிப்பட்ட வாழ்க்கையின் ஒவ்வொரு விவரத்தையும் அவர் அறிகிறார்.

அவனுக்குத் தாம் தெரிந்துகொள்ளும் வழியைப் போதிப்பார் என்று வாசிக்கிறோம். ஆரம்பத்தில் தேவனால் வழிநடத்தப்படும் உணர்வை நாம் விரும்புகிறோம்; காலஞ் செல்லச்செல்ல, தேவனைக்குறித்த உணர்வில் நாம் அதிகம் வாழ்வதினால் அவருடைய சித்தம் என்னதென்று கேட்கத் தேவைப்படாது; ஏனென்றால், வேறெந்த சித்தத்தையும் தெரிந்துகொள்ளும் எண்ணம் ஒருபோதும் நமக்கு வராது. நாம் இரட்சிக்கப்பட்டுப் பரிசுத்தமாக்கப்பட்டோமானால், நம்முடைய சாதாரணத் தெரிந்துகொள்ளுதலினால் தேவன் நம்மை நடத்துகிறார்; அவருக்கு வேண்டாததை நாம் தெரிந்து கொள்ளப்போனால் அவர் தடுப்பார், நாம் கவனிக்கவேண்டும். சந்தேகம் ஏற்படும்போதெல்லாம் உடனே அதை நிறுத்துங்கள். நான் ஏன் இதைச் செய்யக்கூடாது என்று வியப்படைகிறேன் என்று ஒருபோதும் தர்க்கிக்கா தீர்கள். நாம் தெரிந்துகொள்ளுகிறதில் தேவன் நம்மைப் போதிக்கிறார், அதாவது நம்முடைய பகுத்தறிவை அவர் வழிநடத்துகிறார்; ஆண்டவரே! இப்போது உம்முடைய சித்தம் என்ன? என்று தொடர்பாகக் கேட்டு நாம் இனிமேல் அவருடைய ஆவியைத் தடைசெய்வதில்லை.

ஒருபோதும் கைவிடாத தேவன்

நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. எபி.13:5.

என்னுடைய சிந்தை எந்த நடைமுறைக்கு நேராகச் செல்லுகிறது? அது தேவன் கூறுவதற்கு நேராகத் திரும்புகிறதா? அல்லது நான் பயப்படுவதற்கு நேராகவா? தேவன் சொல்லாதவற்றைக் கூறுவதற்கா; அல்லது அவர் சொல்லுகிறதை நான் கேட்டபின் ஏதோ ஒன்றைப் பேசும்படியா நான் கற்கிறேன்? நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறார். அதனாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே.

நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை--என்னுடைய எல்லாப் பாவம், சுயநலம், துணிகரம், முரட்டாட்டம் என்பவைகளுக்காக அவர் என்னைவிட்டு விலகுவதில்லை. நான் உன்னைவிட்டு ஒருபோதும் விலக மாட்டேன் என்று தேவன் என்னிடத்தில் கூறுவதற்கு நான் மெய்யாகவே அனுமதித்திருக்கிறேனா? தேவனுடைய இத்தகைய நம்பத்தகுந்த கூற்றை நான் கேட்டிருப்பேனானால், திரும்ப நான் அதற்குச் செவிகொடுக்கட்டும்.

ஒருபோதும் கைவிடமாட்டேன் என்று அவர் கூறியுள்ளார். தேவன் என்னைக் கைவிடுவார் என்று சிலவேளைகளில் பாடுகள் அல்ல, சலிப்பூட்டுகிற வேலை என்னை நினைக்கச்செய்யலாம். நான் ஏறவேண்டிய கடினமான மலை ஒன்றுமில்லாமல், தரிசனம் ஒன்றும் கொடுக்கப்படாமல், அற்புதமும் அழகுமான ஒன்றுமில்லாமல், சாதாரணமான இரவும் பகலும் வந்து போகின்றன; இக்காரியங்களில் தேவனுடைய நம்பத்தகுந்த கூற்றை நான் கேட்கமுடியுமா?

தேவன் ஏதோ ஒரு அபூர்வமான காரியத்தைச் செய்யப்போகிறார் என்றும், வருங்காலத்திலுள்ள அசாதாரணமான காரியத்துக்காக அவர் நம்மை ஆயத்தப்படுத்தித் தகுதிப்படுத்துகிறாரென்றுமுள்ள எண்ணம் நமக்கிருக்கிறது; ஆனால், நாம் கிருபையில் தொடர்ந்து வாழும்போது, தேவன் தம்மை இங்கேயே, இப்போதே, நிகழ்காலத்தில் மகிமைப்படுத்துகிறார் என்பதைக் கண்டுகொள்ளுகிறோம். தேவனுடைய வாக்குறுதிகள் நம்மைப் பின்தாங்கினால் மிகவும் அற்புதமான பெலன் வருகிறது, சாதாரண நாட்களிலும், சாதாரண வழிகளிலும் நாம் பாடல் பாடக் கற்றுக்கொள்ளுவோம்.

தேவனுடைய நம்பத்தகுந்த கூற்று

அவர் சொல்லியிருக்கிறாரே. . . நாம் தைரியங்கொண்டு . . . சொல்லலாமே. எபி.13:5,6.

நாம் என்ன சொல்லுகிறோம் என்பது தேவன் என்ன சொன்னார் என்பதின்மீது கட்டப்படவேண்டும். நான் உன்னைவிட்டு விலகுவதில்லை என்று தேவன் சொல்லியிருக்கிறார்; எனவே, கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், அதாவது அச்ச உணர்வு என்னைத் தாக்காது என்று நான் மிகவும் தைரியத்தோடு சொல்லலாம். இதனால், நான் பயப்படும்படி சோதிக்கப்படமாட்டேன் என்று கருத்தாகாது; ஆனால், தேவன் சொல்லியிருப்பதை நான் நினைவுகூருவேன். தன் தந்தை எதிர்பார்க்கிற நிலையை எட்டுவதற்கு ஒரு குழந்தைத் தன்னை ஊக்கப்படுத்துவதுபோல, நானும் தைரியத்தால் நிறைந்திருப்பேன். அச்ச உணர்வுகள் வரும்போது அநேக மக்களுடைய விசுவாசம் தடுமாறுகிறது, அவர்கள் தேவன் சொல்லியதின் கருத்தை மறந்துவிடுகிறார்கள், ஆவிக்குரியநிலையில் ஆழ்ந்த மூச்சு வாங்க மறக்கிறார்கள். நமக்குள்ளிருந்து பேரச்சத்தை வெளியே எடுக்கும் ஒரே வழி தேவன் சொல்லியிருப்பவைகளுக்குச் செவிகொடுப்பதே.

நீங்கள் எதைப் பயப்படுகிறீர்கள்? நீங்கள் அதற்கெதிரான கோழைகளல்ல, அதை நீங்கள் எதிரிடப்போகிறீர்கள்; ஆனால், அச்ச உணர்வு இருக்கிறது. உங்களுக்கு உதவிசெய்ய யாதொன்றும் மற்றும் யாரும் இல்லாதபோது, இந்த வினாடியில், என் தற்காலக் கண்ணோட்டத்தில் கர்த்தர் எனக்குச் சகாயர் என்று நீங்கள் சொல்லுங்கள். தேவனுக்குச் செவிகொடுத்ததற்குப்பின் காரியங்களைச் சொல்ல நீங்கள் கற்றுக்கொண்டிருக்கிறீர்களா? அல்லது, நீங்கள் காரியங்களைச் சொன்னபின் தேவனுடைய வார்த்தைகளை அவைகளுக்குப் பொருத்தமாக்க முயற்சிக்கிறீர்களா? பிதா இவ்வாறு சொல்லியிருக்கிறார் என்பதைப் பற்றிக்கொண்டு, மிகுந்த தைரியத்தோடு நான் பயப்படேன் என்று கூறுங்கள். வழியில் எத்தகையக் கேடுகளோ, தீமைகளோ காணப்பட்டாலும் கவலையில்லை, நான் உன்னைவிட்டு விலகுவதில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.

தேவனுடைய வார்த்தைகளுக்கும் நம்முடைய வார்த்தைகளுக்கும் இடையில் வரும் இன்னொரு காரியம் பலவீனமாகும். துன்பங்களைச் சந்திக்க நாம் எவ்வளவு வலுவற்றவர்கள் என்பதை நாம் உணரும்போது, துன்பங்கள் ராட்சதர் போலாகின்றன, நாம் வெட்டுக்கிளிகள் போலாகிறோம், தேவன் முக்கியமில்லாதவர் ஆகிறார். ஆனால், நான் உன்னை ஒரு போதும் கைவிடுவதில்லை என்று தேவன் கூறியதை நினைவுகூரவேண்டும். தேவனுடைய இசைத்துணை ஒசையைக் கேட்டபின் நாம் பாடக் கற்றிருக்கிறோமா? கர்த்தர் எனக்குச் சகாயர் என்று சொல்லும் தைரியம் எப்போதும் நமக்குண்டா? அல்லது சோதனைக்கு இணங்குகிறோமா?

தேவன் உங்களில் செய்வதை நிறைவேற்றுங்கள்

உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள். பிலிப்.2:12.

உங்கள் சித்தம் தேவனோடு ஒத்துப்போகிறது; ஆனால் உங்கள் மாம்சத்திலோ, நீங்கள் செய்யவேண்டுமென்று அறிந்திருக்கிறதை நீங்கள் செய்யாதபடி உங்களை வலுவற்றவர்களாக்குகிற ஒரு தன்மை இருக்கிறது. கர்த்தரை மனச்சாட்சிக்கு அறிமுகப்படுத்தும்போது, அந்த மனச்சாட்சி செய்கிற முதல் காரியம் சித்தத்தைத் தட்டியெழுப்புகிறது, சித்தம் எப்போதும் தேவனோடு ஒத்துப்போகிறது. எங்களுடைய சித்தம் தேவனோடு உடன்பாடோடுள்ளதா இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாது என்று நீங்கள் கூறுகிறீர்கள். இயேசுவை நோக்கிப்பாருங்கள், அப்பொழுது ஒவ்வொரு நேரமும் உங்கள் சித்தமும் உங்கள் மனச்சாட்சியும் அவரோடு ஒத்துப் போகிறது என்று கண்டுகொள்வீர்கள். உங்கள் சித்தத்தைவிட முக்கியமற்ற ஏதோவொன்று நான் மாட்டேன் என்று உங்களைக் கூறவைக்கிறது; அது மாறுபாடாகவோ, வீண்பிடிவாதமாகவோ இருக்கலாம்; அவைகள் தேவனோடு ஒருபோதும் ஒத்துப்போவதில்லை. மனிதனில் ஆழ்ந்த அறிவாற்றலுள்ள காரியம் அவனுடைய சித்தமே, பாவமல்ல. தேவன் மனிதனைப் படைத்ததற்கு இன்றியமையாத மூலப்பொருள் சித்தமே; ஆனால், மனிதனுக்குள் பிரவேசித்துவிட்ட வக்கிரத்தன்மையே பாவமாகும். புதுப்பிறப்படைந்த மனிதனில் சித்தத்தின் ஆதாரம் சர்வவல்லமையே. தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி, விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார் என்று வாசிக்கிறோம். தேவன் உங்களுக்கு உள்ளே செய்கிறதை நீங்கள் கவனத்தோடும் கருத்தோடும் பூரணப்படுத்தவேண்டும்; இரட்சிப்புக்காகக் கிரியை செய்வதல்ல, ஆண்டவருடைய குறைவற்றதும் பூரணமானதுமான மீட்பில் உங்கள் அசையாத நம்பிக்கையைத் தீர்மானமாக அடிப்படையாக்கி இரட்சிப்பை நிறைவேற்றவேண்டும். இதை நீங்கள் செய்யும்போது, தேவச்சித்தத்துக்கு மாறான ஒரு சித்தத்தை நீங்கள் கொண்டுவரவில்லை; தேவச்சித்தமே உங்கள் சித்தம்; உங்கள் இயற்கையான தெரிந்துகொள்ளுதல்கள் தேவச் சித்தத்தின் அடிப்படையைச் சார்ந்திருக்கும்; அப்போது வாழ்க்கை மூச்சுவிடுவதுபோல் இயற்கையாயிருக்கும். உங்களுடைய சித்தத்தின் ஆதாரம் தேவனே; ஆகையால் அவருடைய சித்தத்தை நிறைவேற்ற உங்களால் சாத்தியமாகிறது. அறிவு புகட்டப்படுவதற்கு மறுக்கும் மதியற்ற தன்மையே வீண்பிடிவாதம்; அது வெடிமருந்தால் தகர்க்கப்படவேண்டும்; அந்த வெடிமருந்து பரிசுத்த ஆவியானவருக்குக் கீழ்ப்படிவதே.

சர்வ வல்லவரான தேவன் என்னுடைய சித்தத்தின் ஆதாரம் என்று நான் நம்புகிறேனா? தம்முடைய சித்தத்தை நான் செய்யவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறது மட்டுமல்ல, அதைச் செய்வதற்கு அவர் எனக்குள் வசிக்கிறார்.

தளர்ந்துவிடாதீர்கள்

நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, . . . அதைச் செய்வேன். யோவான் 14:13.

அந்தரங்கமான இந்த ஊழியத்தை நான் நிறைவேற்றுகிறேனா? பரிந்துபேசுவதில் கண்ணிகளோ, மோகம் அல்லது பெருமைக்கான எந்த ஆபத்தோ இல்லை; பிதா மகிமைப்படும்படிக் கனிகொடுக்கிற மறைவான ஊழியமே இது. என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கை சீர்கேடடைய நான் அனுமதிக்கிறேனா? அல்லது, அதை எல்லாம் என் ஆண்டவருடைய பிராயச்சித்தமாகிய ஒரேயொரு மையத்துக்குக் கொண்டுவருகிறேனா? என்னுடைய வாழ்க்கையின் எல்லா ஈடுபாடுகளிலும் இயேசுகிறிஸ்து அதிகமதிகமாய் ஆதிக்கஞ் செலுத்துகிறாரா? என்னுடைய வாழ்க்கையின் ஒரே மையப்பொருளாகவும், தீவிரமாக ஈடுபடும் முக்கிய செல்வாக்காகவும் ஆண்டவருடைய பிராயச்சித்தம் இருக்குமானால், என் வாழ்க்கையின் எல்லாப் பாகமும் அவருக்காகக் கனிகொடுக்கும்.

வல்லமையின் மையப்புள்ளி எது என்று உணர்ந்துகொள்ள நான் நேரம் எடுக்கவேண்டும். அதில் கருத்தைச்செலுத்த அறுபது நிமிடங்களில் ஒன்றாவது நான் கொடுக்கிறேனா? நீங்கள் என்னில் நிலைத்திருந்தால், அதாவது, அந்த மையத்திலிருந்து தொடர்ந்து செயல்படவும், சிந்திக்கவும், பணிபுரியவுஞ் செய்வீர்களானால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் என்று இயேசு கூறினார். நான் நிலைத்திருக்கிறேனா? நிலைத்திருக்க நான் நேரம் எடுக்கிறேனா? என் வாழ்க்கையின் வல்லமைக்குரிய மகாப்பெரிய காரணி எது? அது ஊழியமா? சேவையா? பிறருக்கான தியாகமா? அல்லது தேவனுக்காகச் செயல்பட முயற்சிப்பதா? என்னுடைய வாழ்க்கையில் மிகவும் அதிக வல்லமை செலுத்தவேண்டிய காரியம் ஆண்டவருடைய பிராயச்சித்தமே. நாம் எந்தக் காரியத்தில் அதிக நேரத்தைச் செலவிடுகிறோமோ அது நம்மை மிகவும் அதிகமாய் வடிவமைப்பதில்லை; ஆனால், எது அதிக சக்தியைச் செலுத்துகிறதோ, அதுதான் நமது வாழ்க்கையை வடிவமைக்கும் மிகப்பெரிய காரணி. நமது விருப்பங்களையும் ஆவல்களையும் கட்டுப்படுத்தி, ஒருமுகப்படுத்த நாம் தீர்மானிக்கவேண்டும்.

என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் என்று இயேசு கூறினார். இயேசுவுக்குள் நிலைத்திருக்கும் சீஷன்தான் தேவனுடைய சித்தம்; அந்த சீஷனுடைய சுயாதீனத் தெரிந்து கொள்ளுதல்களாய்த் தோன்றுகிறவைகள் தேவனுடைய முன்குறிக்கப்பட்ட தீர்மானங்களாய் இருக்கின்றன. மர்மமாயிருக்கிறதா? அறிவுபூர்வமாக இது முரண்பாடானதும் அபத்தமானதுமாய்த் தோன்றுகிறதா? ஆம், ஆனால் பரிசுத்தவானுக்கு இது மகிமையான சத்தியம்.

அடுத்தது என்ன?

மற்றவர்களைவிடக் கூடுதல் அறியத் தீர்மானியுங்கள். *நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள். யோவான் 13:17.*

உங்களுடைய நங்கூரச் சங்கிலிப் பிணைப்புக்களை நீங்கள் வெட்டிவிடாவிட்டால், தேவன் கொடுங்காற்றால் அவைகளைத் தகர்த்து உங்களை வெளியே அனுப்பவேண்டியதுவரும். எல்லாவற்றையும் தேவன் மேல் எறிந்துவிடுங்கள், அவருடைய திட்டமாகிய பொங்கிவரும் மிகப்பெரிய அலைகளின்மீது செல்லுங்கள், அப்போது உங்கள் கண்கள் திறக்கப்படும். நீங்கள் இயேசுவில் விசுவாசித்தால் உங்களுடைய நேரம் முழுவதையும் நிறைந்த மகிழ்ச்சியோடும் நங்கூரச் சங்கிலியில் பிணைக்கப்பட்டும் துறைமுக அடைப்புக்குள்ளுள்ள அமைதலான நீரில் செலவிடக்கூடாது; நீங்கள் துறைமுகத் தாழ்ப்பாள்வழியாக வெளியேறி தேவனுடைய அதிக ஆழத்திற்குள் பிரவேசித்து, நீங்களாக அறிந்துகொள்ள ஆரம்பியுங்கள், ஆவிக்குரியப் பகுத்தறிவை அடைந்துகொள்ள ஆரம்பியுங்கள்.

ஒரு காரியத்தைச் செய்யவேண்டுமென்று நீங்கள் அறியும்போது அதைச் செய்யுங்கள், உடனே நீங்கள் கூடுதல் அறிவீர்கள். ஆவிக்குரிய நிலையில் நீங்கள் எந்த இடத்தில் மந்தமானீர்கள் என்பதைத் திரும்பிப் பாருங்கள்; நீங்கள் செய்யவேண்டுமென்று அறிந்திருந்த ஒன்றிருந்தது, ஆனால் அதை நீங்கள் செய்யவில்லை; ஏனெனில், அதைச் செய்ய உடனடி அழைப்பு இருந்ததுபோலத் தோன்றவில்லை என்ற கடந்தகாலத்துக்குரிய ஒரு சம்பவத்தைக் காண்பீர்கள்; இப்போது உங்களுக்கு எந்தக் கருத்தும் இல்லை, பகுத்தறிவும் இல்லை; நெருக்கடியின் வேளையில் ஆவிக்குரியநிலையில் அமைதியாயிருப்பதற்குப்பதில், கவனத்தைச் சிதற விட்டீர்கள். அறிந்துகொண்டேயிருக்க மறுப்பது ஆபத்தான காரியம்.

உங்களைத் தியாகஞ்செய்வதற்கான சந்தர்ப்பங்களை நீங்களாக உருவாக்கும் மனநிலை கீழ்ப்படிதலுக்குப் போலியாகும்; ஆர்வம் பகுத்தறிவெனத் தவறாகக் கருதப்படுகிறது. ரோமர் 12:1,2-ல் கூறப்பட்டுள்ள ஆவிக்குரிய கொள்கைகளை நிறைவேற்றுவதைவிட உங்களை நீங்கள் தியாகஞ் செய்வது எளிது. சுயத்தியாகத்துக்குரிய பெரிய செயல்களைச் செய்வதைவிட, தேவனுடைய சித்தத்தைப் பகுத்தறிந்து, அவருடைய திட்டத்தை நிறைவேற்றுவதே சாலச் சிறந்ததாகும். பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலே உத்தமம். இதுவரை இருந்திராத ஒருவராய் நீங்கள் இருக்கவேண்டுமென்று தேவன் விரும்பும்போது, ஒரு காலத்தில் நீங்கள் யாராயிருந்தீர்கள் என்பதை நினைவுகூருவதில் எச்சரிக்கையாயிருங்கள். செய்ய மனதுள்ளவனெவனோ.....அவன் அறிந்துகொள்ளுவான்.

அடுத்து செய்யக்கூடிய சிறந்த காரியம்

நீங்கள் பெற்றுக்கொள்ளாவிட்டால் கேளுங்கள். *ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான். லூக்கா 11:10.*

கேட்கிறதைவிட அதிகக் கடினமான காரியம் வேறொன்றுமில்லை. நாம் விரும்புவோம், ஆசிப்போம், வாஞ்சிப்போம், பாடனுபவிப்போம்; ஆனால், இறுதிநிலை எட்டும்வரை நாம் கேட்பதில்லை. போலித்தனத்தின் உணர்வு நம்மைக் கேட்கவைக்கிறது. தார்மீகத் தரித்திரத்தின் ஆழத்தினால் நீங்கள் எப்போதாவது கேட்டதுண்டா? உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால்.....தேவனிடத்தில் கேட்கக்கடவன்--ஆனால், உங்களுக்கு ஞானத்தில் குறைவுண்டு என்ற நிச்சயம் வேண்டும். நீங்கள் விரும்பும்போது உங்களை நீங்களாக யதார்த்தத்துக்கு எதிராகக் கொண்டு வரமுடியாது. நீங்கள் ஆவிக்குரியநிலையில் நேர்மையாய் இல்லாவிட்டால், நீங்கள் செய்யக்கூடிய அடுத்த சிறந்த காரியம் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையின்படி (லூக்கா 11:13) பரிசுத்த ஆவியானவருக்காகத் தேவனிடம் கேட்பதே. இயேசு உங்களுக்காகச் செய்திருக்கிற எல்லாவற்றையும் உங்களுக்குள் அனுபவமாக்குகிற ஒருவர் பரிசுத்த ஆவியானவரே.

கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான். நீங்கள் கேட்காவிட்டால் பெற்றுக்கொள்ளமாட்டீர்களென்பது இதன் கருத்தல்ல (மத்.5:45 பார்க்க); ஆனால், கேட்கிற இடத்துக்கு நீங்கள் வருமட்டும் தேவனிடத்திலிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளமாட்டீர்கள். பெற்றுக்கொள்ளுவதென்பது, நீங்கள் தேவனுடைய பிள்ளை என்ற உறவுக்குள் வந்திருக்கிறீர்கள், எனவே இந்தக் காரியங்கள் தேவனிடத்திலிருந்து வருகின்றன என்று விவேகமும் தார்மீக முமான பாராட்டுதலோடும் ஆவிக்குரிய அறிவோடும் நீங்கள் இப்போது உணர்ந்துகொள்ளுகிறீர்கள் என்று பொருளாகிறது.

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால்..... நீங்கள் குறைவுள்ளவர்கள் என்று உணருகிறீர்களானால் அதன் காரணம் ஆவிக்குரிய யதார்த்தத்தோடு நீங்கள் தொடர்புகொண்டிருக்கிறீர்கள்; உங்கள் கண்களுக்கு அறிவின் அடைப்பானைத் திரும்பப் போடாதேயுங்கள். எளிய சுவிசேஷத்தை எங்களுக்குப் பிரசங்கியுங்கள்; நாங்கள் பரிசுத்தமாயிருக்கவேண்டுமென்று எங்களிடம் சொல்லாதீர்கள்; ஏனெனில், அது இழிவுபடுத்துகிற தரித்திரத்தின் உணர்வை உண்டாக்குகிறது, அத்தகைய இழிவான தரித்திரராய் உணர்வது நல்லதல்ல என்று மக்கள் கூறுகிறார்கள். கேட்பது என்றால் யாசிப்பது. சில மக்கள் தங்கள் ஏழ்மையில் அக்கறைப்படுமளவுக்குத் தரித்திரராயிருக்கிறார்கள்; நம்மில் சிலர் ஆவிக்குரிய நிலையில் அவ்வாறிருக்கிறோம். நாம் உள்நோக்கத்தோடு கேட்டால், அதாவது நமது ஏழ்மையினிமித்தமல்ல, இச்சையினிமித்தம் கேட்டால் நாம் ஒருபோதும் பெற்றுக்கொள்வதில்லை. நொடித்தவர் தன் தரித்திரத்தின் வேதனையினால் கேட்கிறாரேதவிர வேறு எக்காரணங்கொண்டும் கேட்பதில்லை; அதைக் குறித்து அவர் வெட்கப்படுவதில்லை. ஆவியில் தரித்திரர் பாக்கியவான்கள்.

அடுத்து செய்யக்கூடிய சிறந்த காரியம்

நீங்கள் கண்டடையாவிட்டால் தேடுங்கள். தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள். லூக்கா 11:9

நீங்கள் விண்ணப்பம்பண்ணியும் தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள். தேவனிடமிருந்து கேட்பதற்குப்பதில் வாழ்க்கையிலிருந்து நீங்கள் காரியங்களைக் கேட்பீர் களானால், நீங்கள் தகாதவிதமாய்க் கேட்கிறீர்கள்; அதாவது சுயநிறைவின் விருப்பத்துக்காகக் கேட்கிறீர்கள். எவ்வளவு அதிகமாய் நீங்கள் உங்களை அறிந்திருக்கிறீர்களோ அவ்வளவுக்குக் குறைவாய் நீங்கள் தேவனைத் தேடுவீர்கள். தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள். வேலையை ஆரம் பியுங்கள், இந்த ஒன்றுக்காக நீங்கள் அக்கறையை ஒருமுகப்படுத்துங்கள். தேவனை எப்போதாகிலும் உங்கள் முழு இருதயத்தோடும் தேடினதுண்டா? அல்லது தார்மீக நரம்பு வலியின் கடும் வேதனைக்கப்புறம் கருத்தில்லாத கதறுதலைமாத்திரம் அவருக்குநேராக ஏறெடுத்திருக்கிறீர்களா? தேடுங்கள், மனதை ஒருமுகப்படுத்துங்கள், அப்போது நீங்கள் கண்டடைவீர்கள்.

தாகமுள்ளவர்களே, தண்ணீர்களண்டைக்கு வாருங்கள். நீங்கள் தாகமாயிருக்கிறீர்களா? அல்லது, சுயநீதியில் திருப்திகொண்டு அக்கறை யற்றிருக்கிறீர்களா?--தேவனிடமிருந்து கூடுதல் ஒன்றையும் தேவைப்படாத அளவு உங்கள் அனுபவங்களில் திருப்தியாயிருக்கிறீர்களா? அனுபவம் ஒரு நுளைவாயில், முடிவல்ல. அனுபவத்தின்மேல் உங்கள் விசுவாசத்தைக் கட்டுவதில் ஜாக்கிரதையாயிருங்கள்; கண்டிக்கிற சத்தம் உடனடியாக வரும். நீங்கள் கண்டடைந்ததை இன்னொரு நபருக்கு ஒருபோதும் கொடுக்க முடியாது; ஆனால் உங்களிடமிருக்கிறதை அவர் வாஞ்சிக்கச்செய்யலாம்.

தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். தேவனிடம் சேருங்கள். தட்டுங்கள்--கதவு பூட்டப்பட்டிருக்கிறது, நீங்கள் தட்டும்போது படபடப்பினால் அவதிப்படுகிறீர்கள். உங்கள் கைகளைச் சுத்தஞ்செய்யுங்கள்--சிறிதுகூட உரத்த சத்தமாய்த் தட்டுங்கள், நீங்கள் அசுத்தமாயிருக்கிறீர்கள் என்பதைக் காண ஆரம்பிப்பீர்கள். உங்கள் இருதயத்தைச் சுத்திகரியுங்கள் --இது இன்னும் கூடுதல் தனிப்பட்டது; இப்போது நீங்கள் அவசரமாகக் கரிசனையோடு இருக்கிறீர்கள்--நீங்கள் எதையும் செய்வீர்கள். உங்களை ஒடுக்குங்கள்--உங்கள் உள்ளான வாழ்க்கையின் நிலைமைக்காக நீங்கள் எப்போதாவது உங்களைத் தேவனுக்குமுன்பாக ஒடுக்கினது உண்டா? அப்போது சுயபச்சாதாபத்தின் ஒரு இழைபோலும் மீந்திராது; நீங்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறீர்கள் என்பதைக் காண்பதால் உண்டாகும் ஆச்சரியத்தால் அதிகத் துக்கத்தை உண்டாக்கும் அனுபவம் ஏற்படும். தாழ்மைப்படுங்கள்--தேவனுடைய வாசலைத் தட்டுவது தாழ்மைப்படும் அனுபவமாகும்--சிலுவையில் அறையப்பட்ட கள்ளனோடுசேர்ந்து நீங்கள் தட்டவேண்டும். தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.

அங்கு சென்றடைதல்

பாவமும் துக்கமும் நின்று, பாடலும் பரிசுத்தவானும் தொடங்கும் இடம். *என்னிடத்தில் வாருங்கள். மத்.11:28.*

நான் அங்கு சென்றுசேரவேண்டுமா? இப்போது என்னால் கூடும். வாழ்க்கைக்கு முக்கியமான கேள்விகள் குறிப்பிடத்தக்கவிதத்தில் குறைவே; அவை எல்லாவற்றுக்கும் பதிலளிக்கும் வார்த்தைகள் என்னிடத்தில் வாருங்கள் என்பதே. இதைச்செய்யுங்கள், அதைச்செய்யாதேயுங்கள் என்றல்ல; என்னிடத்தில் வாருங்கள் என்றே இயேசு கூறுகிறார். நான் இயேசுவிடம் வருவேனானால் என் நடைமுறை வாழ்க்கை என் நிஜ விருப்பங்களுக்கு இசைவாகக் கொண்டுவரப்படும்; உண்மையாகவே நான் பாவம் செய்வதை நிறுத்துவேன், ஆண்டவரின் பாடல் ஆரம்பிப்பதைக் கண்டடைவேன்.

நீங்கள் எப்போதாவது இயேசுவினிடத்தில் வந்ததுண்டா? உங்கள் இருதயக்கடினத்தைக் கவனியுங்கள், என்னிடத்தில் வாருங்கள் என்ற அவருடைய அழைப்புக்குக் குழந்தையைப்போன்று எளிமையாகச் செயல் படுவதைத் தவிர்த்து, வேறெதையும் நீங்கள் செய்வீர்கள். பாவத்திலிருந்து விடுதலைபெறும் உண்மையான அனுபவம் வேண்டுமானால், நீங்கள் இயேசுவிடம் வரவேண்டும்.

இயேசுகிறிஸ்து தம்மை உரைகல்லாக்குகிறார். வாருங்கள் என்ற வார்த்தையை அவர் எவ்வாறு பயன்படுத்தினார் என்பதைக் கவனியுங்கள். சற்றும் எதிர்பாராத வேளைகளில் என்னிடம் வாருங்கள் என்ற இயேசுவின் மெல்லிய குரல் கேட்கிறது; உடனடியாக நீங்கள் இழுக்கப்படுகிறீர்கள். இயேசுவோடுள்ள நேரடி உறவு எல்லாவற்றையும் மாற்றுகிறது. அவரிடம் வந்து, அவர் சொல்லுவதற்கு உங்களை அர்ப்பணிக்குமளவுக்கு நீங்கள் ஆயத்தமானவர்களாயிருங்கள். சித்தம் சகலத்தையும் தீர்மானமாக விட்டு விட்டு, எல்லாவற்றையும் மனப்பூர்வமாக அவருக்கு அர்ப்பணிக்கிறதுதான் அவரிடம் வரும் மனநிலையாகும்.

நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்; அதாவது, நான் உங்களைத் தாங்கிப்பிடிப்பேன். உங்களைப் படுக்கையில் போட்டு, உங்கள் கரத்தைப் பிடித்து, தாலாட்டுப்பாடி தூங்கவைப்பேன் என்றல்ல, உங்களைப் படுக்கையிலிருந்தும், தளர்வு மற்றும் சோர்பிலிருந்தும், நீங்கள் உயிரோடு இருக்கும்போதே அரை உயிராயிருக்கும் நிலையிலிருந்தும் எழுப்புவேன்; உங்களுக்குள் ஜீவனின் ஆவியை உருவாக்குவேன், மிக முக்கியமான செயல்பாட்டின் பூரணத்தினால் நீங்கள் தாங்கிப்பிடிக்கப்படுவீர்கள் என்று கூறுகிறார். நாம் பரிதாபகரமானவர்களாகி கர்த்தரின் சித்தத்தைச் சகிக்கிறதைக்குறித்துப் பேசுகிறோம். அதைக்குறித்தத் தேவகுமாரனின் மாட்சிமையான பராக்கிரமமும் வல்லமையும் எங்கே?

அங்கு சென்றடைதல்

சுயநலம் தூங்கி, பொதுநலம் விழிக்குமிடம். *ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?..... வந்து பாருங்கள். யோவான் 1:38,39.*

அன்றையத்தினம் அவரிடத்தில் தங்கினார்கள் என்று படிக்கிறோம். நம்மில் சிலர் இவ்வாறு மாத்திரமே எப்போதும் செய்கிறோம், அதன்பின் நாம் எதார்த்த நிலைக்கு விழித்து எழும்புகிறோம்; சுயநலம் வருகிறது, நிலைத்திருத்தல் கடந்துவிட்டது. நாம் இயேசுவுக்குள் நிலைத்திருக்கக்கூடாத வாழ்க்கையின் எந்த நிலைமையும் இல்லை.

நீ சீமோனாயிருக்கிறாய், நீ கேபா என்றழைக்கப்படுவாய் என்றார் இயேசு. நமது வாழ்க்கையில் எங்கு பெருமை, தன்னிறைவு, தன்னலம் என்பவைகளைத் தேவன் அழித்திருக்கிறாரோ, அந்த இடங்களில் மாத்திரம் அவர் ஒரு புதிய நாமத்தை எழுதுகிறார். நம்மில் சிலருக்கு, ஆவிக்குரிய அம்மைக் கொப்பளங்களைப்போல, புள்ளிகளில் மாத்திரம் புதிய நாமம் காணப்படுகிறது. பகுதிபகுதியாக நாம் சரியானவர்களாய்த் தோன்றுகிறோம். நாங்கள் மிகச்சிறந்த ஆவிக்குரிய மனநிலையைத் தரித்திருக்கும்போது, நாங்கள் மேம்பட்ட பரிசுத்தவான்கள் என்று நீங்கள் எண்ணுவீர்கள்; ஆனால், அந்த மனநிலையில் நாங்கள் இல்லாதபோது, எங்களைப் பாராதீர்கள் என்று நீங்கள் கூறலாம். தன்மீது முழுவதும் புதிய நாமம் எழுதப்பட்டுள்ள ஒரு நபர்தான் சீஷன்; தன்னலமும் பெருமையும் தன்னிறைவும் முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டன.

பெருமையென்பது சுயத்தைக் கடவுளாக்குவதாகும், அது இன்று நம்மில் சிலரில் பரிசேய முறையில் அல்ல, ஆயக்காரனுடைய முறையில் காணப்படுகிறது. நான் ஒரு பரிசுத்தவானல்ல என்று கூறுவது மானுடப் பெருமைக்கு ஏற்புடையது; ஆனால், அது நம்மை அறியாமல் தேவனை தூஷிப்பதாகும். உங்களைப் பரிசுத்தவான்களாக்க தேவனால் முடியாது என்பதுபோல நீங்கள் அவரைச் சவால்விடுகிறீர்கள் என்பதே அதன் நேரடிப் பொருள். நான் மிகவும் பலவீனனும் நம்பிக்கையற்றவனுமாயிருக்கிறேன்; பிராயச்சித்தம் வந்தெட்டக்கூடாத தூரத்திலிருக்கிறேன் என்று கூறுகிறீர்கள். மனிதருக்குமுன்பான தாழ்மை நம் அறிவில்லாமலே தேவனுக்குமுன்பான தூஷணமாகும். நீங்கள் ஏன் பரிசுத்தவான்களாய் இல்லை? ஒன்றில் நீங்கள் பரிசுத்தவான்களாயிருக்க விரும்பவில்லை; அல்லது தேவன் உங்களைப் பரிசுத்தவான்களாக்கமுடியும் என்று நீங்கள் நம்பவில்லை. தேவன் உங்களை இரட்சித்து நேரே பரலோகத்திற்குக் கொண்டுபோனால் போதும் என்று நீங்கள் கூறுகிறீர்கள். அதைத்தான் அவர் செய்வார்! நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம் என்று இயேசு கூறினார். நிபந்தனைகள் ஒன்றும் விதிக்காதீர்கள், இயேசுவே எல்லாமுமாயிருக்கட்டும். ஒரு நாளுக்கு மட்டுமல்ல, நித்தியத்துக்கும் அவர் உங்களை அவரோடு பரலோகத்துக்கு எடுத்துச்செல்வார்.

அங்கு சென்றடைதல்

தெரிந்தெடுத்த பாசம் மரித்து, பரிசுத்தமான அர்ப்பணம் வாழுமிடம். *என் பின்னே வாருங்கள். மாற்கு 1:17.*

இயேசுவிடம் வருவதற்குப் பெருந்தடைகளாயிருப்பதில் ஒன்று மனப் போக்கைக்குறித்த சாக்குப்போக்காகும். நாம் இயேசுவிடம் வராதபடி நமது மனப்போக்கையும் இயற்கை விருப்பங்களையும் தடைகள் ஆக்குகிறோம். இயேசுவிடம் வரும்போது நாம் முதலாவது உணர்ந்துகொள்ளும் காரியம் அவர் நம்முடைய இயற்கை விருப்பங்களுக்கு எந்தவிதத்திலும் கவனம் செலுத்துவதில்லையென்பதே. நம்முடைய வரங்களைத் தேவனுக்கு நாம் பிரதிஷ்டைபண்ணலாமென்கிற எண்ணம் நமக்கு இருக்கிறது. உங்களு டையதல்லாததை நீங்கள் பிரதிஷ்டைபண்ணமுடியாது; தேவனுக்கு நீங்கள் பிரதிஷ்டைபண்ணக்கூடிய ஒரு காரியம் மாத்திரமே உண்டு, அது உங்கள் மேல் உங்களுக்கிருக்கும் உரிமையே (ரோமர் 12:1). உங்கள்மேல் உங்க ளுக்கிருக்கும் உரிமையை நீங்கள் தேவனிடம் கொடுப்பீர்களானால், அவர் உங்களையே ஒரு தூய்மையான பரிசோதனையின் ஆதாரமாக்குவார். அவருடைய பரிசோதனைகள் எப்போதும் வெற்றியடையும். பரிசுத்தவானின் ஒரு அடையாளம் இயேசுகிறிஸ்துவிடம் ஒப்படைப்பதிலிருந்து எழும்புகிற தார்மீகமான சுயமான எண்ணங்கள். ஒரு பரிசுத்தவானின் வாழ்க்கையில் முதன்மையான ஜீவனின் அற்புதமான ஊற்று எப்போதும் இருக்கிறது; தேவஆவியானவர் தொடர்பாகச் சுத்தமான நீர் எழும்பிக்கொண்டிருக்கிற ஊற்றாயிருக்கிறார். சூழ்நிலைகளைத் திட்டமிடுகிறவர் தேவனே என்பதைப் பரிசுத்தவான் உணருகிறார்; அதின்பலனாக அங்கு முறுமுறுப்பில்லை, இயேசுவுக்காகத் துணிச்சலான ஒப்படைப்பு மாத்திரமே உண்டு. உங்கள் அனுபவத்திலிருந்து ஒருபோதும் ஒரு கொள்கையை உருவாக்காதீர்கள்; தேவன் உங்களோடு நேரடியாக இடைபடுவதுபோல பிறரோடும் நேரடியாக அவர் இடைபடட்டும்.

வாருங்கள் என்று அவர் சொல்லும்போது, உங்களை இயேசுவுக்கு முற்றிலும் ஒப்படைத்து, நீங்கள் வருவீர்களானால், அவர் உங்கள்மூலம் வாருங்கள் என்று தொடர்ந்து அழைப்புக் கொடுப்பார்; நீங்கள் உலகுக்குள் சென்று, வாருங்கள் என்று கிறிஸ்து கூறியதின் எதிரொலியை மீண்டும் உண்டாக்கிக்கொண்டேயிருப்பீர்கள். தன்னைத் துறந்துவிட்டு, இயேசுவிடம் வந்த ஒவ்வொரு ஆத்துமாவிலும் காணப்படும் விளைவு இதுவே.

நான் இயேசுவிடம் வந்திருக்கிறேனா? அல்லது இப்போதாவது வருவேனா?

சென்றுகொண்டேயிருங்கள்

தீர்மானத்தலின் காரியத்தில். *என்னில் நிலைத்திருங்கள். யோவான் 15:4.*

பிராயச்சித்தத்தினால் இயேசுவின்ஆவி எனக்குள் வைக்கப்பட்டிருக் கிறது; எனவே, என் ஆண்டவருக்குத் துல்லியமாய் இசைவான சிந்திக்கும் முறையை நான் பொறுமையோடு கட்டிஎழுப்பவேண்டும். இயேசுவைப் போலச் சிந்திக்கும்படி தேவன் என்னைத் தயார்செய்யமாட்டார்; அதை நானாகவே செய்யவேண்டும்; என்னுடைய எந்த எண்ணத்தையும் கிறிஸ்து வுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்தவேண்டும். என்னில் நிலைத்திருங்கள்--புத்திக்குரிய காரியங்களிலும், பணத்துக்குரிய காரியங்களிலும், மனித வாழ்க்கை இருக்கிறவாறே ஆக்குகிற ஒவ்வொரு காரியத்திலும் கிறிஸ்து வுக்குள் நிலைத்திருக்கவேண்டும்.

என்னுடைய சூழ்நிலைகளில் தேவன் காரியங்களைச் செய்தால் அது அவரோடுள்ள என்னுடைய தோழமையைத் தடைசெய்யுமென்று கூறுவதால், அவர் அவ்வாறு செய்யாமல் தடுக்கிறேனா? அது மரியாதை அற்றது. என்னுடைய சூழ்நிலைகள் எவ்வாறிருந்தாலும் பரவாயில்லை; ஜெபக்கூட்டத்தில் இயேசுவுக்குள் நிலைத்திருப்பதைப்போலவே, அச்சூழ்நிலை களிலும் நிச்சயமாய் நான் அவருக்குள் நிலைத்திருக்கமுடியும். என்னுடைய சூழ்நிலைகளை நானாக மாற்றியமைக்கக்கூடாது. நமது ஆண்டவருக்கு உட்புறமான நிலைத்திருத்தல் கறைப்படாமல் இருந்தது; அவர் வைக்கப்பட்ட இடத்திலெல்லாம் அவர் பிதாவோடு இதமாயிருந்தார். அவர் ஒருபோதும் தன்னுடைய சொந்தச் சூழல்களைத் தெரிந்துகொள்ளவில்லை, ஆனால், அவருடைய பிதாவின் காலஒழுங்குமுறையில் அவர் சாந்தமாய் இருந்தார். நமது ஆண்டவரின் வாழ்க்கையில் காணப்பட்ட அற்புதமான ஓய்வு நேரத்தைச் சிந்தித்துப்பாருங்கள்! தேவனுக்குரிய காரியங்களில் நாம் உணர்ச்சிவசப்படுகிறோம்; கிறிஸ்துவோடு தேவனுக்குள் மறைந்திருக்கிற வாழ்க்கையின் அமைதி நம்மில் இல்லை.

கிறிஸ்துவில் நிலைத்திருப்பதிலிருந்து உங்களை வெளியாக்குகிற காரியங்களை எண்ணிப்பாருங்கள்--ஆம், ஆண்டவரே, சற்றுப் பொறும், இதை நான் செய்தாகவேண்டும்; ஆம், இது முடிவடைந்தவுடன் நான் நிலைத்திருப்பேன்; இந்த வாரம் முடிந்ததும் எல்லாம் சரியாகும், அப்போது நான் நிலைத்திருப்பேன் என்று கூறுகிறோம். முயற்சியை ஆரம்பியுங்கள்; இப்போதே நிலைத்திருக்கத் தொடங்குங்கள். அது வாழ்க்கைச் சட்டமாக மாறி, உங்களை அறியாமலே அவரில் நீங்கள் நிலைத்திருக்கும்வரை ஆரம்பக் கட்டங்களில் அது தொடர்பான முயற்சியாயிருக்கும். நீங்கள் எங்கு வைக்கப்பட்டாலும் இயேசுவில் நிலைத்திருக்கத் தீர்மானியுங்கள்.

சென்றுகொண்டேயிருங்கள்

கனல உழைப்பின் காரியத்தில். *கூட்டி வழங்குங்கள். 2 பேதுரு 1:7.*

திவ்விய சுபாவத்தை நீங்கள் சுதந்தரித்திருக்கிறீர்கள் (வச.4) என்று பேதுரு கூறுகிறார்; எனவே, உங்கள் கவனத்தைக் கீழே கொண்டுவந்து, ஜாக்கிரதையோடே ஒருமுகப்படுத்தி நல்ல பழக்கங்களை உண்டாக்குங்கள். கூட்டி வழங்குங்கள் என்று சொல்லுவது, இந்தப் பண்புகளையெல்லாம் (வச.5-7) உட்படுத்தும். ஒரு மனிதனும் இயற்கையாகவோ இயற்கைக்கு அப்பாற்பட்டோ நற்பண்புகளோடு பிறப்பதில்லை; அவன் அவைகளை உருவாக்கவேண்டும். நாம் எந்தப் பழக்கவழக்கங்களோடும் பிறப்பதில்லை; தேவன் நமக்குள்ளே வைத்திருக்கிற புதிய ஜீவனின் அடிப்படையில் பழக்க வழக்கங்களை உருவாக்கவேண்டும். நாம் தங்கத்தால் அலங்கரிக்கப்பட்ட பதிப்புக்களாயல்ல; தேவனுடைய கிருபையின் அற்புதத்தை வெளிப்படுத்தும் வழக்கமான வாழ்க்கை செய்யும் சாதாரண மக்களாயிருக்கவேண்டும். இழிவாகக் கருதப்படும் கடின உழைப்பே நற்பண்பின் உரைகல்லாகும். ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகப்பெரிய தடை நாம் செய்வதற்குப் பெரிய காரியங்களைத் தேடுவதே. இயேசு ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு சீஷருடைய கால்களைக் கழுவத்தொடங்கினார்.

வெறும் அனுதின கடமைகளும் சாதாரணப் பணிகளுங்கொண்ட ஆவிக்குரிய ஒளியும் கிளர்ச்சியுமற்றதான காலங்கள் உண்டு. தெய்வீக ஏவுதலின் காலங்களுக்கிடையே தேவன் நம்மைப் பாதுகாக்கும் வழியே வழக்கமான கடமைகளாகும். தேவன் தமது கிளர்ச்சியூட்டுகிற நிமிடங்களை எப்போதும் உங்களுக்கு அளிப்பார் என்று எதிர்பாராதீர்கள்; தேவனுடைய வல்லமையோடு இழிவான கடமையின் மண்டலத்தில் வாழ்வதற்குக் கற்றுக் கொள்ளுங்கள்.

கூட்டுவதுதான் கடினமானது. தேவன் நம்மைப் பரலோகத்துக்குச் சுகமான மலராலான மஞ்சத்தில் சுமந்து செல்வார் என்று நாம் எதிர்பார்க்க வில்லையென்று கூறுகிறோம்; ஆனாலும், அவ்வாறு எதிர்பார்த்தோம் என்பதுபோலவே நாம் செயல்படுகிறோம்! நான் கீழ்ப்படிகிற மிகவும் சிறிய நுணுக்கத்துக்குப் பின்னால் தேவனுடைய கிருபையின் சர்வவல்லமையின் சக்தியுண்டு. கடமைக்காக அல்ல, தேவனே என்னுடைய சூழ்நிலைகளைத் திட்டமிடுகிறார் என்று நான் விசுவாசிப்பதினால் நான் என் கடமையைச் செய்வேனேயானால், நான் கீழ்ப்படிகிற அதே இடத்தில், பிராயச்சித்தத்தின் மூலம் தேவனுடைய மிகவும் மேன்மையான கிருபை முழுவதும் எனக்குச் சொந்தமாகிறது.

இதிலிருந்து நீங்கள் விளங்கிக்கொள்வதென்ன?

ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. . . நான் உங்களைச் சிநேகிதர் என்றேன். யோவான் 15:13,15.

இயேசுவுக்காக நான் மரிக்கும்படி அவர் கேட்கவில்லை; ஆனால், அவருக்காக என் ஜீவனை ஒப்படைக்கும்படிக் கேட்கிறார். உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன் என்று பேதுரு கூறினார்; அவர் கருத்தோடுதான் கூறினார்; அவருடைய வீரமான மனநிலை சிறப்பானது. பேதுரு கூறியது போன்ற உறுதிமொழியைக் கூறத் திறனற்றிருப்பது நல்லதல்ல; நம்முடைய வீரமான மனநிலையால் மாத்திரமே நம்முடைய கடமை உணர்ச்சியை உணர்ந்துகொள்ளமுடியும். எனக்காக உங்கள் ஜீவனை ஒப்படைப்பீர்களா என்று ஆண்டவர் எப்போதாவது உங்களிடம் கேட்டதுண்டா? உன்னத அழைப்பின் உணர்வோடு, எக்காலத்தும் நம்முடைய ஜீவனை ஒப்படைப் பதைவிட மரிப்பது மிகவும் எளிது.

மகிமையான சந்தர்ப்பங்களுக்காக நாம் உண்டாக்கப்படவில்லை, ஆனால், அவைகளின் அடிப்படையில் நாம் சாதாரண முறையில் நடக்க வேண்டும். இயேசுவின் வாழ்க்கையில் ஒரேயொரு மகிமையான சந்தர்ப்பம் மாத்திரமே உண்டாயிருந்தது, அது மறுரூபமலையின் அனுபவமே; பின்பு அவர் இரண்டாம் முறையாகத் தமது மகிமையைத் துறந்து, அசுத்தஆவி பாதித்த பள்ளத்தாக்குக்குள் இறங்கி வந்தார். முப்பத்துமூன்று ஆண்டுகள் தம் பிதாவின் சித்தத்தைச் செய்ய இயேசு தமது ஜீவனை ஒப்படைத்தார், எனவே, நாமும் சகோதருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக் கிறோம் என்று யோவான் சொல்லுகிறார். அவ்வாறு செய்வது மனித இயற்கைக்கு எதிரானது.

நான் இயேசுவின் நண்பனானால், அவருக்காக என் ஜீவனை மனப்பூர்வமாகவும் விருப்பத்தோடும் ஒப்படைக்கவேண்டும். அது கடினம், அது கடினமாயிருப்பதற்காகத் தேவனுக்கு நன்றி. இரட்சிப்பு எளிதானது, ஏனெனில் தேவன் அதற்குப் பெருங்கிரயம் கொடுத்தார்; ஆனால், அது என் வாழ்க்கையில் வெளிப்படுவது கடினமானது. தேவன் ஒரு மனிதனை இரட்சித்து, அவனுக்குப் பரிசுத்தஆவியை அருளிச்செய்தபின்பு, அவனைப் பார்த்து, நீ திட்டமிடு, உன்னைச் சுற்றியுள்ள காரியங்களின் தன்மைகள் உன்னை விசுவாசம் இல்லாதவனாய் இருக்கச்செய்யும்போது நீ எனக்கு விசுவாசமுள்ளவனாயிரு என்ற கருத்தில் கூறுகிறார். உங்களைச் சிநேகிதர் என்றேன் என்றார் இயேசு. உங்களுடைய அந்த நண்பருக்கு நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் நில்லுங்கள்; உங்கள் சாரீர வாழ்க்கையில் அவர் மதிப்பு கேள்விக்குறியாயிருக்கிறது என்பதை நினைத்துக்கொள்ளுங்கள்.

கண்டனஞ்செய்யாத மனநிலை

நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். மத்.7:1.

நியாயந்தீர்க்கிறதைக்குறித்து, செய்யாதே என்று இயேசு கூறினார். சராசரி கிறிஸ்தவன் மிகவும் கூர்ந்துக் கண்டனஞ்செய்யும் தனிநபராகும். கண்டனம் மனிதனுடைய சாதாரண இயற்கைத் திறனின் ஒரு பகுதியாகும்; ஆனால், ஆவிக்குரிய மண்டலத்தில் கண்டனத்தால் ஒன்றையும் சாதிக்க முடியாது. கண்டனஞ்செய்யப்படுகிறவரின் ஆற்றல்களைப் பகுத்துவிடுவதே கண்டனஞ்செய்வதின் விளைவு; கண்டனஞ்செய்யத் தகுதியான நிலையில் இருக்கும் ஒருவர் பரிசுத்த ஆவியானவர் மாத்திரமே; அவரால் மாத்திரமே காயப்படுத்தாமலும் நோகச்செய்யாமலும் எது தவறோ அதை எடுத்துக் காண்பிக்க இயலும். நீங்கள் குறைகூறும் மனநிலையில் இருக்கும்போது தேவனோடு ஐக்கியத்துக்குள் பிரவேசிப்பது சாத்தியமல்ல; அது உங்களைக் கடினமானவர்களும் பழிவாங்குகிறவர்களும் கொடூரமானவர்களுமாக்கும், நீங்கள் மற்றவர்களைவிட மேம்பட்டவர் என்ற தற்புகழ்ச்சியை அது உங்களில் உண்டாக்கும். சீஷன் என்ற நிலையில், கண்டனஞ்செய்யாத மனப்பான்மையைப் பேணிக்கொள்ளுங்கள் என்று இயேசு கூறுகிறார். என்றென்றைக்குமாக இது செய்யப்படுவதில்லை. மேலான நபரின் இடத்தில் உங்களை வைக்கிற எக்காரியத்தைக்குறித்தும் ஜாக்கிரதையாயிருங்கள்.

இயேசுவின் ஊடுருவும் பார்வையிலிருந்து தப்பிச்செல்லமுடியாது. உங்கள் கண்ணிலே தூசியை நான் கண்டால், என் கண்ணிலே உத்திரம் இருக்கிறது என்பது பொருளாகிறது. உங்களிலே நான் காண்கிற எல்லாத் தவறுகளையும் தேவன் என்னில் கண்டுபிடிக்கிறார். நான் நியாயந்தீர்க்கும் ஒவ்வொரு தடவையும் நான் என்னை ஆக்கினைக்குள்ளாக்குகிறேன் (ரோமர் 2:17-20 பார்க்க). மற்ற மக்களுக்காக ஒரு அளவுகோல் வைத்துக் கொள்ளுவதை நிறுத்துங்கள். ஒவ்வொரு மனிதரைப்பொறுத்தும் நாம் அறியாத ஒரு உண்மை கூடுதலாக அவர்களில் உண்டு. முதலாவதாகத் தேவன் செய்யும் காரியம் ஆவிக்குரிய நிலையில் நம்மை முற்றும் சுத்திகரிப்பதே; அதற்கப்புறம் ஒரு மனிதனில் பெருமை மீந்திருக்க சாத்தியமேயில்லை. தேவனுடைய கிருபை இல்லாமலிருந்தால் நான் எவ்வாறிருந்திருப்பேன் என்பதை உணர்ந்தபின் நான் நம்பிக்கையிழக்கக்கூடிய எந்த மனிதனையும் நான் ஒருபோதும் சந்தித்ததேயில்லை.

இப்போது சிந்திக்காதீர், சாலையில் செல்வீர்

பேதுரு . . . இயேசுவினிடத்தில் போக ஜலத்தின்மேல் நடந்தான். காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்தான். மத்.14:29,30.

காற்று பேரிரைச்சலாயிருந்தது, அலைகளும் உயரமாய் எழும்பின, ஆனால் பேதுரு ஆரம்பத்தில் அவைகளைக் காணவில்லை. அவர் அவை களைக் கணக்கில் எடுக்கவுமில்லை, அவருடைய கர்த்தரை அவர் புரிந்து கொண்டார், கர்த்தருடைய அங்கீகாரத்தில் பேதுரு படவைவிட்டு இறங்கித் தண்ணீரின்மேல் நடந்தார். அதன்பின் அவர் நடப்பிலுள்ள காரியங் களைக் கணக்கிலெடுக்க ஆரம்பித்தார், உடனடியாக கீழே அமிழ்ந்தார். அலைகளின்மேல் நடந்ததுபோல பேதுரு அலைகளுக்குக் கீழாகவும் நடக்கும்படி அவருக்கு நமது ஆண்டவர் ஏன் உதவியிருக்கக்கூடாது? கர்த்தராகிய இயேசுவை அறிந்தால்தவிர இரண்டுமே செய்யமுடியாது (அதாவது, அலைகளின்மேலும் நடக்கமுடியாது அலைகளுக்குக்கீழும் நடக்கமுடியாது).

சில காரியங்களில் நாம் தேவனுக்காக இறங்கிப் புறப்படுகிறோம், பின்பு நம்மைக்குறித்த கரிசனைகள் உட்பிரவேசிப்பதால் நாம் அமிழ்ந்து போகிறோம். நீங்கள் ஆண்டவரை அடையாளம் காண்கிறீர்களானால், உங்கள் சூழ்நிலைகளை அவர் எங்கு திட்டமிடுகிறார் என்பதை அறிவது உங்கள் கடமையல்ல. நடைமுறையிலுள்ள காரியங்கள் இருக்கின்றன; அவைகளைப் பார்த்தவுடனே நீங்கள் வெகுவாய் உணர்ச்சிவசப்பட்டீர்கள், இயேசுவை உங்களால் அடையாளம் காணமுடியவில்லை; எனவே, ஏன் சந்தேகப்பட்டீர்கள் என்ற கண்டனக் குரல் வருகிறது. நடைமுறைச் சூழல்கள் இருக்கிறவாறே இருக்கட்டும், இயேசுவை அடையாளம் கண்டுகொண்டே யிருங்கள், அவர் மீதுள்ள முழு நம்பிக்கையைக் காப்பாற்றுங்கள்.

தேவன் பேசினபோது நீங்கள் ஒரு வினாடிநேரம் விவாதித்தால் எல்லாம் முடிந்துவிட்டது. நல்லது, தேவன் பேசினாரா என்று நான் ஆச்சரியப்படுகிறேன் என்று சொல்ல ஆரம்பிக்காதீர்கள். உடனடியாகத் துணிச்சல்கொள்ளுங்கள், எல்லாவற்றையும் அவர்மீது வைத்துவிடுங்கள். அவருடைய சத்தம் எப்பொழுது வரும் என்று உங்களுக்குத் தெரியாது; ஆனால், தேவனைக்குறித்த உணர்வு நீங்கள் கற்பனை செய்வதிலும் மிகவும் மிருதுவாக வரும்போதெல்லாம், துணிச்சலாகத் துறந்துவிடுங்கள். துறத்தல்மூலமாக மாத்திரமே நீங்கள் அவரை அடையாளம் கண்டு கொள்ளுகிறீர்கள். துணிச்சல்மூலமாக மாத்திரமே அவருடைய சத்தத்தை நீங்கள் கூடுதல் தெளிவாக அறிந்துகொள்வீர்கள்.

உணர்ச்சிமிக்க பக்தியினாலுள்ள சேவை

நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? என் ஆடுகளை மேய்ப்பாயாக. யோவான் 21:16.

உன்னுடைய கொள்கைகளுக்கு மக்களை மனந்திரும்பப்பண்ணு என்று இயேசு கூறாதபடி, என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றே அவர் கூறினார்; அதாவது, என்னைக்குறித்த அறிவில் அவர்கள் உணவூட்டப் படுவதைக் கவனித்துக்கொள் என்றார் அவர். கிறிஸ்தவப் பணிமுறையில் நாம் எவைகளைச் செய்கிறோமோ அவைகளைச் சேவையாகக் கணக்கிடுகி றோம். ஆனால் இயேசுகிறிஸ்துவோ நாம் அவருக்கு என்ன செய்கிறோம் என்பதையல்ல, அவருக்கு நாம் என்னவாயிருக்கிறோம் என்பதையே சேவையென்று அழைக்கிறார். சீஷத்துவம் என்பது ஒரு நம்பிக்கையையோ அல்லது ஒரு சமயக் கோட்பாட்டையோ பின்பற்றுவதையல்ல, அது இயேசு கிறிஸ்துவுக்குக் காண்பிக்கும் பக்தியையே அடிப்படையாகக்கொண்டது. யாதொருவன் என்னிடத்தில் வந்து,.....வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான் என்று அவர் கூறினார்; அதில் எந்தத் தர்க்கமோ நிர்ப்பந்தமோ இல்லை, நீங்கள் என்னுடைய சீஷராயிருக்க விரும்பினால், என்னிடத்தில் பக்தியுள்ளவர்களாயிருக்கவேண்டும் என்றே அவர் கூறினார். தேவனுடைய ஆவியினால் தொடப்பட்ட மனிதன், இப்போது நான் இயேசு யார் என்பதைக் காண்கிறேன் என்று திடீரெனக் கூறுகிறான்; அதுதான் பக்தியின் ஆதாரம்.

இன்று நாம் தனிநபர் விசுவாசத்திற்குப் பதிலாக கோட்பாட்டுக்குரிய விசுவாசத்தை வைத்திருக்கிறோம்; அக்காரணத்தால்தான் அதிகமானோர் கொள்கைகளில் பக்தி காண்பிக்கிறார்கள், மிகச்சிலரே இயேசுகிறிஸ்துவில் பக்தியாயிருக்கிறார்கள். மக்கள் இயேசுவில் பக்தி காண்பிக்க விரும்பாமல், அவர் ஆரம்பித்த கொள்கையிலே பக்தி காண்பிக்கிறார்கள். தோழனாகத் தவிர வேறெந்த முறையிலும் இயேசுகிறிஸ்துவை விரும்பாத இன்றைய அறிவுள்ள மனதுக்கு அவர் ஆழமான இடறுதலின் ஆதாரமாயிருக்கிறார். நம்முடைய ஆண்டவரின் முதல் கீழ்ப்படிதல் மனிதருடைய தேவைகளுக்கு அல்ல, பிதாவின் சித்தத்திற்கே; மனுமக்களின் இரட்சிப்பு அவர் பிதாவுக்குக் கீழ்ப்படிந்ததின் இயற்கையான விளைவு. மனுக்குலத்தின் காரியத்தில் மாத்திரம் நான் ஈடுபாடுகொண்டவனாயிருந்தால் சீக்கிரம் களைத்துப் போவேன், எனது அன்பு தடுமாறும் இடத்திற்கு வந்துவிடுவேன்; ஆனால் நான் இயேசுகிறிஸ்துவை ஆளத்துவமாகவும் உணர்ச்சிபூர்வமாகவும் நேசித்தால், மக்கள் என்னை மிதியடியாக நடத்தினாலும் மனுக்குலத்தைச் சேவிக்க என்னால் முடியும். ஒரு சீஷனுடைய வாழ்க்கையின் இரகசியம் இயேசுகிறிஸ்துவில் வைக்கும் பக்தியே, பிறர் கவனத்தைக் கவராதிருப்பதே அந்த வாழ்க்கையின் தன்மை. அது நிலத்திலே விழுந்து செத்தாலும், சீக்கிரமே முளைத்து முழு நிலப்பரப்பையும் மாற்றியமைக்கிற கோதுமை மணியைப்போன்றது. (யோவான் 12:24 பார்க்க).

"எப்போது" என்பதற்கு இதுவரை வந்திருக்கிறீர்களா?

யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபு 42:10.

சோகமானதும், சுயநலமானதும், ஆரோக்கியமற்ற தன்மை கொண்டதுமான ஜெபத்தை, நான் நேர்மையாயிருக்கவேண்டும் என்ற உறுதியை புதியஏற்பாட்டில் ஒருபோதும் காணமுடியாது. தேவனோடு ஒப்புரவாகும்படி நான் முயற்சிக்கிறேன் என்பது பிராயச்சித்தத்துக்கு எதிராக நான் கலகஞ்செய்கிறேன் என்பதின் அடையாளமே. கர்த்தாவே, நீர் என் ஜெபத்திற்குப் பதிலளித்தால் நான் என் இருதயத்தைச் சுத்திகரிப்பேன்; நீர் எனக்கு உதவிசெய்தால் நான் நேர்மையாக நடப்பேன் என்று நாம் கூறுகிறோம். நானே என்னைத் தேவனோடு ஒப்புரவாக்கமுடியாது, நானே என் வாழ்க்கையைப் பூரணப்படுத்தவும் முடியாது; கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிராயச்சித்தத்தை நான் சுத்தத் தானமாக ஏற்றுக்கொள்ளும் போதுமாத்திரமே தேவனோடு ஒப்புரவாகமுடியும். அதை ஏற்றுக்கொள்ளத் தக்கதாக நான் தாழ்மையுள்ளவன்தானா? எல்லாவித உரிமைகளையும் நான் துறக்கவேண்டும், எல்லா முயற்சிகளையும் நான் நிறுத்தவேண்டும், என்னை முழுவதும் அவருடைய கரங்களில்மாத்திரம் ஒப்படைக்கவேண்டும்; அதன்பின், விண்ணப்பமாகிய ஆசாரிய ஊழியத்தில் கட்டுப்பாடில்லாதபடி ஈடுபடவேண்டும். பிராயச்சித்தத்தில் உண்மையாய் நம்பிக்கைவைக்காதவர் களிலிருந்து எழும்புகிற ஏராளம் ஜெபம் உண்டு. இயேசு நம்மை இரட்சிக்க ஆரம்பிக்கவில்லை, அவர் இரட்சித்துவிட்டார், அக்காரியம் நிறைவேற்றப்பட் டாயிற்று; அதைச் செய்யும்படி அவரிடம் கேட்பது அவருக்கு அவமானம்.

நூறுமடங்கு பலனை நீங்கள் பெற்றுக்கொள்ளவில்லையானால், தேவவசனத்தின் ஆழமான சத்தியத்தை அறியமுடியவில்லையானால், உங்கள் நண்பர்களுக்காக ஜெபிக்க ஆரம்பியுங்கள், அந்தரங்கத் திருப் பணியில் பிரவேசியுங்கள். யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்த போது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். இரட்சிக்கப்பட்ட ஒரு ஆத்துமாவாக, உங்கள் வாழ்க்கையின் உண்மையான கடமை மன்றாட்டு ஜெபமே. சூழ்நிலைகளில் ஆண்டவர் உங்களை எங்கெங்கு வைத்தாலும் உடனே நீங்கள் ஜெபியுங்கள், அவருடைய பிராயச்சித்தம் உங்களுடைய வாழ்க்கையில் நிறைவேறியதுபோல, பிறர் வாழ்க்கைகளிலும் நிறைவேற ஜெபியுங்கள். உங்கள் நண்பர்களுக்காக இப்போதே ஜெபியுங்கள்; நீங்கள் சந்திக்கிறவர்களுக்காக இப்போதே ஜெபியுங்கள்.

அந்தரங்கத்தின் ஊழியம்

நீங்களோ, ராஜரீகமான ஆசாரியக்கூட்டம். 1 பேதுரு 2:9.

நாம் எந்த உரிமையில் ராஜரீக ஆசாரியக்கூட்டமாகிறோம்? பிராயச்சித்தத்தின் உரிமையிலேயே அவ்வாறாகிறோம். உறுதியாக நம்மை நாம் ஒதுக்கிவைத்துவிட்டு, ஜெபமாகிய ஆசாரிய ஊழியத்தைத் தொடங்க ஆயத்தமாயிருக்கிறோமா? நாம் எவ்வாறு இருக்கவேண்டுமோ அவ்வாறு இருக்கிறோமா என்று பார்க்க உட்புறத்தில் தொடர்ந்து கிளறிக்கொண்டே யிருப்பது, ஒரு தேவபிள்ளையின் திடமானதும் எளியதுமான வாழ்க்கையை அல்ல, தன்நலம் கருதுகிறதும் ஆரோக்கியமற்றதுமான கிறிஸ்தவத்தையே தோற்றுவிக்கிறது. தேவனோடுள்ள சரியான உறவுக்கு நாம் வரும்வரை மயிரிழையில் தொங்கிக்கொண்டிருக்கும் நிலையே--ஆயினும், எவ்வளவு அற்புதமான வெற்றியை நான் பெற்றிருக்கிறேன் என்று சொல்லுகிறோம். அதில் மீட்பின் அற்புதத்தைச் சுட்டிக்காட்டுவதற்கு ஒன்றுமில்லை. மீட்பு பூரணமாயிற்று என்ற துணிவுள்ள விசுவாசத்தோடு புறப்படுச்செல்லுங்கள், அதன்பின் உங்களைக்குறித்து ஒருபோதும் கவலைப்படாதீர்கள்; ஆனால், இயேசுகிறிஸ்து கூறியதுபோலச் செய்ய ஆரம்பியுங்கள்--பாதிராத்திரியில் உங்களிடம் வருகிற நண்பருக்காக ஜெபியுங்கள்; பரிசுத்தவான்களுக்காக ஜெபியுங்கள், சகல மனிதருக்காகவும் ஜெபியுங்கள். கர்த்தாவே, என்னால் இயன்றதைச் செய்துவிட்டேன், தயவாக என்னைக் கேட்டருளும் என்ற வேண்டுதலின் அடிப்படையில் அல்ல, கிறிஸ்து இயேசுவுக்குள் மாத்திரமே நீங்கள் பூரணமானவர்கள் என்ற உணர்வின் அடிப்படையில் ஜெபியுங்கள்.

நம்மைக்குறித்தே சிந்திக்கிற ஆரோக்கியமற்ற பழக்கத்திலிருந்து நம்மை விடுவிக்க தேவன் எவ்வளவு காலம் எடுக்கப்போகிறாரோ? நம்மைக் குறித்து தேவன் நம்மிடம் சொல்லக்கூடிய எவைகளைக்குறித்தும் நாம் ஒருபோதும் ஆச்சரியப்படாததுவரை நம்மைப்பற்றி நாம் வெறுப்புணர்ச்சி கொள்ளவேண்டும். நம்மிலுள்ள இழிவின் ஆழங்களைத் தொட நம்மால் கூடாது. ஒரேயொரு இடத்தில் மாத்திரமே நாம் சரியானவர்களாயிருக்கி றோம், அது கிறிஸ்து இயேசுவுக்குள் மாத்திரமே. நாம் அங்கு இருக்கும் போது, அந்தரங்க ஊழியமாகிய மன்றாட்டு ஜெபத்தில் நம்முடைய முழுத் தகுதியோடும் நம்மை ஊற்றிவிடவேண்டும்.

மாறுபடாத சோதனை

நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும். மத்.7:2.

இந்த அறிக்கைத் தற்செயலான ஊகமல்ல, இது தேவனுடைய நித்திய பிரமாணம். நீங்கள் கொடுக்கிற தீர்ப்பு எதுவாயினும், அதுவே மறுபடியும் உங்களுக்கு அளந்து கொடுக்கப்படும். பதிலுக்குப்பதில் செய்வதற்கும் கைம்மாறு செய்வதற்குமிடையே வித்தியாசமுண்டு. கைம்மாறு செய்வதே வாழ்க்கையின் அடிப்படை என்று இயேசு கூறினார்--நீங்கள் அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும். பிறரிலுள்ள குறைகளைக் கண்டுபிடிப்பதில் நீங்கள் நுட்பமாய் இருப்பீர்களானால் துல்லியமாக அந்த அளவுதான் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்பதை நினைத்துக்கொள்ளுங்கள். விதைக்கிறதை அறுக்கிறதே வாழ்க்கைத் தத்துவம். இந்தச் சட்டம் தேவனுடைய சிங்காசனத்திலிருந்து கீழ்நோக்கிச் செயல்படுகிறது (சங்.18:25,26)

ரோமர் 2 இதைக்குறித்துச் சற்றுகூடத் திட்டமாக விளக்குகிறது; மற்றவர்களைக் குற்றஞ்சாட்டுகிறவர்கள் அதே குற்றத்தைச் செய்கிறார்கள் என்று அங்குக் கூறப்பட்டுள்ளது. தேவன் கிரியையை மாத்திரமல்ல, அதன் சாத்தியத்தையும் பார்க்கிறார். ஆரம்பத்தில் நாம் வேதத்தின் கூற்றுக்களை விசுவாசிக்கிறதில்லை. எடுத்துக்காட்டாக, மற்றவர்களில் கண்டனஞ்செய்கிற அதே காரியங்களில் நாமும் குற்றமுள்ளவர்கள் என்று கூறப்பட்டுள்ளதை நம்புகிறோமா? பிறரில் மாய்மாலம், மோசடி மற்றும் போலித்தனத்தை நாம் காண்பதின் காரணம் அவைகளெல்லாம் நமது இருதயங்களில் இருப்பதே. ஒரு பரிசுத்தவானுடைய பெரிய சிறப்புப் பண்பு தாழ்மையே--தேவனுடைய கிருபை இல்லாதிருந்தால் பிறரில் நான் காணும் குற்றங்கள் மாத்திரமல்ல, வேறு தீமைகளும் என்னில் வெளிப்பட்டிருக்கும்; எனவே, நியாயந்தீர்க்க எனக்கு உரிமையில்லை என்று அவர் கூறுவார்.

நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள் என்று இயேசு சொன்னார், நீங்கள் நியாயந்தீர்ப்பீர்களானால் நீங்கள் நியாயந்தீர்த்ததுபோலத் துல்லியமாக உங்களுக்கு அளக்கப்படும். என் தேவனே, என்னுடைய சகமனிதரை நான் நியாயந்தீர்த்ததுபோல எனக்கும் தீர்ப்பளியும் என்று நம்மில் தேவனுக்குமுன்பாக நின்று கூறத் துணிந்தவர் யார்? நமது சகமனிதரைப் பாவிகளென்று நாம் தீர்ப்பளித்துவிட்டோம்; தேவன் அவ்வாறு நம்மைத் நியாயந்தீர்ப்பாரேயாகில் நாம் நரகத்திலிருப்போம். இயேசுகிறிஸ்துவின் அற்புதமான பிராயச்சித்தத்தினூடே தேவன் நம்மை நியாயந்தீர்க்கிறார்.

பாடு அனுபவித்தல்

(அவர்) துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாயிருந்தார். ஏசா.53:3.

அவர் துக்கத்தோடு பழக்கமுள்ளவராயிருந்தார் என்று ஆங்கில மொழிபெயர்ப்பில் இருக்கிறது. நம்முடைய ஆண்டவர் துக்கத்தோடு பழகிய முறையில் நாம் யாரும் பழகுகிறதில்லை; அதை நாம் சகிக்கிறோம், அதின் வழியே கடந்துசெல்லுகிறோம்; ஆனால், அதோடு நாம் நெருங்கிய உறவுகொள்வதில்லை. பாவமாகிய உண்மையை வாழ்வின் ஆரம்பத்தில் நாம் ஒத்துக்கொள்ளுவதில்லை. வாழ்க்கையைக்குறித்துப் பகுத்தறிவுக்குரிய பார்வைகொண்டவர்களாய், ஒரு மனிதன் தன்னுடைய புலன்களை அடக்குவதின்மூலமும், கல்வியறிவுப் பெற்றுக்கொள்வதின்மூலமும் தேவனுடைய வாழ்க்கையாக மெதுவாக விருத்தியடையக்கூடிய ஒரு வாழ்க்கையை நம்மில் உருவாக்கமுடியும் என்று கூறுகிறோம். ஆனால், நாம் தொடர்ந்து வாழும்போது, நாம் கருத்தில் எடுக்காத ஒன்றின் பிரசன்னத்தை நம்மில் உணருகிறோம், அது பாவம்; அது நமது கணக்குக்கூட்டல்களையெல்லாம் கவிழ்த்துவிடுகிறது. பாவம் கட்டுப்பாடற்றதும் அறிவுக்குமாறானதுமான காரியங்களின் அடிப்படையாயிருக்கிறது.

பாவம் என்பது ஒரு உண்மை, அது ஒரு குறைபாடல்ல என்பதை நாம் ஒத்துக்கொள்ளவேண்டும்; பாவம் தேவனுக்கு விரோதமான பகிரங்கக் கலகம். என்னுடைய வாழ்க்கையில் ஒன்றில் தேவன் அல்லது பாவம் மரித்தேயாகவேண்டும். புதிய ஏற்பாடு இந்த ஒரே தீர்வுக்குநேராக நம்மைக் கொண்டுவருகிறது. பாவம் என்னில் ஆளுகைசெய்தால், என்னிலுள்ள தேவனுடைய ஜீவன் மரிக்கும்; தேவன் என்னில் ஆளுகைசெய்தால், என்னிலுள்ள பாவம் மரிக்கும். அதுதவிர வேறொரு சாத்தியமான முடிவு இல்லை. இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைந்ததே பாவத்தின் உச்சக் கட்டம்; பூமியில் வாழ்ந்த தேவனுடைய வரலாற்றில் எது உண்மையாயிருந்ததோ, அது உங்கள் வரலாற்றிலும் என் வரலாற்றிலும் உண்மையாய் இருக்கும். இயேசுகிறிஸ்து ஏன் வந்தார் என்பதற்குரிய ஒரே விளக்கமும், வாழ்க்கையின் பாடுகள் மற்றும் துக்கங்களுக்குரிய விளக்கமும் பாவம் மட்டுமே என்னும் உண்மையை மனதில் நாம் ஒத்துக்கொள்ளவேண்டும்.

பாவம் உண்மை என்பதை ஒத்துக்கொள்ளல்

இதுவோ உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது. லூக்கா 22:53.

பாவம் என்பது உண்மை என்பதை ஒத்துக்கொள்ளாதிருப்பது வாழ்க்கையில் எல்லா நாசங்களையும் உண்டாக்குகிறது. மனித இயற்கையின் பெருந்தன்மையைக்குறித்து நீங்கள் பேசலாம்; ஆனால், உங்கள் ஒவ்வொரு இலட்சியத்துக்கு எதிராகவும் எள்ளிநகையாடும் ஏதோவொன்று மனித இயற்கையில் உண்டு. மனுக்குலத்தில் முற்றும் வெறுப்புக்குரியதும் தவறுமான தீயொழுக்கம், தன்னலம் போன்றவை இருக்கின்றன என்னும் உண்மையை ஒத்துக்கொள்ள மறுத்தால், அந்த உண்மை உங்கள் வாழ்க்கையைத் தாக்கும்போது அதை ஒத்துக்கொள்வதற்குப்பதில், அதோடு சமரசப்பட்டு, அதற்கெதிராகப் போராடுவதில் பயனில்லை என்று கூறுவீர்கள். இந்த வேளைக்காகவும் அந்தகாரத்தின் வல்லமைக்காகவும் போக்குச் சொல்லுகிறீர்களா? அல்லது பாவத்தைக்குறித்த உணர்வற்று உங்களை எண்ணுகிறீர்களா? உங்களுடைய மானிட உறவுகளிலும் நட்புகளிலும் பாவம் உண்டென்னும் உண்மையை ஒப்புக்கொள்ளுகிறீர்களா? இல்லையென்றால், வெகுசீக்கிரம் அதில் அகப்பட்டுக்கொள்வீர்கள், நீங்கள் அதோடு சமரசமாவீர்கள். ஆனால், பாவத்தைக்குறித்த உண்மையை ஒத்துக்கொள்வீர்களேயானால், உடனே ஆபத்தை உணர்ந்தவர்களாய், ஆம், அந்தப் பாவத்தால் என்ன ஆகும் என்பதைக் காண்கிறேன் என்று கூறுவீர்கள். பாவத்தை ஒப்புக்கொள்வது நட்புறவின் அடித்தளத்தை அழிக்காது; அதற்குப்பதில், பாவ வாழ்க்கையின் அடிப்படை துன்பமானது என்ற உண்மையினால், அது பரஸ்பர மதிப்பை நிலைநாட்டுகிறது. பாவம் உண்டு என்கிற உண்மையை அங்கீகரிக்காத வாழ்க்கையை மதிப்பிடுவதில் எப்போதும் ஜாக்கிரதையாயிருங்கள்.

இயேசுகிறிஸ்து ஒருபோதும் மனிதத் தன்மையை நம்பினதில்லை; ஆயினும், அவர் ஒருபோதும் குறைகாணவுமில்லை, சந்தேகங்கொள்ளவுமில்லை; ஏனெனில், மனித இயற்கைக்கு அவரால் என்ன செய்யக்கூடும் என்பதில் அவர் முற்றிலும் நம்பிக்கை வைத்தார். அறிவிலியானவர்களல்ல, தூய்மையான ஆண்களும் பெண்களுந்தான் பாதுகாக்கப்பட்டவர்கள். அறிவிலியான ஒரு ஆணோடோ பெண்ணோடோ நீங்கள் ஒருபோதும் பத்திரமாய் இருக்கமுடியாது. ஆணும் பெண்ணும் அறிவிலிகளாய் இருக்கக்கூடாது; அவர்கள் தூய்மையும் நல்லொழுக்கமும் உள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். அறிவிலியான தன்மை குழந்தைகளுக்குரிய இயல்பு; ஒரு ஆணோ அல்லது பெண்ணோ பாவம் என்னும் உண்மையை ஒத்துக்கொள்ளாதிருப்பது கண்டிக்கத்தக்கதே.

துக்கமாகிய நெருப்பில் தன்னையே வரவேற்றல்

நான் என்ன சொல்லுவேன்? பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ; ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன், பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும். யோவான் 12:27,28.

பரிசுத்தவானாக, துக்கத்துக்கும் துன்பத்துக்கும்நேரான என் மனநிலை, அவைகள் தடுக்கப்படவேண்டும் என்று ஜெபிப்பதல்ல, நான் எவ்வாறு இருக்கும்படி தேவன் படைத்தாரோ அந்தத் தனித்தன்மையை நான் ஒவ்வொரு துக்கமாகிய நெருப்பினூடேயும் பாதுகாக்கவேண்டுமன்று வேண்டுதல்செய்வதே. நமது ஆண்டவர் துக்கமாகிய நெருப்பில் தம்மைத் தயார்செய்தார்; அப்போது, அவர் அந்த வேளையிலிருந்து விடுவிக்கப் படாமல், அந்த வேளையினூடேயே பாதுகாக்கப்பட்டார்.

துக்கம் கட்டாயம் இருக்கக்கூடாதன்று நாம் கூறுகிறோம், ஆனால், துக்கம் இருக்கத்தான் செய்கிறது; அதின் நெருப்பில் நம்மை நாம் தயார் செய்தேயாகவேண்டும். நாம் முயற்சித்துத் துக்கத்தைத் தவிர்ப்போமானால், அதைக்குறித்து நடபடிக்கை எடுக்க நாம் மறுப்போமானால் நாம் மதிகெட்ட வர்கள். துக்கம் வாழ்க்கையின் மிகப்பெரிய உண்மைகளில் ஒன்று; துக்கம் இருக்கக்கூடாது என்று சொல்வதில் பயனில்லை. பாவம், துக்கம் மற்றும் துன்பம் என்பவை இருக்கத்தான் செய்கின்றன; அவற்றை அனுமதித்ததில் தேவன் தவறு செய்திருக்கிறார் என்று நாம் கூறக்கூடாது.

துக்கம் ஒரு மனிதனில் மேலாம்பரமான தன்மையை அதிக அளவு எரித்துப்போடுகிறது, ஆனால் அது எப்போதும் ஒரு மனிதனை முன்புவிட நல்லவன் ஆக்குவதில்லை. துன்பம் ஒன்றில் என் தனித்தன்மையை எனக்குத் தரும், அல்லது என் தனித்தன்மையை அழிக்கும். வெற்றியில் உங்கள் தனித்தன்மையை நீங்கள் பெற்றுக்கொள்ளமுடியாது, அப்போது உங்களுக்குத் தலைக்கனம் உண்டாகும்; சோர்பான நிலையில் உங்கள் தனித்தன்மையை நீங்கள் பெற்றுக்கொள்ளமுடியாது, நீங்கள் பராதுசொல் வீர்கள். உங்களை நீங்கள் கண்டுகொள்ளும் வழி துக்கமாகிய நெருப்பில் தான். அது ஏன் அவ்வாறு இருக்கவேண்டும் என்பது வேறு காரியம்; ஆனால், அது அவ்வாறுதான் என்பது வேதவாக்கியங்களிலும் மனித அனுபவங்களிலும் உண்மையாயிருக்கின்றன. துக்கமாகிய நெருப்பினூடே கடந்துசென்று, தன்னைத் தயார்படுத்திக்கொண்ட மனிதரை உங்களுக்கு எப்போதும் அறியமுடியும்; பிரச்சனைகளில் அவரிடம் செல்லலாம் என்பது நிச்சயம், உங்களோடு செலவிடப் போதுமான ஓய்வுநேரம் அவருக்கு உண்டு என்பதைக் கண்டுகொள்வீர்கள். துக்கமாகிய நெருப்பினூடே ஒரு மனிதர் கடந்துசென்றிராவிட்டால் அவர் இறுமாப்புடையவராயிருக்கலாம், உங்களோடு செலவிட அவருக்கு நேரம் இல்லை. துக்கமாகிய நெருப்பில் உங்களை நீங்கள் தயார்படுத்துவீர்களானால் தேவன் உங்களை மற்ற மக்களுக்கு ஊட்ட உணவு ஆக்குவார்.

எப்போதும் இப்போது

தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு . . . நாங்கள் உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம். 2 கொரி.6:1.

நேற்றையதினம் நீங்கள் பெற்ற கிருபை இன்றைக்குப் போதாது. தேவனுடைய நிரம்பிவழியும் இரக்கமே கிருபை; நீங்கள் மொண்டுகொள்ள அது அங்கிருக்கிறது என்று எப்போதும் நீங்கள் கணக்கிடலாம். மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலுந்தான் பொறுமைக்குரிய சோதனை வருகிறது. அந்தச் சோதனையில் நீங்கள் தேவனுடைய கிருபையைத் தோல்வி அடையச்செய்கிறீர்களா? ஓகோ, சரி, இந்த வேளையை நான் கணக்கில் எடுக்கமாட்டேன் என்று சொல்லுகிறீர்களா? தேவன் உங்களுக்கு உதவி செய்யும்படி ஜெபிப்பதும் வேண்டுதல் செய்வதுமல்ல நாம் சிந்திக்கவேண்டிய பொருள்; நாம் இப்போதே தேவனுடைய கிருபையை எடுத்துக்கொள்ளுகிறோமா என்பதே முக்கியம். ஜெபத்தை நாம் ஊழியத்திற்கு ஆயத்தமாகக் கருதுகிறோம், வேதபுத்தகத்தில் ஒருபோதும் அப்படியில்லை. தேவனுடைய கிருபையின் ஆதாரத்திலிருந்து நாம் எடுத்துக்கொள்ளும் பயிற்சியே ஜெபமாகும். நான் வெளியேறி ஜெபிக்கும்வரை இதைச் சகித்துக்கொள்வேன் என்று சொல்லாதீர்கள். இப்போது ஜெபியுங்கள்; தேவையின் வேளையில் தேவகிருபையை எடுத்துக்கொள்ளுங்கள். ஜெபம் மிகவும் நடைமுறைக்குரிய காரியம்; அது பக்தியின் அனிச்சைச் செயல் அல்ல. தேவனுடைய கிருபையிலிருந்து மொண்டுகொள்ளக் கற்றுக்கொள்ளும் இறுதிக் காரியமே ஜெபமாகும்.

அடிகள், காவல்கள், கலகங்கள், பிரயாசங்கள்--இந்த எல்லா அனுபவங்களிலும் தேவனுடைய கிருபையை மொண்டுகொள்வதை நீங்கள் வெளிப்படுத்துங்கள்; அது, உங்களை உங்களுக்கும் பிறருக்கும் அதிசயம் ஆக்கும். எப்பொழுதாவது அல்ல, இப்பொழுதே பெற்றுக்கொள்ளுங்கள். ஆவிக்குரிய சொற்றொகுதியில் ஒரே வார்த்தை இப்பொழுது என்பதே. சூழ்நிலைகள் உங்களை அவைகளுக்குச் சித்தமான இடங்களுக்குக் கொண்டுசெல்லட்டும்; நீங்கள் எந்த நிலையில் இருந்தாலும் தேவனுடைய கிருபையைத் தொடர்ந்து மொண்டுகொள்ளுங்கள். நீங்கள் தேவனுடைய கிருபையை மொண்டுகொண்டிருக்கிறீர்கள் என்பதின் மிகப்பெரிய தெளிவுகளில் ஒன்று நீங்கள் இழிவுபடுத்தப்படும்போதும் அவருடைய கிருபையைத் தவிர வேறெதையும் சிறிதளவுகூட வெளிப்படுத்தாமலிருப்பதே.

ஒன்றுமில்லாதவர்கள்--எதையும் ஒருபோதும் சேமித்துவைக்க வேண்டாம். உங்களிடமிருக்கிற சிறந்தவற்றை ஊற்றிவிடுங்கள், எப்போதும் தரித்திரராயிருங்கள். தேவன் கொடுக்கிற செல்வத்தைக்குறித்து ஒருபோதும் சாமர்த்தியத்தோடும் கருதலோடும் இடைபடாதீர்கள். அதுதான் வெற்றியுள்ள தரித்திரம்.

நிழலிடும் தனிநபர் விடுதலை

உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன். எரே.1:8.

தேவன்தாமே எரேமியாவைப் பாதுகாப்பதாக வாக்களித்தார்--உன் பிராணனை உனக்குக் கிடைக்கும் கொள்ளைப்பொருளாகத் தருகிறேன் என்று கூறினார். இதை மாத்திரமே தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு வாக்களிக்கிறார். தேவன் நம்மை அனுப்புகிற இடத்திலெல்லாம் அவர் நம்முடைய பிராணனைப் பாதுகாப்பார். நம்முடைய சொந்தச் சொத்தும் சுதந்தரங்களும் அக்கறைக்குரிய காரியங்களல்ல, இவை எல்லாக் காரியங் களையும் நாம் அலட்சியப்படுத்தவேண்டும்; நாம் அவ்வாறு செய்யவில்லை யென்றால் பேரச்சமும் துயரமும் வேதனையுமே உண்டாகும். இதுதான் நிழலிடும் தனிநபர் விடுதலையின் ஆன்மீகநிலையாகும்.

இயேசுகிறிஸ்துவின் தூதை எடுத்துச்செல்லும்போது, நமது காரி யங்களுக்காகப் போராட நமக்கு நேரமில்லை என்று மலைப்பிரசங்கம் குறிப்பிடுகிறது. உங்களுக்கு நீதி நடத்தப்படுகிறதா இல்லையா என்பதைக் குறித்து நீங்கள் கவலைப்படக்கூடாது என்பதே இயேசு கூறியதின் கருத்து. நீதியைத் தேடுவது அவருக்குநேரான பக்தியிலிருந்து திசை திரும்பும் அடையாளமாகும். இந்த உலகத்தில் ஒருபோதும் நீதியைத் தேடக்கூடாது; ஆனால், பிறரை நீதியோடு நடத்துவதை நிறுத்தவுங்கூடாது. நீதிக்காக நாம் எதிர்பார்ப்போமானால், அது கிடைக்காதபோது, நான் ஏன் இவ்வாறு நடத்தப்படவேண்டும் என்று முணுமுணுக்க ஆரம்பித்து, சுயபச்சாதாபமாம் அதிருப்திக்கு இடங்கொடுப்போம். இயேசுகிறிஸ்துவுக்கு நாம் உண்மை யுள்ளவர்களானால், நாம் சந்திக்கிறது நீதியோ, அநீதியோ எதுவாயிருந் தாலும் அதோடு நமக்கு எந்தத் தொடர்புமில்லை. நீங்கள் எதைச் செய்ய வேண்டுமென்று நான் உங்களுக்குச் சொன்னேனோ அதை நிதானமாய்ச் செய்யுங்கள், அப்போது நான் உங்கள் ஜீவனைப் பாதுகாப்பேன்; நீங்களே அதைக் காப்பாற்ற முயற்சித்தால், என்னுடைய விடுவிப்பிலிருந்து நீங்கள் உங்களை அகற்றிவிடுகிறீர்கள் என்று இயேசு சொல்லுகிறார். நம்மில் மிகவும் பக்தியுள்ளவர்களும் இந்தத் தொடர்பில் நாத்திகக் கொள்கை உடையவர்களாகிறோம்; நாம் தேவனை நம்புவதில்லை, நாம் பகுத்தறிவை சிங்காசனத்தில் ஏற்றி, அதற்கு தேவனுடைய நாமத்தைச் சூட்டுகிறோம். நம்முடைய முழு இருதயத்தோடும் தேவனை நம்புவதற்குப்பதில், நமது சொந்த புத்தியைச் சார்ந்து வாழுகிறோம்.

தேவனால் பிடிக்கப்படல்

நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி.. பிலிப்.3:12.

ஊழியர்களாகும்படி ஒருபோதும் தெரிந்துகொள்ளவேண்டாம்; ஆனால், எப்போதாவது தேவனுடைய அழைப்பு உங்களுக்கு வந்தபின் நீங்கள் வலதுபுறமோ இடதுபுறமோ சாய்வீர்களானால் உங்களுக்கு ஐயோ! நாம் தெரிந்துகொண்டதினால் தேவனுக்காக உழைக்கும்படி இங்கில்லை, அவரால் நாம் பிடிக்கப்பட்டபடியினால் தேவனுக்காக உழைக்கும்படி நாம் இங்கிருக்கிறோம். நான் இதற்குப் பொருத்தமற்றவன் என்ற எண்ணத்திற்கு ஒருபோதும் இடமில்லை. நீங்கள் எதைப் போதிக்கவேண்டுமோ அது உங்கள் இயற்கை விருப்பத்தினாலல்ல, தேவனாலே தீர்மானிக்கப்படுகிறது. உங்கள் ஆத்துமாவைத் தேவனோடுள்ள நிலையான உறவில் காத்துக் கொள்ளுங்கள்; நீங்கள் சாட்சி மாத்திரம் கூறுவதற்கல்ல, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை மறவாதிருங்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் சாட்சிகூறவேண்டும்; ஆனால், போதிப்பதற்கான அழைப்பைப்பொறுத்தமட்டிலும், தேவனுடைய கரம் உங்களை வலுவாகப் பிடிக்கவேண்டும். அந்த ஒரு காரியத்திற்காகவே, உங்களுடைய வாழ்க்கை தேவனுடைய பிடியிலிருக்கிறது. நம்மில் எத்தனைபேர் இவ்வாறு பிடிக்கப் பட்டிருக்கிறோம்?

தேவனுடைய வசனத்தை ஒருபோதும் கலப்படமாக்காதீர்கள், கலப்பற்ற கண்டிப்போடு அதைப் பிரசங்கியுங்கள். தேவனுடைய வசனத் துக்குத் தயக்கமில்லாத பக்தி காண்பிக்கவேண்டும்; ஆனால், உங்கள் சகமனிதரோடு நேரடியாக இடைபடும்போது, நீங்கள் யாரென்பதை நினைத் துக்கொள்ளுங்கள்--நீங்கள் பரலோகத்தில் படைக்கப்பட்ட சிறப்புப் பிராணி அல்ல, கிருபையினால் இரட்சிக்கப்பட்ட ஒரு பாவி.

அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன்...

கட்டுப்பாட்டின் நோக்கம்

உன் வலதுகை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும். மத்.5:30.

எல்லோரும் வலது கரங்களை வெட்டவேண்டுமென்று இயேசு கூறவில்லை; ஆனால், என்னோடுள்ள சஞ்சரிப்புக்கு உங்கள் வலதுகை இடறுதலாயிருந்தால் அதைத் தறித்துப்போடுங்கள் என்றே கூறினார். முற்றிலும் நேர்மையான பல காரியங்கள் உண்டு; ஆனால், தேவனிலே கவனத்தை ஒருமுகப்படுத்துவீர்களானால் அவைகளை நீங்கள் செய்யக் கூடாது. உங்களுடைய வலதுகரம் உங்களுக்கு இருக்கிற மிகவும் சிறந்த காரியங்களில் ஒன்று; ஆயினும், அவருடைய கட்டளைகளைப் பின்பற்ற அது தடையாயிருக்குமானால், அதைத் தறித்துப்போடுங்கள் என்று இயேசு கூறினார். இந்தக் கட்டுப்பாட்டின் முறையே மனுக்குலத்தை எக்காலத்திலும் பாதித்தவைகளில் மிகவும் கண்டிப்பானது.

மறுபிறப்பின்மூலம் ஒரு மனிதனைத் தேவன் மாற்றும்போது, ஆரம்பத்தில் அந்த வாழ்க்கையின் இயல்பு அது முடமாக்கப்படுகிறது என்பதே. உங்களுக்கும், உங்களை அறிந்திருக்கிற உலகத்தின் பார்வையிலும், வலதுகைபோலவோ கண்போலவோ உள்ள நூற்றுக்கணக்கான காரியங்களை நீங்கள் செய்யத் துணியாதிருக்கலாம்; அதில் என்ன தவறு இருக்கிறது? எவ்வளவு அபத்தமானவன் நீ? என்று ஆவிக்குரியவனல்லாத மனிதன் கூறுவான். ஆரம்பத்தில் முடமாக்கப்பட்ட வாழ்க்கை செய்யாத ஒரு பரிசுத்தவானும் எக்காலத்திலும் இதுவரை இருந்ததில்லை. ஆனால், மனிதர் பார்வையில் அழகும் தேவனுடைய பார்வையில் முடமும் உள்ளவர்களாயிருப்பதைவிட, தேவனுடைய பார்வையில் முடமும் அழகுமுள்ளவர்களாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது மிகவும் நல்லது. மற்ற எல்லாருக்கும் முற்றும் சரியாயிருந்தாலும் உங்களுக்குச் சரியாய்த் தோன்றாத அநேகக் காரியங்களைச் செய்யாதபடிக்கு ஆரம்பத்தில் இயேசுகிறிஸ்து ஆவியான வர்மூலம் உங்களைத் தடுத்தாகவேண்டும். வேறு ஒருவரை விமர்சனம் செய்வதற்கு உங்களுடைய வரையறைகளைப் பயன்படுத்தாதபடிக்குப் பார்த்துக்கொள்ளுங்கள்.

ஆரம்பமாக வாழ்க்கை முடமாக்கப்படுகிறது; ஆனால், பூரணமாக முழுநிறைவான வாழ்க்கையின் சித்திரத்தை இயேசு வச.48-ல் தருகிறார்: பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்.

இப்போதே செய்யுங்கள்

உன் எதிராளியோடு சீக்கிரமாய் நல்மனம் பொருந்து. மத்.5:25.

இயேசுகிறிஸ்து இந்தக் கொள்கையைக் குறிப்பிடுகிறார்--நீங்கள் செய்யவேண்டுமென்று எதை அறிகிறீர்களோ அதை இப்போதே செய்யுங்கள், அதைச் சீக்கிரமாய் செய்யுங்கள்; நீங்கள் செய்யாவிட்டால் தவிர்க்க முடியாத நடவடிக்கைச் செயல்பட ஆரம்பிக்கும்; நோவு மற்றும் வேதனை மற்றும் துன்பங்களில் நீங்கள் ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத்தீர்க்க வேண்டும். தேவனுடைய பிரமாணங்கள் மாறாதவை; அவைகளிலிருந்து தப்பமுடியாது. நாம் படைக்கப்பட்டிருக்கிற நிலைக்குநேராக இயேசுவின் போதனைகள் ஊடுருவிச்செல்கின்றன.

என் எதிராளி என்னுடைய உரிமைகளை எனக்குக் கொடுக்கும்படி நான் கவனித்துக்கொள்ளுவது இயற்கையே; ஆனால், என் எதிராளிக்கு நான் கடன்பட்டிருப்பதைக் கொடுப்பது எனக்கு நித்தியத்துக்கு அவசரமான முக்கியக் காரியம் என்று இயேசு கூறினார். நம்முடைய ஆண்டவரின் பார்வையில் நான் வஞ்சிக்கப்படுகிறேனா இல்லையா என்பது முக்கியமல்ல; நான் வஞ்சிக்கக்கூடாதென்பதே முக்கியம். என்னுடைய உரிமைகளுக்காக வற்புறுத்துகிறேனா? அல்லது இயேசுகிறிஸ்துவின் கண்ணோட்டத்தில் நான் கடன்பட்டிருக்கிறதைக் கொடுக்கிறேனா?

செய்யவேண்டியதைச் சீக்கிரம் செய்யுங்கள், உங்களை இப்போதே தீர்ப்புக்குக் கொண்டுவாருங்கள். அறநெறி மற்றும் ஆவிக்குரிய காரியங்களில் நீங்கள் உடனடிச் செயலாற்றவேண்டும்; நீங்கள் செய்யாவிட்டால் தவிர்க்கமுடியாத நடைமுறை செயல்பட ஆரம்பிக்கும். தம்முடைய பிள்ளை சொரியும் உறைமழையைப்போல தூய்மையாயும், சுத்தமாயும், வெண்மையாயும் இருக்கவேண்டுமென்று தேவன் தீர்மானித்திருக்கிறார்; அவருடைய போதனைகளில் எந்தக் காரியத்திலாவது கீழ்ப்படியாமை காண்பிக்கும்வரை, அவருடைய ஆவியின் எந்தச் செயலையும் அவர் தடைசெய்யமாட்டார். நாம்தான் சரி என்று நிரூபிக்க நாம் சாதிப்பது கீழ்ப்படியாமை இருக்கிறதென்பதற்கு ஏறக்குறைய எப்போதும் அடையாளமாகும். நாம் ஒளியில் உறுதியாக இருக்கவேண்டும் என்று ஆவியானவர் ஆணித்தரமாய் வற்புறுத்துகிறதில் வியப்பொன்றுமில்லை.

உன் எதிராளியோடு சீக்கிரமாய் நல்மனம் பொருந்து. ஏதாவது உறவில் ஏற்பட்ட நெருக்கடியை நீங்கள் சந்தித்தபோது, உங்கள் இருதயத்தில் கோபம் உண்டாயிருந்தது என்பதைக் கண்டறிந்திருக்கிறீர்களா? சீக்கிரமாய் அதை அறிக்கைசெய்யுங்கள். தேவனுக்கு முன்பாக சீக்கிரமாய் அதைச் சீர்ப்படுத்துங்கள், அந்த நபரோடு ஒப்புரவாகுங்கள்--இப்போதே அதைச் செய்யுங்கள்.

தவிர்க்கமுடியாத தண்டனை

நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மத்.5:26.

சிறிதளவு நரகமுள்ள பரலோகம் இருக்கமுடியாது. உங்களைத் தூய்மையும் பரிசுத்தமும் நேர்மையுமாக்கத் தேவன் தீர்மானித்திருக்கிறார்; பரிசுத்த ஆவியானவரின் ஆராயும் பார்வையிலிருந்து ஒரு கணம்போலும் நீங்கள் தப்பிக்கொள்ள அவர் அனுமதிக்கமாட்டார். அவர் உங்களை உணர்த்தினபோது, நியாயத்தீர்ப்புக்கு இப்போதே வருமாறு உங்களைத் தூண்டினார், ஆனால் நீங்கள் வரவில்லை; தவிர்க்கமுடியாத நடைமுறை செயல்பட ஆரம்பித்தது, இப்போது நீங்கள் சிறையிலிருக்கிறீர்கள்; ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்த்தபின்புதான் நீங்கள் வெளியே வருவீர்கள். இது இரக்கத்தின் தேவனா? இது அன்பின் தேவனா? என்று நீங்கள் கேட்கலாம். தேவனுடைய பக்கத்திலிருந்து பார்க்கும்போது, இது அன்பினால் ஏவப்பட்ட மகிமையான ஊழியமே. தேவன் உங்களைத் தூயவர்களாயும், கறையற்றவர்களாயும் மாசற்றவர்களாயும் வெளியே கொண்டுவரப்போகிறார்; ஆனால், நீங்கள் காண்பித்துக்கொண்டிருந்த மனப்பான்மையை நீங்கள் உணரவேண்டுமென்று அவர் விரும்புகிறார்--அது உங்கள் சுய உரிமைகளைக்குறித்த மனப்பான்மையே. உங்கள் மனப்பான்மையைத் தேவன் மாற்றவேண்டுமென்று நீங்கள் விருப்பங் கொள்ளும் நிமிடத்திலேயே அவருடைய புத்தூக்கமளிக்கும் சத்துவங்கள் செயல்பட ஆரம்பிக்கும். தம்மோடும் அதன்பின் உங்கள் சகமனிதரோடும் உங்களைச் சரியான உறவுக்குள் கொண்டுவருவதாகிய தேவனுடைய நோக்கத்தை நீங்கள் உணர்ந்த நிமிடத்திலே, நீங்கள் சரியான பாதையை எடுக்க உங்களுக்கு உதவும்படி அகிலாண்டத்தின் இறுதி எல்லைவரை அவர் பாரப்படுத்துவார். ஆம், ஆண்டவரே, அக்கடிதத்தை இன்றிரவே எழுதுவேன்; அம்மனிதனோடு இப்போதே ஒப்புரவாவேன் என்று இப்போதே தீர்மானியுங்கள்.

இயேசுகிறிஸ்துவின் இச்செய்திகள் அறிவுக்கல்ல, சித்தத்திற்கும் மனச்சாட்சிக்குமே. மலைப்பிரசங்கத்தை உங்கள் அறிவினால் வாக்கு வாதஞ்செய்வீர்களானால், அவைகள் உங்கள் இருதயத்தைத் தொடுவதை மழுக்கிப்போடுவீர்கள்.

நான் ஏன் தேவனோடு தொடர்ந்து வாழமுடியவில்லை என்று நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்களா? தேவனுடைய கணக்குப்படியுள்ள உங்கள் கடன்களை நீங்கள் கொடுத்துத்தீர்க்கிறீர்களா? ஏதோ ஒருநாள் நீங்கள் செய்துதீர்க்கவேண்டியதை இப்போதே செய்யுங்கள். ஒவ்வொரு அறநெறி அழைப்புக்குப்பின்னும் ஒரு நிபந்தனை உண்டு.

சீஷத்துவத்தின் நிபந்தனைகள்

யாதொருவன் என்னிடத்தில் வந்து, . . . வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். லூக்கா 14:26,33.

வாழ்க்கையின் மிகவும் நெருங்கிய உறவுகள் இயேசுகிறிஸ்துவின் உரிமைகளோடு மோதுமானால், அவருக்குத்தான் உடனடியாகக் கீழ்ப்படிய வேண்டுமென்று அவர் கூறுகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னும் நபருக்குநேரான ஆளத்துவமும் ஆர்வம் மிகுந்ததுமான பக்தியே சீஷத்துவத்தின் பொருளாகும். ஒரு நபரோடுள்ள பக்திக்கும் ஒரு கொள்கை அல்லது ஒரு குறிக்கோளோடுள்ள பக்திக்குமிடையே வேற்றுமை உண்டு. நமது ஆண்டவர் ஒரு கொள்கையை ஒருபோதும் அறிவிக்கவில்லை; தனக்குநேரான தனிநபர் பக்தியையே அவர் அறிவித்தார். சீஷனாயிருப்பது கர்த்தராகிய இயேசுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அன்பின் அடிமையாயிருப்பதே. கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளுகிற நம்மில் அநேகரும் இயேசு கிறிஸ்துவில் பற்று வைக்கவில்லை. பரிசுத்த ஆவியானவர் (ஆர்வமிக்க அன்பைப்) பகிர்ந்து கொடுக்காவிட்டால், பூமியிலுள்ள ஒரு மனிதனும் கர்த்தராகிய இயேசுவிடம் இத்தகைய ஆர்வமிக்க அன்பு வைக்கிறதில்லை. நாம் அவரை மெச்சலாம், நாம் அவரை மதித்துக் கனம்பண்ணலாம், ஆனால் நாம் அவரை நேசிக்கமுடியாது. கர்த்தராகிய இயேசுவின் ஒரே அன்பர் பரிசுத்தஆவியானவரே; அவரே தேவனுடைய அதே அன்பை நம்முடைய இருதயங்களில் ஊற்றுகிறார். இயேசுவை மகிமைப்படுத்தும் ஒரு வாய்ப்பைப் பரிசுத்த ஆவியானவர் காணும்பொழுதெல்லாம், உங்கள் இருதயத்தையும், உங்கள் நரம்புகளையும், உங்கள் முழு ஆளத்துவத் தையும் அவர் எடுத்து இயேசுகிறிஸ்துவின்பேரிலுள்ள பக்தியினால் நீங்கள் பிரகாசித்து ஒளிவீசும்படிச் செய்வார்.

கிறிஸ்தவ வாழ்க்கைத் தார்மீகத் தன்னியல்பான சுயஆற்றல் பெற்றது என்ற முத்திரைகுத்தப்பட்டது; அதின்பலனாக முரண்பாடுள்ளவர் என்று இயேசுகிறிஸ்துவில் சுமத்தப்பட்ட அதே குற்றச்சாட்டுக்கு சீஷர்கள் ஆளாகலாம். ஆனால், இயேசுகிறிஸ்து எப்போதும் தேவனோடு ஒத்திருக்கிற வராயிருந்தார்; கிறிஸ்தவர்களும் வரையறுக்கப்பட்ட விசுவாசக் கோட்பாடுக ளுக்கல்ல, அவர்களுக்குள்ளிருக்கிற தேவகுமாரனுடைய ஜீவனுக்கு ஒத்தவர்களாய் வாழவேண்டும். மனிதர் கொள்கைகளுக்குள் ஆழமாய் ஈடுபடுகிறார்கள்; அவர்கள் இயேசுகிறிஸ்துவில் பக்தியுள்ளவர்களாகுமுன் தேவன் அவர்களுடைய தவறான எண்ணங்களிலிருந்து அவர்களைத் தகர்த்தெடுக்கவேண்டியதாயிருக்கிறது.

தனிநபர் பாவத்தின் செறிவு

ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன். ஏசா.6:5.

தேவனுடைய பிரசன்னத்திற்குள் நான் பிரவேசிக்கும்போது, நான் ஒரு பாவி என்று நிச்சயமற்ற கருத்தில் நான் உணரவில்லை; என் வாழ்க்கையின் குறிப்பிட்ட ஒரு பகுதியில் பாவம் செறிந்துள்ளதை நான் தெளிவாக உணருகிறேன். நான் ஒரு பாவியென்பது எனக்குத் தெரியும் என்று ஒரு மனிதன் எளிதாகக் கூறுவான்; ஆனால், அவன் தேவனுடைய சமுகத்தில் செல்லும்போது அந்த அறிக்கையோடு தப்பமுடியாது. நான் இப்படிப்பட்டவன் அல்லது அப்படிப்பட்டவன் அல்லது வேறு எப்படிப்பட்டவன் என்பதில் பாவஉணர்வு ஒருமுகப்பட்டிருக்கும். ஒரு ஆண் அல்லது பெண் தேவனுடைய சமுகத்திலிருக்கிறார் என்பதற்கு எப்போதும் அடையாளம் இதுவே. பாவத்தைக்குறித்துத் தெளிவற்ற உணர்வு ஒருபோதும் இருக்காது; ஆனால், தனிநபரின் குறிப்பிட்ட பாகத்தில் பாவத்தின் செறிவு காணப்படும். தேவனுடைய ஆவியானவரால் தூண்டப்பட்ட உள்ளத்தில் தெளிவாக்கப்பட்டிருக்கிற காரியத்தையே தேவன் கண்டித்து உணர்த்துவதில் ஆரம்பிக்கிறார்; அந்தக் காரியத்தில் நாம் அவருடைய உணர்த்துதலுக்கு ஒப்புக்கொடுக்கும்போது, மறைந்திருக்கிற பெரிய பாவத்தன்மைக்கு நம்மைக் கீழே நடத்திச் செல்வார். நாம் மனதறிந்து தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கும்போது, அவர் எப்போதும் இம்முறையில்தான் நம்மோடு இடைபடுகிறார்.

பரிசுத்தவான்களில் மேலானவரிலும் அல்லது கீழானவரிலும், அதுபோலவே பாவிகளில் கொடியவரிலும் அல்லது கொஞ்சமானவரிலும் இத்தகையப் பாவச்செறிவின் அனுபவம் உண்மையாகிறது. ஒரு மனிதன் அனுபவமாகிய ஏணியின் முதற்படியில் இருக்கும்போது, நான் எங்குத் தவறிப்போனேனென்று எனக்குத் தெரியாது, ஆனால், தேவஆவியானவர் ஏதாவது தனிப்பட்டத் திட்டமானக் காரியத்தைச் சுட்டிக்காண்பிப்பார் என்று கூறக்கூடும். ஆண்டவருடைய பரிசுத்தத்தைக்குறித்தத் தரிசனத்தினால் ஏசாயாவில் ஏற்பட்ட விளைவு, அவன் அசுத்த உதடுகளுள்ள மனிதன் என்பதை அவனுக்கு முற்றிலும் தெளிவாக்கியதே. சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து, தன் கையிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத்தழலை எடுத்து, பறந்து வந்து, ஏசாயாவின் வாயைத் தொட்டு: இதோ, இது உன் உதடுகளைத் தொட்டதினால் உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவிர்த்தியானது என்றான். பாவம் செறிந்துள்ள இடத்தில் சுத்திகரிக்கும் அக்கினி பயன்படுத்தப்பட்டேயாகவேண்டும்.

வேண்டாம் என்று தேவன் சொல்லுகிற மிகமுக்கியமானவைகளில் ஒன்று

பொல்லாப்புச் செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம். சங்.37:8.

எரிச்சலடைவது என்பது உளரீதியாகவும் ஆவிக்குரிய நிலையிலும் முற்றிலும் களைப்படைந்துபோவது. எரிச்சலடையாதே என்று சொல்லுவது ஒரு காரியம், ஆனால் எரிச்சலடையக்கூடாதவர்களாக உங்களை நீங்கள் கண்டுகொள்ளும் மனநிலையைக்கொண்டிருப்பது முற்றிலும் வேறுபட்ட காரியம். கூடு கலைக்கப்பட்டு, அநேகர் வாழுகிறதுபோலக் கலகங்களிலும் கடுந்துயரிலும் வாழும்வரைக் கர்த்தரை நோக்கி அமர்ந்திருப்பது மற்றும் அவருக்காகப் பொறுமையோடு காத்திருப்பது என்பவைகளைக்குறித்துப் பேசுவது எளிதாகத் தோன்றும்; ஆனால், அத்தகைய நிலையில் கர்த்தரை நோக்கி அமர்ந்திருப்பது கூடியகாரியமா? எரிச்சலடையாதே என்பது அங்கு பயன்படவில்லையென்றால், வேறு எங்கும் அது பயன்படாது. எரிச்சலடையாதே என்பது தடுமாற்றமான நாட்களிலும் சமாதானமான நாட்களிலும் ஒன்றுபோலவே செயல்படவேண்டும்; அல்லவென்றால், அது ஒருபோதும் பயன்படாது. அது உங்கள் தனிப்பட்டக் காரியத்தில் பயன்படவில்லையென்றால் வேறு யாருடைய காரியத்திலும் அது பயன்படாது. கர்த்தரை நோக்கி அமர்ந்திருப்பது என்பது புறம்பான சூழ்நிலைகளை ஒருபோதும் சார்ந்திருப்பதில்லை; அது தேவனோடுள்ள உங்கள் உறவையே சார்ந்தது.

தேவையற்ற பரபரப்படைவது எப்போதும் பாவத்தில் முடிவடைகிறது. சிறிதளவு கவலையும் விசாரமும் அடைவது நாம் மெய்யாகவே எவ்வளவு ஞானமுள்ளவர்கள் என்பதின் அறிகுறி என்று எண்ணுகிறோம்; ஆனால், அதைவிடக் கூடுதலாக, நாம் உண்மையாகவே எத்தகையத் துன்மார்க்கர் என்பதின் அறிகுறியே அது. நம்முடைய சொந்த விருப்பம் நிறைவேற வேண்டும் என்ற தீர்மானத்திலிருந்தே எரிச்சல் எழும்புகிறது. நம்முடைய ஆண்டவர் ஒருபோதும் கவலைப்படவுமில்லை, அவர் விசாரப்படவுமில்லை; ஏனெனில், தன் சொந்தக் கருத்துக்களை நிறைவேற்றுவது அவருடைய நோக்கமாயில்லை; தேவனுடைய கருத்துக்களைக் கொண்டுநடத்துவதே அவருடைய நோக்கமாயிருந்தது. நீங்கள் தேவபிள்ளையானால் எரிச்சல் அடைவது பாவம்.

உங்களுடைய சூழ்நிலைகள் தேவனால் கையாளமுடியாதஅளவு மிதமிஞ்சியவை என்கிற கருத்தைக்கொண்டு உங்களுடைய மதிகேடான ஆத்துமாவுக்கு முட்டுக் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்களா? ஊகங்களையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, சர்வவல்லவரின் நிழலில் தங்குங்கள். அந்தக் காரியத்தைக்குறித்து எரிச்சலடையமாட்டேனென்று தேவனிடத்தில் பகிரங்கமாய்க் கூறுங்கள். தேவனுக்குப்புறம்பாகக் கணக்கிடுவதே நமது எல்லா எரிச்சலுக்கும் கவலைக்கும் காரணம்.

தேவனில்லாமல் கணக்கிடாதீர்

உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். சங்.37:5.

தேவனில்லாமல் கணக்கிடாதீர்.

தேவனைக் கணக்கிலெடுக்காதபடி நாம் திட்டமிடும் காரியங்களைக் கவிழ்க்கத் தேவனுக்கு வியப்புக்குரிய வழி இருப்பதுபோலத் தோன்றுகிறது. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டிராத சூழ்நிலைகளுக்குள் நாம் பிரவேசிக்கிறோம்; தேவனில்லாமல் நாம் கணக்கிட்டுக்கொண்டிருந்தோம் என்று திடீரென்று கண்டுகொள்ளுகிறோம்; அவர் ஜீவிக்கிற காரணராகப் பிரவேசிக்கவில்லை. விசாரப்படும் சாத்தியத்திலிருந்து நம்மை விலக்கிவைக்கும் ஒரே காரியம் நம்முடைய எல்லாக் கணக்கிடுதலிலும் தேவனை முக்கியக் காரணமாகக் கொண்டுவருவதே.

நமது மார்க்கத்தில் தேவனுக்கு முதலிடம் கொடுப்பது வழக்கமே; ஆனால், நம்முடைய வாழ்க்கையின் நடைமுறைப் பிரச்சனைகளில் அவருக்கு முதலிடம் கொடுப்பதை மரியாதையற்றதாக நினைக்க வாய்ப்புண்டு. நாம் தேவனிடம் வருமுன் பக்தியின் வேஷத்தைத் தரிக்கவேண்டுமென்று எண்ணினால் நாம் ஒருபோதும் அவரிடம் வரமாட்டோம். நாம் இருக்கிறபடியே வரவேண்டும்.

தீமையைக் கருத்தில்கொண்டு கணக்கிடாதீர்.

தீமையைக்குறித்து நாம் கவனம் செலுத்தவேண்டாமென்று தேவன் உண்மையாகவே கருதுகிறாரா? அன்பு தீங்கு நினையாது என்று வாசிக்கிறோம். தீமை இருக்கிறதைக்குறித்து அன்பு அறிவற்றதாயிருக்கவில்லை; ஆனால், அன்பு தீமையை ஒரு திட்டமிடுகிற காரணமாக எடுப்பதில்லை. தேவனில்லாமல் நாம் தீமையைக் கருத்தில் எடுக்கிறோம்; அதைக் கருத்தில் கொண்டு நாம் திட்டமிடுகிறோம், அந்தக் கண்ணோட்டத்தில் நமது எல்லா நியாயங்களையும் செயல்படுத்துகிறோம்.

மழைக்காலத்தைக் கருத்தில்கொண்டு கணக்கிடாதீர்.

இயேசுகிறிஸ்துவில் நீங்கள் நம்பிக்கை வைத்தால் மழைக்காலத்துக்காக நீங்கள் சேர்த்துவைக்கமாட்டீர்கள். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக என்று இயேசு கூறினார். உங்கள் இருதயம் கலங்கடிக்கப்படாமல் தேவன் காக்கமாட்டார். கலங்கக்கூடாது என்பது ஒரு கட்டளை. அவ்வாறு செய்வதற்கு தேவனுக்கு முதலிடம் கொடுக்கவும் அவரை மனதில்கொண்டு திட்டமிடவும் பழக்கம் வரும்வரை நீங்கள் அனுதினமும் நூற்றுக்கணக்கான தடவை முயற்சிசெய்யுங்கள்.

தரிசனமும் யதார்த்தமும்

வெட்டாந்தரை தண்ணீர்த்தடாகமாகும். ஏசா.35:7.

ஒரு காரியம் நடைமுறையாகுமுன் அதைக்குறித்தத் தரிசனங்கள் எப்போதும் நமக்குண்டு. அந்தத் தரிசனம் உண்மையாயிருந்தாலும், நம்மில் அது உண்மையல்ல என்று நாம் உணரும்வேளைதான் சாத்தான் தன் சோதனைகளோடு வரும் காலமாகும்; இனித் தொடர்ந்து செல்வதில் பயனில்லையென்று அப்போது நாம் சொல்ல வாய்ப்புண்டு. தரிசனம் நடைமுறையாவதற்குப்பதில் அவமானத்தின் பள்ளத்தாக்கு வந்துவிட்டது.

வாழ்க்கை பயனற்ற உலோகத்தாது அல்ல,
உட்புறத் துக்கத்திலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட இரும்பு அது,
அழிவின் அதிர்ச்சிகளினால் தொடர்பாகத் தாக்கப்பட்டது
உருவாகவும் பயன்பெறவும்.

தேவன் நமக்குத் தரிசனத்தைக் கொடுக்கிறார், பின்பு அந்தத் தரிசனத்தின் வடிவத்துக்கு நம்மைச் சம்மட்டிகொண்டு அடித்து உருவாக்கப் பள்ளத்தாக்குக்குக் கொண்டுபோகிறார்; அந்தப் பள்ளத்தாக்கில் நம்மில் பலர் உணர்விழ்ந்து பின்வாங்கிவிடுகிறோம். நமக்குப் பொறுமையிருக்கு மானால் ஒவ்வொரு தரிசனமும் நிஜமாக்கப்படும். தேவனுடைய தாராள ஓய்வை சிந்தித்துப் பாருங்கள்! அவர் ஒருபோதும் ஆத்திரப்படுகிறவரல்ல. நாமோ எப்போதும் மட்டுமீறி ஆத்திரப்படுகிறோம். தரிசனத்தின் மகிமையை கருத்தில்கொண்டு காரியங்களைச் செய்ய நாம் புறப்படுகிறோம், ஆனால், தரிசனம் இன்னும் நம்மில் நடைமுறையாகவில்லை; அந்தத் தரிசனத்தின் உண்மையைத் தேவன் நம்மிடம் முழுவதும் ஒப்படைக்கும் இடத்துக்கு நாம் வருமட்டும் நம்மைச் சம்மட்டி கொண்டு அடித்து உருவாக்க அவர் நம்மைப் பள்ளத்தாக்குக்குள் கொண்டுபோய், உலைகள் மற்றும் வெள்ளப் பெருக்குகள் வழியாகக் கடத்திச்செல்லவேண்டும். நாம் தரிசனத்தைப் பெற்ற நேரம்முதல் நம்மை இலட்சியத்துக்கேற்ற உருவத்துக்குக் கொண்டு வரும்படி தேவன் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்; ஆனால், நாமோ மேலும் மேலும் அவருடைய கரத்திலிருந்து தப்பிக்கொண்டு, நம்முடைய சொந்த வடிவத்தில் நம்மை உருவமைக்க முயற்சிக்கிறோம்.

தரிசனம் ஒரு ஆகாயக்கோட்டையல்ல; நீங்கள் எவ்வாறிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புவதின் தரிசனம் அது. தேவன் உங்களைத் தம்முடைய சக்கரத்தில்வைத்து அவர் விருப்பப்படியே சுற்றட்டும்; அப்போது தேவன் தேவனாயும் நீங்கள் நீங்களாயும் இருக்கிற நிச்சயம்போல நீங்கள் துல்லியமாக அந்தத் தரிசனத்தைப்போலாவீர்கள். நடைமுறையில் நீங்கள் அதைரியப்படாதேயுங்கள். தேவனுடைய தரிசனத்தை நீங்கள் பெற்றிருப்பீர் களானால் குறைந்த நிலையில் திருப்திப்பட உங்கள் விருப்பப்படி நீங்கள் முயற்சித்தாலும், தேவன் ஒருபோதும் உங்களை அனுமதிக்கமாட்டார்.

மேன்மையான காரியங்கள் எல்லாம் கடினமே

இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள் . . .வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. மத்.7:13,14.

இயேசுவின் சீஷர்களாய் வாழப்போகிறோமானால், மேன்மையான காரியங்களெல்லாம் கடினமானவை என்பதை நினைவுகூரவேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கை மகிமையாகக் கடினமானது. ஆனால், அதின் சிரமம் மயக்கமடையவோ அழுத்தத்துக்கு விட்டுக்கொடுக்கவோ நம்மை ஆக்காது; மேற்கொள்ள அது நம்மை விழிப்பூட்டுகிறது. அவருடைய மேன்மைக்கு நம்முடைய முழுமையாகத்தக்கதாக இயேசுகிறிஸ்துவின் அற்புதமான இரட்சிப்பை நாம் பாராட்டுகிறோமா?

இயேசுவின் பிராயச்சித்தத்தினால் தேவன் தம்முடைய தெய்வீகக் கிருபையின்படியே மனிதரை இரட்சிக்கிறார்; அவரே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி, விருப்பத்தையும் செய்கையையும் நம்மில் உண்டாக்குகிற வராயிருக்கிறார்; ஆனால், நடைமுறை வாழ்க்கையில் அந்த இரட்சிப்பை நாம் நிறைவேற்றவேண்டும். அவருடைய மீட்பின் அடிப்படையில் அவர் கட்டளையிடுகிறதைச் செய்ய நாம் ஆரம்பித்ததும், நம்மால் அதைச் செய்யமுடியுமென்பதைக் காண்கிறோம். அதில் நாம் தோல்வி அடைந்தால், அதன் காரணம் நாம் பயிற்சிசெய்யாததே. நாம் பயிற்சிசெய்கிறோமா இல்லையா என்பதை நெருக்கடி வெளிப்படுத்தும். நாம் தேவஆவியானவ ருக்குக் கீழ்ப்படிந்து, தேவன் தம்முடைய ஆவியினால் நமக்குள் வைத்தி ருப்பதை நம்முடைய மாம்சீக வாழ்க்கையில் பயிற்சிசெய்வோமானால், நெருக்கடி வரும்போது நமது சொந்த இயற்கையும் தேவனுடைய கிருபையும் நமக்குத் துணைநிற்கும் என்பதைக் கண்டுகொள்ளுவோம்.

செய்வதற்குக் கடினமான காரியங்களைத் தேவன் நம்மிடம் கொடுக்கிறதற்காக அவருக்கு ஸ்தோத்திரம்! அவருடைய இரட்சிப்பு ஒரு மகிழ்ச்சியான காரியம், என்றாலும் அது வீரமும் தூய்மையுமான காரியம். நம்முடைய மொத்த மதிப்பு எவ்வளவென்று அது பரிசோதிக்கிறது. இயேசு அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வருகிறார், தேவன் நம்மைக் குமாரருக்கான நிபந்தனைகளிலிருந்து பாதுகாக்கமாட்டார். தேவனுடைய கிருபை கோழைகளையல்ல, இயேசுகிறிஸ்துவின் குடும்பச் சாயலுள்ள ஆண்களையும் பெண்களையும் உருவாக்குகிறது. நடைமுறைக் காரியங் களில் இயேசுவின் சீஷனுக்குரிய மேன்மையான வாழ்க்கை வாழ மிகப் பெரிய அளவு கட்டுப்பாடு வேண்டும். மேன்மையானவனாயிருக்க முயற்சி எடுப்பது எப்போதும் தேவையானது.

விசுவாசமாயிருப்பதற்கானச் சித்தம்

யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள். யோசு.24:15.

முழுமனிதனும் செயலாற்றுவதே சித்தம். என் சித்தத்தை நான் சரணடையவைக்கமுடியாது; நான் அதைப் பயிற்சிக்கவேண்டும். கீழ்ப்படிய நான் சித்தங்கொள்ளவேண்டும், தேவனுடைய ஆவியைப் பெற்றுக்கொள்ள நான் சித்தங்கொள்ளவேண்டும். தேவன் ஒரு சத்தியத்தின் தரிசனம் கொடுக்கும்போது நாம் என்ன செய்வோமென்பதேதவிர அவர் என்ன செய்வார் என்பதல்ல எப்போதுமுள்ள கேள்வி. நம்மெல்லாருக்குமுன்னும் ஆண்டவர் சில சிறந்தக் கருத்துக்களை வைக்கிறார்; ஏற்கனவே நீங்கள் தேவனால் தொடப்பட்டபோது, அதாவது நீங்கள் இரட்சிக்கப்பட்டவேளை, அல்லது நீங்கள் இயேசுவை முதலில் தரிசித்த நேரம், அல்லது ஏதாவது சத்தியத்தை அறிந்துகொண்ட தருணத்தில் நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதை நினைவுகூருவதே மிகச்சிறந்த காரியமாகும். அப்போது தேவனுக்குநேராக மெய்விசுவாசம் காண்பிப்பது எளிதாயிருந்தது; தேவஆவியானவர் உங்களுக்குமுன்பாகச் சில புதியக் கருத்துக்களைக் கொண்டுவரும் இந்நேரத்தில் அந்தத் தருணங்களை நினைவுகூருங்கள்.

யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள். இது வேண்டுமென்றே செய்யப்பட்ட திட்டம்; நீங்கள் எளிதாக இழுத்துச் செல்லப்படுகிற காரியமல்ல இது; நீங்கள் தீர்மானஞ்செய்கிறதுவரை மற்ற எல்லாக் காரியங்களும் நிறுத்திவைக்கப்படும். இந்தத் திட்டம் உங்களுக்கும் தேவனுக்குமிடையே உள்ளது; அதைக்குறித்து மாம்சத்தோடும் இரத்தத்தோடும் ஆலோசனைசெய்யாதீர்கள். ஒவ்வொரு புதிய திட்டம் வரும்போதும் மற்றவர்கள் அதிக எண்ணத்தில் வெளியேதள்ளப்படுவார்கள்; அங்குதான் அழுத்தம் வருகிறது. தமது பரிசுத்தவான்களின் கருத்து உங்களுக்குப் பயனுள்ளதாகும்படி தேவன் அனுமதிப்பார்; ஆயினும் நீங்கள் எடுக்கிற முயற்சியைப் பிறர் புரிந்துகொள்ளுகிறார்கள் என்ற நிச்சயத்திலிருந்து நீங்கள் படிப்படியாக வெளியே கொண்டுவரப்படுகிறீர்கள். தேவன் எங்கு நடத்துகிறார் என்பதைக் கண்டுபிடிப்பது உங்கள் கடமையல்ல, தேவன் உங்களுக்கு அவரைமாத்திரமே விளக்கித்தருகிறார்.

ஆண்டவரே, நான் உமக்கு விசுவாசமாயிருப்பேனென்று அவரிடம் அறிக்கையிடுங்கள். இயேசுகிறிஸ்துவுக்கு விசுவாசமாயிருக்க நீங்கள் தெரிந்துகொண்டவுடனேயே, நீங்கள் உங்களுக்கு எதிரான சாட்சி. மற்றக் கிறிஸ்தவர்களைக் கலந்தாலோசியாதீர்கள், நான் உம்மைச் சேவிப்பேன் என்று அவருக்குமுன் மனமார ஒத்துக்கொள்ளுங்கள். விசுவாசமாயிருக்கச் சித்தங்கொள்ளுங்கள், மற்றவர்களும் விசுவாசமாயிருப்பதற்காக அவர் களையும் பாராட்டுங்கள்.

மகாப் பெரிய ஆய்வு

நீங்கள் கர்த்தரைச் சேவிக்கமாட்டீர்கள். யோசு.24:19.

தேவனைத்தவிர வேறு எதிலாவது சிறிதளவேனும் நம்பிக்கை வைத்திருக்கிறீர்களா? ஏதாவது இயற்கைத் திறனிலோ, ஏதாவது குறிப்பிட்ட சூழ்நிலைகளின் தொகுதியிலோ நம்பிக்கையில் மீதியிருக்கிறதா? தேவன் உங்களுக்குமுன் வைக்கிற இந்தப் புதிய திட்டத்தில் ஏதாவது விவரத்துக்கு உங்களைச் சார்ந்திருக்கிறீர்களா? இதுதான் ஆழ்ந்து ஆராய்வது என்பது. என்னால் ஒரு பரிசுத்த வாழ்க்கை வாழமுடியாது என்று கூறுவது மிகவும் உண்மைதான்; ஆனால், இயேசுகிறிஸ்து உங்களைப் பரிசுத்தமாக்கும்படி அவரை அனுமதிக்க நீங்கள் தீர்மானிக்கமுடியும். நீங்களாக தேவனாகிய கர்த்தரைச் சேவிக்கமுடியாது--ஆனால், தேவனுடைய சர்வவல்லமையுள்ள ஆற்றல் உங்கள்மூலம் கிரியை செய்யும் இடத்தில் உங்களை நீங்கள் வைக்கமுடியும். தேவன் தம்முடைய மகத்துவமான வாழ்வை உங்களில் வெளிப்படுத்தும்படி நீங்கள் எதிர்பார்க்கத்தக்கவாறு அவரோடு போதுமான அளவு ஒப்புரவாகியிருக்கிறீர்களா?

அப்படியல்ல, நாங்கள் கர்த்தரையே சேவிப்போம் என்று அவர்கள் கூறினார்கள். அது உணர்ச்சிவசப்பட்டதல்ல, மனப்பூர்வமான ஒப்படைப்பே. ஆனால், தேவன் என்னை ஒருபோதும் இதற்கு அழைத்திருக்கமுடியாது, நான் மிகவும் தகுதியற்றவன், இது என்னைக் குறிப்பிடவில்லை என்று நீங்கள் கூறுகிறீர்கள். இது உங்களைத்தான் குறிப்பிடுகிறது; நீங்கள் எவ்வளவு பெலவீனர்களும் வலுவற்றவர்களுமாயிருக்கிறீர்களோ அவ்வளவு நல்லது. வேறு ஏதாவது ஒன்றில் நம்பிக்கைவைத்திருக்கிற ஒருவர், நான் கர்த்தரையே சேவிப்பேன் என்று சொல்லுவதற்கு எங்காவது அருகில் வருவதற்குக் கடைசி நபராய்த்தானிருப்பார்.

நான் உண்மையாகவே விசுவாசிக்கக்கூடுமானால் நல்லது என்று நாம் கூறுகிறோம். நான் நிச்சயமாகவே விசுவாசிப்பேனா என்பதுதான் கேள்வி. அவிசுவாசமாகிய பாவத்துக்கு இயேசுகிறிஸ்து அத்தகைய அழுத்தம் கொடுக்கிறதில் ஆச்சரியமில்லை. அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை என்று வேதத்தில் வாசிக்கிறோம். தேவன் சொன்னதைச் செய்வாரென்று உண்மையாகவே விசுவாசிப்போமேயானால், நாம் எத்தகையவர்களாய் இருப்போம்! அவர் யாராயிருக்கிறாரென்று அவர் கூறுகிறாரோ அவ்வாறெல்லாம் அவர் எனக்கு இருக்கத்தக்கதாக நான் அவரை அனுமதிக்க உண்மையாகவேத் துணிவேனா?

ஆவிக்குரிய சோம்பேறி

அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து, சபை கூடிவருதலை . . . நாமும் விட்டுவிடாமல். எபி.10:24,25.

நாமெல்லாரும் ஆவிக்குரிய சோம்பேறிகளாயிருக்கும் இயல்பு வாய்ந்தவர்கள்; வாழ்க்கையின் உட்பூசல்கள் இருக்கிறபிரகாரமாக அவைக ளோடு கலந்துகொள்ள நாம் விரும்பவில்லை, இவைகளிலிருந்து ஒதுங்கி வாழ்வதே நமது ஒரே நோக்கமாகும். ஒருவரையொருவர் ஏவுகிறதும், அனைவரும் ஒன்றாயிருப்பதுந்தான் எபிரெயர் 10-ல் வரும் கருத்து-- இந்த இரண்டுக்கும் சுயத்தைக்குறித்த அறிவினால் வரும் தொடக்க முயற்சியல்ல, கிறிஸ்துவை அறிவதினால் வரும் தொடக்கமுயற்சி தேவை. அந்நியமான இடத்தில் ஒதுக்கமாய் ஓய்வெடுத்து வாழ்வது, இயேசுகிறிஸ்து கற்பித்த ஆவிக்குரிய நிலைக்கு நேர்எதிரானதாகும்.

அநீதி, சுயநலம், நன்றிக்கேடு, குழப்பம் போன்றவைகளை நாம் எதிரிடும்போது நம்முடைய ஆவிக்குரிய தன்மை பரிசோதிக்கப்படுகிறது; இவைகளெல்லாம் நம்மை ஆவிக்குரிய சோம்பேறிகளாக்கும் இயல்பு கொண்டவை. ஒதுங்கிவாழும் நோக்கத்திற்காக ஜெபிப்பதையும், வேதம் வாசிப்பதையும் நாம் பயன்படுத்த விரும்புகிறோம். சமாதானமும் களிப்பும் பெற்றுக்கொள்ளுவதற்காக நாம் தேவனை உபயோகிக்கிறோம். அதாவது, இயேசுகிறிஸ்துவை அறிந்துகொள்ளுவதையல்ல, அவரை அனுபவிப்பதை நாம் விரும்புகிறோம். தவறான திசையில் எடுத்துவைக்கும் முதல் காலடியே இது. இவைகளெல்லாம் விளைவுகள், நாம் அவற்றைக் காரணங்களாக்க முயற்சிக்கிறோம்.

உங்களை நினைப்பூட்டி எழுப்பிவிடுவது நியாயமென்று எண்ணு கிறேன் என்று பேதுரு எழுதினார். தேவனுடைய தூண்டுகோலாயிருக்கும் ஒருவரால், அதாவது ஆவிக்குரிய நடவடிக்கைகள் நிறைந்த ஒருவரால், விலாவிலே தாக்கப்படுவது மிகவும் கவலைப்படுத்தும் ஒரு காரியமாகும். சுறுசுறுப்பான வேலையும் ஆவிக்குரிய நடவடிக்கையும் ஒரே காரியமல்ல. சுறுசுறுப்பான வேலை ஆவிக்குரிய ஊழியத்தின் போலியாயிருக்கலாம். நாம் தட்டியெழுப்பப்பட விரும்பவில்லை என்பதும், நாம் கேட்க விரும்புவது ஆவிக்குரிய நிலையில் ஓய்வுபெறுவதைக்குறித்தே என்பதும். ஆவிக்குரிய சோம்பலின் ஆபத்தாகும். ஓய்வுபெறுவதைக்குறித்தக் கருத்தை இயேசு கிறிஸ்து ஒருபோதும் ஊக்குவிக்கிறதில்லை--நீ போய் என் சகோதரர் களுக்குச் சொல்லு என்று மரியாளிடம் அவர் கூறினார்.

ஆவிக்குரிய பரிசுத்தவான்

நான் அவரை . . . அறிகிறதற்கு. பிலிப்.3:10.

சொந்த ஆற்றல்களை அறிவதற்குநேராயல்ல, இயேசுகிறிஸ்துவை அறிவதற்குநேராக ஒரு பரிசுத்தவானின் துவக்கமுயற்சி இருக்கவேண்டும். ஆவிக்குரிய பரிசுத்தவான் சூழ்நிலைகள் தற்செயலானவையென்று ஒரு போதும் நம்புவதில்லை, தன்னுடைய வாழ்க்கை இம்மைக்குரியது அல்லது மறுமைக்குரியது என்று எண்ணுவதுமில்லை; தான் வைக்கப்படும் சூழ் நிலைகளையெல்லாம் இயேசுகிறிஸ்துவைக்குறித்த அறிவைப் பெற்றுக் கொள்ளுகிற வழிவகைகளாகவே அவர் காண்கிறார். அவரைப்பொறுத்துத் துணிச்சலான ஒப்படைப்பு உண்டு. வாழ்க்கையின் எல்லாப் பாகங்களிலும் இயேசுகிறிஸ்துவை நாம் அறிவோமென்று ஆவியானவர் தீர்மானித்திருக் கிறார், நாம் அவ்வாறு செய்கிறதுவரை அதே இடத்திற்கு நம்மைத் திரும்பத் திரும்பக் கொண்டுவருவார். சொந்த ஆற்றல்களை அறியும் அனுபவம் கிரியையை சிங்காசனத்தில் அமர்த்த வழிநடத்துகிறது; அப்படியிருக்க, பரிசுத்தவானோ தம் கிரியையில் இயேசுகிறிஸ்துவை சிங்காசனத்தில் அமர்த்துகிறார். உண்பதோ, குடிப்பதோ அல்லது சீஷர்களின் கால்களைக் கழுவுகிறதோ எதுவாயினும், அதில் இயேசுகிறிஸ்துவை அறியும் துவக்க முயற்சியை நாம் எடுக்கவேண்டும். நம்முடைய இயற்கை வாழ்க்கையின் ஒவ்வொரு பாகத்திற்குமுரிய மறுபடிவம் இயேசுவின் வாழ்க்கையிலுண்டு. மிகவும் இழிவான வேலையிலும் நமது ஆண்டவர் பிதாவோடுள்ள தமது உறவை உணர்ந்தார். தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத் திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து; ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, சீஷருடைய கால்களைக் கழுவத் தொடங்கினார்.

நான் அவரை அறிகிறதற்கு.....என்பதே ஆவிக்குரிய பக்தனின் நோக்கமாகும். இன்று நான் இருக்கிற இடத்தில் அவரை அறிகிறேனா? இல்லையென்றால் நான் அவரை ஏமாற்றமடையச்செய்கிறேன். நான் இங்கிருப்பது என்னை உணர்ந்துகொள்ள அல்ல, இயேசுவை அறியவே. ஏதாவது செய்யப்படவேண்டும், அதை நானே செய்யவேண்டும் என்கிற உணர்வே அடிக்கடி கிறிஸ்தவ ஊழியத்தில் துவக்கமுயற்சியாயிருக்கிறது. இது ஒருபோதும் ஆவிக்குரிய பரிசுத்தவானுடைய தன்மையல்ல; அவர் இருக்கிற எல்லாச் சூழ்நிலைகளிலும் இயேசுகிறிஸ்துவைக்குறித்த அறிவை அடைந்துகொள்ளவேண்டுமென்பதே அவருடைய நோக்கமாயிருக்கிறது.

ஆவிக்குரிய சமுதாயம்

மேலும் நாம் அனைவரும் . . . கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும். எபே.4:11.

மனித இனம் முழுவதும் எவ்வாறிருக்கவேண்டுமென்று தேவன் திட்டமிட்டிருக்கிறாரோ அந்த உறவுக்குள் திரும்பக் கொண்டுவருவதே புனர் வாழ்வின் பொருளாகும்; இதைத்தான் இயேசுகிறிஸ்து மீட்பினால் செய்தார். தன்னுடைய சொந்த அமைப்பை மேம்படுத்தத் திருச்சபைத் தேடும்போது, அது ஆவிக்குரிய சமுதாயமில்லாமலாகிவிடுகிறது. இயேசுகிறிஸ்துவின் திட்டப்படி மனித இனம் புனர்வாழ்வடைவது என்பது பொதுவாழ்க்கையோடு கூடத் தனிவாழ்க்கையிலும் இயேசுகிறிஸ்துவை அறிவதே. இயேசுகிறிஸ்து அப்போஸ்தலர்களையும் போதகர்களையும் இந்த நோக்கத்துக்காகவே அனுப்பினார்--கூட்டாண்மையான ஆளத்துவத்தை அறிந்துகொள்ளவே. நமது சொந்த ஆவிக்குரிய வாழ்க்கையை விருத்திசெய்யவோ, அல்லது ஆவிக்குரிய தனிமை அனுபவிக்கவோ நாம் இங்கில்லை; கிறிஸ்துவின் சரீரம் கட்டப்படத்தக்கதாக இயேசுகிறிஸ்துவை அறிந்துகொள்ளவே இங்கு நாம் வாழுகிறோம்.

கிறிஸ்துவின் சரீரத்தை நான் கட்டிஎழுப்புகிறேனா? அல்லது என்னுடைய சொந்த தனிநபர் அபிவிருத்தியை மாத்திரம் தேடுகிறேனா? இயேசுகிறிஸ்துவோடுள்ள நேரடி உறவே மிகமுக்கியமான காரியம்--நான் அவரை அறிகிறதற்கு.....என்று பவுல் கூறினார். தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவது என்பது அவருக்காக முற்றிலும் துறப்பதே. காரியங்கள் எனக்குச் சொந்தமாய் வேண்டும் என்னும்போதெல்லாம் உறவு கெடுக்கப் படுகிறது. இயேசுகிறிஸ்துவை அறிவதிலல்ல, அவர் எனக்கு எவைகளைச் செய்திருக்கிறார் என்பதைக்குறித்து மாத்திரம் அறிவதில் நான் அக்கறை கொள்ளுகிறேன் என்பதை நான் உணருவது மிகவும் அவமானமாகும்.

என் இலக்கு தேவன் மாத்திரமே,
மகிழ்ச்சியோ சமாதானமோ அல்ல,
ஏன், ஆசீர்வாதங்களுங்கூட அல்ல,
அவர் மாத்திரமே, என் தேவனே.

இந்த அளவுகோலால் நான் என் வாழ்க்கையை அளக்கிறேனா? அல்லது அதைவிடக் குறைந்த அளவுகோலால் அளக்கிறேனா?

தரிசனத்தின் விலை

உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில், ஆண்டவர்.....வீற்றிருக்கக் கண்டேன். ஏசா.6:1.

கதாநாயகனுடைய மரணத்தின் வரலாறே, அடிக்கடி நம்முடைய ஆத்துமாவின் தேவனோடுள்ள வரலாறு. நமது நண்பர்களின் இடத்தில் தேவன் தம்மைக் கொண்டுவரும்படித் திரும்பத்திரும்ப அவர்களை அகற்ற வேண்டியதாயிருக்கிறது; அங்குதான் நாம் தளர்ந்துபோகிறோம், தவறிப் போகிறோம், தைரியம் இழக்கிறோம். இதைச் சொந்த அனுபவமாக எடுத்துக் கொள்வோம்: தேவன் எல்லாமுமாயிருந்த இடத்தில் எனக்கென்று நின்ற ஒருவர் மரித்த வருடத்தில்--நான் அனைத்தையும் விட்டுவிட்டேனா? நான் நோய்வாய்ப்பட்டேனா? நான் சோர்படைந்தேனா? அல்லது--நான் ஆண்ட வரைக் கண்டேனா?

தேவனைக்குறித்த என்னுடைய தரிசனம் என்னுடைய பண்பின் நிலையைப் பொறுத்தேயிருக்கிறது. பண்பு வெளிப்படுத்துதலைத் தீர்மானிக் கிறது. நான் ஆண்டவரைக் கண்டேன் என்று நான் சொல்லுமுன்னதாக தேவனோடு ஒத்திருக்கிற ஏதாயினும் ஒன்று என் பண்பில் இருக்கவேண்டும். நான் மறுபடியும் பிறந்து தேவனுடைய ராஜ்யத்தைக் காண ஆரம்பிக்கும் வரை என் காழ்ப்புணர்ச்சியின் நிலையில் மாத்திரம் நான் காண்கிறேன். வெளிப்புறமான சம்பவங்களுக்கு அறுவை மருத்துவமும் உட்புறமாகச் சுத்திகரிப்பும் எனக்குத் தேவை.

வாழ்க்கை தேவனை முகாமுகமாய் எதிர்கொண்டு, வேறு யாரும் எனக்கு எவ்விதத்திலும் முக்கியமல்ல என்று ஆகுமட்டும் தேவனே எனக்கு ஒன்றாமானவர், இரண்டாமானவர், மூன்றாமானவர் என்றிருக்கவேண்டும். உலகம் முழுவதிலும் உம்மைத்தவிர வேறு யாருமில்லை, என் தேவனே, உம்மைத்தவிர வேறு யாருமில்லை.

விலை கொடுத்துக்கொண்டேயிருங்கள். தரிசனத்துக்கேற்றவாறு நீங்கள் வாழ விரும்புகிறீர்களென்பதைத் தேவன் காணட்டும்.

உபத்திரவப்படுவதைக் கணக்கிடுதல்

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு. மத்.5:39.

கிறிஸ்தவனாயிருப்பதினாலுள்ள அவமானத்தை இந்த வசனங்கள் வெளிப்படுத்துகின்றன. இயல்பாக ஒரு மனிதன் திருப்பி அடிக்கவில்லை யென்றால் அதன் காரணம் அவன் கோழையாயிருப்பது; ஆனால், ஆவிக் குரியநிலையில் ஒருவன் திருப்பி அடிக்காவிட்டால் அவனுக்குள் இருக்கிற தேவகுமாரன் வெளிப்படுத்தப்படுகிறார். நீங்கள் அவமதிக்கப்படும்போது, மனக்கசப்பு அடையாமலிருப்பதுமட்டுமல்லாமல், அதைத் தேவகுமாரனை வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாக மாற்றவேண்டும். இயேசுவின் தன்மையை நீங்கள் நடிக்கமுடியாது; ஒன்றில் இயேசுவின் தன்மை உங்களில் இருக் கிறது, அல்லது அது உங்களில் இல்லை. பரிசுத்தவானுக்குக் கிடைக்கும் தனிப்பட்ட அவமதிப்பு கர்த்தராகிய இயேசுவின் நம்பமுடியாத இனிமையை வெளிப்படுத்தும் தருணமாகவே ஆகிறது.

உங்கள் கடமையைச் செய்யுங்கள் என்பது அல்ல, எது உங்கள் கடமை இல்லையோ அதைச் செய்யுங்கள் என்பதே மலைப்பிரசங்கத்தின் போதனை. இரண்டு மைல் தூரம் போவதும், மறு கன்னத்தைத் திருப்பிக் காட்டுவதும் உங்கள் கடமையல்ல; ஆனால், நாம் இயேசுவின் சீஷர்களா னால் எப்போதும் இக்காரியங்களைச் செய்வோம் என்று அவர் கூறினார். இதற்குமேல் நான் ஒன்றுஞ்செய்யமுடியாது, என்னைக்குறித்துத் தவறாகக் கூறுகிறார்கள், நான் சரியாகப் புரிந்துகொள்ளப்படவில்லை என்று கூறும் ஆவி நம்மில் காணப்படாது. என் உரிமைகளுக்காக நான் வற்புறுத்தும் ஒவ்வொரு நேரமும் நான் தேவகுமாரனைப் புண்படுத்துகிறேன்; அதற்கு மாறாக அந்த அதிர்ச்சியை நானாக ஏற்றுக்கொள்வேனானால், புண்படுத் தப்படுவதிலிருந்து இயேசுவை நான் தடுக்கமுடியும். இதுதான் கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவது என்பதின் கருத்தாகும். தன் சொந்தக் கௌரவமல்ல, ஆண்டவருடைய கௌரவமே தன் வாழ்க் கையில் ஆபத்திலிருக்கிறதென்று சீஷன் உணருகிறான்.

அடுத்த மனிதனில் நேர்மையை ஒருபோதும் எதிர்பாராதீர்கள், ஆனால் நேர்மையாயிருக்க நீங்கள் ஒருபோதும் தவறாதீர்கள். நாம் எப்போதும் நீதியை எதிர்பார்க்கிறோம்; நீதியை ஒருபோதும் எதிர்பாராதீர் கள், ஆனால் நீதிசெய்வதை ஒருபோதும் நிறுத்தாதீர்கள் என்பதே மலைப் பிரசங்கத்தின் போதனை.

ஆவிக்குரிய கௌரவத்தின் நிலை

கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும் . . . நான் கடனாளியாயிருக்கிறேன். ரோமர் 1:14.

இயேசுகிறிஸ்துவுக்குத் தான் கடன்பட்டவன் என்ற உணர்வினால் பவுல் மேற்கொள்ளப்பட்டார்; அதை வெளிப்படுத்தும்படி அவர் தன்னையே செலவிட்டார். இயேசுகிறிஸ்துதான் தனக்கு ஆவிக்குரியநிலையில் கடன் கொடுத்தவர் என்ற பவுலின் கண்ணோட்டமே அவருடைய வாழ்க்கையில் பெரிய அகத்தூண்டுதலாயிருந்தது. இரட்சிக்கப்படாத ஒவ்வொரு ஆத்துமா வைக்குறித்தும் கிறிஸ்துவுக்கு நான் கடன்பட்டவன் என்னும் உணர்வை நான் பெற்றிருக்கிறேனா? அவர்களோடுள்ள தொடர்பில் கிறிஸ்துவுக்கான என் கடனைத் தீர்ப்பதே பரிசுத்தவான் என்கிற முறையில் என்னுடைய வாழ்க்கையின் ஆவிக்குரிய மேன்மையாகும். என் வாழ்வின் விலையுள்ள ஒவ்வொரு மிகச்சிறிய பாகத்துக்கும் நான் இயேசுகிறிஸ்துவின் மீட்புக்கே கடமைப்பட்டவன்; பிற வாழ்க்கைகளில் அவருடைய மீட்பை யதார்த்தமான வெளிப்பாட்டுக்குக் கொண்டுவர ஏதுவாக அவருக்கு நான் ஏதாகிலும் செய்கிறேனா? நான் கடமைப்பட்டவன் என்ற உணர்வைத் தேவனுடைய ஆவியானவர் எனக்குள் உண்டாக்கும்போதுமாத்திரமே நான் அவ்வாறு செய்யமுடியும்.

மனிதர்களிடையில் நான் மேம்பட்ட நபராயிருக்க எதிர்பார்க்கப்பட வில்லை, கர்த்தராகிய இயேசுவின் கொத்தடிமையாயிருக்கவேண்டும். நீங்கள் உங்களுடையவர்களல்ல. பவுல் தன்னை இயேசுகிறிஸ்துவுக்கு விற்றுவிட்டார். இயேசுவின் சுவிசேஷத்தினிமித்தம் நான் பூமுகத்திலுள்ள எல்லோருக்கும் கடனாளி; நிபந்தனையற்ற அடிமையாயிருப்பதற்காகவே நான் சுயாதீனனானேன் என்கிற கருத்தில் அவர் கூறுகிறார். ஆவிக்குரிய மேன்மையின் இந்த நிலையை உணரும்போது, அந்த வாழ்க்கையின் தனித்தன்மை இதுவே. உங்களைக்குறித்து ஜெபிப்பதை நிறுத்துங்கள், இயேசுவின் கொத்தடிமையாகப் பிறருக்காகச் செலவுபண்ணப்படுங்கள். அதுவே நடைமுறையில் நொறுக்கப்பட்ட அப்பமும் ஊற்றப்பட்ட இரசமும் ஆக்கப்படுவதின் கருத்தாகும்.

தெய்வீகக் கட்டுப்பாட்டின் கருத்து

பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிற வர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? மத்.7:11.

தம்முடைய ஆவியை அடைந்தவர்களுக்கான நடத்தைவிதிகளை இயேசு இங்கு வகுத்துக்கூறுகிறார். எல்லாக் காரியங்களுக்குப் பின்னிலும் தேவனுடைய கட்டுப்பாடு உண்டென்னும் கருத்தால் நம்முடைய மனதை நிரப்பிவைக்கவேண்டும் என்று இந்த வசனங்களின் எளிய வாதத்தினால் இயேசு நம்மைத் தூண்டுகிறார்; அதன் பொருள் என்னவென்றால், சீஷன் பூரணமான நம்பிக்கையின் மனநிலையையும், கேட்பதற்கும் தேடுவதற்கு மான ஆர்வத்தையும் காத்துக்கொள்ளவேண்டும்.

தேவன் இருக்கிறார் என்ற கருத்தை மனதில்கொள்ளுங்கள். அந்த நிலையில் உங்கள் மனதின் கருத்து இருக்குமானால் நீங்கள் பாடுகளில் இருக்கும்போது, ஏன், என் அப்பாவுக்கு அதைக்குறித்து எல்லாம் தெரியும் என்று நினைவுகூருவது மூச்சுவிடுவதுபோல அவ்வளவு எளிதாயிருக்கும். அது முயற்சியல்ல, மனக்குழப்பங்கள் அழுத்தும்போது அது இயற்கையாக வருகிறது. முன்பு, நீங்கள் இந்த மனிதனிடமும் அந்த மனிதனிடமும் வழக்கமாகச் சென்றீர்கள்; ஆனால் இப்போதோ, தெய்வீகக் கட்டுப்பாட்டின் எண்ணம் உங்களில் அதிக வல்லமையாய் உருவாகிக்கொண்டிருப்பதினால் அக்காரியத்தைக்குறித்து நீங்கள் தேவனிடமே போகிறீர்கள். இயேசு தமது ஆவியைப் பெற்றவர்களுக்கு நடத்தைவிதிகளை வகுத்துக்கூறுகிறார்; அது கீழ்க்கண்ட கொள்கைகளோடு செயல்படுகிறது: தேவன் என்னுடைய பரம பிதா, அவர் என்னை நேசிக்கிறார், அவர் மறக்கும் எக்காரியத்தையும் நான் ஒருபோதும் நினைக்கமாட்டேன், நான் ஏன் கவலைப்படவேண்டும்?

தேவன் இருளை உங்களிலிருந்து அகற்றமுடியாத வேளைகள் உண்டு, ஆயினும் அவரை நம்புங்கள் என்று இயேசு கூறுகிறார். இரக்க மற்ற நண்பர்போலத் தேவன் தோற்றமளிப்பார், ஆனால், அவர் அப்படி யல்ல; இயற்கைக்குமாறானத் தந்தைபோல அவர் தோன்றுவார், ஆனால், அவர் அப்படியல்ல; அநீதியான நியாயாதிபதிபோல அவர் தோற்றமளிப்பார், ஆனால், அவர் அப்படியல்ல. சகல காரியத்துக்குப் பின்னும் தேவனுடைய சித்தம் இருக்கிறது என்ற கருத்து உங்களில் உறுதியாயிருக்கட்டும், அது விருத்தியாகட்டும். தேவனுடைய சித்தமில்லாமல் எந்தப் பாகத்திலும் ஒன்றும் நேரிடுகிறதில்லை; ஆகையால், அவர்பேரிலுள்ள பூரண நம்பிக்கையில் நீங்கள் இளைப்பாறலாம். ஜெபம் என்றால் கேட்பது மட்டுமல்ல, கேட்பது பூரணமாய் இயற்கையாயிருக்கும் சூழ்நிலையை உருவாக்கும் மனநிலை யுங்கூட. கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்.

விசுவாசத்தின் அற்புதம்

என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ள தாயிராமல். 1 கொரி.2:5.

பவுல் ஒரு கல்விமானும் முதல்தரச் சொற்பொழிவாளருங்கூட; மிகுந்த தாழ்மையினிமித்தம் அவர் இவ்வாறு பேசவில்லை; சுவிசேஷத்தை அவர் பிரசங்கிக்கும்போது, அவருடைய சிறந்த வசனிப்பினால் மக்களைக் கவருவாரானால், தேவனுடைய வல்லமையை அவர் மறைத்துப்போடுவார் என்றே அவர் கூறினார். இயேசுவில் விசுவாசம் வைப்பது என்பது மீட்பின் பலாபலனால் உருவாகிற அற்புதம்; அது பேச்சின் கவர்ச்சியாலோ, நயந்து வேண்டி வெற்றிபெறுவதாலோ வருவதல்ல, அது தேவனுடைய தனிப்பட்ட வல்லமையினாலே ஆகும். மீட்பின் படைப்புத்திறன் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதின்மூலம் வருகிறது, ஒருபோதும் பிரசங்கியின் பிரசித்தியினாலல்ல. ஒரு பிரசங்கியினுடைய உண்மையான உபவாசம் வெறும் ஆகாரத்தை மட்டும் ஒதுக்குவதாகாது; ஓரளவுக்குப் பேச்சுத்திறமை, வளமையான உரை, சிறந்த மொழிநடை மற்றும் தேவனுடைய சுவிசேஷத்தை அறிமுகப்படுத்தத் தடையாயிருக்கும் எல்லாவற்றையும் ஒதுக்கவேண்டும். தேவனானவர் எங்களைக்கொண்டு வேண்டிக்கொள்ளுவதுபோல என்று பவுல் சொல்லுவது போல் தேவனுடைய பிரதிநிதியாகவே சுவிசேஷகன் அங்கு நிற்கிறார். மனிதக் கருத்துக்களை அல்ல, தேவனுடைய சுவிசேஷத்தை அறிவிக்கவே அவர் அங்கு நிற்கிறார். என்னுடைய பிரசங்கத்தின் காரணத்தால்மாத்திரம் முன்புவிடக் கூடுதல் நல்லவர்களாகவேண்டுமென்று மக்கள் விரும்பினால், அவர்கள் இயேசுகிறிஸ்துவினருகில் எங்கும் ஒருபோதும் வரமாட்டார்கள். நான் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் என்னைப் புகழ்ந்துபேசும் எதுவும் என்னை இயேசுவுக்குத் துரோகியாக்குவதில் முடிவடையும்; அவருடைய மீட்பின் படைப்புத்திறன் அதன் கிரியையைச் செய்வதிலிருந்து அதை நான் தடுக்கிறேன்.

நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்று இயேசு சொன்னார்.

விசுவாசிப்பதின் இரகசியம்

அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அப்.9:5.

மீட்பின் அற்புதத்தினால், தர்ஷீஸ் பட்டணத்து சவுல், ஒரு வினாடியில் திடச்சித்தமுள்ள தீவிரப் பரிசேய நிலையிலிருந்து கர்த்தராகிய இயேசுவின் தாழ்மையும் பக்தியுமுள்ள அடிமையாக மாற்றப்பட்டார்.

நம்மால் விளக்கமளிக்கக்கூடிய காரியங்களில் அற்புதம் ஒன்றும் இல்லை. நாம் விளக்கக்கூடிய காரியங்களை நாம் கட்டளையிடுகிறோம்; அதின்பலனாக, அவைகளுக்கு விளக்கமளிக்கத் தேடுவது இயற்கையே. கீழ்ப்படிவது இயற்கையல்ல; கீழ்ப்படியாதிருப்பது பாவமாயிருக்கவும் தேவை இல்லை. கட்டளையிடுகிற நபரில் உயர்ந்த அதிகாரம் இருக்கிறதாக ஒப்புக் கொண்டாலல்லாமல், கீழ்ப்படிவதில் தார்மீகச் சிறப்பு இருப்பதில்லை. அவர் கீழ்ப்படியாவிட்டால் ஒருவேளை மற்ற நபருக்கு அது விடுதலையாயிருக்க வாய்ப்புண்டு. ஒரு மனிதர் இன்னொருவரிடம், நீர் செய்யவேண்டும், நீர் செய்யக்கடவீர் என்று கூறுவாரேயாகில், அவர் மனித ஆவியை நொறுக்கி, அதைத் தேவனுக்குத் தகுதியற்றதாக்குகிறார். ஒரு மனிதனுடைய கீழ்ப்படிதலுக்குப் பின்னால் பரிசுத்த தேவனைக்குறித்த உணர்வு இருந்தாலன்றி அவர் கீழ்ப்படிதலுக்கு அடிமை. அவர் மார்க்கப்பற்றுள்ளவராயிருப்பதை நிறுத்தும்போது அநேக ஆத்துமாக்கள் தேவனிடம் வர ஆரம்பிக்கிறார்கள்; ஏனெனில், மனித இருதயத்திற்கு ஒரேயொரு எஜமான் மாத்திரமேயுண்டு, அது மார்க்கமல்ல, இயேசுகிறிஸ்துவே. ஆனால், நான் அவரைக் காணும் போது, நான் செய்யமாட்டேன் என்று கூறுவேனேயானால் எனக்கு ஐயோ! நான் அதைச் செய்யவேண்டுமென்று அவர் வற்புறுத்தமாட்டார், ஆனால் என் ஆத்துமாவில் தேவகுமாரனை அழித்துவிட ஆரம்பித்துவிட்டேன். இயேசுகிறிஸ்துவோடு நேருக்குநேர் நின்று, மாட்டேன் என்று நான் கூறும் போது அவர் ஒருபோதும் வற்புறுத்தமாட்டார்; ஆனால் அவருடைய மீட்பின் புதுப்படைப்பின் வல்லமையிலிருந்து நான் பின்வாங்கிச்செல்கிறேன். நான் ஒளியிடம் வருவேனேயானால் நான் எவ்வளவு அருவருப்பானவன் என்பது தேவகிருபைக்கு அக்கறையற்ற காரியம்; ஆனால், நான் ஒளியை மறுப்பே னேயானால் எனக்கு ஐயோ! (யோவான் 3:19-21 பார்க்க).

விசுவாசிமீதுள்ள ஆதிக்கம்

நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான். யோவான் 13:13.

தனக்கு அதிகாரம் இருப்பதை நம்முடைய ஆண்டவர் ஒருபோதும் வற்புறுத்துகிறதில்லை; செய்யக்கடவாய் என்று அவர் ஒருபோதும் கூறுகிற தில்லை. மனிதர் அவருக்குச் செய்ததுபோல நாம் அவருடைய முகத்தில் துப்பவும், மனிதர் அவருக்குச் செய்ததுபோல நாம் அவரைக் கொலை செய்யவுந்தக்கதாக அந்த அளவு அவர் நம்மை முற்றிலும் சுயாதீனராக விடுகிறார்; அவர் ஒரு வார்த்தையும் பேசமாட்டார். ஆனால் அவருடைய மீட்பின்மூலமாக அவருடைய ஜீவன் எனக்குள்ளே உருவாக்கப்படும்போது, என்மீதுள்ள பூரண அதிகாரத்துக்கான அவருடைய உரிமையை உடனடி உணருகிறேன். அது ஆத்மீக ஆதிக்கம்--கர்த்தாவே, தேவரீர், பாத்திரராயி ருக்கிறீர். என்னிலுள்ள தகுதியற்றதுதான் தகுதியானதுக்குத் தலைவணங்க மறுக்கும். என்னைவிடக் கூடுதல் பரிசுத்தமான ஒரு மனிதரை நான் சந்திக்கும்போது, அவருடைய தகுதியை ஒப்புக்கொள்ளாமலும், அவர்மூலம் வருகிறதற்குக் கீழ்ப்படியாமலுமிருப்பேனானால் என்னிலுள்ள தகுதியற்ற தன்மையின் வெளிப்பாடே அது. நம்முடைய ஆண்டவரின் ஆளுகைக்குக் கீழ் நாம் வரும்வரையிலும், அறிவில் அல்ல, பரிசுத்தத்தில் நம்மைவிடச் சிறிதளவு சிறந்தவர்கள்மூலம் நம்மைக் கற்பிக்கிறார்; பின்பு வாழ்க்கையின் முழு மனநிலையும் அவருக்குக் கீழ்ப்படிகிறதாயிருக்கும்.

நம்முடைய ஆண்டவர் கீழ்ப்படிதலை வற்புறுத்துவாரானால் அவர் கடினமாய் வேலைவாங்குகிறவராவார்; அவர் அதிகாரத்தை இழந்துபோவார். அவர் ஒருபோதும் கீழ்ப்படிதலை வற்புறுத்துவதில்லை. ஆனால், அவரைக் காணும்போதோ உடனடியாக நாம் அவருக்குக் கீழ்ப்படிகிறோம். அப்போது அவர் எளிதாக நமது ஆண்டவராகிறார், எனவே காலைமுதல் இரவுவரை அவரைப் போற்றுவதிலேயே வாழுகிறோம். கீழ்ப்படிதலை நான் எவ்வாறு கருதுகிறேன் என்பதே கிருபையில் என் வளர்ச்சியை வெளிப்படுத்துகிறது. கீழ்ப்படிதல் என்ற வார்த்தையை உலகத்தின் தவறான கருத்திலிருந்து நாம் காப்பாற்றவேண்டும். கீழ்ப்படிதல் சமமானவர்களுக்குள் மாத்திரமே சாத்தியம். அது தந்தைக்கும் மகனுக்குமிடையே உள்ள உறவு; அது எஜமானுக்கும் வேலைக்காரனுக்குமிடையேயுள்ள உறவல்ல. நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்று இயேசு சொன்னார். அவர் குமாரனா யிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார் என்று வாசிக்கிறோம். அவர் குமாரனாவதற்காக அல்ல, அவர் குமாரனாயிருந் ததினால் மீட்பர் என்ற நிலையிலேயே அவர் கீழ்ப்படிந்தார்.

தேவப் பிரசன்னத்தைச் சார்ந்திருத்தல்

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ . . . நடந்தாலும் சோர்ந்துபோகார்கள். ஏசா.40:31.

நடப்பதில் உள்ளக் கிளர்ச்சியடைய ஒன்றுமில்லை; உறுதியான தன்மைகள் எல்லாவற்றின் சோதனை அது. நடந்தாலும் சோர்ந்துபோகாதிருப்பது பலத்தின் உச்சக்கட்டத்தை அடைவதே. வேதபுத்தகத்தில் நடப்பது என்னும் வார்த்தை பண்பைத் தெரிவிக்கப் பயன்படுத்தப்படுகிறது--இயேசு நடந்து போகிறதை யோவான் கண்டு: இதோ, தேவ ஆட்டுக்குட்டி என்றான். வேதத்தில் மறைபொருளான எதுவுமில்லை; அது எப்போதும் தெளிவாயும் நிஜமானதாயுமிருக்கிறது. நீங்கள் ஆவிக்குரியவர்களாயிருங்கள் என்றல்ல எனக்கு முன்பாக நடவுங்கள் என்றே தேவன் சொல்லுகிறார்.

சரீரத்திலோ அல்லது உணர்வைச்சார்ந்தோ நாம் ஆரோக்கியமற்ற நிலையில் இருக்கும்போது, நாம் எப்போதும் உள்ளக் கிளர்ச்சியடைய எதிர்பார்க்கிறோம். பௌதிக மண்டலத்தில் இது பரிசுத்த ஆவியைப்போல போலியாக நடிக்க வழிநடத்தும்; உணர்வுக்குரிய வாழ்க்கையில் இது கட்டுப்பாடற்ற ஆசைகளுக்கும், நற்பண்பின் அழிவுக்கும் வழிநடத்தும்; ஆவிக்குரிய மண்டலத்தில் உள்ளக் கிளர்ச்சிகளைப் பெற்றுக்கொள்ளவும், சிறகடித்து உயரப் பறக்கவும் நாம் வலியுறுத்தினால் அது ஆன்மீகம் அழிக்கப்படுவதில் முடிவடையும்.

தேவப்பிரசன்னத்தின் உணர்ச்சி எந்த இடத்தையும் சார்ந்ததல்ல; கர்த்தரை நமக்குமுன் எப்போதும் வைத்திருப்பதற்கானத் தீர்மானத்தைச் சார்ந்ததே அது. அவருடைய பிரசன்னத்தின் யதார்த்தத்தில் நம்பிக்கை வைக்க நாம் மறுக்கும்போதுதான் நமக்குப் பிரச்சனைகள் வருகின்றன. நாம் தேவப்பிரசன்னத்தின் நம்பிக்கையில் உறுதிப்படும்போது, அதாவது, தேவப்பிரசன்னத்தின் அறிவையல்ல, ஏன், அவர் எப்போதும் இங்கேதானே இருந்திருக்கிறார் என்னும் தேவப்பிரசன்னத்தின் உண்மையை அனுபவிக்கும்போது, ஆகையால் நாம் பயப்படோம் என்று சங்கீதக்காரன் கூறிய அனுபவம் நமக்குச் சொந்தமாகும்.

சிக்கலான வேளைகளில் வழிகாட்டுதலைக் கேட்பது தேவைதான்; ஆனால், ஆண்டவரே, நீர் என்னை இங்கு நடத்தும், அல்லது அங்கு நடத்தும் என்று எப்போதும் கூறுவது தேவையற்றதாயிருக்கவேண்டும். நிச்சயமாகவே அவர் வழிநடத்துவார்! நம்முடைய பகுத்தறிவின்படியுள்ள தீர்மானங்கள் தேவனுடைய ஒழுங்காயிராவிட்டால் அவைகளை அவர் தடைசெய்வார்; அப்போது நாம் அமர்ந்திருக்கவேண்டும், அவருடைய பிரசன்னத்தின் வழிநடத்துதலுக்காகக் காத்திருக்கவேண்டும்.

ராஜ்யத்துக்கான நுழைவாயில்

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள். மத்.5:3.

நம்முடைய ஆண்டவருக்குப் போதகர் என்ற இடத்தை முதலாவது கொடுப்பதில் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இயேசுகிறிஸ்து போதகராக மாத்திரம் இருப்பாரானால், அவர் செய்யக்கூடியதெல்லாம் நான் அடைய முடியாத ஒரு இலக்கை நிறுவி, என்னை ஏங்கவைப்பதே. கூடியவரையில் நான் அருகில் வரமுடியாத ஒரு லட்சியத்தை எனக்குமுன் வைப்பதால் பயன் என்ன? அதை நான் அறியாதிருந்தால் மகிழ்ச்சியாயிருப்பேனே! இருதயத்தில் சுத்தமாய் இருப்பது, என் கடமையைவிடக் கூடுதல் செய்வது, தேவனுக்கு முழுவதும் விசுவாசமாயிருப்பது போன்ற நான் ஒருபோதும் அடையமுடியாத நிலைகளை எனக்குச் சொல்லுவதினால் நன்மை என்ன? இயேசுகிறிஸ்துவின் போதனை என்னை நம்பிக்கையிழப்புக்கு வழிநடத்தும் லட்சியமாயல்லாமல் அது எனக்கு ஏதாவது கருத்துள்ளதாகிறதற்குமுன் என் இரட்சகராய் அவரை நான் அறியவேண்டும். தேவஆவியினால் நான் மறுபடியும் பிறந்தபின், இயேசுகிறிஸ்து போதிக்கமாத்திரம் வரவில்லை என்று நான் அறிகிறேன்; நான் எவ்வாறிருக்கவேண்டுமென்று அவர் போதிக்கிறாரோ அவ்வாறு என்னை ஆக்கவே வந்தார். இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையை ஆட்சிசெய்த மனநிலையை அவரால் எந்த மனிதனிலும் வைக்கமுடியுமென்பதும், தேவன் கொடுக்கிற அளவுகளெல்லாம் அந்த மன நிலையை அடிப்படையாகக்கொண்டவை என்பதுமே மீட்பின் கருத்து.

மலைப்பிரசங்கத்தின் போதனை ஜென்ம சுபாவமான மனிதனில் நம்பிக்கையிழப்பை உண்டாக்குகிறது--மலைப்பிரசங்கம் அக்காரியத்தைச் செய்யவேண்டும் என்றுதான் இயேசுவும் எண்ணினார். நம் ஆண்டவரின் போதனையை நாம் செயல்படுத்தலாம் என்கிற சுயநீதியும் இறுமாப்புமான எண்ணம் நம்மில் இருக்கிறபடியால், சில தடைகளினால் நம்முடைய அறிவீனத்தை நாம் வெளிப்படுத்தும்வரை தேவன் நம்மை விட்டுவிடுவார்; அப்போது நாம் பரம ஏழைகளாய் அவரிடத்தில் வரவும், அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளவும் சித்தங்கொள்வோம். ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்பதே தேவராஜ்யத்தின் முதலாம் கொள்கையாகும். இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்துக்குரிய அடித்தளம் சொத்தல்ல, தரித்திரமே; இயேசுகிறிஸ்துவுக்காகத் தீர்மானிப்பதல்ல, இதைச்செய்ய என்னால் ஆரம் பிக்கமுடியாது என்ற முற்றிலும் பயனற்ற உணர்வே. அப்போது இயேசு, நீங்கள் பாக்கியவான்கள் என்கிறார். அதுதான் நுழைவாயில், நாம் ஏழை கள் என்று நம்புவதற்கு அதிகக் காலம் எடுக்கிறது! நம்முடைய சொந்தத் தரித்திரத்தைக்குறித்த அறிவு இயேசுகிறிஸ்து கிரியை செய்யும் தார்மீக எல்லைக்கு நம்மைக் கொண்டுசெல்லும்.

பரிசுத்தமுள்ளவர்களாகுதல்

நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. 1 தெச.4:3.

மரண பக்கம்: பரிசுத்தமாகுதலில் மரண பக்கத்திலும் ஜீவபக்கத்திலும் தேவன் நம்மோடு இடைபடவேண்டியதுண்டு. நம்மில் அநேகர் மரணத்தின் இடத்தில் அதிக நேரத்தைச் செலவிடுவதினால், நாம் விசாரமுள்ளவர்களாகிறோம். பரிசுத்தமாகுதலுக்குமுன் எப்போதும் கடுமையான போர் உண்டு; இயேசுகிறிஸ்துவின் கோரிக்கைகளுக்கு எதிராக வெறுப்போடு பலமாக இழுக்கும் ஏதோவொன்று எப்போதும் உண்டு. பரிசுத்தமாகுதல் என்றால் என்னவென்று தேவஆவியானவர் நமக்குக் காண்பித்தவுடனே போராட்டம் ஆரம்பிக்கிறது. யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் ஜீவனை வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான் என்றார் இயேசு.

பரிசுத்தமாக்கும் செயலில் 'நான்' தவிர நான் வேறொன்றும் இல்லாமலாகுமட்டும் தேவஆவியானவர் என்னை வெறுமையாக்குவார், அதுதான் மரணத்தின் இடம். நண்பர்கள் இல்லை, தகப்பன் இல்லை, சகோதரன் இல்லை, சுயநலம் இல்லை; மரணத்துக்கு ஆயத்தம் என்ற நிலையில் 'நான்' தவிர கூடுதல் ஒன்றுமில்லை என்றாவதற்கு எனக்கு விருப்பந்தானா? அதுதான் பரிசுத்தமாகுதலின் நிபந்தனை. நான் சமாதானத்தையல்ல, பட்டயத்தை அனுப்பவே வந்தேன் என்று இயேசு கூறியதில் வியப்பில்லை. இங்குதான் போர் வருகிறது, நம்மில் அநேகர் மயக்கமடைகிறோம். இக்காரியத்தில் இயேசுவின் மரணத்தோடு ஒன்றிக்க நாம் மறுக்கிறோம். அது மிகவும் கடுமையானது, அதை நான் செய்யவேண்டுமென்று அவர் விரும்பமுடியாது என்று நாம் கூறுகிறோம். நம் ஆண்டவர் கண்டிப்பானவர், நான் அதைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறார்.

என் நண்பர்களெல்லாம் என்னைப்பற்றி என்ன எண்ணுகிறார்கள், நான் என்னைப்பற்றி என்னதெல்லாம் எண்ணுகிறேன் என்கிறவைகளைத் தீர்மானமாக உரிந்துவிட்டு, 'நான்' மட்டும் என்ற நிலைக்கு என்னைக் குறைத்து, வெறுமையான என்னைத் தேவனுக்கு ஒப்படைக்க நான் ஆயத்தந்தானா? நான் 'நான்' ஆனவுடன் அவர் என்னை முழுவதும் பரிசுத்தமாக்குவார், அப்போது தேவனைத்தவிர வேறெந்தத் தொடர்பிலும் நாட்டங் கொள்வதிலிருந்து என் வாழ்க்கை விடுதலையாகும்.

ஆண்டவரே, பரிசுத்தமாகுதல் எனக்கு என்ன பொருட்படுகிறது என்று எனக்குக் காண்பியும் என்று நான் ஜெபிக்கும்போது அவர் எனக்குக் காண்பிப்பார். இயேசுவோடு ஒன்றாக்கப்படுவது என்பதே அதன் கருத்தாகும். இயேசுகிறிஸ்து எனக்குள் எதையோ வைக்கிறது அல்ல பரிசுத்தமாகுதல், அவர்தாமே எனக்குள் இருப்பதாகும்.

பரிசுத்தமுள்ளவர்களாகுதல்

நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். அவரே தேவனால் நமக்கு . . . பரிசுத்தமானார். 1 கொரி.1:30,31.

ஜீவனின் பக்கம்: இயேசுகிறிஸ்து எனக்குப் பரிசுத்தமானார் என்னும் பகுத் தறிவுக்குள் நான் விசுவாசத்தினால் பிரவேசிக்கும்போது, அவருடைய பூரணத் தன்மைகள் கிரமமாகவல்ல, உடனடியாக எனக்குக் கொடுக்கப்படு கின்றன என்பதே பரிசுத்தமாக்கப்படுதலின் இரகசியமாகும். இயேசுவின் பரிசுத்தம் வெளிப்படையாக எனக்குரியதாக்கப்படுகிறது என்கிறதைவிட வேறு கருத்து பரிசுத்தமாகுதலுக்கு இல்லை.

இயேசுவைப்போல் நடிப்பதில் அல்ல, என் சாவுக்குரிய சரீரத்தில் அவருடைய பூரணத் தன்மைகள் வெளிப்பட நான் அனுமதிப்பதில்தான் பரிசுத்த வாழ்க்கையின் ஒரே அற்புதமான இரகசியம் அடங்கியிருக்கிறது. கிறிஸ்துவானவர் உங்களுக்குள் இருப்பதே பரிசுத்தமாகுதலாகும். பரிசுத்த மாகுதலில் அவருடைய அற்புதமான ஜீவன் எனக்குப் பகிர்ந்தளிக்கப்படு கிறது; தேவனுடைய கிருபையின் தெய்வீகத் தானமாக விசுவாசத்தின்மூலம் அது பகிர்ந்தளிக்கப்படுகிறது. பரிசுத்தமாகுதல் அவருடைய வசனத்தில் கூறப்பட்டிருப்பதுபோல என்னில் அதைத் தேவன் நடைமுறையிலாக்கு வதற்கு எனக்குச் சித்தந்தானா?

இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமானப் பண்புகளைப் பகிர்ந்தளிப்பதே பரிசுத்தமாக்குதல் என்பதின் பொருளாகும். அவருடைய பொறுமை, அன்பு, தூய்மை, விசுவாசம், ஒழுக்கம், தேவபக்தி என்பவைகள் பரிசுத்தமாக்கப்பட்ட ஒவ்வொரு ஆத்துமாவிலும் ஆத்துமாவினூடேயும் வெளிப்படுத்தப்படுகிறது. பரிசுத்தமாகுதல் என்பது பரிசுத்தமாய் இருப்பதற்கான வல்லமையை இயேசு விடமிருந்து அடைந்துகொள்வது அல்ல, இயேசுவில் வெளிப்பட்ட பரிசுத் தத்தை நான் அவரிடமிருந்து அடைந்துகொள்வதே, அதை அவர் என்னில் வெளிப்படுத்துகிறார். பரிசுத்தமாகுதல் என்பது பகிர்ந்தளித்தல், அது போலி நடிப்பல்ல. போலி நடிப்பு என்பது வேறொரு காரியம். இயேசுகிறிஸ்துவில் எல்லாவற்றின் பூரணமும் இருக்கிறது; இயேசுவிலுள்ள சகல பூரணத்தன் மைகளும் எனது பயன்பாட்டுக்குக் கிடைக்கக்கூடியவை; மற்றும் தேவவல்ல மையினால் காக்கப்பட்டு, வர்ணிக்கமுடியாத ஒழுங்கும் தெளிந்த புத்தியும் தூய்மையுமுள்ள வாழ்க்கை, விரைவாக அல்லாவிட்டாலும், நிச்சயமாக நடத்த நான் ஆரம்பிக்கிறேன் என்பதே பரிசுத்தமாகுதலின் இரகசியமாகும்.

மனநிலையும் கிரியைகளும்

வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிவேசிக்கமாட்டீர்கள். மத்.5:20.

ஒரு சீஷனுடைய தனிப்பண்பு அவர் நன்மையான கிரியைகளைச் செய்கிறார் என்பதல்ல; அவர் தம்முடைய நோக்கத்தில் நல்லவராயிருப்பதே; ஏனெனில், அவர் தேவனுடைய தெய்வீகக் கிருபையினால் நல்லவராக்கப் பட்டிருக்கிறார். நேர்மையான செயல்பாட்டை மிஞ்சும் ஒரே காரியம் நேர்மையான வாழ்க்கையே. தனக்கு அனுமதியளிக்கிற எந்த மனிதனுக்குள்ளும், வேதபாரகர் மற்றும் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் அதிகமான ஒரு புதிய பாரம்பரியத்தை வைக்கவே இயேசுகிறிஸ்து வந்தார். நீங்கள் என் சீஷராயிருந்தால் உங்கள் வாழ்க்கைமுறையில் மாத்திரமல்ல, உங்கள் நோக்கங்களிலும் உங்கள் கனவுகளிலும் உங்கள் மனதின் ஒதுக்கிடங்களிலும் நீங்கள் நேர்மையாயிருக்கவேண்டும் என்று இயேசு கூறுகிறார். கண்டனம் செய்யப்படவேண்டிய எதையும் சர்வவல்லமையுள்ள தேவன் உங்களில் கண்டுபிடிக்காதபடி உங்கள் நோக்கங்களில் நீங்கள் தூய்மையாயிருக்கவேண்டும். தேவனுடைய நித்திய வெளிச்சத்தில் நிற்கும்போது, அவரால் கண்டனஞ்செய்யக்கூடியது ஒன்றுமில்லாமலிருப்பவர் யார்? தேவகுமாரன் மாத்திரமே; தம்முடைய மீட்பினால் தமது சொந்தத் தன்மையை எந்த மனிதனுக்குள்ளும் வைத்து, அவனை ஒரு குழந்தையைப்போல களங்கமில்லாமலும் எளிமையாகவும் உருவாக்கமுடியுமென்று இயேசு கிறிஸ்து உறுதியாகக் கூறுகிறார். நான் உள்ளாகப் புதுச்சிருஷ்டியாகாவிட்டால் தேவன் தேவைப்படுகிற தூய்மை சாத்தியமல்ல; ஆனால், இயேசு தம்முடைய மீட்பின்மூலம் இதைத்தான் செய்யும்படி மேற்கொண்டுள்ளார்.

கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதின்மூலம் ஒரு மனிதனும் தன்னைத் தூய்மையாக்கமுடியாது. இயேசுகிறிஸ்து நமக்குச் சட்டங்களையும் விதிமுறைகளையும் கொடுக்கவில்லை; அவருடைய போதனைகள் அவர் நமக்குள் வைக்கிற தன்மையினால் மாத்திரம் வியாக்கியானிக்கப்படக்கூடிய சத்தியங்கள். இயேசுகிறிஸ்து பாரம்பரியத்தைத் திருத்தியமைக்கிறார் என்பதே அவர்மூலம் கிடைக்கும் இரட்சிப்பின் சிறந்த அற்புதம். அவர் மனிதத் தன்மையைத் திருத்தியமைக்கிறதில்லை, அதை இயக்கும் ஆதாரத்தை அவர் திருத்தியமைக்கிறார்.

நான் இவ்வாறு பாக்கியவான்தானா?

.....பாக்கியவான்கள். மத்.5:3–10.

இயேசுவின் கூற்றுக்களை நாம் முதல்முறையாக வாசிக்கும்போது, அவைகள் வியப்புறும்வகையில் தெளிவானவையாகவும் அச்சுறுத்தாதவையாகவும் தோன்றுகின்றன; அவை நம்மை அறியாமலே நமது உள்மனதில் பதிந்துவிடுகின்றன. எடுத்துக்காட்டாக, இவ்வுலகத்துக்குரியவர்களல்லாதவர்களும் பயனற்றவர்களுமான மக்களுக்கு பாக்கியவசனங்கள் சாந்தமான, இனிமையான கருத்துக்களாகவும், ஆனால், நாம் வாழும் இந்தக் கடுமையான உழைப்பின் உலகத்தில் இவைகள் மிகக் குறைந்த நடைமுறைப்பயனுள்ளவையாகவும் தோன்றுகின்றன. ஆயினும் வெகு சீக்கிரத்தில் இந்தப் பாக்கியவசனங்கள் பரிசுத்த ஆவியானவரின் (வெடி மருந்துபோன்ற) வல்லமைகொண்டிருக்கின்றன என்று நாம் கண்டுகொள்ளுகிறோம். நம்முடைய வாழ்க்கைச் சூழ்நிலைகள் அவைகளை வெடிக்கச்செய்யும்போது அவை வேட்டுப்போல வெடிக்கின்றன. பாக்கிய வசனங்களில் ஒன்றைப் பரிசுத்த ஆவியானவர் நம்முடைய நினைவுக்குக் கொண்டுவரும்போது, அது எத்தனை அதிர்ச்சியளிக்கும் அறிக்கை என்று கூறுகிறோம்; அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவோமானால் நம்முடைய சூழ்நிலைகளில் உருவாக்கப்படும் மிகப் பெரிய ஆவிக்குரிய எழுச்சியை ஏற்றுக்கொள்ளுவோமா என்பதை நாம் தீர்மானிக்கவேண்டும். தேவனுடைய ஆவியானவர் செயல்படுகிற முறை இதுவே. மலைப்பிரசங்கத்தை வார்த்தையின்படியே நாம் கடைப்பிடிக்க மறுபடியும் பிறந்துதானாகவேண்டும் என்ற அவசியம் இல்லை. மலைப்பிரசங்கத்தின் வார்த்தையின்படியுள்ள வியாக்கியானம் குழந்தைத்தனமானது; நம்முடைய ஆண்டவருடைய கூற்றுக்களைத் தேவ ஆவியானவர் நம்முடைய சூழ்நிலைகளுக்குப் பயன்படுத்துகிறதை ஆவியானவரின் ஒத்தாசையோடு வியாக்கியானிப்பது ஒரு பரிசுத்தவானின் கண்டிப்பான வேலையாகும்.

இயேசுவின் போதனை நாம் காரியங்களை இயல்பாகப் பார்ப்பதை விட மிகவும் முக்கியமானது; ஆரம்பநிலையில் அது மலைக்கவைக்கும் நிம்மதியின்மையைத் தருகிறது. பரிசுத்த ஆவியானவர் இயேசுகிறிஸ்துவின் கருத்துக்களை நம்முடைய சூழ்நிலைகளுக்கேற்றவாறு பயன்படுத்தும் போது, அந்தப் போதனைகளுக்கொத்து நமது நடத்தையையும் வாழ்க்கை முறையையும் கிரமமாக அமைத்துக்கொள்ளவேண்டும். மலைப்பிரசங்கம் சட்டதிட்டங்களின் தொகுப்பல்ல; பரிசுத்த ஆவியானவர் தமது விருப்பத்தை நம்மில் கொண்டுநடத்தும்போது நாம் வாழப்போகும் வாழ்க்கையின் அறிக்கையே அது.

தூய்மையோடுள்ள கணக்கு

இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும்.... மத்.15:18-20.

நம்முடைய அறிவீனத்தின்மீது நம்பிக்கை வைத்து அதைக் குற்ற மின்மை என்று அழைக்கிறதிலும், குற்றமின்மையின்மீது நம்பிக்கை வைத்து அதைத் தூய்மை என்று அழைக்கிறதிலும் நாம் ஆரம்பிக்கிறோம்; நம்முடைய ஆண்டவரின் இந்தக் கடுமையானக் கூற்றுக்களை நாம் கேட்கும்போது, நாம் திகைத்தவர்களாய், அந்தப் பயங்கரமான காரியங்கள் எதையும் ஒருபோதும் என் இருதயத்தில் நான் உணர்ந்ததில்லை என்று கூறுகிறோம். இயேசுகிறிஸ்து வெளிப்படுத்துகிறவைகளை நாம் வெறுக்கி றோம். ஒன்றில் இயேசுகிறிஸ்து மனித இருதயத்தைக்குறித்த அறிவுள்ள ஒப்புயர்வற்ற வல்லுநர், அல்லது அவர்மீது எந்தக் கவனமுஞ்செலுத்த அவர் தகுதியற்றவர். அவருடைய விவேகத்தை நம்புவதற்கு நான் ஆயத் தந்தானா? அல்லது என்னுடைய களங்கமற்ற அறிவீனத்தில் நம்பிக்கை வைக்க முன்னுரிமை கொடுக்கிறேனா? மனப்பூர்வமான குற்றமின்மையை உரைகல்லாக்குவேனானால், இயேசுகிறிஸ்து கூறியது உண்மை என்பதை நடுங்கும் விழிப்புணர்ச்சியோடு நான் கண்டுகொள்ளும் நிலைக்கு வர வாய்ப்புண்டு; தீமையும் தவறும் என்னில் சாத்தியம் என்கிற உணர்வால் நான் திடுக்கிடுவேன். களங்கமின்மையின் பாதுகாவலின்கீழ் நான் தங்கி யிருக்கும் காலம்வரை தவறான நம்பிக்கையில் நான் வாழுகிறேன். நான் இதுவரை அயோக்கியனாயில்லாமலிருப்பேனானால் கோழைத்தனமும் நாகரீகமான வாழ்க்கையின் பாதுகாவலும் சேர்ந்ததுதான் அதன் காரணம்; ஆனால், நான் தேவனுக்குமுன்பாக ஒளிவு மறைவு இல்லாமல் நிற்கும் போது, என்னைக்குறித்து இயேசுகிறிஸ்து செய்த ஆய்வுறுதி சரியென்று கண்டுகொள்ளுகிறேன்.

பாதுகாவலளிக்கும் ஒரே காரியம் இயேசுகிறிஸ்துவின் மீட்பே. என்னை நான் அவருக்கு ஒப்படைப்பேனானால், என் இருதயத்திலிருக்கும் பயங்கரமான சாத்தியதைகளை நான் ஒருபோதும் அனுபவிக்கத் தேவை இல்லை. நான் இயற்கையாக உணரமுடியாதபடி பரிசுத்தம் எனக்கு மிகவும் ஆழமானது; ஆனால், பரிசுத்தஆவியானவர் உள்ளே வரும்போது, இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையில் வெளிப்படுத்தப்பட்ட அதே ஆவியை, அதாவது களங்கமற்ற தூய்மையாகிய பரிசுத்த ஆவியை, என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையின் மையத்தில் கொண்டுவருகிறார்.

அறிவதற்கான வழி

அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசத்தை....அறிந்துகொள்ளுவான். யோவான் 7:17.

ஆவிக்குரியநிலையில் புரிந்துகொள்வதற்கானத் தங்கப்பிரமாணம் அறிவாற்றலல்ல, கீழ்ப்படிதலே. ஒரு மனிதன் விஞ்ஞான அறிவு தேவைப் படுவானானால் அறிவாற்றல் சார்ந்த ஆர்வம் அவனது வழிகாட்டியாகும்; ஆனால், அவன் இயேசுகிறிஸ்து கற்பிக்கிறவைகளுக்குள் ஆழ்ந்த அறிவு அடைந்துகொள்ள விரும்பினால் அதைக் கீழ்ப்படிதல்மூலமாக மாத்திரமே பெற்றுக்கொள்ளமுடியும். காரியங்கள் எனக்கு இருளாயிருக்குமானால், நான் கீழ்ப்படியாத ஏதாவது ஒன்று உண்டென்று நிச்சயமாய் அறிந்து கொள்ளலாம். அறிவுசார்ந்த அந்தகாரம் அறியாமையிலிருந்து வருகிறது; ஆவிக்குரிய அந்தகாரம் நான் கீழ்ப்படியக் கருதாத ஏதோவொன்றினால் ஏற்படுகிறது.

தேவனிடத்திலிருந்து ஒரு வார்த்தை ஒரு மனிதனுக்கு வந்ததும், அவன் உடனே அதைக்குறித்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறான். நாம் கீழ்ப்படியாமலிருந்துவிட்டு, பின்பு ஆவிக்குரிய நிலையில் தொடர்ந்து ஏன் வாழவில்லை என்று ஆச்சரியப்படுகிறோம். நீ பலிபீடத்தினிடத்தில்..... வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில் (நீ என்னிடத்தில் ஒன்றுங் கூறவேண்டாம்), போய் முன்பு உன் சகோதரனிடத்தில் ஒப்புரவாகு என்றார் இயேசு. நாம் வாழுகிற இடத்தில் இயேசுவின் போதனைகள் நம்மைத் தாக்குகின்றன. அவருடைய முன்னிலையில் நாம் ஒரு வினாடிபோலும் வஞ்சகர்களாய் நிற்கமுடியாது; நுணுக்கமான காரியம்வரையிலும் அவர் நம்மைக் கற்பிக்கிறார். தன்னை நியாயப்படுத்தும் ஆவியைத் தேவஆவியானவர் வெளிப்படுத்துகிறார்; நாம் இதற்குமுன் சிந்திக்காத காரியங்களுக்கும் அவர் நம்மைக் கூச்சமடையச் செய்கிறார்.

இயேசு ஏதாவது ஒரு காரியத்தைத் தம்முடைய வார்த்தையினால் மிகவும் தெளிவாக்கும்போது அதைத் தட்டிக்கழிக்காதேயுங்கள். அப்படிச் செய்தால் நீங்கள் மார்க்க வஞ்சகர்களாவீர்கள். எந்தக் காரியங்களுக்கு நீங்கள் அக்கறை காண்பிக்கவில்லை என்று கவனித்துக்கொள்ளுங்கள், அப்போது நீங்கள் ஏன் ஆவிக்குரிய வளர்ச்சி அடையவில்லை என்பதைக் கண்டுகொள்வீர்கள். முதலாவதாகச் செல்லுங்கள்--மார்க்கப்பித்தன் என்று பிறரால் நினைக்கப்படவேண்டியதுவந்தாலும், தேவன் உங்களிடத்தில் சொல்லுகிறவைகளுக்கு நீங்கள் கீழ்ப்படியவேண்டும்.

கீழ்ப்படிதலுக்குப்பின் என்ன?

தம்முடைய சீஷர்கள் படவில் ஏறி அக்கரையில்...போகும்படி, அவர்களைத் துரிதப்படுத்தினார். மாற்கு 6:45-52.

இயேசுகிறிஸ்து நம்மை ஏவும்போது நாம் அவருக்குக் கீழ்ப்படி வோமானால், அவர் நம்மைப் பெரிய வெற்றிக்குநேராக வழிநடத்துவார் என்று நாம் நினைக்க ஏதுவுண்டு. நமது வெற்றிக்கானச் சொப்பனங்களை தேவன் நமக்காகக்கொண்ட குறிக்கோளாகக் கருதக்கூடாது; அவருடைய நோக்கம் நேர் எதிராயிருக்கலாம். ஒரு குறிப்பிட்ட லட்சியத்துக்கு, அதாவது நாம் விரும்புகிற இலக்குக்குநேராக தேவன் நம்மை நடத்துகிறார் என்ற எண்ணம் நமக்கிருக்கிறது; அவர் அப்படிச்செய்யவில்லை. ஒரு குறிப்பிட்ட இலக்கைச் சென்றடைவது என்பது ஒரு சம்பவம் மாத்திரமே. நாம் நடை முறை என்று அழைக்கிறதைத் தேவன் இலக்கு என்று அழைக்கிறார்.

தேவனுடைய நோக்கத்தைக்குறித்த என்னுடைய தரிசனமென்ன? அவரிலும் அவருடைய வல்லமையிலும் நான் இப்போதே சார்ந்திருக்க வேண்டும் என்பதே அவருடைய நோக்கம். குழப்பத்தின் மத்தியில் சலனம் இல்லாமலும் கலக்கமடையாமலும் என்னால் இருக்கக்கூடுமானால் அதுவே தேவனுடைய நோக்கத்தின் இலக்கு. ஒரு குறிப்பிட்ட இலக்குக்குநேராகத் தேவன் செயல்படவில்லை; அவர் அலைகளின்மேல் நடக்கிறதைப் பார்க்கி றேன், கரையோன்றும் தென்படவில்லை, வெற்றியில்லை, இலக்குமில்லை, ஆனால், அவர் கடலின்மேல் நடக்கிறதை நான் பார்க்கிறபடியால், எல்லாம் சரியாயிருக்கிறது என்கிற பூரணமான நிச்சயம் மாத்திரமே எனக்குண்டு; இந்த நடைமுறைதான் அவருடைய இலக்கு. இலக்கல்ல, நடைமுறையே தேவனை மகிமைப்படுத்துகிறது.

தேவனுடைய பயிற்சி இப்போதைக்கே, பிற்காலத்துக்கல்ல. அவரது நோக்கம் இந்த நிமிடத்துக்கே, வருங்காலத்திலுள்ள ஏதோவொன்றிற்கல்ல. கீழ்ப்படிவதில் பின்னரோடு நமக்கு எந்தத் தொடர்புமில்லை; பிற்பாட்டைக் குறித்து எண்ணுவது நாம் தவறு செய்கிறதாகும். பயிற்சிபெறுதல் மற்றும் ஆயத்தமாகுதல் என்று மனிதர் அழைக்கிறவைகளைத் தேவன் இலக்கு என்று அழைக்கிறார்.

என் வாழ்க்கையின் குழப்பங்களின்மீது தற்சமயத்திலும் அவரால் நடக்கமுடியும் என்கிறதை நான் காணச்செய்வதே தேவனுடைய இலக்கு. இன்னும் தூரத்திலுள்ள இலக்கை நாம் கருத்தில்கொள்வதால், அடுத்துள்ள நிகழ்காலத்துக்குப் போதுமான கவனஞ்செலுத்துகிறதில்லை; ஆனால், கீழ்ப்படிதல்தான் இலக்கு என்று நாம் அறிவோமானால், நாம் எதிரிடுகிற ஒவ்வொரு வினாடியும் விலையேறப்பெற்றதே.

உங்கள் மேகங்களில் நீங்கள் என்ன காண்கிறீர்கள்?

இதோ, மேகங்களுடனே வருகிறார். வெளி.1:7.

வேதபுத்தகத்தில் மேகங்கள் எப்போதும் தேவனோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கைகளின் உள்ளேயோ, புறம்பேயோ தேவனுடைய ஆளுகையை மறுக்கிறதாகக் காணப்படுகிற துயரங்கள், துன்பங்கள் அல்லது வருங்காலத்தைக்குறித்த விசாரங்களே மேகங்கள். நாம் விசுவாசத்தில் நடப்பது எவ்வாறு என்று அந்த மேகங்கள் மூலமாகவே தேவஆவியானவர் நமக்குக் கற்பிக்கிறார். மேகங்கள் இல்லையென்றால் நமக்கு விசுவாசம் இருக்கமுடியாது. மேகங்கள் நம்முடைய பரமபிதாவின் பாதத்திலுள்ள தூசியே. அவர் அங்கு இருக்கிறார் என்பதின் அடையாளம் மேகங்கள். துயரம், இழப்பு, மற்றும் பாடு தேவனோடுவரும் மேகங்களே என்று அறிவது எவ்வளவு சிறப்பான வெளிப்பாடு! மேகங்கள் இல்லாதபடி தேவன் அருகே வரமுடியாது; தெளிவான ஜோதியில் அவர் வருவதில்லை.

நம்முடைய சோதனைகளில் தேவன் ஏதோ ஒன்றை நமக்குக் கற்பிக்க விரும்புகிறார் என்று கூறுவது உண்மையல்ல; அவர் கொண்டு வருகிற ஒவ்வொரு மேகத்தின்மூலமும் நாம் கற்ற சிலவற்றை மனதிலிருந்து அகற்றவேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். அவரோடுள்ள நம்முடைய உறவுமுறை துல்லியமாக ஒரு குழந்தையின் உறவுபோல்--தேவனும் என்னுடைய சொந்த ஆத்துமாவும், மற்ற மக்கள் நிழல்களே--என்று ஆகுமட்டும் நமது நம்பிக்கையை எளிமையாக்குவதே மேகத்தினால் தேவனுடைய நோக்கமாகும். பிறமக்கள் நிழல்களாகும்வரை அவ்வப்போது மேகங்களும் இருளும் எனக்குரியது. தேவனுக்கும் எனக்குமிடையே உள்ள உறவு முன்பு இருந்ததைவிட எளிமையாகிக்கொண்டேவருகிறதா?

தேவன் நம்மை நடத்துகிற வியப்பான வழிகளுக்கும் அவரைக் குறித்த நம்முடைய அறிவிற்குமிடையே ஒரு தொடர்பு உண்டு; தேவனைக் குறித்த நம்முடைய அறிவின் வெளிச்சத்தில் வாழ்வின் இரகசியங்களை வியாக்கியானிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். தேவனுடைய தன்மையைச் சேதப்படுத்தாமல், மிக்க இருளும் கருமையுமான உண்மைகளுக்குநேராக நாம் துணிந்து பார்க்காவிட்டால் நாம் இன்னும் அவரை அறியவில்லை.

அவர்கள் மேகத்திற்குள் பிரவேசித்தபோது பயப்பட்டார்கள் என்று வாசிக்கிறோம். உங்களுடைய மேகத்தில் இயேசுவைத்தவிர வேறு யாராவது உண்டா? அப்படியானால், அந்த மேகம் கூடுதல் அந்தகாரப்படும்; இயேசு ஒருவரைத்தவிர வேறொருவரையும் காணவில்லை என்று கூறக்கூடிய இடத்திற்கு நீங்கள் சென்றடையவேண்டும்.

போலி நம்பிக்கையிலிருந்துள்ள விடுதலையின் கட்டுப்பாடு

இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்க வில்லை. யோவான் 2:24.

வாழ்க்கையில் இனிமேல் பொய்யான தீர்ப்புகள் இல்லை என்பதே போலி நம்பிக்கையிலிருந்து விடுதலை என்பதின் பொருள். போலி நம்பிக் கையின் வஞ்சனையிலிருந்து விடுதலையடையவில்லையென்பது, பிறரை நியாயம்விதிப்பதில் குறைகாண்கிறவர்களும் இரக்கமற்று கண்டிப்பானவர் களுமாய் ஆக்கும்; ஆனால், தவறான நம்பிக்கையிலிருந்து தேவன் கொடுக்கிற விடுதலை, ஆண்களும் பெண்களும் அவர்கள் இருக்கிறபடியே நாம் அவர்களைக் காண்பதற்குரிய இடத்துக்கு நம்மைக் கொண்டுசெல்லு கிறது; ஆயினும், அங்குக் குற்றங் கண்டுபிடித்தலில்லை, அவர்களுடைய உணர்வுகளைப் புண்படுத்துகிறதும் வெறுப்பூட்டுகிறதுமான காரியங்களை நாம் சொல்லுவதற்கு இல்லை. நாம் போலி நம்பிக்கைகளால் பாதிக்கப்பட் டிருக்கிறோம் என்ற உண்மையிலிருந்து வாழ்க்கையில் கொடூரமான காரியங்களில் அநேகம் எழும்புகின்றன. நடைமுறையில் நாம் ஒருவருக் கொருவர் உண்மையாயில்லை, ஒருவருக்கொருவரான நம்முடைய கருத் தில்தான் நாம் உண்மையாயிருக்கிறோம். நம்முடைய கருத்தின்படி, எல்லாம் ஒன்றில் மகிழ்ச்சிகரமாயும் நேர்த்தியாயும் இருக்கின்றன, அல்லது இழிவானதாயும் கோழைத்தனமாயும் இருக்கின்றன.

தவறான நம்பிக்கையை விட்டுவிட மறுப்பது மனித வாழ்க்கையின் பாடுகளில் மிகுதியானவைகளுக்குக் காரணமாகிறது. அது இந்த வழியில் செயல்படுகிறது--நாம் ஒரு மனிதனை நேசித்துவிட்டு, தேவனை நேசிக்கா விட்டால், அவனில் எல்லாப் பூரணத்துவத்தையும் எல்லா நேர்மையையும் விரும்புகிறோம்; நாம் அதைப் பெற்றுக்கொள்ளாதபோதோ குரூரமுள்ளவர் களாய்ப் பழிவாங்குகிறவர்களாகிறோம்; மனித இனத்திடமிருந்து நாம் எதிர்பார்க்கிறது ஆணோ, பெண்ணோ கொடுக்கமுடியாததையே. மனித இருதயத்தில் வேதனையின் இறுதிப் பாதாளத்தைத் திருப்திசெய்யக்கூடிய ஒரு நபர் மாத்திரமே உண்டு; அது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே. நம்முடைய ஆண்டவர் ஒவ்வொரு மனித உறவைக்குறித்தும் கண்டிப்பாய் இருந்ததுபோலத் தோன்றியதின் காரணம் அவர்பேரிலுள்ள விசுவாசத்தின் அடிப்படையில் அமையாத எல்லா உறவுகளும் அழிவில் முடிவடையும் என்பதை அறிந்திருப்பதே. நமது ஆண்டவர் ஒரு மனிதனையும் நம்பி இணங்கவில்லை; ஆயினும் அவர் ஒருபோதும் சந்தேகமோ கசப்போ கொள்ளவில்லை. தேவனிலும், அவருடைய கிருபை எந்த மனிதனுக்கும் எவைகளைச் செய்யமுடியுமென்பதிலும் அவர் வைத்திருந்த நம்பிக்கைப் பூரணமாயிருந்ததினால், நமது ஆண்டவர் ஒருவரிலும் நம்பிக்கையிழக்க வில்லை. நம்முடைய நம்பிக்கை மனிதனில் வைக்கப்படுமேயானால் நாம் எல்லாரைக்குறித்தும் நம்பிக்கையிழப்பதில் முடிவடைவோம்.

நீங்கள் முழுவதும் அவருக்குச் சொந்தமாகுமட்டும்

நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது. யாக்.1:4.

முக்கியமானதில் நம்மில் பலரும் சரியாயிருக்கிறோம், ஆயினும், நாம் தூய்மையற்றிருக்கிற சில பாகங்கள் இருக்கின்றன. அது பாவத்தைக் குறித்த காரியமல்ல, நம்மைத் தூய்மையற்றவர்களாக்கக்கூடியதாக நமது மாம்சீக வாழ்க்கையில் தங்கியிருப்பவைகளைக்குறித்த காரியமே அது. தூய்மையற்ற நிலைமை பரிசுத்த ஆவியானவரை நிந்திப்பதாகும். நாம் புசிக்கிறதும் குடிக்கிறதுமானவிதத்திலானாலும், தேவனை ஆராதிக்கிற முறையிலானாலும் தூய்மையற்ற நிலை ஒன்றுமே காணப்படக்கூடாது.

தேவனோடுள்ள நம்முடைய உறவு சரியாயிருப்பதுமட்டுமல்ல, அந்த உறவின் புறம்பான வெளிப்பாடும் சரியாயிருக்கவேண்டும். தேவன் இறுதியில் ஒன்றையும் தப்பவிடமாட்டார், ஒவ்வொரு விவரமும் அவரது நுணுக்கமான ஆராய்ச்சிக்குக் கீழிருக்கிறது. எண்ணற்ற வழிகளில் தேவன் நம்மை மீண்டும்மீண்டும் அதே இடத்திற்குத் திரும்பக் கொண்டுவருவார். நாம் பாடத்தைக் கற்றுக்கொள்ளும்வரையில் அந்தக் குறிப்பிட்ட இடத்திற்கு நம்மைக் கொண்டுவருவதில் அவர் களைப்படையமாட்டார்; ஏனெனில், பூரணமான பாண்டமாக அவர் நம்மை வனைகிறார். அது நம் உணர்ச்சி வேகத்தைப் பொறுத்த காரியமாயிருக்கலாம், அந்தக் குறிப்பிட்ட இடத்திற்குத் தேவன் நம்மை மிகவும் விடாப்பிடியான பொறுமையோடு மீண்டும்மீண்டும் திரும்பக் கொண்டுவந்திருக்கிறார்; அல்லது அது மனதை அலைபாயவிடுகிறதாயிருக்கலாம், அல்லது சுதந்தரமான தனித்தன்மையாயிருக்கலாம். முற்றிலும் சரியாயிராத அந்த ஒரு காரியத்தை நம்மில் ஆழமாகப் பதியவைக்கத் தேவன் முயற்சிக்கிறார்.

தேவனுடைய மீட்பின் வெளிப்பாட்டைக்குறித்து இந்நாட்களில் சிறப்பாகச் சிந்தித்துக்கொண்டிருக்கிறோம்; அவருக்குநேராக நம்முடைய இருதயங்கள் குற்றமற்றதாயிருக்கின்றன; முக்கியமானதில் நாம் அவரோடு நேர்மையாயிருக்கிறோம் என்பதை நம்மில் செயல்படும் அவருடைய அற்புதமான கிரியைகள் நம்மை அறியச்செய்கின்றன; பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது என்று இப்போது ஆவியானவர் பரிசுத்த யாக்கோபு வழியாகக் கூறுகிறார். இப்போதைக்கு இதுமட்டும் போதும் என்று கூறுகிற அஜாக்கிரதையைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும். அது எதுவாயிருந்தாலும் நாம் தேவனுக்கு முழுவதும் சொந்தமாகுமட்டும் அதை அவர் விடாப்பிடியாகச் சுட்டிக்காண்பித்துக்கொண்டேயிருப்பார்.

அவருடைய வழிகளைக்குறித்துக் கொஞ்சம் கூடுதல்

நம்மை வெளியேற அவர் கட்டளையிடுகிற இடத்தில் அவர் வருகிறார்.

இயேசு தம்முடைய பன்னிரண்டு சீஷர்களுக்கும் கட்டளைகொடுத்து முடித்தபின்பு, அவர்களுடைய பட்டணங்களில் உபதேசிக்கவும் பிரசங்கிக்கவும் அவ்விடம் விட்டுப் போனார். மத்.11:1.

குடும்பத்திலுள்ள மக்களைக்குறித்து நீங்கள் அதிகமாகக் கரிசனை கொண்டபடியால் போ என்று தேவன் சொன்னபோது, நீங்கள் செல்லாமல் தங்கியிருந்தீர்கள்; எனவே, இயேசுகிறிஸ்துவே செய்த போதனைகளையும் உபதேசங்களையும் அவர்கள் கேட்கும் வாய்ப்பைத் தடுத்தீர்கள். நீங்கள் கீழ்ப்படிந்துவிட்டு எல்லா விளைவுகளையும் தேவனிடம் விட்டுவிட்டபோது, போதிக்கும்படி கர்த்தர் உங்கள் பட்டணத்திற்குச் சென்றார்; நீங்கள் கீழ்ப்படியாமலிருந்ததுவரை நீங்கள் தடையாயிருந்தீர்கள். நீங்கள் எங்கு விவாதஞ் செய்ய ஆரம்பிக்கிறீர்கள் என்பதையும், கடமை என்பதை உங்கள் ஆண்ட வருடைய கற்பனைகளுக்குப் போட்டியாக வைக்கிறதையும் கவனியுங்கள். தேவன் போகச்சொன்னார் என்று எனக்குத் தெரியும்; ஆனால், அப்போது என் கடமை இங்கு இருந்தது என்று நீங்கள் சொல்லுகிறீர்கள்; தன்னுடைய உள்ளத்திலிருப்பதைத்தான் இயேசு சொல்லுகிறார் என்பதை நீங்கள் நம்ப வில்லையென்பதுதான் அதன் கருத்து.

வேண்டாம் என்று அவர் ஆணையிடுகிற இடத்தில் அவர் கற்பிக்கிறார்.

ஐயரே ,.....மூன்று கூடாரங்களை உண்டுபண்ணுவோம்.

பிற வாழ்க்கைகளில் முதிர்ச்சியற்ற ஆவிக்குரிய தெய்வீக முன்கரு தலாகச் செயல்படுகிறோமா? தேவன் மற்றவர்கள் அருகில் எங்கும் செல்ல முடியாதபடி நாம் அவர்களுக்குப் போதிக்கும்போது கூச்சலிடுகிறோமா? நாம் வாய்களை மூடவும் ஆவியை விழிப்பானதாய் வைக்கவும் வேண்டும். தேவன் தம்முடைய குமாரன் சம்பந்தமாக நம்மைப் போதிக்க விரும்புகிறார்; நம்முடைய ஜெபவேளைகளை அவர் மறுரூப மலைகளாக மாற்ற விரும் புகிறார், நாமோ அவரை அனுமதிப்பதில்லை. தேவன் செயல்படப்போகும் வழி இதுதான் என்று நாம் நிச்சயமாகும்போது அவர் இனிமேல் எப்போதும் அம்முறையில் செயல்படுவதில்லை.

காத்திருக்க நம்மை அனுப்புகிற இடத்தில் அவர் செயல்படுகிறார்.

நீங்களோ.....வரைக்கும்.....காத்திருங்கள். தேவனுக்காகக் காத்திருங்கள், அவர் செயல்படுவார்; ஆனால், ஆவிக்குரிய சிடுசிடுப்பில் காத்திராதீர்கள்; ஏனென்றால், உங்கள் முன்னால் ஒரு அங்குலமும் உங்களால் காணமுடியாது! தேவனுக்காகக் காத்திருப்பதற்கு நம்முடைய ஆவிக்குரிய மிகையுணர்ச்சியிலிருந்து போதுமான அளவு விடுபட்டிருக்கி றோமா? காத்திருப்பது என்பது கைகளைக் கட்டி உட்கார்ந்திருப்பதல்ல; நம்மிடத்தில் கூறப்படுகிறவைகளைச் செய்யக் கற்றுக்கொள்வதே அது.

இவை நாம் அரிதாயுணரும் அவருடைய வழிகளின் கட்டங்கள்.

துன்பமாகிய கட்டுப்பாடு

உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன். யோவான் 16:33.

கிறிஸ்தவ வாழ்க்கையைக்குறித்த பொதுவானப் பார்வை அது பிரச்சனையிலிருந்து விடுதலைபெறுவது என்ற கருத்து. அது பாடுகளில் விடுதலை; அது மிகவும் வித்தியாசமானதாகும். உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவனுக்கு....ஒரு பொல்லாப்பும் நேரிடாது--நீங்கள் தேவனோடு ஒன்றித்து வாழுகிற இடத்தின் அருகில் வாதை அணுகாது.

நீங்கள் தேவனுடைய பிள்ளையானால் நிச்சயம் பாடுகளைச் சந்திப் பீர்கள்; ஆனால், அவைகள் வரும்போது ஆச்சரியப்படாதீர்கள் என்கிறார் இயேசு. உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன், நீங்கள் பயப்பட ஒன்று மில்லை என்பது அவருடைய அறிவுரை. இரட்சிக்கப்படுமுன் பாடுகளைப் பற்றிப் பேசுவதை ஏளனஞ்செய்யும் மனிதர்கள், மறுபடியும் பிறந்தபின், அடிக்கடி விசாரப்படுகிறார்கள்; ஏனெனில், அவர்களுக்குப் பரிசுத்தவானைக் குறித்தத் தவறான கருத்திருக்கிறது.

தேவன் நமக்கு வெற்றிகொள்ளும் வாழ்க்கையை அளிப்பதில்லை; நாம் வெற்றிகொள்ளும்போது அவர் நமக்கு வாழ்க்கையை அளிக்கிறார். கடின முயற்சியே பலமாகும். கடின முயற்சி இல்லையென்றால், வலிமை யில்லை. ஜீவனும் விடுதலையும் மகிழ்ச்சியும் உங்களுக்குத் தரவேண்டும் என்று தேவனிடத்தில் நீங்கள் கேட்கிறீர்களா? கடின முயற்சியை நீங்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் தேவன் இவைகளை உங்களுக்குத் தரமுடியாது. கடின முயற்சியை நீங்கள் சந்தித்தவுடனே நீங்கள் பெலனைப் பெற்றுக் கொள்வீர்கள். உங்கள் சொந்த அச்சத்தை மேற்கொண்டு செயல்பட ஆரம்பியுங்கள், அப்போது தேவன் ஜீவ விருட்சத்தின் கனியை உங்க ளுக்குப் புசிக்கக் கொடுப்பார், நீங்கள் போஷிக்கப்படுவீர்கள். சரீரப்பிர காரமாக உங்களை நீங்கள் செலவிட்டால், நீங்கள் களைத்துப்போவீர்கள்; ஆனால், ஆவிக்குரிய நிலையில் உங்களை நீங்கள் செலவிடுங்கள், அப்போது நீங்கள் கூடுதல் பெலனைப் பெற்றுக்கொள்வீர்கள். நாளையத் தினத்திற்கோ அல்லது அடுத்த மணிநேரத்திற்கோ தேவன் பெலனை ஒருபோதும் கொடுப்பதில்லை; அந்தந்த நிமிடத்தின் கடின உழைப்புக்கான பெலனையே தேவன் கொடுக்கிறார். சோதனை என்பது பகுத்தறிவின் கண்ணோட்டத்தில் சிரமத்தைச் சந்திப்பது. சிரமங்களினால் நசுக்கப்படும் போது பரிசுத்தவான் சந்தோஷமாயிருக்கிறான்; ஏனென்றால், தேவனைத் தவிர மற்ற யாவருக்கும் அவைகள் அபத்தமான அசாத்தியமே.

தேவனுடைய பெரிய கட்டாயம்

இதோ, எருசலேமுக்குப் போகிறோம். லூக்கா 18:31.

தமது பிதாவினுடைய சித்தத்தின் உச்சத்தை அடைந்த இடமாக நமது ஆண்டவருடைய வாழ்க்கையில் எருசலேம் காணப்படுகிறது. நான் என்னுடைய சித்தத்தைத் தேடாமல், என்னை அனுப்பின பிதாவினுடைய சித்தத்தையே தேடுகிறேன் என்று இயேசு கூறினார். நமது ஆண்டவரின் வாழ்க்கை முழுவதும் ஆதிக்கஞ்செலுத்திய ஆர்வம் அது ஒன்று மட்டுமே; வழியில் அவர் அனுபவித்தவைகள், மகிழ்ச்சியோ துக்கமோ, வெற்றியோ தோல்வியோ அவருடைய நோக்கத்திலிருந்து அவரை ஒருபோதும் தடுக்க வில்லை. அவர் எருசலேமுக்குப் போகத் திட்டமாய்த் தீர்மானித்தார்.

நம்முடைய சொந்த நோக்கத்தையல்ல தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றவே நாம் எருசலேமுக்குப் போகிறோம் என்பதே நாம் நினைவு கூரவேண்டிய முக்கியமான காரியமாகும். இயற்கையாகவே நம்முடைய பேராவல்கள் நமக்குச் சொந்தமானவை; கிறிஸ்தவ வாழ்க்கையில் நமக்குச் சொந்தமான இலக்கு ஒன்றுமில்லை. கிறிஸ்துவுக்காக நாம் தீர்மானித்தல், கிறிஸ்தவர்களாகும்படி நாம் உறுதி செய்தல், இதையும் அதையும் நாம் நிச்சயித்தல் என்பவைகளைக்குறித்து இன்று தாராளம் பேசப்படுகிறது; ஆனால், புதிய ஏற்பாட்டில் தேவனுடைய கட்டாயத்தின் கருத்தே தெளிவாக் கப்பட்டுள்ளது. நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன் என்று இயேசு கூறினார். தேவனுடைய நோக்கத்தோடுள்ள உடன்பாட்டுக்குள் நம்முடைய அறிவோடு நாம் ஈடுபடுத் தப்படவில்லை, நம்முடைய அறிவு சிறிதும் இல்லாமலே அவருடைய நோக்கத்துக்குள் ஈடுபடுத்தப்பட்டோம். தேவனுடைய இலக்கு என்ன என்ற அறிவு நமக்கு இல்லை, காலஞ் செல்லச்செல்ல அது அதிகமதிகமாய்த் தெளிவற்றதாகிறது. தேவன் எதைக் குறிவைக்கிறார் என்பதை அறியாதபடி நமக்குக் கிட்டப்பார்வையாயிருப்பதால் அவருடைய இலக்கு குறிதவறினது போல் தோன்றுகிறது. கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்பத்தில் தேவனுடைய நோக்கம் என்ன என்பதைக்குறித்துச் சில சொந்தக் கருத்துக்கள் நமக்கு இருந்தன--நான் இங்கும் அங்கும் செல்லவேண்டும், இந்தச் சிறப்பானக் காரியத்தைச் செய்யத் தேவன் என்னை அழைத்திருக்கிறார் போன்றவை; நாம் போய் அந்தக் காரியத்தைச் செய்கிறோம், ஆயினும் தேவனுடைய பெரிய கட்டாயம் இன்னும் தொடர்ந்து இருக்கிறது. நாம் செய்கிற காரியங்க ளெல்லாம் பயனற்றவை, தேவனுடைய ஏவுதலோடு ஒப்பிடும்போது அவை தற்காலிகமானவைகளே. அவர் பன்னிருவரையும் தம்மிடத்தில் அழைத்தார், அவர் நம்மை எப்போதும் அவரோடு சேர்த்துக்கொள்ளுகிறார். இதுவரை நாம் அடைந்ததைவிட இன்னும் கூடுதல் உண்டு.

தேவனுடைய தைரியமான தோழமை

பின்பு அவர் பன்னிருவரையும் தம்மிடத்தில் அழைத்தார். லூக்கா 18:31.

நம்மீது நம்பிக்கை வைப்பதற்குத் தேவன் கொண்ட தைரியந்தான் என்னே! அவர் என்னைத் தெரிந்துகொண்டது விவேகமற்றது; ஏனெனில், என்னில் ஒன்றும் இல்லை; நான் எந்தப் பயனுமற்றவன் என்று நீங்கள் கூறுகிறீர்கள். அதனால்தான் அவர் உங்களைத் தெரிந்துகொண்டார். உங்களில் ஏதாயினும் இருக்கிறது என்று நீங்கள் எண்ணுங்காலம்வரைத் தேவன் உங்களைத் தெரிந்துகொள்ளமுடியாது; ஏனெனில், நீங்கள் நிறை வேற்றவேண்டிய உங்கள் சொந்தத் திட்டங்கள் உங்களுக்கு இருக்கின்றன; ஆனால் உங்களுடைய தன்னிறைவின் இறுதிக்கு உங்களைக் கொண்டு வர அவரை நீங்கள் அனுமதிப்பீர்களானால், அவரோடு எருசலேமுக்குப் போக அவர் உங்களைத் தெரிந்துகொள்ளமுடியும்; அவர் உங்களோடு கலந்தாலோசிக்காத நோக்கங்களுடைய நிறைவேறுதல் அது.

ஒரு மனிதனுக்கு இயற்கைத் திறமைகள் இருக்கிறபடியால் அவன் ஒரு நல்ல கிறிஸ்தவனாயிருக்கமுடியும் என்று நாம் கூற வாய்ப்புண்டு. ஆனால், நம்முடைய ஆயத்தங்களல்ல, நம்முடைய தரித்திரந்தான் விவாதப்பொருள்; நம்முடன் எவைகளைக் கொண்டுவருகிறோமென்பதல்ல, தேவன் நமக்குள் என்ன வைக்கிறாரென்பதுவே முக்கியம்; இயற்கையான நற்பண்புகளும், இயல்பின் வலிமை, அறிவு, அனுபவம் என்பவைகளும் அல்ல தேவை--இவையெல்லாம் இக்காரியத்தில் பயனற்றவை. பயனுள்ள ஒரே காரியம் தேவனுடைய வலிந்து ஈர்க்கும் நோக்கத்தில் ஈடுபடுத்தப்பட்டு, அவருடைய தோழராக்கப்படுவதே (1 கொரி.1:26-30). தங்களுடைய தரித் திரத்தை அறியும் மக்களைக்கொண்டே தேவனுடைய தோழர்களின் குழாம் உருவாக்கப்படுகிறது. தான் தேவனுக்குப் பயனுள்ளவன் என்று எண்ணுகிற ஒரு மனிதனைக்கொண்டு அவரால் ஒன்றுஞ்செய்யமுடியாது.

கிறிஸ்தவர்கள் என்கிறமுறையில் நமது நோக்கத்துக்காக நாம் இங்கு வைக்கப்படவேயில்லை, நம்முடைய நோக்கமாய் ஒருபோதும் இருக்கமுடியாத தேவனுடைய நோக்கத்துக்காகவே நாம் இங்கு வைக்கப்பட் டிருக்கிறோம். தேவனுடைய திட்டம் என்னவென்று நமக்குத் தெரியாது; ஆனால், என்ன நடந்தாலும் அவரோடுள்ள நம்முடைய உறவை நாம் காத்துக்கொள்ளவேண்டும். தேவனோடுள்ள நம்முடைய உறவை எதுவும் சேதப்படுத்த நாம் அனுமதிக்கக்கூடாது, அது சேதப்படுத்தப்படுமேயானால் நாம் அதைச் சீர்செய்ய நேரம் எடுக்கவேண்டும்; கிறிஸ்தவ மார்க்கத்தைக் குறித்த முக்கியத்துவம் நாம் செய்கிற செயலல்ல, நாம் காத்துக்கொள்ளும் உறவும், அந்த உறவால் உருவாக்கப்படும் சூழ்நிலையுமே. நாம் அதை மாத்திரமே பேணும்படி தேவன் கேட்கிறார், அந்த ஒரு காரியந்தான் தொடர்பாகத் தாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

தேவனுடைய திகைப்பூட்டும் அழைப்பு

மனுஷகுமாரனைக்குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டவைகளெல்லாம் நிறைவேறும். இவைகளில் ஒன்றையும் அவர்கள் உணரவில்லை. லூக்கா 18:31,34.

கடுமையான பேராபத்துப்போலத் தோன்றியதற்கு தேவன் இயேசு கிறிஸ்துவை அழைத்தார். அவர் கொலைசெய்யப்படுவதைப் பார்க்க இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களை அழைத்தார்; அவர்கள் இருதயங்கள் நொறுங்கிய இடத்துக்கு அவர்களில் ஒவ்வொருவரையும் அவர் நடத்திச் சென்றார். தேவனுடைய பார்வைதவிர மற்ற எல்லாருடைய பார்வையிலும் இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை முழுமையான தோல்வியே. மனிதருடைய கண்ணோட்டத்தில் தோல்வியாகத் தோன்றியது தேவனுடைய பார்வையில் மிகப்பெரிய வெற்றி; ஏனெனில், தேவனுடைய நோக்கம் ஒருபோதும் மனிதனுடைய நோக்கமல்ல.

நமது வாழ்க்கைகளிலும் திகைப்புக்குரிய தேவனுடைய அழைப்பு வருகிறது. தேவனுடைய அழைப்பை ஒருபோதும் நுட்பமாகக் கூறியறிவிக்க முடியாது; அது மறைமுகமானது. தேவனுடைய அழைப்பு சமுத்திரத்தின் அழைப்பைப் போன்றது; சமுத்திரத்தின் தன்மையைத் தன்னில்கொண்டுள்ள ஒருவர்தவிர வேறுயாரும் அதைக் கேட்கிறதில்லை. தேவனுடைய அழைப்பு எதற்காக வருகிறது என்று திட்டமாய்க் கூறமுடியாது, ஏனெனில், அவரின் அழைப்பு அவருடைய சொந்த நோக்கத்திற்காக அவரோடு தோழமையில் இருப்பதற்கே வருகிறது; அவர் எதைத் தேவைப்படுகிறார் என்று அவருக்குத் திட்டமாய்த் தெரியும் என்று நம்புவதே அதற்குரிய பரிசோதனை. நடக்கிற காரியங்கள் ஒன்றும் தற்செயலாய் நடப்பதில்லை; அவைகள் அவருடைய ஆணைப்படியே முழுவதும் நடக்கின்றன. தேவன் தம்முடைய திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்.

நாம் தேவனோடு கூட்டுறவுகொண்டவர்களாய், தேவன் நம்மை அவருடைய திட்டங்களுக்குள் நடத்துகிறார் என்று உணர்ந்தால், அவரின் நோக்கங்கள் எவைகள் என்று கண்டுகொள்ள நாம் முயற்சிக்கமாட்டோம். கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கும்போது, எல்லாம் எளிமையாகும்; ஏனெனில், இப்போது தேவன் ஏன் இதையும் அதையும் அனுமதித்தார் என்று கேள்விகேட்கும் நாட்டம் நமக்குக் குறையும். எல்லா வற்றுக்குப் பின்னாலும் தேவனுடைய வலியுறுத்தல் உண்டு. நம்முடைய திட்டங்களை வடிவமைக்கிற தெய்வீகத்துவம் உண்டு. தன் சாதூரியத்தில் நம்பிக்கைவைக்காமல், தேவனுடைய அறிவிலும் விவேகத்திலும் நம்பிக்கை வைக்கிறவனே கிறிஸ்தவன்; நமக்குச் சொந்த நோக்கம் இருக்குமானால், அது தேவனுடைய பிள்ளைகளுக்குரிய தன்மைகளாகிய எளிமையையும் சாவதானத்தையும் அழித்துவிடும்.

ஜெபத்தில் சிலுவை

அந்த நாளில் நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்கள். யோவான் 16:26.

நாம் கடந்துசெல்லவேண்டிய ஏதோவொன்று என்று சிலுவை யைக்குறித்து நாம் மிகஅதிகம் எண்ண வாய்ப்புண்டு; நாம் அதற்குள் பிரவேசிக்கவே நாம் அதன்வழியே கடந்துசெல்லுகிறோம். சிலுவை நமக்கு ஒரு காரியத்தைமட்டுமே குறிப்பிடுகிறது: அது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வோடு பூரணமாகவும் முற்றுமாகவும் முழுமையாகவும் ஒன்றித்துவிடுவதே; இத்தகைய ஒன்றிப்பை ஜெபத்தைவிடக் கூடுதல் வேறொன்றிலும் அறிந்து உணரமுடியாது.

உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார் என்று இயேசு சொன்னார். அப்படியானால் ஏன் கேட்கவேண்டும்? என்று தோன்றலாம். தேவனிடமிருந்து பதில்களைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென் பதல்ல ஜெபத்தின் கருத்து; ஜெபம் என்பது தேவனோடு பூரணமாகவும் முழுமையாகவும் ஒன்றித்தலே. நாம் பதில்கள் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக ஜெபித்தால் தேவனோடு நாம் கோபப்படுவோம். ஒவ்வொரு வேளையிலும் பதில் வரும்; ஆனால், அது எப்போதும் நாம் எதிர்பார்க்கிற முறையில் அல்ல; நாம் ஜெபத்தில் நம்முடைய ஆண்டவரோடு ஒன்றிக்க மறுக்கிறோம் என்பதை நமது ஆவிக்குரிய கோபம் காட்டுகிறது. தேவன் ஜெபத்திற்குப் பதிலளிக்கிறார் என்பதை மெய்ப்பிக்க நாம் இங்கில்லை, தேவகிருபையின் உயிருள்ள நினைவுச் சின்னங்களாகும்படியாகவே நாம் இங்கிருக்கிறோம்.

பிதாவை நான் கேட்டுக்கொள்வேனென்று உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை; பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறார் என்று இயேசு சொன்னார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஜெபவாழ்க்கை மாத்திரமே உங்கள் ஜெபவாழ்க்கையின் விளக்கமாய் இருக்கும்படி நீங்கள் தேவனோடு நெருக்கமான உறவை எட்டியிருக்கிறீர்களா? நம்முடைய பிரதிநிதியாக நம் ஆண்டவர் வாழ்ந்த வாழ்க்கை உங்கள் இன்றியமையாத வாழ்க்கை யாக மாறியிருக்கிறதா? அந்த நாளில் நீங்கள் ஒரு வித்தியாசமும் இல்லாதவாறு இயேசுவோடு ஒன்றித்துவிடுவீர்கள்.

ஜெபம் பதிலளிக்கப்படாததுபோலத் தோன்றும்போது, வேறு யார் மீதாவது பழிசுமத்த முயற்சிப்பதில் எச்சரிக்கையாயிருங்கள். எப்போதும் அது சாத்தானின் கண்ணி. வேறு யாருக்குமல்ல, உங்களுக்கு ஆழமான போதனையாயிருக்கும் ஒரு காரணம் இருக்கிறதென்று காண்பீர்கள்.

பிதாவின் வீட்டில் ஜெபம்

என் பிதாவுக்கடுத்தவைகளில் (பிதாவின் வீட்டில்) நான் இருக்கவேண்டிய தென்று அறியீர்களா? லூக்கா 2:49.

நமது ஆண்டவருடைய குழந்தைப்பருவம் முதிர்ச்சியடையாத மனிதப் பருவமாயிருக்கவில்லை; நமது ஆண்டவருடைய குழந்தைப்பருவம் ஒரு நித்திய உண்மை. என்னுடைய ஆண்டவரும் இரட்சகருமாகியவரோடு நான் ஒன்றிப்பதால் ஒரு தூய்மையான, களங்கமற்ற தேவபாலகனாக நான் இருக்கிறேனா? என் பிதாவின் வீட்டிலிருக்கிறதாக வாழ்க்கையை நான் சிந்திக்கிறேனா? தேவகுமாரன் என்னில் வாழுவது தமது பிதாவின் வீட்டில் வாழுகிறதாயிருக்கிறதா?

நிலையான சத்தியம் தேவனே; அவருடைய ஆணை நிமிடங்கள் தோறும் வருகின்றன. நான் அந்தச் சத்தியத்தோடு எப்போதும் தொடர்பு கொண்டிருக்கிறேனா? அல்லது, காரியங்கள் தவறாய்ப் போகும்போதும் என் வாழ்க்கையின் காலகட்டங்களில் இடையூறு ஏற்படும்போதும் மாத்திரம் நான் ஜெபிக்கிறேனா? நம்மில் சிலர் இதுவரையிலும் கற்றுக்கொள்ள ஆரம்பித்திராத வழிகளில் நான் தூய நற்கருணையில் என் ஆண்டவரோடு ஒன்றுபட கற்றுக்கொள்ளவேண்டும். நான் என் பிதாவுக்கடுத்தவைகளில் இருக்கவேண்டும்--ஒவ்வொரு நிமிடமும் பிதாவின் வீட்டில் தங்கவேண்டும்.

உங்கள் தனிப்பட்ட சூழ்நிலைக்கு அதைக் கொண்டுவாருங்கள்--தேவனோடு தொடர்பாக உரையாடுகிறவர்களும், எல்லாக் காரியங்களும் அவர் கரத்திலிருந்தே வருகின்றன என்று உணருகிறவர்களுமான தேவபிள்ளைகளாக மட்டும் இருக்கத்தக்கதாக ஆண்டவருடைய வாழ்க்கையோடு ஒன்றித்திருக்கிறீர்களா? உங்களுக்குள்ளிருக்கும் நித்திய பாலகன் பரமபிதாவின் வீட்டில் வாழுகிறாரா? அவருடைய பணிவிடைசெய்யும் வாழ்க்கையின் கிருபைகள் உங்கள்மூலம் உங்கள் குடும்பத்திலும், தொழிலிலும், வீட்டைச் சார்ந்த மக்களிலும் நிறைவேறுகின்றனவா? நீங்கள் அனுபவிக்கிற காரியங்களை நீங்கள் ஏன் அனுபவிக்கிறீர்கள் என்று ஆச்சரியப்படுகிறீர்களா? நீங்கள் அவைகளை அனுபவிக்கவேண்டுமென்றில்லை; பரிசுத்தவான் என்னும் உங்கள் நிலையோடு தேவகுமாரன் தம்முடைய பிதாவின் முன் கருதலால் கொண்டுள்ள உறவின் காரணத்தாலேயே இச்சம்பவங்கள் நடை பெறுகின்றன. அவருடைய சித்தம் நிறைவேறட்டும்; அவரோடுள்ள பூரண ஐக்கியத்தைக் காத்துக்கொள்ளுங்கள்.

உங்கள் ஆண்டவர் உங்களுக்காகவும் உங்களுடைய இடத்திலும் வாழ்ந்த வாழ்க்கை உங்கள் இன்றியமையாத எளிய வாழ்க்கையாய் அமையட்டும்; அவர் எவ்வாறு மக்கள் மத்தியில் வாழ்ந்து செயல்பட்டாரோ, அவ்வாறே உங்களிலும் அவர் வாழவேண்டும்.

பிதாவைக் கனம்பண்ணும் ஜெபம்

உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப் படும். லூக்கா 1:35.

தேவகுமாரன் என் மாம்ச சரீரத்திற்குள் பிறந்திருப்பாரேயானால், அவரது தூய்மையான களங்கமின்மையும் எளிமையும் தேவனோடுள்ள ஒருமைப்பாடும் என்னில் வெளிப்படுத்தப்பட வாய்ப்பை அடைகின்றனவா? தேவகுமாரன் இந்தப் பூமியில் வரலாற்றுமுகமாக அறிமுகஞ்செய்யப்பட்ட போது கன்னிமரியாளில் நடைபெற்றது எதுவோ அது ஒவ்வொரு பரிசுத்தவா னிலும் நடைபெறவேண்டும். தேவனுடைய நேரடியான செயலினாலே தேவகுமாரன் எனக்குள் பிறந்திருக்கிறார்; எனவே, தேவனுடைய பிள்ளை என்ற முறையில் நான் ஒரு குழந்தையின் உரிமையை, அதாவது என் பரமபிதாவோடு எப்போதும் நேருக்குநேர் இருக்கும் உரிமையைச் செயல் படுத்தவேண்டும். நான் என் பகுத்தறிவு வாழ்க்கையோடுத் தொடர்பாக, நீ இங்கு ஏன் என் விருப்பத்தைக் கெடுக்கிறாய்? நான் என் பிதாவுக்கடுத் தவைகளில் இருக்கவேண்டியதென்று அறியாயா என்று ஆச்சரியத்தோடு கேட்கிறேனா? சூழ்நிலைகள் எவ்வாறிருந்தாலும் அந்தத் தூய்மையான, களங்கமற்ற, நித்திய பாலகன் எப்போதும் தமது பரமபிதாவோடுத் தொடர்பு கொண்டிருக்கவேண்டியதாயிருந்தது.

இந்த வழியில் நான் என் ஆண்டவரோடு ஒன்றித்திருக்க போதிய எளிமையுள்ளவனாயிருக்கிறேனா? அவருடைய அற்புதமான எண்ணங்கள் என்னில் நிறைவேற்றப்படுகின்றனவா? அவருடைய குமாரன் என்னில் உருவாகியிருக்கிறார் என்கிறதை தேவன் அறிகிறாரா? அல்லது அவரைக் கவனமாக ஒரு பக்கத்தில் ஒதுக்கிவைத்திருக்கிறேனா? இந்நாட்களின் ஆரவாரந்தான் என்னே! எல்லோரும் ஆர்ப்பரிக்கிறார்கள்--எதற்காக? தேவகுமாரனைக் கொலைசெய்யவேண்டும் என்பதற்காக. தற்சமயம் தேவ குமாரனுக்கு இங்கு இடமில்லை, பிதாவோடு அமைதியாகப் பரிசுத்தமான ஐக்கியங்கொள்ள இடமில்லை.

தேவகுமாரன் என்னில் ஜெபிக்கிறாரா? அல்லது நான் அவருக்கு ஆணையிடுகிறேனா? அவர் மாம்சத்தில் இருந்த காலத்தில் செய்ததுபோல இப்போதும் என்னில் ஊழியஞ்செய்கிறாரா? என்னிலிருக்கிற தேவகுமாரன் தமது சொந்த நோக்கங்களுக்காகத் தமது பாடுகளை அனுபவிக்கிறாரா? மிகவும் முதிர்ந்த பரிசுத்தவான்களுடைய உள்ளான வாழ்க்கையை ஒருவர் எவ்வளவுக்கதிகமாக அறிகிறாரோ அவ்வளவுக்கதிகமாக தேவனுடைய திட்டம் என்ன என்கிறதை அவர் காண்கிறார்--அது கிறிஸ்துவினுடைய உபத்திர வங்களில் குறைவானதை நிறைவேற்றுவதே. நிறைவேற்றுவது என்றால் எப்போதும் சில காரியங்கள் செய்யப்படவேண்டும் என்று கருத்தாகும்.

பிதாவின் செவிகேட்க ஜெபம்

பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். யோவான் 11:41.

தேவகுமாரன் ஜெபிக்கும்போது அவருக்கு ஒரேயொரு சிந்தனை மாத்திரமே இருந்தது, அது அவருடைய பிதாவைக்குறித்த சிந்தனையே. தேவன் தம்முடைய குமாரனின் ஜெபத்தை எப்போதும் கேட்கிறார்; எனவே, தேவகுமாரன் என்னில் உருவாகியிருப்பாரேயானால் பிதா எப்போதும் என்னுடைய ஜெபத்தையும் கேட்பார். என்னுடைய சாவுக்குரிய சரீரத்தில் தேவகுமாரன் வெளிப்படுவதற்கு நான் ஒழுங்குசெய்யவேண்டும். உங்கள் சரீரமானது பரிசுத்த ஆவியினுடைய ஆலயம் என்று வேதம் கூறுகிறது; அதாவது அது தேவகுமாரனுடைய பெத்லகேம். தேவகுமாரன் என்னில் அவருக்கான வாய்ப்பைப் பெறுகிறாரா? தேவகுமாரன் வரலாற்றில் வாழ்ந்த போது அவரில் கொண்டுநடத்தப்பட்ட நேரடி எளிமை மிகச்சரியாக அதே முறையில் கொண்டுநடத்தப்படுகிறதா? வாழ்க்கையின் சம்பவங்களை நான் ஒரு சாதாரண மனிதனாகச் சந்திக்கும்போது, தேவனுடைய நித்திய குமாரன் அவருடைய பிதாவிடம் ஏறெடுத்த ஜெபம் என்னில் ஏறெடுக்கப்படுகிறதா? அந்த நாளில் நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்கள் என்று இயேசு சொன்னார். எந்த நாளில்? பரிசுத்த ஆவியானவர் என்னிடத்தில் வந்து, என் ஆண்டவரோடு என்னை எல்லாவிதத்திலும் ஒருமைப்படுத்திய நாள்தான் அது.

உங்கள் வாழ்க்கையில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மிகவும் அதிகமாகத் திருப்தியடைகிறாரா? அல்லது நீங்கள் ஆவிக்குரிய கர்வங் கொண்டவர்களாயிருக்கிறீர்களா? பகுத்தறிவு அனுமதியின்றிப் புகுந்து தேவகுமாரனை ஒருபுறம் ஒதுக்கிவைக்க நீங்கள் அனுமதியாதேயுங்கள். பகுத்தறிவு தேவன் மனித இயற்கைக்குக் கொடுத்த வரம்; ஆனால், பகுத்தறிவு அவருடைய குமாரனுடைய வரம் அல்ல. ஆவிக்குரிய அறிவு அவருடைய குமாரனுடைய வரம்; எனவே, பகுத்தறிவை அரியணையில் அமர்த்தாதேயுங்கள். குமாரனே பிதாவைக் கண்டுபிடிக்கிறார்; பகுத்தறிவு இதுவரையிலும் பிதாவைக் கண்டுபிடிக்கவில்லை, இனிமேலும் கண்டுபிடிக் கவுஞ்செய்யாது. நமக்குள் வாசஞ்செய்யும் தேவகுமாரனால் நம்முடைய இயற்கையான விவேகம் மறுரூபப்படுத்தப்பட்டால்தவிர அது ஒருபோதும் தேவனை ஆராதிப்பதில்லை. இந்தச் சாவுக்குரிய சரீரம் தேவகுமாரனுக்குப் பூரணமாய்க் கீழ்ப்பட்டிருக்கவும், நிமிடந்தோறும் அவர் அதன்வழியாகச் செயல்படவும் நாம் கவனிக்கவேண்டும். நம்முடைய சாவுக்குரிய சரீரத்தில் இயேசுகிறிஸ்துவின் ஜீவன் வெளிப்படத்தக்கதாக மனிதநிலையில் அவரைச் சார்ந்து நாம் வாழுகிறோமா?

பரிசுத்தவானின் சாக்கிரமந்து

தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மை செய்கிறவர் களாய்த் தங்கள் ஆத்துமாக்களை . . . ஒப்புக்கொடுக்கக்கடவர்கள். 1 பேதுரு 4:19.

துன்பப்படத் தெரிந்துகொள்ளுவது என்பதின் கருத்து அங்கு ஏதோ தவறு இருக்கிறது என்பதே; ஆனால், துன்பப்படவேண்டியதுவந்தாலும் தேவனுடைய சித்தத்தைத் தெரிந்துகொள்ளுவது முற்றிலும் வேறுகாரியம். எந்தச் சிறந்த பரிசுத்தவானும் எக்காலத்திலும் துன்பத்தைத் தெரிந்துகொள் வதில்லை; துன்பப்படவேண்டியதுவந்தாலும், அல்லாவிட்டாலும் அவர் இயேசு செய்ததைப்போல, தேவனுடைய சித்தத்தையே தெரிந்துகொள்வார். ஒரு பரிசுத்தவானும் இன்னொரு பரிசுத்தவானின் துன்பப்படுகிற ஒழுங்கு முறையில் குறுக்கிடத் துணியமாட்டார்.

இயேசுவின் இருதயத்துக்கு மனநிறைவளிக்கிற ஒரு பரிசுத்தவான், மற்ற பரிசுத்தவான்களைத் தேவனுக்காக வலிமையும் முதிர்ச்சியுமுள்ளவர் களாக்குவார். நமக்குப் பரிவுகாட்டுகிறவர்கள் ஒருபோதும் நமக்கு நன்மை செய்கிறவர்களல்ல, அவர்கள் எப்போதும் தடையாயிருப்பார்கள்; ஏனெனில், பரிவு பலவீனப்படுத்துகிறது. இரட்சகருக்கு மிகவும் அருகிலிருக்கிற பரிசுத்த வான்தவிர வேறுயாரும் மற்றப் பரிசுத்தவானைப் புரிந்துகொள்வதில்லை. ஒரு பரிசுத்தவானுடைய பரிவை நாம் ஏற்றுக்கொண்டால், ஆகா, தேவன் என்னைக் கொடுமையாகவே நடத்துகிறார் என்ற உணர்வு தானாகவே உண்டாகும். ஆகையால்தான் சுயபரிவு சாத்தானிடமிருந்து வருகிறதென்று இயேசு குறிப்பிட்டார் (மத்.16:23). தேவனுடைய நற்பெயருக்கு இரக்கமுள்ள வர்களாயிருங்கள். தேவனுடைய பண்புகளைக் கெடுத்துப்பேசுவது எளிது; ஏனெனில், அவர் ஒருபோதும் மாறிப்பேசுவதில்லை, தன்னை ஒருபோதும் நியாயப்படுத்துவதுமில்லை. தன்னுடைய உலக வாழ்க்கையில் இயேசு பரிவு தேவைப்பட்டார் என்று எண்ணுவதில் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்; அவருடைய நோக்கத்தை உலகிலுள்ள யாரும் புரிந்துகொள்ளவில்லை என்பதை அவர் மிகவும் ஞானமாய்த் தெரிந்திருந்தபடியால் மனிதரிடமி ருந்துள்ள பரிவை அவர் மறுத்தார். தமது பிதாவிடமிருந்தும் பரலோகத் தூதர்களிடமிருந்தும் மட்டும் அவர் பரிவை ஏற்றுக்கொண்டார் (லூக்.15:10).

பரிசுத்தவான்களைத் தேவன் கூறமுடியாதவாறு வீணாக்குகிறதைக் கவனியுங்கள். உலகத்தின் தீர்ப்பின்படி மிகவும் பயனற்ற இடங்களிலேயே தேவன் தம்முடைய பரிசுத்தவான்களை வைக்கிறார். நான் அதிகமாய்ப் பயனுள்ளவனாயிருப்பதால் நான் இங்கிருக்கிறதைத் தேவன் எதிர்பார்க்கிறார் என்று நாம் கூறலாம். பரிசுத்தவான்கள் தேவனை மகிமைப்படுத்துகிற இடத்தில் அவர்களை அவர் வைக்கிறார்; அந்த இடம் எங்கு என்பதைத் தேர்வுசெய்கிறவர்கள் நாம் அல்ல.

இந்த அனுபவம் வந்தேயாகவேண்டும்

அவனை அப்புறம் காணவில்லை. 2 இராஜா.2:12.

தேவன் எலியாவை உங்களுக்குக் கொடுக்கும் காலம் வரையிலும் அவரைச் சார்ந்திருப்பது தவறல்ல; ஆனால், அவர் சென்றேயாகவேண்டிய காலம் வரும் என்பதை நினைத்துக்கொள்ளுங்கள்; அந்நாட்களில் அவர் உங்கள் வழிகாட்டியாகவும் தலைவராகவும் இருக்கவேண்டுமென்பது தேவனுடைய சித்தமல்ல என்பதால், அவர் அவ்வாறிருக்கமாட்டார். எலியா இல்லாமல் என்னால் தொடர்ந்துவாழமுடியாது என்று நீங்கள் கூறுகிறீர்கள், அவ்வாறு நீங்கள் வாழவேண்டும் என்று தேவன் கூறுகிறார்.

உங்கள் யோர்தானில் தனிமை. வச.14. வேறு யாரோடும் ஐக்கியமில்லாததும், உங்களுக்காக வேறுயாரும் பொறுப்பு எடுக்கமுடியாததுமான வேறுபாட்டின் மாதிரிதான் யோர்தான். உங்களுடைய எலியாவோடு நீங்கள் இருந்தபோது கற்றுக்கொண்டவைகளை இப்போது நீங்கள் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். திரும்பத்திரும்ப நீங்கள் எலியாவோடு யோர்தானுக்குச் சென்றிருக்கிறீர்கள், இப்போது நீங்கள் தனிமையில் யோர்தானைச் சந்திக்கிறீர்கள். உங்களால் செல்லமுடியாது என்று சொல்லுவதால் ஒரு பயனுமில்லை; இந்த அனுபவம் வந்துவிட்டது, நீங்கள் சென்றேயாகவேண்டும். தேவன் யாராயிருக்கிறார் என்று நம்புகிற உங்கள் விசுவாசத்துக்கொத்த தேவன் தான் உண்மையான தேவன் என்பதை அறிந்துகொள்ளவேண்டுமானால் உங்கள் யோர்தானைத் தனிமையாகக் கடந்துசெல்லுங்கள்.

உங்கள் எரிகோவில் தனிமை. வச.15. உங்கள் எலியா பெரிய காரியங்களைச் செய்ததை நீங்கள் கண்ட இடம் எரிகோ. உங்கள் எரிகோவுக்கு நீங்கள் வரும்போது நீங்களாக முதலடி எடுத்துவைக்கவும் தேவன்மீது நம்பிக்கை வைக்கவும் உங்களுக்குப் பலமான தயக்கம் இருக்கிறது; உங்களுக்காக வேறொருவர் முதலடி எடுத்துவைக்கவேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள். எலியாவிடமிருந்து நீங்கள் கற்றுக்கொண்டதற்கு உண்மையுள்ளவர்களாயிருப்பீர்களானால், தேவன் உங்களோடிருக்கிறார் என்பதற்குரிய அடையாளத்தை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.

உங்கள் பெத்தேலில் தனிமை. வச.23. உங்கள் பெத்தேலில் உங்களுடைய செய்வதறியாத நிலையிலும், தேவனுடைய ஞானத்தின் ஆரம்பத்திலும் உங்களைக் கண்டுகொள்வீர்கள். நீங்கள் செய்வதறியாத நிலையை அடைந்து, திகிலுக்கு ஆளாக நேரிடும்போது, அதற்கு இடங்கொடாதீர்கள்; தேவனுக்கு உண்மையுள்ளவர்களாயிருங்கள், அப்போது உங்கள் வாழ்க்கையை ஒரு சாக்கிரமந்து ஆக்கும் முறையில் அவருடைய சத்தியத்தை அவர் வெளியே கொண்டுவருவார். உங்கள் எலியாவிடமிருந்து நீங்கள் கற்றுக்கொண்டவைகளை செயலில் நடைமுறைப்படுத்துங்கள், அவருடைய அங்கியைப் பயன்படுத்தி ஜெபியுங்கள். தேவன்மீது நம்பிக்கை வைக்கத் தீர்மானியுங்கள்; எலியாவை இனிமேல் தேடாதீர்கள்.

இளைப்பாறுதலின் இறையியல்

அற்பவிசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள்? மத்.8:26.

பயத்திலிருக்கும்போது நாம் தேவனிடம் ஜெபிப்பதைத்தவிர வேறு எதையும் செய்யமுடியாது; ஆனால், அவருடைய நாமத்தைச் சொல்லுகிற வர்கள் அவரில் அறிவுக்குரிய நம்பிக்கை வைக்கவேண்டுமென்று எதிர் பார்க்க நம்முடைய ஆண்டவருக்கு உரிமையுண்டு. எந்த நெருக்கடியிலும் தம்முடைய பிள்ளைகள் நம்பகமானவர்களாய் இருக்கத்தக்கதாக அவர்கள் தம்மில் அந்த அளவு நம்பிக்கை வைக்கவேண்டுமென்று தேவன் எதிர்பார்க் கிறார். தேவனிலுள்ள நமது நம்பிக்கை ஒரு குறிப்பிட்ட எல்லைவரையிலும் மட்டுமே; அதன்பின் தேவனை அறியாதவர்களின் பதட்டமான தொடக்க ஜெபத்திற்கு நாம் திரும்பிச்செல்கிறோம். செய்வதறியாத நிலையை நாம் அடைந்து, அவரிலும் அவர் உலகை ஆட்சிசெய்வதிலும் நமக்குச் சற்றும் நம்பிக்கையில்லை என்று காண்பிக்கிறோம்; அவர் தூங்குகிறவரைப்போலக் காணப்படுகிறார், பெரிய அலைகளைத்தவிர முன்னாலே வேறொன்றையும் நாம் காணவில்லை.

அற்ப விசுவாசிகளே! என்றவாறு இயேசு சீஷர்களை அதட்டினார். மீண்டும் தவறிவிட்டோமே என்று எவ்வளவு கடும் வேதனை சீஷர்களைத் தாக்கியிருக்கும்! நமக்கு முன்னால் எது வந்திருந்தாலும் கவலைப்படாமல், இயேசுவில் முழு நம்பிக்கை வைத்திருப்போமானால் நாம் அவருடைய இருதயத்தில் எத்தகைய மகிழ்ச்சியை உண்டாக்கியிருந்திருப்போம் என்பதை நாம் உணரும்போது எவ்வளவு கடும் வேதனை நம்மைத் தாக்கும்!

புயலும் நெருக்கடியும் இல்லாமல் மனிதராக நம்மால் கூடியஅளவு சிறப்பாகச் செயல்படும் சில நிலைகள் வாழ்க்கையிலுண்டு; ஒரு நெருக்கடி வரும்போதுதான் நாம் யாரைச் சார்ந்திருக்கிறோம் என்பதை உடனடியாக வெளிப்படுத்துகிறோம். நாம் தேவனை ஆராதிக்கவும் அவரை நம்பவும் கற்றுக்கொண்டிருக்கிறோமானால், தாக்குப்பிடிக்கமுடியாத நிலைக்கு நாம் வந்தாலும், அவர்பேரிலுள்ள பற்றுறுதியில் நாம் தவறமாட்டோம் என்பதை நெருக்கடி வெளிப்படுத்தும்.

பரிசுத்தமாகுதலைக்குறித்து நாம் அதிகமாய்ப் பேசிக்கொண்டிருக் கிறோம்–அதன் மொத்தக் கருத்தென்ன? தேவனிலுள்ள இளைப்பாறுதலாக அதன் விளைவு இருக்கவேண்டும்; அதாவது, தேவனுடைய பார்வையில் நம்மைக் குற்றமற்றவர்களாகவும், அவருக்கு ஆழமான மகிழ்ச்சியானவர் களுமாக மாற்றும் அவரோடுள்ள ஒன்றிப்பு என்பது அதன் கருத்து.

ஆவியை அவித்துப்போடாதிருங்கள்

ஆவியை அவித்துப்போடாதிருங்கள். 1 தெச.5:19.

ஆவியானவரின் தொனி தென்றலைப்போன்று மென்மையானது; தேவனோடு பரிபூரணக் கூட்டுறவில் வாழாவிட்டால் அதை நீங்கள் ஒரு போதும் கேட்காதவாறு அத்தகைய மென்மையானது. ஆவியானவரின் எச்சரிப்புக்கள் மிகவும் அசாதாரணமாய் மென்மையான வழிகளில் வரும்; அவருடைய தொனியை நீங்கள் அறிந்துகொள்ளுமளவுக்கு நுட்பமான உணர்வு உங்களில் இல்லையென்றால் நீங்கள் அதை அவித்துப்போடு வீர்கள்; உங்களுடைய தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கை சேதப்படும். பரிசுத்தவான்தவிர வேறு யாரும் கவனிக்கமுடியாதமுறையில் அவருடைய எச்சரிப்புக்கள் எப்போதும் அமர்ந்த மெல்லிய குரலில் வரும்.

அநேக ஆண்டுகளுக்குமுன் ஒருநாள் நான் இரட்சிக்கப்பட்டேன் என்று உங்கள் தனிப்பட்ட சாட்சியில் முன்காலத்துக்குத் திரும்பிச்சென்றுப் பேசவேண்டியதுவருமானால் எச்சரிக்கையாயிருங்கள். நீங்கள் ஒளியில் நடக்கிறதானால், முன்காலத்துக்குத் திரும்பிச்செல்லக்கூடாது; கடந்தகாலம் தேவனோடுள்ள கூட்டுறவாகிய தற்கால அதிசயத்தோடு கலந்துவிட்டது. நீங்கள் ஒளியைவிட்டு வெளியேறிவிட்டால், ஒரு சடங்குக் கிறிஸ்தவனாகி, நினைவுகளில் வாழுவீர்கள், உங்கள் சாட்சியில் கடினமான உலோகத்தின் தொனியிருக்கும். நீங்கள் ஒளியில் நடந்த கடந்தகால அனுபவங்களை நினைவுகூர்ந்து, தற்காலம் ஒளியில் நடக்க மறுப்பதைச் சரிசெய்ய முயற் சிப்பதில் ஜாக்கிரதையாயிருங்கள். ஆவியானவர் தடைசெய்யும்வேளையில், நின்று காரியத்தைச் சரிசெய்யுங்கள்; அல்லவென்றால், உங்களை அறியா மலே நீங்கள் அவரைத் துக்கப்படுத்திக்கொண்டேயிருப்பீர்கள்.

தேவன் உங்களை ஒரு நெருக்கடியான நிலைக்குக் கொண்டுவந் திருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம்; நீங்கள் கொஞ்சங்குறைய அதின் வழியாகக் கடந்துசென்றுவிட்டீர்கள், ஆனால் முழுவதும் அல்ல; அப்போது அவர் மறுபடியும் அந்த நெருக்கடியைத் தருவார், ஆனால் அது முந்திய தைப்போல அவ்வளவு கடினமாயிராது. கீழ்ப்படியாவிட்டால் தேவனைக் குறித்த அறிவு குறையும், அவமானம் கூடும்; ஆவியானவரை நீங்கள் துக்கப்படுத்திக்கொண்டேயிருந்தால், அந்த நெருக்கடி மேலும் வராத ஒரு காலம் வரும்; ஏனெனில், அவரைத் துக்கப்படுத்தி அனுப்பிவிட்டீர்கள். ஆனால், நீங்கள் நெருக்கடிவழி கடந்துசென்றால், தேவனுக்குப் புகழ்ச்சி யின் நன்றிப்பாடல் உண்டு. தேவனை எப்போதும் மனவேதனைப்படுத்திக் கொண்டேயிருக்கிற காரியத்தோடு ஒருபோதும் பரிவு காட்டாதீர்கள். உங்க ளைவிட்டு விலகவேண்டிய காரியத்தைத் தேவன் காயப்படுத்தவேண்டும்.

சிட்சை

கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப் படும்போது சோர்ந்துபோகாதே. எபி.12:5.

ஆவியை அவித்துப்போடுவது மிகவும் எளிது; கர்த்தருடைய சிட் சையை அற்பமாக எண்ணுவதாலும் அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோவதாலும் நாம் அதைச் செய்கிறோம். மேலாம்பரமான பரிசுத்த மாகுதலின் அனுபவம் மாத்திரம் நமக்கு இருக்குமானால், நாம் நிழலை உண்மையெனத் தவறாக எண்ணுகிறோம்; ஆவியானவர் நம்மைத் தடுக்க ஆரம்பிக்கும்போது, அது பிசாசுதான் என்று கூறுகிறோம்.

ஆவியை ஒருபோதும் அவித்துப்போடாதிருங்கள்; நீங்கள் இக்காரி யத்தில் இனிமேலும் கண்மூடித்தனமாயிராதீர்கள், நீங்கள் எங்கிருந்ததாக எண்ணினீர்களோ அங்கு நீங்கள் இல்லை. இக்காலம்வரை அதை நான் உங்களுக்கு வெளிப்படுத்தமுடியவில்லை, இப்போது அதை நான் வெளிப் படுத்துகிறேன் என்று அவர் உங்களிடம் கூறும்போது அவரை அற்பமாய் எண்ணாதீர்கள். அவ்வாறாகக் கர்த்தர் உங்களைச் சிட்சிக்கும்போது அவருடைய வழிக்கு விட்டுவிடுங்கள். அவர் உங்களைத் தேவனோடு சரியாக ஒப்புரவாக்கட்டும்.

அவர் கடிந்துகொள்ளும்போது சோர்ந்துபோகாதீர்கள். நான் செய்யக்கூடியது ஒன்றுமில்லை; நான் ஜெபித்தேன், ஆயினும் காரியங்கள் சீரடையவில்லை; எனவே, நான் எல்லாவற்றையும் விட்டுவிடப்போகிறேன் என்று நாம் தேவனோடு பிணங்கிக் கூறுகிறோம். வாழ்க்கையின் வேறு எந்தப் பாகத்திலாவது நாம் இவ்வாறு பேசினால் என்ன நடக்குமென்பதைச் சிந்தித்துப்பாருங்கள்!

தேவன் தம்முடைய வல்லமையினால் என்னை இறுகப்பிடித்து, அவருடைய தகுதிக்கொத்த கிரியையை என்னில் நிறைவேற்ற நான் ஆயத்தமா? தேவன் எனக்கு என்னசெய்யவேண்டும் என்று நான் விரும்பு கிறேன் என்ற என்னுடைய கருத்தல்ல பரிசுத்தமாகுதல்; தேவன் எனக்குச் செய்ய விரும்புகிறதைக்குறித்த அவரின் கருத்துத்தான் பரிசுத்தமாகுதல்; என்ன விலை கொடுக்கவேண்டியதுவந்தாலும், அவர் என்னை முழுவதும் பரிசுத்தமாக்கும்படி மனதிலும் ஆவியிலும் நான் என்னை ஒப்புவிக்கத் தகுந்த மனநிலைக்குள் அவர் என்னைக் கொண்டுவரவேண்டும்.

மறுபிறப்பின் அடையாளங்கள்

நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும். யோவான் 3:7.

ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? என்ற கேள்விக்குப் பதில் அவருடைய நீதிகரிக்கப்படாத நிலைகள், அவருடைய நற்பண்புகள், அவருடைய மார்க்கம் மற்றுள்ள எல்லாவற்றுக்கும் அவர் மரித்து, முன்பு அவரில் இல்லாதிருந்த ஜீவனை அவருக்குள் பெற்றுக் கொள்ளும் வயது வரும்போது என்பதே. மனப்பூர்வமான மனந்திரும்பு தலிலும் தன்னையறியாமல் ஏற்படும் பரிசுத்தத்திலும் இந்தப் புதுஜீவன் தன்னை வெளிப்படுத்துகிறது.

அவரை ஏற்றுக்கொண்டவர்கள் அத்தனைபேரும் (யோவான் 1:12). இயேசுவைக்குறித்து நான் பெற்றிருக்கிற தகவல் உள்ளான ஆவிக்குரிய அறிவால் பிறந்ததா? அல்லது பிறருக்குச் செவிகொடுத்ததினால் நான் கற்றுக்கொண்டது மட்டுமா? என்னுடைய சொந்த இரட்சகராக கர்த்தராகிய இயேசுவோடு என்னை இணைக்கிற ஏதாவது ஒன்று என் வாழ்க்கையில் உண்டா? எல்லா ஆவிக்குரிய வரலாற்றுக்கும் அதன் மூலக்கோட்பாடாக ஆளத்துவ அறிவு இருக்கவேண்டும். நான் இயேசுவைக் காண்கிறேன் என்பதே மறுபடியும் பிறப்பது என்பதின் கருத்தாகும்.

ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காண மாட்டான் (யோவான் 3:3). நான் ராஜ்யத்துக்கான அடையாளங்களைத் தேடுகிறேனா? அல்லது தேவனுடைய ஆளுகையைக் காண்கிறேனா? தேவனுடைய ஆட்சியை நான் புரிந்துகொள்ள ஆரம்பிக்கும் புதிய காட்சித் திறனைப் புதுப்பிறப்புக் கொடுக்கிறது. அவருடைய ஆளுகை எக்காலத்தும் இருந்தது, ஆனால், அது அவருடைய தன்மைக்கு ஒத்ததாய் இருந்தது; இப்போதோ நான் அவருடைய தன்மையைப் பெற்றிருப்பதால் அவருடைய ஆளுகையைக் காணமுடிகிறது.

தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான் (1 யோவான் 3:9). நான் பாவஞ்செய்கிறதை நிறுத்த விரும்புகிறேனா? அல்லது நான் பாவஞ் செய்கிறதை நிறுத்திவிட்டேனா? பாவஞ்செய்கிறதை நிறுத்துவதற்குரிய தேவனுடைய அசாதாரணமான வல்லமை எனக்கு இருக்கிறது என்பதே தேவனால் பிறப்பது என்பதின் பொருளாகும். ஒரு கிறிஸ்தவன் பாவம் செய்யலாமா? என்று வேதம் ஒருபோதும் கேட்கவில்லை; கிறிஸ்தவன் பாவஞ்செய்யக்கூடாதென்று வேதம் அழுத்திக் கூறுகிறது. பாவஞ்செய்யாம லிருக்கும் வல்லமை நமக்கிருக்கிறதால் மட்டுமல்ல, நாம் பாவஞ்செய்வதை நிறுத்திவிடுவதாலும் நாம் பாவஞ்செய்யாமலிருப்பதே நமக்குள்ளிருக்கிற புதுப்பிறப்பின் ஜீவன் நம்மிலாற்றும் பயனளிக்கக்கூடிய கிரியை. நம்மால் பாவஞ் செய்யமுடியாது என்று 1 யோவான் 3:9 பொருட்படவில்லை; நமக்குள் இருக்கும் தேவனுடைய ஜீவனுக்கு நாம் கீழ்ப்படிந்தால் நாம் பாவஞ்செய்யத் தேவையில்லை என்றே கருத்தாகிறது.

அவர் என்னை அறிவாரா?

அவன் . . . பேர்சொல்லிக் கூப்பிட்டு. யோவான் 10:3.

நான் அவரைக்குறித்து சோகமாய்த் தவறாகப் புரிந்துகொண்டபோது? (யோவான் 20:17). உபதேசத்தைக்குறித்து எல்லாம் அறிந்திருந்தாலும், இயேசுவை அறியாதிருக்க சாத்தியமுண்டு. இயேசுவோடுள்ள நெருங்கிய உறவைவிட உபதேசத்தைக்குறித்த அறிவு வரம்புமீறும் ஆத்துமா ஆபத்திலிருக்கிறது. மரியாள் ஏன் அழுதுகொண்டிருந்தாள்? அவளுடைய கால்களின்கீழிருந்த புற்களைவிட உபதேசம் அவளுக்கு முக்கியமில்லை. உபதேசத்தைப் பொறுத்தமட்டும் எந்தப் பரிசேயனும் மரியாளை முட்டாளாக்கியிருக்கலாம்; ஆனால், அவளிலிருந்து இயேசு ஏழு பிசாசுகளைத் துரத்தினார் என்னும் உண்மை அவர்களால் அவளைக் கேலிசெய்யமுடியாத காரியமாகும். ஆயினும், இயேசுவோடு ஒப்பிடும்போது அவருடைய ஆசீர்வாதங்கள் ஒன்றுமில்லை. மரியாள் இயேசு நிற்கிறதைக் கண்டும், அவரை இயேசு என்று அறியவில்லை; ஆனால், அவள் (இயேசுவின்) குரல் கேட்டவுடனே பேசிய நபரோடு தனக்குப் பழைய வரலாறு ஒன்று உண்டு என்பதை அறிந்தாள்; போதகரே என்று அழைத்தாள்.

நான் அவரைப் பிழைவாதமாய்ச் சந்தேகப்பட்டபோது (யோவான் 20:27). இயேசு வைக்குறித்து ஏதாயினும் ஒன்றை நான் சந்தேகித்திருக்கிறேனா?--அது பிறர் சாட்சிகூறினாலும் நான் பெற்றிராத ஒரு அனுபவமாயிருக்கலாம். நாங்கள் இயேசுவைக் கண்டோம் என்று மற்ற சீஷர்கள் தோமாவிடம் கூறினார்கள்; ஆனால் தோமாவோ சந்தேகித்தார்--நான் கண்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றார். இயேசுவின் தனிநபர் தொடுதல் தோமா வுக்குத் தேவைப்பட்டது. அவருடைய தொடுதல்கள் எப்போது வருகின்றன அல்லது எவ்வாறு வருகின்றன என்பதை நாம் அறிவதில்லை; ஆனால், அவைகள் வரும்போது அவைகள் விவரிக்கமுடியாதபடி மதிப்புமிக்கவை. அப்போது தோமா, என் ஆண்டவரே என் தேவனே என்றான்.

நான் அவரை சுயநலத்தோடு மறுதலித்தபோது? (யோவான் 21:15-17). பேதுரு இயேசுகிறிஸ்துவை சபிக்கவும் சத்தியம்பண்ணவும் செய்து மறுதலித்தார்; ஆயினும் உயிர்த்தெழுதலுக்குப்பின் இயேசு பேதுருவுக்கு நேரடியாகத் தரிசனமானார். அவரைத் தனியாக ஸ்திரப்படுத்தினபின்பு பிறருக்கு முன்பா கவும் அவரை ஸ்திரப்படுத்தினார். அவர் ஆண்டவரே, நான் உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றார்.

இயேசுகிறிஸ்துவோடு எனக்கு ஒரு தனிப்பட்ட வரலாறு உண்டா? சீஷத்துவத்தின் ஒரு அடையாளம் அவரைப்பற்றி ஒன்றாலும் அசைக்க முடியாத அறிவைப் பெற்றுக்கொள்ளுமளவு அவரோடு நெருக்கமான தொடர்போடிருப்பது.

பக்தியில் நீங்கள் அதைரியமடைகிறீர்களா?

இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; உனக்கு உண்டானவைகளை யெல்லாம் விற்று . . . பின்பு என்னைப் பின்பற்றிவா....என்றார். லூக்கா 18:22.

அவன் இதைக் கேட்டபொழுது.....என்று வாசிக்கிறோம். ஆண்டவர் ஒரு கடினமான வார்த்தைக் கூறுவதை நீங்கள் எப்போதாவது கேட்டிருக் கிறீர்களா? நீங்கள் கேட்டிருக்கவில்லையென்றால் அவர் எதையாவது கூற நீங்கள் கேட்டிருக்கிறீர்களா என்று நான் ஐயப்படுகிறேன். நாம் செவிகேட்க ஏராளம் காரியங்களை இயேசுகிறிஸ்து கூறுகிறார், ஆனால் நாம் அவற்றுக்குக் கவனஞ்செலுத்துவதில்லை; நாம் கவனிக்கும்போது அவருடைய வார்த்தைகள் திகைப்புக்குரியக் கடினமாயிருக்கின்றன.

இயேசு கூறியதை இந்த மனிதன் செய்யவேண்டுமென்று அவர் கொஞ்சங்கூட அக்கறைகொண்டதாகத் தோன்றவில்லை; அவனைத் தம்மோடு வைத்துக்கொள்ள அவர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று என்னைப் பின்பற்றிவா என்று மாத்திரமே கூறினார். நம்முடைய ஆண்டவர் ஒருபோதும் மன்றாட வில்லை, ஒருபோதும் தாஜாசெய்யவில்லை, ஒருபோதும் ஏமாற்றவில்லை; மனிதச் செவிகள் இதுவரையிலும் கேட்டிராத மிகக் கடுமையான வார்த்தை களைமாத்திரம் கூறிவிட்டு, அதை அப்படியே விட்டுவிட்டார்.

இயேசு ஒரு கடுமையான வார்த்தை கூறியதை எப்போதாவது நான் கேட்டதுண்டா? அவர் என்னிடம் நேரடியாகச் சொன்ன ஏதாவது காரியத்துக்கு நான் மனப்பூர்வமாகச் செவிகொடுத்திருக்கிறேனா? நான் விளக்கவுரை கூறக்கூடியது அல்ல, அல்லது அதைக்குறித்து இதையும் அதையும் சொல்லக்கூடியதும் அல்ல; அது என்னிடம் அவர் கூறியதாக நான் கேட்ட ஏதோ ஒன்று. இயேசு சொன்ன காரியத்தை இந்த மனிதன் புரிந்துகொண்டான்; அவன் அதைக் கேட்டு அதன் கருத்து என்னவென்று மதிப்பீடுசெய்தபோது அவன் இருதயம் உடைந்தது. அவன் அதை ஏற்க மறுத்தவனாகத் திரும்பிச் செல்லவில்லை; துக்கமடைந்தவனாயும் முற்றும் அதைரியமடைந்தவனாயும் திரும்பிச்சென்றான். மெய்யான ஆர்வமாகிய அக்கினி நிறைந்தவனாய் அவன் இயேசுவிடம் வந்தான், அவருடைய வார்த்தை அவனை உறைய வைத்துவிட்டது; அது ஆர்வமுள்ள பக்தியை உருவாக்குவதற்குப்பதில் இருதயத்தை உடைக்கும் அதைரியத்தையே உரு வாக்கிற்று. இயேசு அவன் பின்னே செல்லவில்லை, அவனைப் போக அனுமதித்துவிட்டார். அவருடைய வார்த்தையை ஒருமுறை கேட்டுவிட்டால் அது எப்போதாவது பலன்கொடுக்கும் என்று நமது ஆண்டவர் திட்டமாய் அறிவார். ஆனால், நிஜவாழ்க்கையில் அது பலன் கொடுக்காதபடி நம்மில் சிலர் தடுப்பதே பயங்கரமான காரியம். அந்தக் குறிப்பிட்ட காரியத்தில் அவருக்குப் பக்தியுள்ளவர்களாயிருக்கத் தீர்மானிக்கும்போது நாம் என்ன சொல்லுவோம் என்று வியப்படைகிறேன். ஒரு காரியம் நிச்சயம், அவர் நம்மீது எதையும் ஒருபோதும் சுமத்தமாட்டார்.

துக்கத்தினால் எப்போதாவது நீங்கள் பேச்சற்றதுண்டா?

அவன் அதிக ஐசுவரியமுள்ளவனானபடியினால், இதைக் கேட்டபொழுது, மிகுந்த துக்கமடைந்தான். லூக்கா 18:23.

தனவந்தனான அந்த இளந்தலைவன் துக்கத்தினால் பேச்சற்று சென்றுவிட்டான்; கூற அவனிடம் ஒரு வார்த்தையுமில்லை. இயேசு என்ன சொன்னார் என்பதில் அவனுக்கு எந்தச் சந்தேகமுமில்லை, அதன் கருத்து என்ன என்பதில் அவனுக்கு விவாதமுமில்லை; எந்த வார்த்தைகளுமற்ற துக்கத்தையே அது அவனில் உண்டாக்கிற்று. நீங்கள் அந்த இடத்தில் எப்போதாவது இருந்ததுண்டா? நீங்கள் மிகவும் ஐசுவரியமுள்ளவர்களாய் இருக்கிற ஏதாவது காரியத்தைக்குறித்து--மனநிலை, தனிப்பட்ட கவர்ச்சி, இருதயம் மற்றும் மனதைப்பொறுத்த உறவு--என்பவைகளைக்குறித்து தேவனுடைய வார்த்தை உங்களுக்கு வந்ததுண்டா? அவ்வாறாயின் நீங்கள் துக்கத்தினால் பலவேளைகளில் பேச்சற்றிருந்திருக்கிறீர்கள். ஆண்டவர் உங்களைப் பின்தொடர்வதில்லை, அவர் உங்களிடம் மன்றாடுவதுமில்லை; ஆனால், அந்தக் காரியத்தில் அவர் உங்களைச் சந்திக்கும் ஒவ்வொருவேளையும், நீங்கள் சொன்னதைச் செய்வீர்களானால், அவைகள்தான் நிபந்தனைகள் என்று மறுபடியும் சொல்வார்.

உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்றுவிடு என்றார். நீங்கள் வெறும் உணர்வுள்ள மனிதஇனமாகும்வரை உடைமைகளாகக் கருதப்படும் யாவற்றையும் தேவனுக்கு முன்பாகத் தார்மீகமாகக் களைந்து விட்டு, பின்பு அதைத் தேவனுக்குக் கொடுங்கள். அங்குதான் தேவனுக்கு முன்பானச் சித்தத்தின் மண்டலத்தில் போராட்டம் நடக்கிறது. இயேசுவைவிட அவர் உங்களிடம் எவைகளை எதிர்பார்க்கிறார் என்கிற உங்கள் கருத்துக்கு அதிகம் விசுவாசமாயிருக்கிறீர்களா? அப்படியானால் உங்களில் துக்கத்தை உண்டாக்கும் அவருடைய கடுமையான கூற்றுக்களில் ஒன்றை நீங்கள் பெரும்பாலும் கேட்பீர்கள். இயேசு என்ன சொல்லுகிறாரோ அது கடுமையானது; அவருடைய தன்மையை உடையவர்கள் கேட்கும்போது மட்டுமே அது எளிதாயிருக்கும். இயேசுகிறிஸ்துவின் ஒரு கடினமான வார்த்தையை மிருதுவாக்க எதையும் அனுமதிப்பதில் எச்சரிக்கையாயிருங்கள்.

தரித்திரத்தில் நான் அதிகத் தனவந்தனாயிருக்கலாம், நான் ஒன்றுமில்லை என்ற உணர்விலும் நான் தனவந்தனாயிருக்கலாம்; அதினால் நான் இயேசுவுக்கு ஒருபோதும் சீஷனாயிருக்கமுடியாது; என்னிடத்தில் எல்லாம் உண்டு என்கிற எண்ணத்தில் நான் தனவந்தனாயிருந்தாலும் நான் அவருடைய சீஷனாயிருக்கமுடியாது. நான் ஆதரவற்றவன் என்கிற கருத்தில் ஆதரவற்றவனாயிருக்க எனக்குச் சித்தந்தானா? இங்குதான் அதைரியமுண்டாகிறது. மதிமயக்கமற்ற தன்னலந்தான் அதைரியம்; இயேசுவில் வைக்கும் பக்தியின்பேரிலுள்ள அன்பு தன்னலமாயிருக்கலாம்.

சுய உணர்வு

என்னிடத்தில் வாருங்கள். மத்.11:28.

இயேசுகிறிஸ்துவுக்குள் நாம் பூரணத்துவமான வாழ்க்கை நடத்த வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்; ஆனால், அந்த வாழ்க்கை புறம்பேயிருந்து தாக்கப்படும் வேளைகளுண்டு; அப்போது நாம், போய் விட்டது என்று எண்ணிய தற்பரிசோதனைக்குள் தடுமாறி விழுகிறோம். தேவனுக்குள்ளான குறையற்ற வாழ்க்கையைக் கவிழ்க்கும் முதற்காரியம் சுய உணர்வே; சுய உணர்வு தொடர்பாகப் போராட்டத்தை உண்டாக்குகிறது. சுய உணர்வு பாவமல்ல; அது பதற்றமான மனநிலையினாலோ அல்லது புதிய சூழ்நிலைகளுக்குள் திடீரென்று தள்ளப்படுவதாலோ உண்டாகலாம். நாம் தேவனுக்குள் முழுமையான பூரணமற்றிருப்பது ஒருபோதும் அவர் சித்தமல்ல. அவருக்குள்ளான இளைப்பாறுதலைக் கெடுக்கிற எதற்கும் உடனடியாகத் தீர்வு காணவேண்டும்; அதைப் பொருட்படுத்தாதிருப்பதால் அல்ல, இயேசுகிறிஸ்துவிடம் வருவதாலேயே தீர்வு உண்டாகும். நாம் அவரிடம் வந்து அவரைக்குறித்தச் சிந்தனையை நம்மில் உருவாக்கும்படி அவரிடம் கேட்போமானால், நாம் அவரில் நிலைத்திருக்கக் கற்றுக்கொள்ளுமட்டும் எப்போதும் அவர் அவ்வாறு செய்வார்.

கிறிஸ்துவிலுள்ள உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட பிரிவினையை எதிர்கொள்ளாமல், அது அப்படியே தொடர ஒருபோதும் அனுமதியாதீர்கள். உங்கள் வாழ்க்கையின் ஒழுக்கு அதாவது நண்பர்கள் அல்லது சூழலின் செல்வாக்கால் ஏற்படுத்தப்பட்ட பிளவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; அவரோடுள்ள ஒருத்துவத்தைப் பிரித்து உங்களைத் தனித்தவர்களாகக் காணச் செய்யப்போகிற எக்காரியத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள். ஆவிக்குரிய நிலையில் நேர்மையாயிருப்பதைப்போல முக்கியமானது வேறொன்றும் இல்லை. அதற்குரிய சிறந்த தீர்வு மிகவும் எளிமையானது--என்னிடத்தில் வாருங்கள் என்பதே. அறிவிலும் அறநெறியிலும் ஆவிக்குரியதிலும் நம்முடைய உண்மையின் ஆழம் என்னிடத்தில் வாருங்கள் என்ற வார்த்தைகளினாலேயே சோதிக்கப்படுகிறது. நாம் எந்த அளவு உண்மையற்றவர்களாயிருக்கிறோமோ அந்த அளவு நாம் அவரிடத்தில் வருவதைக்காட்டிலும் அவரோடு தர்க்கிப்போம்.

முழுமை

நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். மத்.11:28.

இயேசுகிறிஸ்துவோடுள்ள உங்களுடைய வாழ்க்கையை ஏதாவது வேறுபடுத்த ஆரம்பிக்கும்போதெல்லாம் உடனடியாக அவரிடம் திரும்பி, இளைப்பாறுதலை உறுதிப்படுத்தும்படிக் கேளுங்கள். சமாதானக்கேட்டை உண்டாக்கும் எதையும் தொடர்ந்திருக்க ஒருபோதும் அனுமதியாதேயுங்கள். வேறுபாட்டை உண்டாக்கும் ஒவ்வொரு நுணுக்கத்தையும் சகித்துக்கொள்ள வேண்டியவைகளாயல்ல, அதற்கெதிராகப் போராடவேண்டியவைகளாகவே எடுத்துக்கொள்ளுங்கள். ஆண்டவரே, உம்மைக்குறித்த அறிவை என்னில் நிரூபித்தருளும் என்று நீங்கள் சொல்லுங்கள்; அப்போது சுயஉணர்வு போய்விடும், அவரே எல்லாவற்றுக்கும் எல்லாமுமாவார். சுயஉணர்வைத் தொடர விடுவதில் எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில், அது படிப்படியாகச் சுயபச்சாதாபத்தைத் தட்டிஎழுப்பும்; சுயபச்சாதாபம் சாத்தானால் வருகிறது. நான் புரிந்துகொள்ளப்படவில்லை; அவர்கள் மன்னிப்புக்கோரவேண்டிய காரியம் இது; இக்காரியத்தை நான் மெய்யாகவே தெளிவாக்கியிருப்பேன் என்றெல்லாம் நீங்கள் எண்ணாதீர்கள். மற்றவர்களைத் தனியே விட்டு விடுங்கள்; கிறிஸ்துவின் சிந்தையை உங்களில் தரும்படி ஆண்டவரிடம் கேளுங்கள்; அப்போது உங்களுடைய முழுமை நிறைவடையும்வரை அவர் நிதானத்தில் வைத்துக்கொள்வார்.

முழுமையான வாழ்க்கை என்பது ஒரு குழந்தையின் வாழ்க்கை. நான் கிறிஸ்துவை மனப்பூர்வமாக உணர்ந்திருக்கிறேன் என்று எண்ணுவேனானால், ஏதோ தவறிருக்கிறது. நோயுள்ளவனுக்கே ஆரோக்கியம் என்னவென்று தெரியும். தேவனுடைய பிள்ளை அவருடைய சித்தத்தை உணருவதில்லை; ஏனெனில் அவனே தேவனுடைய சித்தம். தேவனுடைய சித்தத்திலிருந்து சிறிதளவேனும் திசைமாறுதல் ஏற்படும்போது, உம்முடைய சித்தம் என்னவென்று நாம் கேட்க ஆரம்பிக்கிறோம். தேவன் ஜெபத்திற்குப் பதிலளிக்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ள ஒரு தேவபிள்ளை ஒருபோதும் ஜெபிப்பதில்லை; தேவன் ஜெபத்திற்கு எப்போதும் பதிலளிக்கிறாரென்ற அமைதியான நிச்சயம் அவருக்குண்டு.

சுயஉணர்வை எந்தப் பகுத்தறிவின் வழியிலாவது வெற்றிகொள்ள நாம் முயன்றால் அதை நாம் மிகவும் அதிகமாக விருத்திசெய்வோம். என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று இயேசு கூறினார்; அதாவது, தன்னறிவின் இடத்தில் கிறிஸ்துவைக் குறித்த சிந்தை வந்துவிடும். இயேசு வரும் இடங்களிலெல்லாம் தன்னைப் பற்றி ஒருபோதும் உணராத செயலின் முழுமையாகிய இளைப்பாறுதலை அவர் உறுதிப்படுத்துவார்.

கவனிக்கப்படாதவர்களின் ஊழியம்

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள். மத்.5:3.

நம்முடைய பார்வையில் எண்ணத்தகாதவைகளாகத் தோன்றுகிற காரியங்களைப் புதியஏற்பாடு கவனிக்கிறது. ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; வார்த்தையின்படியானால்--ஆவியில் பரம ஏழைகள் பாக்கியவான்கள்--பெருமளவு ஒரு சிறப்பற்ற காரியம்! சித்தத்தின் திறன், பண்பின் அழகு போன்று எளிதாகக் கவனிக்கப்படுகிற காரியங்களையே இன்றைக்குள்ள போதகங்கள் வற்புறுத்த வாய்ப்புண்டு. கிறிஸ்துவுக்காகத் தீர்மானியுங்கள் என்று நாம் அடிக்கடி கேட்கிற சொற்றொடர் நம்முடைய ஆண்டவர் ஒருபோதும் நம்பியிராத ஒன்றின்மீதே அழுத்தம் வைக்கிறது. அவருக்கு நம்மை ஒப்புக்கொடுக்கவேதவிர அவருக்காகத் தீர்மானிக்கும்படி அவர் நம்மிடம் கேட்கவில்லை; இரண்டும் வெவ்வேறான காரியங்கள். சாதாரணமானவைகளின் இயல்பான வசீகரமே இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்தின் அடித்தளம். நான் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிற காரியம் என் தரித்திரம். எனக்குச் சித்தத்தின் திறனும் மனநிலையின் சிறப்பும் இல்லை என்று நான் அறிகிறேனானால், நான் பாக்கியவான் என்று இயேசு கூறுகிறார்; ஏனெனில், இந்த எளிமையின் வழியாகத்தான் நான் அவருடைய ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கிறேன். நல்ல மனுஷனாக அல்லது நல்ல மனுஷியாக அவருடைய ராஜ்யத்துக்குள் நான் பிரவேசிக்கமுடியாது; ஒன்றுமில்லாத பரம ஏழையாக மாத்திரமே நான் அதற்குள் பிரவேசிக்கமுடியும்.

தேவனைப் பிரதிபலிக்கிற வசீகரத்தின் உண்மையான தன்மை எப்போதும் தானாகவே உருவாகிறது. அறிந்து செலுத்தப்படும் செல்வாக்குத் தற்பெருமையும் அக்கிறிஸ்தவமுமே. என்னில் ஏதாவது பயனுண்டா என்று வியப்படைகிறேன் என்று நான் சொன்னால் உடனடியாக ஆண்டவருடைய தொடுதலின் பொலிவை நான் இழக்கிறேன். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார் இயேசு. நான் வழிந்தோடுதலைப் பரிசோதிப்பேனேயானால் ஆண்டவருடைய தொடுதலை இழந்துபோவேன்.

நம்முடைய வாழ்க்கையில் அதிகம் செல்வாக்குச் செலுத்திய மக்கள் எவர்கள்? தாங்கள் அவ்விதம் செய்ததாக நினைத்த நபர்களல்ல, நம்மீது செல்வாக்குச் செலுத்துகிறார்கள் என்ற அறிவு சிறிதளவேனும் இல்லாதவர்களே. கிறிஸ்தவ வாழ்க்கையில் மறைவாகச் செல்வாக்குச் செலுத்துகிறவர்கள் அதை ஒருபோதும் அறிவதில்லை; அதை அவர்கள் அறிவார்களானால் இயேசுவின் தொடுதலின் தன்மையாகிய இயல்பான அழகை அவர்கள் இழந்துபோவார்கள். இயேசு செயல்படுகிற காலத்தை நாம் எப்போதும் அறியமுடியும்; ஏனெனில், சாதாரணமானதில் உயர்வான ஏதோ ஒன்றை அவர் உருவாக்குகிறார்.

நான் மெய்யாகவே . . . ஆனால் அவர்

நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கிறேன் . . . அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். மத்.3:11.

நான் மெய்யாகவே–ஆனால் அவர் என்று நான் சொல்லக்கூடிய இடத்திற்கு என்னுடைய அனுபவத்தில் எப்போதாவது வந்திருக்கிறேனா? அந்தத் தருணம் வரும்வரை பரிசுத்த ஆவியினாலுள்ள ஞானஸ்நானம் என்றால் என்ன என்பதை நான் ஒருபோதும் அறியமாட்டேன். நான் மெய்யாகவே ஒரு அந்தத்துக்கு வந்துவிட்டேன், என்னால் ஒன்றுஞ்செய்ய முடியாது; ஆனால், அவர் சரியாக அங்கு ஆரம்பிக்கிறார்--மற்றவர்கள் யாரும் ஒருபோதும் செய்யக்கூடாத அதே காரியங்களை அவர் செய்கிறார். அவருடைய வருகைக்கு நான் ஆயத்தந்தானா? நன்மையோ தீமையோ ஏதாயினும் ஒன்று தடையாய் இருக்கும்வரை இயேசு வரமுடியாது. அவர் வரும்போது நான் செய்துள்ள ஒவ்வொரு தவறான காரியத்தையும் அவர் ஒளியில் கொண்டுவர நான் ஆயத்தமா? அங்குதான் அவர் வருவார். எங்கெல்லாம் நான் அசுத்தமாயிருக்கிறேன் என்று நான் அறிகிறேனோ அங்கெல்லாம் அவர் கண்டனஞ் செய்வார்; நான் சுத்தமாயிருக்கிறேன் என்று எண்ணுகிற இடங்களிலிருந்து கண்டனத்தைப் பின்வலிப்பார்.

மனந்திரும்புதல் பாவத்தைக்குறித்த உணர்வையல்ல, கூறமுடியா தகுதியின்மையின் உணர்வையே கொண்டுவரும். நான் மனந்திரும்பும் போது நான் முற்றிலும் உதவியற்றவனென்று உணருகிறேன்; அவருடைய பாதரட்சைகளைச் சுமப்பதற்குங்கூட சிறிதளவேனும் தகுதியுள்ளவனல்ல என்றும் அறிகிறேன். நான் அவ்வாறு மனந்திரும்பியிருக்கிறேனா? அல்லது நான் எனக்காகப் போராடவேண்டும் என்ற நீடித்த யோசனை என்னில் இருக்கிறதா? தேவன் என்னுடைய வாழ்க்கைக்குள் வரமுடியாது என்பதின் காரணம் நான் முழுவதும் மனந்திரும்பித்தீரவில்லை என்பதே.

அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். பரிசுத்தஆவியின் ஞானஸ்நானத்தை ஒரு அனுபவமாக அல்ல, அதை இயேசுகிறிஸ்து நிறைவேற்றும் ஒரு செயலாக யோவான் கூறினார்--அவர் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். பரிசுத்தஆவியினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் அடைந்துகொள்ளும் ஒரே அனுபவம் முற்றிலும் தகுதியற்றவர்கள் என்ற உணர்வே.

நான் மெய்யாகவே அதுவும் இதுவுமாய் இருந்தேன்; *ஆனால் அவர்* வந்தார், ஒரு அற்புதமான காரியம் நிகழ்ந்தது. அவர் எல்லாவற்றையும் செய்கிற ஓரத்துக்கேச் செல்லுங்கள்.

ஜெபத்தெரிவும் ஜெபப்போராட்டமும்

நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு. மத்.6:6.

அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவைக்குறித்துக் கற்பனைசெய் என்றல்ல, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு என்றே இயேசு கூறினார். ஜெபம் சித்தத்தின் முயற்சி. நமது அந்தரங்க இடத்திற்குள் நாம் பிரவேசித்துக் கதவைப் பூட்டியபின், செய்வதற்கு மிகவும் கடினமான காரியம் ஜெபிப்பதாகும். நம்முடைய மனங்களைத் தகுதியான செயல்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாது; போராடும் முதற்காரியம் சிதறும் சிந்தைகளே. தனிஜெபத்தில் மிகப்பெரிய போராட்டம் மனதின் பகற்கனவை மேற்கொள்ளுவதே. நம்முடைய மனதைக் கட்டுப்படுத்தி, மனப்பூர்வமான ஜெபத்தில் ஒருமுகப்படுத்தவேண்டும்.

நாம் ஜெபிப்பதற்கென்று தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு இடம் இருக்க வேண்டும்; அங்கு நாம் செல்லும்போது, இது செய்யப்படவேண்டும் அது செய்யப்படவேண்டும் என்ற எண்ணங்களாகிய வண்டுகளின் வாதை ஆரம்பிக்கிறது. உங்கள் கதவைப் பூட்டுங்கள். அந்தரங்க அமைதி என்பது உணர்ச்சிகளுக்கு எதிராகக் கதவுகளை மனப்பூர்வமாகப் பூட்டி, தேவனை நினைவுகூருவதே. தேவன் அந்தரங்கத்திலிருக்கிறார், அந்தரங்கத்திலிருந்து அவர் நம்மைக் காண்கிறார்; மற்றவர்கள் நம்மைக் காண்பதுபோலவோ, அல்லது நம்மையே நாம் காண்பதுபோலவோ அவர் நம்மைக் காண்பது இல்லை. நாம் அந்தரங்கத்தில் வாழும்போது நாம் தேவனைச் சந்தேகிப்பது அசாத்தியமாகிறது; வேறு எதையும்குறித்து நிச்சயங்கொள்ளுவதைவிட அவரைக்குறித்து நாம் அதிக நிச்சயங்கொள்ளுகிறோம்.

உங்கள் பிதா அந்தரங்கத்தில் இருக்கிறார், வேறெங்குமல்ல என்று இயேசு கூறினார். அந்தரங்கத்தில் பிரவேசியுங்கள்; அங்கு வழக்கமானக் கடமைகளின்மத்தியில் தேவனை எல்லாக் காலத்தும் காணலாம். எல்லாக் காரியங்களைக்குறித்தும் தேவனோடு இடைபடும் பழக்கத்தை அடைந்து கொள்ளுங்கள். காலையில் விழித்தெழும்பும் முதல் நொடியில் கதவை விரிவாய்த் திறந்து ஆண்டவரை உள்ளே அனுமதிக்கக் கற்றறியாவிட்டால் பகல் முழுவதும் நீங்கள் தவறான நிலையில் செயல்படுவீர்கள்; ஆனால், கதவை விரிவாய்த் திறந்துவைத்து அந்தரங்கத்திலிருக்கிற பிதாவினிடத்தில் ஜெபியுங்கள்; அப்போது சமுதாய சம்பந்தமான எல்லாக் காரியங்களும் தேவனுடைய பிரசன்னத்தால் முத்திரையிடப்படும்.

ஆவிக்குரிய விவரக் குறிப்பு

உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மத்.7:9.

ஒரு நல்ல குழந்தை ஒரு நல்ல காரியம் கேட்கிறதையே நமது ஆண்டவர் ஜெபத்திற்கான எடுத்துக்காட்டாக இங்கு பயன்படுத்துகிறார். தேவனோடு நமக்கு உறவு இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர் நமக்குச் செவிகொடுக்கிறார் என்பதுபோன்று நாம் ஜெபத்தைக்குறித்துப் பேசுகிறோம். (மத்.5:45பார்க்க). நீங்கள் கேட்கிறதை உங்களுக்குத் தருவது தேவனுடைய சித்தமல்ல என்று ஒருபோதும் கூறாதீர்கள்; அமர்ந்து மயக்கமடையாதீர்கள்; ஆனால் காரணத்தைக் கண்டுபிடியுங்கள், விவரக் குறிப்பைத் திருப்புங்கள். உங்கள் மனைவியோடு, உங்கள் கணவரோடு, உங்கள் பிள்ளைகளோடு, உங்கள் சகமாணவர்களோடு உங்கள் உறவு சரியாயிருக்கிறதா?--அங்கு நீங்கள் ஒரு நல்ல பிள்ளையாய் இருக்கிறீர்களா? ஆண்டவரே, நான் எரிச்சலும் கோபமும் கொண்டிருக்கிறேன், ஆயினும் எனக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதம் தேவை என்று நீங்கள் ஜெபிக்கிறீர்கள். உங்களுக்கு அது கிடையாது, நல்ல குழந்தையின் மனப்பான்மையை அடையுமட்டும் அந்த ஆசீர்வாதமில்லாமல் நீங்கள் வாழவேண்டும்.

பகிரங்க எதிர்ப்பைப் பக்தியென்றும், தேவனோடு தர்க்கிப்பதைத் துறப்பு என்றும் நாம் தவறாகக் கருதுகிறோம்; நாம் விவரக் குறிப்பைப் பார்ப்பதில்லை. நான் விலைகொடுக்காத ஏதோவொன்று இருக்க எனக்குத் தேவையான ஒரு காரியத்துக்காகத் தேவன் பணந்தரும்படி நான் ஜெபித்திருக்கிறேனா? எனக்குச் சொந்தமான ஒருவருக்கு நான் விடுதலையளிக்க மறுத்துவிட்டு, தேவனிடத்தில் நான் விடுதலைக்காக கேட்கிறேனா? யாரோ ஒருவருடைய மீறுதலை நான் மன்னிக்கவில்லை; அவரோடு நான் இரக்கமாயிருக்கவில்லை; என் இனத்தவர்கள் மற்றும் நண்பர்கள் மத்தியில் நான் தேவபிள்ளையாக வாழவில்லை (வச.12 பார்க்க).

மறுபிறப்பின்மூலம் மாத்திரமே நான் தேவனுடைய பிள்ளை; நான் ஒளியில் நடந்தால்மட்டுமே தேவனுடைய நல்ல பிள்ளை. நம்மில் பலருக்கும் ஜெபம் என்பது பக்தியான வெட்டிப்பேச்சாய் மாறியிருக்கிறது; அது உணர்ச்சிக்குரியதும், தேவனோடுள்ள இரகசிய உறவுமான காரியம். ஆவிக்குரிய நிலையில் தெளிவின்மையை உருவாக்குவதில் நாம் திறமை சாலிகள். நாம் விவரக் குறிப்பைத் திருப்பினால், தவறென்ன என்பதை மிகவும் தெளிவாகக் கண்டுகொள்வோம்--அந்த நட்பு, அந்தக் கடன், அந்த மனப்பான்மை. தேவனுடைய பிள்ளைகளாய் வாழாவிட்டால் நாம் ஜெபிப்பதால் பயனில்லை. அப்போது இயேசு, கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான் என்று சொல்லுகிறார்.

நட்பின் நற்பயன்

நான் உங்களைச் சிநேகிதர் என்றேன். யோவான் 15:15.

வாழ்க்கையின் ஒவ்வொரு பாகத்திலும் நாம் விட்டுக்கொடுக்கும் வரையிலும் நம்மை நாம் தியாகஞ்செய்வதின் மகிழ்ச்சியை ஒருபோதும் நாம் அறிவதில்லை. நம்மை நாம் ஒப்படைப்பதுதான் எல்லாவற்றிலும் மிகக் கடினமான காரியம்--இவ்வாறானால் என்னை நான் ஒப்படைப்பேன் என்றோ, என் வாழ்க்கையை தேவனுக்கு சமர்ப்பிக்கவேண்டும்போல் தோன்றுகிறது என்றோ நீங்கள் கூறலாம். ஆனால் அதில் நம்மை நாம் தியாகஞ்செய்வதின் எந்த மகிழ்ச்சியுமில்லை.

நாம் எல்லாவற்றையும் துறந்தவுடனே இயேசுவின் மகிழ்ச்சியைக் குறித்த ஒரு தகவலைப் பரிசுத்தஆவியானவர் நமக்குத் தருகிறார். நம்மை நாம் தியாகஞ்செய்வதின் இறுதி நோக்கம் நமது நண்பருக்கு (இயேசுவுக்கு) நம் ஜீவனைக் கொடுப்பதே. பரிசுத்தஆவியானவர் உள்ளே வரும்போது, மகாப்பெரிய விருப்பம் இயேசுவுக்காக ஜீவனைக் கொடுப்பதே. தியாகத்தின் எண்ணம் ஒருபோதும் நம்மைத் தொடுவதில்லை, ஏனெனில், தியாகம் பரிசுத்த ஆவியானவரின் அன்பின் ஆர்வமே.

சுயமாகத் தியாகஞ்செய்யும் வாழ்க்கைக்கு நமக்கு மாதிரி நமது ஆண்டவரே--தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன் என்றார் அவர். வழிந்தோடும் மகிழ்ச்சியோடு அவர் தம்முடைய தியாகத்தில் தொடர்ந்து சென்றார். பூரண கீழ்ப்படிதலோடு நான் என்னை எப்போதாவது இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்படைத்திருக்கிறேனா? இயேசுகிறிஸ்து வழிகாட்டும் துருவ நட்சத்திரமாய் இல்லாவிட்டால் தியாகத்தால் எந்தப் பயனுமில்லை; அவர்மீது கண்களை வைத்தவனாய் நான் தியாகஞ்செய்தால் கிரமமாகவும் திட்டமாகவும் வடிவமைக்கும் செல்வாக்குத் தெளிவாக ஆரம்பிக்கிறது.

நீங்கள் அன்பில் நடப்பதை இயற்கைக் கவர்ச்சிகள் தடைசெய்ய அனுமதியாதீர்கள். இயற்கை அன்பைக் கொல்லும் மிகவும் கொடூரமான வழிகளில் ஒன்று இயற்கைப் பாசங்களின்மேல் கட்டப்பட்ட வெறுப்பு. இயேசுகிறிஸ்துவே பரிசுத்தவானின் நாட்டமாவார். தேவனுக்குநேரான அன்பு உணர்ச்சிபூர்வமானதல்ல; தேவன் அன்புகூருவதுபோல பிறரிடம் அன்புகூருவதே பரிசுத்தவானுக்கு மிகவும் நடைமுறைக்குரிய காரியம்.

நான் உங்களைச் சிநேகிதர் என்றேன் என்றார் இயேசு. நம்மில் உருவாக்கப்பட்ட புதிய வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்ட நட்பு இது; இந்தப் புதிய வாழ்க்கைக்குத் தேவனுடைய ஜீவனோடு உறவு இருக்கிறதேயல்லாமல் நமது பழைய வாழ்க்கையோடு தொடர்பில்லை. இந்தப் புதிய வாழ்க்கை சொல்லொண்ணாத் தாழ்மையும், மாசற்ற தூய்மையும், தேவனுக்குநேராக முழுமையான பக்தியுங்கொண்டது.

எப்போதாவது நீங்கள் கலக்கமடைந்தது உண்டா?

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். யோவான் 14:27.

நம்முடைய சமாதானம் அறிவீனத்தை அடிப்படையாகக்கொண்ட வேளைகள் உண்டு; ஆனால், வாழ்க்கையின் உண்மைகளுக்கு நாம் விழிக்கும்போது, இயேசுவிடமிருந்து பெற்றுக்கொண்டால்தவிர உள்ளான சமாதானம் சாத்தியமில்லை. நமது ஆண்டவர் உங்களுக்கு சமாதானம் என்று கூறும்போது, அவர் சமாதானத்தை உண்டாக்குகிறார்; அவருடைய வார்த்தை எப்போதும் ஆவியாயும் ஜீவனாயுமிருக்கிறது. அவருடைய வார்த்தையை நான் எப்போதாவது அடைந்திருக்கிறேனா? என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் என்றார் இயேசு--அவர் முகத்தை நோக்கி அவருடைய அமைதிகுலையா நிலையை உணருவதால் வருகிற சமாதானம் இது.

தேவனுடைய முன்கருதலின் அனுமதியால் எழுந்துள்ள அலை களாலும் கொந்தளிப்புக்களாலும் சிதறடிக்கப்பட்டதால், இப்போது நீங்கள் வேதனையோடு கலங்கியிருக்கிறீர்களா? உங்களுடைய விசுவாசமாகிய பாறாங்கல் மாற்றிப்போடப்பட்டும், சமாதானம், மகிழ்ச்சி, ஆறுதல் ஆகிய நீரூற்றை இன்னும் கண்டுபிடிக்கவில்லையா? எல்லாம் வறண்டிருக்கிறதா? அவ்வாறாயின், ஏறிட்டுப்பார்த்து கர்த்தராகிய இயேசுவின் அமைதிகுலையா நிலையைப் பெற்றுக்கொள்ளுங்கள். உங்கள் மனதை அவருக்கு விட்டுக் கொடுக்க நீங்கள் தன்னுரிமைப் பெற்றிருப்பதால், உங்களில் பிரதிபலித்த சமாதானம் தேவனோடு நீங்கள் ஒப்புரவாகியிருக்கிறீர்கள் என்பதற்குச் சான்று. நீங்கள் தேவனோடு ஒப்புரவாகியில்லாவிட்டால் உங்கள்மீதுதவிர வேறு எதன்மீதும் உங்கள் மனதைத் திருப்பமுடியாது. இயேசுகிறிஸ்துவின் முகத்தை உங்களிடமிருந்து மறைக்க எதையாவது நீங்கள் அனுமதிப்பீர்க ளானால் ஒன்றில் நீங்கள் கலங்கியிருக்கிறீர்கள், அல்லது உங்களுக்குப் போலியான பாதுகாவல் இருக்கிறது.

தற்போது உங்களை நெருக்குகிற காரியத்தில் இயேசுவை நோக்கிப் பார்த்து, அவரிடமிருந்து சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளுகிறீர்களா? அவ்வாறாயின் அவர் உங்களுக்குள்ளும் உங்கள்மூலமும் கிருபையுள்ள சமாதானத்தின் ஆசீர்வாதமாயிருப்பார். ஆனால் நீங்கள் கவலைப்பட்டு நிவிர்த்திசெய்ய முயற்சித்தால், அவரை அகற்றிவிடுவீர்கள்; உங்களுக்கு நேரிடுவது உங்கள் தகுதிப்படியே. அவரை நினைக்காததால் நாம் கலங்கிப் போகிறோம். ஒருவர் இயேசுகிறிஸ்துவோடு உரையாடும்போது தடுமாற்றம் மறைந்துவிடுகிறது; ஏனெனில் இயேசுவில் குழப்பமில்லை; நம்முடைய ஒரே அக்கறை அவரில் நிலைத்திருப்பதே. எல்லாவற்றையும் அவர்முன் வைப்போம்; இக்கட்டும் இழப்பும் துயரமும் நம்மை எதிரிடும்போது, உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக என்று அவர் சொல்வதைக் கேட்போம்.

உயிருள்ள இறையியல்

இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில் நடவுங்கள். யோவான் 12:35.

தேவனோடு பர்வதத்திலிருக்கிற தருணங்களில் நீங்கள் காண்கிற வைகளின்படி செயல்படாமல் இருப்பதைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். நீங்கள் ஒளிக்குக் கீழ்ப்படியாதிருந்தால், அது இருளாக மாறும். இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிக மாயிருக்கும்! என்று இயேசு சொன்னார். பரிசுத்தமாகுதலைக்குறித்தோ அல்லது தேவன் உங்களுக்குத் தெளிவாக்கின வேறேதாவது காரியத்தைக் குறித்தோ எழும்பும் கேள்விக்கு நீங்கள் விலக்கு அளிக்கும் வினாடியில் உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் வறண்டுபோக ஆரம்பிப்பீர்கள். சத்தியத்தைத் தொடர்பாகச் செயல்பாட்டில் கொண்டுவாருங்கள், எல்லா மண்டலத்திலும் அதைச் செயல்படுத்துங்கள், அல்லது உங்களிடமிருக்கும் அதே ஒளி சாபமாகக் காணப்படும்.

குறிப்பிடத்தக்க ஒரு அனுபவம் தனக்கு முன்பு இருந்ததாகக் கூறக்கூடிய ஒருவர் தன்னில்தானே திருப்திப்பட்டாலும் அதை நடைமுறை வாழ்க்கையில் செயல்படுத்தவில்லையென்றால் அவர்தான் இடைபடுவதற்கு மிகவும் கடினமான நபர். நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் என்று நீங்கள் கூறினால், அதைக் காட்டுங்கள். அனுபவம் வாழ்க்கையில் காண்பிக்கப் படுமளவு போலியில்லாததாயிருக்கவேண்டும். உங்கள் சொந்த ஆசையை திருப்திப்படுத்தச்செய்கிற எந்தக் கோட்பாட்டைக்குறித்தும் எச்சரிக்கையா யிருங்கள்; அது எவ்வளவு அழகாய்த் தொனித்தாலும், பாதாளத்திலிருந்து வந்ததே அது.

மிகவும் நடைமுறைக்குரிய உறவுகளிலும் இறையியல் வெளிப்பட வேண்டும். வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிருக்கவேண்டுமென்று நமது ஆண்டவர் கூறினார்; அதாவது, மிகவும் சன்மார்க்கராக நீங்கள் அறிந்திருக்கிற நபரைவிட நீங்கள் கூடுதல் சன்மார்க்கராயிருக்கவேண்டும். பரிசுத்தமாகுதலின் உபதேசத்தைக்குறித்து நீங்கள் எல்லாம் அறிந்திருக்கலாம், ஆனால், உங்கள் வாழ்க்கையின் நடைமுறைப் பிரச்சனைகளில் அதை நீங்கள் பயன்படுத்துகிறீர்களா? சரீரத்துக்குரியதும் சன்மார்க்கத்துக்குரியதும் ஆவிக்குரியதுமான நமது வாழ்க்கையின் எல்லாப் பாகங்களும் பிராயச்சித்தத்தின் திட்டஅளவைக் கொண்டே மதிப்பிடப்படவேண்டும்.

ஜெபத்தினால் நன்மை என்ன?

ஆண்டவரே,...ஜெபம்பண்ண...எங்களுக்குப் போதிக்கவேண்டும். லூக்கா 11:1.

ஜெபிப்பது ஜென்ம சுபாவமுள்ள மனிதனுடைய வாழ்க்கையின் ஒரு பாகம் அல்ல. ஒரு மனிதன் ஜெபிக்காவிட்டால் அவருடைய வாழ்க்கையில் பாடனுபவிப்பார் என்று கூறக்கேட்கிறோம்; அதில் எனக்குக் கருத்து வேறுபாடுண்டு. ஆகாரத்தினாலல்ல, ஜெபத்தினால் போஷிக்கப்படுகிற அவரிலிருக்கும் தேவகுமாரனுடைய ஜீவனே பாடனுபவிக்கும். ஒரு நபர் உன்னதத்திலிருந்து பிறக்கும்போது தேவகுமாரனுடைய ஜீவன் அவரில் பிறக்கிறது; அவர் அந்த ஜீவனை ஒன்றில் பட்டினி போடலாம், அல்லது போஷிக்கலாம். தேவனுடைய ஜீவனை போஷிப்பதற்குரிய வழி ஜெபமே. ஜெபத்தைக்குறித்த நம்முடைய சாதாரணக் கருத்துக்கள் புதிய ஏற்பாட்டில் காணப்படவில்லை. நமக்கென்றுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் வழிவகையாகவே நாம் ஜெபத்தைக் கருதுகிறோம்; தேவனையே அறிந்து கொள்ளவேண்டும் என்பதுதான் ஜெபம் என்பதே வேதத்தின் கருத்தாகும்.

கேளுங்கள், அப்பொழுது பெற்றுக்கொள்வீர்கள். நாம் தேவனுக்கு முன்பாக முணுமுணுக்கிறோம், குற்றத்தை வருத்தத்துடன் ஒப்புக்கொள்ளுகிறோம் அல்லது அதற்குப் பாராமுகமாயிருக்கிறோம்; ஆனால், வெகு சில காரியங்களையே கேட்கிறோம். ஆயினும், குழந்தைத்தனத்தைக் கொண்ட குழந்தைக்கு எவ்வளவு அற்புதமான துணிச்சலுண்டு! நீங்கள் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால்.....என்று நமது ஆண்டவர் கூறினார். கேளுங்கள், அப்பொழுது தேவன் செயல்படுவார். இயேசுகிறிஸ்துவுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள்; அவருக்குப் போதுமான இடங்கொடுங்கள்; செய்வதறியாத நிலையில் இருக்கும் ஒருவர்தவிர வேறுயாரும் ஒருபோதும் இதைச் செய்யமுடியாது. ஒருவர் செய்வதறியாத நிலையில் இருக்கும்போது ஜெபிப்பது கோழைத்தனமல்ல, அவர் சத்தியமாகிய இயேசுவோடு தொடர்பு கொள்ளும் ஒரேவழி அதுதான். நீங்கள் இருக்கிறபிரகாரமாகவே தேவனிடம் வந்து, எந்தக் காரியங்களில் நீங்கள் செய்வதறியாத நிலைக்கு வந்திருக்கிறீர்களோ அந்தப் பிரச்சனைகளையெல்லாம் அவரிடம் கூறுங்கள். நீங்கள் தன்நிறைவு அடைந்திருக்குங்காலம்வரை நீங்கள் தேவனிடம் எதையும் கேட்கத் தேவையில்லை.

ஜெபம் காரியங்களை மாற்றுகிறது என்பதைவிட, ஜெபம் என்னை மாற்றுகிறது, நான் காரியங்களை மாற்றுகிறேன் என்பதுதான் உண்மை. மனிதன் காரியங்களைப் பார்க்கும் முறையை மீட்பின் அடிப்படையிலுள்ள ஜெபம் மாற்றத்தக்கவிதத்தில் தேவன் காரியங்களை அமைத்திருக்கிறார். புறம்பாகக் காரியங்களை ஜெபம் மாற்றுவதில்லை; ஜெபம் மனிதனுடைய மனநிலையில் அற்புதங்களைச் செயல்படுத்துகிறது.

உன்னதமான நெருக்கம்

நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா? யோவான் 11:40.

விசுவாச வாழ்க்கையில் நீங்கள் துணிந்துப் புறப்பட்டுச்செல்லும் ஒவ்வொரு நேரத்திலும் உங்கள் விசுவாசத்தைத் திட்டமாக மறுதலிக்கிற சில காரியங்களை உங்கள் பகுத்தறிவுச் சூழல்களில் நீங்கள் காண்பீர்கள். பகுத்தறிவு விசுவாசமல்ல, விசுவாசம் பகுத்தறிவல்ல; இயற்கைக்கும் ஆன் மீகத்துக்குமுள்ள உறவைப்போன்றதே அவைகளுக்கிடையிலுள்ள உறவு. உங்கள் பகுத்தறிவு இயேசுகிறிஸ்துவை நம்பமுடியாத இடத்தில் உங்களால் அவரை நம்பமுடியுமா? உங்கள் பகுத்தறிவு வாழ்க்கையின் நிகழ்ச்சிகள் இயேசுகிறிஸ்துவின் கூற்றுக்களை, அவைகள் பொய் என்று உரக்கக் கத்தும்போது, அந்தக் கூற்றுக்களினடிப்படையில் நீங்கள் தைரியத்தோடு துணியமுடியுமா? மலையிலிருக்கும்போது, ஆம், தேவனால் இதைச் செய்யமுடியுமென்று நான் நம்புகிறேன் என்று கூறுவது எளிது; ஆனால், பிசாசு பிடித்திருக்கும் பள்ளத்தாக்குக்கு நீங்கள் இறங்கிவந்து, உங்கள் மறுரூபமலையின் எல்லா விசுவாசத்தையும் வஞ்சகமாக ஏளனஞ் செய்யும் நிகழ்ச்சிகளைச் சந்தித்தாகவேண்டும். என் விசுவாசத்தின் செயல்திட்டம் என் சொந்த மனதுக்குத் தெளிவாயிருக்கும் ஒவ்வொரு நேரத்திலும், அதை மறுக்கிற எதையாவது நான் சந்திக்கிறேன். என்னுடைய எல்லாத் தேவைகளையும் தேவன் சந்திப்பார் என்று விசுவாசிக்கிறேன் என்று வைத்துக்கொள்வோம்; ஆனால், எந்த வருங்கால வாய்ப்பும் இல்லாமல், நான் வறண்டுபோகட்டும்; அப்போது விசுவாசச் சோதனையின்வழியாகக் கடந்துசெல்கிறேனா, அல்லது இன்னும் இழிவானநிலைக்குள் மூழ்கிவிடு கிறேனா என்பதைக் கவனித்துப்பார்க்கவேண்டும்.

விசுவாசம் சோதிக்கப்பட்டேயாகவேண்டும்; ஏனெனில், போராட்டம் மூலம்மாத்திரமே அதைத் தனியாருக்குச் சொந்தமானதாக மாற்றமுடியும். தற்சமயம் உங்கள் விசுவாசத்தை எதிர்க்கிறது எது? அந்தச் சோதனை ஒன்றில் உங்கள் விசுவாசம் சரி என்று தெளிவிக்கும், அல்லது அதை அழித்துவிடும். என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்று இயேசு கூறினார். இறுதியான காரியம் இயேசுவில் வைக்கும் உறுதியான நம்பிக்கையே. அவரில் நிலையான விசுவாசம் வையுங்கள்; அப்போது நீங்கள் எதிரிடுகிறவைகள் யாவும் உங்கள் விசுவா சத்தை விருத்திசெய்யும். விசுவாச வாழ்க்கையில் தொடர்பான பரிசோதனை உண்டு; இறுதியான பெரிய பரிசோதனை மரணமே. போராட்ட நிலையில் தேவன் நம்மை வைக்கட்டும்! தேவன் நமக்கு ஆதரவு தரமாட்டார் என்று சொப்பனத்தில்கூட எண்ணத் துணியாமல் தேவனில் நாம் வைக்கும் கூறமுடியாத நம்பிக்கையே விசுவாசமாகும்.

கிறிஸ்து என்னை நம்பச்செய்திருக்கிறாரா?

ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப் படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோ ஷப்படுங்கள். லூக்கா 10:20.

வெற்றிகரமான ஊழியத்தில் மகிழ்ச்சியடையாமல், என்னோடு நீங்கள் சரியான உறவிலிருப்பதற்காக மகிழ்ச்சியடையவேண்டுமென்பதே இயேசு கூறியதின் கருத்தாகும். வெற்றிகரமான ஊழியத்தில் மகிழ்ச்சியடை வதும், தேவன் உங்களைப் பயன்படுத்தியிருக்கிறார் என்ற உண்மையில் சந்தோஷப்படுவதுமே கிறிஸ்தவ ஊழியத்தில் கண்ணி. நீங்கள் இயேசு கிறிஸ்துவோடு சரியான உறவில் வாழ்ந்தால், உங்களைக்கொண்டு தேவன் எவைகளையெல்லாம் செய்வார் என்பதை உங்களால் ஒருபோதும் அளவிட முடியாது. அவரோடு உங்கள் உறவைச் சரியாகக் காத்துக்கொள்ளுங்கள்; அப்போது நீங்கள் எந்தெந்தச் சூழ்நிலையில் இருந்தாலும், அனுதினமும் நீங்கள் சந்திக்கிறவர் எவராயினும், உங்கள்மூலம் அவர் ஜீவத்தண்ணீரின் நதியை ஊற்றுகிறார்; நீங்கள் அதை அறிவதை அவர் அனுமதியாதிருப்பது அவருடைய கருணையாலே. இரட்சிப்பு மற்றும் பரிசுத்தமாகுதல் வழியாய் தேவனோடு நீங்கள் தகுதியான தொடர்புகொண்டதும், நீங்கள் இருக்கிற இடத்திலே தேவன் உங்களை வைத்திருக்கிறார் என்பதை நினைத்துக்கொள் ளுங்கள்; தேவன் ஒளியிலிருக்கிறதுபோல நீங்களும் ஒளியில் நடக்கும் வரை உங்களைச் சுற்றியுள்ள சூழ்நிலைகளில் உங்கள் வாழ்க்கையின் பிரதிக்கிரியையினால் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவீர்கள்.

சேவைக்கு முக்கியத்துவம் கொடுப்பதே இன்றுள்ள மனநிலை. தாங்கள் பயனுள்ளவர்கள் என்பதை அடிப்படையாக்கி ஜெபிக்கிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். பயன்படுதலின் அடிப்படையில் நீங்கள் பரிசோதித்தால் எக்காலமும் வாழ்ந்தவர்களில் இயேசுகிறிஸ்துதான் மகாப் பெரிய தோல்வி. பரிசுத்தவானின் வழிகாட்டி தேவன்தான், அவர் எவ்வளவு பயன்படக்கூடும் என்ற மதிப்பீடல்ல. நாம் தேவனுக்காக என்ன செய்கிறோம் என்பதல்ல, தேவன் நம்மூலம் செய்யும் பணிதான் முக்கியமானது. ஒரு மனிதனின் வாழ்க்கையில் நமது ஆண்டவர் கவனிக்கிறதெல்லாம் அந்த மனிதர் பரம பிதாவோடு எத்தகையத் தகுதியான உறவு வைத்திருக்கிறார் என்பதே. மகிமைக்குள் இயேசு பல பிள்ளைகளைக் கொண்டுவருகிறார்.

என்னுடைய சந்தோஷம் ... உங்கள் சந்தோஷம்

என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும். யோவான் 15:11.

இயேசு பெற்றிருந்த சந்தோஷமென்ன? தன் பிதாவுக்குத் தன்னை முற்றிலும் சுயமாய் ஒப்படைத்ததும் தன்னைத்தான் தியாகம் செய்ததும் இயேசுவின் சந்தோஷமாயிருந்தது; எதைச் செய்யும்படி பிதா தன்னை அனுப்பினாரோ அதைச் செய்ததினால் வந்த சந்தோஷமாயிருந்தது அது. உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன் என்றார் இயேசு. நம்முடைய சந்தோஷம் அவருடைய சந்தோஷம்போலாகுமட்டும் அது பூர்த்தியாகிக்கொண்டேயிருக்கும்படி இயேசு ஜெபித்தார். இயேசுகிறிஸ்து தன்னுடைய சந்தோஷத்தை எனக்கு அறிமுகஞ்செய்ய நான் அவரை அனுமதித்திருக்கிறேனா?

என்னுடைய வாழ்க்கையின் வழிந்தோடும் அனுபவம் சரீர ஆரோக்கியத்திலும், புறம்பான சம்பவங்களிலும், தேவ ஊழியம் வெற்றியடைவதைக் காண்பதிலும் அல்ல, தேவனைப் பூரணமாய்ப் புரிந்துகொள்வதிலும் இயேசு தேவனோடு கொண்டிருந்ததுபோன்ற தேவனோடுள்ள உறவிலுமே அடங்கியிருக்கிறது. சூழ்நிலைகளைக்குறித்துக் கவலைப்படுவதாகிய குறைகாணும் எரிச்சலே இந்த சந்தோஷத்தைத் தடைசெய்யும் முதற்காரியம். உலகக் கவலைகள் வசனத்தை நெருக்கிப்போடும் என்று இயேசு கூறினார். நாம் எந்நிலையிலிருக்கிறோம் என்பதை அறியுமுன்னே காரியங்களின் பகட்டால் வசீகரிக்கப்படுகிறோம். தேவன் நமக்குச் செய்திருக்கிறவைகளெல்லாம் வெறும் ஆரம்பம் மட்டுமே; நாம் அவருடைய சாட்சிகளாய், இயேசு யார் என்பதை அறிவிக்கும் இடத்துக்கு நம்மைக் கொண்டுபோகத் தேவன் விரும்புகிறார்.

தேவனோடு சரியான உறவுகொள்ளுங்கள்; அங்கு உங்கள் சந்தோஷத்தைக் கண்டுகொள்ளுங்கள்; அப்போது உங்களிலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் புறப்பட்டு ஓடும். உங்கள்மூலமாக ஜீவத்தண்ணீரை வழிந்தோடச்செய்ய இயேசுகிறிஸ்துவுக்கு ஒரு செயல்மையமாயிருங்கள். உங்களைக்குறித்துக் கூடுதல் கவனஞ்செலுத்துவதை நிறுத்துங்கள், பரிசுத்தமாக்கப்பட்ட அகங்காரிகளாயிருப்பதை நிறுத்துங்கள்; கிறிஸ்துவுடனே மறைந்திருக்கிற வாழ்க்கை நடத்துங்கள். தேவனோடு சரியான உறவுகொண்ட வாழ்க்கை எங்கு சென்றாலும் மூச்சுவிடுவதுபோன்று இயற்கையாக அமையும். உங்களுக்கு அதிக ஆசீர்வாதமாயிருந்தவர்கள் அவ்வாறு தாங்கள் இருந்ததாகச் சற்றேனும் உணராதவர்களே.

பரிசுத்தமாகுதலின் தீர்ப்பு

நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள். 1 பேதுரு 1:16.

உங்கள் வாழ்க்கையின் நோக்கம் என்னவென்பதை உங்களுக்கு நீங்களே தொடர்பாக எடுத்துரையுங்கள். மனிதனுக்கு விதிக்கப்பட்ட தீர்ப்பு மகிழ்ச்சியோ ஆரோக்கியமோ அல்ல, பரிசுத்தமே. இக்காலத்தில் நமக்கு மட்டுமீறிய கவர்ச்சிகள் இருக்கின்றன, அவற்றை நாம் அதிகம் அனுபவிக் கிறோம்; இன்னும் நிறைவேற்றப்படக்கூடிய நேர்மையும் நன்மையும் உயரியதுமான கவர்ச்சிகள் உண்டு; இதற்கிடையில் தேவன் அவற்றைப் படிப்படியாக அழிக்கவேண்டும். முக்கியமான ஒரே காரியம் தன்னைப் பரிசுத்தம்பண்ணக்கூடிய தேவனை ஒரு மனிதன் ஏற்றுக்கொள்ளுவானா என்பதுதான். எத்தகைய விலை கொடுக்கவேண்டியதுவந்தாலும், மனிதன் தேவனோடு சரியான உறவு கொண்டாகவேண்டும்.

நான் பரிசுத்தமாயிருப்பது தேவையென்று நான் நம்புகிறேனா? தேவன் எனக்குள் வந்து என்னைப் பரிசுத்தமாக்கமுடியுமென்று நான் நம்புகிறேனா? உங்கள் பிரசங்கத்தால் நான் அசுத்தன் என்று என்னை உணரச்செய்வீர்களானால், உங்கள் பிரசங்கத்தை நான் வெறுக்கிறேன். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது நான் அசுத்தன் என்று நிச்சயம் வெளிப் படுத்தும் என்பதால், அது கடுமையான வெறுப்பை எழுப்புகிறது; ஆனால், அந்தச் செய்தி தீவிரமான பேராவலையும் எழுப்புகிறது. மனுக்குலத்துக்குத் தேவன் விதித்த தீர்ப்பு ஒன்றேயுண்டு, அது பரிசுத்தம். அவருடைய ஒரே நோக்கம் பரிசுத்தவான்களை உற்பத்திபண்ணுவதே. மனிதருக்கு நித்திய ஆசீர்வாதங்களைக் கொடுக்கும் ஒரு இயந்திரம் அல்ல ஆண்டவர்; அவர் அனுதாபத்தினால் மனிதரை இரட்சிக்க வரவில்லை; அவர் மனிதரைப் பரிசுத்தமாயிருப்பதற்காகப் படைத்ததினால் அவர்களை இரட்சிக்க வந்தார். இயேசுகிறிஸ்துவின் மரணத்தின்மூலமாகத் தேவன் என்னைத் தம்மோடு, ஒரு நிழல்போலும் இடையிலே இல்லாதபடி, பூரணமான உறவுக்குள் திரும்பக் கொண்டுவரமுடியுமென்பதே பிராயச்சித்தமாகும்.

பரிசுத்தமான தேவனுக்கு ஒவ்வாத எந்தப் பழக்கத்தையும் உங்கள் பேரிலோ பிறர்பேரிலோ உள்ள பரிவினால் சகித்துக்கொள்ளாதேயுங்கள். பரிசுத்தத்தின் கருத்து கால்களால் கறைப்படாதபடி நடப்பதும், நாவால் கறைப்படாதபடி பேசுவதும், மனதால் கறைப்படாதபடி சிந்திப்பதுமே-- வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் தேவனுடைய ஆய்வின்கீழ் இருக்க வேண்டும். பரிசுத்தமென்பது தேவன் எனக்கு எதைத் தருகிறார் என்பது மாத்திரமல்ல, தேவன் எனக்குத் தந்திருப்பதில் எதை நான் வெளிப்படுத்து கிறேன் என்பதுமாகும்.

தியாகமாகிய சாக்கிரமந்து

என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ... ஓடும். யோவான் 7:38.

என்னில் விசுவாசமாயிருக்கிறவன் தேவனுடைய சம்பூரணத்தின் ஆசீர்வாதங்களை அடைந்துகொள்வான் என்று இயேசு கூறாமல், என்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவனிலிருந்து அவன் பெற்றுக்கொள்ளுகிறது எல்லாம் வெளியேறும் என்றே கூறினார். நம் ஆண்டவருடைய போதனை எப்போதும் சுயத்தை விருத்திசெய்வதற்கு எதிரானது. அவருடைய நோக்கம் மனிதனின் முன்னேற்றமல்ல; மனிதனைத் துல்லியமாகத் தன்னைப் போலாக்குவதே அவருடைய நோக்கம்; தேவகுமாரனுடைய அந்த இயல்பு தன்னைத்தான் செலவிடுவதே. நாம் இயேசுவில் விசுவாசம் வைத்தால், நாம் எதை ஆதாயப்படுத்துகிறோமென்பதல்ல, நம்வழியாக அவர் எதை ஊற்றுகிறார் என்பதே முக்கியம். தேவன் நம்மை அழகான உருண்டைத் திராட்சைப் பழங்களாக ஆக்குவதல்ல, அவர் நம்மிலிருந்து இனிமையைப் பிழிந்தெடுக்கிறதே அவருடைய நோக்கம். ஆவிக்குரியநிலையில், நமது வாழ்க்கையை வெற்றியினால் நாம் அளக்கமுடியாது, தேவன் நம்வழியாக எதை ஊற்றுகிறார் என்பதின்மூலமே அளக்கவேண்டும்; ஆனால் அதை நாம் ஒருபோதும் அளக்கமுடியாது.

பெத்தானியாவிலுள்ள மரியாள் பரிமளதைலக்குப்பியை உடைத்து இயேசுவின் தலையில் ஊற்றினபோது, அந்தக் கிரியைக்கு எந்தச் சந்தர்ப் பமும் உள்ளதாக வேறு யாரும் காணவில்லை; அது வீணென்றே சீஷர்கள் கூறினார்கள். ஆனால் இயேசுவோ அவளுடைய அளவுகடந்த பக்தியின் செயலை மெச்சிப்பேசினார், இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்தது சொல்லப்படும் என்றும் கூறினார். பொருளாதார நிலையை நினைக்காதபடி, அவருக்கு ஒப்படைத்துவிட்டு மரியாள் செய்த அதே காரியத்தை நம்மில் யாராவது செய்வதை ஆண்டவர் காணும்போது தன்னை மறந்து மகிழ்ச்சி அடைகிறார். உலகம் இரட்சிக்கப்படுவதற்காகத் தேவன் தம் குமாரனுடைய ஜீவனைச் சிந்தினார்; அவருக்காக நம் ஜீவனைச் சிந்த நாம் ஆயத்தமா?

என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத் திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார் இயேசு; அதாவது, நூற்றுக்கணக்கான பிற உயிர்கள் தொடர்பாகக் களைப்பாறுவார்கள். வாழ்க்கையை நொறுக்கி, திருப்திக்கு ஏக்கங்கொள்வதை நிறுத்தி, எல்லா வற்றையும் ஊற்றும் காலம் இது. நம்மில் யார் இதை அவருக்காகச் செய்வார் என்று நம்முடைய ஆண்டவர் கேட்கிறார்.

திருப்தியின் தண்ணீர் சிந்தப்பட்டது

ஆனாலும் அவன் அதைக் குடிக்க மனதில்லாமல் அதைக் கர்த்தருக்கென்று ஊற்றிப்போட்டான். 2 சாமு.23:16.

பெத்லகேமின் கிணற்றுத் தண்ணீரைப்போல அண்மையில் உங்களுக்கு இருந்ததென்ன?--அன்பா, தோழமையா, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களா? அப்படியானால் உங்களைத் திருப்திசெய்ய இத்தண்ணீரை நீங்கள் குடித்தால் உங்கள் ஆத்துமாவுக்கு ஆபத்து; அப்படிச் செய்தால் நீங்கள் அதைக் கர்த்தருக்கென்று ஊற்றிவிடமுடியாது. உங்களைத் திருப்திசெய்ய நீங்கள் ஆசைப்படுகிற காரியங்களை ஒருபோதும் தேவனுக்காகப் பிரித்து வைக்கமுடியாது. தேவனிடமிருந்து வரும் ஒரு ஆசீர்வாதத்தால் உங்களை நீங்கள் திருப்திசெய்வீர்களானால் அது உங்களைக் கறைப்படுத்தும்; அதை நீங்கள் தியாகஞ்செய்யவேண்டும், அதை ஊற்றிவிடுங்கள்; பகுத்தறிவு அபத்தமான வீண்செலவு என்று கூறுகிறதை அதற்குச் செய்யுங்கள்.

இயற்கையான அன்பை அல்லது ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை நான் கர்த்தருக்கென்று ஊற்றிவிடுவது எவ்வாறு? ஒரேயொரு வழியில் மட்டுமே அதைச் செய்யமுடியும்--அது என்னுடைய மனதின் தீர்மானத்தில். ஒருவர் தேவனை அறியவில்லையென்றால், அவரால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாத பிறருடைய குறிப்பிட்ட செயல்கள் உண்டு; ஏனெனில் அவற்றைத் திருப்பிச்செலுத்துவது மனித சக்திக்குட்பட்டதல்ல. இது என் தகுதிக்கு மிதமிஞ்சியது, இது ஒருபோதும் மனுக்குலத்துக்கு உரியதல்ல என்று நான் உணர்ந்தவுடனே, இதை நான் கர்த்தருக்கென்று ஊற்றிவிட வேண்டும்; அப்போது இந்தக் காரியங்கள் சுற்றிலும் ஜீவத்தண்ணீரின் நதிகளாய்ப் பாயும். நான் இக்காரியங்களைக் கர்த்தருக்கென்று ஊற்றிவிடுமட்டும், அவைகள் இச்சையாக மாறுவதால் என் அன்புக்குரியவர்களையும் என்னையும் அவைகள் ஆபத்துக்குள்ளாக்கும். அசுத்தமானதாயும் இழிவானதாயும் இல்லாத காரியங்களில் நாம் இச்சையுள்ளவர்களாயிருக்கலாம். ஆனால், கர்த்தருக்கென்று ஊற்றப்படுமளவுக்கு மறுரூபப்படும் இடத்துக்கு அன்பு வரவேண்டும்.

நீங்கள் கசப்பும் வெறுப்பும் உள்ளவர்களாய் மாறிவிட்டீர்களானால் அதன் காரணம் தேவன் உங்களுக்கு ஒரு ஆசீர்வாதத்தைக் கொடுத்தபோது அதை நீங்கள் உங்களுக்காக இறுகப் பிடித்துக்கொண்டீர்கள்; ஆனால், நீங்கள் அதைக் கர்த்தருக்கென்று ஊற்றியிருந்தால் நீங்கள் பரலோகத்துக்குப் புறம்பே மிகவும் இனிய மனிதனாயிருந்திருப்பீர்கள். நீங்கள் எப்போதும் ஆசீர்வாதங்களை உங்களுக்காக மாத்திரம் எடுத்துக் கொண்டு, கர்த்தருக்கென்று எதையாகிலும் ஊற்றுவதற்கு ஒருபோதும் கற்றுக்கொள்ளவில்லையென்றால் உங்கள்மூலம் பிறருடைய எல்லை விசாலமடையாது.

அவருடையவர்கள்!

அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர். யோவான் 17:6.

நீங்கள் உங்களுடையவர்களல்ல என்ற வெளிப்பாட்டைப் பரிசுத்த ஆவியானவர் யாரில் உருவாக்குகிறாரோ அவரே அருட்பணியாளர். நான் என்னுடையவனல்ல என்று சொல்லுவது ஆவிக்குரிய பெருந்தன்மையின் முக்கியக் கட்டத்தை அடைந்ததாகும். உயரிய முன்னுரிமையோடு என்னை இன்னொருவருக்கு மனப்பூர்வமாக விட்டுக்கொடுப்பதே இயற்கைச் சூழலில் வாழ்க்கையின் உண்மையான தன்மையாகும்; அந்த இன்னொருவர் இயேசுகிறிஸ்துவே. நான் காட்சியகத்தின் காட்சிப் பொருளாயிருப்பதற்காக அல்ல, என் ஆண்டவரோடு என்னை ஒன்றாக்குவதற்காகவே இயேசுவின் இயல்புகளைப் பரிசுத்த ஆவியானவர் எனக்கு விளக்குகிறார். நம்முடைய ஆண்டவர் தம்முடைய சீஷர்களுக்குச் செய்தவைகளின் அடிப்படையில் அவர்களில் ஒருவரையும் அவர் அனுப்பவேயில்லை. அவருடைய உயிர்த் தெழுதலுக்குப்பின் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் அவர் யார் என்பதை சீஷர்கள் தெரிந்துகொண்டதின்பின்பே, போங்கள் என்று இயேசு சொன்னார்.

யாதொருவன் என்னிடத்தில் வந்து.....வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான் என்று இயேசு கூறினார்; நல்லவனும் நேர்மை யானவனுமாயிருக்கமுடியாது என்றல்ல, இவன் என்னுடையவன் என்று இயேசு இவன்மேல் எழுதமுடியாது என்பதே இதன் கருத்து. நம்முடைய ஆண்டவர் குறிப்பிட்ட உறவுகளில் ஒவ்வொன்றும் அவரோடு போட்டியிடும் உறவாயிருக்கலாம். நான் என் தாய்க்கோ, என் மனைவிக்கோ அல்லது எனக்கோ சொந்தமாயிருக்க விரும்பலாம்; அப்படியானால், நீ எனக்குச் சீஷனாயிருக்கமுடியாது என்று இயேசு கூறுகிறார். நான் இரட்சிக்கப்பட மாட்டேன் என்று இதனால் கருத்தாகாது; நான் அவருடையவனாயிருக்க முடியாது என்றே இதனால் கருத்தாகிறது.

ஒரு சீஷனை நம்முடைய ஆண்டவர் தம்முடைய சொந்த உடை மையாக்குகிறார், அவர் அவனுக்குப் பொறுப்பெடுக்கிறார். நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். இயேசுவுக்காக எதையும் செய்கிற ஆவி யல்ல, அவருக்குப் பூரண மகிழ்ச்சியாயிருக்கிற ஆவியே நமக்குள் பிரவே சிக்கிறது. நான் அவருடையவன், அவர் தம் திட்டங்களை என்வழியாய்ச் செயல்படுத்துகிறார் என்று கூறுவதே அருட்பணியாளரின் இரகசியமாகும்.

முழுமையாக அவருடையவர்களாயிருங்கள்!

விழித்திருக்கும் அருட்பணியாளர்

என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா? மத்.26:40.

என்னோடேகூட விழித்திருங்கள்--உங்களுக்குச் சொந்தமான தனிக்கண்ணாட்டம் எதுவுமில்லாமல், என்னோடு மாத்திரம் விழித்திருங்கள் என்றே இயேசு கூறுகிறார். ஆரம்பக்கட்டத்தில் நாம் அவரோடு விழித்திருப்ப தில்லை, அவருக்காக விழித்திருக்கிறோம். வேதத்தின் வெளிப்படுத்தல் மூலமாக நாம் அவரோடு விழித்திருக்கவில்லை, நமது வாழ்க்கையின் சூழ்நிலைகளிலும் நாம் அவரோடு விழித்திருக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட கெத்செமனேயில் அவரோடுள்ள ஒன்றித்தலுக்கு நம்மை அறிமுகப்படுத்த நம்முடைய ஆண்டவர் முயற்சிக்கிறார்; நாமோ போகமாட்டோம்;--நாமோ, இல்லை, ஆண்டவரே, இதன் கருத்தை என்னால் அறியமுடியவில்லை, இது கசப்பாய் இருக்கிறது என்று கூறுகிறோம். புரிந்துகொள்ளமுடியாத ஒருவரோடு நாம் எவ்வாறு விழித்திருக்கமுடியும்? இயேசுவின் பாடுகள் எதற்காக என்பதைக்கூட அறியாதிருக்கும்போது நாம் அவருடைய கெத்செ மனேயில் அவரோடு விழித்திருக்க அவரைப் போதுமான அளவு எவ்வாறு புரிந்துகொள்ளப்போகிறோம்? அவரோடு எவ்வாறு விழித்திருப்பதென்பது நமக்குத் தெரியாது; இயேசு நம்மோடு விழித்திருக்கிறார் என்கிற கருத்து மாத்திரம் நமக்குப் பழக்கமானது.

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் தங்கள் இயற்கைத் திறனுக்களவு அவரை நேசித்தார்கள்; ஆனால், அவருடைய நோக்கத்தை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. கெத்செமனே தோட்டத்தில் தங்கள் துக்கத்தின் காரணமாக அவர்கள் தூங்கினார்கள்; மூன்றரை ஆண்டுகாலம் அவரோடு அவர்கள் கொண்டிருந்த மிகவும் நெருங்கிய உறவுநிலையின் இறுதியில் அவர்கள் எல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்.

அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டார்கள்--அதே (ஓடிப்போன) அவர்கள்; ஆனால் இதற்கிடையில் நமது ஆண்டவரின் மரணம், உயிர்ப்பு, பரமேறுதல், பரிசுத்தஆவியானவர் சீஷர்களுக்குள் பிரவேசித்ததுபோன்ற அற்புதமான சில காரியங்கள் நடந்தன. பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைவீர்கள் என்று நம் ஆண்டவர் கூறியிருந்தார்; அதன் பொருளென்னவென்றால், தங்கள் வாழ்க்கையின் மீந்த காலம் முழுவதும் அவர்கள் அவரோடு விழித்திருக்கக் கற்றுக்கொண்டார்கள் என்பதே.

வாழ்க்கையின் பரந்து விரிவுறுகிற நிலை

ஜீவத்தண்ணீருள்ள நதிகள். யோவான் 7:38.

ஒரு நதியின் உற்பத்தி ஸ்தானம் அறிந்திராத இடங்களை அந்த நதி தொடுகிறது; இயேசுவின் நிறைவை நாம் அடைந்திருந்தால், நமது வாழ்க்கையின் வெளிப்படையான தாக்கம் எவ்வளவு சிறியதாயிருந்தாலும், பூமியின் கடைசிபரியந்தமும் ஆசீர்வாதமாயிருக்கும் நதிகள் நம்மிலிருந்து ஓடும் என்று இயேசு கூறினார். இந்த வழிந்தோடுதலுக்கு நாம் ஒன்றும் செய்யத் தேவையில்லை--நாம் விசுவாசிக்கிற தேவனுடைய செயலே அது. ஒரு ஆத்துமா எவ்வளவு பெரிய ஆசீர்வாதமாயிருக்கிறது என்பதை அது கண்டுகொள்ள ஆண்டவர் அனுமதிக்கிறது அரிதே.

ஒரு நதி வெற்றிகரமான உறுதியுடையது; அது எல்லாத் தடைகளையும் மேற்கொள்ளுகிறது. கொஞ்சக்காலம் அது தன்னுடைய ஒழுக்கில் நிதானமாய்ச் செல்லுகிறது; அதன்பின் அது ஒரு தடங்கலுக்கு வருகிறது; சற்று நேரம் அது அங்கு தங்கிநின்று, முன்செல்ல மறுக்கிறது; ஆயினும் வெகுசீக்கிரத்தில் அது தடையைச்சுற்றி ஒரு பாதையை அமைத்துக்கொள்ளுகிறது. அல்லது ஒரு நதி அநேக மைல்கள் பார்வையைவிட்டு மறைந்து போகிறது, பின்பு அது எப்போதையும்விட விசாலமாயும் மனோகரமாயும் வெளியே தோன்றுகிறது. சில வாழ்க்கைகளைத் தேவன் பயன்படுத்துகிறதை நீங்கள் காணக்கூடும்; உங்கள் வாழ்க்கையில் ஒரு தடங்கல் வந்தது; அதனால் நீங்கள் எந்தப் பயனும் இல்லாதவர்களைப்போலக் காணப்படுகிறீர்கள். உற்பத்தி இடத்திற்கு நேராக உங்கள் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருங்கள்; தேவன் ஒன்றில் தடங்கலைச் சுற்றி உங்களைக் கொண்டுவருவார் அல்லது தடங்கலை நீக்குவார். தேவ ஆவியின் நதி எல்லாத் தடங்கல்களையும் மேற்கொள்ளுகிறது. தடங்கல்மீதோ அல்லது பாடுகள்மீதோ ஒருபோதும் உங்கள் கண்களை வைக்காதீர்கள். உற்பத்தி இடத்தை நோக்கிக்கொண்டிருக்க நீங்கள் நினைவுகூர்ந்தால் உங்கள்மூலம் நிதானமாய் ஒழுகும் நதிக்குத் தடங்கல் ஒரு பொருட்டல்ல. உணர்ச்சிகளும் அனுபவங்களும் உங்களுக்கும் இயேசுகிறிஸ்துவுக்குமிடையே வருவதற்கு ஒருபோதும் அனுமதியாதீர்கள்; மகத்துவமான தெய்வீக உற்பத்தி இடத்திலிருந்து ஒன்றும் உங்கள் விலக்கிவைக்கக்கூடாது.

நம்முடைய ஆத்துமாக்களில் தங்களையே விருத்தியாக்குகிற ஆரோக்கியமளிக்கிறதும் விரிந்து பரந்ததுமான நதிகளைச் சிந்தித்துப் பாருங்கள்! தேவன் அற்புதமான சத்தியங்களை நம்முடைய உள்ளத்துக்கு வெளிப்படுத்திக்கொண்டேயிருக்கிறார்; அவர் வெளிப்படுத்திய ஒவ்வொரு குறிப்பும் அவர் நம்வழியாக ஒழுகச்செய்யப்போகிற நதியின் பரந்த வல்லமையின் அடையாளமே. நீங்கள் இயேசுவை விசுவாசித்தால் பிறருக்காக ஆசீர்வாதத்தின் சக்தியான நீரோட்டத்தை உங்களுக்குள்ளே தேவன் விருத்திசெய்திருப்பதை நீங்கள் கண்டுகொள்வீர்கள்.

கருணையுள்ள நீரூற்றுக்கள்

நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும். யோவான் 4:14.

நம்முடைய ஆண்டவர் கொடுக்கிற சித்திரம் ஒரு கால்வாயினு டையதல்ல, ஒரு நீரூற்றே. நிறைந்துகொண்டேயிருங்கள், அப்போது இயேசு வோடுள்ள இன்றியமையாத உறவின் இனிமை ஒரு பரிசுத்தவானுக்கு எவ்வளவு தாராளமாகக் கொடுக்கப்படுகிறதோ அவ்வளவு அதிகமாக அவரிலிருந்து வெளியே ஒழுகும். தகுந்தவாறு உங்கள் வாழ்க்கை ஒழுக வில்லையென்று நீங்கள் காண்பீர்களானால் குற்றம் உங்களுடையதே; ஏதோவொன்று ஒழுக்கைத் தடைசெய்திருக்கிறது. உற்பத்தி இடத்தை நீங்கள் நோக்கிக்கொண்டிருங்கள், அப்படியானால் நீங்கள் தனிநபராக ஆசீர்வதிக்கப்படுவீர்களா? அல்ல, உங்களிலிருந்து கட்டுப்படுத்தமுடியாத வாழ்வாகிய ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்.

எல்லாருக்கும் ஆசீர்வாதமாக ஜீவத்தண்ணீரின் நதிகளாய் இயேசு ஒழுகக்கூடிய நீரூற்றுக்களாய் நாம் இருக்கவேண்டும். நம்மில் சிலர் சவக்கடலைப்போலிருக்கிறோம்; எப்போதும் உள்ளே வாங்கிக்கொள்கிறோம், ஆனால் ஒருபோதும் வெளியேற்றுவதில்லை; ஏனெனில், நாம் கர்த்தராகிய இயேசுவோடு சரியான உறவில் வாழவில்லை. அவரிடமிருந்து எவ்வளவு நிச்சயமாக நாம் பெற்றுக்கொள்ளுகிறோமோ அவ்வளவு நிச்சயமாக அவர் நம்மூலம் பிறருக்கு ஊற்றிக்கொடுப்பார்; நாம் பெற்றுக்கொள்ளுகிற அளவு அவர் ஊற்றிக்கொடுக்காவிட்டால் அவரோடுள்ள நம்முடைய உறவில் ஏதோ குறைபாடு இருக்கிறது. உங்களுக்கும் இயேசுகிறிஸ்துவுக்குமிடையே ஏதாவது இருக்கிறதா? நீங்கள் அவரில் வைத்திருக்கும் நம்பிக்கையைத் தடங்கல்செய்யும் ஏதாவது உண்டா? இல்லையென்றால் உங்களிலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்று இயேசு கூறினார். ஒரு ஆசீர்வா தத்தைக் கடத்திவிடுவதோ ஒரு அனுபவத்தைக் கூறுவதோ அல்ல; தொடர் பாகப் பாய்ந்துகொண்டேயிருக்கும் ஒரு நதி அது. உற்பத்தி இடத்தோடு தொடர்போடிருங்கள், இயேசுகிறிஸ்துவிலுள்ள உங்கள் நம்பிக்கையையும் அவரோடுள்ள உங்கள் உறவையும் நன்றாய்ப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்; அப்போது பிறருடைய வாழ்வுக்காக நிதானமான ஒழுக்கிருக்கும்; வறட்சியும் களைப்பும் இருக்காது.

ஒரு தனி விசுவாசியிலிருந்து நதிகள் ஓடும் என்று கூறுவது கூடுதல் மட்டுமீறியதில்லையா? நதிகளை நான் காணவில்லையென்று நீங்கள் கூறுகிறீர்கள். நான் யார்? என்ற கண்ணோட்டத்தில் உங்களை நீங்கள் பார்க்காதீர்கள். மறைவானதும் அறியப்படாததும் அசட்டைசெய்யப் பட்டதுமாயிருந்தாலும், இயேசுகிறிஸ்துவுக்கு நிலைவரமாக உண்மையாய் இருக்குமிடத்திலிருந்தே ஜீவத்தண்ணீரின் நதி ஆரம்பித்தது என்று இறைப் பணியின் வரலாற்றில் கிட்டத்தக்க எப்போதும் கண்டுகொள்வீர்கள்.

நீங்களாகவே செய்யுங்கள்

தீர்மானத்தோடு சில காரியங்களை நிர்மூலமாக்குங்கள்.

தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி. 2 கொரி.10:5.

பாவத்திலிருந்துள்ள விடுதலை என்பது மனிதத் தன்மையிலிருந்துள்ள விடுதலையல்ல. பரிசுத்தவான் உதாசீனம் செய்வதின்மூலம் அழிக்க வேண்டிய காற்புணர்ச்சிபோன்ற சில காரியங்கள் மனிதத் தன்மையில் உண்டு; பலவந்தத்தால், அதாவது, தேவனுடைய ஆவியானவர் கொடுக்கிற தெய்வீகப் பலத்தினால், அழிக்கப்படவேண்டிய மற்றக் காரியங்களுமுண்டு. நாம் போராடாது அமைதியாய் நின்று தேவனுடைய இரட்சிப்பைக் காண வேண்டிய சில காரியங்களுண்டு. ஆனால், தேவனைக்குறித்த அறிவுக்கு எதிராய் அரணாக நிமிர்ந்துநிற்கிற ஒவ்வொரு கோட்பாட்டையும் எண்ணத்தையும், மாம்சீக முயற்சியாலோ, சமரசம் செய்வதாலோ அல்ல (வச.4), தேவனுடைய வல்லமையைப் பயன்படுத்தித் தீர்மானச் சிந்தையோடு தகர்க்கவேண்டும்.

தேவன் நம்முடைய மனநிலையை மாற்றியமைத்து பரிசுத்தமாகும் அனுபவத்திற்குள்ளே நாம் பிரவேசித்ததின் பின்பு மாத்திரமே போராட்டம் ஆரம்பிக்கிறது. போராட்டம் பாவத்துக்கெதிராயல்ல; நாம் பாவத்துக்கெதிராய் ஒருபோதும் போரிடமுடியாது; மீட்பின்போது இயேசுகிறிஸ்து பாவத்தோடு இடைபடுகிறார். நம்முடைய இயற்கையான வாழ்க்கையை ஆவிக்குரிய வாழ்க்கையாக மாற்றும் காரியத்தில்தான் போராட்டம் ஏற்படுகிறது; அது ஒருபோதும் எளிதாகச் செய்யப்படுவதில்லை, அது எளிதாகச் செய்யப்பட வேண்டுமென்று தேவன் கருதுவதுமில்லை. தார்மீகத் தெரிந்துகொள்ளுதல்களின் தொகுப்பினாலேயே அது செய்யப்படுகிறது. நம்முடைய பண்பில் சுத்தமுள்ளவர்கள் என்ற கருத்தில் தேவன் நம்மைப் பரிசுத்தராக்கவில்லை; களங்கமில்லாதவர்கள் என்ற கருத்தில் அவர் நம்மைப் பரிசுத்தராக்குகிறார்; அந்தக் களங்கமின்மையைத் தொடர்பானத் தார்மீகத் தெரிந்துகொள்ளுதல்களினால் நாம் பரிசுத்தப் பண்பாக மாற்றவேண்டும். இந்தத் தெரிந்துகொள்ளுதல்கள், நமது இயற்கை வாழ்க்கைக்குரிய பலமானப் பாதுகாவலுக்குத் தொடர்பாகப் பகையாயிருக்கின்றன; அதாவது, தேவனைக்குறித்த அறிவுக்கு எதிராகக் கொத்தளங்களாகத் தங்களைக் கட்டி எழுப்புகிற காரியங்களாயிருக்கின்றன. ஒன்றில் நாம் பின்வாங்கிச் சென்று நம்மைத் தேவராஜ்யத்திற்குப் பயனற்றவர்களாக்கலாம், அல்லது தீர்மானத்தோடு இவைகளைத் தகர்த்து, இயேசு இன்னொரு குமாரனை மகிமைக்குக் கொண்டுவர அனுமதிக்கலாம்.

நீங்களாகவே செய்யுங்கள்

தீர்மானத்தோடு மற்றக் காரியங்களைக் கட்டுப்படுத்துங்கள்.

எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். 2 கொரி.10:5.

புனிதத்துவத்தின் வலுவான தன்மையின் இன்னொரு கோணமே இது. ஒவ்வொரு திட்டத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் செய்யும்படி நான் அதைச் சிறைப்பிடிக்கிறேன் (மொஃபெற் மொழிபெயர்ப்பு) என்று பவுல் கூறுகிறார். எந்தக் கட்டுப்பாடுமில்லாமல் உணர்ச்சிவசப்பட்டு எழும்பியிருக்கிற எத்தனைக் கிறிஸ்தவ ஊழியங்கள் இன்றுள்ளன! நமது ஆண்டவரின் வாழ்க்கையில் ஒவ்வொரு பணித்திட்டமும் தமது பிதாவின் சித்தத்தால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டிருந்தது. அவருடைய சொந்தச் சித்தத்தினுடைய உணர்ச்சிவேகத்தின் ஒரு அசைவும் பிதாவினுடைய சித்தத்துக்கு வேறுபட்டதாயிருக்கவில்லை--குமாரன் ஒன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார் என்று அவரே கூறினார். நம்மை எடுத்துக்கொள்வோம்--ஒரு ஆழமான மார்க்க அனுபவத்தையும் உணர்ச்சிவேகத்தினால் பிறக்கிற ஒவ்வொரு திட்டத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும்படி அவைகளைச் சிறைப்படுத்திக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்குப்பதில் அவைகளை உடனடியாகச் செயல்படுத்துகிறோம்.

நடைமுறைச் செயல்பாட்டை மிகையாக முக்கியப்படுத்துகிற நாள் இது; எனவே, தங்களுடைய ஒவ்வொரு திட்டத்தையும் சிறைப்படுத்துகிற பரிசுத்தவான்கள் விமர்சிக்கப்படுவதோடு, அவர்கள் தேவனைக்குறித்தும் ஆத்துமாக்களைக்குறித்தும் அக்கறையற்றவர்கள் என்றும் கூறப்படுகிறது. உண்மையான அக்கறை கட்டுப்பாடில்லாத இயற்கைத் தன்மையிலிருந்து தேவனைச் சேவிக்கும்படி உண்டான விருப்பத்தில் அல்ல, தேவனுக்குக் கீழ்ப்படிவதிலே காணப்படுகிறது. பரிசுத்தவான்கள் ஒவ்வொரு திட்டத்தையும் சிறைப்படுத்தாமல், உறுதியான கட்டுப்பாட்டினால் ஆன்மீகமயமாக்கப்படாத அவர்களுடைய மனிதஇயற்கையின் உந்துதலினால் தேவனுக்குச் சேவை செய்கிறார்கள் என்பது நினைக்கமுடியாததே, ஆயினும் அது உண்மையே.

இரட்சிப்புக்காகமாத்திரம் ஒருவர் தன்னை இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்படைப்பதில்லை; தேவன், உலகம், பாவம் மற்றும் பிசாசு என்பவற்றைக் குறித்து இயேசுகிறிஸ்து கொண்டிருக்கிற கருத்துக்களுக்கும் அவர் ஒப்புக் கொடுக்கிறார் என்பதை நாம் மறந்துவிட வாய்ப்புண்டு; அதினால், மனம் புதிதாகிறதினாலே மறுரூபப்படும் பொறுப்பை அவர் உணரவேண்டும் என்று பொருளாகிறது.

அருட்பணிப் படைக்கலங்கள்

தருணத்துக்குத் தகுந்து ஆராதித்தல். *நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன். யோவான் 1:48.*

ஒரு பெரிய நெருக்கடி நேரிடுமானால் நாம் சரியாயிருப்போம் என்று கற்பனை செய்கிறோம்; ஆனால், பெரிய நெருக்கடி நாம் எத்தகைய ஆற்றல் பெற்றிருக்கிறோம் என்பதைத்தான் வெளிப்படுத்தும், நமக்குள் ஒன்றையும் அது வைக்காது. தேவன் அழைப்புக் கொடுத்தால், நிச்சயமாக அந்த எதிர்பாராத அறைகூவலைச் சந்திக்க நான் ஆற்றலைக் கண்டு கொள்வேன் என்று நீங்கள் கூறலாம். ஆனால், தேவனுடைய பணிமனை யில் நீங்கள் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு செயல்பட்டாலன்றி, அங்கு நீங்கள் தேவனுக்குமுன்பாக உண்மையுள்ளவர்களாயிருந்தாலன்றி அப்படிச் செய்யமாட்டீர்கள். உங்களுக்கு அருகாமையிலிருக்கும் காரியத்தைத் தேவன் திட்டமிட்டிருக்கும் காரணத்தால் அதை நீங்கள் செய்யாவிட்டால், நெருக்கடி வரும்போது தகுதியுள்ளவர்களாக வெளிப்படுத்தப்படுவதற்குப் பதில், தகுதியற்றவர்களாக வெளிப்படுத்தப்படுவீர்கள். நெருக்கடிகள் எப்போதும் பண்பையே வெளிப்படுத்துகின்றன.

தேவனை ஆராதிப்பதாகிய தனிப்பட்ட உறவுதான் தகுதியின் அடிப்படை. உங்கள் இல்லத்தில் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் நீங்கள் தேவனை ஆராதிக்காவிட்டால், அத்திமரத்தின் கீழிருக்கும் வாழ்க்கை இனி சாத்தியமில்லாத காலம் வருகிறது; திறந்த வெளியிலும், பிறர் பார்க்கும் இடங்களிலும், வேலையிலும் நீங்கள் பயனற்றுப்போவீர்கள். உங்கள் தனிப்பட்ட உறவுகளில் தேவனைச் சரியாக ஆராதியுங்கள்; அவ்வாறாயின் தேவன் உங்களை விடுதலையாக்கும்போது நீங்கள் ஆயத்தமாயிருப்பீர்கள்; ஏனெனில், தேவனைத்தவிர வேறு ஒருவரும் காணாத, உங்களுடைய மறைவான வாழ்க்கையில் நீங்கள் பூரணத் தகுதியுள்ளவர்களாகிவிட்டீர்கள்; எனவே, அழுத்தத்தின் காலத்தில் தேவன் உங்களை நம்பமுடியும்.

நான் இருக்கிற சூழ்நிலையில் பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கை வாழ என்னை எதிர்பார்க்கமுடியாது; தற்போது ஜெபிக்க எனக்கு நேரமில்லை; வேதம் வாசிக்கவும் நேரமில்லை; என்னுடைய சந்தர்ப்பம் இதுவரையிலும் வரவில்லை; அப்படி வரும்போது நிச்சயமாகவே நான் சரியாகிவிடுவேன் என்று நீங்கள் கூறலாம். அல்ல, நீங்கள் சரியாகமாட்டீர்கள். வாய்ப்புக்கள் வரும்போதெல்லாம் நீங்கள் ஆராதித்துக்கொண்டிராவிட்டால், நீங்கள் ஊழியத்திற்குள் பிரவேசிக்கும்போது உங்களைக்கொண்டு ஒரு பயனுமில் லாமலிருப்பதோடு, உங்களோடு சேர்ந்தவர்களுக்கு நீங்கள் மகாப்பெரிய இடையூறாயிருப்பீர்கள்.

பரிசுத்தவானின் மறைவானதும், தனிப்பட்டதும், ஆராதிக்கிறதுமான வாழ்க்கையே அருட்பணிப் படைக்கலங்களின் பணிமனையாகும்.

அருட்பணிப் படைக்கலங்கள்

சந்தர்ப்பம் சூழ்ந்திருக்கும்போது ஊழியஞ்செய்தல். *ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். யோவான் 13:14.*

சந்தர்ப்பம் நம்மைச் சூழும்பொழுது ஊழியஞ்செய்வது என்பது நம்முடைய சுற்றுச்சூழல்களைத் தெரிந்துகொள்வது என்று பொருளாகாது; தேவன் நமக்காகத் திட்டமிடுகிற எவ்விதத் தற்செயலானச் சுற்றுச்சூழல் களிலும் சிறந்தமுறையில் தேவனுக்குரியவர்களாயிருக்கவேண்டுமென்பதே இதன் கருத்தாகும். நமக்கு அடுத்துள்ள சுற்றுச்சூழல்களில் நாம் வெளிப் படுத்துகிற தன்மைகள் மற்றச் சுற்றுச்சூழல்களில் நாம் எவ்வாறிருப்போ மென்பதின் அறிகுறியாயிருக்கின்றன.

இயேசு செய்த காரியங்கள் மிகவும் இழிவானதும் சிறப்பற்ற வகைகளுமே; அவருடைய வழியில் அதிகச் சிறப்பற்றக் காரியங்களைச் செய்வதற்கு எனக்குள்ளிருக்கும் தேவவல்லமை எல்லாம் தேவைப்படுகிறது என்பதற்கு இது ஒரு அறிகுறி. அவரைப்போன்று நான் துவாலையைப் பயன்படுத்தமுடியுமா? துவாலைகள், பாத்திரங்கள், காலணிகள் மற்றும் நம்முடைய வாழ்க்கையின் சாதாரண அசுத்தமான பொருட்கள் நம்முடைய தன்மை என்ன என்பதை எக்காரியத்தையும்விட வெகுசீக்கிரம் வெளிப்படுத் துகின்றன. இழிவான கடமைகள் செய்யப்படவேண்டியமுறையில் நிறைவேற் றப்பட சர்வவல்லமையுள்ள தேவன் நம்மில் உருவாகவேண்டியதே.

நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்க ளுக்கு முன்மாதிரியைக் காண்பித்தேன் என்றார் இயேசு. உங்களைச்சூழ தேவன் கொண்டுவருகிற மக்களின் தன்மையைக் கவனியுங்கள்; நீங்கள் தேவனுக்கு எத்தகைய நபராய் இருக்கிறீர்கள் என்பதை உங்களுக்கு வெளிப்படுத்தும் அவருடைய வழி இது என்பதைக் கண்டுகொள்ளும்போது நீங்கள் வெட்கப்படுவீர்கள். நான் உங்களுக் காண்பித்திருக்கிறதைத் துல்லியமாக அந்த நபருக்கு வெளிக்காட்டுங்கள் என்றே அவர் கூறுகிறார்.

நான் அயல்நாட்டுப் பணிக்களத்துக்குச் செல்லும்போது அதை யெல்லாம் செய்வேனென்று நீங்கள் சொல்லுகிறீர்கள். இப்படிப் பேசுவது மறைகுழிகளில் போராயுதங்களைத் தயார்செய்ய முயற்சிப்பதுபோலாகும்; அதைச் செய்துகொண்டிருக்கும்போதே நீங்கள் கொல்லப்படுவீர்கள்.

நாம் தேவனோடு இரண்டாம் மைல் போகவேண்டும். நாம் வழி அறியாத இடத்துக்குப் போகவேண்டுமென்று தேவன் நம்மைக் கட்டாயப் படுத்துவதால் நம்மில் சிலர் முதல் சிறிது தூரத்தில் களைப்படைகிறோம்; பெரிய நெருக்கடிக்கு அருகில் வருமட்டும் நான் காத்திருப்பேன் என்று நாம் சொல்லுகிறோம். குறுகியதூர ஓட்டத்தில் நாம் நிதானமாய் ஓடவில்லை யென்றால் நெருக்கடியில் நாம் ஒன்றும் செய்யமாட்டோம்.

ஆவிக்குரிய குழப்பத்தால்

நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. மத்.20:22.

குழப்பம் ஏற்படும் தருணங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையிலுண்டு; குழப்பம் இருக்கக்கூடாது என்று சொல்லுவது அதிலிருந்து வெளியேறும் வழியல்ல. சரியா தவறா என்பதல்ல ஆராயப்படவேண்டிய காரியம்; இந்த இடைநேரத்தில் நீங்கள் புரிந்துகொள்ளாத பாதையில் தேவன் உங்களைக் கொண்டுபோகிறார் என்பதே சிந்திக்கவேண்டியது; குழப்பத்தின் வழியாகச் செல்லுவதின்மூலந்தான் தேவன் விரும்புவதை நீங்கள் அடைவீர்கள்.

அவருடைய நட்பு மறைக்கப்படல்: லூக்.11:5-8. தன் நண்பனுக்காகக் கவலைப் படாதவனைப்போன்று காணப்பட்ட ஒரு மனிதனுடைய உவமையை இயேசு சொல்லிவிட்டு, பரமபிதா சிலவேளைகளில் உங்களுக்கு இவ்வாறாகத்தான் தோன்றுவார் என்று கூறினார். அவர் இரக்கமற்ற நண்பன் என்று நீங்கள் எண்ணுவீர்கள், ஆனால், அவர் அப்படியல்ல என்பதை நினைவில்கொள் ளுங்கள்; எல்லாம் விளக்கப்படும் ஒரு காலம் வரும். இருதயத்தின் நட்பில் மேகம் இருக்கிறது; நிறைவானக் கூட்டுறவாகிய ஆசீர்வாதத்துக்கு அன்புங் கூட வேதனையோடும் கண்ணீரோடும் அடிக்கடி காத்திருக்கவேண்டியது வரும். தேவன் முற்றிலும் மூடிமறைக்கப்பட்டவராகத் தோன்றும்போது நீங்கள் அவரில் நம்பிக்கையோடு உறுதியாயிருப்பீர்களா?

அவருடைய தந்தைத்துவத்தின் நிழல்: லூக்.11:11-13. உங்கள் பரமபிதா இயல் புக்கு மாறான தந்தைபோலவும், உணர்ச்சியற்றவரும் அலட்சியமானவரும் போலவும் தோன்றும் பல வேளைகள் உண்டு; ஆனால் அவர் அப்படிப்பட் டவரல்ல என்பதை நினைவுகூரவேண்டும்; கேட்கிறவனெவனும் பெற்றுக் கொள்ளுகிறான் என்று நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன் என்று இயேசு கூறினார். பரமபிதாவின் முகத்தில் தற்சமயம் ஒரு நிழல் காணப் பட்டதானால் இறுதியில் அவர் தம்முடைய தெளிவான வெளிப்பாட்டைத் தந்து தாம் அனுமதித்தவைகள் எல்லாவற்றிலும் தம்மை நியாயப்படுத்து வாரென்பதால் உறுதியாய்த் தரித்திருங்கள்.

அவருடைய உண்மையின் புதுமை: லூக்.18:1-8. மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ? குழப்பமிருந்தாலும் அவரிலே சார்ந்திருக்கும் விசுவாசத்தை அவர் காண்பாரோ? இதற்கிடையில், தேவன் என்ன செய்கிறார் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளாவிட்டாலும், இயேசு கூறியவைகள் சத்தியமானவைகள் என்று நம்பி, விசுவாசத்தில் தரித்து நில்லுங்கள். நீங்கள் கேட்கிற குறிப்பிட்ட காரியங்களைவிடப் பெரிய காரியங்கள் அவருக்கு முக்கியம்.

சரணடைந்தபின் என்ன?

நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன். யோவான் 17:4.

வெளிப்புறமான வாழ்க்கையை ஒப்படைப்பதல்ல, சித்தத்தை ஒப்படைப்பதே சரணடைவதாகும்; அதைச் செய்துவிட்டால் எல்லாம் செய்யப்பட்டாயிற்று. வாழ்க்கையில் மிகக்குறைந்த திருப்புமுனைகள்தான் உண்டு; அவைகளில் மிக முக்கியமான திருப்புமுனை சித்தத்தை ஒப்படைத்தலே. ஒருபோதும் தேவன் ஒரு மனிதனுடைய சித்தத்தை நொறுக்கி ஒப்படைக்க வைப்பதில்லை, அவர் அவனிடம் கெஞ்சிக்கேட்பதுமில்லை; அம்மனிதன் தன் சித்தத்தைத் தேவனுக்கு விட்டுக்கொடுக்குமட்டும் அவர் காத்திருப்பார். அந்தப் போரில் ஒருபோதும் மறுபடிப் போரிடத் தேவையில்லை.

விடுதலைக்காகச் சரண்: என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று இயேசு கூறினார். இரட்சிப்பின் கருத்தை அனுபவிக்க ஆரம்பித்தபின்புதான் இளைப்பாறுதலுக்காக நம்முடைய சித்தத்தை இயேசுவுக்கு ஒப்படைக்கிறோம். இருதயத்தையும் மனதையும் எது திகைப்பூட்டுகிறதோ அது சித்தத்துக்குக் கொடுக்கப்படுகிற அழைப்பு--என்னிடத்தில் வாருங்கள். அது தன்னார்வமான வருகையே.

பக்திக்காகச் சரண்: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுக்கக்கடவன் என்றார் இயேசு. அவருடைய இளைப்பாறுதலை மையமாகக்கொண்டு என் சுயத்தை இயேசுவுக்கு ஒப்படைப்பதே இங்கு குறிக்கப்பட்டுள்ளது. நீங்கள் என் சீஷராயிருக்க விரும்பினால், உங்கள்மேலுள்ள உங்கள் உரிமையை எனக்கு விட்டுக் கொடுங்கள். அப்போது உங்கள் வாழ்க்கையின் மீதிப்பாகம் இந்த ஒப்படைப்பின் வெளிப்பாடாகவே இருக்கும் என்கிறார் அவர். ஒப்படைப்பு நடந்தபின் ஒருபோதும் எதையும் ஊகிக்கத் தேவையில்லை. நம்முடைய சூழ்நிலைகள் எவை என்று நாம் கவலைப்படத் தேவையில்லை; இயேசு தாராளமாகப் போதுமானவர்.

மரணத்துக்காகச் சரண்: யோவான் 21:18,19.....வேறொருவன் உன் அரையைக் கட்டுவான். மரணத்துக்காகக் கட்டப்படுவதின் கருத்து என்ன என்று நீங்கள் கற்றிருக்கிறீர்களா? ஏதாவது ஒரு உற்சாக அனுபவத்தில் தேவனுக்கு ஒப்படைப்பதைக்குறித்து ஜாக்கிரதையாயிருங்கள்; ஒருவேளை நீங்கள் அதைத் திரும்ப எடுத்துக்கொள்ள வாய்ப்புண்டு. இயேசுவின் கவனத்தைக் கவராத எதுவும் உங்களைக் கவராததுவரை அவருடைய மரணத்தில் அவரோடு இணைக்கப்பட வேண்டியதே முக்கியமாகும்.

சரணடைந்தபின்--என்ன? ஒப்படைக்கப்பட்டபின்னுள்ள வாழ்க்கை முழுவதும் தேவனோடு தொடர்ச்சியான ஐக்கியம்கொள்ளும் பேராவலே.

கற்பனையா? ஏவுதலா?

கிறிஸ்துவைப்பற்றிய உண்மை. 2 கொரி.11:3.

காரியங்களைத் தெளிவாகக் காண்கிறதாகிய இரகசியமே இங்கு உண்மையென்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதிகக் காலம் ஒரு பரிசுத்தவான் தெளிவாகச் சிந்திக்கிறதில்லை: ஆனால், ஒரு பரிசுத்தவான் எந்தச் சிரமமு மில்லாமல் கட்டாயம் தெளிவாகப் பார்க்கவேண்டும். ஆவிக்குரிய ஒழுங்கீ னத்தை உங்களால் தெளிவாக ஆராயமுடியாது, அதைத் தெளிவாக்கும்படி கீழ்ப்படியவேண்டும். அறிவுக்கடுத்த காரியங்களில் நீங்கள் சிந்தித்துத் தீர்மானிக்கலாம்; ஆனால், ஆவிக்குரிய காரியங்களில் உங்கள் சிந்தனை தெளிவற்ற சிக்கலில் கொண்டுபோய்விடும். தேவன் அழுத்தமாகக் கூறிய ஏதாவது காரியம் உண்டானால், அக்காரியத்தில் கீழ்ப்படியுங்கள்; அதைப் பொறுத்தமட்டும் உங்கள் கற்பனைகளைக் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துங்கள், அப்போது எல்லாம் பட்டப்பகல்போலத் தெளிவாகும். காரணத்தை ஆராயும் திறமை பிற்பாடு வருகிறது, ஆனால் நாம் அந்தக் கோணத்தில் ஒருபோதும் பார்க்கிறதில்லை, நாம் குழந்தைகளைப்போலப் பார்க்கிறோம்; நாம் ஞானமுள்ளவர்களாயிருக்கும்படி முயற்சிக்கும்போது நாம் ஒன்றையும் காண்பதில்லை (மத்.11:25).

பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குக் கீழில்லாத மிகச் சிறிய காரியத்தையும் நம்முடைய வாழ்க்கையில் நாம் அனுமதித்தால் அது ஆவிக்குரிய குழப்பத்துக்குப் போதுமானக் காரணமாகும்; அதைக்குறித்த நம்முடைய எல்லாச் சிந்தனைகளும் அதை ஒருபோதும் தெளிவாக்குகிற தில்லை. கீழ்ப்படிதல்மட்டுமே ஆவிக்குரிய குழப்பத்தைத் தெளிவாக்கும். நாம் கீழ்ப்படிந்தவுடனே பகுத்துணருகிறோம். இது நம்மை இழிவுபடுத்து கிறது, ஏனெனில் நாம் குழப்பம் அடையும்போது அதன் காரணம் நமது மனநிலையில்தான் இருக்கிறது என்பதை நாம் கண்டுகொள்ளுகிறோம். பார்வையாகிய இயற்கை ஆற்றல் பரிசுத்த ஆவியானவருக்கு அர்ப்பணிக்கப் படும்போது, அது தேவனுடைய சித்தத்தைத் புரிந்துகொள்ளும் ஆற்றலாய் மாறுகிறது; முழு வாழ்க்கையும் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையில் காக்கப்படுகிறது.

எவைகளை வெறுக்கவேண்டும்?

வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து. 2 கொரி.4:2.

உங்கள் கௌரவத்தைக்குறித்த உணர்வு வெளிப்படையாவதற்கு அனுமதிக்காத வெட்கமான அந்தரங்க காரியங்களை நீங்கள் வெறுத்திருக் கிறீர்களா? அவைகளை நீங்கள் எளிதாக மறைக்கமுடியும். வெளிப்படையா வதற்கு நீங்கள் விரும்பாத ஏதாவது எண்ணம் யாரைக்குறித்தாவது உங்கள் இருதயத்தில் இருக்கிறதா? அது வெளிக்கிளம்பியதும் உடனடியாக அதை வெறுத்துவிடுங்கள்; உங்களைச் சுற்றி உண்மைக்கேடும் தந்திரமு மான எந்த மறைவான காரியமும் இல்லாமலாகுமட்டும் அதை முற்றுமாய் வெறுத்துவிடுங்கள். எரிச்சல், பொறாமை, சண்டை--இக்காரியங்கள் பாவத் தன்மையிலிருந்து எழும்பவேண்டியதேவையில்லை; ஆனால் கடந்துபோன நாட்களில் இத்தகையக் காரியத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட உங்கள் சரீர அமைப்பிலிருந்துத் தோன்றலாம் (ரோமர் 6:19;1 பேதுரு 4:1,2 பார்க்க). நீங்கள் வெட்கப்படக்கூடிய ஒன்றும் உங்கள் வாழ்க்கையில் எழும்பாதிருக் கும்படித் தொடர்பாக விழிப்புணர்வைக் காத்துக்கொள்ளுங்கள்.

தந்திரமாய் நடவாமலும் என்று பேதுரு கூறுகிறார்; இது உங்கள் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குநேராகத் திரும்புவதைக் குறிக்கிறது. இது ஒரு பெரிய கண்ணியாகும். ஒரு வழியில்தான் நீங்கள் செயல்படத் தேவன் அனுமதிப்பார் என்று உங்களுக்குத் தெரியும், மாற்று வழியில் மனுஷரைப் பிடிக்காதபடி கவனமாயிருங்கள்; அப்படி நீங்கள் செய்தால் தேவனுடைய அழிவு உங்கள்மேல் வரும். தந்திரமாய் நடக்கிறதாக உங்களுக்குத் தோன்றுகிற காரியங்களை மற்றவர்கள் செய்கிறார்கள்; ஆனால், அது அவர்களுக்கு அப்படித் தோன்றாமலிருக்கலாம்; தேவன் உங்களுக்கு வேறொரு கண்ணோட்டத்தைக் கொடுத்திருக்கிறார். அவரு டைய மேன்மைக்கு என்னுடைய முழுமை என்னும் உணர்வைக்குறித்த அறிவை ஒருபோதும் மழுங்கச்செய்யாதேயுங்கள். குறிப்பிட்ட காரியத்தைச் செய்வது மிகவும் சிறந்த நோக்கமல்லாததுக்காகத் தந்திரத்தின் வரவாகவும், தேவன் உங்களுக்குத் தந்திருக்கிற நோக்கத்தை மழுங்கச் செய்கிறதாகவும் உங்களுக்குக் கருத்தாகலாம். தேவனுடைய கண்ணோட்டத்தில் காரியங் களைப் பார்க்கப் பயப்படுகிறதால் அநேகர் பின்வாங்கிப்போனார்கள். ஒரு மனிதன் ஒத்துக்கொண்டிருக்கிற விசுவாசத்தைத் தாண்டி சிறிது அதிகமாக அவர் எழும்பும்போது ஆவிக்குரிய நெருக்கடி வருகிறது.

மார்க்கத்தின் தெய்வீக மண்டலம்

நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு. மத்.6:6.

மார்க்கத்தின் மண்டலத்தில் முக்கிய கருத்து--உங்கள் கண்கள் தேவன்மீது, மனிதர்மீதல்ல என்பதே. ஜெபிக்கிற மனிதன் என்று அறியப்பட வேண்டும் என்கிற விருப்பம் உங்கள் நோக்கமாயிருக்கவேண்டாம். நீங்கள் ஜெபிக்கிறீர்கள் என்பதை ஒருவரும் அறியாத, உட்புறமான அறையை நீங்கள் ஜெபிக்கிறதற்காக ஒழுங்குசெய்யுங்கள்; கதவைப் பூட்டி, அந்தரங் கத்தில் பிதாவோடு உரையாடுங்கள். பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை அறிவதுதவிர வேறொரு நோக்கமும் வேண்டாம். இரகசிய ஜெபத்திற்குத் திட்டமான வேளைகள் இல்லாதபடி ஒரு சீஷனாக உங்கள் வாழ்க்கையை நடத்துவது கூடாத காரியம்.

அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள் (வச.7). நமது ஆர்வத்தினால் தேவன் ஒருபோதும் கவரப்படுவதில்லை. நாம் ஊக்கமாய் ஜெபிக்கிறோம் என்பதினால் அல்ல, மீட்பின் அடிப்படையிலேயே தேவன் நமக்குச் செவிகொடுக்கிறார். ஜெபம் என்பது தேவனிடமிருந்து காரியங்களைப் பெற்றுக்கொள்ளுவது மட்டுமல்ல, அது ஜெபத்தின் ஒரு ஆரம்பமுறை; தேவனோடுள்ள பூரண ஐக்கியத்துக் குள்ளாவதே ஜெபம். மறுபிறப்பினால் தேவகுமாரன் நமக்குள்ளே உருவாகி யிருப்பாரானால் நம்முடைய பகுத்தறிவுக்கு முன்னால் தம்மைக் கொண்டு வந்து நாம் ஜெபிக்கும் காரியங்களைக்குறித்த நம்முடைய மனநிலையை மாற்றுவார்.

கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான். நம்முடைய ஜெபம் பக்தியுள்ள பிதற்றலாயிருக்கிறது, நமது மனதை நாம் அதில் வைக்கிற தில்லை, அதன்பின் தேவன் பதில் கொடுக்கிறவரல்லவென்று கூறுகிறோம்; நாம் எதற்காகவும் ஒருபோதும் கேட்கவில்லையே. உங்களுக்குச் சித்தமா னதை நீங்கள் கேட்பீர்கள் என்று இயேசு கூறினார். கேட்பதென்றால் அதில் நமது சித்தம் உட்பட்டிருக்கிறது. ஜெபத்தைக்குறித்து இயேசு பேசின பொழுதெல்லாம் குழந்தையின் மிகச்சிறந்த எளிமையையே குறிப்பிட்டார்; ஆனால், நமது குற்றங்காண்கிற மனநிலையோடு, ஆம், அது உண்மை தான், ஆனால் கேளுங்கள் என்று இயேசு கூறினாரே என்று சொல்லுகி றோம். இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தின தேவனுக்குகந்த காரியங்களையே தேவனிடம் நாம் கேட்கவேண்டும் என்பதை நினைத்துக்கொள்ளுங்கள்.

சோதனையினால் நன்மையென்ன?

மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. 1 கொரி.10:13.

சோதனை என்கிற வார்த்தை உலகத்தில் தவறாகக் கருதப்படுகிறது; அதை நாம் தப்பிதமாகப் பயன்படுத்த வாய்ப்புண்டு. சோதனை பாவமல்ல, நாம் மனிதரானால் நாம் கட்டாயம் சந்தித்தாகவேண்டிய அனுபவம் அது. சோதிக்கப்படாதிருப்பது மிகுதியும் வெறுப்புக்குரியது. வேறொரு வகையான சோதனைகளை நாம் சந்திக்கும் உயர்ந்த தளத்துக்குத் தேவன் நம்மை உயர்த்தும்படி அவரை அனுமதிக்க நாம் மறுத்துவிட்டதால் நம்மில் பலரும் அனுபவிக்கத் தேவையில்லாத சோதனைகளை அனுபவிக்கிறோம்.

ஒரு மனிதனுடைய உட்புறமான மனநிலையே, அதாவது அவன் தனது ஆளத்துவத்தில் கொண்டிருப்பதே, வெளிப்புறத்தில் அவன் எதினால் சோதிக்கப்படுகிறான் என்பதைத் தீர்மானிக்கிறது. சோதனை சோதிக்கப்படுகிறவனுடைய இயற்கைக்குப் பொருத்தமாயிருக்கிறது, மற்றும் அவனுடைய இயற்கையின் சாத்தியதைகளை அது வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு மனிதனும் தன் சொந்த சோதனைக்குரிய அமைப்பைப் பெற்றிருக்கிறான்; அவனை ஆளுகிற மனச்சார்பைப் பொறுத்தே சோதனை வரும்.

தீமை என்று நான் எண்ணுவதற்குநேராக அல்ல, நன்மை என்று நான் எண்ணுவதற்குநேராக நான் குறிவைக்கிற அதிக உன்னதமானதை அடைவதற்குப் பரிந்துரைக்கப்படுகிற குறுக்குவழிதான் சோதனை. சிறிது காலம் என்னை முற்றிலும் குழப்பமடையச்செய்கிற ஏதோ ஒன்றுதான் சோதனை; அந்தக் காரியம் சரியா, தவறா என்று எனக்குத் தெரியவில்லை. சோதனைக்கு அடிபணிவது இச்சையைத் தெய்வமாக்குவதாகும்; மற்றும் கோழைத்தனந்தான் அந்தப் பாவத்தை முன்பு தடுத்தது என்பதற்கு அது தெளிவாகும்.

நாம் தப்பிக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல சோதனை; மனிதனுடைய வாழ்க்கையின் முழுவளர்ச்சிக்கு அது இன்றியமையாதது. வேறு யாரும் சோதிக்கப்படாதவிதத்தில் நீங்கள் சோதிக்கப்பட்டீர்கள் என்று எண்ணுவதில் எச்சரிக்கையாயிருங்கள்; நீங்கள் கடந்துசெல்லுவது மனுக்குலத்துக்குப் பொதுவானப் பரம்பரைச் சொத்து, இதற்குமுன் யாரும் அனுபவித்திராத ஏதோ ஒன்றல்ல அது. தேவன் நம்மைச் சோதனைகளிலிருந்து காப்பாற்றுகிறதில்லை; சோதனைகளில் அவர் உதவிசெய்கிறார் (எபி.2:18).

அவருடைய சோதனையும் நம்முடையதும்

நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். எபி.4:15.

மறுபடியும் பிறக்கிறதுவரை நாம் புரிந்துகொள்ளுகிற ஒரேவித சோதனை யாக்கோபு கூறியதே--அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். ஆனால், நாம் சந்திக்க வேண்டிய வேறு சோதனைகள், அதாவது நமது ஆண்டவர் சந்தித்தவிதச் சோதனைகளைச் சந்திக்கவேண்டிய இன்னொரு மண்டலத்துக்கு மறுபிறப் பினால் நாம் உயர்த்தப்படுகிறோம். இயேசுவின் சோதனைகள் நம்மைக் கவருவதில்லை; அவைகளுக்கு நம்முடைய மனிதத்தன்மையில் வாழ்விடம் இல்லை. நாம் மறுபடியும் பிறந்து அவருடைய சகோதரர்களாகுமட்டும் நம்முடைய ஆண்டவரின் சோதனைகளும் நம்முடைய சோதனைகளும் வெவ்வேறான கோளங்களில் இயங்குகின்றன. இயேசுவின் சோதனைகள் ஒரு மனிதனுக்குரியவைகள் அல்ல, மனிதனான தேவனுக்குரியவைகளே. மறுபிறப்பின்மூலமாக தேவகுமாரன் நமக்குள் உருவாகியிருக்கிறார், அவர் உலகில் வாழ்ந்தபோதிருந்த அதே அமைப்பு நம்முடைய பௌதிக சரீரத்தில் அவருக்கு இருக்கிறது. தவறான காரியங்களைச் செய்யும்படி சாத்தான் நம்மைச் சோதிக்கவில்லை; மறுபிறப்பின்மூலமாகத் தேவன் நமக்குள் வைத்திருப்பதை, அதாவது நாம் தேவனுக்கு மதிப்புள்ளவர்களாயிருக்கும் வாய்ப்பை, நாம் இழந்துபோகச்செய்யும்பொருட்டே அவன் சோதிக்கிறான். நம்மைப் பாவஞ்செய்யச் சோதிக்கும் நிலையில் அவன் வருகிறதில்லை, நம்முடைய சிந்தனாமுறையை மாற்றியமைக்கும் நிலையில் வருகிறான்; இதனைப் பிசாசின் சோதனையென்று தேவஆவியானவர் மாத்திரமே கண்டுபிடிக்கமுடியும்.

ஒரு தனிநபர் வைத்திருக்கிற உடைமைகள்மீது ஒரு வேற்றுலக சக்தியினால் செய்யப்படும் தேர்வாய்வே சோதனை என்று பொருட்படும். இதனால் நமது ஆண்டவரின் சோதனைகள் விளக்கக்கூடியதாகிறது. உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற திருப்பணியை இயேசு திருமுழுக்கில் ஏற்றுக்கொண்டபின்பு உடனடியாகப் பிசாசின் சோதனை இயந்தரத்துக்குள் தேவனுடைய ஆவியானவரால் போடப்பட்டார்; ஆனால், அவர் சோர்ந்து போகவில்லை. அவர் பாவமில்லாதவராய்ச் சோதனையின்வழியே கடந்து சென்றார்; தமது ஆளத்துவத்தின் உடைமைகளைக் குறைபடாதபடி தக்க வைத்துக்கொண்டார்.

நீங்கள் இயேசுவோடு தொடர்ந்து செல்லுகிறீர்களா?

மேலும் எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடேகூட நிலைத்திருந்தவர்கள் நீங்களே. லூக்கா 22:28.

நம்முடைய சோதனைகளில் இயேசுகிறிஸ்து நம்மோடிருக்கிறார் என்பது உண்மை; ஆனால், அவருடைய சோதனைகளில் அவரோடுகூட நாம் செல்லுகிறோமா? இயேசுவால் என்ன செய்யமுடியுமென்ற அனுபவம் பெற்றவுடன் நம்மில் பலரும் அவரோடு செல்லுவதை நிறுத்திவிடுகிறோம். எப்போது தேவன் உங்கள் சூழல்களை மாற்றுகிறார் என்பதைக் கவனித்து, நீங்கள் இயேசுவோடுகூடச் செல்லுகிறீர்களா, அல்லது உலகம், மாமிசம் மற்றும் பிசாசுக்கு ஆதரவு கொடுக்கிறீர்களா என்பதைப் பாருங்கள். நாம் அவருடைய சின்னத்தை அணிகிறோம், ஆனால், நாம் அவரோடு செல்லுகிறோமா? அந்நேரம் முதல் அவருடைய சீஷர்களில் அநேகர் அவரோடு நடவாமல் அவரைவிட்டுப் பின்வாங்கிப்போனார்கள் என்று வாசிக்கிறோம். இயேசு சந்தித்த சோதனைகள் அவருடைய பூலோக வாழ்க்கை முழுவதும் தொடர்ந்தன; எனவே, நம்மிலுள்ள தேவகுமாரனின் வாழ்க்கை முழுவதும் சோதனைகள் தொடரும். நாம் இப்போது வாழ்ந்துகொண்டிருக்கிற வாழ்க்கையில் இயேசுவோடு செல்லுகிறோமா?

நம்மைச்சுற்றி தேவன் கொண்டுவருகிற சில காரியங்களிலிருந்து நம்மைநாமே பாதுகாத்துக்கொள்ளவேண்டுமென்கிற கருத்து நமக்குண்டு. ஒருபோதும் அப்படியல்ல! தேவன் சூழ்நிலைகளைத் திட்டமிடுகிறார்; அச்சூழ்நிலைகள் எத்தகையவைகளாயிருந்தாலும், அவருடைய சோதனைகளில் அவரோடு தொடர்பாக நிலைத்திருந்துகொண்டே, அவைகளைச் சந்திக்கக் கருத்தாயிருக்கவேண்டும். அவை அவருக்குரிய சோதனைகள், நமக்குரிய சோதனைகளல்ல; நமக்குள்ளிருக்கும் தேவகுமாரனுடைய வாழ்க்கைக்கு வரும் சோதனைகளே அவை. உங்களுடைய சரீர வாழ்க்கையில் இயேசுகிறிஸ்துவின் மதிப்பு பாதிக்கப்படும் நிலையில் இருக்கிறது. உங்களுக்குள் இருக்கும் அவருடைய வாழ்க்கையைத் தொந்தரவு செய்கிற காரியங்களில் நீங்கள் தேவகுமாரனுக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கிறீர்களா?

நீங்கள் இயேசுவோடு இடைவிடாமல் செல்லுகிறீர்களா? பாதை கெத்செமனே வழியாகவும் பட்டணத்துவாசல் வழியாகவும் பாளயத்துக்குப் புறம்பே செல்லுகிறது; அந்தப் பாதைத் தனிமையானது; காலடிகளின் ஒரு தடமும் இல்லாமலாகி, என்னைப் பின்பற்றிவா என்கிற சத்தம் மாத்திரமே கேட்கும்வரையிலும் அந்தப் பாதை செல்லுகிறது.

வாழ்க்கையின் தெய்வீகப் பிரமாணம்

ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள். மத். 5:48.

நமது நடத்தையில் நாம் எல்லா மனிதரோடும் பெருந்தன்மை உடையவர்களாயிருக்கவேண்டும் என்பதே இந்த வாக்கியங்களில் நமது ஆண்டவர் கூறும் அறிவுரை. ஆவிக்குரிய வாழ்க்கையில் மாம்சத்துக்கான விருப்பங்களின்படி நடப்பதில் எச்சரிக்கையாயிருங்கள். எல்லாருக்கும் இயற்கையான ஈர்ப்புக்கள் உண்டு; நாம் சிலரை விரும்பலாம், சிலரை விரும்பாதிருக்கலாம். இந்த விருப்பு வெறுப்புக்கள் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் ஆட்சிசெய்ய நாம் அனுமதிக்கக்கூடாது. தேவன் ஒளியில் இருக்கிறதுபோல நாமும் ஒளியில் நடந்தால், நாம் இயற்கையாக விரும்பாதவர்களோடும் தேவன் நமக்கு நல்லுறவு தருவார்.

நமது ஆண்டவர் நமக்குக் கொடுக்கும் முன்மாதிரி ஒரு நல்ல மனிதனுடையதோ அல்லது ஒரு நல்ல கிறிஸ்தவனுடையதோகூட அல்ல, அது தேவனுடைய முன்மாதிரியே. பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்--தேவன் உங்களுக்கு எதைக் காண்பிக்கிறாரோ அதை மற்ற மனிதனுக்குக் காண்பியுங்கள்; அப்போது, பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல நாமும் பூரண சற்குணராயிருக்கிறோமா என்பதை நமது நிஜவாழ்க்கையில் நிரூபிக்கப் போதிய தருணங்களைத் தேவன் நமக்குத் தருவார். சீஷராயிருப்பதின் கருத்து தேவன் பிறரில் காண்பிக்கும் அக்கறைகளோடு மனப்பூர்வமாக ஒருமைப்படுவதே. நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்று இயேசு கூறினார்.

கிறிஸ்தவப் பண்பாட்டின் வெளிப்பாடு நன்மை செய்வதல்ல, தேவனைப்போலிருப்பதே. தேவனுடைய ஆவியானவர் உள்ளாக உங்களை மறுரூபப்படுத்தியிருப்பாரேயானால் நீங்கள் உங்கள் வாழ்க்கையில் நல்ல மனிதப் பண்புகளையல்ல, தெய்வீகத் தன்மைகளை வெளிக்காட்டுவீர்கள். நமக்குள் இருக்கிற தெய்வீக ஜீவன், பக்தியோடிருக்க முயற்சிக்கிற மனித ஜீவனாய் அல்ல, தேவனுடைய ஜீவனாகவே தன்னை வெளிப்படுத்துகிறது. ஒரு கிறிஸ்தவனுடைய இரகசியம் தேவகிருபையால் தெய்வீகமானவைகள் அவனுக்குள் இயற்கையானவைகளாக மாற்றப்படுகின்றன என்பதே; தேவனோடு கூட்டுறவுகொள்ளும் வேளையில் அல்ல, வாழ்க்கையின் நடைமுறை விவரங்களில் இதன் அனுபவம் செயல்படும். இரைச்சல் உண்டாக்கும் காரியங்களை நாம் சந்திக்கும்போது, அவை எல்லாவற்றின் மத்தியிலும் அற்புதமான அமைதிகாக்க நமக்கு வல்லமை இருக்கிறது என்பதை நாம் கண்டு ஆச்சரியப்படுவோம்.

அருட்பணியாளரைக்குறித்த முன்தீர்மானங்கள்

நான் தாயின் கர்ப்பத்திலிருந்ததுமுதல் கர்த்தர் தமக்குத் தாசனாக என்னை உருவாக்கினார். ஏசா.49:5.

இயேசுகிறிஸ்துவுக்குள்ளாக நாம் தேவனுக்காகத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்தபிறகு நடக்கிற முதலாம் காரியம் நம்முடைய தப்பெண்ணங்கள், குறுகிய நோக்கங்கொண்ட கருத்துக்கள், தவறான பற்றுக்கள் போன்றவை அழிக்கப்பட்டுவிடுகின்றன; தேவனுடைய சொந்த நோக்கத்துக்குரிய தாசர்களாக நாம் மாற்றப்படுகிறோம். தேவனை மகிமைப்படுத்தவும் என்றென்றும் அவரில் மகிழ்ச்சியடையவுமே மனுக்குலம் முழுவதும் படைக்கப்பட்டது. பாவம் மனுக்குலத்தை வேறொரு பாதைக்கு வழிமாற்றிவிட்டது; ஆனால், தேவனுடைய திட்டத்தை பாவம் சிறிதளவும் மாற்றவில்லை; நாம் மறுபடியும் பிறக்கும்போது மனுக்குலத்தைப்பற்றிய தேவனுடைய பெரிய நோக்கத்தை நாம் உணருகிறோம், அதாவது நான் தேவனுக்காகப் படைக்கப்பட்டவன், அவரே என்னைப் படைத்தார் என்பதே அது. தேவனுடைய தெரிந்துகொள்ளுதலைக்குறித்த இந்தப் பகுத்துணர்வு பூமியில் மிகவும் மகிழ்ச்சிக்குரிய அறிவாகும்; தேவனுடைய இந்தச் சிறந்த படைப்பின் நோக்கத்தைச் சார்ந்து வாழ நாம் கற்றுக்கொள்ளவேண்டும். நம்மைக்கொண்டு தேவன் செய்கிற முதலாங்காரியம் முழு உலகத்தையும் குறித்த கரிசனையை நமது தனி இருதயமாகியக் கால்வாய் வழியாகக் கடத்திவிடுவதே. தேவனுடைய தன்மையாகிய தேவஅன்பு நமக்குள்ளே ஊற்றப்படுகிறது; சர்வவல்ல தேவனுடைய இயல்பு யோவான் 3:16-ல் குறிப்பிடப்பட்டுள்ளது--தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

தேவனுடைய படைப்பின் திட்டம் உண்மையென்ற கருத்தை நமது ஆத்துமாவில் ஏற்றுக்கொள்ளவேண்டும், நமது சொந்த நோக்கங்களால் அதைக் குழப்பக்கூடாது. நாம் அப்படிச்செய்தால், அது நம்மை எவ்வளவு புண்படுத்தினாலும், தேவன் நம்முடைய நோக்கங்களை ஒரு பக்கத்தில் தகர்க்கவேண்டியதுவரும். அருட்பணியாளன் தேவனை மகிமைப்படுத்துகிற ஒரு நபராய் தேவனுடைய தாசனாயிருப்பதே அவர் படைக்கப்பட்டதின் நோக்கம். இயேசுகிறிஸ்துவினாலுள்ள இரட்சிப்பின்மூலம் நாம் தேவனுக்குப் பூரணமாய்த் தகுதியுள்ளவர்களாக்கப்படுகிறோம் என்பதை உணரும்போது இயேசுகிறிஸ்து ஏன் அவருடைய கோரிக்கைகளில் இரக்கமற்றவராயிருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளுவோம். அவர் தம்முடைய தாசர்களுக்குள் தேவனுடைய தன்மையை வைத்திருக்கிறபடியால் பூரண நேர்மையை அவர்களிடம் தேவைப்படுகிறார்.

உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கத்தை மறந்து விடாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.

அருட்பணியாளரின் போதகர்

நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான். யோவான் 13:13.

ஒரு போதகரைக் கொண்டிருப்பதும் ஒரு தலைவனால் கட்டுப்படுத்தப்படுவதும் ஒரே காரியமல்ல. ஒரு போதகரைக் கொண்டிருப்பது, நான் என்னை அறிகிறதைவிட என்னை நன்கு அறிந்தவர், ஒரு நண்பனைவிட நெருக்கமானவர், என் இருதயத்தின் மிகவும் ஆழமான பாதாளத்தை அளந்து அதைத் திருப்திசெய்கிறவர், என் மனதிலுள்ள எல்லாக் குழப்பங்களையும் பிரச்சனைகளையும் எதிர்கொண்டு தீர்வுசெய்தார் என்கிற பாதுகாவலான உணர்வுக்கு என்னைக் கொண்டுவந்தவர் ஒருவர் இருக்கிறார் என்பதே. ஒரு போதகரைக் கொண்டிருப்பது என்பது இதுதவிர வேறொன்றுமில்லை; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார்.

நம்முடைய ஆண்டவர் ஒருபோதும் கீழ்ப்படிதலை வலியுறுத்துகிறவரல்ல; அவர் விரும்புகிறவைகளை என்னைக்கொண்டு செய்யவைக்கும் வழிகளைக் கையாளுகிறவருமல்ல. தேவன் என்மேல் ஆதிக்கஞ்செலுத்தி என்னைக்கொண்டு காரியத்தைச் செய்யவைக்கட்டும் என்று குறிப்பிட்ட சிலவேளைகளில் நான் விரும்புகிறேன், ஆனால், அவர் அப்படிச் செய்யமாட்டார்; மற்ற மனநிலைகளில் அவர் என்னைத் தனியே விட்டுவிடட்டும் என்று விரும்புகிறேன், ஆனால் அவர் அப்படியும் செய்யவில்லை.

நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள் என்றார். அவர் அப்படித்தானா? போதகர், ஆண்டவர் என்கிற வார்த்தைகளை நாம் அதிகம் பயன்படுத்துவதில்லை; இரட்சகர், பரிசுத்தமாக்குகிறவர், பரிகாரி என்கிற பதங்களையே நாம் அதிகம் விரும்புகிறோம். அனுபவத்தில் எஜமானத்துவத்தை விளக்குகிற ஒரே சொல் அன்பு; தேவன் வெளிப்படுத்தியிருக்கிற அன்பைக்குறித்து நாம் அரிதாகவே அறிந்திருக்கிறோம். கீழ்ப்படிதல் என்கிற பதத்தை நாம் பயன்படுத்துகிறமுறை இதைத் தெளிவாக்குகிறது. வேதபுத்தகத்தில் கீழ்ப்படிதல் மகனுக்குத் தந்தையோடுள்ளதுபோல சமமானவர்களுடைய உறவை அடிப்படையாகக்கொண்டது. நம்முடைய ஆண்டவர் தேவனுடைய சேவகனல்ல, அவருடைய குமாரன். அவர் குமாரனாயிருந்தும் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டாரென்று வாசிக்கிறோம். நாம் ஆளப்படுகிறோம் என்பது நமது கருத்தாயிருக்குமானால், நமக்குப் போதகரில்லை என்பதின் தெளிவே அது; இயேசுவுக்குநேரான நம்முடைய மனப்பான்மை அதுவாயிருக்குமானால், அவர் விரும்பும் உறவிலிருந்து நாம் அதிகத் தூரத்திலிருக்கிறோம். நம்மை அறியாமலே அவர் எளிதாக நமது போதகராகத்தகுந்த உறவில் நாம் இருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார்; நாம் அறிந்திருப்பதெல்லாம் அவருக்குக் கீழ்ப்படியும்படி நாம் அவருடையவர்கள் என்பதே.

அருட்பணியாளரின் இலக்கு

இதோ, எருசலேமுக்குப் போகிறோம். லூக்கா 18:31.

ஜென்ம வாழ்க்கையில் நாம் முதிர்ச்சியடையும்போது நம்முடைய ஆர்வங்கள் மாறுபடும்; கிறிஸ்தவ வாழ்க்கையில் இலக்கு ஆரம்பத்திலேயே கொடுக்கப்படுகிறது; ஆரம்பமும் முடிவும் ஒன்றுதான், அது நம்முடைய ஆண்டவரே. கிறிஸ்தவ வாழ்க்கை எவ்வாறிருக்கவேண்டும் என்கிற நமது கருத்தின்படியல்ல, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும் நாம் கிறிஸ்துவோடு ஆரம்பித்து அவரோடு முடிக்கிறோம். ஒரு அருட்பணியாளரின் இலக்கு பயன்படுத்தப்படுவதோ, புறஜாதிகளை ஆதாயஞ்செய்வதோ அல்ல, தேவனுடைய சித்தம் செய்வதே; அவர் பயனுள்ளவராகவும், புறஜாதிகளை ஆதாயம்செய்கிறவராகவும் இருக்கலாம்; ஆனால், அதுவல்ல அவருடைய இலக்கு. அவரின் இலக்கு அவருடைய ஆண்டவரின் சித்தம் செய்வதே.

நமது ஆண்டவருடைய வாழ்க்கையில், தமது பிதாவினுடைய சித்தத்தின் உச்சக்கட்டத்தைச் சிலுவையில் அடைந்த இடம் எருசலேம்; இயேசுவோடு நாம் அங்கு போகாவிட்டால் அவரோடு நமக்குத் தோழமை இருக்கமுடியாது. எருசலேமுக்குச் சென்ற வழியில் நமது ஆண்டவரை ஒன்றும் அதைரியப்படுத்தவில்லை. அவர் உபத்திரவிக்கப்பட்ட குறிப்பிட்ட கிராமங்களை அவர் ஒருபோதும் மிகவிரைவாய்க் கடந்துசெல்லவில்லை, அவர் போற்றப்பட்ட மற்ற கிராமங்களில் அவர் நேரந்தாழ்த்தவுமில்லை. எருசலேமுக்குச் செல்லவேண்டும் என்ற அவருடைய நோக்கத்திலிருந்து நன்றி அல்லது நன்றிக்கேடு நமது ஆண்டவரை ஒரு மயிரிழைபோலும் மாற்றவில்லை.

சீஷன் தன் போதகனிலும் மேற்பட்டவனல்ல. நம்முடைய எருசலேமுக்குச் நாம் செல்லும் வழியில் நமக்கும் அதே காரியங்கள் நேரிடும். நம்மூலம் தேவனுடைய கிரியைகள் வெளிப்படும்; மக்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள், ஒன்றோ இரண்டோபேர் நன்றி காண்பிப்பார்கள், மீந்தவர்கள் அதிக நன்றிக்கேடு காண்பிப்பார்கள்; ஆனால் நம்முடைய எருசலேமுக்கு நாம் செல்லுவதிலிருந்து ஒன்றும் நம்மைத் திசைமாற்றக்கூடாது.

அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். நமது ஆண்டவர் எருசலேமை அடைந்தபோது நடந்தது அதுதான்; அந்த நிகழ்வுதான் நம்முடைய இரட்சிப்பின் நுழைவாயில். பரிசுத்தவான்கள் சிலுவையில் அறையப்படுவதில் முடிவடைவதில்லை, ஆண்டவர் அருளால் அவர்கள் மகிமையில் முடிவடைவார்கள். இதற்கிடையில், நானும் எருசலேம்வரைச் செல்லுகிறேன் என்பதே நமது கோட்பாட்டுச் சொல்.

ஆயத்தத்தில் "போ" என்பது

ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவு கூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்து விட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து. மத்.5:23,24.

நாம் பூரணராயும் ஆயத்தமானவர்களாயும் இருக்கும் இடத்தை நாம் அடைந்துவிடுவோம் என்று கற்பனைசெய்வது எளிதானது, ஆனால், ஆயத்தப்படுவது திடீரென்று நிறைவேற்றப்படுவதில்லை; அது நிதானத்துடன் பேணப்படவேண்டிய நடைமுறை. அனுபவத்தில் நிலையான நிலைக்குள் பிரவேசிப்பது ஆபத்தாகும். எப்போதும் ஆயத்தம் மற்றும் ஆயத்தம்.

ஒரு புதிய கிறிஸ்தவனைத் தியாகத்தின் உணர்ச்சி உடனடியாக ஈர்க்கிறது. மனுஷீகத்தில் சொன்னால், இயேசுகிறிஸ்துவுக்குநேராகக் கவருகிற ஒரே காரியம் வீரமுள்ள உணர்வு; நமது ஆண்டவரின் வார்த்தை களைக்குறித்த நுண்ணாய்வு திடீரென இந்த உற்சாகத்தின் போக்கைப் பரிசோதனைக்கு உட்படுத்துகிறது. முன்பு உன் சகோதரனோடு ஒப்புரவாகு. ஆயத்தத்தில் "போ" என்பது தேவவசனம் ஆராயும்படி அனுமதிப்பதே. வீரமானத் தியாகத்தின் உணர்வு போதுமானஅளவு நல்லதல்ல. அவர் உங்களில் கண்டுபிடிக்கிற காரியம் பரிசுத்த ஆவியானவருடைய சேவைக்கு ஒருபோதும் சாத்தியமல்லாத மனப்பான்மையே. தேவனைத்தவிர வேறு யாரும் அத்தகைய மனப்பான்மையை உங்களில் கண்டுபிடிக்கமுடியாது. தேவனிடத்திலிருந்து மறைப்பதற்கு ஏதாவது உங்களிடத்தில் உண்டா? உங்களிடத்தில் உண்டானால், தேவன் தமது ஒளியினால் உங்களை ஆராயட்டும். பாவம் இருக்குமானால் அதை ஒப்புக்கொள்வதுமட்டுமல்ல, அறிக்கையும் செய்யவேண்டும்; உங்கள்மேலுள்ள உங்கள் உரிமைக்கு எத்தகைய இழிவு ஏற்பட்டாலும், உங்கள் ஆண்டவரும் எஜமானனுமாகிய வருக்குக் கீழ்ப்படிய உங்களுக்கு விருப்பந்தனா?

உணர்த்தப்படுவதை ஒருபோதும் விட்டுவிடாதீர்கள். அதை உங்கள் நினைவுக்குக் கொண்டுவரத்தக்கதாக அது தேவஆவியானவருக்கு மிகமுக்கியமானால் அந்தக் காரியத்தைத்தான் அவர் கண்டுபிடிக்கிறார். விட்டுவிடுவதற்கு நீங்கள் ஒரு பெரிய காரியத்தைத் தேடிக்கொண்டிருந் தீர்கள். தேவன் ஏதோ சின்னஞ்சிறிய காரியத்தைப்பற்றி உங்களிடம் கூறுகிறார்; அதன்பின்னால் பிடிவாதத்தின் மத்திய அரண் கிடக்கிறது-- என்மேலுள்ள என் உரிமையை நான் விட்டுக்கொடுக்கமாட்டேன் என்பதே அது. நீங்கள் எப்போதாகிலும் இயேசுகிறிஸ்துவின் சீஷராகப்போகிறீர் களானால் அதைத்தான் விட்டுவிடவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்.

உறவில் "போ" என்பது

ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ. மத்.5:41.

நம்முடைய ஆண்டவர் நம்மில் தெய்வீகக் கிரியை நடப்பிக்கா விட்டால் அவர் உரிமைப்படுகிற உறவு சாத்தியமானதல்ல என்பது அவரது போதனையின் சுருக்கமாகும். கொடுமையையும் அநீதியையும் சந்திக்கும் போது மனக்கசப்பின் சிறிதளவு சுவடும் ஒரு சீஷனுடைய இருதயத்தின் அடியில் மறைக்கப்பட்டுக்கூட இருக்கக்கூடாது என்றே இயேசுகிறிஸ்து கேட்கிறார். இயேசுகிறிஸ்து தமது ஊழியர்மீது வைக்கும் அழுத்தத்தை எந்த வைராக்கியமும் சகித்துக்கொள்ளமுடியாது, ஒரேயொரு காரியத்தால் மாத்திரமே முடியும்; தேவனுக்குச் சித்தமான இடத்துக்கு அவர் என்னை அனுப்பவே நான் இங்கு இருக்கிறேன் என்கிற ஒரே நோக்கம் மாத்திரம் மீந்திருக்குமட்டும், நீரூற்றால் சுத்தமாக்கும் அவருடைய ஆலை வழியாகக் கடந்துசென்ற தேவனோடுள்ள ஆளத்துவ உறவே அது. மற்ற எல்லாக் காரியங்களும் மங்கலாகலாம், ஆனால் இயேசுகிறிஸ்துவோடுள்ள இந்த உறவுமட்டும் ஒருபோதும் அப்படி ஆகக்கூடாது.

மலைப்பிரசங்கம் ஒரு குறிக்கோள் அல்ல; இயேசுகிறிஸ்து என் மனச்சார்பை மாற்றி, அவருடைய சொந்த மனச்சார்புபோன்ற ஒன்றை வைக்கும்போது என்னில் என்ன நேரிடும் என்பதின் அறிக்கையே அது. மலைப்பிரசங்கத்தை நிறைவேற்றக்கூடியவர் இயேசுகிறிஸ்து மாத்திரமே.

நாம் இயேசுவின் சீஷர்களாயிருக்கவேண்டுமானால் தெய்வீகக் கிருபையினால் நாம் சீஷர்களாக்கப்படவேண்டும்; சீஷர்களாயிருக்கவேண்டு மென்ற உறுதியான நோக்கம் நமக்கு இருக்கும்வரை நாம் சீஷர்களல்ல என்பது நிச்சயம். நான் உங்களைத் தெரிந்துகொண்டேன் என்று இயேசு கூறினார். அவ்வாறுதான் தேவனுடைய கிருபை ஆரம்பிக்கிறது. நாம் தப்பிக்கமுடியாத நிர்ப்பந்தம் அது; அதற்கு நாம் கீழ்ப்படியாமலிருக்கலாம், ஆனால் அதை உண்டுபண்ணமுடியாது. தேவனுடைய தெய்வீகக் கிருபை யாலேயே நாம் இழுக்கப்படுகிறோம்; அவருடைய கிரியை எங்கு ஆரம்பிக் கிறது என்பதை ஒருபோதும் கண்டுபிடிக்கமுடியாது. நம்முடைய ஆண்டவர் தெய்வீகமாகவே ஒரு சீஷனை உருவாக்குகிறார். இயற்கையான எந்த ஆற்றலின்மேலும் அவர் கட்டுவதில்லை. இயற்கையாகவே நமக்கு எளிதா யிருக்கும் காரியங்களைச் செய்யும்படி அவர் நம்மிடம் கேட்பதில்லை; அவருடைய கிருபையினால் எக்காரியங்களைச் செய்ய நாம் முற்றிலும் தகுதியாக்கப்பட்டிருக்கிறோமோ அவைகளை மட்டும் செய்யவே அவர் கேட்கிறார்; சிலுவை எப்போதும் அதற்கு ஒத்தே வரும்.

குற்றமற்ற மனநிலை

உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூரு வாயாகில். மத்.5:23.

நீ பலிபீடத்துக்கு வரும்போது, உன் சகோதரனுக்கு உன்பேரில் குறை உண்டென்று நினைவுகூருவாயாகில்--உன் ஆரோக்கியமற்ற உணர்ச்சியினால் நீயாக எதையாவது உன் அறிவுக்குக் கொண்டுவருவா யாகில் என்றல்ல--நீ நினைவுகூருவாயாகில், அதாவது, தேவனுடைய ஆவியானவரால் உன் விழிப்புணர்வுள்ள கவனத்துக்குக் கொண்டுவரப்படு மாகில், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து என்று இயேசு சொன்னார். மிகச்சிறிய காரியம் வரைத் தேவனுடைய ஆவியானவர் உங்களுக்குக் கற்றுக்கொடுக்கும்போது உங்களிலிருக்கும் ஆவியானவருடைய ஆழ்ந்த உணர்ச்சிக்கு நீங்கள் ஒருபோதும் மறுப்புக் கூறாதேயுங்கள்.

முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகு. நமது ஆண்டவரின் அறிவுரை எளிதானது--முன்பு ஒப்புரவாகு. நீங்கள் வந்த வழியே திரும்பிச் செல்லுங்கள், பலிபீடத்தில் கொடுக்கப்பட்ட உணர்த்துதல் உங்களுக்குச் சுட்டிக்காட்டுகிற வழியே செல்லுங்கள்; உங்கள்பேரில் குறைவுள்ள சகோதர னுக்குநேராகத் தகுந்த மனநிலையும் ஆத்தும பக்குவமும் அடைந்துகொள் ளுங்கள்; சுவாசித்தல் எவ்வளவு இயல்போ அதுபோல ஒப்புரவாகுதலும் இயல்பாகும்படி அது செய்யும். மற்ற நபரை இயேசு குறிப்பிடவில்லை, நீங்கள் போங்கள் என்றே அவர் சொல்லுகிறார். உங்கள் உரிமைகளைக் குறித்து ஆராயப்படவில்லை. தன் சொந்த உரிமைகளை மனதார விட்டுக் கொடுத்துவிட்டு கர்த்தராகிய இயேசுவுக்குக் கீழ்ப்படிய அவரால் கூடும் என்பதே பரிசுத்தவானின் முத்திரையாகும்.

பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து. செயல்முறைத் தெளிவாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. முதலாவது சுயத்தியாகத்தின் தைரியமுள்ள ஆவி, அதன்பின் பரிசுத்த ஆவியானவருடைய உணர்த்து தலால் உடனடி தடுக்கப்படுதல் மற்றும் உணர்த்தப்பட்ட இடத்தில் நின்று விடுதல்; பிற்பாடு உங்கள்பேரில் குறைவுள்ள நபருக்குநேராக மனதிலும் நடத்தையிலும் பிழையற்ற மனப்பான்மையை உருவாக்கி, தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியும் வழி; இறுதியாக, மகிழ்ச்சியோடு, எளிமையாக, எந்தத் தடையுமின்றி தேவனுக்கு உங்கள் காணிக்கையைச் செலுத்துதல்.

துறத்தலில் "போ" என்பது

ஆண்டவரே, நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன். லூக்கா 9:57.

மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால் இந்த மனிதனை நமது ஆண்டவர் கடுமையாக அதைரியப்படுத்தினார். அந்த மனிதனை ஆதாயப்படுத்தும் வாய்ப்பை அவர் இழந்துபோனாரே! அவனை உறையவைத்த வடதிசைக் காற்றை அவன்மீது வீசச்செய்து அவனை அதைரியப்படுத்தி அனுப்பிவிட்டாரே! என்று நாம் கூறியிருப்போம். உங்கள் ஆண்டவருக்காக ஒருபோதும் வருத்தம் தெரிவிக்காதீர்கள். புண்படுத்தி வேதனைப்படுத்த எதுவும் இல்லாமலாகும்வரை ஆண்டவரின் வார்த்தைகள் புண்படுத்தி வேதனைப்படுத்துகின்றன. தேவனுடைய ஊழியத்தில் ஒரு மனிதனை இறுதியில் கெடுக்கும் எக்காரியத்திலும் இயேசுகிறிஸ்துவுக்குக் கொஞ்சமும் இரக்கமில்லை. நமது ஆண்டவரின் பதில்கள் உணர்ச்சியின் அடிப்படையானவை அல்ல, மனிதனில் என்ன இருக்கிறது என்ற அவரது அறிவையே சார்ந்தது. உங்களைப் புண்படுத்தக்கூடிய ஆண்டவருடைய வார்த்தை எதையாவது தேவனுடைய ஆவியானவர் உங்கள் உள்ளத்தில் கொண்டுவருவாரானால் மரணம்வரை அவர் வேதனைப்படுத்துவதற்கான ஏதோ இருக்கிறது என்று நீங்கள் நிச்சயங்கொள்ளலாம்.

வச. 58. இயேசுகிறிஸ்துவை சேவிப்பது எனக்குப் பிரியமானது என்பதால் நான் அவ்வாறு செய்கிறேன் என்பதை இந்த வார்த்தைகள் தகர்த்துப்போடுகின்றன. புறக்கணிப்பதின் கண்டிப்பு என் ஆண்டவரையும் என்னையும் கதியற்ற நம்பிக்கையையும் மட்டுமே என்னில் விட்டுவைக்கிறது. நூற்றுக்கணக்கானோர் வரட்டும் அல்லது போகட்டும், உங்களுடைய வழிகாட்டி என்னோடுள்ள உங்கள் உறவு மாத்திரமாயிருக்கவேண்டும்; எனக்குத் தலைசாய்க்க இடமில்லை என்று அவர் கூறுகிறார்.

வச. 59. இந்த மனிதன் இயேசுவுக்கு ஏமாற்றமளிக்கவோ தன் தந்தையைத் துக்கப்படுத்தவோ விரும்பவில்லை. நாம் இயேசுகிறிஸ்துவுக்கு விசுவாசமாய் இருப்பதற்குப்பதில் உறவினருக்கு விசுவாசமாயிருக்கிறோம்; இயேசு கடைசி இடம் எடுக்கவேண்டியவராகிறார். யாருக்கு விசுவாசமாயிருக்கவேண்டும் என்ற போராட்டம் வரும்போது, எந்த விலைகொடுத்தும் இயேசுகிறிஸ்துவுக்கு விசுவாசமாயிருக்கவேண்டும்.

வச. 62. ஆம் ஆண்டவரே, ஆயினும்.....என்று சொல்லுகிற மனிதன் மிகவும் அதிகம் ஆயத்தமாயிருந்தும் ஒருபோதும் செல்வதில்லை. இந்த மனிதனுக்கு ஒன்றோ இரண்டோ ஒதுக்கீடுகள் இருந்தன. இயேசுகிறிஸ்துவின் கண்டிப்பான அழைப்புக்கு வழியனுப்புதலில்லை; ஏனெனில், அடிக்கடி பயன்படுத்தப்படுகிற வழியனுப்புச் சடங்குப் புறஜாதிகளுக்குரியது, கிறிஸ்தவத்துக்குரியதல்ல. தேவனுடைய அழைப்பு வந்துவிட்டால், போக ஆரம்பியுங்கள், போய்க்கொண்டேயிருப்பதை நிறுத்தாதீர்கள்.

நிபந்தனையற்ற ஒன்றித்தலில் "போ" என்பது

உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; ... பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றிவா. மாற்கு 10:21.

தனவந்தனான இளம் அதிகாரிக்குப் பூரணனாயிருக்கவேண்டும் என்ற தலையாய பேரார்வம் இருந்தது. இயேசுகிறிஸ்துவை அவன் கண்ட போது அவரைப்போலிருக்க விரும்பினான். நமது ஆண்டவர் ஒரு சீஷனை அழைக்கும்போது தனிநபர் பரிசுத்தத்தை அவர் ஒருபோதும் முன்னிலைப் படுத்துவதில்லை; என்மேலுள்ள என்னுடைய உரிமையை அவர் முற்றிலும் அழித்து, வேறு எந்த உறவும் இல்லாமல் அவரோடுள்ள உறவில் என்னை ஒன்றிக்கவைக்கிறார். லூக்கா 14:26-க்கு இரட்சிப்பு மற்றும் பரிசுத்தமாகுத லோடு எந்தத் தொடர்புமில்லை, ஆனால் அது இயேசுகிறிஸ்துவோடுள்ள நிபந்தனையற்ற ஒன்றித்தலையே குறிப்பிடுகிறது. இயேசுவுக்குப் பூரணமாய் ஒப்படைப்பதை நம்மில் வெகு சிலரே அறிந்திருக்கிறோம்.

இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்தார். வேறு எந்த நபருக்கும் பொருளுக்கும் நேரான பக்தியிலிருந்து என்றென்றும் நொறுக்கப்பட்ட இருதயத்தையே இயேசுவின் பார்வை குறிக்கிறது. இயேசு எப்போதாவது உங்களை நோக்கிப் பார்த்ததுண்டா? இயேசுவின் பார்வை மறுரூபப்படுத்துகிறது, ஊடுருவுகிறது. நீங்கள் தேவனுக்குநேராக எங்கு எளிதாக இணங்குவீர்களோ அங்குதான் கர்த்தர் உங்களை நோக்கிப் பார்த்தார். நீங்கள் கடினமானவர்களும், பழிவாங்குகிறவர்களும், உங்கள் சொந்த வழியை வற்புறுத்துகிறவர்களும், உங்களைவிட மற்ற நபர்தான் அதிகமும் தவறானவர் என்ற நிச்சயங்கொள்ளுகிறவர்களுமாயிருந்தால், இயேசு உற்று நோக்கியதால் ஒருபோதும் மறுரூபப்படுத்தப்படாத அதிகப் பாகங்கள் உங்கள் இயற்கையில் உண்டு என்பதின் சான்றாகும் அது.

உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு. இயேசுகிறிஸ்துவுக்கும் உங்க ளுக்கும் இடையில் ஒன்றும் வராதபடி அவரோடு ஐக்கியங்கொள்ளுவதே இயேசுகிறிஸ்துவின் கண்ணோட்டத்தில் ஒரே நல்ல காரியம்.

உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்றுவிடு. நான் ஒரு புலஉணர்வுள்ள மனிதன்மட்டும் என்ற நிலைவரையிலும் நான் என்னைத் தாழ்த்தவேண்டும். எல்லா வகையான உடைமைகளையும் அடிப்படையாக நான் துறக்கவேண்டும்; அது என் ஆத்துமாவை இரட்சிப்பதற்கல்ல, (ஒரே ஒரு காரியம் மாத்திரமே மனிதனை இரட்சிக்கும்--அது இயேசுகிறிஸ்துவை முழுவதும் சார்ந்திருப்பதே) அது இயேசுவைப் பின்செல்வதற்காகவே. என்னைப் பின்பற்றி வா. அதற்குரிய சாலை அவர் சென்ற பாதையே.

அழைப்பைக்குறித்த விழிப்புணர்வு

அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ. 1 கொரி.9:16.

தேவனுடைய மர்மமானத் தெய்வீகத் தொடுதலை நாம் மறந்துவிட வாய்ப்புண்டு. தேவனுடைய அழைப்பை எங்கு நீங்கள் பெற்றீர்கள் என்பதையும், அதைக்குறித்த எல்லாவற்றையும் உங்களால் கூறக்கூடுமானால் நீங்கள் எப்போதாவது ஒரு அழைப்பைப் பெற்றிருக்கிறீர்களா என்று நான் சந்தேகப்படுகிறேன். அவ்வாறு தேவனுடைய அழைப்பு வருவதில்லை; அது மிக அதிகமாகத் தெய்வீகமானது. ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் அதைக்குறித்த உணர்வு திடீரென்று இடிமுழக்கம்போல வரலாம், அல்லது படிப்படியாக சூரிய உதயம்போன்று வரலாம்; ஆனால், எவ்வழியில் அது வந்தாலும், வார்த்தைகளால் விவரிக்கமுடியாத தெய்வீகத்தின் அடியொழுக்கோடுதான் வரும்; அது எப்போதும் பிரகாசத்தோடு சேர்ந்துதான் வரும். நான் உன்னைத் தெரிந்துகொண்டேன் என்று உங்கள் வாழ்க்கையைப் பற்றியிருக்கிற, மதிப்பிடமுடியாத தெய்வீகமான வியப்புக்குரிய அழைப்பின் உணர்வு எந்தச் சமயத்திலும் திடீரென்று உதிக்கலாம். இரட்சிப்போடும் பரிசுத்தமாகுதலோடும் தேவனுடைய அழைப்புக்கு எந்தத் தொடர்புமில்லை. நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்டிருப்பதால் நீங்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அழைக்கப்படவில்லை; சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கான அழைப்பு எல்லையற்ற அளவு வேறுபட்டது. அதைப் பவுல் தன்மேல் விழுந்த கடமையென்று விவரிக்கிறார்.

தேவனுடைய மகாப்பெரிய தெய்வீக அழைப்பை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் அழித்துக்கொண்டிருந்தீர்களானால் உங்கள் சூழ்நிலைகளை மறு ஆய்வு செய்து, நீங்கள் எங்கே தேவனுக்கு அல்ல, ஊழியத்தைக்குறித்த உங்கள் கருத்துக்களுக்கா அல்லது உங்கள் இயல்பானத் திறமைகளுக்கா முதலிடங்கொடுத்தீர்கள் என்பதைக் கவனித்துப்பாருங்கள். சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ என்று பவுல் கூறுகிறார். அவர் தேவனுடைய அழைப்பை அறிந்திருந்தார், அவருடைய வலிமைக்கு எந்தப் போட்டியாளரும் இல்லை.

ஒரு ஆணோ அல்லது பெண்ணோ தேவனால் அழைக்கப்பட்டால், சூழ்நிலைகள் எவ்வாறு பாதகமாயிருந்தாலும் பரவாயில்லை, இடைபடுகிற எல்லா சக்திகளும் முடிவில் தேவனுடைய நோக்கத்தைச் செயல்படுத்தும். தேவனுடைய நோக்கத்தோடு நீங்கள் ஒத்துப்போனால், உங்கள் புறம்பான வாழ்க்கையைமட்டுமல்ல, உங்கள் வாழ்க்கையில் நீங்கள் அடையமுடியாத எல்லா ஆழ்ந்த பகுதிகளையும் தேவன் இசைவுபடுத்துவார்.

அழைப்பின் கட்டளை

இப்பொழுது நான் உங்கள்நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷ மடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன். கொலோ.1:24.

நமது சொந்த ஆவிக்குரிய அர்ப்பணத்தை அழைப்பாகக் கருதுகி றோம்; ஆனால், தேவனோடு நாம் ஒப்புரவாகும்போது, இவற்றையெல்லாம் அவர் ஒதுக்கிவைத்துவிட்டு, நாம் ஒருபோதும் கற்பனைசெய்திராத ஒரு காரியத்தோடு அவர் நம்மைப் பயங்கரமான வேதனையோடு ஒருமுகப்படுத் துவதினால், ஒரு பிரகாசமான, பளிச்சிடும் நொடியில் அவருடைய நோக்கம் என்ன என்பதை உணருகிறோம்; அப்போது, இதோ அடியேன், என்னை அனுப்பும் என்று கூறுவோம்.

இந்த அழைப்புக்கு நொறுக்கப்பட்ட அப்பமும் ஊற்றப்பட்ட இரசமு மாக ஆக்கப்படுவதோடேயே தொடர்பு உண்டேயல்லாமல், தனிநபர் பரிசுத் தமாகுதலோடு எந்தத் தொடர்புமில்லை. நம்மை நசுக்குவதற்காகத் தேவன் பயன்படுத்துகிற விரல்களுக்கு நாம் மறுப்புக் கூறினால் நம்மை அவர் ஒருபோதும் இரசமாக்கமுடியாது. தேவன் தம்முடைய சொந்த விரல்களை மாத்திரம் பயன்படுத்தி, நம்மைச் சிறப்பான முறையில் நொறுக்கப்பட்ட அப்பமாயும் ஊற்றப்பட்ட இரசமாயும் மாற்றுவாரானால் நலமாயிருக்கும்! ஆனால், நாம் வெறுக்கிற யாரோ ஒருவரையோ அல்லது ஒருபோதும் சரணடையமாட்டோம் என்று நாம் கூறின ஏதோ ஒரு தொகுப்பு சூழ்நிலை களையோ பயன்படுத்தி, அவைகளை நசுக்கும் ஆலைகளாக்கும்போது நாம் ஆட்சேபிக்கிறோம். நம்முடைய சொந்த இரத்தசாட்சியின் காட்சியை நாம் ஒருபோதும் தெரிந்தெடுக்கக்கூடாது. நாம் எப்போதாவது திராட்சரச மாக மாற்றப்படவேண்டுமேயானால், நாம் நசுக்கப்பட்டேயாகவேண்டும்; உங்களால் திராட்சப்பழங்களைக் குடிக்கமுடியாது; திராட்சப்பழங்கள் பிழியப்படும்பொழுதுமாத்திரமே அவைகள் இரசமாக மாறுகிறது.

உங்களை நசுக்குவதற்குத் தேவன் அவருடைய பெருவிரலோடு எந்த விரல்களைப் பயன்படுத்துகிறாரென்று நான் ஆச்சரியப்படுகிறேன்! நீங்கள் கோலியைப்போலிருந்துத் தப்பிவிட்டீர்களா? நீங்கள் இன்னும் பழமாகவில்லை, உங்களை ஆண்டவர் பிழிந்திருப்பாரானால் திராட்சரசம் அதிகக் கசப்பாயிருந்திருக்கும். இயல்பு வாழ்வின் பகுதிகள் தேவபணியில் தேவகிருபையால் நொறுக்கப்படும்போது, தேவப்பிரசன்னம் அங்கிருப்பதே புனிதநபராவதின் கருத்தாகும். தேவனுடைய கரத்தில் நொறுக்கப்பட்ட அப்பம் ஆவதற்குமுன் நாம் அவரை அனுசரித்து நடக்கவேண்டும். அவரோடு ஒத்துப்போங்கள், அவர் விரும்புகிறதை அவர் செய்யட்டும்; அப்போது அவருடைய மற்ற குழந்தைகளுக்குப் பயனளிக்கும் அப்பமும் இரசமும் உற்பத்திசெய்கிறார் என்பதைக் கண்டுகொள்வீர்கள்.

உயர்வின் மண்டலம்

இயேசு.....உயர்ந்த மலையின்மேல் அவர்களைத் தனியே கூட்டிக் கொண்டுபோய். மாற்கு 9:2.

மலையில் தேவனுடைய கண்ணோட்டத்தில் காரியங்களைக் கண்டு, அங்கு தங்கியிருக்க விரும்பிய வேளைகள் நம்மெல்லாருக்கும் இருந்தது; ஆனால், அங்கு தங்கியிருக்கத் தேவன் ஒருபோதும் அனுமதிப் பதில்லை. மலையிலிருந்து இறங்குவதற்குரிய ஆற்றலே நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் பரிசோதனையாகும்; மேலேறுவதற்கு மாத்திரம் நமக்குத் திறன் இருக்குமேயானால் ஏதோ தவறிருக்கிறது. தேவனோடு மலையில் இருப்பது சிறந்த காரியம்; ஆனால், ஒரு மனிதன் அங்கு சென்றடைவதின் ஒரே காரணம் பிற்பாடு பிசாசு பிடித்திருப்பவர்கள் மத்தியில் இறங்கிவந்து, அவர்களைத் தூக்கிவிடுவதே. மலைகளுக்காகவும், சூரிய உதயத்துக்காகவும் மற்றுமுள்ள அழகுணர்ச்சியின் கவர்ச்சிக்காகவும் நாம் உண்டாக்கப்படவில்லை, அவைகள் அகத்தூண்டுதலுக்காக மட்டுமே; பள்ளத்தாக்குக்கும் நாமிருக்கிற சாதாரண நிலைக்குமே நாம் உண்டாக்கப் பட்டிருக்கிறோம், அங்குதான் நம்முடைய மன உறுதியை நாம் நிரூபிக்க வேண்டும். திரும்பத்திரும்ப மலையிலிருக்கும் காலத்தையே ஆவிக்குரிய சுயநலம் விரும்புகிறது. மலையின்மேல் தங்கியிருக்கக்கூடுமானால் தூதர்க ளைப்போலப் பேசலாம், தூதர்களைப்போல வாழலாம் என்று நாம் எண்ணு கிறோம். உன்னதத்தின் வேளைகள் விதிவிலக்கானவை, தேவனோடுள்ள நம்முடைய வாழ்க்கையில் அவைகளுக்குரியக் கருத்து உண்டு; ஆனால், அக்காலங்கள்மாத்திரம் எப்போதும் இருக்கவேண்டுமென்று நம்முடைய ஆவிக்குரிய சுயநலம் விரும்பாதபடி நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

நடைபெறுகிற எல்லாவற்றையும் பயனுள்ள படிப்பினையாக மாற்ற வேண்டுமென்று நாம் எண்ண வாய்ப்புண்டு; ஆனால், அவைகளைப் படிப்பினையைவிட மேலானதாக, அதாவது நற்பண்பாக மாற்றவேண்டும். எதையாவது நமக்குப் படிப்பிப்பது அல்ல, நம்மை ஏதோ ஒன்றாக உருவாக்குவதே பர்வதத்தின் கருத்தாகும். அதினால் பலனென்ன? என்று கேட்பதில் ஒரு பெரிய கண்ணியுண்டு. ஆவிக்குரிய காரியங்களில் அவ்வாறு நாம் ஒருபோதும் கணக்கிடமுடியாது. மலையுச்சியிலிருக்கும் காலங்கள் அரிதானவை; அவைகள் தேவனுடைய நோக்கத்தில் ஏதோ ஒரு காரணத்துக்காக உள்ளன.

அவமானத்தின் மண்டலம்

நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால், எங்கள்மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவிசெய்யவேண்டும். மாற்கு 9:22.

உயர்வின் ஒவ்வொரு வேளைக்குப்பின்னும் அழகும் கவிநயமும் கிளர்ச்சியும் இல்லாத, காரியங்கள் இருக்கிறவாறான நிலைக்கு நாம் திடீரென்றுத் தள்ளப்படுகிறோம். பள்ளத்தாக்கின் மகிழ்ச்சியற்றதும் இனிமையற்றதுமான நிலையைவைத்தே மலையுச்சியின் உயரம் அளக்கப்படுகிறது; ஆனால், பள்ளத்தாக்கில்தான் நாம் தேவனுடைய மகிமைக்காக வாழவேண்டும். நாம் பர்வதத்தில் அவருடைய மகிமையைக் காண்கிறோம்; ஆனால், அங்கு அவருடைய மகிமைக்காக ஒருபோதும் வாழ்வதில்லை. நம்முடைய இழிவின் மண்டலத்திலேதான் தேவனுக்கு நாம் உண்மையாக எவ்வளவு விலையுள்ளவர்கள் என்பதைக் கண்டுகொள்ளுகிறோம்; அங்குதான் நாம் எவ்வளவு உண்மையுள்ளவர்கள் என்பது வெளிப்படுகிறது. நம்முடைய இருதயத்தின் இயல்பான சுயநலத்தினால், நாம் எப்போதும் வீரனைப் போன்ற நிலையில் இருப்போமானால் நம்மில் பலராலும் காரியங்களைச் செய்யமுடியும்; ஆனால் தேவனோடுள்ள தனிநபர் உறவுக்கேற்ப பள்ளத்தாக்கில் வாழுகிற உற்சாகமற்ற சாதாரண நிலையில்தான் நாம் இருக்கத் தேவன் விரும்புகிறார். மலையில் தங்கியிருப்பது அவர்களுக்குச் சிறந்ததாயிருக்கும் என்று பேதுரு எண்ணினார்; ஆனால், இயேசுகிறிஸ்துவோ அவர்களை மலையிலிருந்து கீழே இறங்கப்பண்ணி, பள்ளத்தாக்குக்கு--தரிசனத்தின் கருத்து விளக்கப்பட்ட இடத்துக்கு--அழைத்துச் சென்றார்.

நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால்.....இழிவின் பள்ளத்தாக்குதான் நம்மிலிருந்து சந்தேகத்தை வேரோடு அழிக்கமுடியும். உங்களுடைய சொந்த அனுபவத்தைத் திரும்பிப்பாருங்கள்; இயேசு யார் என்பதை நீங்கள் கற்றுக்கொண்டதுவரை அவருடைய வல்லமையைக்குறித்து வஞ்சகமான சந்தேகப்பேர்வழிகளாயிருந்தீர்கள். நீங்கள் மலையிலிருந்தபொழுது உங்களால் எதையும் நம்பமுடிந்தது; ஆனால், பள்ளத்தாக்கின் உண்மைகளை நீங்கள் எதிர்கொண்ட காலத்தில் நிலைமையென்ன? பரிசுத்தமாகுதலைக் குறித்து நீங்கள் சிறந்த சாட்சி கூறலாம்; ஆனால், தற்போது உங்களுக்கு அவமானமாயிருக்கிற காரியத்தின் நிலை என்ன? கடந்தமுறை நீங்கள் மலையில் தேவனோடிருந்தபோது வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் இயேசுவுக்குச் சொந்தம் என்று கண்டுகொண்டீர்கள்--இப்போது இழிவின் பள்ளத்தாக்கில் நீங்கள் சந்தேகப்பேர்வழிகளாயிருப்பீர்களோ?

ஊழியத்தின் மண்டலம்

இவ்வகைப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத் தினாலும் பறப்பட்டுப்போகாது. மாற்கு 9:29.

அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று? என்ற சீஷர்களின் கேள்விக்குப் பதில் இயேசுகிறிஸ்துவோடுள்ள நேரடி உறவில் கிடக்கிறது. அவர்மீது நாம் ஒருமுகசிந்தனையும் மற்றும் இருமடங்காக்கப் பட்ட ஒருமுகசிந்தனையும் வைப்பதுதவிர வேறு எவ்விதத்திலும் இவ்வகைப் பிசாசு புறப்பட்டுப்போகாது. அவருடைய ஆற்றலில் ஒருமுகசிந்தனை வைக்காதபடி, நமது சொந்த மனப்போக்கிலிருந்து எடுக்கப்பட்ட கருத்துக் களைக்கொண்டு தேவனுடைய ஊழியத்தைச் செய்ய முயற்சிப்பதினால் சீஷர்களைப்போல நாமும் வல்லமையற்றவர்களாய் எப்போதும் தொடர்ந்து இருக்கலாம். அவரை அறிந்துகொள்ளாமல் அவருக்கு ஊழியஞ்செய்யும் நமது ஆவலினால் நாம் அவரைப் பழிக்கிறோம்.

கடினமான ஒரு நிகழ்ச்சியோடு நேருக்குநேர் நீங்கள் கொண்டு வரப்படுகிறீர்கள், வெளிப்புறமாக ஒன்றும் நிகழவில்லை; ஆயினும், நீங்கள் இயேசுகிறிஸ்துவில் ஒருமுகசிந்தனைகொண்டிருப்பதால் விடுதலை கொடுக்கப்படும் என்பது உங்களுக்குத் தெரியும். இயேசுவுக்கும் உங்களுக் குமிடையே ஒன்றும் இல்லாதபடி கவனித்துக்கொள்வதே உங்களுடைய ஊழியப் போக்கு. அப்படி ஏதாவது உண்டா? ஏதாவது இருக்குமேயானால் அதைக் கடந்துசெல்லவேண்டும்; எரிச்சலில் அதைப் புறக்கணித்தல்ல, அல்லது அதன் மேலேறியுமல்ல; அதை எதிர்கொண்டு, இயேசுகிறிஸ்து வின் சமுகத்திற்குள் அதின் வழியாகக் கடந்துசெல்லவேண்டும். அப்போது அதே காரியமும், அதன் தொடர்பில் நீங்கள் கடந்துசென்றவைகள் எல்லாம் இயேசுகிறிஸ்துவை நேருக்குநேர் சந்திக்கும்வரை நீங்கள் ஒரு போதும் அறியாதமுறையில் அவரை மகிமைப்படுத்தும்.

நாம் கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து உயர எழும்பக் கூடியவர்களாகவேண்டும்; ஆனால், எவ்வாறு கீழே வருவது என்பதையும் நாம் அறிந்திருக்கவேண்டும். கீழே வருவதிலும், கீழே வாழுவதிலுந்தான் பரிசுத்தவானின் வல்லமை அடங்கியிருக்கிறது. என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு என்று பவுல் கூறினார்; அவர் குறிப்பிட்ட காரியங்கள் அதிகமும் மதிப்புக் குறை வானவைகளே. அவமானப்படுவதை மறுத்து, நான் தேவனோடு மலையுச் சியில் இருக்கத்தான் அதிகமாய் விருப்பப்படுகிறேன் என்று கூற நமக்கு அதிகாரமுண்டு. இயேசுகிறிஸ்து நிஜமானவர் என்பதைக் கருத்தில்கொண்டு அவைகள் உள்ளவாறே என்னால் அவைகளைச் சந்திக்கமுடியுமா? அல்லது, அவரிலுள்ள என் விசுவாசத்தை முற்றிலும் அழித்துவிட்டு, என்னை அச்சுறுத்துகிற காரியங்களைச் செய்கிறேனா?

தரிசனமும் நிஜமும்

பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்கள். 1 கொரி.1:2.

நீங்கள் இதுவரையிலும் ஆகாதிருந்த எல்லா நிலைகளின் காட்சிக் காகத் தேவனை தோத்தரியுங்கள். நீங்கள் தரிசனம்பெற்றீர்கள்; ஆனால், இதுவரையிலும் அங்கு நீங்கள் சென்றடையவேயில்லை. தெரிந்துகொள் ளப்பட்டவர்கள் நாம்தானா என்பதை நாம் நிரூபிக்கிற பள்ளத்தாக்கில் இருக்கும்வேளையில் நம்மில் பலரும் பின்வாங்கிவிடுகிறோம். தரிசனத் துக்கொத்த உருவமாக நாம் மாற்றப்படப்போகிறோமானால் அதற்கு வரவேண்டிய அடிகளுக்கு நாம் முற்றிலும் ஆயத்தமாயில்லை. நாம் யாராயில்லையென்பதையும் நாம் யாராயிருக்கத் தேவன் எதிர்பார்க்கிறார் என்பதையும் கண்டிருக்கிறோம்; ஆனால், தேவன் நம்மை அடித்து உருவ மைத்து உபயோகிக்கும் தரிசனத்தைப் பெற்றுக்கொள்ள நமக்கு விருப்பந் தானா? நொறுக்கப்படுவது எப்போதும் சாதாரண முறைகளில் சாதாரண மக்கள் வழியாகவே வரும்.

தேவனுடைய நோக்கம் என்னவென்று நாம் அறிகிற தருணங்கள் உண்டு; தரிசனம் நடைமுறையில் உள்ள நடத்தையாக மாற்றப்படுவதற்கு நாம் அனுமதிப்போமா என்பது நம்மைப் பொறுத்தேயிருக்கிறது, தேவனைப் பொறுத்தல்ல. நாம் மலையில் சோம்பலோடு இளைப்பாறி, அங்கு கண்ட காட்சியின் நினைவிலேயே வாழுவதற்கு முன்னுரிமை கொடுத்தால், மனித வாழ்க்கை உண்டாக்கப்பட்டிருக்கிற சாதாரண நிலைக்கு நாம் நிஜமாகவே பயனற்றுப்போவோம். பரவச உணர்ச்சிகளிலும், தேவனைத் தியானிப் பதிலும் அல்ல, நாம் தரிசனத்தில் எதைக் கண்டோமோ அதைச் சார்ந்து வாழக் கற்றுக்கொள்ளவேண்டும்; நாம் அசலான யதார்த்தத்தை அடையுமட்டும், தரிசனத்தின் வெளிச்சத்தில் நடைமுறையாக வாழவேண்டும். நம்முடைய பயிற்சியின் ஒவ்வொரு சிறுபாகமும் இதே திசையில் இருக்கிறது. தேவன் தம்முடைய கோரிக்கைகளை அறிவிப்பதற்காக அவருக்கு நன்றிசெலுத்தக் கற்றுக்கொள்ளுங்கள்.

செய் என்று தேவன் கூறும்போது நான் என்கிற சுயம் எப்போதும் பிணங்குகிறது. இருக்கிறவராகவே இருக்கிறவர் உன்னை அனுப்புகிறேன் என்று கூறுகிற தேவனுடைய கடுஞ்சினத்தில் நம்முடைய சுயம் சுருங்கிப் போகவேண்டும்; அவர் ஆதிக்கஞ்செலுத்தவேண்டும். நாம் எங்கு வாழுகி றோம் என்பதையும், நாம் எந்த இழிவான இடத்திற்குள் நுழைகிறோம் என்பதையும் தேவன் அறிவார் என்று உணர்வது ஊடுருவுகிறதல்லவா! மின்னல் ஒளியைப்போல அவர் நம்மை வேட்டையாடிப் பிடிப்பார். ஒரு மனிதனும் தேவன் அறிகிறதுபோல மனிதர்களை அறிகிறதில்லை.

சீர்கேட்டின் பாரபட்சம்

இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று. ரோமர் 5:12.

ஒரு மனிதனுடைய பாவத்துக்காக மனுக்குலத்தைத் தேவன் தண்டித்தார் என்று வேதம் கூறவில்லை; ஆனால், பாவத்தின் தன்மை, அதாவது என்னுடைய சுயஉரிமைக்கான என் கோரிக்கை, ஒரு மனிதன் மூலம் மனுக்குலத்துக்குள் பிரவேசித்தது, இன்னொரு நபர் மனுக்குலத்தின் பாவத்தைத் தம்மீது சுமந்து தீர்த்தார் (எபி.9:26) என்பது அளவுகடந்த மிகவும் ஆழ்ந்த வெளிப்படுத்தல். பாவத்தன்மை என்பது துன்மார்க்கமும் தவறான செயலும் அல்ல, நானே என் கடவுள் என்ற அக உணர்வின் மனநிலையே. இந்தத் தன்மை கௌரவமான நன்னடத்தையிலோ அல்லது இழிவான துன்மார்க்கத்திலோ வெளிப்படலாம்; என்மேலுள்ள என் உரிமைக்கான என் கோரிக்கை என்ற ஒரு அடிப்படை மாத்திரமே அதற்கு உண்டு. சகல தீய சக்திகளையும் தங்களில் கொண்ட மனிதரையும், சுத்த வாழ்க்கையும் சன்மார்க்கமும் நேர்மையுங்கொண்ட மனிதரையும் நம்முடைய ஆண்டவர் எதிரிட்டபோது, ஒருவருடைய தார்மீக இழிவையோ அல்லது மற்றவருடைய சன்மார்க்க உயர்வையோ அவர் கருத்தில் எடுத்துக்கொள்ளவில்லை; நாம் பார்க்காத ஏதோ ஒன்றையே அவர் நோக்கிப்பார்த்தார், அதாவது மனதின் தன்மையே.

பாவம் என்பது என்னோடு பிறந்துவிட்ட ஒன்று, அதை நான் தொடமுடியாது; தேவன் மீட்பின்மூலம் பாவத்தைத் தொடுகிறார். பாவத்தின் பாரம்பரியத்தினால் வரக்கூடிய ஆக்கினையின் சாத்தியத்திலிருந்து தேவன் மனுக்குலம் முழுவதையும் இயேசுகிறிஸ்துவின் சிலுவையின்மூலம் மீட்டுக் கொண்டார். பாவத்தின் பாரம்பரியம் இருப்பதற்கு ஒரு மனிதனைத் தேவன் ஓரிடத்திலும் பொறுப்புக்குரியவனாக்குவதில்லை. ஆக்கினைத்தீர்ப்பு நான் பாவத்தின் பாரம்பரியத்தோடு பிறந்தேன் என்பதற்காக அல்ல; ஆனால், அதிலிருந்து என்னை விடுவிக்கும்படி இயேசுகிறிஸ்து வந்தார் என்பதை உணர்ந்தபிறகும், அவர் அவ்வாறு செய்வதற்கு நான் மறுப்புத் தெரிவிப்பேனேயானால் அத்தருணம்முதலே ஆக்கினைத்தீர்ப்பின் முத்திரையை அடைய நான் ஆரம்பிக்கிறேன். ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷர் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் (இக்கட்டான நேரத்துக்குக்) காரணம்.

மறுபிறப்பின் மனச்சார்பு

தம்முடைய குமாரனை ... எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது. கலாத்.1:16.

இயேசுகிறிஸ்து என்னை மறுபிறப்படையச்செய்யவேண்டுமானால் அவர் எதிர்கொள்ளுகிற பிரச்சனை என்ன? என்னுடைய தீர்மானத்துக்கு அப்பாற்பட்ட பாரம்பரியம் ஒன்று எனக்குண்டு; நான் பரிசுத்தவான் அல்ல, அநேகமாக அப்படியாவதுமில்லை; எனவே, நான் பரிசுத்தவானாயிருக்க வேண்டுமென்று என்னிடம் சொல்லுகிறதுதான், இயேசுகிறிஸ்து செய்யக் கூடியதெல்லாமானால், அவருடைய போதனை நம்பிக்கையிழப்பையே ஊன்றும். ஆனால், இயேசுகிறிஸ்து மறுபிறப்படையச் செய்கிறவரானால், அதாவது அவருடைய பரிசுத்தத்தின் பாரம்பரியத்தை எனக்குள் வைக்கக் கூடிய ஒருவரானால், அப்போது நான் பரிசுத்தமாகவேண்டுமென்று அவர் சொல்லும்போது, அவருடைய நோக்கம் என்ன என்பதைக் காண்கிறேன். இயேசுகிறிஸ்துவுக்குள்ளிருந்த பாரம்பரியத் தன்மையை எந்த மனிதனுக் குள்ளும் அவரால் வைக்கமுடியும் என்பதே மீட்பின் கருத்தாகும்; அவர் கொடுக்கிற எல்லாத் திட்டஅளவுகளும் அந்த மனப்பான்மையை அடிப் படையாகக் கொண்டவையே; அவர் நமக்குள் வைக்கிற ஜீவனுக்குரியதே அவருடைய போதனை. இயேசுகிறிஸ்துவின் சிலுவையில் பாவத்தைக் குறித்துத் தேவன் கொடுத்தத் தீர்ப்போடு நான் ஒத்துப்போவது என்னுடைய பாகத்திலுள்ள தார்மீக நடவடிக்கை.

ஒரு மனிதன் தன் தேவையின் உணர்வினால் தாக்கப்படும்போது, பரிசுத்தஆவியைத் தேவன் அவனுடைய ஆவிக்குள் வைக்கிறார்; கிறிஸ்து அவனில் உருவாகுமளவும் அவனுடைய தனித்த ஆவி தேவகுமாரனின் ஆவியால் சக்தியூட்டப்படுகிறது என்பதே மறுபிறப்பைக்குறித்தப் புதிய ஏற்பாட்டின் போதனையாகும். நான் முற்றிலும் புதிய வாழ்க்கை வாழக் காரணமாகத் தேவன் எனக்குள் ஒரு புதிய மனச்சார்பை வைக்கமுடியும் என்பதே மீட்பின் தார்மீக அற்புதம். நான் தேவையின் எல்லைப்பகுதியை அடைந்து, என்னுடைய வரையறைகளை உணரும்போது, நீ பாக்கிவான் என்று இயேசு கூறுகிறார். ஆனால் நான் அங்கு சென்றடையவேண்டும். இயேசுகிறிஸ்துவில் இருந்தத் தன்மை எனக்குத் தேவை என்று உணரா ததுவரையிலும் தார்மீகப் பொறுப்புள்ள மனிதனாகிய எனக்குள் தேவன் அதை வைக்கமுடியாது.

பாவத்தன்மை ஒரு மனிதனால் மனுக்குலத்துக்குள் பிரவேசித்தது போல, இன்னொரு மனிதனால் பரிசுத்த ஆவியானவர் மனுக்குலத்துக்குள் பிரவேசித்தார்; நான் பாவத்தின் பாரம்பரியத்திலிருந்து விடுதலையடைய முடியும் என்பதும், இயேசுகிறிஸ்துமூலமாய் மாசற்ற பாரம்பரியமாகிய பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதுமே மீட்பின் பொருள்.

ஒப்புரவாகுதல்

நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். 2 கொரி.5:21.

பாவம் ஒரு அடிப்படையான உறவு: அது தவறு செய்வதல்ல, அது தவறான வாழ்க்கை; வேண்டுமென்றும் உறுதியாகவும் தேவனைவிட்டு விலகி வாழ்வது. எல்லாக் காரியங்களுக்கும் கிறிஸ்தவமார்க்கம் பாவத்தின் திட்டமும் தீவிரமுமான தன்மையை அடிப்படையாக்குகிறது. பிற மார்க்கங் கள் பாவங்களோடு (புன்மையில்) இடைபடுகிறது; வேதபுத்தகம் மாத்திரம் பாவத்தோடு (ஒருமையில்) இடைபடுகிறது. இயேசுகிறிஸ்து மனிதரில் சந்தித்த முதற்காரியம் பாவத்தின் பாரம்பரியம்; சுவிசேஷத்தை அறிவிக்கும்போது இதை நாம் அசட்டைசெய்த காரணத்தினால் சுவிசேஷத்தின் செய்தி அதின் கூரையும், அதின் தாக்கும் சக்தியையும் இழந்துவிட்டது.

நம்முடைய மாம்சீகப் பாவங்களை இயேசுகிறிஸ்து தம்மீது ஏற்றுக் கொண்டார் என்றல்ல, ஒரு மனிதனும் தொடமுடியாத பாவப்பாரம்பரியத்தை அவர் தம்மீது ஏற்றுக்கொண்டார் என்றே வேதம் வெளிப்படுத்துகிறது. பாவியைப் பரிசுத்தவானாக்குவதற்காகத் தேவன் தம்முடைய சொந்தக் குமாரனைப் பாவமாக்கினார். அனுதாபத்தினாலல்ல, பாவமனிதனைப் போலானதினால் நம்முடைய ஆண்டவர் உலகத்தின் பாவத்தைச் சுமந்தார் என்பதே வேதம் முழுவதிலும் வெளிப்படுத்தப்படுகிறது. மனுக்குலத்தின் குழுமிய மொத்தப் பாவத்தையும் அவர் மனப்பூர்வமாகத் தன் தோளின் மேல் ஏற்றுக்கொண்டு தன் சரீரத்தில் சுமந்தார்--பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்; அவ்வாறு செய்ததினிமித்தம் மனுக்குலம் அனைத்துக்கும் மீட்பின் அடிப்படையில் இரட்சிப்பை உண்டுபண்ணினார். இயேசுகிறிஸ்து மனுக்குலத்துக்கு மறுவாழ்வு கொடுத்தார்; மனுக்குலம் எங்கு இருக்கவேண்டும் என்று தேவன் திட்டமிட்டிருந்தாரோ அந்த இடத்தில் இயேசுகிறிஸ்து அதைத் திரும்பக் கொண்டுவந்தார்; சிலுவையில் நமது ஆண்டவர் செய்து நிறைவேற்றியதின் அடிப்படையில் தேவனோடுள்ள ஐக்கியத்திற்குள் யாரும் பிரவேசிக்கமுடியும்.

ஒரு மனிதன் தன்னைத்தான் மீட்டுக்கொள்ளமுடியாது; அது தேவனுடைய கிரியை, அது முற்றிலும் முடிக்கப்பெற்றுப் பூரணமாயிற்று; தனி நபரோடுள்ள அதன் தொடர்பு தனி நபருடைய செயலைப்பொறுத்தே இருக்கிறது. மீட்பு வெளிப்படுத்தப்படுவதற்கும், ஒரு தனிமனிதன் தன் வாழ்க்கையில் மனப்பூர்வமாக இரட்சிப்பை அனுபவிப்பதற்குமிடையே எப்போதும் வேறுபாடு உண்டாக்கவேண்டும்

கிறிஸ்துவின் தனிப்பட்ட நிலைமை

என்னிடத்தில் வாருங்கள். மத்.11:28.

நாம் இயேசுவிடம் வரவேண்டும் என்று நம்மிடம் சொல்லுவது நம்மை இழிவுபடுத்துவதல்லவா! நாம் இயேசுகிறிஸ்துவிடம் வரமாட்டோம் என்கிற காரியங்களைக்குறித்துச் சிந்தித்துப்பாருங்கள்! நீங்கள் எவ்வளவு நேர்மையானவர்கள் என்பதை அறியவேண்டுமானால், என்னிடத்தில் வாருங்கள் என்கிற வார்த்தைகளினால் உங்களை நீங்கள் சோதித்துப் பாருங்கள். உங்கள் உண்மைக்கேட்டின் ஒவ்வொரு அளவிலும் நீங்கள் தர்க்கிப்பீர்களேதவிர வரமாட்டீர்கள், நீங்கள் வாதஞ்செய்வீர்களேதவிர வரமாட்டீர்கள்; நீங்கள் துக்கத்தின் வழியாய்க் கடந்துசெல்வீர்களேதவிர வரமாட்டீர்கள்; இருக்கிறபடியே நான் வருகிறேன் என்று சொல்லுகிற, கூறமுடியாத மதிகேடுபோலத் தோன்றுகிற, ஓட்டத்தின் இறுதிச்சுற்றுக்கு வருகிறதைவிட நீங்கள் வேறு எதையும் செய்வீர்கள். உங்களிடத்தில் ஆவிக்குரிய பெருமை கொஞ்சமேனும் இருக்கிற காலம்வரைத் தேவன் உங்களை ஒரு பெரிய காரியத்தைச் செய்யச் சொல்லுவார் என்று நீங்கள் எதிர்பார்க்கிறதின்மூலம் எப்போதும் அது தன்னை வெளிப்படுத்துகிறது; ஆனால், நீங்கள் செய்யும்படி அவர் உங்களிடம் சொல்லுவதெல்லாம் வாருங்கள் என்பதே.

என்னிடத்தில் வாருங்கள் என்கிற வார்த்தைகளை நீங்கள் கேட்கும் போது, நீங்கள் வருவதற்குமுன்பாக ஏதோவொன்று உங்களில் நிகழ வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதைப் பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குக் காண்பிப்பார்; நீங்கள் அவரிடம் சென்றடையாதபடி தடுக்கிற காரியத்தின் வேரருகே கோடரியை வைக்கிற எதுவுமாயிருக்கலாம். அந்த ஒரு காரியத்தைச் செய்ய விரும்பு மட்டும் நீங்கள் ஒருபோதும் முன்னே செல்லமாட்டீர்கள். உங்களிடத்தி லிருக்கிற தகர்க்கமுடியாத அந்த ஒரு காரியத்தைப் பரிசுத்த ஆவியானவர் கண்டுபிடிப்பார், ஆனால் அவரை நீங்கள் அனுமதிக்க விரும்பினாலன்றி அவர் அதை நகர்த்தமுடியாது.

எவ்வளவு அடிக்கடி நீங்கள் உங்களுடைய வேண்டுதல்களோடு தேவனிடம் வந்து, இந்தமுறை என் வேண்டுதல் நிறைவேறிவிட்டது என்கிற உணர்வோடு திரும்பிச் சென்றிருக்கிறீர்கள்? ஆயினும், தேவன் உங்களை ஏற்றுக்கொள்வதற்கு மட்டுமல்ல, நீங்கள் அவரை ஏற்றுக்கொள்ளவும் எப்போதும் நீட்டிய கரங்களோடு தேவன் நிற்கும்போது நீங்கள் வெறுமை யாகத் திரும்பிச்செல்லுகிறீர்கள். இயேசுவின் வெல்லமுடியாத, பணிய வைக்க இயலாத, தளராத பொறுமையைச் சிந்தித்துக்கொள்ளுங்கள்!-- என்னிடத்தில் வாருங்கள் என்று அவர் அழைக்கிறார்.

மன அமைதியை மறுபடியும் பெறுதல்

உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள். ரோமர் 6:13.

நான் என்னைத்தானே இரட்சிக்கவும் பரிசுத்தமாக்கவும் முடியாது; பாவப்பரிகாரம் செய்ய என்னால் முடியாது; உலகத்தை மீட்க என்னால் முடியாது; என்னால் தவறானதைச் சரிசெய்யவும், அசுத்தமானதைச் சுத்த மாக்கவும், பரிசுத்தமல்லாததைப் பரிசுத்தப்படுத்தவும் முடியாது. அவையெல் லாம் தேவனுடைய தனியுரிமைச் செயலே. இயேசுகிறிஸ்து செய்திருப்பதில் எனக்கு விசுவாசமுண்டா? அவர் பூரணப் பிராயச்சித்தம் செய்திருக்கிறார், எப்போதும் அதை உணரும் பழக்கம் எனக்குண்டா? காரியங்களைச் செய்வதல்ல, காரியங்களை விசுவாசிப்பதே பெரிய தேவை. கிறிஸ்துவின் மீட்பு ஒரு அனுபவமல்ல, கிறிஸ்துவழியாகத் தேவன் நிறைவேற்றிய மகாப் பெரிய கிரியை அது; என்னுடைய விசுவாசத்தை நான் அதின்மீது கட்ட வேண்டும். என் அனுபவத்தின்மீது என்னுடைய விசுவாசத்தை நான் கட்டிஎழுப்பினால், என்னுடைய பரிசுத்தத்தில் என் கண்களைப் பதித்து வேதவாக்கியங்களுக்கு முற்றிலும் ஒவ்வாததாகிய ஒதுங்கிய வாழ்க்கையை உருவாக்குவேன். ஆண்டவரின் பிராயச்சித்தத்தை அடிப்படையாகக்கொள் ளாத பக்தியைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். பொது வாழ்விலிருந்து ஒதுங்கிய வாழ்க்கைக்குத்தவிர வேறொன்றுக்கும் அது உதவாது; அது தேவனுக்குப் பயனற்றது, மனிதருக்குத் தொந்தரவானது. எல்லாவகை அனுபவத்தையும் நம்முடைய ஆண்டவரைவைத்தே மதிப்பிடுங்கள். பிராயச்சித்தத்தின் அடிப்படையில் மனப்பூர்வமாக நாம் கட்டினாலொழிய தேவனுக்குப் பிரியமான எதையும் நம்மால் செய்யமுடியாது.

இயேசுவின் பிராயச்சித்தம் என்னுடைய வாழ்க்கையில் நடை முறைக்குரியதும் முனைப்பாகத் தலையிடாததுமான வழிகளில் செயல்பட வேண்டும். நான் கீழ்ப்படியும் ஒவ்வொருவேளையும் பூரணத் தெய்வீகம் என் பட்சத்திலிருக்கிறது; எனவே, தேவனுடைய கிருபையும் இயற்கையான கீழ்ப்படிதலும் இசைந்துவிடும். பிராயச்சித்தத்தின்மீது மாத்திரம் என் பூரண நம்பிக்கையை வைத்திருக்கிறேன் என்பதும், என்னுடைய கீழ்ப்படிதலைத் தெய்வீகக் கிருபையின் பிரியம் உடனடியாகச் சந்தித்துவிட்டது என்பதுமே கீழ்ப்படிதலின் பொருளாகும்.

இயல்பு வாழ்க்கையை மறுக்கும் பக்திக்கு எச்சரிக்கையாயிருங்கள், அது வஞ்சனை. பிராயச்சித்தத்தைக்குறித்த பகுத்தறிவு இக்காரியத்திலும் அக்காரியத்திலும் எங்கே இருக்கிறது என்று தொடர்பாக உங்களைப் பிராயச்சித்தத்தின் விசாரணைக் கூண்டுக்குக் கொண்டுவாருங்கள்.

நான் எவ்வாறு அறிவேன்?

பிதாவே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். மத்.11:25.

ஆவிக்குரிய தொடர்புகளில் நாம் கிரமம்கிரமமாக வளருவதில்லை; நாம் ஒன்றில் அங்கிருக்கிறோம், அல்லது அங்கில்லை. பாவத்திலிருந்து தேவன் நம்மைப் படிப்படியாகச் சுத்திகரிக்கிறதில்லை; நாம் ஒளியில் நடந்து, ஒளியிலிருக்கும்போது எல்லாப் பாவத்திலிருந்தும் நாம் கழுவப்படுகிறோம். நாம் கீழ்ப்படிவோமானால் தொடர்பு உடனடியாகப் பூரணப்படுத்தப்படுகிறது. கீழ்ப்படிதலிலிருந்து ஒரு வினாடி விலகிச் சென்றால், இருளும் மரணமும் உடனடியாகச் செயல்படுகின்றன.

கீழ்ப்படிதலின்மூலம் தேவனுடைய வெளிப்படுத்தல்கள் நமக்குத் திறக்கப்படுமட்டும் எல்லாம் முத்திரையிடப்பட்டிருக்கின்றன. தத்துவத்தாலோ சிந்தனையாலோ நீங்கள் அவைகளை ஒருபோதும் திறக்கமுடியாது. நீங்கள் கீழ்ப்படிந்தவுடனே திடீரென்று ஒளி வீசுகிறது. தேவனுடைய சத்தியத்தைப்பற்றி விசாரப்படுவதினாலல்ல, அதில் நீங்கள் ஊறிப்போவதால் அது உங்களில் செயலாற்றட்டும். நீங்கள் தேவனுடைய சத்தியத்தை அறிந்து கொள்ளும் ஒரே வழி அதைக் கண்டுபிடிக்க முயற்சிசெய்வதை நிறுத்தி, மறுபடியும் பிறப்பதே. தேவன் உங்களுக்குக் காண்பிக்கிற காரியத்தில் நீங்கள் கீழ்ப்படியுங்கள், உடனே அடுத்த காரியம் வெளிப்படுத்தப்படும். ஐந்து நிமிடத் தீவிரக் கீழ்ப்படிதல் காரியங்களைச் சூரிய ஒளிபோலத் தெளிவாக்குமாயிருக்க, பரிசுத்த ஆவியானவரின் கிரியையைக்குறித்தப் பருமனான புத்தகங்களை நாம் வாசிக்கிறோம். இக்காரியங்களையெல்லாம் நான் என்றாவது ஒருநாள் புரிந்துகொள்ளுவேன் என்று நான் எண்ணுகிறேன் என்று நீங்கள் சொல்லலாம்; இப்போதே நீங்கள் அவைகளைப் புரிந்துகொள்ளலாம். படிப்பு அல்ல அதைச் செய்வது, கீழ்ப்படிதலே. மிகச்சிறிய அளவு கீழ்ப்படிதல் காண்பித்தால் பரலோகம் திறக்கப்படும், தேவனுடைய ஆழமான சத்தியங்கள் உடனடியாக உங்களுடையவைகள் ஆகும். நீங்கள் தேவனைக்குறித்து ஏற்கனவே அறிந்திருக்கிறவைகளுக்குக் கீழ்ப்படிகிறதுவரை தன்னைக்குறித்துக் கூடுதல் சத்தியங்களை அவர் உங்களுக்கு ஒருபோதும் வெளிப்படுத்தமாட்டார். ஞானவானும் புத்திசாலியானவனுமாவதைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

தேவனுடைய அமைதிக்குப்பின் என்ன?

அவன் வியாதியாயிருக்கிறதாக அவர் கேள்விப்பட்டபொழுது, தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டுநாள் தங்கினார். யோவான் 11:6.

சிறந்த கருத்துள்ள அமைதியினால் தேவன் உங்களில் நம்பிக்கை வைத்திருக்கிறாரா? தேவனுடைய அமைதிகள்தான் அவருடைய பதில்கள். பெத்தானியாவிலுள்ள அந்த வீட்டில் முழு அமைதி நிறைந்திருந்த அந்த நாட்களை எண்ணிப்பாருங்கள்! அந்த நாட்களைப்போன்றிருக்கிற ஏதாவது அனுபவம் உங்கள் வாழ்க்கையில் உண்டா? அந்த நிலையில் உங்களோடு தேவன் இடைபடமுடியுமா? அல்லது, இன்னும் நீங்கள் வெளிப்படையான பதிலுக்காகக் கேட்கிறீர்களா? நீங்கள் கேட்கிற ஆசீர்வாதங்களில்லாமல் இனியும் மேற்கொண்டு செல்லமாட்டீர்களானால், தேவன் அவைகளை உங்களுக்குத் தருவார்; அவரைக்குறித்த அதிசயமான அறிவுக்குள் தேவன் உங்களைக் கொண்டுபோகிறார் என்பதின் அடையாளமே அவருடைய மௌனமாகும். தெளிவாகக் கேட்கக்கூடிய மறுமொழியைப் பெற்றுக்கொள்ளாததால் தேவனுக்கு முன்பாக நீங்கள் வருந்துகிறீர்களா? நீங்கள் விரிவான வெளிப்படுத்தலைத் தாங்கிக்கொள்வீர்கள் என்று தேவன் கண்டதினால், நம்பிக்கையிழப்பினாலல்ல, மகிழ்ச்சியினால்வரும் பூரண அமைதி மூலம் அவர் உங்களோடு மிகநெருக்கமாய் இடைபட்டார் என்று கண்டு கொள்ளுவீர்கள். தேவன் உங்களிடம் அமைதியாயிருந்தால் அவரை ஸ்தோத்திரியுங்கள்; தம்முடைய நோக்கங்களின் முக்கிய ஒழுக்கோடு அவர் உங்களைக் கொண்டுபோகிறார். குறித்த காலத்தில் பதில் வெளிப்படுத்தப்படுவது தேவனுடைய இறையாண்மையைச் சார்ந்தது. காலம் அவருக்குப் பொருட்டல்ல. நான் தேவனிடம் அப்பத்தைக் கேட்டேன், அவர் எனக்குக் கல்லைத் தந்தார் என்று கொஞ்சக்காலம் நீங்கள் சொல்லுகிறீர்கள்? அவர் அப்படிச் செய்யவில்லை; அவர் உங்களுக்கு ஜீவ அப்பத்தைத் தந்தார் என்பதை இன்று காண்கிறீர்கள்.

தேவனுடைய அமைதியின் தொற்றுதல் உங்களில் பரவி, தேவன் என்னைக் கேட்டிருக்கிறார் என்று நான் அறிவேன் என்னும் பூரண நம்பிக்கை அடைவதே அவரது அமைதியைக்குறித்த அற்புதமான காரியம். அவர் கேட்டிருக்கிறார் என்பதற்குச் சான்று அவருடைய அமைதி. ஜெபத்திற்கு மறுபடியாகத் தேவன் உங்களை ஆசீர்வதிப்பார் என்று நீங்கள் கருதும்வரை, அவர் உங்களை ஆசீர்வதிப்பார்; ஆனால் அமைதியின் கிருபையை அவர் ஒருபோதும் உங்களுக்குத் தரமாட்டார். பரம பிதாவை மகிமைப்படுத்துவதற்காகவே ஜெபம் என்னும் அறிவுக்குள் இயேசுகிறிஸ்து உங்களைக் கொண்டுவருவாரேயானால் அவருடைய நெருக்கத்தின் முதல் அடையாளமாகிய அமைதியை அவர் உங்களுக்குத் தருவார்.

தேவனுடைய நீண்ட சுவடுகளில் கால்வைப்பது

ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான். ஆதி.5:24.

வாழ்க்கையின் அசாதாரண வேளைகளில் ஒரு மனிதன் என்ன செய்கிறார் என்பதல்ல, மகாச் சிறப்பானதும் உணர்ச்சிபூர்வமானதொன்றும் இல்லாத சாதாரண வேளைகளில் அவர் என்ன செய்கிறார் என்பதுவே அவருடைய மார்க்கம்சார்ந்த வாழ்க்கைக்கும் பண்புக்குமுரிய உரைகல். மேடையில் நிற்கும்போதல்லாமல் சாதாரண காரியங்களில் ஒரு நபர் காண்பிக்கிற மனநிலையில்தான் அவருடைய தகுதி வெளிப்படுத்தப்படுகிறது (யோவான் 1:36). தேவனுடைய நீண்ட சுவடுகளில் கால்வைப்பது வேதனையான காரியம்; அது ஆவிக்குரிய நிலையில் சக்தியைத் திரும்பப் பெறுவது என்பதாம். தேவனோடு நடக்கக் கற்றுக்கொள்ளுவதில் அவருடைய நீண்ட சுவடுகளில் கால்வைப்பது எப்போதும் கடினம்; ஆனால், நாம் அப்படிக் கால்வைத்துவிட்டால் தன்னைத்தானே வெளிப்படுத்துகிற ஒரே தனித்தன்மை தேவனுடைய ஜீவன் மாத்திரமே. தேவனோடுள்ள ஆளத்துவ ஐக்கியத்தில் ஒரு தனி நபர் பார்க்கமுடியாதவராகிறார்; தேவனுடைய நீண்ட சுவடுகளும் வல்லமையும் மாத்திரமே வெளிப்படுத்தப்படுகின்றன.

தேவனோடு நீண்டசுவடுகள் எடுத்துவைப்பது கடினமான காரியம்; ஏனெனில், நாம் அவரோடு நடக்க ஆரம்பிக்கும்போது, நாம் மூன்று அடிகள் எடுத்துவைக்குமுன்னமே அவர் முந்திச் சென்றுவிடுகிறார் என்று கண்டுகொள்ளுகிறோம். காரியங்களைச் செய்வதில் அவருக்கு வெவ்வேறு வழிகளுண்டு; அவருடைய வழிகளில் நாம் பயிற்சியும் கட்டுப்பாடும் பெற வேண்டும். இயேசுவைக்குறித்து, அவர் இளக்காரிப்பதுமில்லை, பதறுவதுமில்லை என்று கூறப்பட்டுள்ளது; ஏனெனில், அவர் ஒருபோதும் தமது தனிப்பட்ட கண்ணோட்டத்தில் செயல்படவில்லை, எப்போதும் பிதாவின் கண்ணோட்டத்திலேயே செயலாற்றினார்; அவ்வாறு செய்ய நாம் கற்றுக் கொள்ளவேண்டும். ஆவிக்குரிய உண்மை சூழ்நிலையினாலேயேதவிர அறிவுக்குரிய ஆய்வினால் கற்றுக்கொள்ளப்படுவதில்லை. காரியங்களை நாம் பார்க்கிற முறையின் சூழ்நிலையைத் தேவனுடைய ஆவியானவர் மாற்றுகிறார், அப்போது, முன்னர் ஒருபோதும் கூடாதிருந்த காரியங்கள் இப்போது சாத்தியமாக ஆரம்பிக்கின்றன. தேவனுடைய அடிச்சுவடுகளில் நடப்பது என்பதின் பொருள் அவரோடு ஐக்கியம்கொள்வது என்பதுதவிர வேறொன்றுமில்லை. அந்த அனுபவத்தை அடைய நீண்ட காலமாகும்; ஆனாலும், சளைக்காமல் செயல்படவேண்டும். தற்சமயம் வேதனை கூடுதலாயிருப்பதால் விட்டுவிடாதேயுங்கள்; வேதனையோடு தொடர்ந்து செயல்படுங்கள், சிறிது காலத்திற்குள் உங்களுக்கு புதிய தரிசனமும் புதிய குறிக்கோளும் உண்டென்பதை நீங்கள் கண்டுகொள்வீர்கள்.

தனிப்பட்ட அதைரியமும் ஆளத்துவ விசாலமும்

மோசே தன் சகோதரரிடத்தில் போய், அவர்கள் சுமைசுமக்கிறதைப் பார்த்து. யாத்.2:11.

தன்னுடைய ஜனங்கள் கொடுமைப்படுத்தப்படுவதை மோசே கண்டு அவர்களை விடுதலைசெய்யவேண்டிய நபர் அவர்தான் என்று உறுதியாய் உணர்ந்தார்; அவருடைய சொந்த ஆவியின் நியாயமான கோபத்தில் அவர்களுக்குச் செய்யப்பட்ட தவறுகளைச் சரிசெய்ய ஆரம்பித்தார். தேவனுக்காகவும் நியாயத்துக்காகவும் அவர் செய்த முதல் தாக்குதலுக்குப் பின் வெற்று அதைரியத்துக்குள் மோசே விரட்டப்பட தேவன் அனுமதித்தார்; தேவன் அவரை நாற்பது ஆண்டுகள் ஆடுகளை மேய்க்கும்படி வனாந்தரத்திற்கு அனுப்பினார். அக்காலத்தின் இறுதியில் தேவன் மோசேக்கு தரிசனமாகி, போய்த் தன்னுடைய மக்களை அழைத்துவரும்படிக் கட்டளையிட்டார்; அதற்கு மோசே, போக நான் எம்மாத்திரம்? என்று பதிலளித்தார். மக்களை விடுவிக்கவேண்டிய நபர் அவர்தான் என்று ஆரம்பத்தில் மோசே எண்ணினார்; ஆனால், முதலாவது தேவனிடமிருந்து அவர் பயிற்சியும் கட்டுப்பாடும் கற்கவேண்டியிருந்தது. தனிப்பட்ட நிலையில் அவர் செய்தது சரியே; ஆனால், தேவனோடுள்ள ஐக்கியத்தைக் கற்றுக்கொள்ளுமட்டும் அந்த வேலைக்குரிய நபர் அவரல்ல.

நாம் தேவதரிசனத்தையும், தேவன் என்ன தேவைப்படுகிறார் என்ற தெளிவான அறிவையும் பெற்றிருக்கலாம், எனவே, அந்தக் காரியத்தைச் செய்ய ஆரம்பிக்கிறோம்; அப்போது தேவன் எல்லாக் காரியங்களையும் பொருட்படுத்தாமல் விட்டதுபோல, மோசேயின் நாற்பது ஆண்டு வனாந்தர வாழ்க்கையின் அனுபவம்போன்று நமக்கு நேரிடலாம்; நாம் முற்றிலும் அதைரியப்படும்போது, தேவன் மறுபடியும் வந்து அவருடைய அழைப்பைப் புதுப்பிக்கிறார்; அப்போது நடுக்கம் உண்டாகிறது; நாம், நான் எம்மாத்திரம் என்போம். இருக்கிறவராகவே இருக்கிறேன் என்பவர் அனுப்பினார் என்கிற தேவனுடைய முதலாம் நீண்ட சுவட்டை நாம் கற்றுக்கொள்ளவேண்டும். தேவனுக்கான நமது தனிப்பட்ட முயற்சி துணிகரம் என்பதைக் கற்றுக் கொள்ளவேண்டும்; நம்முடைய தனித்தன்மை தேவனோடுள்ள ஆளத்துவ உறவால் தானாகப் பிரகாசிக்கிறதாக ஆக்கப்படவேண்டும் (மத்.3:11 பார்க்க). காரியங்களின் தனிப்பட்ட நிலையில் நாம் தீர்மானிக்கிறோம்; இதைத்தான் நாம் செய்யவேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்ற தரிசனம் நமக்கு உண்டு; ஆனால், தேவனுடைய காலடிகளுக்குள் நம்முடைய கால்களை நாம் வைக்கவில்லை. நீங்கள் அதைரியத்தின் காலம்வழியாகக் கடந்து செல்லுகிறீர்களானால், முன்னால் பெரிய ஆளத்துவ விசாலமுண்டு.

அருட்பணியாளருக்குரிய ஆதாரம்

வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளுக்கும்.....உபதேசம் பண்ணுங்கள். மத்.28:18-20.

அருட்பணியாளர் விடுக்கும் வேண்டுகோளின் அடிப்படை இயேசு கிறிஸ்துவின் அதிகாரமேயொழிய பிறமார்க்கத்தாரின் தேவையல்ல. நாம் தேவனுக்காகச் செய்யும் முயற்சிகளில் நமக்கு உதவிசெய்கிற நபராகவே நம்முடைய ஆண்டவரை எண்ணிப்பார்க்க வாய்ப்புண்டு. நம் ஆண்டவர் பூரண இறையாண்மைபெற்ற மிக உன்னதமான கர்த்தராகத் தம்முடைய சீஷர்களுக்குமேலாகத் தம்மை வைக்கிறார். நாம் போகாவிட்டால் பிறமார்க்கத்தார் அழிந்துபோவார்கள் என்று அவர் கூறவில்லை, நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளுக்கும் உபதேசம்பண்ணுங்கள் என்று மாத்திரமே அவர் கூறுகிறார். என்னுடைய தெய்வீகத்தைக்குறித்த வெளிப்படுத்தலில் செல்லுங்கள்; என்னைக்குறித்த ஜீவனுள்ள அனுபவத்திலிருந்து கற்பித்து உபதேசியுங்கள் என்பதே அவர் கூற்று.

பதினொரு சீஷர்களும், கலிலேயாவிலே இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள் (வச.16). கிறிஸ்துவின் அகிலாண்ட இறையாண்மையை நான் அறியவேண்டுமானால் அவரையும் அவரோடு நான் எவ்வாறு தனித்திருப்பது என்பதையும் அறிந்துகொள்ளவேண்டும்; நான் தரித்திருக்கிற பெயருக்குரிய நபரை ஆராதிக்க நான் நேரம் எடுக்க வேண்டும்; என்னிடத்தில் வாருங்கள்--இயேசுவை சந்திக்கும் இடமதுவே. நீங்கள் வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறீர்களா? எத்தனை அருட்பணியாளர் அவ்வாறிருக்கிறார்கள்! அகிலாண்ட இறைவனின் அந்த அற்புத வார்த்தைகளை ஆலோசனைக் கூடுகையில் நாம் பயன்படுத்துகிறோம்; அவை இயேசுவின் சீஷர்களுக்கு அவர் கூறிய வார்த்தைகள்.

ஆகையால் நீங்கள் போய்: போ என்பது பிழைத்திரு என்றே பொருட்படுகிறது. எப்படிச் செல்லவேண்டுமென்பதின் விளக்கம் அப்.1:8. எருசலேமுக்கும் யூதேயாவுக்கும் சமாரியாவுக்கும் செல்லுங்கள் என்றல்ல, இந்த இடங்களிலெல்லாம் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றே இயேசு கூறினார். போகிறதை ஏற்படுத்த அவர் பொறுப்பெடுக்கிறார்.

நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால்:--நம்முடைய சொந்த வாழ்க்கையில் தொடர்ந்து செல்லும் வழி இதுவே. நாம் எங்கே வைக்கப்படுகிறோம் என்பது முக்கியமல்ல, தேவனே நாம் செல்லுமிடத்தைத் திட்டமிடுகிறார்.

அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன் என்று பவுல் கூறினார்; நீங்கள் மரிக்கும்வரைத் தொடர்ந்துசெல்லுவது அவ்வாறுதான்!

அருட்பணிச் செய்தியின் ஆதாரம்

நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார். 1 யோவான் 2:2.

அருட்பணிச் செய்தியின் ஆதாரம் கிறிஸ்து இயேசுவின் கிருபா தாரபலியே. ஆரோக்கியமளித்தல், இரட்சித்தல், பரிசுத்தமாக்குதல்போன்ற இயேசுகிறிஸ்துவின் செயலின் எந்தப் பகுதியையும் எடுத்துக்கொள்வோம்; அவைகளில் எல்கையற்றது ஒன்றுமில்லை; ஆனால், இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்பது வரையறையற்றது. நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலி என்ற முறையில் இயேசுகிறிஸ்துவின் எல்லையற்ற முக்கியத்துவமே அருட்பணிச் செய்தி; இந்த வெளிப்படுத்துதலில் ஊறியிருக்கும் நபர்தான் அருட்பணியாளன்.

அருட்பணிச் செய்தியின் ஆதாரம் கிறிஸ்துவின் இரக்கமோ, அவருடைய அன்போ, அவர் தேவனைப் பிதாவாக வெளிப்படுத்தியதோ அல்ல, அவருடைய வாழ்க்கையால் கிடைக்கும் பாவமன்னிப்பின் சிறப்பே. அவர் நம்முடைய பாவங்களுக்கான கிருபாதாரபலி என்பதே மகாப்பெரிய எல்லையற்ற முக்கியத்துவம். அருட்பணிச் செய்தி ஒரு நாட்டுக்குமட்டும் உரியதல்ல; அது தனி ஜாதிகளுக்கும் தனி மனிதருக்கும் மட்டுமுள்ளதல்ல; அது சகல உலகத்துக்கும் உரியது. பரிசுத்த ஆவியானவர் எனக்குள் வரும்போது அவர் என் தனிவிருப்பங்களைக் கவனிப்பதில்லை; என்னைக் கர்த்தராகிய இயேசுவோடுள்ள ஐக்கியத்துக்குள் கொண்டுவருகிறார்.

தன்னுடைய ஆண்டவரும் எஜமானுமாகியவரின் உரிமைகளோடு இணைக்கப்பட்டுள்ளவரே அருட்பணியாளர்; தன் சொந்தக் கருத்துக்களை அவர் அறிவிக்கக்கூடாது, தேவ ஆட்டுக்குட்டியையே அறிவிக்கவேண்டும். இயேசுகிறிஸ்து எனக்கு என்ன செய்திருக்கிறார் என்பதைக் கூறுகிற ஒரு தனிப்பட்ட குழுவில் அங்கமாயிருப்பது மிகவும் எளிது; தெய்வீக சுகமளிப் பதற்கோ, ஒரு குறிப்பிட்டமுறைப் பரிசுத்தமாகுதலுக்கோ அல்லது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்துக்கோ பக்தனாய் இருப்பதும் மிகவும் எளிது. கிறிஸ்து எனக்குச் செய்திருக்கிறவைகளை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ என்று பவுல் கூறாமல், சுவிசேஷத்தை நான் பிரசங்கியா திருந்தால், எனக்கு ஐயோ என்றுதான் அவர் கூறினார். இது தான் சுவிசேஷம்--இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி.

எஜமானுடைய கட்டளையின் ஆதாரம்

ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள். மத்.9:38.

அருட்பணியாளரின் பிரச்சனைக்குரிய திறவுகோல் தேவனுடைய கரத்திலிருக்கிறது; அந்தத் திறவுகோல் ஜெபமேதவிர இன்று ஊழியமென்று பொதுவாகப் புரிந்துகொள்ளப்படுகிறதின்படியான ஊழியமல்ல; ஏனெனில், அந்த ஊழியம் தேவன்மீது சிந்தை பதிக்கிறதைத் தவிர்க்கிறது என்று பொருட்படலாம். அருட்பணியாளரின் பிரச்சனைக்குரிய திறவுகோல் பகுத்தறிவாகிய திறவுகோல் அல்ல, மருத்துவத்துறையின் திறவுகோல் அல்ல, கலாச்சாரம், கல்வியாகிய திறவுகோல் அல்ல, மற்றும் சுவிசேஷப்பணியாகிய திறவுகோல்கூட அல்ல. அத்திறவுகோல் ஜெபமே. அறுப்புக்கு எஜமானிடம் வேண்டிக்கொள்ளுங்கள். இயல்பாக, ஜெபம் நடைமுறைக்கு ஒவ்வாதது, அது அபத்தமானது; சாதாரணப் பகுத்தறிவின் கண்ணோட்டத்தில் ஜெபம் மதிகேடானது என்பதை நாம் உணரவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் கண்ணோட்டத்தில் இருந்தது தனிநாடுகள் அல்ல, உலகமே. நம்மில் எத்தனைபேர் மக்களைக்குறித்துக் கருதுதல் இல்லாமல் இயேசுகிறிஸ்துவாகிய ஒரே நபரை மாத்திரம் கருத்தில்கொண்டு, ஜெபிக்கிறோம்? துன்பம் மற்றும் பாவ உணர்வினால் உருவாக்கப்படுகிற அறுவடை அவருக்கே சொந்தம்; இந்த அறுவடைக்காகத்தான் அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி நாம் ஜெபிக்கவேண்டும். நம்மைச் சுற்றியுள்ள மக்கள் அறுப்புக்கு விளைந்திருக்கும்போது நாம் சுறுசுறுப்பான வேலைகளில் மிகுதியான கரிசனைகொள்கிறோம்; அவர்களில் ஒருவரையும் நாம் அறுவடைசெய்யாமல், மிதமிஞ்சி எழுச்சியூட்டும் செயல்களில் நமது ஆண்டவரின் காலத்தை வீணாக்குகிறோம். உங்கள் தந்தையின் வாழ்க்கையிலோ, உங்கள் சகோதரனுடைய வாழ்க்கையிலோ நெருக்கடி வருகிற தாயிருக்கட்டும்; இயேசுகிறிஸ்துவுக்காக அறுவடைசெய்ய ஒரு ஊழியனாக நீங்கள் அங்கிருப்பீர்களா? நான் செய்யவேண்டிய சிறப்பான வேலை ஒன்று இருக்கிறதென்று கூறுகிறீர்கள்; செய்யவேண்டிய சிறப்பான வேலை ஒன்றும் ஒரு கிறிஸ்தவனுக்கு இல்லை. ஒரு கிறிஸ்தவன் இயேசுகிறிஸ்துவுக்குச் சொந்தமாயும் தன் எஜமானிலும் பெரியவனல்லாத ஒருவனாயும், தான் செய்யவேண்டுமென்று உத்தேசிக்கிறதை அவருக்குக் கட்டளையிடாத வனாயும் இருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறான். நமது ஆண்டவர் ஒரு சிறப்பான பணிக்கும் அழைக்கவில்லை, அவர் தம்மிடமே அழைக்கிறார். ஆதலால், அறுப்புக்கு எஜமானை வேண்டிக்கொள்ளுங்கள்; அவர் சூழல்களைத் திட்டமிட்டு உங்களை வெளியே உந்தித் தள்ளுவார்.

பெரிய கிரியைகள்

நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் ... இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். யோவான் 14:12.

பெரிய கிரியைகளைச் செய்ய ஜெபம் நம்மைத் தகுதிப்படுத்துவ தில்லை; ஜெபம்தான் பெரிய கிரியை. தேவனுடைய ஊழியத்துக்கு நம்மை ஆயத்தஞ்செய்வதற்கு நம்முடைய உயர்வான ஆற்றல்களின் பகுத்தறிவுப் பயிற்சி என்று நாம் ஜெபத்தைக்குறித்து எண்ணுகிறோம். ஜெபம் மீட்பாகிய அற்புதத்தை என்னில் செயல்படுத்துகிறது, அது தேவனுடைய ஆற்றலால் மீட்பாகிய அற்புதத்தை மற்றவர்களில் உருவாக்குகிறது என்பது இயேசு கிறிஸ்துவின் போதனை. கனி நிலைத்திருக்கும் வழி ஜெபத்தின்மூலந்தான்; ஆனால் அந்த ஜெபம் என்னுடைய வியாகுலத்தையல்ல, மீட்பின் வியாகு லத்தை அடிப்படையாகக்கொண்டது என்பதை நினைவுகூரவேண்டும். ஒரு குழந்தைதான் ஜெபத்திற்குப் பதில் பெற்றுக்கொள்ளுகிறது; ஒரு ஞானவான் பெற்றுக்கொள்வதில்லை.

ஜெபந்தான் போர்; நீங்கள் எங்கிருக்கிறீர்களென்பது அக்கறையற்ற காரியம். தேவன் எவ்வழியில் சூழல்களைத் திட்டம்பண்ணினாலும் கடமை ஜெபிப்பதே. நான் இருக்கிற இடத்தில் நான் ஒரு பயனுமற்றவன் என்கிற எண்ணத்துக்கு இடங்கொடாதீர்கள்; ஏனெனில் நீங்கள் எங்கு இல்லையோ அந்த இடத்தில் நிச்சயமாக உங்களால் எந்தப் பயனுமிருக்கமுடியாது. சூழ்நிலைகளுக்குள் தேவன் உங்களை எங்கே வைத்தாலும் ஜெபியுங்கள், எப்போதும் அவரிடம் பேசிக்கொண்டேயிருங்கள். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் என்றார் இயேசு. நாம் கிளர்ச்சியான உணர்ச்சி பெறாவிட்டால் ஜெபிக்கமாட்டோம், அதுதான் ஆவிக்குரிய சுயநலத்தின் தீவிரமான நிலை. தேவன் காட்டும் வழியில் நாம் உழைக்கவேண்டும்; அவர் ஜெபி என்று சொல்லுகிறார். ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.

கடினமாக உழைக்கும் ஒரு மனிதனுடைய வேலையில் கிளர்ச்சி யூட்டுகிறதொன்றுமிராது; ஆனால், மேதையுடைய கருத்துக்களைச் சாத்தி யமாக்குவது உழைக்கும் மனிதனே; அதுபோல, தன் எஜமானின் கருத்துக் களைச் சாத்தியமாக்குவது உழைக்கும் பரிசுத்தவானே. நீங்கள் ஜெபத்தில் கடினமாய்ப் போராடுங்கள், அப்போது தேவனுடைய கண்ணோட்டத்தில் பலன்கள் எக்காலமும் கிடைத்துக்கொண்டேயிருக்கும். உங்களுக்கான கட்டளைகளை இயேசுகிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பழக்கம் உடையவர்களாயிருந்த ஒரே காரணத்துக்காக உங்களால் அறுவடை செய்யப்பட்ட ஆத்துமாக்களைத் திரைச்சீலை உயர்த்தப்படும்போது கண்டு கொள்ளுவது எத்தனை ஆச்சரியமாயிருக்கும்!

அருட்பணியாளரின் பக்திக்குரிய ஆதாரம்

அவருடைய நாமத்தினிமித்தம் புறப்பட்டுப்போனார்கள். 3 யோவான் 7.

தமக்குநேரான அன்பு எவ்வாறு தன்னைத்தானே வெளிப்படுத்த வேண்டுமென்று நம்முடைய ஆண்டவர் நம்மிடம் கூறியுள்ளார். நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? என் ஆடுகளை மேய்ப்பாயாக. அதாவது, ஏனைய மக்களில் உங்களுக்குள்ள அக்கறையோடு என்னை ஒன்றிப்பதல்ல, பிறரில் எனக்குள்ள அக்கறையோடு நீங்கள் ஒன்றிக்கவேண்டும் என்றே இயேசு கூறுகிறார். 1 கொரி.13:4-8 இந்த அன்பின் தன்மையைக் குறிப்பிடுகிறது; இது தன்னைத்தானே வெளிப்படுத்துகிற தேவனுடைய அன்பு. இயேசுவுக்கான என்னுடைய அன்பின் சோதனை நடைமுறைக்குரிய ஒன்றாகும்; மற்றவை எல்லாம் உணர்ச்சிபூர்வமான பிதற்றல்.

என் இருதயத்தில் தேவஅன்பை ஊற்றுகிற பரிசுத்த ஆவியால் என்னில் உருவாக்கப்பட்ட தெய்வீகக் கிரியையாகிய மீட்பே இயேசுகிறிஸ்துவுக்கு நேரான பக்தியாகும்; அந்த அன்பு வெற்றிகரமாக என் வழியாகச் செயல்பட்டு நான் சந்திக்கிற எல்லாரையும் தொடுகிறது. பகுத்தறிவின் உண்மைகளெல்லாம் தேவன் இருக்கிறார் என்று கூறுவது பொய்யென்று நிரூபித்து, விடியற்காலத்து மூடுபனியைவிடக் கூடுதல் வல்லமை அவருக்கு இல்லையென்று அறிவித்தாலும், அவருடைய நாமத்துக்கு நான் உண்மையுள்ளவனாயிருப்பேன்.

காரியங்களிலிருந்து புறம்பாகப் பிரிந்து வாழ்வதல்ல, நம்முடைய ஆண்டவர் ஒருவரைத்தவிர வேறு ஒன்றோடும், வேறு யாரோடும் பற்றற்றிருப்பதே அருட்பணியாளரின் பக்திக்குரிய ஆதாரத்தின் கருத்தாகும். நம்முடைய ஆண்டவர் சாதாரணக் காரியங்களோடு பிரமாதமாகத் தெடர்பு கொண்டிருந்தார்; ஆனால், அவர் தேவனைத்தவிர வேறு காரியங்களோடு உள்ளாகப் பற்றற்றிருந்தார். புறம்பாகப் பற்றற்றிருப்பது பலவேளைகளில் நாம் புறம்பாக அகன்றிருக்கிற காரியங்களோடு இரகசியமாக ஆழமான பிணைப்புக்கொண்டிருப்பதற்குரிய அடையாளமாகும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தன்மைக்கு ஒருமுகமாகத் தன் ஆத்துமாவைத் திறந்துவைப்பதே அருட்பணியாளரின் பக்தி. சாதாரண மனிதராயிருந்தும், ஆண்டவர்மீது பரிசுத்த ஆவியால் உருவாக்கப்பட்ட முன்னுரிமையான பக்திகொண்டுள்ள ஆண்களையும் பெண்களையுமே நமது ஆண்டவர் தம்முடைய பொறுப்புக்களுக்கு அனுப்புகிறார்.

கவனிக்கப்படாத இரகசியம்

என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல. யோவான் 18:36.

புதிய ஏற்பாட்டிலிருந்து வராததும், தேவனோடு தனித்த வாழ்க்கை செய்யாததும், எல்லையில்லாத சக்தியையும் நடபடிகளையும் வற்புறுத்துகிற உலக அமைப்புக்களிலிருந்து வருகிறதுமான செயல்முறை உழைப்பைக் குறித்த கருத்தே இக்காலத்தில் இயேசுகிறிஸ்துவின் பெரிய எதிரியாகும். முக்கியத்துவம் தவறான காரியத்துக்குக் கொடுக்கப்படுகிறது. தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது,.....தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்று இயேசு சொன்னார்; இது மறைவான, புரியாத காரியம். சுறுசுறுப்பான கிறிஸ்தவ ஊழியன் பலவேளைகளில் காட்சிப்பொருளாக வாழுகிறான். வாழ்க்கையின் வல்லமையை வெளிப்படுத்துவது அதிக உட்புறத்திலும் உட்புறமானதே.

நாம் வாழுகிற பக்தியின் யுகத்துக்குரிய தன்மையின் தொந்தரவை நாம் விட்டொழியவேண்டும். நாம் மிகவும் உயர்வாகக் கருதுகிற பிரமாண்டமான செயல்களின் அழுத்தமும் அவசரமும் நமது ஆண்டவரின் வாழ்க்கையில் இருந்ததில்லை; சீஷன் தன் போதகனைப்போல இருக்கவேண்டும். மக்களுக்கானப் பகிரங்கப் பயன்பாடல்ல, இயேசுகிறிஸ்துவோடு ஆளத்துவ உறவுகொள்வதே அவருடைய ராஜ்யத்தின் மையக் கருத்தாகும்.

இந்த வேதாகமப் பயிற்சிக் கல்லூரியின் நடைமுறைச் செயல்கள் அல்ல இதன் பலம்; இங்கு நீங்கள் தேவனுக்குமுன்பாக அவருடைய சத்தியத்தில் ஊறியிருக்கிறீர்கள் என்பதிலேயே இதன் முழுப்பலமும் அடங்கியிருக்கிறது. தேவன் எங்கு உங்களுடைய சூழ்நிலைகளைத் திட்டமிடுகிறார் என்பதைப்பற்றி கருத்து எதுவும் உங்களுக்கில்லை; உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ எத்தகைய கடுமுயற்சி நீங்கள் மேற்கொள்ளவேண்டும் என்ற ஒரு அறிவும் உங்களுக்கில்லை; தேவனுடைய மீட்பின் மிகப்பெரிய அடிப்படை உண்மைகளை கிரகித்துக்கொள்வதற்குப்பதில், தேவைக்குமேல் சுறுசுறுப்பானச் செயல்பாடுகளில் உங்கள் காலத்தை வீணாக்கினால் அழுத்தம் வரும்போது நீங்கள் உடைந்துபோவீர்கள்; ஆனால், தேவனுக்குமுன்பாக அவருடைய சத்தியத்தில் ஊறியிருக்கும் இக்காலத்தை, நடைமுறையில் முடியாததாயினும், தேவனில் உறுதியாக வேர்கொள்ளுவதற்கும் நிலைத்திருப்பதற்கும் செலவிட்டால், உங்களுக்கு என்ன நேரிட்டாலும் நீங்கள் அவருக்கு உண்மையுள்ளவர்களாய்த் தொடர்ந்திருப்பீர்கள்.

தேவனுடைய சித்தம் என்னுடைய சித்தந்தானா?

நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. 1 தெச.4:3.

என்னைப் பரிசுத்தமாக்க தேவனுக்கு சித்தமுண்டா என்பதல்ல, அது என்னுடைய சித்தந்தானா என்பதே சிந்திக்கவேண்டிய காரியம். பிராயச்சித்தப்பலியினால் சாத்தியமாக்கப்பட்டவைகள் எல்லாவற்றையும் தேவன் என்னில் நிறைவேற்ற நான் அனுமதிக்க எனக்குச் சித்தமுண்டா? இயேசு எனக்குப் பரிசுத்தமாகுதலாக்கப்படவும், என்னுடைய மாம்ச சரீரத்தில் அவருடைய ஜீவன் வெளிப்பட அனுமதிக்கவும் எனக்குச் சித்தந்தானா? ஐயோ, நான் பரிசுத்தமாக்கப்பட ஏங்குகிறேன் என்று கூறுவதைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். நீங்கள் ஏங்கவில்லை; ஏங்குவதை நிறுத்துங்கள், பரிசுத்தமாக்கப்படுவதைக்குறித்து நடவடிக்கை எடுங்கள்--என் கைகளில் ஒன்றும் கொண்டுவரவில்லை என்று சொல்லுங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குப் பரிசுத்தமாகுதலாக்கப்படும்படி சந்தேகமற்ற விசுவாசத்தோடு அவரை ஏற்றுக்கொள்ளுங்கள்; அப்போது பிராயச்சித்தப்பலியாகிய சிறந்த அற்புதம் உங்களில் நிறைவேறும். இயேசு சாத்தியமாக்கியவைகள் யாவும் அவர் நிறைவேற்றியதின் ஆதாரத்தில் தேவனுடைய இலவசமான அன்பின் தானத்தால் என்னுடையதாக்கப்பட்டன. இரட்சிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்ட ஆத்துமா என்ற நிலையில் என்னுடைய மனப்பான்மை அளவிடற்கரிய தாழ்மையுள்ள பரிசுத்தமாயிருக்கவேண்டும் (பெருமையுள்ள பரிசுத்தம் என்று ஒன்று இல்லை); அந்தப் பரிசுத்தம் வியாகுலத்தோடுள்ள பாவ உணர்வு, மற்றும் சொல்லிமுடியாத அவமானம், அவமதிப்பு என்பவற்றின் அடிப்படையிலிருக்கவேண்டும்; அதோடு நான் தேவனைக்குறித்து சற்றும் அக்கறைப்படாதிருந்தபொழுது, அவர் என்னுடைய இரட்சிப்புக்காகவும் பரிசுத்தமாகுதலுக்காகவும் எல்லாம் செய்து நிறைவேற்றி, அவ்வாறு அவர் தம்முடைய அன்பை எனக்கு விளங்கப்பண்ணினார் (ரோமர் 5:8) என்ற வியப்புக்குரிய உணர்வின் அடிப்படையிலுமிருக்கவேண்டும். நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு ஒன்றும் நம்மைப் பிரிக்கமாட்டாதென்று பவுல் கூறியதில் ஆச்சரியமொன்றுமில்லை.

பரிசுத்தமாகுதல் என்னை இயேசுகிறிஸ்துவோடும் அவருக்குள் தேவனோடும் ஒன்றாக்கிவிடுகிறது; இது கிறிஸ்து செய்த சிறந்த பிராயச்சித்தப்பலியினாலேயே நிறைவேறுகிறது. காரணத்தின் இடத்தில் விளைவை ஒருபோதும் வைக்காதேயுங்கள். என்னிலுள்ள விளைவு கீழ்ப்படிதலும் சேவையும் ஜெபமுமே; அது பிராயச்சித்தப்பலியினால் என்னில் நிறைவேற்றப்பட்ட அதிசயப் பரிசுத்தமாகுதலுக்கான நாவடைத்த நன்றி மற்றும் துதித்தலின் பலனே.

உணர்ச்சிவேகத்தால் வழிகாட்டுதல்

உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்துங்கள். யூதா 20.

நம்முடைய ஆண்டவரைப்பொறுத்தமட்டும் உணர்ச்சிவேகத்தின் தன்மையோ அல்லது உணர்ச்சிவசப்படாத நிலையோ இருந்ததில்லை; பதட்டத்துக்குள் ஒருபோதும் சிக்காத அமைதியான பலம்தான் அவருக்கு இருந்தது. நம்மில் அநேகரும் தேவனுடைய வழியிலே அல்ல, நம்முடைய மனப்போக்கிலேயே நம்முடைய கிறிஸ்தவத்தை விருத்திசெய்கிறோம். உணர்ச்சிவேகம் இயற்கை வாழ்க்கையில் ஒரு தனித்தன்மை; ஆனால், நமது ஆண்டவர் ஒருபோதும் அதைப் பொருட்படுத்தவில்லை; ஏனெனில், அது ஒரு சீஷனுடைய வாழ்க்கையின் விருத்தியைத் தடைசெய்கிறது. தேவஆவியானவர் எவ்வாறு உணர்ச்சிவேகத்தைத் தடுக்கிறார் என்று கவனியுங்கள்! அவருடைய தடைகள் உடனடியாக நம்மைநாமே நியாயப்படுத்த விரும்பும் தன்னுணர்வுடைய மதிகேட்டின் நெருக்கடியைக் கொண்டு வருகிறது. குழந்தையில் உணர்ச்சிவேகம் சரி; ஆனால், அது ஆணிலும் பெண்ணிலும் அழிவு உண்டாக்குகிறது. உணர்ச்சிவேகமுள்ள மனிதர் எப்போதும் சிடுசிடுப்பானவர். உணர்ச்சிவேகம் கட்டுப்பாட்டினால் உள்ளுணர்வாகப் பயிற்சிக்கப்படவேண்டும்.

சீஷத்துவம் தேவனுடைய தெய்வீகக் கிருபையின்மேல் முழுவதும் கட்டப்படுகிறது. நீரில் நடப்பது உணர்ச்சிவேகத்தினாலுள்ள தைரியத்துக்கு எளிது, ஆனால், இயேசுகிறிஸ்துவின் சீஷன் என்ற நிலையில் உலர்ந்த தரையில் நடப்பது வேறு காரியம். பேதுரு இயேசுவிடம் செல்ல நீரின்மேல் நடந்தார்; ஆனால், தரையிலோ அவர் வெகுதூரத்தில் பின்சென்றார். நெருக்கடிகளை எதிர்கொள்ள நமக்குத் தேவகிருபை தேவையில்லை, அதற்கு மனித இயல்பும் சுயமரியாதையும் போதும், அவைகளினால் நாம் அழுத்தத்தைச் சிறப்பாகச் சந்திக்கலாம்; ஆனால், ஒவ்வொருநாளும் இருபத்திநான்கு மணிநேரமும் பரிசுத்தவானாக வாழவும், ஒரு சீஷனாகக் கடினமான உழைப்பினூடே கடந்து செல்லவும், இயேசுவின் சீஷன் என்ற நிலையில் சாதாரணமான, கவனிக்கப்படாத, புறக்கணிக்கப்பட்ட வாழ்க்கை நடத்தவும் தெய்வீகக் கிருபை தேவைப்படுகிறது. தேவனுக்காக அசாதாரணமானக் காரியங்களை நாம் செய்யவேண்டுமென்பது நம்மோடு உடன் பிறந்தது; ஆனால், நாம் அப்படிச் செய்யவில்லை. நாம் சாதாரணக் காரியங்களில் அசாதாரணமாகவும், கீழ்த்தரமான தெருக்களிலும் அற்பமான மக்கள்மத்தியிலும் பரிசுத்தமாகவும் இருக்கவேண்டும்; இது ஐந்து நிமிடங்களில் கற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

ஆவியானவரின் சாட்சி

ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். ரோமர் 8:16.

நாம் தேவனிடம் வரும்போது பேரம்பேசும் ஆவியைப் பெற்றிடும் ஆபத்தில் இருக்கிறோம்; நாம் என்ன செய்யவேண்டுமென்று தேவன் சொல்லுகிறவைகளை நாம் செய்துமுடிக்குமுன் நமக்கு ஆவியானவரின் சாட்சி தேவை. தேவன் ஏன் எனக்குத் தம்மை வெளிப்படுத்தவில்லை? அவரால் முடியாது; அவர் செய்யமாட்டார் என்றல்ல, அவரால் முடியாது; ஏனெனில், உங்களை ஆண்டவருக்கு முழுவதும் ஒப்படைக்காததுவரை நீங்கள் தடையாயிருக்கிறீர்கள். நீங்கள் உங்களை ஒப்படைத்தவுடனே அவர் தமக்குத்தாமே சாட்சி கொடுக்கிறார்; அவர் உங்களுக்குச் சாட்சி கொடுக்கமுடியாது, ஆனால், அவர் உங்களுக்குள்ளிருக்கிற தம்முடைய சொந்தத் தன்மைக்கு உடனடி சாட்சிகொடுக்கிறார். நிகழ்வுக்குமுன் நீங்கள் சாட்சி பெற்றிருப்பீர்களானால் அது பாசஉணர்ச்சிகளில்தான் முடிவடைந் திருக்கும். நீங்கள் மீட்பின் அடிப்படையில் செயல்பட்டு, தேவனோடு விவா திப்பதாகிய செருக்கை நிறுத்தினதும், தேவன் உங்களுக்குச் சாட்சி கொடுக் கிறார். காரணகாரியம் ஆராய்வதையும் விவாதம் செய்வதையும் நீங்கள் கைவிட்டவுடன்தானே தேவன் தாம் செய்துள்ளவைகளுக்குச் சாட்சிகொடுக் கிறார்; அப்போது அவரைக் காக்கவைத்திருந்த உங்கள் துணிகரத்திற்காக நீங்கள் திகைப்படைவீர்கள். பாவத்திலிருந்து தேவனால் விடுதலைசெய்யக் கூடுமா என்று நீங்கள் விவாதிப்பீர்களானால், ஒன்றில் விடுதலை செய்ய அவரை அனுமதியுங்கள், அல்லது அவரால் முடியாது என்று அவரிடம் கூறுங்கள். இந்த நபரையும் அந்த நபரையும் மேற்கோள் காட்டாதீர்கள், மத்தேயு 11:28-ஐ முயற்சித்துப் பாருங்கள்--என்னிடத்தில் வாருங்கள். நீங்கள் வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறீர்களானால் வாருங்கள்; நீங்கள் பொல்லாதவர்கள் என்று அறிவீர்களானால் கேளுங்கள் (லூக்.11:13).

நம்முடைய இயல்பான பகுத்தறிவின் தீர்மானங்களினால் வரும் அறிவை ஆவியானவரின் சாட்சி என்று தவறாக எண்ண ஏதுவுண்டு; ஆனால், ஆவியானவர் அவருடைய சொந்தத் தன்மைக்கும், மீட்பின் கிரியைக்கும் மாத்திரமே சாட்சிகொடுக்கிறார், நம்முடைய பகுத்தறிவுக்கல்ல. நம்முடைய பகுத்தறிவுக்கு அவரைச் சாட்சியாக்க முயற்சிப்போமானால் நாம் அந்தகாரத்திலும் தடுமாற்றத்திலும் இருக்கிறோமென்பதில் எந்த ஆச்சரியமுமில்லை. எல்லாவற்றையும் தூர எறிந்துவிடுங்கள், தேவனில் நம்பிக்கைவையுங்கள், அப்போது அவர் சாட்சிகொடுப்பார்.

அதில் சிறிதளவும் இல்லை!

ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழைய வைகள் ஒழிந்துபோயின. 2 கொரி.5:17.

நம்முடைய ஆண்டவர் நமது முன்தீர்மானங்களை ஒருபோதும் சகித்துக்கொள்வதில்லை, அவர் அவைகளை அடக்கி ஒடுக்குகிறார், அவர் அவைகளைத் தடுக்கிறார். நம்முடைய குறிப்பிட்ட முன்தீர்மானங்களில் தேவனுக்குச் சிறப்பான ஆர்வமுண்டு என்று நாம் எண்ணுகிறோம்; தேவன் மற்ற மக்களோடு எவ்வாறு இடைபடவேண்டும் என்று நாம் அறிகிறதுபோல அவர் நம்மோடு இடைபடமாட்டார் என்று நாம் அதிக நிச்சயங்கொள்ளுகிறோம். பிற மக்களோடு மிகவும் கடுமையான முறையில் தேவன் இடைபடவேண்டும், ஆனால் என் முன்தீர்மானங்கள் மிகவும் சரியானவை என்று மெய்யாகவே அவர் அறிவார் என்று எண்ணுகிறோம். நம்முடைய முன்தீர்மானங்கள் சிறிதளவும் சரியானவையில்லை என்பதை நாம் கற்றுக்கொள்ளவேண்டும். தேவன் நம்முடைய முன்தீர்மானங்களை ஆதரிப்பதற்குப்பதில், அவற்றை வேண்டுமென்று அழித்துப்போடுகிறார். நம்முடைய முன்தீர்மானங்கள் தேவனுடைய முன்கருதலால் முழுவதும் அழிக்கப்படுவதும், அதை அவர் எவ்வாறு செய்கிறார் என்பதைக் கவனிப்பதும் நம்முடைய அறநெறிக் கல்வியின் பாகமாகும். தேவனுக்கு நாம் கொண்டுவருகிற எந்தக் காரியத்துக்கும் அவர் மதிப்பளிப்பதில்லை; அவர் நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறது ஒரேயொரு காரியம் மாத்திரமே, அது நம்முடைய நிபந்தனையற்ற ஒப்படைப்பே.

நாம் மறுபடியும் பிறக்கும்போது அவருடைய புதுச்சிருஷ்டியை பரிசுத்த ஆவியானவர் நம்மில் செயல்படுத்த ஆரம்பிக்கிறார், பழைய ஒழுங்குகளில் சிறிதளவேனும் மீந்திருக்காத காலம் வரும்; பழைய பயபக்தி போகிறது, காரியங்களைக்குறித்த பழைய மனப்பான்மை மாய்கிறது; இவை எல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது. இச்சை இல்லாததும் சுயநலம் இல்லாததும், கேலிகளை வகைவைக்காததுமான வாழ்வையும், மற்றும் சினமடையாததும் தீங்கு நினையாததும் எப்போதும் இரக்கங்கொள்ளுகிறதுமான அன்பையும் நாம் எவ்வாறு பெற்றுக்கொள்ளப்போகிறோம்? அதற்குரிய ஒரேவழி பழைய வாழ்க்கையில் சிறிதளவேனும் மீந்திருக்க அனுமதியாமல், இனி ஒருக்காலும் தேவனுடைய ஆசீர்வாதங்களையல்ல, அவரையே நாடும் பூரண நம்பிக்கையை அவரில் வைப்பதே. தேவன் தம்முடைய ஆசீர்வாதங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டாலும், அவரில் நாம் வைத்துள்ள நம்பிக்கை பாதிக்கப்படாத அனுபவத்திற்கு நாம் வந்திருக்கிறோமா? தேவன் செயல்படுகிறதை நாம் கண்டுவிட்டால், நேரிடும் காரியங்களைக்குறித்து நாம் விசாரப்படமாட்டோம்; ஏனெனில், உலகம் காணக் கூடாத பரலோகப் பிதாவையே நாம் உண்மையாக நம்புகிறோம்.

காட்சிக்கோணம்

கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணுகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். 2 கொரி.2:14.

தேவனுக்காக ஊழியஞ்செய்யும் ஒரு நபரின் காட்சிக்கோணம் உச்சிக்கு எவ்வளவு அருகில் அவர் ஏறமுடியுமோ அங்கிருக்கக்கூடாது, அந்த உச்சியாயிருக்கவேண்டும். தேவனுடைய மனப்பான்மையை ஊக்கத்தோடு பராமரிக்கக் கவனமாயிருங்கள், அது ஒவ்வொரு நாளும் சிறிது சிறிதாகச் செய்யப்படவேண்டும்; வரையறைக்குட்பட்டுச் சிந்தியாதீர்கள். வெளியேயுள்ள எந்த ஆற்றலும் காட்சிக்கோணத்தைத் தொடமுடியாது.

நாம் ஒரேயொரு நோக்கத்துக்காகவே இங்கிருக்கிறோம் என்பதே நாம் பேணவேண்டிய கருத்து; அதாவது, தேவனுடைய வெற்றிப் பரிவாரத்தில் கைதிகளாய் இருப்பதே. நாம் தேவனுடைய காட்சியகத்தில் இல்லை, இயேசுகிறிஸ்துவுக்கு நம்முடைய வாழ்க்கையை முற்றிலும் சிறைப்படுத்திவிட்டோம் என்கிற ஒரே காரியத்தை வெளிப்படுத்தவே நாம் இங்கிருக்கிறோம். நான் இயேசுவுக்காகப் போர்செய்துகொண்டு தனித்து நிற்கிறேன் என்பதும், நான் கிறிஸ்துவின் திட்டத்தை நிர்வகித்துக்கொண்டு அவருக்காக இந்தப் பொறுப்பை ஏற்கவேண்டும் என்பதுமான மற்றக் கருத்துக்கள் எவ்வளவு அற்பமானவை! நான் ஒரு வெற்றிவீரனுடைய பரிவாரத்தில் இருக்கிறேன்; பாடுகள் எவைகளாயினும் பரவாயில்லை, நான் எப்போதும் வெற்றியிலேயே நடத்தப்படுகிறேன் என்று பவுல் கூறுகிறார். இந்தக் கருத்து நம்மில் நடைமுறையில் செயல்படுத்தப்பட்டுள்ளதா? இயேசுகிறிஸ்துவுக்கு எதிராகக் கையுங்களவுமாய்ப் பிடிக்கப்பட்டக் கலகக் காரனாயிருந்தத் தன்னைத் தேவன் எடுத்து அவருக்குக் கைதியாக்கினதே பவுலின் இரகசிய மகிழ்ச்சி; இப்போது இங்கு வாழ்வது அதற்காக மட்டுமே. ஆண்டவருடைய கைதியாயிருப்பதே பவுலின் மகிழ்ச்சி; அதைத்தவிர அவருக்குப் பரலோகத்திலோ, பூலோகத்திலோ வேறொரு ஆர்வமுமில்லை. வெற்றிபெறுவதைக்குறித்து ஒரு கிறிஸ்தவன் பேசுவது வெட்கத்துக்குரிய காரியம். வெற்றி எப்போதும் வெற்றிவீரருடையதாயிருக்கும்படி வெற்றிவீரர் நம்மை முழுவதும் ஆட்கொள்ளவேண்டும்; அப்போது நாம் அவருக்குள் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாகிறோம்.

நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம் என்று பவுல் கூறினார். நாம் இயேசுவின் நறுமணத்தால் நிறைந்திருக்கிறோம்; நாம் எங்கெங்கு சென்றாலும் தேவனுக்கு அற்புதமான புத்துணர்வு அளிக்கிறவர்களாயிருக்கிறோம்.

காரியங்களின் நித்திய ஆர்வம்

எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லா மானேன். 1 கொரி.9:22.

இழிவான காரியங்களுடைய கூட்டத்தின் மத்தியில் தேவனுடைய சிறந்த மனிதனாகவோ மனுஷியாகவோ எவ்வாறிருக்கவேண்டுமென்று கிறிஸ்தவ ஊழியக்காரர் கற்றுக்கொள்ளவேண்டும். நான் வேறு எங்காவது இருந்திருந்தால் நலமாயிருக்குமே என்று ஒருபோதும் வேண்டுதல் செய்யா தீர்கள். எல்லா தேவமனிதர்களும், அவர்களுக்குத் தேவன் கொடுத்திருக்கிற செய்தியினால் அசாதாரணமாக்கப்பட்ட சாதாரண மனிதர்களே. அறிவுக் கேற்றவாறு நமது மனதிலும், அன்புக்கேற்றவாறு நமது இருதயங்களிலும் சரியான செய்தியில்லாவிட்டால் தேவனுக்குப் பயனுள்ள நிலையிலிருந்து நாம் தூக்கி எறியப்படுவோம். தேவனுடைய ஊழியர்களாகும்படி நாமாகத் தெரிந்துகொள்ளவில்லை. அநேகர் வேண்டுமென்றே ஊழியர்களாகும்படித் தேர்வுசெய்கிறார்கள்; ஆனால் அவர்களிடம் தேவனுடைய சர்வவல்லமை யுள்ள கிருபைக்குரியதும், அவருடைய வல்லமையான வார்த்தைக்குரியது மான ஒரு செய்தியும் இல்லை. இயேசுகிறிஸ்து செய்துநிறைவேற்ற வந்த அந்தச் சிறந்த காரியத்தில் பவுலுடைய முழு இருதயமும் முழு மனதும் முழு ஆத்துமாவும் ஈடுபட்டிருந்தது; அந்தக் காரியத்தை அவர் ஒருபோதும் மறக்கவில்லை. இயேசுகிறிஸ்து, சிலுவையில் அறையப்பட்ட அவர் என்னும் ஒரே மையக் கருத்தை நாம் எதிர்கொள்ளவேண்டும்.

நான் உங்களைத் தெரிந்துகொண்டேன் என்று இயேசு கூறினார். இந்த மகத்துவமானக் குறிப்பை உங்கள் விசுவாசப்பிரமாணத்தில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் தேவனைப் பற்றிக்கொள்ளவில்லை, அவரே உங்களைப் பற்றிக்கொண்டார். இங்கு, இந்தக் கல்விக்கூடத்தில் தேவன் கிரியை செய்கிறார்; அவர் வளைக்கிறார், உடைக்கிறார், உருவாக்குகிறார், அவர் தமது விருப்பப்படியே செய்கிறார். ஏன் அவர் இதைச் செய்கிறார் என்பது நமக்குத் தெரியாது; அவர் இதை ஒரேயொரு நோக்கத்திற்காக மட்டுமே செய்கிறார்--இது என்னுடைய மனிதன் இது என்னுடைய மனுஷி என்று சொல்லும் வாய்ப்புக்காகவே. தேவன் நம்மை இயேசுகிறிஸ்துவாகிய கன்மலையின்மேல் ஊன்றியதுபோல மற்ற மனிதரையும் ஊன்றத்தக்கதாக நாம் அவர் கரத்திலிருக்கவேண்டும்.

ஊழியனாவதற்காக நீங்கள் ஒருபோதும் தேர்வுசெய்யாதீர்கள்; ஆனால், தேவனுடைய அழைப்பை உணர்ந்தபின் நீங்கள் வலதுபுறமோ இடதுபுறமோ திரும்பினால் உங்களுக்கு ஐயோ! அழைப்பு வருமுன் அவர் ஒருபோதும் உங்களிடம் செய்திராதவைகளை (அழைப்பு வந்தபின்) அவர் உங்களுக்குச் செய்வார்; மற்ற மக்களிடம் அவர் செய்யாதவைகளை உங்களுக்குச் செய்வார். அவருடைய சித்தம் நிறைவேறட்டும்.

அருட்பணியாளன் என்றால் என்ன?

பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன். யோவான் 20:21.

இயேசுகிறிஸ்து தேவனால் அனுப்பப்பட்டதுபோல, இயேசுகிறிஸ்துவால் அனுப்பப்படுகிறவனே அருட்பணியாளன். மக்களின் தேவைகளல்ல, இயேசுவின் கட்டளைதான் முக்கியமான சிறந்த குறிப்பு. தேவனுடைய பணிக்கு நம்மை ஏவும் ஆதாரம் முன்னாலல்ல பின்னாலிருக்கிறது. ஏவுதலை முன்னுக்கு வைத்து, எல்லாவற்றையும் நமக்கு முன்னே கொண்டுவந்து, வெற்றியைக்குறித்த நமது கருத்துக்கு யாவும் ஒத்திருக்கச் செய்வதே இன்றுள்ள மனப்பாங்காகும். புதிய ஏற்பாட்டில் ஏவுதல் நமக்குப் பின்னால் வைக்கப்படுகிறது, அது கர்த்தராகிய இயேசுவே. சிறந்த காரியும் அவருக்கு உண்மையாய் இருப்பதும் அவருடைய ஊழியத்தைக் கொண்டு நிறைவேற்றுவதுமே.

கர்த்தராகிய இயேசுவோடும் அவருடைய கண்ணோட்டத்தோடும் உள்ள தனிநபர் பிணைப்பு புறக்கணிக்கப்படக்கூடாத ஒரே காரியமாகும். இயேசுவினால் அனுப்பப்பட்டதின் கருத்தை மனித அனுதாபம் முற்றும் மேற்கொள்ளும்வரை மக்களின் தேவைகளால் தேவனுடைய அழைப்பு அழிக்கப்படுவது அருட்பணியில் பேராபத்தாகும். தேவைகள் ஏராளம், நிலைமைகள் மிகக் குழப்பமானவை என்பதால் மனதின் எல்லாத் திறனும் தடுமாறிச் செயலிழக்கிறது. மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதோ, அவர்களுக்குக் கல்வியளிப்பதோ, அவர்களின் தேவைகளைச் சந்திப்பதோ அல்ல எல்லா அருட்பணிமுயற்சியின் அடிப்படையான ஒரே முக்கியமானக் காரணம் என்பதை நாம் மறந்துபோகிறோம்; நீங்கள் போய் சகல ஜாதிகளுக்கும் உபதேசம்பண்ணுங்கள் என்ற இயேசுகிறிஸ்துவின் கட்டளையே அருட்பணியின் முதலும் முக்கியமுமான காரணமாகும்.

தேவனால் பயன்படுத்தப்பட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும்போது, அவர்களுக்கு எத்தகைய அற்புதமான கூர்மதியுடைய ஞானமிருந்தது! தேவன் எவைகளைத் தேவைப்படுகிறார் என்பதை அவர்கள் எவ்வளவு பூரணமாய் அறிந்துகொண்டார்கள்! என்று சொல்லுவதுதான் சாதாரணமான மனோபாவம். அவர்களிலிருந்த புத்திநுட்பம் தேவனுடைய மனதேயொழிய மனித ஞானமேயல்ல. தேவ ஞானத்தையும், அவருடைய தெய்வீக ஆதாரங்களையும் மட்டும் நம்பக் கூடிய அளவு அறிவீனமான குழந்தைகளைப்போன்ற மக்களுக்குத் தேவன் அளித்த தெய்வீக வழிநடத்துதலை நாம் பாராட்டவேண்டியவர்களாயிருக்க, மனித ஞானத்தை நாம் பாராட்டுகிறோம்.

அருட்பணியின் முறை

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள். மத்.28:19.

போய் ஆத்துமாக்களை இரட்சியுங்கள் என்று இயேசுகிறிஸ்து கூறவில்லை (ஆத்தும இரட்சிப்பு தெய்வீகச்செயல்); அதற்குப்பதில், போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்றே அவர் கூறினார்; நீங்கள் சீஷராயிராவிட்டால் பிறரை சீஷராக்கமுடியாது. சீஷர்கள் தங்கள் முதல் ஊழியப் பயணத்திலிருந்து திரும்பி வந்தபோது, பிசாசுகள் அவர்களுக்குக் கீழ்ப்படிந்ததினால் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தார்கள்; இயேசு அவர்களைப் பார்த்து, வெற்றியான சேவையில் மகிழ்ச்சியடையவேண்டாம்; மகிழ்ச்சியின் பெரிய இரகசியம் நீங்கள் என்னோடு சரியான தொடர்புகொண்டிருப்பதே என்று கூறினார். தேவனுடைய அழைப்புக்கு உண்மையாய் நிலைத்திருப் பதும், ஆண்களையும் பெண்களையும் இயேசுவுக்கு சீஷர்களாக்குவதே தன்னுடைய ஒரே நோக்கமென்று உணர்வதுந்தான் அருட்பணியாளருக்கு மிகவும் முக்கியமானது. தேவனிடத்திலிருந்து தோன்றாததும், நம்முடைய கருத்துக்கு மக்களை மனந்திரும்பப்பண்ணவேண்டுமென்ற விருப்பத்தில் தோன்றுகிறதுமான ஆத்துமாக்களைக்குறித்தத் தீவிர ஆர்வமுண்டு.

மக்கள் இரட்சிக்கப்படுவது கடினம், பின்வாங்கிப்போனவர்களைத் திருப்பிக் கொண்டுவருவது எளிதல்ல, காய்ப்புப்பிடித்த அக்கறையின்மை யாகிய தடுப்புச்சுவர் காணப்படுகிறது போன்றவைகளின் காரணத்தினால் அருட்பணியாளர்களுக்குச் சவால் வருவதில்லை; இயேசுகிறிஸ்துவோடுள்ள அவர்களது ஆளத்துவ உறவின் நிலையிலேயே சவால் உண்டாகிறது. இதைச் செய்ய என்னால் கூடும் என்று நீங்கள் நம்புகிறீர்களா? நமது ஆண்டவர் இந்தக் கேள்வியை நிதானத்துடன் கேட்கிறார், நாம் சந்திக்கிற ஒவ்வொரு தனிப்பட்டக் காரியத்திலும் இக்கேள்வி நம்மை எதிரிடுகிறது. ஒரே பெரிய சவால்--உயிர்த்தெழுந்த என் ஆண்டவரை நான் அறிந்திருக் கிறேனா? எனக்குள் வாசஞ்செய்யும் அவருடைய ஆவியானவரின் வல்ல மையை நான் அறிந்திருக்கிறேனா? இயேசுகிறிஸ்து கூறியவைகளில் நம்பிக்கை வைக்கத்தக்கதாக தேவனுடைய பார்வையில் அந்த அளவு ஞானவானாயும் உலகத்தின்படி அதே அளவு புத்தியீனனாயும் இருக்கி றேனா? அல்லது கிறிஸ்து இயேசுவில் வைக்கும் அளவற்ற நம்பிக்கை யாகிய அருட்பணியாளருக்குரிய ஒரே அழைப்பான மகாப்பெரிய தெய்வீகப் பதவியை நான் உதறித்தள்ளுகிறேனா? வேறு ஏதாவது முறைமையை நான் எடுத்துக்கொண்டால், சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக் கிறது; ஆகையால், நீங்கள் போங்கள் என்று நமது ஆண்டவர் கொடுத்தத் திட்டத்தைவிட்டு முற்றிலும் வழிவிலகிவிட்டேன்.

விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்

நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப் பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. ரோமர் 5:10.

நம்புவதினால் நான் இரட்சிக்கப்படுவதில்லை; நம்புவதினால் நான் இரட்சிக்கப்படுகிறேன் என்று நான் எண்ணுகிறேன். மனந்திரும்புதல் அல்ல என்னை இரட்சித்தது. கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் என்ன செய்திருக் கிறார் என்பதை நான் உணருகிறேன் என்பதின் அடையாளமே மனந்திரும் புதல். ஆபத்து என்னவென்றால், என்னுடைய கீழ்ப்படிதலும் என்னுடைய அர்ப்பணமுமே தேவனோடு என்னை ஒப்புரவாக்கிற்று என்று காரணத்துக் குப்பதில் காரியத்துக்கு முக்கியம்கொடுப்பது. அது ஒருபோதும் சரியல்ல! எல்லாவற்றிற்குமுன்னதாக, கிறிஸ்து மரித்ததினாலேயே நான் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டேன். நான் தேவனுக்குநேர் திரும்பி, நான் ஒத்துக்கொள் ளக்கூடியதாக அவர் வெளிப்படுத்துகிறதை விசுவாசத்தோடு நான் ஏற்றுக் கொள்ளும்போது, இயேசுகிறிஸ்து செய்த மிகவும் பெரிய பிராயச்சித்தப்பலி தேவனோடுள்ள சரியான உறவுக்கு என்னை உடனடியாகத் தள்ளுகிறது; என் பாவத்துக்காக நான் துக்கப்பட்டதாலோ, அல்லது நான் மனந்திரும்பிய தாலோ அல்ல, இயேசு செய்திருக்கிற காரியத்தினால் தேவகிருபையின் தெய்வீக அற்புதத்தினால் நான் நீதிமானாக அங்கீகரிக்கப்படுகிறேன். இக்காரியத்தைத் தேவஆவியானவர் எங்கும் பிரகாசிக்கும் ஒளியோடு காண்பிக்கிறார்; நான் இரட்சிக்கப்பட்டது எவ்வாறு நடந்தது என்று எனக்குத் தெரியாவிட்டாலும், நான் இரட்சிக்கப்பட்டேன் என்று எனக்குத் தெரியும்.

தேவனுடைய இரட்சிப்பு மனித அறிவின்மேல் நிற்காமல், இயேசு நிறைவேற்றிய தியாகப்பலியான மரணத்தின்மேல் நிலைநிற்கிறது. நமது ஆண்டவரின் பிராயச்சித்தப்பலியின்காரணமாக நாம் மறுபடியும் பிறக்க முடியும். பாவிகளான ஆண்களும் பெண்களும் புதிய சிருஷ்டிகளாக மாற்றப்படமுடியும்; அது அவர்களில் உண்டாகும் மனந்திரும்புதலினாலோ விசுவாசத்தினாலோ அல்ல, எல்லா அனுபவத்துக்கும் முன்னதாக இயேசு கிறிஸ்துவில் தேவன் நிறைவேற்றிய அதிசயமான கிரியையினாலேயே. நீதிமானாக்கப்படுதலுக்கும் பரிசுத்தமாக்கப்படுதலுக்குமான தகர்க்கமுடியாத பாதுகாவல் தேவன்தாமே. நாமாக இந்தக் காரியங்களை நிறைவேற்றவேண் டியதில்லை; பிராயச்சித்தப்பலியினாலே அவைகள் நிறைவேற்றப்பட்டாயிற்று. தெய்வீக அற்புதத்தால் இயற்கைக்கு அப்பாலுள்ளது இயற்கையாகிறது; முடிந்தது என்ற வார்த்தைகளில் இயேசுகிறிஸ்து ஏற்கனவே செய்தவை எல்லாம் மெய்யாயிற்று.

பதிலாள் நிலை

நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, ... நமக்காகப் பாவமாக்கினார். 2 கொரி.5:21.

இயேசு அனுதாபத்தினால் நமது பாவங்களுக்காக மரித்தார் என்பதே அவரின் மரணத்தைக்குறித்த நவீன கருத்தாகும். ஆனால், புதிய ஏற்பாட்டின் கருத்து என்னவென்றால், அவர் அனுதாபத்தாலல்ல, நமக்குப்பதிலாக அவர் நம்முடைய பாவத்தைச் சுமந்தார் என்பதே. அவர் பாவமாக்கப்பட்டார். இயேசு மரித்த காரணத்தால் நம்முடைய பாவங்கள் நீக்கப்பட்டன; அவருடைய மரணத்தின் விளக்கம் நம்மீதுள்ள அனுதாபம் அல்ல, பிதாவுக்குநேரான கீழ்ப்படிதலே. நாம் கீழ்ப்படிந்ததினாலோ, நாம் காரியங்களை விட்டுவிட வாக்குறுதியளித்ததாலோ அல்ல, கிறிஸ்துவின் மரணத்தினாலேயே நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம், வேறு எந்தக் காரணத்தாலுமல்ல. தேவன் பிதாவாய் இருக்கிறாரென்றும், அவர் கிருபை உள்ளவரென்றும் வெளிப்படுத்தவே இயேசுகிறிஸ்து வந்தார் என்று நாம் கூறுகிறோம்; ஆனால், புதிய ஏற்பாடோ அவர் உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்க வந்தாரென்று கூறுகிறது. இயேசுவை இரட்சகராக அறிமுகம் செய்யப்பட்டவர்களுக்கே அவர் தேவனைப் பிதாவாக வெளிப்படுத்துகிறார். பிதாவை வெளிப்படுத்துகிற ஒருவராக ஒருபோதும் இயேசுகிறிஸ்து உலகத்துக்குத் தம்மைக்குறித்துக் கூறாமல், இடறுதலுக்கேதுவான கல்லாகவே தம்மைக்குறித்துக் கூறினார் (யோவான் 15:22-24). யோவான் 14:9 அவருடைய சீஷர்களுக்குக் கூறப்பட்டது.

இயேசு எனக்காக மரித்தார், எனவே நான் தண்டனையிலிருந்து முற்றிலும் விடுதலையாகிவிட்டேன் என்று புதிய ஏற்பாட்டில் ஒருபோதும் போதிக்கப்படவில்லை. புதிய ஏற்பாட்டில் போதிக்கப்படுகிறது என்னவெனில், அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் (என் இடத்தில் அவர் மரித்தார் என்றல்ல), அவருடைய மரணத்தோடு ஐக்கியப்படுவதால் பாவத்திலிருந்து நான் விடுதலையடையமுடியும் என்பதும், அவருடைய சொந்த நீதி எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதுமே. புதிய ஏற்பாட்டில் கற்பிக்கப்பட்டிருக்கிற பதிலாள் நிலை இரட்டிப்பானது: பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் என்பதும், நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகிறோம் என்பதுமே. கிறிஸ்து எனக்குள் உருவாக்கப்படவேண்டுமென்று நான் தீர்மானிக்காவிட்டால் அவர் எனக்குரியவர் என்று சொல்லமுடியாது.

விசுவாசம்

விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம். எபி.11:6.

பகுத்தறிவுக்கு முரண்பாடான விசுவாசம் வெறித்தனம்; விசுவாசத்துக்கு முரண்பாடான பகுத்தறிவு நியாயவாதம். விசுவாச வாழ்க்கை இந்த இரண்டையும் சரியான தொடர்புக்குள் கொண்டுவருகிறது. பகுத்தறிவு விசுவாசம் அல்ல; விசுவாசம் பகுத்தறிவு அல்ல. ஒன்று இயற்கைக்குரியது மற்றது ஆவிக்குரியது, ஒன்று உணர்ச்சிக்குரியது மற்றது அகத்தூண்டு தலைச் சார்ந்தது. இயேசுகிறிஸ்து சொன்னதொன்றும் பகுத்தறிவல்ல, அது வெளிப்படுத்தப்பட்ட அறிவே; பகுத்தறிவு எட்டமுடியாத கரைகளை அது சென்றடைகிறது. விசுவாசம் வாழ்க்கையில் நடைமுறையிலாவதற்கு முன் விசுவாசம் சோதிக்கப்படவேண்டும். சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். எனவே, என்ன நேரிட்டாலும் பரவாயில்லை; தேவனுடைய முன்கருதலின் அறிவியலால் இலட்சிய விசுவாசம் நடைமுறையாக மாற்றப்படுகிறது. தனிநபர் நிலையிலேயே விசுவாசம் எப்போதும் செயல்படுகிறது; தமது பிள்ளைகளில் இலட்சிய விசுவாசம் நிஜமாக்கப்படுவதைக் காண்பதே தேவனுடைய முழுநோக்கமாகும்.

பகுத்தறிவு வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்துக்கும் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட உண்மை உண்டு; அதனால் தேவன் யாராயிருக்கிறார் என்று நாம் விசுவாசிக்கிறோமோ அதை நடைமுறை அனுபவத்தில் நிரூபிக்கலாம். விசுவாசம் இயேசுகிறிஸ்துவுக்கு எப்போதும் முதலிடம் கொடுக்கிற பேராற்றலோடு செயல்படும் கொள்கையாகும்--ஆண்டவரே, நீர் இன்னின்னவைகளைச் சொல்லியிருக்கிறீர் (உ.ம். மத்.6:33), அது புத்தியீனமாய்த் தோன்றுகிறது, ஆயினும் உமது வார்த்தையின்படியே நான் துணிந்து செய்யப்போகிறேன் என்று கூறுவது. புத்திக்குரிய விசுவாசத்தைத் தனக்குச் சொந்த உடைமையாக மாற்றுவது சிலவேளைகளில் அல்ல, எப்போதும் போராட்டமே. நம்முடைய விசுவாசத்தைக் கற்பிப்பதற்காகத் தேவன் நம்மைச் சூழ்நிலைகளுக்குள் கொண்டுவருகிறார்; ஏனென்றால், எதில் விசுவாசம் வைக்கப்படுகிறதோ அதை நிஜமாக்குவதே விசுவாசத்தின் தன்மையாகும். நாம் இயேசுவை அறியுமட்டும் தேவன் பொருண்மையற்ற கருத்துமட்டும், அவரில் நாம் விசுவாசம்வைக்கமுடியாது. ஆனால், என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்று இயேசு கூறியதைக் கேட்டவுடனே நிஜமான ஒரு காரியத்தை நாம் பெற்றுக்கொள்ளுகிறோம், விசுவாசம் எல்லையற்றது. இயேசுகிறிஸ்துவினுடைய ஆவியின் வல்லமையால் முழு மனிதனும் தேவனோடுள்ள சரியான உறவுக்கு வருவதே விசுவாசம்.

விசுவாசத்தைப் பகுத்தறிதல்

கடுகு விதையளவு விசுவாசம். மத்.17:20.

நம்முடைய விசுவாசத்துக்காகத் தேவன் நமக்குப் பிரதிபலன் அளிக்கிறார் என்கிற கருத்து நமக்கு இருக்கிறது, ஆரம்பக்கட்டங்களில் அது அவ்வாறு இருக்கலாம்; ஆனால், விசுவாசத்தினால் நாம் ஒன்றையும் சம்பாதிப்பதில்லை. விசுவாசம் நம்மைத் தேவனோடு சரியான உறவுக்குள் கொண்டுவருகிறது; தேவனுக்கு அவருக்கான வாய்ப்பைக் கொடுக்கிறது. நீங்கள் பரிசுத்தவானானால், தன்னோடுள்ள தொடர்புக்குள் உங்களைக் கொண்டுவர தேவன் அடிக்கடி உங்கள் அனுபவத்தைப் பயனற்றதாக்க வேண்டியதுவரும். உங்கள் வாழ்க்கை தேவனுடைய ஆசீர்வாதங்களை உணர்ச்சிகரமாக அனுபவிக்கும் வாழ்க்கையல்ல, அது விசுவாச வாழ்க்கை என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். ஆரம்பத்தில் உங்கள் விசுவாச வாழ்க்கைக் குறுகியதும் தீவிரமுமானதாய், எந்த அளவு விசுவாசம் உண்டோ அந்த அளவு உணர்ச்சிகொண்டதாய் அமைந்திருந்தது; அதில் ஒளியும் இனிமையும் நிறைந்திருந்தன; நீங்கள் விசுவாசித்து நடப்பதற்கு உங்களைக் கற்பிக்கும்படி தேவன்தாமே அளித்த ஆசீர்வாதங்களை அவர் திரும்ப எடுத்துக்கொண்டார். உணர்ச்சிகரமான மகிழ்ச்சியும், பரபரப்பான சாட்சியும் நீங்கள் கொண்டிருந்த நாட்களில் இருந்ததைவிட இப்பொழுது நீங்கள் அவருக்கு அதிக விலைமதிப்பு உள்ளவர்கள்.

விசுவாசம் அதின் இயல்பின்படி பரிசோதிக்கப்பட்டேயாகவேண்டும்; விசுவாசத்தின் உண்மையான சோதனை என்னவென்றால் தேவனை நம்புவது நமக்குக் கடினமாய்த் தோன்றுவதல்ல, நம்முடைய மனதில் தேவனுடைய தன்மை தெளிவுபடுத்தப்படவேண்டும் என்பதே. விசுவாசம் அதன் நிறைவேறுதலில் வார்த்தைகளால் விவரிக்கமுடியாத கடுமையான தனிமையின் காலங்களின்வழியாகக் கடந்துசெல்லவேண்டும். விசுவாசச் சோதனையை வாழ்க்கையின் சாதாரணக் கட்டுப்பாட்டோடு குழப்பாதீர்கள். விசுவாசச் சோதனை என்று நாம் அழைக்கிற அதிகமும் உயிரோடிருப் பதின் தவிர்க்கமுடியாத விளைவுகளே. தேவனை மறுத்துப்பேசுகிற எல்லா வற்றுக்கும் எதிராகத் தேவன்மேல் நம்பிக்கை வைப்பதே வேதத்தில் கூறப்பட்டுள்ள விசுவாசமாகும்--தேவன் என்ன செய்தாலும், அவருடைய இயல்புக்கு நான் உண்மையுள்ளவனாயிருப்பேனென்று கூறுவதே. அவர் என்னைக் கொன்றுபோட்டாலும் அவரில் நம்பிக்கையாயிருப்பேன் என்பதே வேதம் முழுவதிலும் மிகவும் சிறப்பான விசுவாச அறிக்கையாகும்.

நீங்கள் உங்களுடையவர்களல்ல

நீங்கள் உங்களுடையவர்களல்லவென்று அறியீர்களா? 1 கொரி.6:19.

இயேசுகிறிஸ்துவின் பாடுகளோடுள்ள ஐக்கியத்திற்குள் கொண்டு வரப்பட்ட ஒரு மனிதனுக்கோ அல்லது மனுஷிக்கோ ஒரு தனிப்பட்ட வாழ்க்கை--உலகத்துக்குள் உலகம்--என்று ஒன்று இல்லை. தம்முடைய பரிசுத்தவான்களின் தனிப்பட்ட வாழ்க்கையைத் தேவன் உடைத்து, ஒருபுறம் உலகத்துக்கும் மறுபுறம் தமக்குமிடையே பெருஞ்சாலையாக மாற்றுகிறார். இயேசுகிறிஸ்துவோடு ஒருமைப்படாவிட்டால் ஒரு மனிதனும் இத்தகைய அனுபவத்தைச் சகித்துக்கொள்ளமுடியாது. நாம் நமக்காகப் பரிசுத்தமாக்கப்படவில்லை, சுவிசேஷத்தோடுள்ள ஐக்கியத்திற்குள் நாம் அழைக்கப்படுகிறோம்; நம்மோடு எந்தத் தொடர்பும் இல்லாத காரியங்கள் நடைபெறுகின்றன; தேவன் தம்மோடுள்ள ஐக்கியத்திற்குள் நம்மைக் கொண்டுவருகிறார். தம்முடைய சித்தம்போல அவர் செயல்படட்டும்; அதை நீங்கள் மறுப்பீர்களானால், உலகத்தில் தேவனுடைய மீட்புப் பணியில் நீங்கள் சிறிதளவாவது தேவனுக்குப் பயனுள்ளவர்களாயிருப்பதற்குப்பதில் நீங்கள் இடையூறாயும் முட்டுக்கட்டையாயும் இருப்பீர்கள்.

தேவனுடைய மீட்பின் நோக்கத்துக்காக அவருடைய சித்தம் நிறை வேறும் காலம் மட்டும் நமக்குத் தனிப்பட்டமுறையில் என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை என்கிற உண்மையான அடிப்படையில் தேவன் நம்மை ஸ்திரப்படுத்துவதே அவர் முதலாவது நம்மில் செய்யும் காரியமாகும். துயரங்கள்வழியாக நாம் ஏன் கடந்துசெல்லக்கூடாது? தம்முடைய குமார னோடு ஐக்கியங்கொள்ளத்தக்கதான முறைகளைத் தேவன் இந்த வாசல் களின்வழியாகத் திறக்கிறார். வேதனை முதல்முறைப் பற்றிப்பிடிக்கும்போதே நம்மில் பலரும் விழுந்து, நிலைகுலைந்துபோகிறோம்; தேவனுடைய நோக்கத்தின் வாசற்படியில் உட்கார்ந்து சுயபரிதாபத்தினால் நாம் மாண்டு போகிறோம்; கிறிஸ்தவ அனுதாபம் என்ற பெயரால் அறியப்படுவது நமது மரணப்படுக்கைக்குச் செல்ல நமக்கு உதவிசெய்கிறது. ஆனால், தேவன் அப்படிச்செய்வதில்லை. தம்முடைய குமாரனின் துளைக்கப்பட்ட கரத்தைப் பற்றிக்கொண்டு வந்து, என்னோடுள்ள உறவில் பிரவேசியுங்கள் எழும்பிப் பிரகாசியுங்கள் என்று கூறுகிறார். உடைந்த இருதயத்தின்மூலம் தேவன் தம்முடைய திட்டங்களை உலகில் நிறைவேற்றக்கூடுமானால் அவர் உங்கள் இருதயத்தை உடைத்ததற்காக அவருக்கு நன்றிசெலுத்துங்கள்.

அதிகாரமும் சுதந்திரமும்

நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள். யோவான் 14:15.

நம்முடைய ஆண்டவர் ஒருபோதும் கீழ்ப்படிதலை வலியுறுத்துகிற தில்லை; நாம் செய்யவேண்டியவைகளை மிகவும் அழுத்தமாக அவர் நம்மிடம் கூறுகிறார், ஆனால் நாம் அவைகளைச் செய்யும்படிச்செய்ய அவர் எந்த வழியையும் கையாளுவதில்லை. ஆவியின் ஒருமைப்பாட்டி னால் நாம் அவருக்குக் கீழ்ப்படியவேண்டும். ஆகையால்தான் சீஷத்துவத் தைக்குறித்து நம்முடைய ஆண்டவர் கூறியபொழுது, நீ விரும்பினாலன்றி செய்யத்தேவையில்லை என்னும் கருத்திலேயே பேசினார்; ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுக்கக்கடவன் என்றார்; தனக்கானத் தன் உரிமையை அவன் எனக்கு விட்டுக்கொடுக் கட்டும் என்பதே அதன் கருத்து. நம்முடைய ஆண்டவர் நித்திய காலத்தைக் குறித்தல்ல, இந்தக் காலக்கட்டத்தில் தனக்குப் பயனுள்ளவர்களாயிருக்கிற தைக்குறித்தே பேசினார், ஆகையால்தான் அவர் தொனி கண்டிப்பாய் இருந்தது. (லூக்.14:26பார்க்க). இவ்வார்த்தைகளைக் கூறியது யார் என்பதைத்தவிர்த்து ஒருபோதும் இவைகளை வியாக்கியானிக்கக்கூடாது.

ஆண்டவர் எனக்கு விதிகளைத் தருகிறதில்லை. ஆனால், அவர் தன்னுடைய எதிர்பார்ப்பை மிகவும் தெளிவாக்குகிறார்; அவரோடுள்ள என்னுடைய உறவு அன்பின் உறவாயிருக்குமானால் அவர் சொல்லுகிற எதையும் எந்தத் தயக்கமுமின்றி நான் செய்வேன். நான் தயங்கினால் அதன் காரணம் வேறொருவரை, அதாவது என் சுயத்தை அவருக்குப் போட்டியாக நேசிக்கிறதே. இயேசுகிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய அவர் எனக்கு உதவிசெய்யமாட்டார், நானாக அவருக்குக் கீழ்ப்படியவேண்டும்; நான் அவருக்குக் கீழ்ப்படியும்போது என் ஆவிக்குரிய முன்தீர்மானத்தை நிறை வேற்றுகிறேன். மொத்தத்தில் கவனிக்கப்படாததும் இழிவானதுமான அற்ப மான, முக்கியமற்ற சம்பவங்களால் என் தனிநபர் வாழ்க்கை நிறைந்திருக் கலாம்; ஆனால் யதேச்சையான சூழ்நிலைகளில் நான் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும்போது, அவைகள் நான் தேவனுடைய முகத்தைத் தரிசிக்க வழிசெய்யும் துளைகளாகின்றன; நான் (மறுமையில்) தேவனுக்குமுன் நிற்கும்போது என் கீழ்ப்படிதலினால் ஆயிரக்கணக்கான மக்கள் ஆசீர் வதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் காண்பேன். தேவனுடைய மீட்பு ஒரு ஆத்துமாவில் கீழ்ப்படிதலின் நிலைக்கு வரும்போது அது எப்போதும் படைக்கிறது. இயேசுகிறிஸ்துவுக்கு நான் கீழ்ப்படிந்தால் தேவனுடைய மீட்பு என் வழியாய்ப் பிற வாழ்க்கைகளுக்குப் பாயும். ஏனெனில், கீழ்ப்படிதலின் செயலுக்குப் பின்னால் சர்வவல்ல தேவனுடைய ஈடுபாடு இருக்கிறது.

இயேசுவின் கொத்தடிமை

கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத் திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். கலாத்.2:20.

என் சுதந்தரத்தை என் கைகளால் உடைத்து, கர்த்தராகிய இயேசு வின் இறையாண்மைக்குச் சரணடைவதென்பதே இந்த வாக்கியத்தின் பொருளாகும். எனக்காக வேறுயாரும் இதைச் செய்யமுடியாது, நானாகவே இதைச் செய்யவேண்டும். ஆண்டுக்கு முன்னூற்று அறுபத்தைந்துமுறை ஆண்டவர் என்னை இந்த இடம்வரைக் கொண்டுவரலாம், ஆனால் அதன்வழி அவர் என்னை உந்தித்தள்ள முடியாது. தேவனில்லாத தனிநபர் சுதந்தரமாகிய என் மேல்தோட்டை உடைப்பதும், அவரோடு ஒன்றிப்பதற்கு என் ஆளத்துவத்தை விடுதலைசெய்வதுமே அதன் பொருளாகும்; அது என் கருத்துக்களுக்கல்ல, இயேசுவுக்குநேரான முழுமையான பக்திக்கே. அந்த நிலைக்கு நான் வந்துவிட்டால் எந்தத் தர்க்கத்துக்கும் இடமில்லை. என்னிமித்தம் என்று கிறிஸ்து கூறும் அர்ப்பண வாழ்க்கையின் கருத்தை நம்மில் மிகச்சிலரே புரிந்திருக்கிறோம். இரும்புபோன்ற பரிசுத்தவான்களை உருவாக்குவது அதுவேதான்.

அந்த உடைவு வந்திருக்கிறதா? மீந்தவை எல்லாம் பக்திக்குரிய மோசடி. தீர்மானிக்கவேண்டிய ஒரே காரியம்: நான் முயற்சியை விட்டுவிடு வேனா? நான் இயேசுகிறிஸ்துவுக்குச் சரணடைவேனா? உடைவு எவ்வாறு வரவேண்டுமென்று எந்த நிபந்தனைகளும் விதிக்காதிருப்பேனா? என்பது தான். என் அகஉணர்விலிருந்து நான் உடைக்கப்படவேண்டும்; அந்த நிலை அடைந்தவுடன் தெய்வீக ஒன்றிப்பின் யதார்த்தம் நடைபெறுகிறது; தேவஆவியானவரின் சாட்சி தெளிவானது--நான் கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்.

என் சொந்த உரிமைகளை மனப்பூர்வமாக விட்டுக்கொடுத்துவிட்டு இயேசுகிறிஸ்துவின் கொத்தடிமையாவதே கிறிஸ்தவத்தின் பேரார்வமாகும். நான் அதைச் செய்யுமட்டும் பரிசுத்தவானாவதற்குத் தொடங்கவில்லை.

தேவனுடைய அழைப்பை ஒவ்வொரு ஆண்டும் ஒரு மாணவன் பெற்றால் தேவன் இந்த இறையியல் கல்லூரியை நிறுவியதற்கு அது போதுமானது. ஒரு நிறுவனமாக இந்தக் கல்லூரி ஒரு பயனுமற்றது; இது கலைபற்றிய அறிவுக்காக அல்ல; ஆத்துமாக்களைத் தேவன் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்வதற்காகவேதவிர இந்த நிறுவனம் வேறொன்றுக்கு மில்லை. தேவன் நம்மைச் சொந்தமாக்கிக்கொள்ளப்போகிறாரா? அல்லது நாம் யாராயிருக்கப்போகிறோம் என்னும் நமது கருத்துக்கு நாம் கவனம் செலுத்துகிறோமா?

செயல்பாட்டின் அதிகாரம்

தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். யாக்.4:8.

தேவனுடைய சத்தியத்தின் அடிப்படையில் செயல்பட மக்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுப்பது இன்றியமையாததாகும். பொறுப்பு தனிநபரிடம் விடப்படவேண்டும்--அவருக்காக நீங்கள் செயல்படமுடியாது, அது அவருடைய சொந்த மனப்பூர்வமான செயலாயிருக்கவேண்டும்; ஆனால், சுத்த சுவிசேஷச் செய்தி மனிதரை எப்போதும் செயல்பட வழிநடத்தவேண்டும். செயல்பட மறுக்கும் முடக்குவாதம் ஒரு மனிதனைத் துல்லியமாக அவன் முன்பிருந்த இடத்திலேயே விட்டுவிடும்; ஆனால், அவன் செயல்பட்டவுடன் முன்புபோல ஒருபோதும் இருப்பதில்லை. தேவனுடைய ஆவியினால் உணர்த்தப்பட்ட நூற்றுக்கணக்கானோரின் வழியில் நிற்பது செயல்படாததின் மதியீனமே. எதிர்பாராமல் என்னை நான் ஒரு செயலுக்குள் ஈடுபடுத்தினதும், அந்த வினாடியில் நான் வாழத் தொடங்குகிறேன்; அதுதவிர எல்லாம் வெறும் பிழைப்பே. நான் என்னுடைய முழுச்சித்தத்தோடு செயல்படும் நேரங்களே நான் மனப்பூர்வமாக வாழும் நேரங்களாகும்.

உங்கள் ஆத்துமாவுக்கு மிகவும் தெளிவாக்கப்பட்ட தேவனுடைய ஒரு சத்தியத்தை, நடைமுறையில் இல்லாவிட்டாலும், சித்தத்தில் செயல்படுத்தாமல் ஒருபோதும் அது கடந்துபோக அனுமதியாதேயுங்கள். மையினாலோ இரத்தத்தினாலோ அதைப் பதிவுசெய்யுங்கள். இயேசுகிறிஸ்துவோடு இடைபடுகிற மிகவும் பெலவீனப் பரிசுத்தவானும், செயல்பட்ட அதே வினாடியில் விடுதலைசெய்யப்படுகிறார்; தேவனுடைய எல்லாம் வல்ல ஆற்றலும் அவர் சார்பாகச் செயல்படுகிறது. நாம் தேவனுடைய சத்தியம்வரை வருகிறோம், நாம் தவறிவிட்டோம் என்று அறிக்கையிடுகிறோம், பின்பு நாம் பின்வாங்குகிறோம்; பின்வாங்குவது நமது கடமையல்ல என்பதைக் கற்றுக்கொள்ளுமட்டும் மறுபடியும் நாம் அதனிடம் வருகிறோம், மீண்டும் நாம் பின்வாங்கிப் போகிறோம். நமது மீட்பராகிய ஆண்டவரின் வார்த்தையைத் தெளிவாகப் பரிசோதித்து, அவரோடு நாம் இடைபடவேண்டும். வாருங்கள் என்ற அவரது வார்த்தை செயல்பாட்டில் ஈடுபடுங்கள் என்றே பொருளாகிறது. என்னிடத்தில் வாருங்கள் என்றார். நாம் செய்கிற இறுதியான காரியம் வருகிறதுதான்; ஆனால் வருகிற ஒவ்வொருவரும் அதே வினாடியில் தேவனுடைய தெய்வீக ஜீவன் சடுதியாகத் தங்களுக்குள் பிரவேசிக்கிறதை அறிகிறார்கள். உங்கள் செயலினாலல்ல, உங்களுடைய செயல் தேவனோடும் அவரின் மீட்பின் வல்லமையோடும் உங்களை இணைப்பதினால் உலகம், மாம்சம், பிசாசு என்பவைகளின் ஆதிக்கஞ்செலுத்தும் வல்லமை முடமாக்கப்பட்டது.

அவருடைய பாடுகளுக்குப் பங்காளிகள்

கிறிஸ்துவின்.....பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப் படுங்கள். 1 பேதுரு 4:13.

நீங்கள் தேவனால் பயன்படுத்தப்படப்போகிறீர்களானால், உங்களுக் கென்று ஒருபோதும் கருதப்படாத திரளான அனுபவங்களினூடே அவர் உங்களைக் கடத்திச் செல்லுவார்; அவைகளின் நோக்கம் உங்களை அவருடைய கரங்களில் பயனுள்ளவர்களாக்குவதும், நீங்கள் சந்திக்கிறவை களைக்குறித்து ஒருபோதும் ஆச்சரியப்படாதிருப்பதற்காக மற்ற ஆத்துமாக் களில் சம்பவிக்கிறவைகளை நீங்கள் புரிந்துகொள்ள உதவுவதுமே. அந்த மனிதனை என்னால் சமாளிக்கமுடியாது என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஏன் முடியாது? அதைக்குறித்துத் தேவனிடமிருந்துக் கற்றுக்கொள்ள உங்களுக்குப் போதுமான வாய்ப்பை அவர் தந்தார்; ஆனால், அந்த வழியில் நேரஞ்செலவிடுவது மதிகேடாய்த் தோன்றியதால் நீங்கள் அங்கிருந்து விலகிச்சென்றீர்கள்.

கிறிஸ்துவின் பாடுகள் சாதாரண மக்களின் பாடுகளல்ல. தனிநபர் களாக நாம் பாடுகள் அனுபவிக்கிற கண்ணோட்டத்தில் அல்லாமல், அவர் தேவனுடைய சித்தத்தின்படியே பாடுபட்டார். நாம் இயேசுகிறிஸ்துவோடு தொடர்புகொள்ளும்போதுமாத்திரமே தேவன் நம்மோடு இடைபடுகிறதின் நோக்கத்தைப் புரிந்துகொள்ளமுடியும். தேவனுடைய இலக்கு என்னவென்று அறிந்துகொள்ள விரும்புவது கிறிஸ்தவக் கலாச்சாரத்தின் ஒரு பாகமாகும். கிறிஸ்தவத் திருச்சபையின் வரலாற்றில் இயேசுகிறிஸ்துவின் பாடுகளோடு ஒருமைப்படுவதைத் தவிர்ப்பது மனநிலையாயிருந்திருக்கிறது; தேவனுடைய கட்டளைகளைத் தங்களுடைய சொந்தக் குறுக்கு வழிகளில் நிறைவேற்ற மனிதர் தேடியிருக்கிறார்கள். தேவனுடைய வழியோ எப்போதும் பாடுகளின் பாதை, நீண்ட நீண்ட தடம்.

நாம் கிறிஸ்துவின் பாடுகளுக்குப் பங்காளிகளா? நமது சொந்த ஆர்வங்களைத் தேவன் முடிவுக்குக்கொண்டுவர நாம் ஆயத்தமா? நமது தனிநபர் தீர்மானங்களைத் தேவன் உருமாற்றுவதின்மூலம் அழித்துப்போட நாம் ஆயத்தமா? தேவன் ஏன் அவ்வழியாக நம்மைக் கொண்டுபோகிறார் என்பதை நாம் துல்லியமாக அறிகிறோம் என்பதல்ல அதன் கருத்து; அப்படி அறிவது ஆவிக்குரியநிலையில் நம்மைப் போலித் தற்பெருமையுள் ளவர்களாக்கும். தேவன் எவைகளை நாம் அனுபவிக்கும்படிச் செய்கிறார் என்பதை அந்நேரம் நாம் அறிவதில்லை; ஓரளவுப் புரியாமலே நாம் அவைகளை அனுபவிக்கிறோம். அதன்பின் பிரகாசமான ஒரு இடத்திற்கு நாம் வந்து, ஏன், நான் அறியாதிருந்தாலும் தேவனே என்னை இடை கட்டினார் என்று கூறுவோம்.

விசுவாசத்தின் திட்டம்

இதை விசுவாசிக்கிறாயா? யோவான் 11:26.

தம் விருப்பப்படி இயேசுகிறிஸ்து பயன்படுத்தக்கூடிய வல்லமையில் மார்த்தாள் விசுவாசம் வைத்தாள்; அவர் தங்களோடு இருந்திருந்தால் தன் சகோதரனைக் குணப்படுத்தியிருக்கமுடியும் என்றும் விசுவாசித்தாள். மேலும், இயேசுவுக்குத் தேவனோடு தனிச் சிறப்புவாய்ந்த நெருங்கிய உறவுண்டென்றும், அவர் தேவனிடம் எதைக் கேட்டாலும் தேவன் அதைச் செய்வார் என்றும் அவள் விசுவாசித்தாள்; ஆயினும், இயேசுவோடு அவளுக்குக் கூடுதல் ஆளத்துவ நெருக்கம் தேவைப்பட்டது. மார்த்தாளின் விசுவாசக் கோட்பாட்டுக்குரிய நிறைவேறுதல் வருங்காலத்துக்கானது. அவளுடைய விசுவாசம் அவளுக்கு அனுபவமாகும்வரை இயேசு அவளை வழிநடத்தினார்; மெதுவாக அது தனிப்பட்ட சுதந்தரமாக வெளிப்பட்டது--ஆம், ஆண்டவரே நீர் கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன் என்றாள்.

ஆண்டவர் உங்களோடு இடைபடுகிறதில் அதுபோன்ற ஏதாவது அனுபவம் உண்டா? அவரோடுள்ள ஆளத்துவ நெருக்கத்துக்கு இயேசு உங்களைக் கற்பிக்கிறாரா? இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? என்ற அவருடைய கேள்வியை அவர் உங்களில் ஆழமாகப் பதியவைக்கட்டும். உங்களுடைய சந்தேகத்தின் கடும் சோதனை என்ன? உங்கள் விசுவாசக் கோட்பாடு ஏறக்குறைய தனிநபர் விசுவாசமாய் மாறப்போகிற உங்கள் சூழ்நிலையில் ஏதாவது திணறடிக்கிற நெருக்கடிக்கு மார்த்தாளைப்போல வந்திருக்கிறீர்களா? ஒரு ஆளத்துவப் பிரச்சனையிலிருந்து ஒரு ஆளத்துவத் தேவை ஏற்படும்வரை இது முடியாது.

விசுவாசிப்பது என்பது ஒப்படைப்பதே. மனதுக்குரிய விசுவாசத்தின் காரியத்திட்டத்தில் நான் என்னை ஒப்படைக்கிறேன், அந்த ஒப்படைப்போடு தொடர்பில்லாத எல்லாவற்றையும் கைவிடுகிறேன். தனிநபர் விசுவாசத்தில் நம்பிக்கையின் இவ்வழிக்கு என்னை நான் தார்மீகமாக ஒப்படைக்கிறேன், வேறெதோடும் சமரசஞ்செய்ய மறுக்கிறேன்; தனிப்பட்ட விசுவாசத்தில் நான் என்னை ஆவிக்குரியநிலையில் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவிக்கிறேன்; அக்காரியத்தில் கர்த்தரால் மாத்திரம் ஆட்சிசெய்யப்படவேண்டுமென்று தீர்மானிக்கிறேன்.

நான் இயேசுகிறிஸ்துவுக்குமுன் நேருக்குநேர் நிற்கையில், அவர் என்னிடம், இதை விசுவாசிக்கிறாயா? என்று கேட்கும்போது, சுவாசிப்பது எவ்வளவு இயற்கையோ அதுபோலவே விசுவாசிப்பதும் இயற்கையானது என்று நான் காண்கிறேன்; முன்பு அவரை நம்பாமலிருக்குமளவு மதிகெட்டிருந்தேனே என்று நான் அதிகமாக அதிர்ச்சியடைகிறேன்.

சூழ்நிலைகளின் கண்டுபிடிக்கப்பெறாதப் புனிதத்தன்மை

தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது. ரோமர் 8:28.

ஒரு பரிசுத்தவானுடைய வாழ்க்கைச் சூழ்நிலைகள் தேவனால் நியமிக்கப்பட்டவை. தற்செயலானது என்று ஒன்று ஒரு பரிசுத்தவானுடைய வாழ்க்கையில் இல்லை. தேவஆவியானவர் புரிந்துகொள்ளுகிறதும், ஆனால் உங்களால் புரிந்துகொள்ளவேகூடாததுமான சூழ்நிலைகளுக்குத் தேவன் தமது முன்கருதலால் உங்களைக் கொண்டுவருகிறார். உங்களுக்குள்ளிருக்கும் ஆவியானவரின் பரிந்துபேசுதல் ஒரு குறிப்பிட்ட நிலையில் இருப்பதற்காகத் தேவன் உங்களை இடங்களுக்குள்ளும், மக்கள் மத்தியிலும், நிலைமைகளுக்குள்ளும் கொண்டுபோகிறார். நீங்கள் உங்கள் சூழ்நிலைகளைத் தடுத்து நிறுத்தி, இங்கு நானே எனக்கு முன்கருதல் எடுக்கப்போகிறேன், இதை நான் கவனிக்கவேண்டும், அதை நான் பாதுகாக்கவேண்டும் என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். உங்கள் சூழ்நிலைகள் எல்லாம் தேவனுடைய கரத்திலிருக்கின்றன; ஆகையால் நீங்கள் இருக்கிற சூழ்நிலைகளைக்குறித்து அவைகள் புதுமையானவை என்று ஒருபோதும் எண்ணாதீர்கள். மன்றாட்டு ஜெபத்தில் உங்கள் பங்கு பரிந்துபேசுதலாகிய வியாகுலத்துக்குள் பிரவேசிப்பதல்ல; ஆனால் தேவன் தமது முன்கருதலால் உங்களை வைத்திருக்கிற சாதாரணச் சூழ்நிலைகளையும், உங்களை யார் மத்தியில் வைத்திருக்கிறாரோ அந்தச் சாதாரண மக்களையும் பயன்படுத்தி, அவர்களைத் தேவனுடைய சிங்காசனத்துக்கு முன்பாகக் கொண்டுவந்து, உங்களுக்குள்ளிருக்கும் ஆவியானவர் அவர்களுக்காகப் பரிந்துபேச ஒரு வாய்ப்பு அளிப்பதே. இந்த வழியில் ஆண்டவர் உலகம் முழுவதையும் தமது பரிசுத்தவான்களால் அலைவீசச்செய்யப்போகிறார்.

ஆவியானவருடைய வேலையைக்குறித்து நிச்சயமற்றிருப்பதாலோ அல்லது அதை அவருக்காகச் செய்ய நான் முயற்சிப்பதாலோ, அதை நான் கடினமாக்குகிறேனா? பரிந்துபேசுதலில் மனிதருக்குரிய பாகத்தை நான் செய்யவேண்டும்; அந்த மனிதருக்குரிய பாகம் நான் இருக்கிற சூழ்நிலையும், என்னோடு தொடர்புள்ள மக்களுமே. என் வாழ்க்கையை நான் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாகக் காக்கவேண்டும்; அதன்பின், வெவ்வேறு நபர்களைத் தேவனுக்குமுன்பாக நான் கொண்டுவரும்போது, பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்காகப் பரிந்துபேசுகிறார்.

உங்களுடைய பரிந்துபேசுதல் ஒருபோதும் என்னுடையதாகாது, என்னுடைய பரிந்துபேசுதல் ஒருபோதும் உங்களுடையதாகாது; ஆனால், பரிசுத்த ஆவியானவர் நம் தனித்தனி வாழ்க்கையிலும் பரிந்துபேசுகிறார்; அந்தப் பரிந்துபேசுதலில்லாவிட்டால், யாரோ ஒருவர் எல்லாம் இழப்பார்!

ஜெபத்தின் நிகரில்லாத வல்லமை

நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். ரோமர் 8:26.

ஜெபிப்பதற்கு ஆவியானவரால் வல்லமைப்படுத்தப்படுகிறோம் என்று நாம் உணருகிறோம்; ஆவியில் ஜெபிப்பது என்றாலென்ன என்றும் நமக்குத் தெரியும்; ஆனால், நாம் கூறிஅறிவிக்கமுடியாத ஜெபங்களைப் பரிசுத்த ஆவியானவர்தாமே நமக்குள் ஜெபிக்கிறார் என்பதை நாம் பல தடவை புரிந்துகொள்வதில்லை. நாம் தேவனால் மறுபடியும் பிறந்தபின், தேவனுடைய ஆவியானவர் நமக்குள் வாசஞ்செய்யும்போது, கூறமுடியாத வற்றை அவர் நமக்காகக் கூறிஅறிவிக்கிறார்.

உங்களுக்குள்ளிருக்கிற ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின் படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல்செய்கிறார்; நீங்கள் எதற்காக ஜெபிக்கிறீர்கள் என்பதை அறிவதற்கல்ல, பரிசுத்த ஆவியானவர் எதற்காக ஜெபிக்கிறார் என்பதைக் கண்டறியவே தேவன் உங்கள் இருதயங்களை ஆராய்கிறார்.

தேவனுடைய ஆவியானவர் தம்முடைய வேண்டுதலை ஏறெடுக்க விசுவாசியின் இயற்கைத் தன்மையை ஆலயமாகத் தேவைப்படுகிறார். உங்கள் சரீரமானது பரிசுத்த ஆவியினுடைய ஆலயம். இயேசுகிறிஸ்து தேவாலயத்தைச் சுத்தம்பண்ணினபோது, ஒருவனும் தேவாலயத்தின் வழியாக யாதொரு பண்டத்தையும் கொண்டுபோகவிடவில்லை. உங்கள் சரீரத்தை உங்கள் சொந்த வசதிக்காகப் பயன்படுத்த தேவஆவியானவர் அனுமதிக்கமாட்டார். ஆலயத்தில் விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்க ளையும் இயேசு இரக்கமின்றித் துரத்தி, என்னுடைய வீடு ஜெபவீடு என்னப் படும், நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்.

நம்முடைய சரீரம் பரிசுத்த ஆவியினுடைய ஆலயம் என்பதை உணர்ந்திருக்கிறோமா? அப்படியானால், அவருக்காக அதைத் தூய்மை கெடாமல் காத்துக்கொள்ள நாம் கவனமாயிருக்கவேண்டும். நம்முடைய தன்னுணர்வு வாழ்வு நமது ஆளத்துவத்தில் ஒரு சிறிய பகுதியென்றாலும், அதைப் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாக நம்மால் கருதப்படவேண்டும் என்பதை நாம் நினைவுகூரவேண்டும். நாம் ஒன்றும் அறிந்திராத தன்னு ணர்வற்ற பகுதிகளை அவரே கவனித்துக்கொள்ளுவார்; ஆனால், நாம் பொறுப்பாயுள்ள தன்னுணர்வுப் பகுதியை நாம் காத்துக்கொள்ளக் கவனம் செலுத்தவேண்டும்.

புனிதமான ஆராதனை

இப்பொழுது நான் உங்கள்நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷ மடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை . . . நிறைவேற்றுகிறேன். கொலோ.1:24.

கிறிஸ்தவ ஊழியர் புனிதமான மத்தியஸ்தராயிருக்கவேண்டும்; அவர் தமது ஆண்டவரோடும் அவருடைய மீட்பின் உண்மையோடும் ஒன்றிப்பதினால் ஆண்டவர் அவர்மூலமாகத் தம் உருவாக்கும் உயிரைத் தொடர்பாகக் கொண்டுவரமுடியும். இரு மனிதர்களின் ஆளத்துவங்களை ஒன்றின்மேல் ஒன்றாக வைப்பதினால் வருகிற பெலனல்ல இது; ஊழியக் காரருடைய வாழ்க்கையின்மூலம் வந்துசேருகிற கிறிஸ்துவின் பிரசன்னமே இது. நம்முடைய ஆண்டவரின் வாழ்க்கையையும் மரணத்தையுங்குறித்த வரலாற்று உண்மைகளைப் புதிய ஏற்பாட்டில் அறிவிக்கப்பட்டிருப்பதின்படி நாம் போதிக்கும்போது, நம்முடைய வார்த்தைகள் புனிதமாக்கப்படுகின்றன; கேட்போரது வாழ்க்கையில் வேறெந்தவழியிலும் படைக்கப்பட்டிருக்கமுடியாத ஒன்றைப் படைக்க தேவன் அந்த வார்த்தைகளை அவருடைய மீட்பின் அடிப்படையில் பயன்படுத்துகிறார். இயேசுவைக்குறித்து வெளிப்படுத்தப்பட் டவைகளைப் போதிப்பதற்குப்பதில் மனித வாழ்க்கையில் மீட்பினால் ஏற்படும் பலன்களைப் போதிப்போமானால், கேட்கிறவர்களில் உண்டாகும் விளைவு மறுபிறப்பு அல்ல, சுத்திகரிக்கப்பட்ட ஆவிக்குரிய கலாச்சாரமே; அவ்விதப் போதனை வேறொரு ஆட்சிப்பகுதியிலிருப்பதால் அதற்குத் தேவனுடைய ஆவியானவர் சாட்சிகூறமுடியாது. தேவனுடைய சத்தியத்தை நாம் அறிவிக்கும்போது, தேவன் மாத்திரமே செய்யக்கூடிய காரியங்களை ஆத்துமாக்களில் அவர் உருவாக்கத்தக்கதாக நமது வாழ்க்கையில் தேவனோடு ஒத்துணர்வுள்ளவர்களாயிருக்க நாம் கவனிக்கவேண்டும்.

எவ்வளவு அற்புதமான தனிநபர்! என்ன கவர்ச்சியான மனிதர்! எத்தகைய ஆழமான அபூர்வ கருத்துக்கள்! என்று ஒருவரைக்குறித்துக் கூறினால், இவைகளின்வழியாக தேவனுடைய சுவிசேஷத்துக்கு என்ன வாய்ப்புண்டு? சுவிசேஷம் கடந்துசெல்லமுடியாது; ஏனெனில், எதற்கு நேராக வேண்டுகோள் விடுக்கப்படுகிறதோ அதற்கு நேராகவே கவர்ச்சி உண்டாகிறது. ஒரு மனிதன் தன்னுடைய புகழால் மக்களைக் கவர்ந்தால் அவருடைய கவர்ச்சி அந்த நிலையிலிருக்கும்; ஆனால், அவர் ஆண்டவ ருடைய ஆளத்துவத்தோடு ஒருமைப்பாடுகொள்ளுவாரானால், இயேசு கிறிஸ்து என்ன செய்யக்கூடும் என்ற நிலையிலே அந்தக் ஈர்ப்பு இருக்கும். மனிதரைக்குறித்து மேன்மைபாராட்டுவது ஆபத்து; அவரையே உயர்த்திக் காண்பிக்கவேண்டும் என்று இயேசு கூறுகிறார்.

சுவிசேஷத்தில் கூட்டுறவு

கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் எங்கள் உடன்வேலையாள். 1 தெச.3:2.

பரிசுத்தமாகுதலுக்குப்பின் வாழ்க்கையில் உங்கள் குறிக்கோள் என்னவென்று கூறுவது கடினம்; ஏனெனில், பரிசுத்த ஆவியானவரால் தேவன் தம்முடைய நோக்கத்திற்குள் உங்களை எடுத்தாயிற்று. நமது இரட்சிப்பின் நோக்கத்துக்காகத் தேவன் தம்முடைய குமாரனைப் பயன் படுத்தினதுபோல, தம்முடைய நோக்கத்தில் அவர் இப்போது உங்களை உலகம் முழுவதிலும் பயன்படுத்துகிறார். தேவன் என்னை இன்னின்னவை களுக்காக அழைத்திருக்கிறார் என்று கூறி, உங்களுக்காக நீங்கள் பெரிய காரியங்களைத் தேடினால், தேவன் உங்களை உபயோகப்படுத்துவதற்கு நீங்கள் தடைபோடுகிறீர்கள். உங்களுடைய சொந்த இயல்பிலோ அல்லது ஏதாவது திட்டமான பேராவலிலோ தனிப்பட்ட அக்கறைகொள்ளும் காலம் வரை நீங்கள் தேவனுடைய அக்கறையோடு ஒருமைப்படமாட்டீர்கள். உங்க ளைக்குறித்த எல்லாக் கருத்துக்களையும் நீங்கள் என்றென்றுமாகக் களைந்து, தேவன் உங்களை உலகத்துக்கானத் தம்முடைய நோக்கத்தில் பயன்படுத்தும்படி அவரை அனுமதிக்கும்பொழுதுமாத்திரமே நீங்கள் அந்த அனுபவத்திற்குள் வரமுடியும்; உங்கள் போக்கும் வரத்தும் ஆண்டவரால் ஒழுங்குசெய்யப்படுவதால் உங்கள் வழிகளை ஒருபோதும் உங்களால் புரிந்துகொள்ளமுடியாது.

வாழ்க்கையின் இலக்கு என்னுடையதல்ல, தேவனுடையதே என்று நான் கற்றுக்கொள்ளவேண்டும். தேவன் தமது மகத்துவமான சொந்தக் கண்ணோட்டத்தில் என்னைப் பயன்படுத்துகிறார்; நான் அவரை நம்ப வேண்டுமென்றும், ஆண்டவரே! இது எனக்குக் கடுந்துயரத்தைக் கொடுக் கிறது என்று ஒருபோதும் கூறக்கூடாதென்றும் மாத்திரமே அவர் என்னிடம் கேட்கிறார். அவ்விதமாக நான் பேசுவது என்னை ஒரு முட்டுக்கட்டையாக மாற்றுகிறது. எனக்கு என்ன வேண்டுமென்று நான் தேவனிடம் கூறுவதை நிறுத்தும்போது, அவருடைய சித்தத்துக்கு எவ்விதத் தங்குத்தடையுமின்றி அவர் என்னை ஈடுபடுத்தமுடியும். என்னை அவர் நொறுக்கலாம், அல்லது என்னை மேன்மைப்படுத்தலாம், அவர் தெரிந்துகொள்ளுவதுபோல எதுவுஞ் செய்யலாம். அவரிலும் அவர் நல்லவர் என்பதிலும் நான் சந்தேகமற்ற நம்பிக்கை வைக்கவேண்டுமென்று மாத்திரமே அவர் என்னிடம் கேட்கிறார். சுயபரிதாபம் பிசாசால் உண்டாகிறது; அந்த நிலையில் நான் சென்றால், இந்த உலகத்தில் தேவன் கொண்டிருக்கிற நோக்கத்துக்கு அவர் என்னைப் பயன்படுத்தமுடியாது. நான் வாழுகிற உலகத்துக்குள் ஒரு உலகம் எனக்கு இருக்கிறது; உடலுக்குக் காயம் ஏற்படுமோ என்று நான் அஞ்சுகிறபடியால், தேவன் என்னை அதற்கு வெளியே ஒருபோதும் கொண்டுவரமுடியாது.

ஒப்புயர்வற்ற ஏற்றம்

உன் புத்திரனை இப்பொழுது அழைத்துக்கொண்டு போ. ஆதி.22:2.

தேவனுடைய கட்டளை--பிற்பாடல்ல இப்பொழுதே அழைத்துக் கொண்டு போ என்பதே. நாம் எவ்வாறு விவாதிக்கிறோம் என்பது அசாதாரணமானது! ஒரு காரியம் சரியென்று நாம் அறிவோம், ஆனால் அதை உடனடியாகச் செய்யாமலிருக்கச் சாக்குப்போக்குகளைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறோம். தேவன் காண்பிக்கிற உயரத்துக்கு ஏறுவது ஒருபோதும் பிற்காலத்தில் அல்ல, அது இப்போழுதே செய்யப்படவேண்டும். பலி செயல் பாட்டில் நிறைவேற்றப்படுமுன் சித்தத்தில் நிறைவேற்றப்பட்டாயிற்று.

ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து.....தேவன் தனக்குக் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப்போனான் (வச.3). ஆபிரகாமின் அற்புதமான எளிமைதான் என்னே! தேவன் பேசினபோது, ஆபிரகாம் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணவில்லை. தேவனோடு உங்களுக்குள்ள தனிப்பட்ட உறவின் அடிப்படையில் இல்லாத உங்கள் சொந்தப் பரிவுகள், உங்கள் சொந்த உள்ளுணர்வுகள்போன்ற எக்காரியத்தோடும், அதாவது மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணுவதில் எச்சரிக்கையாயிருங்கள். இக்காரியங்கள்தான் தேவனுக்குக் கீழ்ப்படிவதோடு போட்டியிட்டு, அதைத் தடைசெய்யும்.

பலிப்பொருளை ஆபிரகாம் தேர்வுசெய்யவில்லை. தேவனுக்காகச் சுயமாகத் தெரிந்துகொண்ட சேவைக்கெதிராக எப்போதும் உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்; சுயத்தியாகம் ஒரு வியாதியாயிருக்கலாம். தேவன் உங்கள் பானபாத்திரத்தை இனிமையாக்கியிருந்தால் அதை நன்றியோடு பருகுங்கள்: அதை அவர் கசப்பாக்கியிருந்தால் அவரோடுள்ள கூட்டுறவில் அதைப் பருகுங்கள். உங்களுக்கான தேவனுடைய முன்கருதலின் திட்டம் உங்களுக்குப் பாடுகளின் கடின காலமாயிருந்தால் அதைச் சகித்துக்கொள்ளுங்கள்; ஆனால் நீங்கள் இரத்தசாட்சியாகும் இடத்தை நீங்களாக ஒருபோதும் தெரிந்துகொள்ளாதீர்கள். ஆபிரகாமுக்கான கடுஞ்சோதனையைத் தேவன் தெரிந்துகொண்டார்; ஆபிரகாம் தயக்கம் காட்டவில்லை, நிதானத்துடன் அதைச் சகித்தார். தேவனோடுள்ள உறவில் நீங்கள் வாழாவிட்டால், தேவனைக்குறித்துத் தெளிவற்றக் குற்றச்சாட்டுக் கூறுவது எளிது. தேவனைக்குறித்துத் தீர்ப்புக்கூற நீங்கள் உரிமையடையுமுன் நீங்கள் கடுஞ்சோதனைகளைச் சகிக்கவேண்டும். ஏனெனில், கடுஞ்சோதனைகளில் தேவனை மேலும் நன்றாக அறியக் கற்றுக்கொள்ளுகிறீர்கள். தேவனுடைய நோக்கமும் மனிதனுடைய நோக்கமும் ஒன்றாகுமட்டும் அவருடைய உன்னத இலக்குகளுக்காகத் தேவன் செயல்படுகிறார்.

மறுரூபமாக்கப்பட்ட வாழ்க்கை

ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழைய வைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. 2 கொரி.5:17.

உங்கள் ஆத்துமாவின் இரட்சிப்பைக்குறித்து நீங்கள் என்ன கருத்துக்கொண்டிருக்கிறீர்கள்? இரட்சிக்கப்பட்ட அனுபவத்தின் பொருள் என்னவென்றால், உங்கள் நடைமுறைவாழ்க்கையில் காரியங்கள் நிஜமாக மாற்றப்படுகின்றன, நீங்கள் முன்பு வழக்கமாகப் பார்த்ததுபோல இனிமேல் காரியங்களைப் பார்க்கமாட்டீர்கள்; உங்களுடைய விருப்பங்கள் புதியவை, பழைய காரியங்கள் தங்கள் சக்தியை இழந்துவிட்டன. முக்கியமான காரியத்தைத் தேவன் மாற்றியிருக்கிறாரா என்பதே உங்கள் ஆவிக்குரிய அனுபவத்தின் உரைகற்களில் ஒன்றாகும். இன்னும் நீங்கள் பழைய காரியங்களுக்கு ஆவல்கொண்டால் உன்னதத்திலிருந்து பிறந்தேன் என்று கூறுவது அபத்தமாகும்; நீங்கள் உங்களையே ஏமாற்றிக்கொள்ளுகிறீர்கள். நீங்கள் மறுபடியும் பிறந்திருந்தால், உங்களில் ஏற்படும் மாற்றத்தைத் தேவஆவியானவர் உங்கள் நடைமுறை வாழ்க்கையிலும் சிந்தையிலும் வெளிப்படும்படிச் செய்வார்; நெருக்கடி வரும்போது உங்களில் ஏற்பட்டுள்ள அற்புதமான வித்தியாசத்தினால் இந்த உலகத்தில் அதிகம் வியப்படைவது நீங்களாகத்தான் இருக்கும். நீங்கள் அதைச் செய்தீர்கள் என்று கற்பனை செய்ய எந்த சாத்தியமும் இல்லை. இவ்விதப் பரிபூரண அற்புத மாற்றமே நீங்கள் இரட்சிக்கப்பட்ட ஆத்துமா என்பதற்குரியத் தெளிவாகும்.

நான் இரட்சிக்கப்பட்டதும் பரிசுத்தமாக்கப்பட்டதும் என்ன வேறுபாடு ஏற்படுத்தியிருக்கின்றன? உதாரணமாக 1 கொரிந்தியர் 13-ன் வெளிச்சத்தில் நான் நிற்கமுடியுமா? அல்லது நான் தத்துநடைபோடவேண்டுமா? பரிசுத்த ஆவியானவரால் என்னில் நிறைவேற்றப்பட்ட இரட்சிப்பு என்னை முற்றிலும் விடுதலையாக்குகிறது; தேவன் ஒளியிலிருக்கிறதுபோல நானும் ஒளியில் நடக்கும் காலம்வரை அவருடைய ஜீவன் என் மேலாம்பரமான உணர் வுகளில் அல்ல, உள்ளுணர்வைவிட ஆழமாக ஒவ்வொரு நுணுக்கமான பாகத்திலும் செயல்படுவதினால், கண்டனத்துக்குரிய ஒரு காரியத்தையும் அவர் என்னில் காண்கிறதில்லை.

விசுவாசமும் அனுபவமும்

என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரன். கலாத்.2:20.

நம்முடைய மனநிலைகளினூடே போராடி கர்த்தராகிய இயேசுவுக்கு நேரான பரிபூரண பக்தியை அடையவேண்டும்; நம்முடைய அனுபவத்தின் ஒளிவுமறைவான நிலைகளைவிட்டு வெளியேறி, அவரிடம் முற்றுந்துறந்த பக்தி காண்பிக்கவேண்டும். இயேசுகிறிஸ்து யார் என்று புதியஏற்பாடு கூறுவதைச் சிந்தித்துப்பாருங்கள்! அதன்பின் நம்மிடம் இருக்கிற இழிவான விசுவாசத்தின் வெறுக்கத்தக்க சிறுமையையும் நினைத்துப்பாருங்கள்!-- எனக்கு இந்த அனுபவமும் அந்த அனுபவமும் இல்லையே என்று கூறுகிறதுதான் அது. இயேசுகிறிஸ்துவில் நாம் வைக்கும் எந்த விசுவாசம், நம்மைச் சொல்லிமுடியாதத் தூயவர்களாயும், முற்றும் சீர்திருந்தினவர்களாயும், பூரணமாய் நீதிகரிக்கப்பட்டவர்களாயும் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாகப் பழுதற்றவர்களாய் நிறுத்தமுடியும் என்று உரிமைகோருவதை எண்ணிப்பாருங்கள்! நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்பும் ஆக்கப்பட்ட அவரைப் போற்றும் பூரண விசுவாசத்தோடு நில்லுங்கள்! தேவகுமாரனுக்காகத் தியாகஞ்செய்கிறோமென்று நாம் எப்படிச் சொல்லமுடியும்? அவர் நம்மை நரகத்திலிருந்தும் நாசத்திலிருந்தும் இரட்சித்திருக்க நாம் தியாகஞ்செய்கிறோம் என்று கூறுகிறோமே!

இயேசுகிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தில் நாம் தொடர்பாகப் புறப்பட்டுச் செல்லவேண்டும்; ஜெபக்கூட்டத்தில் நாம் அனுபவிக்கிற இயேசுகிறிஸ்துவல்ல, புத்தகத்தில் நாம் வாசிக்கிற இயேசுகிறிஸ்துவும் அல்ல, மனிதவதாரமான தேவனும், யாருடைய பாதத்தருகே நாம் செத்தவர்களைப் போல விழவேண்டுமோ அந்தப் புதிய ஏற்பாட்டின் இயேசுகிறிஸ்துவே அவர். நம்முடைய அனுபவம் உற்பத்தியாகிற நபரையே நாம் விசுவாசிக்க வேண்டும். அவருக்குநேரான முற்றுந்துறந்த பக்தியையே இயேசுகிறிஸ்து எதிர்பார்க்கிறார். இயேசுகிறிஸ்துவை நாம் முழுவதும் அனுபவித்தறியவோ, நமது இருதய வரம்புக்குள் வைத்துக்கொள்ளவோ முடியாது; ஆனால், நமது விசுவாசம் அவர்பேரிலுள்ள பலமும் உறுதியுமான நம்பிக்கையில் கட்டப்படவேண்டும்.

இந்நிலையில்தான் பரிசுத்தஆவியானவர் அவிசுவாசத்துக்கு எதிராகக் கடூரமான பொறுமைக்கேட்டைக் காண்பிக்கிறார். நமது பயங்கள் யாவும் தீமையானவை; நம்முடைய விசுவாசத்தில் நம்மை நாம் பேணமாட்டாமென்பதினாலே நாம் பயப்படுகிறோம். இயேசுகிறிஸ்துவோடு ஒன்றித்து விட்ட எவரேனும் ஒருவர் எவ்வாறு ஐயமும் அச்சமும் அனுபவிக்கக்கூடும்? நம்முடைய வாழ்க்கைப் பூரணமாய் அடக்கமுடியாத வெற்றிக் களிப்புடைய நம்பிக்கையின் நன்றிப்பாடலாயிருக்கவேண்டும்.

தெய்வீகத் திட்டங்களைக் கண்டுபிடித்தல்

நான் பிரயாணம்பண்ணிவருகையில், கர்த்தர் . . . . என்னை அழைத்துக் கொண்டுவந்தார். ஆதி.24:27.

நாம் தொடர்பாக வழிநடத்துதலைக் கேட்கத் தேவைப்படாதவாறு தேவனோடு ஒருமைப்பட்டு வாழவேண்டும். நாம் தேவனுடைய பிள்ளைகளாக்கப்பட்டோம் என்பதே பரிசுத்தமாகுதலின் கருத்தாகும்; ஒரு குழந்தை கீழ்ப்படியாமை காண்பிக்க விரும்பும்வரை அதன் இயல்பான வாழ்க்கை கீழ்ப்படிதலே; கீழ்ப்படியாவிட்டால் உடனடியாகத் தானாகவே உண்டாகிற அதிர்ச்சி ஏற்படுகிறது. ஆவிக்குரிய கோளத்தில் தானாகவே உண்டாகிற அதிர்ச்சி தேவனுடைய ஆவியானவரின் எச்சரிப்பே. அவர் தடுக்கும்போது, நாம் உடனடியாக நின்று, தேவனுடைய சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக நம்முடைய மனம் புதிதாகவேண்டும். நாம் தேவனுடைய ஆவியினால் மறுபடியும் பிறந்திருக்கிறோமானால் இங்கும் அங்கும் வழி நடத்தும்படி தேவனிடம் கேட்பது அவருக்குநேரான நம்முடைய பக்தி வளருவதற்குத் தடையே. கர்த்தர் என்னை அழைத்துக்கொண்டுவந்தார் என்று ஆபிரகாமின் ஊழியக்காரன் சொன்னார்; திரும்பிப் பார்க்கும்போது ஒரு அற்புதமான திட்டம் இருப்பதை நாம் காண்கிறோம்; நாம் தேவனால் பிறந்தவர்களானால் அந்தத் திட்டத்துக்கான பாராட்டை அவருக்கே கொடுப்போம்.

அசாதாரணக் காரியங்களில் நாம் எல்லாரும் தேவனைக் காண முடியும்; ஆனால், எல்லாக் காரியங்களிலும் தேவனைக் காண்பதற்கு ஆவிக்குரியக் கட்டுப்பாட்டின் கலாச்சாரம் தேவைப்படுகிறது. தற்செயலானது தேவனால் திட்டமிடப்பட்ட ஒழுங்கல்ல என்று ஒருபோதும் எண்ணாதீர்கள்; எங்கும் தெய்வீகத் திட்டங்களைக் கண்டுபிடிக்க ஆயத்தமாயிருங்கள்.

தேவனுக்குப் பக்தி காண்பிப்பதைவிட உங்கள் சீரான நம்பிக்கைகளுக்கு உண்மையாயிருப்பது ஆவிக்குரிய வல்லமையுள்ளது என்று எண்ணுவதைக்குறித்து ஜாக்கிரதையாயிருங்கள். நான் அதை ஒருபோதும் செய்யமாட்டேன் என்று கூறாதேயுங்கள்; நீங்கள் பரிசுத்தவானானால், அநேகமாக நீங்கள் அதைச் செய்யவேண்டியது வரும். நம்முடைய ஆண்டவரைவிட இந்தப் பூலோகத்தில் அதிக முரண்பாடுள்ள ஒருவர் ஒருபோதும் இருந்ததில்லை; ஆனால், பிதாவோடு அவருக்கு முரண்பாடு இருந்ததில்லை. ஒரு பரிசுத்தவானின் உடன்பாடு ஒரு கொள்கைக்கல்ல, தெய்வீக வாழ்வுக்கே. தெய்வீகச் சிந்தையைக்குறித்துத் தெய்வீக வாழ்வே தொடர்ந்து கூடுதலாகக் கண்டுபிடிக்கிறது. ஒரு உண்மையுள்ள ஆத்துமாவாயிருப்பதைவிட மார்க்கப்பித்தனாயிருப்பது மிகவும் எளிது; ஏனெனில், தேவனுக்கு உண்மையாயிருப்பது குறிப்பாக ஆவிக்குரிய அகந்தைக்கு ஆச்சரியமாக இழிவாயிருக்கிறது.

அதைக்குறித்து உனக்கென்ன?

ஆண்டவரே, இவன் காரியம் என்ன? . . . உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா. யோவான் 21:21,22.

பிறருடைய வாழ்க்கையில் நாம் தலையிடக்கூடாது என்பதைக் காண்பதற்கு நாம் பிடிவாதமாய் மறுக்கும்போது மிகக் கண்டிப்பான பாடங்களில் ஒன்றை நாம் கற்றுக்கொள்ளுகிறோம். பிறருக்கான தேவனுடைய ஒழுங்குகளில் தலையிடுகிற ஆபத்தை உணருவதற்கு அதிகக் காலஞ் செல்லுகிறது. ஏதோ ஒரு மனிதன் பாடுபடுகிறதை நீங்கள் காணும்போது, அவன் பாடுபடவேகூடாது, அவன் பாடுபடாமல் நான் பார்த்துக்கொள்வேன் என்று கூறுகிறீர்கள். நீங்கள் தேவனுடைய அனுமதிக்கும் சித்தத்தைத் தடுக்க, அதற்கு நேர் முன்னே உங்கள் கரத்தை நீட்டுகிறீர்கள்; அப்போது தேவன், உனக்கென்ன என்று கேட்கிறார். ஆவிக்குரிய நிலையில் தேக்கம் இருக்குமானால் அது தொடர ஒருபோதும் அனுமதியாதீர்கள்; தேவனுடைய சமுகத்திற்குள் பிரவேசித்து அதற்கானக் காரணத்தைக் கண்டுபிடியுங்கள். வேறொருவருடைய வாழ்க்கையில் நீங்கள் தலையிட்டுக்கொண்டிருப்பதே காரணம் என்பதைக் கண்டுகொள்ளக்கூடும்; அதாவது, எடுத்துச்சொல்ல உங்களுக்கு உரிமையற்ற காரியங்களை நீங்கள் எடுத்துச்சொன்னீர்கள், அறிவுரை கூற உங்களுக்கு உரிமையற்ற வேளையில் நீங்கள் அறிவுரை கூறினீர்கள். வேறொருவருக்கு நீங்கள் அறிவுரை கூறவேண்டியதுவந்தால், தேவன் அவருடைய ஆவியானவரின் நேரடி அறிவோடு உங்கள்மூலம் அறிவுரை கூறுவார்; இன்னொரு ஆத்துமா ஆசீர்வாதம் அடைவதற்காக எப்போதும் தேவனுடைய பகுத்தறிதல் உங்கள்மூலம் வருவதற்கு உங்கள் பங்கு நீங்கள் தேவனோடு சரியான உறவுகொள்ளுவதே.

நம்மில் அநேகரும் விழிப்புணர்வுநிலையின் ஓரத்தில் வாழுகிறோம் --விழிப்புணர்வில் சேவிக்கிறோம், விழிப்புணர்வில் தேவனுக்குப் பக்தி காண்பிக்கிறோம். இவை எல்லாம் முதிர்ச்சியற்றநிலை, இதுவரை நிஜமான வாழ்வல்ல. முதிர்ச்சியுள்ள நிலை ஒருபோதும் விழிப்புணர்வுகொள்ளாத குழந்தையின் வாழ்க்கையே; பயன்படுத்தப்படுகிறோம் என்ற விழிப்புணர்வு நம்மில் தோன்றாதவாறு நாம் நம்மை முற்றிலுமாய்த் தேவனுக்கு அர்ப்பணித்துவிடுவோம். நொறுக்கப்பட்ட அப்பமாயும் ஊற்றப்பட்ட இரசமாயும் நாம் விழிப்புணர்வோடு பயன்படுத்தப்படும்பொழுது, நாம் எட்டவேண்டிய இன்னொரு நிலை உண்டு; அங்கு நம்மைக்குறித்தும், தேவன் நம்மூலம் என்ன செய்கிறாரென்பதைக்குறித்துமுள்ள உணர்வு அகற்றப்பட்டுவிடும். ஒரு பரிசுத்தவான் மனப்பூர்வமாக ஒரு பரிசுத்தவானாய் ஒருபோதும் வாழ்வதில்லை; அவன் மனப்பூர்வமாகத் தேவனைச் சார்ந்தே வாழுகிறான்.

இன்னும் மனிதனே!

எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். 1 கொரி.10:31.

மனிதவதாரத்தின் மகாமகத்துவம் சாதாரணக் குழந்தைப்பருவ வாழ்க்கையைத் தரித்தது; மறுரூபமலையின் மகாமாட்சிமை பிசாசு பிடித்த பள்ளத்தாக்கில் மறைந்தது; உயிர்த்தெழுதலின் மகிமை கடற்கரைக் காலை ஆகாரத்துக்கு இறங்கிவந்தது. இவை ஏமாற்றமளிக்கும் முரண்பாடுகள் அல்ல, தேவனுடைய சிறந்த வெளிப்படுத்துதல்களே.

நம்முடைய அனுபவத்தில் அற்புதமானவைகளை எதிர்பார்ப்பதே சாதாரண மனநிலை; வீரத்தன்மையின் உணர்வை நாம் வீரர்களாய் இருப்பதாகத் தவறாக எண்ணுகிறோம். நெருக்கடியினூடே சிறப்பாகக் கடந்துசெல்வது ஒரு காரியம்; ஆனால், எந்த சாட்சியுமில்லாமலும், பிறரால் அறியப்படாத நிலையிலும், யாரும் நம்மில் கொஞ்சமேனும் கவனஞ் செலுத்தாமலும் இருக்கும்போது தேவனை மகிமைப்படுத்திக்கொண்டு ஒவ்வொருநாளும் கடந்துசெல்வது இன்னொரு காரியம். நம்மீது புனிதர் அடையாளம் இருக்க நாம் விரும்பாவிட்டாலும், இவன் எவ்வளவு சிறந்த ஜெபவீரன், அல்லது இவள் எவ்வளவு சிறந்த பக்தியும் அர்ப்பணமுமுள்ள பெண் என்று மக்களைக் கூறவைக்கிற எதையாவது நாம் விரும்புகிறோம். நீங்கள் கர்த்தராகிய இயேசுவில் சரியான பக்தி வைத்தால், உங்களைக் கவனிக்கவேண்டுமென்று யாரும் ஒருபோதும் எண்ணாத உன்னதமான உயரத்தை எட்டிவிட்டீர்கள்; கவனிக்கப்படுவதெல்லாம் எப்போதும் உங்கள் வழியாக வருகிற தேவனுடைய வல்லமையே.

தேவனிடத்திலிருந்து அற்புதமான அழைப்பைப் பெற்றேன் என்று நீங்கள் கூறலாம். ஆனால், இழிவான கடமையையும் தேவ மகிமைக்காகச் செய்ய நமக்குள்ளிருக்கிற சர்வ வல்லமையுள்ள தேவனுடைய அவதாரத்தால்மட்டும் கூடும். நாம் முற்றிலும் கவனிக்கப்படாதவர்களாகத்தக்கதாக நம்மை முற்றும் மானிடராக அவருக்குச் சொந்தமாக்க நமக்குள்ளிருக்கிற தேவனுடைய ஆவியானவர் தேவை. ஒரு பரிசுத்தவானின் வாழ்க்கைக்கு உரைகல் வெற்றியல்ல, மானிட வாழ்க்கை இருக்கிற நிலையிலேயே உத்தமமாய் இருப்பதே. கிறிஸ்தவ ஊழியத்தில் வெற்றியையே நம்முடைய இலக்காக வைப்போம்; ஆனால், மானிட வாழ்க்கையில் தேவமகிமையை வெளிப்படுத்துவதும், மனிதனுக்குரிய நிலைமைகளில் கிறிஸ்துவுடனேகூட தேவனுக்குள் மறைந்த வாழ்க்கை நடத்துவதும் நம்முடைய இலக்காய் இருக்கவேண்டும். தேவனுடைய இலட்சிய வாழ்க்கை வெளிப்படுத்தப்பட வேண்டிய நிஜமான நிலைமைகள் நம்முடைய மனித உறவுகளே.

நித்திய இலக்கு

இந்தக் காரியத்தைச் செய்தபடியால்;.....நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பேன்.....என்று என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆதி.22:16-18.

தேவனுடைய தன்மையோடு தொடர்புகொண்டிருக்கிற இடத்தை ஆபிரகாம் எட்டிவிட்டார், இப்போது தேவனுடைய யதார்த்தத்தைப் புரிகிறார்.

என்னுடைய இலக்கு தேவனே...

அன்பின் ஆண்டவரே, எக்கிரயமாயினும், எப்பாதையாயினும்.

தேவன் நம்மை இலக்குக்குக் கொண்டுவரும் முறையை நாம் தெரிந்துகொள்ளமுடியாது என்பதே எக்கிரயமாயினும், எப்பாதையாயினும் என்பதின் பொருள்.

என்னிலிருக்கும் அவருடைய சொந்தத் தன்மையோடு தேவன் பேசுவாரானால், அவர் பேசும்போது கேள்விகேட்க எந்த சாத்தியமுமில்லை; உடனடியான கீழ்ப்படிதலே ஒரே முடிவு. வா என்று இயேசு சொல்லும்போது நான் உடனே வருகிறேன்; விட்டுவிடு என்று அவர் சொல்லும்போது, அதை விட்டுவிடுகிறேன்; இக்காரியத்தில் தேவனில் நம்பிக்கைவை என்று சொன்னால் நான் நம்பிக்கைவைக்கிறேன். இத்தகைய செயல்பாடுகள் என்னில் தேவனுடைய தன்மை இருக்கிறது என்பதின் சான்றாகின்றன.

தேவனுடைய பண்பைப் பொறுத்தல்ல, என் பண்பைப்பொறுத்தே தேவன் தம்மை எனக்கு வெளிப்படுத்துவது தீர்மானிக்கப்படுகிறது.

நான் இழிவானவன் ஆகையால்,

உம்முடைய வழிகள் அடிக்கடி எனக்கு இழிவாகத் தோன்றுகின்றன.

கீழ்ப்படிதலாகிய கட்டுப்பாட்டினால் ஆபிரகாம் இருந்த இடத்திற்கு நான் வருகிறேன், தேவன் யார் என்பதைக் காண்கிறேன். இயேசுகிறிஸ்துவில் நான் தேவனோடு நேருக்குநேர் வரும்வரையிலும் உண்மையான தேவன் எனக்கு இல்லை; இப்போது எல்லா உலகிலும், என் தேவனே, உம்மைத் தவிர வேறு யாரும் இல்லை, வேறு யாருமே இல்லை என்று அறிகிறேன்.

கீழ்ப்படிதலினால் தேவனுடைய தன்மையைப் புரிந்துகொள்ளும் வரைத் தேவனுடைய வாக்குறுதிகளினால் நமக்கு ஒரு பயனுமில்லை. வேதத்தில் சில காரியங்களை முன்னூற்றறுபத்தைந்துதடவை நாம் வாசிக்கிறோம்; அவைகளை நாம் புரிந்துகொள்வதில்லை; ஆனால், சில விவரங்களில் தேவனுக்குக் கீழ்ப்படிந்ததினால் திடீரென்று தேவன் கூறுவதின் கருத்து புலப்படுகிறது, அவருடைய தன்மை உடனடியாக வெளிப்படுகிறது. தேவனுடைய வாக்குறுதிகளெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறது. ஆம் என்பது கீழ்ப்படிதலினால் பிறக்கவேண்டும்; நம்முடைய வாழ்க்கையின் கீழ்ப்படிதலினால் ஒரு வாக்குறுதிக்கு நாம் ஆமென் கூறும்போது, அந்த வாக்குறுதி நமக்குரியதாகிறது.

விடுதலைக்குள் ஜெயித்தல்

குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள். யோவான் 8:36.

தனித்தாள் இறுமாப்பின் ஏதாவது பகுதி மீந்திருக்குமானால் அது என்னால் முடியாது என்று எப்போதும் சொல்லும். ஆளத்துவம் என்னால் முடியாது என்று ஒருபோதும் சொல்லாது, அது ஈர்த்துக்கொண்டேயிருக்கும். ஆளத்துவம் எப்போதும் இன்னும்இன்னும் வேண்டுமென்கிறது. அவ்வாறு தான் நாம் ஆக்கப்பட்டிருக்கிறோம். தேவனை அதிகம் அறிந்துகொள்ளும் திறனோடு நாம் அமைக்கப்பட்டிருக்கிறோம்; ஆனால், பாவமும் நம்முடைய தனித்தன்மையுந்தான் நாம் தேவனை அடையாமல் தடுக்கின்ற காரியங் களாகும். தேவன் நம்மைப் பாவத்திலிருந்து விடுவிக்கிறார்; நாம் நம்மை சுயத்திலிருந்து விடுதலைசெய்யவேண்டும்; அதாவது, நமது இயற்கை வாழ்க்கையைத் தேவனுக்கு ஒப்படைத்து, கீழ்ப்படிதலினால் அது ஆவிக் குரிய வாழ்க்கையாக உருமாறும்வரை அதைப் பலியிடவேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சியில் தேவன் நம்முடைய இயற்கையான தனித்தன்மைக்கு எந்தக் கவனமும் செலுத்துவ தில்லை. அவருடைய திட்டம் இயற்கை வாழ்க்கையின் வழியாகவே செயல் படுகிறது; நாம் அவருக்கு உதவிசெய்து ஆதரவு அளிக்கக் கவனமாயி ருக்கவேண்டும்; அவருக்கு எதிர்த்து நின்று, என்னால் அதைச் செய்யமுடி யாது என்று சொல்லக்கூடாது. தேவன் நம்மைச் சிட்சிக்கமாட்டார்; நாமே நம்மைச் சிட்சிக்கவேண்டும். தேவன் ஒவ்வொரு எண்ணத்தையும் சிந்தனை யையும் சிறைப்படுத்தமாட்டார், அதை நாம் செய்யவேண்டும். ஆண்டவரே, சிதறும் சிந்தனைகளால் நான் அவதிப்படுகிறேனென்று நீங்கள் சொல்லா தீர்கள். அவ்வாறு சிதறும் சிந்தனைகளால் நீங்கள் அவதிப்படாதீர்கள். உங்கள் சுயத்தின் கொடுமைக்குச் செவிகொடுப்பதை நிறுத்துங்கள்; ஆவிக்குரிய வாழ்க்கைக்குள் சுயாதீனம் பெற்றுக்கொள்ளுங்கள்.

குமாரன் விடுதலையாக்கினால் என்பதில் குமாரனுக்குப்பதில் இரட்சகர் என்பதைப் புகுத்தக்கூடாது. இரட்சகர் பாவத்திலிருந்து விடுதலை அளிக்கிறார்; இங்கு கூறப்பட்டுள்ளது குமாரனால் விடுதலையாக்கப்படு கிறதால் வருகிற சுயாதீனம். இதைத்தான் பவுல் கலாத்தியர் 2:20-ல் கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டேன் என்று கூறியபோது கருத்தில்கொண்டார்; அவருடைய இயற்கைத் தனித்துவம் நொறுக்கப்பட்டு, அவருடைய ஆளத்துவம் அவருடைய ஆண்டவரோடு ஐக்கியப்பட்டுவிட்டது; அது இணையவில்லை, ஒன்றாகிவிட்டது; மெய்யாகவே விடுதலையாவீர்கள் என்று கூறப்பட்டுள்ளது. இது அடிப்படையில் விடுதலை, உட்புறத்திலிருந்து வரும் விடுதலை. இயேசுவோடு ஒன்றிப்பதில் சக்தியூட்டப்படுவதற்குப்பதில், சக்தியை வற்புறுத்துகிறோம்.

அவர் வந்தபின்

அவர் வந்து, பாவத்தைக்குறித்து . . . உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். யோவான் 16:8.

பாவஉணர்வைக்குறித்து நம்மில் மிகச்சிலரே எதையாவது அறிந் திருக்கிறோம்; தவறான காரியங்களைச் செய்ததால் அமைதியற்றிருக்கும் அனுபவத்தை நாம் அறிவோம்; ஆனால், பரிசுத்த ஆவியானவரால் வருகிற பாவஉணர்வு பூமியிலுள்ள எல்லா உறவுகளையும் அழித்துவிட்டு, ஒரு உறவை மட்டுமே விட்டுவைக்கிறது--தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்தேன் என்று சொல்லுவோம். இம்முறையில் ஒரு மனிதன் பாவத்தைக்குறித்து உணர்த்தப்படும்போது, தேவன் தன்னை மன்னிக்கத் துணியமாட்டார் என்று தனது மனச்சாட்சியின் ஒவ்வொரு ஆற்றலோடும் அறிகிறான்; தேவன் அவனை மன்னித்தால், தேவனைவிட நீதியைக்குறித்த வலிமையான உணர்வு மனிதனுக்கு இருக்கும். ஆனால், தேவன் மன்னிக் கிறார்; அவர் அவ்வாறு செய்ய சாத்தியமாக்கியது கிறிஸ்துவின் மரணத்தில் அவருடைய இருதயம் நொறுங்கியதாகிய விலைகொடுத்தது. தேவன் பாவத்தை மன்னிக்கிறார் என்பதே அவருடைய கிருபையின் மகா அற்புதம்; அவருடைய தெய்வீகத்தன்மை மன்னிக்கிறதும், அவ்வாறு செய்யும்போது அத்தன்மைக்கு உண்மையாயிருக்கச் சாத்தியமாக்குகிறதும் இயேசுகிறிஸ்து வின் மரணம் மாத்திரமே. தேவன் அன்பாயிருக்கிறதால் அவர் நம்மை மன்னிக்கிறார் என்று கூறுவது மேலோட்டமான அபத்தம். நாம் பாவத்தைக் குறித்து உணர்த்தப்பட்டபின் ஒருபோதும் இவ்வாறு கூறமாட்டோம். தேவனுடைய அன்பு என்பது கல்வாரியே, அதுதவிர வேறொன்றுமில்லை; தேவனுடைய அன்பு சிலுவையிலே அறிவிக்கப்பட்டது, வேறொரு இடத்திலு மல்ல. தேவன் என்னை மன்னிக்கக்கூடிய ஒரே அடிப்படை என் ஆண்டவ ருடைய சிலுவையே. அங்கு தேவனுடைய மனச்சாட்சி திருப்தியடைந்தது.

பாவமன்னிப்பின் கருத்து நான் நரகத்திலிருந்து காப்பாற்றப்பட்டு மோட்சத்துக்குத் தகுதியாக்கப்பட்டேன் என்பது மட்டுமல்ல (அந்த நிலையில் ஒரு மனிதனும் இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளமாட்டான்); மன்னிப்பு என்பது மீண்டும் படைக்கப்பட்ட உறவுக்குள், அதாவது கிறிஸ்துவுக்குள் தேவனோ டுள்ள ஐக்கியத்துக்குள் நான் மன்னிக்கப்பட்டேன் என்பதே. இயேசுகிறிஸ்து வின் தன்மையாகிய புதிய தன்மையை எனக்குள் வைத்து, அசுத்தனாகிய என்னைப் பரிசுத்தராகிய தன்னுடைய நிலைக்குத் தேவன் மாற்றுவதே மீட்பின் அற்புதமாகும்.

தேவனுடைய மன்னிப்பு

பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. எபே.1:7.

தேவன் நம்முடைய பிதா என்பதாகிய இனிமையான கருத்தைக் குறித்து ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்--தேவன் இரக்கமும் அன்பும் உள்ளவராயிருப்பதினால் நிச்சயம் அவர் நம்மை மன்னிப்பார் என்பதே அந்தக் கருத்து. உணர்ச்சிபூர்வமான அந்தக் கருத்துக்கு புதிய ஏற்பாட்டில் இடமேயில்லை. தேவன் நம்மை மன்னிப்பதற்குரிய ஒரே அடிப்படை கிறிஸ்துவின் சிலுவையாகிய மிகப்பெரிய துக்க நிகழ்ச்சியே; வேறு எந்த அடிப்படையிலும் மன்னிப்பை வைப்பது அறியாமையின் தேவதூஷணம். தேவன் பாவத்தை மன்னித்து, அவருடைய நட்பில் மீண்டும் அமர்த்துவ தற்குரிய ஒரே அடிப்படை கிறிஸ்துவின் சிலுவையே; வேறு எந்த வழியும் இல்லை. நாம் பெற்றுக்கொள்ள சுலபமாயிருக்கக்கூடிய பாவமன்னிப்புக்குக் கல்வாரியின் கடுந்துயரம் என்கிற விலை கொடுக்கப்பட்டது. பாவமன்னிப்பு, பரிசுத்த ஆவியின் ஈவு மற்றும் நாம் பரிசுத்தமாக்கப்படுதல் என்பவற்றை விசுவாசத்தின் எளிமையால் அடைவதும், தேவன் எவ்வளவு பெரிய விலை கொடுத்த காரணத்தால் இவைகள் நமக்குரியவையாக்கப்பட்டன என்பதை மறந்துபோவதும் சாத்தியமே.

பாவமன்னிப்பு என்பது கிருபையின் தெய்வீக அற்புதம்; பரிசுத்த தேவனாயிருந்துகொண்டே மக்களை மன்னிப்பதற்குமுன் அவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவையாகிய விலை கொடுக்கவேண்டியதாயிற்று. தேவன் நம்முடைய பிதா என்கிற கருத்து பிராயச்சித்தத்தை அழித்துவிடுமானால் அதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாதீர்கள். தேவனால் மன்னிக்கமுடியாது என்பது அவரைப்பற்றி வெளிப்படுத்தப்பட்டுள்ளது; அவர் அப்படிச் செய்தால் அவருடைய தன்மையை (அவர் நீதியுள்ளவர் என்பதை) அவர் மறுதலிக் கிறதாகும். பிராயச்சித்தத்தினால் தேவனிடம் திரும்பக்கொண்டுவரப்படுவதே நாம் மன்னிக்கப்படுவதற்குள்ள ஒரே வழி. தேவனுடைய மன்னிப்பு இயற் கைக்கு அப்பாற்பட்ட மண்டலத்தில் மாத்திரமே இயற்கையாகிறது.

பாவமன்னிப்பாகிய அற்புதத்தோடு ஒப்பிடும்போது பரிசுத்தமாகும் அனுபவம் அற்பம். மனித வாழ்க்கையில் நிறைவேறிய பாவமன்னிப்பின் அற்புதத்தை வெளிப்படுத்துவது மாத்திரமே பரிசுத்தமாகுதல்; ஆனால், ஒரு மனிதனில் நன்றியுணர்ச்சியின் ஆழமான நீரூற்றை எழுப்பிவிடுவது தேவன் பாவத்தை மன்னித்திருக்கிறார் என்பதே. பவுல் ஒருபோதும் இதை விட்டுவிலகவில்லை. உங்களை மன்னிப்பதற்குத் தேவன் எவ்வளவு பெரிய விலைகொடுத்தார் என்பதை நீங்கள் உணரும்போது, தேவஅன்பால் ஏவப்பட்டு, குறடு பிடிப்பதுபோல இறுகப்பிடிக்கப்படுவீர்கள்.

முடிந்தது

நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன். யோவான் 17:4.

தேவனுடைய சிந்தை வரலாற்றில் நிறைவேற்றப்பட்ட செயல்தான் இயேசுகிறிஸ்துவின் மரணம். இயேசுகிறிஸ்துவை இரத்தசாட்சியாகப் பார்க்க இடமேயில்லை; அவருடைய மரணம் தடுக்கக்கூடியதாயினும் ஏதோ அவருக்கு நிகழ்ந்துவிட்ட காரியம் அல்ல. அவர் வந்ததின் ஒரே காரணம் அவருடைய மரணமே.

தேவன் நம்முடைய பிதா, அவர் நம்மை நேசிக்கிறதினால் அவர் நம்மை மன்னிப்பார் என்ற கொள்கையில் மன்னிப்பின் போதனையைக் கட்டி எழுப்பவேண்டாம். தேவனைக்குறித்து இயேசுகிறிஸ்து வெளிப்படுத்திய தற்கு அது உண்மையில்லை; அது சிலுவையைத் தேவையற்றதாக்குகிறது, மீட்பைப் பொறுத்தமட்டும், ஒன்றுமில்லாய்மையைப் பெரிய ஆரவாரம் ஆக்குகிறது. தேவன் பாவத்தை மன்னிக்கிறாரானால், அது கிறிஸ்துவின் மரணத்தினாலேயே. தமது குமாரனின் மரணத்தினால்தவிர வேறெந்த வழியிலும் தேவன் மனிதரை மன்னிக்கமுடியாது; இயேசுவும் இரட்சகராக உயர்த்தப்பட்டதின் காரணம் அவருடைய மரணமே. இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம். அச்சங்கொண்ட அகிலாண்டத்தின் செவிகளில் எக்காலத்தும் ஒலித்த வெற்றியின் சிறந்த தொனி கிறிஸ்துவின் சிலுவையில் ஒலித்த முடிந்தது என்ற வார்த்தையே. மனித மீட்பில் இறுதி வார்த்தை அதுவே.

தேவனுடைய அன்பைக்குறித்தத் தவறான கருத்தால் அவருடைய பரிசுத்தத்தை மதிப்பற்றதாக்கவோ அழித்துவிடவோ செய்கிற எதுவானாலும் இயேசுகிறிஸ்து வெளிப்படுத்திய தேவனுக்கு உண்மையற்றது. அனுதாபத் தினாலும் மனதுருக்கத்தினாலும் இயேசுகிறிஸ்து தேவனுக்கு எதிராக நம்மோடு நிற்கிறார், நம்மீதுள்ள பரிவினால் அவர் நமக்காகச் சாபமானார் என்கிற எண்ணத்துக்கு ஒருபோதும் இடங்கொடுக்கவேண்டாம். தெய்வீகத் தீர்மானத்தினாலேயே இயேசுகிறிஸ்து நமக்காகச் சாபமானார். அந்தச் சாபத்தின் திகிலூட்டும் கருத்தை உணர்ந்துகொள்ளும் நமது பங்குதான் பாவ உணர்வாகும்; அவமானமும் பட்சாதாபமுமாகிய தானம் நமக்குக் கொடுக்கப்படுகிறது; அது தேவனுடைய மகாப் பெரிய இரக்கம். மனிதனி லுள்ள தவற்றை இயேசுகிறிஸ்து பகைக்கிறார்; அவருடைய பகைமையின் மதிப்பீடு கல்வாரியாகும்.

ஆழமற்றதும் ஆழமிக்கதும்

நீங்கள் புசித்தாலும், குடித்தாலும் எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். 1 கொரி.10:31.

வாழ்க்கையின் ஆழமற்ற காரியங்கள் தேவனால் திட்டமிடப்பட்ட வைகளல்ல என்று எண்ணுவதற்கு உங்களை அனுமதிப்பதில் ஜாக்கிரதை யாய் இருக்கவேண்டும்; அவைகளும் ஆழமிக்கக் காரியங்களைப்போன்று தேவனிடத்திலிருந்தே வருகின்றன. நீங்கள் ஆழமற்றவர்களாயிருப்பதை மறுப்பது தேவன்பேரிலுள்ள பக்தியாலல்ல; நீங்கள் ஆழமற்றவர்களல்ல என்று மற்றவர்களுக்குக் காண்பிக்கவே நீங்கள் அவ்வாறு செய்கிறீர்கள்; நீங்கள் ஆவிக்குரிய அகங்காரிகள் என்பதின் நிச்சயமான அடையாளம் அது. உங்களில் அலட்சியம் உற்பத்தியாவதைக்குறித்து கருத்தாயிருங்கள்; இந்நிலையில்தான் அலட்சியம் எப்போதும் வருகிறது, உங்களைவிட பிறர் ஆழமற்றவர்களாயிருப்பதால், உங்களை அவர்களுக்கு நடமாடும் கண்டன மாய் அது ஆக்குகிறது. ஆழ்ந்த வாழ்க்கையுடைய நபராய் பாவிக்கிறதைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள்; தேவன் ஒரு குழந்தையானாரே.

ஆழமற்றிருப்பது தீயவர்களாயிருப்பதற்கு அடையாளமாகாது, அதுபோல ஆழமற்ற தன்மை ஆழங்கள் இல்லவேயில்லை என்பதற்கு அடையாளமாகாது; சமுத்திரத்துக்கும் கரை உண்டு. உண்பதும் குடிப்பதும், நடப்பதும் பேசுவதும்போன்ற வாழ்க்கையின் மேலோட்டமான வசதிகளும் தேவனால் ஒழுங்குசெய்யப்பட்டவை. இக்காரியங்கள் நமது ஆண்டவரிலும் காணப்பட்டன. அவர் தேவகுமாரனாக அவைகளோடு வாழ்ந்தார்; சீஷன் தன் எஜமானிலும் பெரியவனல்ல என்றும் கூறினார்.

நம்முடைய பாதுகாவல் ஆழமற்ற காரியங்களில் இருக்கிறது. நாம் பகுத்தறிவு வழியில் மேலாம்பரமான பகுத்தறிவு வாழ்க்கை செய்ய வேண்டும். ஆழமான காரியங்கள் வரும்போது ஆழமற்ற அக்கறைகளோடு தேவன் அவைகளையும் நமக்குத் தருகிறார். உங்களுடைய ஆழங்களைத் தேவனைத்தவிர வேறு யாருக்கும் காண்பிக்கவேண்டாம். நமது சொந்தப் பண்புகளில் சகிக்கமுடியாத கருதலும் வெறித்தனமான அக்கறையும் கொண்டுள்ளபடியினால், நமது வாழ்க்கையின் ஆழமற்ற காரியங்களில் கிறிஸ்தவர்களைப்போல வாழ நாம் மறுக்கிறோம்.

தேவனைத்தவிர வேறு யாரிலும் நம்பிக்கை வைக்காதிருக்கத் தீர்மானியுங்கள்; நீங்கள் எக்காலத்திலும் அறிந்தவர்களில் மிக மோசமான வஞ்சகனாய்க் கண்டிப்பாக ஒதுக்கிவைக்கவேண்டியவர்களில் முதலாம் நபராக உங்களையே நீங்கள் கண்டுகொள்ளுவீர்கள்.

வெறுப்புணர்ச்சியின் கவனச்சிதைவு

எங்களுக்கு இரங்கும் கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்; நிந்தனையினால் மிகவும் நிறைந்திருக்கிறோம். சங்.123:3.

தேவன்பேரிலுள்ள நம்முடைய விசுவாசத்திற்கு வருகிற சேதத்தை விட நமது கிறிஸ்தவ மனநிலைக்கு வரும் சேதத்தைக்குறித்தே அதிக எச்சரிக்கையாயிருக்கவேண்டும். நீங்கள் துரோகம்பண்ணாமல் உங்கள் ஆவியைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று வேதம் சொல்லுகிறது. நமது மனதின் கோபத்துக்கு மிகப் பெரிய விளைவுகளுண்டு; ஆத்துமாவுக்குள் ஊடுருவிச்சென்று, மனதை தேவனைவிட்டுத் திருப்புகிற சத்துரு அது. நாம் ஒருபோதும் திருப்திப்படுத்தத் துணியாத சில மனநிலைகள் உண்டு; அப்படித் திருப்திப்படுத்தினால், அவைகள் தேவனிலுள்ள விசுவாசத்திலிருந்து நம்மைத் திசைதிருப்பிவிட்டன என்பதைக் கண்டுபிடிப்போம்; தேவனுக்குமுன்பாக அமைதியான மனநிலைக்கு நாம் திரும்பிச்செல்லும் வரை அவரிலுள்ள நமது விசுவாசம் ஒன்றுமில்லை; மாம்சத்திலும் மானிட சூழ்ச்சித்திறமையிலும் நாம் வைக்கும் நம்பிக்கையே ஆளுகைசெய்கிறது.

உலகக்கவலைகளைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் அவைகள்தான் தவறான ஆத்தும நிலையை உருவாக்குகிற காரியங்கள். தேவனைவிட்டு நம் சிந்தையைச் சிதறடிக்கும் எத்தகைய மிகப் பெரிய சக்தி எளிய காரியங்களிலிருப்பது அசாதாரணமே! இந்த வாழ்க்கையின் கவலைகளால் அமிழ்த்தப்படுவதற்கு மறுத்துவிடுங்கள்.

நியாயத்தை நிரூபிக்கவேண்டும் என்ற பேரார்வம் நம்மை திசைதிருப்பும் இன்னொரு காரியமாகும். நான் நிரபராதி என்பதை எப்போதும் நிலைநிறுத்தும் இச்சையிலிருந்து என்னை விடுதலையாக்கும் ஆண்டவரே என்று தூய அகுஸ்த்தீன் ஜெபித்தார். அத்தகைய மனநிலை ஆத்துமா தேவன்மேல் வைத்திருக்கும் நம்பிக்கையை அழித்துப்போடுகிறது. என்னை நான் விளக்கவேண்டும், நான் மக்களைப் புரியவைக்கவேண்டும் என்னும் மனநிலை அது. நம்முடைய ஆண்டவர் ஒன்றையும் விவரிக்கவில்லை; தவறுகள் தங்களைத் திருத்திக்கொள்ள விட்டுவிட்டார்.

பிறர் ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேறவில்லை என்பதைப் பகுத்தறியும்போது, அந்தப் பகுத்தறிவு கண்டனமாக மாற அனுமதித்தால், தேவனோடுள்ள நமது ஐக்கியத்தை நாம் தடுக்கிறோம். நாம் பரிந்துபேச வேண்டும் என்பதற்காகவேதவிர கண்டனம்பண்ணுவதற்காகத் தேவன் நமக்குப் பகுத்தறியும் திறமையை ஒருபோதும் கொடுப்பதில்லை.

பேரார்வத்தின் திசை

இதோ, வேலைக்காரரின் கண்கள் தங்கள் எஜமான்களின் கையை நோக்கியிருக்குமாப்போல... எங்கள் கண்கள் அவரை (தேவனாகிய கர்த்தரை) நோக்கியிருக்கிறது. சங்.123:2.

தேவன்மீது முற்றும் சார்ந்திருப்பதின் விவரணமே இந்த வசனம். வேலைக்காரருடைய கண்கள் எஜமான்மீது பதிந்திருக்கிறதுபோல நமது கண்கள் தேவனை நோக்கவேண்டும்; இவ்வாறு அவருடைய முகத்தின் அறிவைப் பெற்றுக்கொள்ளுகிறோம் (ஏசாயா 53:1). அவருக்கு நேராக நம்முடைய கண்களை ஏறெடுப்பதை நிறுத்தும்போது ஆவிக்குரிய கசிவு ஆரம்பிக்கிறது. நான் தொடர்ந்து கடினமாக உழைக்க எதிர்பார்க்கிறேன், சாதாரணத் தாழ்மையுள்ள நபராயிருப்பதற்குப்பதில் நான் என் கால்விரல் நுனிமீது நின்று தேவனைப்போலத் தோற்றமளிக்க முயற்சிக்கிறேன் என்று சொல்லுவதுபோன்ற கற்பனையினால் வருகிற கசிவுதான் புறம்பேயுள்ள தொல்லைகளால் வரும் கசிவைவிட அதிகம். எந்த முயற்சியும் எட்டக் கூடாத உயரமானதல்ல என்பதை நாம் உணரவேண்டும்.

எடுத்துக்காட்டாக, நீங்கள் தேவனுக்காக நிற்கத் தீர்மானித்தபோது நெருக்கடியைச் சந்தித்தீர்கள்; அதற்கு, எல்லாம் சரியாயிருக்கிறது என்று ஆவியானவரும் சாட்சிகொடுத்தார்; ஆனால், வாரங்கள் கடந்துசென்றன, ஒருவேளை ஆண்டுகளும் கடந்துசென்றன; அப்போது நீங்கள், எவ்வகையிலேனும் நான் மிகக் கூடுதல் போலிப்பெருமைகொள்ளவில்லையா? எட்டமுடியாத மிகவும் உயரமான நிலையை நான் எடுத்துவிடவில்லையா? என்கிற முடிவுக்கு மெதுவாக வரலாம். உங்கள் பகுத்தறிவாத நண்பர்கள் உங்களிடம் வந்து, நீங்கள் மதிகேடராயிராதீர்கள்; இந்த ஆவிக்குரிய விழிப்புணர்ச்சியைக்குறித்து நீங்கள் பேசினபோது, இது கடந்துபோகிற உணர்ச்சிவேகம், இந்த அழுத்தத்தை நீங்கள் தொடர்ந்து சகிக்கமுடியாது, அவ்வாறு செய்யத் தேவன் உங்களை எதிர்பார்க்கவில்லை என்று நாங்கள் அறிந்திருந்தோம் என்று சொல்லுவார்கள். நான் மிகஅதிகம் எதிர்பார்த்து விட்டேன் என்று பாவித்துக்கொள்ளுகிறேன் என்று நீங்களும் கூறலாம். அவ்வாறு சொல்லுவது பணிவானதுபோலத் தோன்றலாம், ஆனால் அது தேவனை நம்புவது போய்விட்டது, உலகத்தாரின் கருத்தை நம்புவது வந்துவிட்டது என்றே பொருளாகிறது. ஆபத்து என்னவென்றால், தேவனை நம்பாமல், அவருக்குநேராகக் கண்களை ஏறெடுப்பதைத் தவிர்ப்பது. திடீரெனத் தேவன் உங்களைத் தடுத்து நிறுத்தும்போதுதான் எவ்வாறு நீங்கள் தோற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை உணருவீர்கள். கசிவு இருக்கும்போதெல்லாம் அதற்கு உடனே தீர்வுகாணுங்கள். உங்களுக்கும் தேவனுக்குமிடையே ஏதோ வந்துகொண்டிருக்கிறது என்று உணர்ந்து கொள்ளுங்கள்; அதை உடனே சீர்ப்படுத்துங்கள்.

ஆவிக்குரிய இசைவிணைப்பின் இரகசியம்

நானோ.....மேன்மைபாரட்டாதிருப்பேனாக. கலாத்.6:14.

ஒரு மனிதன் மறுபடியும் பிறந்த ஆரம்பத்தில், அவன் இசைவற்ற வனாக மாறுகிறான், அவனைச் சுற்றிலும் ஏராளம் தொடர்பற்ற உணர்வு களும் புறம்பானக் காரியங்களின் தொடர்பற்ற நிலைமைகளும் காணப்படு கின்றன. அப்போஸ்தலனாகிய பவுலுடைய வாழ்க்கையின் அடிப்பாகத்தில் பலமானதும் நிலைத்திருக்கிறதுமான இணக்கம் இருந்தது; அதின் பலனாக, அவருடைய புறம்பான வாழ்க்கை அதன் விருப்பம்போல மாற்றமடைய அவரால் அனுமதிக்கமுடிந்தது, அது அவரை வருத்தப்படுத்தவில்லை; ஏனென்றால், அவர் தேவனிலேயே வேரூன்றி நிலைவரப்பட்டிருந்தார். நம்மில் பலரும் வெளிப்பிரகாரமாக இணக்கமாயிருக்கவேண்டுமென்பதில் அதிகக் கரிசனை செலுத்துவதால் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் இணக்கமில்லை. பவுல் கீழ் அறையில் வாழ்ந்தார்; இணக்கத்தைக் குறை கூறுகிறவர்கள் புறம்பான காரியங்களின் கருத்தில் மேல்மாடியில் வாழுகி றார்கள்; இரண்டுபேரும் ஒருவரையொருவர் தொட ஆரம்பிப்பதில்லை. இத்தகைய அடிப்படையான காரியங்களில் பவுலின் இணக்கம் அமைந் திருந்தது. உலகத்தின் மீட்புக்காகத் தேவன் அனுபவித்த வியாகுலமே, அதாவது இயேசுகிறிஸ்துவின் சிலுவையே, பவுலின் வாழ்க்கைக்குரிய இணக்கத்தின் மகாப் பெரிய அடிப்படையாகும்.

நீங்கள் என்ன விசுவாசிக்கிறீர்கள் என்பதை மறுபடியும் உங்களுக் குத்தானே சொல்லிக்கொள்ளுங்கள்; அதன்பின் அவைகளில் கூடுமான வரை அதிகமானவற்றை அகற்றிவிடுங்கள், கிறிஸ்துவின் சிலுவையாகிய மூலக்கோட்பாட்டுக்குத் திரும்பிவாருங்கள். புறம்பான வரலாற்றில் சிலுவை அற்பமான காரியம்; ஆனால் வேதத்தின் கண்ணோட்டத்தில் உலகத்தின் எல்லாப் பேரரசுகளையும்விட அதிக முக்கியமானது. நம்முடைய செய்தியில் தேவனுடைய சிலுவையின் பாடுகளைச் சிந்திப்பதிலிருந்து விலகிச்சென்றால் அச்செய்தி ஒரு பலனையும் உண்டாக்காது. அது தேவனுடைய ஆற்றலை மனிதனுக்கு அறிவிக்காது; அது கேட்பதற்கு ரசகரமானதாயிருக்கலாம், ஆனால் அதில் ஒரு வல்லமையுமில்லை. ஆனால் சிலுவையைப் பிரசங்கி யுங்கள், அப்போது, தேவனுடைய வல்லமை கட்டவிழ்த்துவிடப்படுகிறது. பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிக்கிறவர்களை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று என்றும், சிலுவையில் அறையப் பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம் என்றும் பவுல் கூறுகிறார்.

ஆவிக்குரிய ஆற்றலின் செறிவு

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக்குறித்தே யல்லாமல்.... கலாத்.6:14.

இயேசுவின் உயிர்த்தெழுந்த ஜீவனாகிய தேவனுடைய சக்தியை உங்கள் மாம்சீக சரீரத்தில் அறியவேண்டுமானால் தேவனுக்கு நேர்ந்த சோக சம்பவத்தைக்குறித்துத் தொடர்ந்து விசாரப்படவேண்டும். உங்கள் சொந்த ஆவிக்குரிய அறிகுறிகளின் ஆளத்துவ ஆர்வத்தை ஆராய்ந்து பார்ப்பதைத் தவிர்த்துவிடுங்கள், தேவனுக்கு நேர்ந்த சோகத்தைத் திறந்த மனதோடு சிந்தியுங்கள்; உடனடியாக, தேவனுடைய சக்தி உங்களுக்குள் வந்துவிடும். என்னை நோக்கிப்பாருங்கள் என்னும் மனதுக்குப்புறம்பான ஆதாரத்தில் கவனஞ்செலுத்தும்போது உள்ளத்துக்குள்ளான ஆற்றலை அடைந்துகொள்வீர்கள். சரியான காரியத்தில் நாம் மனதை ஒருமுகப்படுத் தாவிட்டால் வல்லமையை இழக்கிறோம். சிலுவையின் பலன் இரட்சிப்பு, பரிசுத்தமாகுதல், ஆரோக்கியமடைதல் போன்றவை; ஆனால், நாம் அவை களில் ஒன்றையும் பிரசங்கிக்கக்கூடாது; இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையே நாம் பிரசங்கிக்கவேண்டும். இயேசுவை அறிவிப்பது தன் கடமையைத் தானாகச் செய்யும். உங்கள் பிரசங்கத்தில் தேவனை மையப்படுத்தக் கருத்தாயிருங்கள், அப்போது மக்கள் கூட்டம் வெளிப்படையாகக் கவனஞ்செலுத்தாவிட்டாலும், அவர்கள் ஒருபோதும் முன்பு இருந்ததுபோலிருக்கமுடியாது. உங்கள் பேச்சு எனக்கு முக்கியமற் றிருப்பதுபோலவே நான் என் சொந்தப் பேச்சைப் பேசினால், என் பேச்சும் உங்களுக்கு முக்கியமற்றிருக்கும்; ஆனால் நான் தேவனுடைய சத்தியத் தைப் பேசினால், நீங்களும் நானும் மறுபடியும் அதைச் சந்திப்போம். சகல வல்லமையும் குவிந்துள்ள அந்த மையத்தோடுள்ள தொடர்போடு இருக்க, சிலுவையாகிய ஆவிக்குரிய சக்தியின் மகாப்பெரிய குறிப்பில் நாம் கருத்தைச் செலுத்தவேண்டும்; அப்போது வல்லமை கட்டவிழ்த்து விடப்படும். தூய்மை இயக்கங்களிலும், ஆவியின் அனுபவக்கூட்டங் களிலும் கிறிஸ்துவின் சிலுவையில் சிந்தை செலுத்தப்படாமல், சிலுவை யினால் ஏற்பட்ட பயன்களில் கருத்துச் செலுத்தப்பட வாய்ப்புண்டு.

இன்று திருச்சபைகளின் பலவீனம் விமர்சிக்கப்படுகிறது, அந்த விமர்சனம் நியாயமானதே. ஆவிக்குரிய வல்லமை இதுவரையிலும் இவ்வாறு குவிந்திராததே இந்தப் பலவீனத்தின் ஒரு காரணம்; நாம் கல்வாரியின் சோகத்தையோ மீட்பின் கருத்தையோ தேவையான அளவு ஆழ்ந்து சிந்தித்ததில்லை.

ஆவிக்குரிய ஆற்றலின் அர்ப்பணம்

அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன். கலாத்.6:14.

கிறிஸ்துவின் சிலுவையைக்குறித்து நான் ஆழ்ந்து தியானிப்பேனேயானால் என் சொந்தத் தூய்மையில் அக்கறையுள்ள தற்சார்புடைய பக்தனாய் நான் ஆவதில்லை; இயேசுகிறிஸ்துவின் ஆர்வங்களில் ஓங்கிய கருத்துள்ளவனாகிறேன். நம்முடைய ஆண்டவர் தனித்து வாழ்ந்தவரோ துறவியோ அல்ல, அவர் சமுதாயத்தைவிட்டு ஒதுங்கவில்லை; ஆயினும் உள்ளாக எப்போதும் சமுதாயத்தோடு தொடர்பற்றிருந்தார்; அவர் விலகி வாழவில்லை, அவர் இன்னொரு உலகில் வாழ்ந்தார். அவர் சாதாரண உலகத்திலேயே மிகவும் அதிகமாய் வாழ்ந்தபடியால் அவர் காலத்திலுள்ள ஆன்மீகவாதிகள் அவரைப் போஜனப்பிரியனும் மதுபானப்பிரியனுமென்று அழைத்தார்கள். ஆயினும், ஆவிக்குரிய ஆற்றலைக்குறித்த அவருடைய அர்ப்பணத்தில் எதுவும் தலையிட நமது ஆண்டவர் அனுமதிக்கவில்லை.

அர்ப்பணத்தின் போலியென்பது பிற்காலத்தின் உபயோகத்துக்காக ஆவிக்குரிய வல்லமையைச் சேமித்துவைக்கும் நோக்கத்தோடு பலகாரியங்களை மனப்பூர்வமாக விட்டுவிடுவது; ஆனால் அது ஒரு உதவாக்கரையான தவறு. தேவனுடைய ஆவியானவர் அநேகருடைய பாவங்களை அழித்திருக்கிறார்; ஆனால் அவர்களுடைய வாழ்க்கையில் விடுதலையுமில்லை, நிறைவுமில்லை. இன்று நாம் பார்க்கிற ஆன்மீக வாழ்க்கையின் வகை இயேசுகிறிஸ்துவுடைய வாழ்க்கையின் திடமான தூய்மையிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்று இயேசு ஜெபித்தார். நாம் உலகத்திலிருக்கவேண்டும், ஆனால் உலகத்தாராயிருக்கக்கூடாது; புறம்பாகவல்ல, அடிப்படையாக நாம் தொடர்பற்றிருக்கவேண்டும்.

நமது ஆவிக்குரிய ஆற்றலின் அர்ப்பணத்தில் எதுவும் தலையிட நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. அர்ப்பணம் நம்முடைய பங்கு, பரிசுத்தமாக்குதல் தேவனுடைய பாகம்; தேவன் அக்கறை காட்டுகிறதில் மட்டும் நாம் கரிசனைகாண்பிக்க மனப்பூர்வமாய்த் தீர்மானிக்கவேண்டும். இயேசுகிறிஸ்து அக்கறை காட்டுகிற காரியம் இத்தகையதுதானா? அல்லது இயேசுவுக்கு எதிரெதிர் நிலைகளான ஆவி அக்கறை காண்பிக்கிற காரியமா இது? என்ற கேள்விகள் கேட்பதே குழப்பமான பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வழியாகும்.

வறுமையிலுள்ளவர்களின் உதாரத்துவம்

இலவசமாய் அவருடைய கிருபையினாலே.... நீதிமான்களாக்கப்படுகிறார்கள். ரோமர் 3:24.

தேவனுடைய கிருபையின் சுவிசேஷம் மானிட ஆத்துமாக்களில் தீவிரமான ஏக்கத்தையும் அதே அளவு கடும் வெறுப்பையும் எழுப்புகிறது; ஏனெனில், அது வெளிப்படுத்துகிற காரியங்கள் மனதுக்குப் பிடித்தமான வைகளல்ல. கொடுத்துக்கொண்டேயிருக்கும் பெருமை மனிதனில் உண்டு; ஆனால் வந்து பெற்றுக்கொள்ளுவது வேறு காரியம். இரத்தசாட்சியாக என் ஜீவனை நான் கொடுப்பேன், என்னையே நான் அர்ப்பணிப்பாகக் கொடுப்பேன், நான் எதையும் செய்வேன்; ஆனால், நரகத்துக்கு மிகவும் அருகதையான பாவியின் தரத்துக்கு என்னை இழிவுபடுத்தி, நான் செய்ய வேண்டியதெல்லாம் இயேசுகிறிஸ்துமூலமாய்க் கிடைக்கும் இரட்சிப்பாகிய ஈவை ஏற்றுக்கொள்ளுவதுமாத்திரமே என்று என்னிடம் கூறாதீர்கள் என்று அந்தப் பெருமைக் கூறவைக்கலாம்.

தேவனிடத்திலிருந்து நாம் ஒன்றையும் சம்பாதிக்கவோ அல்லது வென்று பெற்றுக்கொள்ளவோ முடியாது என்பதை நாம் உணரவேண்டும்; ஒன்றில் அதை ஈவாகப் பெற்றுக்கொள்ளவேண்டும், இல்லையென்றால் அது இல்லாமலிருக்கவேண்டும். நாம் வறுமையானவர்கள் என்கிற அறிவே ஆவிக்குரியநிலையில் மிகப்பெரிய ஆசீர்வாதம்; நாம் அந்நிலை அடையு மட்டும் நம்முடைய ஆண்டவர் சிறிதும் உதவிசெய்யமுடியாதவராகிறார். நம்மில் நாம் போதுமானவர்கள் என்று எண்ணுவோமானால் அவர் நமக்கு ஒன்றுஞ்செய்யமுடியாது; வறுமையின் வாசல்வழியாய் அவருடைய ராஜ்யத்திற்குள் நாம் பிரவேசிக்கவேண்டும். பெருமை அல்லது சுயஉரிமை போன்ற காரியங்களையுடைய தனவந்தராய் நாமிருக்கும் காலம்வரை தேவன் நமக்கு ஒன்றுஞ்செய்யமுடியாது. நாம் ஆவிக்குரிய பசியுள்ளவர் களாகும்போதுதான் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுகிறோம். பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய தன்மையாகிய தானத்தை நமக்குள் பயனுடை யதாக்குகிறார்; இயேசுவின் உயிர்ப்பிக்கும் ஜீவனையும் அவர் நமக்கு பகிர்ந்தளிக்கிறார்; நமக்கு அப்பாற்பட்டதை இயேசுவின் உயிர்ப்பிக்கும் ஜீவன் நமக்குள்ளே வைக்கிறது, நமக்கு அப்பாற்பட்டது நமக்குள்ளே வந்தவுடனே அது உன்னதத்துக்கு எழும்புகிறது, இயேசு வாழுகிற ராஜ்யத் திற்குள் நாம் உயர்த்தப்படுகிறோம் (யோவான் 3:5).

இயேசுகிறிஸ்துவின் பூரணத்துவம்

அவர் . . . என்னை மகிமைப்படுத்துவார். யோவான் 16:14.

இன்றுள்ள பக்தி இயக்கங்களைப்பொறுத்தமட்டும் புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள கடினமான அனுபவம் எதுவும் அவைகளில் இல்லை; இயேசுகிறிஸ்துவின் மரணத்தைத் தேவைப்படுவதொன்றும் அவைகளில் இல்லை; தேவைப்படுவதெல்லாம் பக்தியின் சூழ்நிலையும் ஜெபமும் தியான முமே. இவ்விதமான அனுபவம் தெய்வீகமானதல்ல, அற்புதமானதுமல்ல, அதற்குப் பாடுகளாகிய கிரயம் தேவன் கொடுக்கத் தேவைப்படவில்லை, அது ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தோய்க்கப்படவுமில்லை, மற்றும் பரிசுத்த ஆவியானவருடைய அதிகார முத்திரை அதில் போடப்படவுமில்லை. வியப்போடும் பயத்தோடும் அதைப் பார்த்து, இது சர்வவல்ல தேவனுடைய கிரியை என்று மக்களைக் கூறவைக்கும் அந்த அடையாளம் அதற்கு இல்லை. ஆனால் சர்வவல்ல தேவனுடைய கிரியையைக்குறித்துமாத்திரமே புதிய ஏற்பாடு போதிக்கிறது.

புதிய ஏற்பாட்டிலுள்ள கிறிஸ்தவ அனுபவத்தின் மாதிரி இயேசு கிறிஸ்துவாகிய நபருக்குநேரான தனிப்பட்ட உணர்ச்சிமிக்கப் பக்தியே. கிறிஸ்தவ அனுபவமென்று கூறப்படுகிற மற்ற ஒவ்வொரு வகையும் இயேசு வாகிய நபரோடு தொடர்பற்றதே. இயேசுகிறிஸ்து நமக்கொரு மாதிரி என்ற கருத்தேயொழிய, அந்த அனுபவத்தில் மறுபிறப்பில்லை, கிறிஸ்து வாழுகிற ராஜ்யத்திற்குள் மறுபடியும் பிறக்கிற அனுபவமுமில்லை. புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்து மாதிரியாயிருப்பதற்கு நீண்ட காலத்துக்குமுன் இரட்சக ராயிருக்கிறார். இன்று அவரை ஒரு மார்க்கத்தின் பெயரளவில் மட்டும் தலைவராகவும், வெறும் மாதிரியாகவும் சித்தரிக்கிறார்கள். அவர் அவ்வாறு மிருக்கிறார், அவைகளுக்கு அளவுகடந்து மேலானவராயுமிருக்கிறார்; அவரே இரட்சிப்பு, அவர் தேவனுடைய சுவிசேஷம்.

சத்தியஆவியாகிய அவர் வரும்போது.....என்னை மகிமைப் படுத்துவார் என்று இயேசு கூறினார். புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப் பட்டுள்ளதற்கு நான் என்னை ஒப்படைக்கும்போது, பரிசுத்த ஆவியாகிய ஈவை நான் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளுகிறேன்; அவர் இயேசு செய்தவற்றை எனக்கு வியாக்கியானிக்க ஆரம்பிக்கிறார், மற்றும் இயேசு கிறிஸ்து எனக்காக வெளிப்படையாகச் செய்தவற்றை எனக்குள் நடை முறையில் அவர் செய்து நிறைவேற்றுகிறார்.

நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்

அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை. 1 கொரி.15:10.

நம்முடைய இயலாமையைக்குறித்து நாம் தொடர்ந்து பேசுகிற முறை சிருஷ்டிகருக்கு நிந்தனையாகிறது. நம்முடைய திறமைக்கேட்டைக் குறித்து வருந்துவது தேவன் நம்மை வேண்டுமென்றே புறக்கணிப்பதாக அவரைப் பழிப்பதாகும். மனிதருக்கு முன்பாகப் பணிவாகத் தோன்றுகிற காரியங்களைத் தேவனுடைய பார்வையில் பரிசோதிக்கும் பழக்கத்தை அடைந்துகொள்ளுங்கள்; அப்போது அக்காரியங்கள் எவ்வளவு நம்பமுடியாதபடி பெருமைக்குரியவையாய் இருக்கின்றன என்று நீங்கள் கண்டுதிகைப்படைவீர்கள். நான் பரிசுத்தமாக்கப்பட்டவன் என்று சொல்ல நான் விரும்பக்கூடாது, நான் பரிசுத்தவானல்ல என்று நீங்கள் கூறக்கூடும். அதை நீங்கள் தேவனுக்கு முன்பாகக் கூறுங்கள்; அதன் கருத்து: இல்லை, ஆண்டவரே, என்னை இரட்சித்துப் பரிசுத்தமாக்குவது உமக்கு அசாத்தியம்; நான் அடைந்திராத வாய்ப்புக்கள் உண்டு; என் அறிவிலும் சரீரத்திலும் குறைபாடுகள் ஏராளமுண்டு; இல்லை, ஆண்டவரே, இது கூடாத காரியம் என்பதே. இக்கூற்று மக்களுக்குமுன் அற்புதமானத் தாழ்மைக்குரியதாய்த் தோன்றலாம், ஆனால் தேவனுக்குமுன் அது கீழ்ப்படிய மறுக்கும் மனப்பான்மையே.

மேலும், தேவனுக்குமுன்பாகத் தாழ்மையாய்த் தோன்றுகிற காரியங்கள் மனிதருக்குமுன்பாக எதிர்மாறாகத் தோன்றலாம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம், நான் இரட்சிக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறேன் என்று நான் அறிவேன் என்று கூறுவது தேவனுடைய பார்வையில் தாழ்மையின் சிகரம்; தேவன் உண்மையுள்ளவர் என்பதை அறியுமளவுக்கு உங்களை அவருக்கு முற்றிலும் ஒப்படைத்துவிட்டீர்கள் என்பது அதன் கருத்தாகும். நீங்கள் சொல்லுகிறவைகள் மனிதருக்குமுன்பாகத் தாழ்மையாய்த் தோன்றுகிறதா இல்லையா என்பதைக்குறித்து ஒருபோதும் உங்கள் தலையை உருட்டாதீர்கள்; ஆனால் தேவனுக்குமுன்பாக எப்போதும் தாழ்மையாய் இருங்கள், அவரே எல்லாவற்றுக்கும் எல்லாமுமாயிருக்கட்டும்.

முக்கியத்துவம் வாய்ந்த உறவு ஒன்று மாத்திரமே உண்டு; அது தனிப்பட்ட மீட்பரும் கர்த்தருமானவரோடுள்ள உங்கள் தனிப்பட்ட உறவே. மற்றவைகள் எல்லாவற்றையும் விட்டுவிடுங்கள், என்ன விலை கொடுக்க வேண்டியதுவந்தாலும் அந்த உறவைக் காத்துக்கொள்ளுங்கள்; தேவன் தம்முடைய நோக்கத்தை உங்கள் வாழ்க்கைமூலம் நிறைவேற்றுவார். ஒரு தனிநபர் வாழ்க்கை தேவனுடைய நோக்கங்களுக்கு விலைமதிப்பற்ற தகுதியுள்ளதாயிருக்கலாம்; உங்களுடையது அவ்வாழ்க்கையாயிருக்கலாம்.

நியாயப்பிரமாணமும் சுவிசேஷமும்

எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண் டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான். யாக்.2.10.

நீதிப்பிரமாணம் நம்மைப் பலவீன மனிதர் என்று கருதுவதில்லை, அது நம்முடைய பரம்பரைப் பண்புகளையும் பலவீனங்களையும் கணக்கில் எடுக்கிறதில்லை, நாம் பூரண சன்மார்க்கராயிருக்கவேண்டுமென்றே அது தேவைப்படுகிறது. நீதிப்பிரமாணம் உயர்குடி மக்களுக்கோ அல்லது நலிந் தவர்களுக்கோ மாற்றிக்கொள்வதில்லை, நித்தியமாயும் நிரந்தரமாயும் அது ஒன்றுபோலிருக்கிறது. தேவனால் விதிக்கப்பட்ட நீதிப்பிரமாணம் பலவீனருக் காகத் தன்னைப் பலவீனமாய் மாற்றுவதில்லை, அது நமது குறைவுகளை பொருட்படுத்தாதிருப்பதில்லை, எக்காலத்தும் நித்தியத்துக்கும் அது தனித்து நிலைத்திருக்கிறது. இதை நாம் உணரவில்லையென்றால், அதன் காரணம் நாம் உயிரோடில்லவேயில்லை என்பதே; நாம் உயிர்பெற்றவுடன் வாழ்க்கை சோகமாய் மாறுகிறது. நியாயப்பிரமாணமில்லாதவனாயிருந்தபோது நான் ஜீவனுள்ளவனாயிருந்தேன்; கற்பனை வந்தபோது பாவம் உயிர்கொண்டது, நான் மரித்தவனானேன் என்று பவுல் கூறுகிறார். இதை நாம் உணரும் போது தேவஆவியானவர் பாவத்தைக்குறித்து நம்மை உணர்த்துகிறார். ஒரு மனிதன் அந்நிலையை அடைந்து, தனக்கு நம்பிக்கையேயில்லை என்று கண்டுகொள்ளுமட்டும் இயேசுகிறிஸ்துவின் சிலுவை அவனுக்குக் கேலிக்கூத்தே. பாவஉணர்வு எப்போதும் நியாயப்பிரமாணத்தின் பயமுள்ள கட்டுப்பாட்டின் ஆவியைக் கொண்டுவருகிறது; அது ஒரு மனிதனை நம்பிக்கையற்றவனாய்ப் பாவத்துக்குக் கீழாய் விற்கப்பட்டவனாக்குகிறது. குற்றவாளியான பாவியாகிய நான் தேவனோடு ஒருபோதும் ஒப்புரவாக முடியாது, அது கூடாத காரியம். நான் தேவனோடு ஒப்புரவாகிறதற்கு ஒரேயொரு வழி மாத்திரமே உண்டு, அது இயேசுகிறிஸ்துவின் மரணமே. என்னுடைய கீழ்ப்படிதலினால் தேவனோடு ஒப்புரவாகமுடியும் என்னும் மறைந்திருக்கும் கருத்தை ஒழித்துவிடவேண்டும்; நம்மில் யார்தான் முழுப் பூரணமாய்த் தேவனுக்குக் கீழ்ப்படியமுடியும்?

நீதிப்பிரமாணம் நிபந்தனையோடு வரும்போதுதான் அதன் வல்ல மையை உணருகிறோம். தேவன் நம்மை ஒருபோதும் வற்புறுத்துவதில்லை. அவர் நம்மைச் செயல்பட வைக்கட்டும் என்று ஒரு மனநிலையில் எண்ணு கிறோம்; இன்னொரு மனநிலையில் அவர் நம்மைத் தனியே விடட்டும் என்று விரும்புகிறோம். தேவனுடைய சித்தம் ஏறுமுகத்திலிருக்கும் போதெல்லாம் எல்லாப் பலவந்தமும் போய்விடும். அவருக்குக் கீழ்ப்படிய நாம் மனப்பூர்வமாய்த் தெரிந்துகொள்ளும்போது தூரத்து நட்சத்திரத்தையும் மணலின் கடைசிப் பரலையும் நமக்கு உதவுமாறு தமது சர்வவல்லமை யினால் அவர் வற்புறுத்திக் கோருவார்.

கிறிஸ்தவப் பூரணத்துவம்

நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல். பிலிப்.3:12.

தேவனால் என்ன செய்யமுடியும் என்பதின் பூரண மாதிரிகளாக நம்மை உண்டாக்க அவர் விரும்புகிறார் என்று கற்பனைசெய்வது கண்ணி யாகும்; தம்மோடு நம்மை ஒன்றாக்குவதே தேவனுடைய நோக்கம். பரிசுத் தத்தைப் போதிக்கும் இயக்கங்களின் அழுத்தம் தேவன் தன்னுடைய அருங்காட்சியகத்தில் வைக்கப் பரிசுத்தத்தின் மாதிரிகளை உருவாக்குகிறார் என்பதாயிருக்க வாய்ப்புண்டு. தனிநபர் பரிசுத்தத்தைக்குறித்த இந்தக் கருத்தில் நீங்கள் தொடருவீர்களானால் உங்கள் வாழ்க்கையின் நோக்கம் தேவனுக்காயிராமல், உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வெளிப்பாடு என்று நீங்கள் அழைக்கிறதற்காகவே இருக்கும். நான் வியாதியாயிருக்க வேண்டுமென்பது ஒருபோதும் தேவனுடைய சித்தமாயிருக்கமுடியாது என்று நீங்கள் கூறுகிறீர்கள். தம்முடைய சொந்தக் குமாரனைக் காயப்படுத்தினது தேவனுடைய சித்தமாயிருக்குமானால் அவர் ஏன் உங்களைக் காயப்படுத் தக்கூடாது? ஒரு பரிசுத்தவான் எவ்வாறிருக்கவேண்டுமென்ற கருத்தோடு உங்களுக்குள்ள உடன்பாடு தேவனை வெளிப்படுத்தாது; இயேசுகிறிஸ்து வோடுள்ள உங்கள் ஆழமான உறவும் சுகமாயிருந்தாலும் சுகவீனமாயிருந் தாலும் அவருக்கான உங்கள் அர்ப்பணிப்புமே அவரை வெளிப்படுத்தும்.

கிறிஸ்தவப் பூரணத்துவம் என்பது மானிடப் பூரணத்துவமல்ல, அது ஒருபோதும் அவ்வாறிருக்கமுடியாது. மானிடவாழ்க்கையின் ஒவ்வா மைகளின் மத்தியிலும் தன்னை வெளிப்படுத்தும் தேவனோடுள்ள உறவின் பூரணமே கிறிஸ்தவப் பூரணத்துவமாகும். இயேசுகிறிஸ்துவின் அழைப்புக்கு நீங்கள் கீழ்ப்படியும்போது, உங்களைத் தாக்கும் முதலாம் காரியம், நீங்கள் செய்யவேண்டிய காரியங்களின் தொடர்பற்ற நிலையாகும்; அடுத்ததாக உங்களைத் தாக்கும் காரியம், மற்ற மக்கள் பூரணமாகச் சீரான வாழ்க்கை செய்கிறதாகத் தோன்றுவதே. தேவன் தேவையற்றவர் என்றும், மனித முயற்சியினாலும் பக்தியினாலும் தேவன் விரும்புகிற நிலையை எட்டலாம் என்றுமுள்ள கருத்தை அத்தகைய வாழ்க்கைகள் உங்களுக்குத் தரலாம். விழுந்துபோன உலகத்தில் இது ஒருபோதும் செய்யப்படமுடியாது. என் வாழ்க்கை மற்றவர்களில் என்னைக்குறித்தப் பாராட்டையல்ல, தேவனைக் குறித்த வாஞ்சையை உருவாக்கத்தக்கதாக நான் தேவனோடு பரிபூரண ஐக்கியத்தில் வாழவே அழைக்கப்பட்டிருக்கிறேன். என் சுயத்தைக்குறித்தக் கருத்துக்கள் நான் தேவனுக்குப் பயன்படுவதைத் தடுக்கிறது. தம்முடைய காட்சிசாலையில் மாதிரியாக வைக்க அவர் என்னைப் பூரணப்படுத்த விரும்பவில்லை; என்னை அவர் பயன்படுத்தக்கூடிய இடத்திற்கு என்னைக் கொண்டுசெல்லுகிறார். அவர் விருப்பம்போலச் செயல்படட்டும்.

பலத்தினாலுமல்ல, பராக்கிரமத்தினாலுமல்ல

என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ள தாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்ட தாயிருந்தது. 1 கொரி.2:5.

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது, சுவிசேஷத்தின் வல்லமையில் நம்பிக்கைவைப்பதற்குப்பதிலாக, இரட்சிப்பின் வழியைக்குறித்த உங்கள் தெளிவான அறிவில் நம்பிக்கைவைத்தால், உண்மையான அனுபவத்தை மக்கள் அடைய நீங்கள் தடைசெய்கிறீர்கள். இரட்சிப்பின் வழியைக்குறித்து நீங்கள் அறிந்துள்ள தகவலை நீங்கள் அறிவிக்கும்போது, நீங்களும் தேவன்பேரிலுள்ள விசுவாசத்தில் வேரூன்றி நிலைபெற்றிருக்கக் கருத்தாய் இருக்கவேண்டும். உங்கள் விளக்கவுரைத் தெளிவாயிருப்பதில் நீங்கள் ஒருபோதும் சார்ந்திருக்கக்கூடாது; ஆனால், உங்கள் விளக்கவுரையை நீங்கள் கொடுக்கும்போது பரிசுத்த ஆவியானவரில் நீங்கள் சார்ந்திருக்கக் கருத்தாயிருங்கள். தேவனுடைய மீட்கும் வல்லமையின் அவசியத்தைச் சார்ந்திருங்கள்; அப்படியானால் ஆத்துமாக்களுக்குள் தம்முடைய சொந்த ஜீவனை அவர் சிருஷ்டிப்பார்.

நீங்கள் உண்மையான அனுபவத்தில் வேரூன்றிவிட்டால் ஒன்றும் உங்களை அசைக்கமுடியாது. உங்கள் விசுவாசம் அனுபவங்களில்மட்டும் வைக்கப்படுமானால் நடைபெறுகிற எந்தச் சம்பவமும் அந்த விசுவாசத்தைப் பெரும்பாலும் கவிழ்க்கலாம்; ஆனால் தேவனையோ, மீட்பின் சர்வவல்ல உண்மையையோ ஒன்றும் எப்போதும் கவிழ்க்கமுடியாது; அதை உங்கள் விசுவாசத்தின் அடித்தளமாக்குங்கள்; அப்போது தேவன் நித்தியமாயிருப்பது போல நீங்களும் நித்தியமாய்ப் பத்திரமாயிருப்பீர்கள். இயேசுகிறிஸ்துவோடு ஒரு தடவை நீங்கள் தனிப்பட்ட தொடர்புக்குள் வருவீர்களானால் ஒருபோதும் மறுபடியும் அசைக்கப்படுவதில்லை. அதுதான் பரிசுத்தமாகுதலின் பொருள். பரிசுத்தமாகுதல் என்பது வெறும் ஒரு அனுபவம்மாத்திரமே என்ற கருத்தை விசுவாசிக்க ஆரம்பிக்கவும், பரிசுத்தமாக்கப்படுதலும் பரிசுத்தமாக்கப்பட வேண்டும் (யோவான் 17:19 பார்க்க) என்பதை மறக்கவுஞ்செய்தால் மனித ருடைய அனுபவத்தைத் தேவன் அங்கீகரிப்பதில்லை. தேவன் என்னைத் தமது கரங்களாயும் கால்களாயும் பயன்படுத்தும்படி, பரிசுத்தமாக்கப்பட்ட என் வாழ்க்கையை அவருடைய சேவைக்காக நான் மனப்பூர்வமாய்க் கொடுக்கவேண்டும்.

எதிர்ப்பின் பிரமாணம்

ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு. வெளி.2:7.

இயற்கையிலும் ஆவிக்குரிய நிலையிலும் போரில்லாத வாழ்க்கை சாத்தியமல்ல. சரீரம், மனது, தார்மீகம் மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கையின் அடிப்படை எதிர்ப்பே. இது வாழ்க்கையின் பகிரங்கமான உண்மை.

பௌதிக வாழ்க்கைக்கும் வெளிப்புற இயற்கைக்குமிடையேயுள்ள சமநிலையே ஆரோக்கியமாகும்; அந்த ஆரோக்கியம் வெளிப்புறமுள்ள காரியங்களை எதிர்க்க உட்புறமிருக்கிற போதுமான சக்தியினால் மாத்திரம் பராமரிக்கப்படுகிறது. என்னுடைய பௌதிக வாழ்க்கைக்குப் புறம்பேயுள்ள வைகள் எல்லாம் எனக்கு மரணத்தைக் கொண்டுவரவே வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. நான் உயிரோடிருக்கும்போது என்னைப் பேணுகிறவைகள் நான் மரித்ததும் என்னைச் சிதைவுறச்செய்கின்றன. போதுமானஅளவு போராடும் சக்தி எனக்கிருந்தால் சமநிலை ஆரோக்கியத்தை நான் உருவாக்குகிறேன். மனம் சார்ந்த வாழ்க்கையைப் பொறுத்தும் அது உண்மையே. திடமான மனநிலையை நான் பராமரிக்கவேண்டுமானால், நான் போராட வேண்டும்; அந்த வழியில் சிந்தனாசக்தியென்று அறியப்படுகிற மனதின் சமநிலை உருவாக்கப்படுகிறது.

தார்மீகத்தைப்பொறுத்தும் அவ்வாறே. ஒழுக்கத்தின் தன்மையில் பங்கெடுக்காத எல்லாம் என்னிலிருக்கும் ஒழுக்கத்திற்கு எதிரியே; அதை நான் மேற்கொண்டு ஒழுக்கத்தை உருவாக்குகிறேனா என்பது எத்தகைய அறநெறியின் திறமை எனக்கு இருக்கிறது என்பதைச் சார்ந்தது. நான் போராடியவுடனே, அந்தக் குறிப்பிட்ட காரியத்தில் நான் ஒழுக்கமடைகிறேன். ஒரு மனிதனும் தவிர்க்கமுடியாததால் ஒழுக்கமாயிருப்பதில்லை; ஒழுக்கம் முயன்று பெறப்படுகிறது.

ஆவிக்குரிய வாழ்க்கையிலும் அவ்வாறுதான். இந்த உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு என்று இயேசு கூறினார்; அதாவது ஆவிக்குரியவையல்லாதவை எல்லாம் எனக்கு அழிவைக் கொண்டுவரும்; ஆனாலும் திடன்கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் என்றும் அவர் கூறினார். எனக்கு எதிராக வருகிறவைகளை நான் சாதகமாக்கிக் கொள்ளவும், அவ்வழியில் தூய்மையின் சமநிலை உருவாக்கவும் நான் கற்றுக்கொள்ளவேண்டும்; அப்போது எதிர்ப்பைச் சந்திப்பது மகிழ்ச்சியாகும்.

என் மனச்சார்புக்கும் இயேசுகிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய கற்பனைகளுக்குமிடையேயுள்ள சமநிலையே பரிசுத்தமாகும்.

பரிசுத்த ஆவியானவரின் ஆலயம்

சிங்காசனத்தில்மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன். ஆதி.41:40.

தேவனுடைய ஆதிக்கத்தின்கீழ் என்னுடைய சரீரத்தை நான் ஒழுங்குப்படுத்துகிற முறையைக்குறித்து நான் அவருக்குக் கணக்குக் கொடுக்கவேண்டும். தேவனுடைய கிருபையை நான் விருதாவாக்கவில்லை --அதாவது அதைப் பயனற்றதாக்கவில்லை--என்று பவுல் கூறுகிறார். தேவனுடைய கிருபை வரம்பற்றது, இயேசுவின் இரட்சிப்புப் பூரணமானது, அது என்றென்றைக்குமாக நிறைவேற்றப்பட்டுவிட்டது; நான் இரட்சிக்கப்பட்டுக்கொண்டிருக்கவில்லை, நான் இரட்சிக்கப்பட்டுவிட்டேன்; தேவனுடைய சிங்காசனம் நித்தியமானதுபோல இரட்சிப்பும் நித்தியமானது; நான் செய்ய வேண்டிய காரியம் தேவன் எனக்கு உட்புறம் செய்கிறதை நான் புறம்பே வெளிப்படுத்தவேண்டும். உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள் என்று கூறப்பட்டுள்ளது; அதைச் செய்வதற்கு நானே பொறுப்பு. அதன் கருத்து என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவின் ஜீவனை ஞானார்த்த மாகவல்ல நடைமுறையில் அழுத்தமாக இந்தச் சரீரத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்பதே. என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் என்று பவுல் கூறுகிறார். ஒவ்வொரு பரிசுத்தவானும் தேவனுக்காகத் தன்னுடைய சரீரத்தைப் பூரணமான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கமுடியும். பரிசுத்த ஆவியானவரின் ஆலயம் முழுவதின்மேலும், அதாவது நம் கற்பனைகள், பற்றாசைகள்மேலும் ஆட்சிசெய்யவே தேவன் நம்மைப் படைத்திருக்கிறார். நாம் இவைகளுக்குப் பொறுப்பானவர்கள்; அளவுகடந்த ஆசைகளுக்கு நாம் ஒருபோதும் இணங்கக்கூடாது. நம்மில் அநேகரும் நம்மிடம் கண்டிப் பாயிருப்பதைவிடக் கூடுதல் மற்றவர்களிடம் கண்டிப்பாயிருக்கிறோம்; நம்மிலுள்ள காரியங்களுக்குச் சாக்குப் போக்குச் சொல்லுகிறோம், அதே வேளையில் நமக்கு இயல்பாக விருப்பமில்லாத காரியங்களைப் பிறரில் கண்டால் அவைகளைக் கண்டனம் செய்கிறோம்.

உங்கள் சரீரங்களை....ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டு மென்று.....உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன் என்று பவுல் கூறுகிறார். என்னுடைய சரீரம் என் ஆண்டவரும் எஜமானுமாகியவரின் ஆலயமாக இருக்கும் என்பதை அவரோடு ஒத்துக்கொள்ளுகிறேனா என்பதே தீர்மானிக்கவேண்டிய காரியம். அப்படியானால், சரீரத்துக்குரிய முழுமையான பிரமாணமும் என் சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயம் என்னும் வெளிப்படுத்தலில் எனக்குச் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது.

மேகத்தில் வில்

நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும். ஆதி.9:13.

மனிதஇனம் தேவனோடு தார்மீக உறவுக்குள் பிரவேசிக்கவேண்டுமென்பது தேவனுடைய சித்தம்; இந்த நோக்கத்திற்காக அவருடைய உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டன. தேவன் ஏன் என்னை இரட்சிக்காதிருக்கிறார் என்கிறோமா? அவர் என்னை இரட்சித்திருக்கிறார்; ஆனால், அவரோடுள்ள உறவுக்குள் நான் பிரவேசிக்கவில்லை. தேவன் ஏன் இதையும் அதையும் செய்யவில்லை என்கிறோமா? அவர் அதைச் செய்துவிட்டார், உடன்படிக்கையின் உறவுக்குள் நான் பிரவேசிப்பேனா என்பதுதான் கேள்வி. தேவனுடைய எல்லாப் பெரிய ஆசீர்வாதங்களும் நிறைவேற்றப்பட்டு பூரணமாகிவிட்டன; ஆயினும், அவருடைய உடன்படிக்கையின் அடிப்படையில் அவரோடுள்ள உறவுக்குள் நான் பிரவேசிக்கும்வரை அவைகள் எனக்குச் சொந்தமல்ல.

தேவனுக்காகக் காத்திருப்பது என்பது அவிசுவாசத்தின் அவதாரம், அவரில் எனக்கு விசுவாசமில்லையென்பது அதினால் பொருளாகிறது; நான் ஏதாயினும் ஒரு காரியத்தில் நம்பிக்கை வைக்கத்தக்கதாக தேவன் அதை என்னில் செய்யும்படி நான் காத்திருக்கிறேன். தேவன் அதைச் செய்யமாட்டார், ஏனெனில், அது தேவனுக்கும் மனிதருக்குமிடையேயுள்ள உறவின் அடிப்படையல்ல. மனிதனோடுள்ள தமது உடன்படிக்கையில் தேவன் எவ்வாறு தம்மை விட்டுக்கொடுக்கிறாரோ அவ்வாறே மனிதனும் தன்னுடைய உடன்படிக்கையில் தன்னை விட்டுக்கொடுக்கவேண்டும். தேவனில் விசுவாசம் வைக்கிறோமா என்பதுதான் கேள்வி--அது அரிதான காரியம்; நம்முடைய உணர்ச்சிகளில் மாத்திரம் நமக்கு விசுவாசமுண்டு. என்னிடம் இருக்கிறது என்று நான் அறியும்படி ஒரு காரியத்தைத் தேவன் என் கையில் தந்தாலன்றி நான் தேவனை விசுவாசிப்பதில்லை; அதன்பின், இப்போது நான் விசுவாசிக்கிறேன் என்று கூறுகிறேன். அங்கு விசுவாசம் இல்லை. என்னை நோக்கிப் பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். அங்கு விசுவாசம் தேவைப்படுகிறது.

தேவனுடைய உடன்படிக்கையின் அடிப்படையில் அவரோடு நான் உண்மையாகவே காரியங்களில் ஈடுபட்டு, எல்லாவற்றையும் விட்டுவிடும்போது, அதில் தகுதியைக்குறித்த உணர்வுக்கும் மனிதருடைய பங்குக்கும் இடமேயில்லை; தேவனோடுள்ள ஐக்கியத்திற்குள் கொண்டுவரப்படுகிற பேரளவிலான பூரண உணர்வுமாத்திரமே உண்டாகும்; அப்போது எல்லாம் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் மாற்றப்படும்.

மனந்திரும்புதல்

தேவனுக்கேற்ற துக்கம்.....இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. 2 கொரி.7:10.

என் பாவம், என் பாவம், என் இரட்சகர்,
உம்மீது விழுந்தது எத்தனை துக்கம்!

என்னும் பாடல் வரிகள் பாவ உணர்வைத் தெளிவாகச் சித்தரிக்கின்றன. பாவ உணர்வு என்பது ஒரு மனிதனை எக்காலத்திலும் தாக்கக்கூடிய மிகவும் அரிதான சம்பவங்களில் ஒன்றாகும். தேவனைக்குறித்த அறிவின் வாசற்படி அது. பரிசுத்த ஆவியானவர் வரும்போது பாவத்தைக்குறித்துக் கண்டித்து உணர்த்துவார் என்று இயேசுகிறிஸ்து கூறினார்; பரிசுத்த ஆவியானவர் ஒரு மனிதனின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்பி, அவனைத் தேவனுடைய பிரசன்னத்துக்குள் கொண்டுவரும்போது, மனிதரோடுள்ள அவனுடைய உறவல்ல, தேவனோடுள்ள அவனுடைய உறவே அவனுக்கு வேதனைகொடுக்கும்; எனவே அவன், தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன் என்று கூறுவான். பாவ உணர்வும் பாவமன்னிப்பின் அற்புதமும் பரிசுத்தமும் ஒன்றோடொன்று பின்னிக்கிடப்பதால், பாவம் மன்னிக்கப்பட்டவன் மாத்திரமே பரிசுத்தவான்; அவன் முன்பு எப்படி இருந்தானோ அதற்கு நேர்மாறாகத் தேவனுடைய கிருபையால் வாழ்ந்து, தான் மன்னிக்கப்பட்டவன் என்பதை நிரூபிக்கிறான். மனந்திரும்புதல் ஒரு மனிதனை எப்போதும் நான் பாவஞ்செய்தேன் என்று கூறும் நிலைக்குக் கொண்டு வரும். தேவன் செயல்படுகிறார் என்பதின் மிகவும் நிச்சயமானத் தெளிவு ஒரு மனிதன் நான் பாவஞ்செய்தேன் என்பதை மனதாரக் கூறுவதுதான்; அவ்வாறு மனதாரக் கூறாவிட்டால், அது தவறு செய்வதால் வரும் பச்சாத்தாபமும், தன்னிலுள்ள வெறுப்பின் இயல்புச் செயலுமே.

மனந்திரும்புதலால் வரும் கூர்மையான வலி ஒரு மனிதனுடைய கௌரவமான சிறப்பைத் தாக்குவதின்வழியாகவே தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கமுடியும்; அந்த வேதனைகளை உண்டாக்கும் பரிசுத்த ஆவியானவர் அந்த வாழ்க்கையில் தேவகுமாரனை உருவாக்க ஆரம்பிக்கிறார். விழிப்பான மனந்திரும்புதலிலும், சுயேச்சையான பரிசுத்தத்திலும் புதிய வாழ்க்கைத் தன்னை வெளிப்படுத்தும், ஒருபோதும் நேர்மாறாயல்ல. கிறிஸ்தவத்தின் அஸ்திவாரம் மனந்திரும்புதல். மிகச்சரியாகச்சொன்னால், ஒரு மனிதன் தான் விரும்பும்போது மனந்திரும்பமுடியாது; மனந்திரும்புதல் தேவனுடைய ஈவு; பியூரிட்டன் சபையின் முற்கால மக்கள் கண்ணீரின் வரத்துக்காக ஜெபிப்பது வழக்கம். மனந்திரும்புதலின் நன்மையை நீங்கள் அறியாவிட்டால் நீங்கள் இருளிலிருக்கிறீர்கள். எவ்வாறு துக்கப்படவேண்டுமென்பதை மறந்துவிட்டீர்களோவென்று உங்களை நீங்களே சோதனை செய்துகொள்ளுங்கள்.

தேவனுடைய பாரபட்சமற்ற வல்லமை

பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார். எபி.10:14.

நம்முடைய பாவத்துக்காகத் துக்கப்பட்டதினிமித்தம் நாம் மன்னிக்கப்பட்டிருக்கிறோம் என்று நினைத்தால் தேவகுமாரனுடைய இரத்தத்தை நாம் காலின்கீழ் மிதிக்கிறோம். தேவன் மன்னிப்பதற்கும், அளக்கமுடியாத ஆழத்தில் அவர் மறப்பதற்குமுரிய ஒரே விளக்கம் இயேசுகிறிஸ்துவின் மரணமே. தேவன் நமக்காகச் செய்துநிறைவேற்றிய பிராயச்சித்தப்பலியை நாம் ஆளத்துவமாக சுதந்தரமாக்குவதால் ஏற்படும் விளைவுதான் நமது மனந்திரும்புதல். கிறிஸ்து இயேசு நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார். கிறிஸ்து நமக்கு இவை எல்லாமுமாக ஆக்கப்பட்டார் என்று நாம் உணரும்போது, தேவனுடைய அளவற்ற மகிழ்ச்சி ஆரம்பிக்கிறது; எங்கெங்கெல்லாம் தேவனுடைய மகிழ்ச்சி இல்லையோ அங்கெல்லாம் மரணத் தீர்ப்பு செயல்படுகிறது.

நாம் யார் என்பதோ, எப்படிப்பட்டவர் என்பதோ ஒரு பொருட்டல்ல, இயேசுகிறிஸ்துவின் மரணத்தினால் தேவனுக்குள் மீண்டும் பூரணமாகப் பழைய நிலைக்குக் கொண்டுவரப்படமுடியும், அதற்கு வேறு வழியில்லை; அது இயேசுகிறிஸ்து மன்றாடுவதினாலல்ல, அவர் மரித்ததினாலேயே நடைபெறுகிறது. அதைச் சம்பாதிக்கமுடியாது, ஏற்றுக்கொள்ளவேண்டும். சிலுவையை மனதார ஒப்புக்கொள்ள மறுக்கிற எல்லா மன்றாட்டுகளும் வீண்; அது இயேசு திறந்துவைத்திருக்கிற கதவு தவிர வேறொரு கதவில் பலமாகத் தட்டுவதே. ஒரு பாவியாக ஏற்றுக்கொள்ளப்படுவது அதிக இழிவு; எனவே, அவ்வழியில் வரமாட்டேன் என்று கூறாதேயுங்கள். ஏனெனில் (நாம் இரட்சிக்கப்படுவதற்கு) வேறொரு நாமம் இல்லை. தேவன் கருணையற்றவர்போலத் தோன்றுவது அவருடைய நிஜமான இருதயத்தை வெளிப்படுத்துகிறது, அவருடைய பாதையில் அளவற்ற நுழைவாயில்கள் உண்டு. அவருடைய இரத்தத்தின்மூலம் பாவமன்னிப்பு நமக்குண்டு. ஒருபோதும் இயேசுகிறிஸ்துவில் இல்லாதிருந்த எல்லாவற்றின் மரணத்துக்கு அவரோடு ஒன்றிப்பதே அவருடைய மரணத்தோடு ஒன்றிப்பதின் பொருளாகும்.

தீயமனிதர்களைத் தேவன் நல்லவர்களாக்குவதால் அவர்களை மாத்திரம் இரட்சிப்பதில் அவர் நியாயப்படுத்தப்படுகிறார்; நாம் முற்றிலும் தவறிழைத்திருக்க, நாம் எல்லாம் சரியாயிருக்கிறோமென்று நம்முடைய ஆண்டவர் பாவிப்பது கிடையாது. இயேசுவின் மரணத்தின்மூலமாகத் தேவன் தீயவனைத் தூயவனாக்குகிற கிருபாதாரபலியே பிராயச்சித்தம்.

மாமிசமானதின் இடறல்

கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சை களையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். கலாத்.5:24.

மாம்சீக வாழ்க்கை பாவமானதல்ல; ஆனால், நாம் பாவத்தின் கொள்கையை எதிர்க்கிறவர்களாகவேண்டும்; எந்த வடிவத்திலும் தோற்றத் திலுமுள்ள பாவத்தோடு நமக்கு எந்தத் தொடர்பும் இருக்கக்கூடாது. பாவம் நரகத்துக்கும் பிசாசுக்கும் சொந்தம்; தேவனுடைய பிள்ளையாக நான் பரலோகத்துக்கும் தேவனுக்கும் சொந்தம். பாவத்தை விட்டுவிடுவதல்ல, என்மேல் எனக்குரிய உரிமைகளையும், என் இயற்கையான சுயாதீனத் தையும், சுயநம்பிக்கையையும் விட்டுவிடுவதுதான் முக்கியம்; இங்குதான் யுத்தம் செய்யவேண்டியதிருக்கிறது. இயற்கையான கண்ணோட்டத்தில் சரியாகவும் சீரியதாகவும் நல்லதாகவும் தோன்றுகிற காரியங்களே நாம் தேவனுக்காக உன்னதமானவர்களாவதிலிருந்து தூரப்படுத்துகின்றன. தேவனுக்கு நம்மை அர்ப்பணிப்பதை எதிர்க்கிறவைகள் இயற்கையான நற்பண்புகளே என்பதைப் பகுத்தறிவது நமது ஆத்துமாவை மகாப்பெரிய போரின் மத்தியில் கொண்டுவருவதாகும். நம்மில் மிகச்சிலரே அசுத்தம், தீமை மற்றும் தவறானதோடு வாதாடுகிறோம். ஆனால், பிறர் நன்மையா னவைகளைக்குறித்தே வாதாடுகிறோம். நல்லதுதான் அதைவிட நல்லதைப் பகைக்கிறது; இயற்கையான சன்மார்க்கத்தில் எவ்வளவு உயரமாகச் செல்லுகிறீர்களோ அவ்வளவு வலுவாகிறது இயேசுகிறிஸ்துவுக்குநேரான எதிர்ப்பு. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தைச் சிலுவையிலறைந் திருக்கிறார்கள். உங்களிலிருக்கிற மாம்சீக வாழ்க்கைக்கு நீங்கள் கொடுக்க வேண்டிய விலை கொஞ்சமல்ல, எல்லாம். ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் தன்னைத்தான், அதாவது தன்னுடைய உரிமைகளை, வெறுக்கக்கடவன் என்று இயேசு கூறினார்; இதைச் செய்வதற்குமுன் அந்த மனிதன் இயேசுகிறிஸ்து யார் என்பதை உணரவேண்டும். உங்கள் சுயாதீனத்தின் அடக்கத்துக்குச் செல்ல மறுப்பதில் எச்சரிக்கையாயிருங்கள்.

மாம்சத்துக்குரிய வாழ்க்கை ஆவிக்குரியதல்ல. பலியின்மூலமாக மட்டுமே அதை ஆவிக்குரியதாக மாற்றமுடியும். மாம்சத்தை நாம் தீர்மானமாகப் பலியிடாவிட்டால் தெய்வீகம் நமக்குள் மாம்சீகமாக மாறாது. அதற்கு ஒரு தனிச்சிறப்பான வழியில்லை. நாமாகவே அதற்கு ஒரு தீர்வு காணவேண்டும். ஜெபிப்பதல்ல, நிறைவேற்றுவதே முக்கியம்.

மாம்சீகத்தின் காணிக்கை

ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள் என்று எழுதியிருக்கிறது; ஒருவன் அடிமையானவளிடத்தில் பிறந்தவன், ஒருவன் சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன். கலாத்.4:22.

கலாத்தியர் நிருபத்தின் இந்த அதிகாரத்தில் பவுல் பாவத்தைக்குறித்தல்ல, மாம்சத்துக்கும் ஆவிக்குமிடையேயுள்ள தொடர்பையே விளக்குகிறார். மாம்சீகமானது பலியின்மூலமாக ஆவிக்குரியதாக மாற்றப்படவேண்டும்; இல்லையெனில் நிஜவாழ்க்கையில் மகாப்பெரிய பிரிவு உண்டாக்கப்படும். மாம்சீகம் பலியிடப்படுவதைத் தேவன் ஏன் உத்தரவிடவேண்டும்? தேவன் அப்படி உத்தரவிடவில்லை. அது தேவனுடைய அனுமதிக்கப்பட்டச் சித்தமே தவிர அவருடைய ஆணையல்ல. மாம்சீகத்தைக் கீழ்ப்படிதலின்மூலமாக ஆவிக்குரியதாக உருமாற்றவேண்டும் என்பதே தேவனுடைய ஆணை; பாவமே மாம்சீகத்தைப் பலியிடத் தேவையாக்கிற்று.

ஈசாக்கைப் பலியிடுமுன் ஆபிரகாம் இஸ்மவேலைத் தியாகம் செய்யவேண்டியதாயிற்று. நம்மில் சிலர் மாம்சத்தைப் பலிசெலுத்துமுன் தேவனுக்கு ஆவிக்குரிய பலிகளைச் செலுத்த முயற்சிக்கிறோம். நமது சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பதே தேவனுக்கு நாம் ஆவிக்குரிய பலிசெலுத்தும் ஒரே வழி. பரிசுத்தமாகுதல் என்றால் பாவத்திலிருந்துள்ள விடுதலையைவிடக் கூடுதலானது; தேவனால் இரட்சிக்கப்பட்ட நான், என்ன கிரயம் கொடுக்கவேண்டியதுவரும் என்று கவலைப்படாமல், என்னையே தேவனுக்கு மனப்பூர்வமாக ஒப்படைப்பதே பரிசுத்தமாகுதலின் கருத்தாகும்.

ஆவிக்குரியதற்கு நாம் மாம்சத்தைப் பலியிடாவிட்டால் நமக்குள் இருக்கிற தேவகுமாரனுடைய ஜீவனை மாம்சீக வாழ்க்கைப் பரிகசிக்கும், தொடர்பானப் பதற்றத்தை உண்டாக்கும். கட்டுப்பாடில்லாத ஆவிக்குரிய இயல்பின் எப்போதுமுள்ள விளைவே இது. உடல் சார்ந்தும் ஒழுக்கம் சார்ந்தும் மனம் சார்ந்தும் நம்மை நாமே கட்டுப்படுத்தப் பிடிவாதமாக மறுப்பதினால் நாம் தவறிப்போகிறோம். நான் குழந்தையாயிருந்தபோது கண்டிக்கப்படவில்லை என்று கூறாதேயுங்கள். இப்போது உங்களை நீங்களே கட்டுப்படுத்தவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் தேவனுக்கான உங்களுடைய வாழ்க்கை முழுவதையும் நீங்கள் கெடுத்துவிடுவீர்கள்.

மாம்சத்துக்குரிய வாழ்க்கைக்கு நாம் செல்லம் கொடுக்கும்போது தேவன் அதோடு இருக்கமாட்டார்; ஆனால் அதை ஒதுக்கிவைத்துத் தீர்மானமாகக் கீழ்ப்படுத்துங்கள், அப்போது தேவன் அதோடு இருப்பார்; அவர் கிணறுகளையும் நீரூற்றுக்களையும் திறந்து, மாம்சீகத்துக்கான அவருடைய எல்லா வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்றுவார்.

தனித்தன்மை

ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுக்கக்கடவன். மத்.16:24.

தனிநபருடைய வாழ்க்கையின் மேல்தோடுதான் தனித்தன்மை. தனித்தன்மை மற்றவர்களை முழங்கையால் தள்ளிப் பிரித்துவைக்கிறது, தனிமைப்படுத்துகிறது. இது குழந்தையின் இயல்பு, அது சரியே; ஆனால், தனிநபர் வாழ்க்கைதான் தனித்தன்மையென்றுத் தவறாகக் கருதினால் நாம் ஒதுக்கப்பட்ட நிலையிலிருப்போம். தனிநபர் வாழ்க்கையின் பாதுகாப்புக்காகத் தேவனால் படைக்கப்பட்ட இயற்கையான மேல்உறைதான் தனித்தன்மையாகிய மேல்தோடு; ஆனால் தனிநபர் வாழ்க்கை வெளியே வந்து தேவனோடுள்ள ஐக்கியத்துக்குள் கொண்டுவரப்படுவதற்குத் தனித்தன்மை விலகவேண்டும். இச்சை அன்புக்குப் போலியானதாயிருப்பதுபோலத் தனித்தன்மை தனிநபர் வாழ்க்கைக்குப் போலியானதாயிருக்கிறது. தேவன் தமக்காக மனித இயற்கையை வடிவமைத்தார்; தனித்தன்மையோ தனக்கென்று மனித இயற்கையை இழிவுபடுத்துகிறது.

சுதந்தர எண்ணமும் எதிர்க்கும் சுபாவமுமே தனித்தன்மையின் பண்புகள். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையை வேறெதையும்விட அதிகமாகத் தடைசெய்வது தனித்தன்மையின் தொடர்பான வற்புறுத்தல். என்னால் விசுவாசிக்கமுடியவில்லையென்று நீங்கள் கூறினால் அதன் காரணம் தனித்தன்மை தடையாயிருப்பதுதான்; தனித்தன்மையால் ஒரு போதும் விசுவாசிக்கமுடியாது. ஆளத்துவத்தாலோ விசுவாசியாமலிருக்க முடியாது. தேவனுடைய ஆவியானவர் செயல்பட்டுக்கொண்டிருக்கும்போது உங்களை நீங்களே கவனித்துக்கொள்ளுங்கள். உங்களுடைய தனித்தன்மையின் ஓரங்களுக்கு அவர் உங்களைத் தள்ளுகிறார், ஒன்றில் மாட்டேன் என்று நீங்கள் கூறவேண்டும், அல்லது உங்களை ஒப்படைக்கவேண்டும்; அதாவது தனித்தன்மையாகிய மேல்மூடியை உடைத்து தனிவாழ்க்கை வெளிவர அனுமதிக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவர் எப்போதும் ஒரு காரியத்தையே குறிப்பிடுகிறார் (மத்.5:23,24). உங்கள் சகோதரனோடு ஒப்புரவாகாமல் உங்களுக்குள்ளிருக்கிற காரியம் உங்கள் தனித்தன்மை. தேவன் உங்களைத் தம்மோடு ஐக்கியத்துக்குக் கொண்டுவர விரும்புகிறார்; ஆனால் உங்கள்மேலுள்ள உங்களுடைய உரிமையை நீங்கள் விட்டுக் கொடுக்க ஆயத்தமாயிருந்தாலன்றி அவரால் அதைச் செய்யமுடியாது.

அவன் தன்னைத்தான் வெறுக்கக்கடவன்--அவனுக்குரிய சுதந்தரமான உரிமையை வெறுக்கும்போது நிஜமான வாழ்க்கை வளருவதற்கு ஒரு சந்தர்ப்பம் உண்டு.

தனிநபர் வாழ்க்கை

நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி. யோவான் 17:22.

மற்றெல்லாரிடமிருந்தும் முற்றும் வேறுபட்டவராக நம்மைக்குறித்து நாம் பேசும்போது பொருட்படும் அசாதாரணமானதும் கணக்கிடமுடியாததுமான காரியமே தனிநபர் வாழ்க்கையாகும். நமது தனிநபர் வாழ்க்கை நாம் புரிந்துகொள்ளாதவாறு எப்போதும் மிகவும் பெரியது. கடலிலுள்ள ஒரு தீவு பெரியதொரு மலையின் உச்சியாயிருக்கலாம். தனிநபர் வாழ்க்கை ஒரு தீவு போன்றது; அதின் அடியிலுள்ள ஆழத்தைக்குறித்து நமக்கு ஒன்றும் தெரியாது, அதின்பலனாக நாம் நம்மை மதிப்பிடமுடியாது. நம்மால் கூடும் என்று எண்ணி ஆரம்பிக்கிறோம்; ஆனால், நம்மைப் புரிந்துகொள்ளுகிறவர் ஒரே ஒரு நபர் மாத்திரமே உண்டு, அது நம்முடைய சிருஷ்டிகரே என்னும் உணர்வுக்கு வருகிறோம்.

தனித்தன்மை மாம்சீக மனிதனின் பண்பாயிருப்பதுபோல, தனிநபர் வாழ்க்கை ஆவிக்குரிய மனிதனின் பண்பாயிருக்கிறது. நம்முடைய ஆண்டவரைத் தனித்தன்மையிலும் தன்னுரிமையிலும் விவரிக்கமுடியாது; அவருடைய தனிநபரின் அடிப்படையில் மாத்திரமே அவரை விவரிக்க முடியும். நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார் இயேசு. தனிநபர் வாழ்க்கை ஒன்றிணைகிறது; நீங்கள் இன்னொரு நபரோடு ஒன்றிணையும்போதுமாத்திரமே உங்கள் உண்மையான தனித்துவத்தை நீங்கள் அடைகிறீர்கள். அன்பு அல்லது தேவனுடைய ஆவியானவர் ஒரு நபரைத் தாக்கும்போது அவர் மறுரூபமாகிறார், அவர் இனிமேல் தன் வேறுபட்ட தனித்தன்மையை வற்புறுத்தமாட்டார். நமது ஆண்டவரும் தனித்தன்மையின் தொடர்பிலோ அல்லது தனிமனிதனுடைய தனித்த நிலையிலோ ஒருபோதும் குறிப்பிடவில்லை; நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கவேண்டுமென்று தனிநபர் வாழ்க்கைகளைப்பற்றியே விண்ணப்பித்தார். உங்களுக்கான உங்கள் உரிமைகளைத் தேவனுக்கு விட்டுக்கொடுப்பீர்களானால், உங்கள் தனிநபர் வாழ்க்கையின் உண்மையான தன்மை உடனடித் தேவனுக்குப் பதிலளிக்கிறது. இயேசுகிறிஸ்து தனிநபர் வாழ்க்கையை விடுவிக்கிறார், தனித்தன்மை உருமாற்றப்படுகிறது; உருமாற்றும் மூலப்பொருள் இயேசுவுக்குநேரான தனிநபர் பக்தியாகிய அன்பே. ஒரு தனிநபர் வாழ்க்கை இன்னொரு தனிநபர் வாழ்க்கையோடு ஐக்கியப்படுவதினால் உருவாக்கப்படுவதே அன்பாகும்.

எதற்காக ஜெபிக்கவேண்டும்

சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும். லூக்கா 18:1.

மீட்பின் நிஜத்தை நீங்கள் விசுவாசிக்கவில்லையென்றால் பரிந்து பேசமுடியாது; நீங்கள் பரிந்துபேசுவதை மக்கள்மீதுள்ள பயனற்ற பரிவாக மாற்றுவீர்கள், அது அவர்கள் தேவனோடு தொடர்பற்ற நிலையிலிருக்கும் இணங்கிப்போகிற மனநிறைவை அதிகரிக்கத்தான் செய்யும். உங்கள்மீது மோதுகிற நபர் அல்லது சூழ்நிலைக்குநேரான தேவனுடைய மனப்பான்மை யினால் நீங்கள் அசைக்கப்படும்வரை அந்த நபரையோ சூழ்நிலையையோ பரிந்துபேசுதலில் நீங்கள் தேவனுக்கு முன்பாகக் கொண்டுவருகிறீர்கள். கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவதே பரிந்துபேசுதலின் கருத்து; எனவேதான் விண்ணப்பம்பண்ணுகிறவர்கள் மிகக் குறைவாயிருக்கிறார்கள். (நீங்கள் யாருக்காகப் பரிந்துபேசுகிறீர்களோ) அவருடைய இடத்தில் உங்களை வையுங்கள் என்கிற நிலையில் பரிந்து பேசுதல் வைக்கப்படுகிறது. ஒருபோதும் அப்படியல்ல! தேவனுடைய இடத்தில் உங்களை வைக்க முயற்சிசெய்யுங்கள்.

ஊழியக்காரன் என்ற நிலையில் நீங்கள் தேவனிடமிருந்து வருகிற உண்மையின் தகவலோடு தொடர்புகொண்டிருக்க எச்சரிக்கையாயிருங்கள்; அல்லவென்றால் நீங்கள் நொறுங்கிப்போவீர்கள். நீங்கள் எவ்வளவு அறிய வேண்டும் என்று தேவன் திட்டமிட்டிருக்கிறாரோ அதைவிடக் கூடுதலாய் நீங்கள் அறிந்திருக்கிறீர்களானால், நீங்கள் ஜெபிக்கமுடியாது; மக்களின் நிலைமை மிகவும் திருக்குள்ளதாயிருப்பதினால் நீங்கள் யதார்த்தத்தை அடையமுடியாது.

சகலத்திற்கும் தேவனோடு திட்டமான தொடர்புக்கு வருவதில்தான் நம்முடைய பணி கிடக்கிறது; ஆனால், சுறுசுறுப்புள்ள ஊழியக்காரர்களாக மாறி இதைத் தட்டிக்களிக்கிறோம். பட்டியலிடக்கூடிய காரியங்களை நாம் செய்கிறோம்; ஆனால் நாம் பரிந்துபேசமாட்டோம். கண்ணியில்லாத ஒரே காரியம் பரிந்துபேசுதலே; ஏனெனில், அது தேவனோடுள்ள நமது உறவை முற்றும் பகிரங்கமாய் வைத்திருக்கும்.

ஒரு ஆத்துமாவையும் ஒட்டுப்போட்டு சரிசெய்யாமலிருப்பதே பரிந்துபேசுதலில் கவனிக்கவேண்டிய காரியம்; ஒரு ஆத்துமா தேவனுடைய ஜீவனோடுள்ள தொடர்புக்குள் சென்றடையவேண்டும். தேவன் நம்முடைய பாதையில் கொண்டுவந்தும், நாம் தவறவிட்ட எண்ணற்ற ஆத்துமாக்களை எண்ணிப்பாருங்கள்! பரிந்துபேசுதலின் மூலமாக அல்லாமல் வேறு எந்த முறையிலும் படைக்கமுடியாதவற்றை நாம் மீட்பின் அடிப்படையில் ஜெபிக்கும்போது தேவன் படைக்கிறார்.

மகாப் பெரிய வாழ்க்கை

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத் தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் . . . உங்கள் இருதயம் கலங்காமல் . . . இருப்பதாக. யோவான் 14:27.

சொந்த அனுபவத்தில் ஒரு காரியம் கடினமாகும்போதெல்லாம் தேவனைக் குற்றப்படுத்தும் ஆபத்தில் நாம் இருக்கிறோம்; ஆனால் நாமே தவறியிருக்கிறோம், தேவனல்ல; நாம் விட்டுவிடாத ஏதோவொரு முறைகேடு எங்கோ இருக்கிறது; நாம் அதை விட்டுவிட்டவுடன் எல்லாக்காரியங்களும் பட்டப்பகல்போல் தெளிவாகிறது. இரு எஜமான்களை, அதாவது, நம்மையும் தேவனையும் சேவிக்க நாம் முற்படும் காலம்வரை தடுமாற்றம் இருக்கிறது. மனநிலை தேவன்பேரில் முற்றும் சாருகிறதாயிருக்கவேண்டும். நாம் அந்த நிலை அடைந்தவுடன் பரிசுத்தவானின் வாழ்க்கை வாழ்வதுபோல மிகவும் எளிதானது வேறொன்றுமில்லை; நம்முடைய சொந்த நோக்கங்களுக்காக நாம் பரிசுத்த ஆவியானவரின் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ள விரும்பும்போது சிரமம் வருகிறது.

நீங்கள் தேவனுக்குக் கீழ்ப்படியும்பொழுதெல்லாம் அவருடைய முத்திரை எப்போதும் சமாதானத்துக்குரியது; அது அளவிடமுடியா சமாதானத்தின் சாட்சி; அது இயற்கையானதல்ல, அது இயேசுவின் சமாதானம். எப்பொழுதெல்லாம் சமாதானம் வரவில்லையோ அப்பொழுதெல்லாம் அது வரும்வரைக் காத்திருங்கள்; அல்லது அது ஏன் வரவில்லை என்பதின் காரணத்தைக் கண்டுபிடியுங்கள். உணர்ச்சிவேகத்திலோ, அல்லது தைரிய உணர்வாலோ செயல்படுவீர்களானால் இயேசுவின் சமாதானம் சாட்சியம் அளிப்பதில்லை; அங்கு எளிமையோ தேவன்மேல் நம்பிக்கையோ இல்லை. ஏனெனில், எளிமையின் ஆவி உங்கள் தீர்மானங்களினாலல்ல, பரிசுத்த ஆவியினாலேயே பிறக்கிறது. ஒவ்வொரு தீர்மானமும் எளிமையின் எதிர் விளைவு கொண்டுவருகிறது.

நான் கீழ்ப்படியாதிருக்கும்போதெல்லாம் என் கேள்விகள் எழும்பு கின்றன. நான் தேவனுக்குக் கீழ்ப்படியும்போது எனக்கும் தேவனுக்கு மிடையே பிரச்சனைகள் ஒருபோதும் வருவதில்லை. மனம் விழித்திருக்கவும் தேவனைக்குறித்த அறிவில் வியப்புக்கொள்ளவுஞ்செய்ய என்னைத் தட்டி எழுப்பவே அவைகள் வருகின்றன. தேவனுக்கும் எனக்குமிடையே வரும் எந்தப் பிரச்சனையானாலும் அது கீழ்ப்படியாமையால் எழும்புகிறது. நான் தேவனுக்குக் கீழ்ப்படியும்போது வருகிற எந்தப் பிரச்சனையானாலும் (ஏராளமான பிரச்சனைகள் வரும்) என்னுடைய பரவசமான மகிழ்ச்சியைப் பெருக்குகின்றது; ஏனெனில், என் பிதாவுக்குத் தெரியும் என்பது எனக்குத் தெரியும், இக்காரியத்தில் அவர் எவ்வாறு சிக்கல் அகற்றப்போகிறார் என்பதைக் காத்திருந்து கவனிக்கப்போகிறேன்.

தேவனுக்கு முன்பாக அங்கீகரிக்கப்படல்

நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு. 2 தீமோ.2:15.

எந்தக் கருத்தையாவது உங்களால் விளக்கிக் கூறமுடியவில்லை யென்றால் உங்களால் கூடும்வரை விடாப்பிடியாக முயற்சிசெய்யுங்கள். அப்படி நீங்கள் செய்யாவிட்டால் யாரோ ஒருவர் தன் வாழ்க்கை முழுவதும் அதிகம் இழந்துவிடுவார். தேவனுடைய ஏதாயினும் சத்தியத்தை உங்களுக்குத்தானே மறுபடியும் கூறிக்கொள்ள முயற்சிசெய்யுங்கள்; அப்படி நீங்கள் கூறுவதை வேறு ஒருவருக்குத் தேவன் பயன்படுத்துவார். திராட்சைப்பழங்கள் நசுக்கப்படுகிற தேவனுடைய ஆலைவழியே செல்லுங்கள். உங்கள் கூற்று பரிசோதனைக்குட்படும்படி நீங்கள் முயற்சிசெய்யுங்கள்; அந்தச் சொற்கள் வேறு ஒருவரைப் பெலப்படுத்தும் திராட்சைரசமாக மாறும் காலம் வரும். ஆனால், நானாக இக்காரியத்தை விளக்கிக் கூற முயற்சிக்கப்போவ தில்லை, நான் சொல்லுவதைக் கடன்வாங்குவேன் என்று சோம்பலோடு சொன்னால், அந்தச் சொற்கள் உங்களுக்குப் பயனில்லாமலிருப்பதோடு யாருக்கும் ஒரு பயனுமளிக்காது. தேவனுடைய சத்தியம் என்று நீங்கள் தெளிவாக உணருகிறதை உங்களுக்குத்தானே திரும்பச்சொல்ல முயற்சி செய்யுங்கள்; அப்போது அதை உங்கள்மூலம் வேறு ஒருவருக்குக் கடத்திக் கொடுக்கத் தேவனுக்கு வாய்ப்பளிப்பீர்கள்.

உங்கள் மனது எதை எளிதாக ஒத்துக்கொள்ளுகிறதோ அதை ஆழமாகச் சிந்திக்க உங்கள் மனதைத் தூண்டுவதை எப்போதும் பழக்க மாக்கிக்கொள்ளுங்கள். பாடுகளின்மூலம் நமது பதவியை நாம் நமக்குச் சொந்தமாக்குமட்டும் அது நமக்குரியதல்ல. நீங்கள் முன்னே அறிந்திராத ஏதாயினும் ஒன்றை உங்களுக்குச் சொல்லுகிறவரல்ல உங்களுக்குப் பயனளிக்கிற ஆக்கியோன், நீங்கள் விளக்கிக் கூறுவதற்குத் திண்டாடுகிற சத்தியத்தைத் தெளிவாக வெளிப்படுத்திக்கொடுக்கிறவரே அவர்.

தேவனுக்கு முன்பாகப் போராடுதல்

ஆகையால் . . . தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள் . . . எந்தச் சமயத்திலும் . . . ஜெபம்பண்ணுங்கள். எபே.6:13,18.

தேவனிடம் சேராதபடி உங்களைத் தடுக்கிற காரியங்களுக்கெதிராக நீங்கள் போராடவேண்டும், ஜெபத்தில் நீங்கள் பிற ஆத்துமாக்களுக்காகப் போராடுகிறீர்கள்; ஜெபத்தில் தேவனோடு போராடுகிறேனென்று ஒருபோதும் கூறாதேயுங்கள், வேதத்தின்படி அது உண்மையல்ல. நீங்கள் தேவனோடு போராடினால் வாழ்க்கையின் மீதியான பாகம் முழுவதும் முடமாவீர்கள். நீங்கள் விரும்பாத ஏதாவது முறையில் தேவன் வரும்போது, யாக்கோபு செய்ததைப்போல நீங்கள் அவரைப் பற்றிக்கொண்டு அவரோடு போராடினால் உங்கள் தொடைச்சந்தைச் சுளுக்கவைக்க அவரைக் கட்டாயப்படுத்துகிறீர்கள். தேவனுடைய வழிகளில் முடவனாயிராதீர்கள்; காரியங்களோடு தேவனுக்குமுன் போராடி, அவர்மூலமாய் முற்றும் ஜெயங்கொள்ளும் ஒரு நபராயிருங்கள். தேவனுக்குமுன் போராடுவதற்கு அவருடைய ராஜ்யத்தில் பலனுண்டு. கிறிஸ்துவில் நான் பூரணமற்றிருக்கும்போது உங்களுக்காக ஜெபிக்கும்படி நீங்கள் என்னிடம் கூறுகிறீர்கள்; நான் ஜெபிக்கலாம், ஆனால், அதனால் பயன் ஒன்றுமில்லை; பூரணத்துவம் இருக்கும்போதுமாத்திரமே ஜெபம் பயனுள்ளது--ஆகையால் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை எடுத்துக்கொள்ளுங்கள்.

தேவனுடைய கட்டளைக்கும் அவர் அனுமதிக்கும் சித்தத்துக்கும், அதாவது நமக்குநேரான அவருடைய தெய்வச்செயலான திட்டத்திற்கும் இடையேயுள்ள வேற்றுமையை எப்போதும் பகுத்தறியுங்கள். தேவனுடைய கட்டளை மாற்றமுடியாதது; அவருடைய அனுமதிக்கும் சித்தத்தோடுதான் அவருக்குமுன் நாம் போராடவேண்டும். தேவனுடைய அனுமதிக்கும் சித்தத்தை நாம் எதிரிடுகிற விதம்தான் அவருடைய கட்டளையை நாம் அறிந்துகொள்ள உதவுகிறது. தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு--தேவனுடைய கட்டளைக்கும், கிறிஸ்து இயேசுவுக்குள்ளான அவருடைய அழைப்புக்கும் உண்மையாயிருப்பவர்களுக்கு--சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது. தேவனுடைய அனுமதிக்கும் சித்தமே அவருடைய குமாரரையும் குமாரத்திகளையும் வெளிப்படுத்தும் வழிவகையாகும். இதுதான் கர்த்தருடைய சித்தம் என்று சொல்லி நாம் முதுகெலும்பில்லாத இழுது மீன்போலிருக்கக்கூடாது. நாம் தேவனுக்குமுன்பாகப் போராடவோ அவரோடு மல்லுக்கட்டவோ கூடாது; தேவனுக்குமுன்பாகக் காரியங்களோடு மல்லுக்கட்டவேண்டும். தேவனுடைய பெலனைப் பற்றிக்கொள்ளத்தக்கதாக மகிமையாய்ப் போராடுவதற்குப்பதில் அவருக்கு முன்பாகச் சோம்பலாய் உட்கார்ந்திராதபடி எச்சரிக்கையாயிருங்கள்.

தான் திருப்திசெய்கிற தேவையை மீட்பு படைக்கிறது

ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும். 1 கொரி.2:14.

சுவிசேஷத்தைக்குறித்தத் தேவையின் உணர்வைத் தேவனுடைய சுவிசேஷம் உண்டாக்குகிறது. எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால் .....அது மறைபொருளாயிருக்கும் என்று பவுல் கூறினார்--மிகக் கீழ்த்தர மானவர்களுக்கா? அல்ல, கெட்டுப்போகிறவர்களுக்கே; அவிசுவாசிகளாகிய அவர்களுடைய மனதை இப்பிரபஞ்சத்தின் தேவன் குருடாக்கினான் என்று பவுல் தொடர்ந்து கூறுகிறார். பெரும்பான்மையான மக்களுக்குத் தார்மீகம் அவர்கள் பிடிக்குள் இருப்பதினால், சுவிசேஷத்தைக்குறித்தத் தேவையின் உணர்வு அவர்களுக்கு இல்லை. தேவன் தம்மை வெளிப்படுத்துமட்டும் ஒரு மனிதனும் உணர்ந்திராத தேவையை உருவாக்குகிறவர் அவரே. கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்று இயேசு சொன்னார்; எனவே, மனிதன் கேட்கும்வரைத் தேவன் கொடுக்கமுடியாது. அவர் கொடுக்க மறுக்கிறார் என்றல்ல; ஆனால், மீட்பின் அடிப்படையில் தேவன் காரியங்களை ஒழுங்குசெய்துள்ள முறை அவ்வாறுதான். நாம் கேட்பதின்மூலம்தேவன் வழிமுறைகளைச் செயல்படுத்தி, நாம் கேட்கிறது வரையிலும் இல்லாதிருந்த காரியங்களை அப்போது படைக்கிறார். மீட்பின் உள்ளான உண்மை என்னவென்றால், அது எல்லாவேளையிலும் படைத் துக்கொண்டேயிருக்கிறது. மீட்பு தேவனுடைய ஜீவனை நமக்குள் படைப்பது போல, அந்த ஜீவனுக்குச் சொந்தமான காரியங்களையும் படைக்கிறது. தேவையைப் படைத்திருப்பது எதுவோ அதுதவிர வேறெதுவும் அந்தத் தேவையைத் திருப்திசெய்யமுடியாது. இதுதான் மீட்பின் கருத்தாகும்-- அது படைக்கிறது, அது திருப்திசெய்கிறது.

நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்று இயேசு சொன்னார். நமது சொந்த அனுபவங்களை நாம் போதிக்கிறோம், அதில் மக்கள் ஆர்வங் கொள்ளுகிறார்கள், ஆனால், தேவையைக்குறித்த எந்த உணர்வும் தட்டி எழுப்பப்படவில்லை. இயேசுகிறிஸ்து உயர்த்தப்படுவாரானால், அவரைக் குறித்த தேவையின் மனப்பூர்வமான உணர்வை ஆவியானவர் உண்டாக் குவார். சுவிசேஷம் போதிக்கப்படுவதற்குப்பின்னால் படைக்கும் ஆற்றலுள்ள தேவனுடைய மீட்பு மக்களுடைய ஆத்துமாக்களில் கிரியைசெய்கிறது. தனிநபர் சாட்சி மக்களை ஒருபோதும் இரட்சிக்காது. நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது என்று இயேசு சொன்னார்.

பக்தியின் சோதனை

தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். ரோமர் 8:28.

தேவன் சூழ்நிலைகளைத் திட்டமிடுகிறாரென்று பக்தியுள்ள ஆத்துமா மாத்திரமே விசுவாசிக்கும். நம்முடைய சூழ்நிலைகளோடு நாம் அவ்வாறான உரிமைகள் எடுத்துக்கொள்வதினால், தேவன் சூழ்நிலைகளைத் திட்டமிடுகிறாரென்று நாம் விசுவாசிக்கிறோமென்று கூறினாலும், நாம் அவ்வாறு விசுவாசிப்பதில்லை; நடைபெறுகிற சம்பவங்கள் மனிதரால் திட்டமிடப்பட்டவைபோலவே நாம் நடந்துகொள்ளுகிறோம். ஒவ்வொரு சூழ்நிலையிலும் உண்மையாயிருப்பதென்பது நமக்கு ஒரேயொரு விசுவாசம் மாத்திரமே இருக்கிறது என்றே பொருளாகிறது; அது நமது ஆண்டவருக்குநேராகவே. குறிப்பிட்ட சூழ்நிலைத் தொகுதியைத் தேவன் திடீரென்று உடைக்கிறார்; அப்போது, அவைகளையும் தேவனே திட்டமிட்டிருந்திருக்கிறார் என்பதை அறியாதபடி நாம் பக்தியற்றிருந்தோமே என்ற உணர்வு உண்டாகிறது. அவருடைய நோக்கம் என்ன என்பதை நாம் ஒருபோதும் அறியவில்லை; அந்தக் குறிப்பிட்டக் காரியம் நம்முடைய ஆயுட்காலம் முழுவதும் திரும்ப வருவதில்லை. அங்குதான் நம்முடைய பக்தியின் சோதனை எப்போதும் வருகிறது. கடுஞ்சோதனையான சூழ்நிலைகளில் தேவனை ஆராதிக்க நாம் கற்றுக்கொண்டால், அவர் தெரிந்துகொள்ளும்போது அவைகளை இரண்டு வினாடிகளில் மாற்றிவிடுவார்.

இயேசுகிறிஸ்துவுக்குநேராகப் பக்தி காண்பிக்கிற காரியத்தில் இன்று நாம் தயங்குகிறோம். பணிக்கும், சேவைக்கும் மற்றும் எதற்கும் நாங்கள் பக்தியுள்ளவர்களாயிருப்போம்; ஆனால், இயேசுகிறிஸ்துவுக்குப் பக்தியுள்ளவர்களாயிருக்க எங்களிடம் கேட்காதேயுங்கள் என்பதே நம்முடைய கருத்து. இயேசுவுக்குநேரான பக்தியைப்பற்றிப் பேசுவதற்கு அநேகக் கிறிஸ்தவர்கள் அதிகமாய்ப் பதற்றப்படுகிறார்கள். உலகத்தைவிட அதிகம் அழுத்தமாகக் கிறிஸ்தவ ஊழியரே நமது ஆண்டவரின் அரசுரிமையைப் பறிக்கிறார்கள். மனிதரை ஆசீர்வதிப்பதற்கான இயந்திரமாக தேவன் ஆக்கப்படுகிறார், ஊழியர்களில் ஒரு ஊழியனாக இயேசுகிறிஸ்து ஆக்கப்படுகிறார்.

நாம் ஆண்டவருக்காக ஊழியஞ்செய்யவில்லை, நாம் அவரில் கூடுதல் பக்திசெலுத்துவதினால், தம் ஊழியத்தை அவர் நம்மூலமாய்ச் செயல்படுத்தமுடியும் என்று கருதப்படுகிறது--உங்கள் பக்கத்திலிருந்து எந்தப் பராதும் இல்லாமலும், என் பக்கத்திலிருந்து எந்த விளக்கமும் இல்லாமலும் நீங்கள் தீவிர சேவை செய்வீர்களென்று நான் நம்புகிறேன் என்று தேவன் சொல்லுகிறார். தேவன் தம்முடைய சொந்தக் குமாரனைப் பயன்படுத்தினதுபோல நம்மையும் பயன்படுத்த அவர் விரும்புகிறார்.

எதில் கருத்தைச் செலுத்தவேண்டும்?

சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன். மத்.10:34.

தேவன் கடினமானவர் என்கிற முடிவுக்கு நீங்கள் வரக் காரணமா யிருக்கிற ஆத்துமாவுக்காகப் பரிவுகொள்ளாதேயுங்கள். தேவன் நாம் புரிந்துகொள்ளக்கூடியதைவிட மிகவும் மிருதுவானவர். அடிக்கடி அவர் மிருதுவான ஒருவராயிருக்கும்பொருட்டு நாம் முரடானவர்களாயிருக்கும் வாய்ப்பளிக்கிறார். ஒரு மனிதன் தேவனிடம் சென்றடையக்கூடாவிட்டால் அதின் காரணம் அவன் விட்டுவிட உத்தேசிக்காத ஒரு இரகசிய காரியம் இருப்பதே--நான் தவறு செய்திருக்கிறேன் என்று ஒத்துக்கொள்ளுகிறேன், ஆனால், என்னால் எப்படிப் பறக்கமுடியாதோ அவ்வாறே அக்காரியத்தை விட்டுவிட என்னால் முடியவில்லை என்று அவன் கூறுகிறான். அத்தகைய ஒரு நபருடன் பரிவோடு இடைபடுவது கூடாதகாரியம்; செய்திக்கு எதிராக மக்கள் பகைமையும் வெறுப்பும் கொள்ளும்வரை நாம் பிரச்சனையின் வேர்மட்டும் ஆழமாகச் செல்லவேண்டும். மக்களுக்குத் தேவனுடைய ஆசீர்வாதம் வேண்டும், ஆனால் காரியத்தின் மையம்வரை நேரடியாக ஊடுருவுகிற காரியத்தைச் சகித்துக்கொள்ளமாட்டார்கள்.

உங்களில் தேவன் தம் சித்தத்தை நிறைவேற்றினாரேயாகில், அவருடைய ஊழியக்காரன் என்ற நிலையில் உங்கள் செய்தி வேர்வரை ஆழமாய் வெட்டுகிற காரியத்தில் இரக்கமற்ற அழுத்தமுள்ளதாய் இருக்க வேண்டும்; இல்லையென்றால் ஆரோக்கியமில்லை. செய்தியை ஏற்றுக் கொள்வதிலிருந்து தப்புவதற்கு வாய்ப்பு இல்லாததுவரை அதை அழுத்திக் கூறுங்கள். மக்களின் குறைவு என்ன என்பதை அவர்கள் உணரும்வரை அவர்கள் இருக்கிற நிலையில் அவர்களைச் சந்திக்க ஆரம்பியுங்கள்; பின்னர், அவர்களுடைய வாழ்க்கைக்கான இயேசுகிறிஸ்துவின் திட்ட அளவைக் காட்டுங்கள்--நாங்கள் ஒருபோதும் அவ்வாறு ஆகமுடியாது என்று அவர்கள் கூறுவார்கள். அந்நிலையை எட்டவேண்டுமென்று இயேசுகிறிஸ்து கூறுகிறார் என்று நீங்கள் அழுத்திக் கூறுங்கள். நாங்கள் எவ்வாறு எட்டமுடியும்? என்று அவர்கள் கேட்டால், புதிய ஆவி உங்களில் இல்லாவிட்டால் உங்களால் கூடாது (லூக்.11:13) என்று சொல்லுங்கள்.

உங்களுடைய செய்தி பயனுள்ளதாகுமுன், தேவையின் உணர்வு இருக்கவேண்டும். ஆயிரக்கணக்கான மக்கள் தேவனில்லாமலே இந்த உலகில் மகிழ்ச்சியாயிருக்கிறார்கள். இயேசு வருவதற்கு முன்னரும் எனக்கு மகிழ்ச்சியும் சன்மார்க்கமும் இருந்திருக்குமேயானால், அவர் ஏன் வந்தார்? என்று நீங்கள் கேட்கலாம். ஏனென்றால், அவ்வாறான மகிழ்ச்சியும் சமாதானமும் தவறான நிலையில் உள்ளது; அவரோடுள்ள தனிநபர் உறவை அடிப்படையாக்காத ஒவ்வொரு சமாதானத்தினூடேயும் பட்டயத்தை அனுப்பவே இயேசுகிறிஸ்து வந்தார்.

ஊழியத்தின் சரியான முறைகள்

நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன். யோவான் 12:32.

இயேசுகிறிஸ்து ஏன் மரித்தார் என்பதின் காரணத்தை நம்மில் சிலரே புரிந்திருக்கிறோம். மனுக்குலம் தேவைப்படுவதெல்லாம் அனுதாபம் மாத்திரமேயானால் சிலுவை ஒரு கேலிக்கூத்து; அதற்கு ஒரு தேவையும் இல்லை. உலகத்தின் தேவை சிறிதளவு அன்பு அல்ல, அறுவை சிகிச்சை.

ஆவிக்குரியநிலையில் சிரமப்படும் ஒரு ஆத்துமாவை நீங்கள் நேருக்குநேர் சந்திக்கும்போது, சிலுவையில் தொங்கிய இயேசுகிறிஸ்துவை உங்களுக்கு நினைப்பூட்டுங்கள். வேறு எவ்வழியிலாவது அந்த ஆத்துமா தேவனிடம் சேரக்கூடுமானால் இயேசுகிறிஸ்துவின் சிலுவை தேவையற்றது. நீங்கள் பரிவுகொள்வதினாலோ அல்லது புரிந்துகொள்வதினாலோ பிறருக்கு உங்களால் உதவக்கூடுமானால் நீங்கள் இயேசுகிறிஸ்துவுக்குத் துரோகியாகிறீர்கள். உங்கள் ஆத்துமாவை நீங்கள் தேவனோடு சரியான உறவில் காத்துக்கொள்ளுங்கள்; மக்களின் வழியில் உங்களை ஊற்றிக்கொடுத்து அதினால் தேவனைப் புறக்கணிப்பதல்ல, அவருடைய வழியில் பிறருக்காக உங்களை ஊற்றிக்கொடுங்கள். இணக்கமான மார்க்கப்பற்றே இன்று முக்கியமாகப் பேசப்படும் பொருள்.

நாம் செய்யவேண்டிய ஒரு காரியம் சிலுவையிலறையப்பட்டவராக இயேசுகிறிஸ்துவை வெளிக்காட்டுவதே; இரவும்பகலும் அவரை உயர்த்த வேண்டும். இயேசுகிறிஸ்துவின் சிலுவையில் உறுதியாய் ஸ்தாபிக்கப்படாத ஒவ்வொரு கொள்கையும் தவறாக வழிநடத்தும். ஊழியக்காரனே இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, மீட்பின் உண்மையில் நம்பிக்கை வைப்பாரானால், அவர் யாரோடு பேசுகிறாரோ அந்த மக்கள் நிச்சயமாய் அக்கறை காட்டுவார்கள். ஊழியக்காரனுக்கு இயேசுகிறிஸ்துவோடுள்ள எளிய உறவே நிலைத்திருந்து ஆழமாகிக்கொண்டேயிருக்கிற காரியம்; தேவனுக்காக அவர் பயன்படுவது அதை மாத்திரமே சார்ந்திருக்கிறது.

புதிய ஏற்பாட்டு ஊழியக்காரரின் அழைப்பு பாவத்தை அம்பலப்படுத்தி, இயேசுகிறிஸ்துவை இரட்சகராக வெளிப்படுத்துவதே; ஆகவே அவர் பேச்சுத்திறன் உள்ளவராயிருக்கமுடியாது, மிகக் கண்டிப்பான அறுவை சிகிச்சையாளராயிருக்கவேண்டும். அற்புதமாக இனிமையான பேருரைகள் செய்வதற்கல்ல, இயேசுகிறிஸ்துவை உயர்த்தவே நாம் தேவனால் அனுப்பப்பட்டிருக்கிறோம். தேவன் நம்மை உய்த்து ஆராய்ந்த அதே ஆழத்துக்கு நாமும் உய்த்து ஆராய்ந்து, சத்தியத்தை நேரடியாக உணர்த்துகிற வேதவாக்கியங்களைக் கண்டறிவதில் ஆர்வமாயிருந்து, அவைகளைப் பயமில்லாமல் போதிக்கவேண்டும்.

அனுபவமா அல்லது வெளிப்பாடா?

நாங்களோ.....தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும் படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். 1 கொரி.2:12.

என் மீட்பின் அனுபவமல்ல, மீட்புதான் யதார்த்தமானது; ஆனால், மீட்பு என் விழிப்புள்ள வாழ்க்கையின் மொழியைப் பேசுமட்டும் அதனால் எனக்கு எந்தப் பொருளுமில்லை. நான் மறுபடியும் பிறக்கும்போது, தேவ ஆவியானவர் என் சுயத்திலிருந்தும் அனுபவங்களிலிருந்தும் என்னை வேறுபடுத்தி, இயேசுகிறிஸ்துவோடு ஒருமைப்படுத்துகிறார். என் அனுபவங் களோடு நான் விடப்பட்டால், மீட்பினால் உருவாக்கப்படாதவைகளோடு விடப்படுகிறேன். இரவும்பகலும் என்னிலிருந்து நான் வெளியேற்றப்படுவதே என் அனுபவங்கள் மீட்பினால் உருவாக்கப்பட்டவை என்பதற்குரிய சான்று; முன்புபோல என் அனுபவங்களை நிஜத்தின் ஆதாரமாக நான் கவனிக்க வில்லை, அனுபவங்களை உருவாக்கிய நிஜத்திற்கே நான் கவனஞ்செலுத் துகிறேன். என் அனுபவங்கள் இயேசுகிறிஸ்துவாகிய ஆதாரத்தில் என்னை வைக்கவில்லையென்றால் அவைகளுக்கு எந்த மதிப்புமில்லை.

உள்ளுணர்ச்சிக்குரிய அனுபவங்களை உண்டாக்கும்படி பரிசுத்த ஆவியை உங்களுக்குள் அடக்கிவைக்க முயற்சித்தால், அவர் எல்லா எல்லைகளையும் தகர்த்து, உங்களை வரலாற்றுக் கிறிஸ்துவிடம் மீண்டும் அழைத்துச் செல்லுவதை நீங்கள் காண்பீர்கள். தேவனை ஆதாரமாகவும், அவர்பேரிலுள்ள விசுவாசத்தை அதன் விளைவாகவும் கொள்ளாத எந்த அனுபவத்தையும் ஒருபோதும் ஊட்டிவளர்க்காதீர்கள். நீங்கள் அப்படிச் செய்தால் எத்தகைய தரிசனத்தை நீங்கள் முன்பு பெற்றிருந்தாலும் உங்களுடைய அனுபவம் கிறிஸ்தவத்துக்கு எதிரானதே. இயேசுகிறிஸ்து உங்கள் அனுபவங்களின் ஆண்டவராய் இருக்கிறாரா? அல்லது உங்கள் அனுபவங்களை அவர்மீது திணிக்கும்படி முயற்சிக்கிறீர்களா? ஏதாவது அனுபவம் உங்கள் ஆண்டவரைவிட உங்களுக்கு மிக அருமையானதாக இருக்கிறதா? அவர் உங்கள்மீது ஆண்டவராயிருக்கவேண்டும்; அவர் ஆண்டவராயில்லாத அனுபவத்தில் நீங்கள் கவனஞ்செலுத்தக்கூடாது. உங்கள் சொந்த அனுபவத்தைக்குறித்து தேவன் உங்களைப் பொறுமை இழக்கச்செய்வதினால், என் அனுபவத்தைப்பற்றி எனக்குக் கவலையில்லை, நான் அவரில் உறுதியாயிருக்கிறேன் என்று நீங்கள் கூறுங்காலம் வரும்.

நீங்கள் முன்பு பெற்றிருந்த அனுபவங்களைக்குறித்தே பேசும் பழக்கமுள்ளவர்களாயிருந்தால், உங்களோடு இரக்கம் காண்பிக்காதீர்கள். தன்னைக்குறித்து உறுதிகொள்ளும் விசுவாசம் விசுவாசமல்ல; தேவனைக் குறித்து நிச்சயங்கொள்ளும் விசுவாசம் மாத்திரமே ஒரே விசுவாசம்.

பிதா இழுத்துக்கொள்ளுதல்

என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான். யோவான் 6:44.

தேவன் என்னை இழுத்துக்கொள்ளும்பொழுது உடனடியாக என் சித்தத்தின் பிரச்சனை உள்ளே வருகிறது--தேவன் கொடுக்கிற வெளிப்படுத்தலுக்கு நான் பதிலளிப்பேனா? அவரிடம் நான் வருவேனா? ஆவிக்குரிய காரியங்களில் விவாதஞ்செய்வது துடுக்கு. தேவன் பேசும்போது யாரோடும் ஒருபோதும் விவாதிக்காதீர்கள். விசுவாசம் என்பது புத்திக்குரிய செயலல்ல; விசுவாசம் ஒரு தார்மீகச் செயல், அதனால் நான் என்னை மனப்பூர்வமாக அர்ப்பணிக்கிறேன். தேவன்மீது என்னை நான் முற்றிலும் இறக்கிவைத்து விட்டு, அவர் கூறுகிறதை நடைமுறைப்படுத்துவேனா? அவ்வாறு நான் செய்தால், தேவனுடைய சிங்காசனம் எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமான உண்மையில் நான் நிலைநாட்டப்பட்டிருக்கிறேன் என்பதைக் கண்டுகொள்ளுவேன்.

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது சித்தத்தின் பிரச்சனையையும் எப்போதும் அழுத்திக் கூறவேண்டும். நம்புவதற்குரிய சித்தமே நம்பிக்கையாயிருக்கவேண்டும். இணங்கவைக்கும் ஆற்றலுக்கு ஒப்படைப்பதல்ல, சித்தத்தின் ஒப்படைப்பு வேண்டும்; நான் செய்துள்ளவைகளில் இனிமேலும் நம்பிக்கை வைக்காமல், தேவனில் மாத்திரம் நம்பிக்கை வைக்கிறதுவரை தேவனிலும் அவர் கூறுகிறவைகளிலும் மனப்பூர்வமாகத் துணிந்து செயல் படவேண்டும். நான் தேவனையல்ல, என் மனதின் அறிவாற்றலை மாத்திரம் நம்புவதே தடையாகிறது. உணர்ச்சிகளைப்பொறுத்தமட்டும், நான் எல்லாவற்றையும் கண்மூடித்தனமாக பணயம்வைக்கவேண்டும். விசுவாசிப்பதற்கு நான் சித்தங்கொள்ளவேண்டும்; காரியங்களை நான் பார்க்கிற என் பழைய முறைகளிலிருந்து விலக நானாகக் கடும் முயற்சி எடுத்து, அவரிடம் நான் சரணடையுமட்டும் அது ஒருபோதும் செய்யப்படமுடியாது.

ஒவ்வொரு மனிதனும் தான் அடைந்திருக்கிற நிலைக்கு அப்பால் எட்டும்படி உருவாக்கப்பட்டிருக்கிறான். தேவனே என்னை இழுத்துக்கொள்ளுகிறார்; அவரோடுள்ள என்னுடைய உறவு முதலாவதாக ஆளத்துவமான ஒன்று, அறிவுக்குரியது அல்ல. இந்த உறவுக்குள் தேவனுடைய அற்புதத்தினாலும், விசுவாசிப்பதற்கான என்னுடைய சொந்தச் சித்தத்தினாலும் அறிமுகப்படுத்தப்படுகிறேன்; அப்போது, இந்த நடவடிக்கையின் அற்புதத்தைக்குறித்துப் புத்திபூர்வமானப் பாராட்டையும் புரிந்துகொள்ளுதலையும் அடைய ஆரம்பிக்கிறேன்.

பிராயச்சித்தத்தில் நான் தனிநபராகப் பங்கெடுப்பது எவ்வாறு?

நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக்குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக. கலாத்.6:14.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் எப்போதும் சித்தத்தின் தீர்ப்பை வற்புறுத்துகிறது. பாவத்தைக்குறித்துக் கிறிஸ்துவின் சிலுவையில் தேவன் கொடுத்தத் தீர்ப்பை நான் அங்கீகரிக்கிறேனா? இயேசுவின் மரணத்தில் எனக்குக் கொஞ்சமேனும் ஆர்வம் உண்டா? அவருடைய மரணத்தோடு ஒன்றிக்கவும், அதாவது பாவம், உலகப்பற்று, சுயம் என்பவைகளிலுள்ள எல்லா ஆர்வத்துக்கும் கொல்லப்படவும் நான் விரும்புகிறேனா?--இயேசு தவிர மற்றெல்லாவற்றிற்கும் பயனற்றவனாகக்கூடிய நிலைக்கு அவரோடு ஒன்றிக்க நான் விரும்புகிறேனா? சீஷத்துவத்தின் பெரிய சிலாக்கியம் ஆண்டவருடைய சிலுவையின்கீழ் நான் உடன்படிக்கை செய்யமுடியும் என்பதே; அதன் கருத்து பாவத்துக்கு மரிப்பதே. இயேசுவைத் தனித்துச் சந்தித்து, ஒன்றில் பாவம் உங்களில் மரிக்க நீங்கள் விரும்பவில்லை என்று அவரிடம் கூறுங்கள்; அல்லது எந்த விலை கொடுத்தும் அவருடைய மரணத்தோடு ஒன்றித்துவிட நீங்கள் விரும்புகிறீர்கள் என்று அவரிடம் கூறுங்கள்; நமது ஆண்டவர் சிலுவையில் செய்திருப்பதில் உறுதியான விசுவாசத்தோடு செயல்பட்டதும், உடனடியாக அவருடைய மரணத்தோடு ஒரு தெய்வீக ஒன்றிப்பு உண்டாகிறது; அப்போது உங்கள் பழைய மனிதன் கிறிஸ்துவோடு சிலுவையிலறையப்பட்டாயிற்று என்று புத்திக்கெட்டாத அறிவினால் நீங்கள் அறிந்துகொள்வீர்கள். இயேசுகிறிஸ்துவின் சத்தத்துக்குக் கீழ்ப்படிவதற்கு உங்களுக்குள்ளிருக்கும் தேவனுடைய ஜீவன் உங்களை அற்புதமாக எளிதில் இயலச்செய்வதே உங்களிலுள்ள பழைய மனிதன் கிறிஸ்துவோடு சிலுவையிலறையப்பட்டாயிற்று என்பதற்குரிய சான்றாகும்.

நம்முடைய ஆண்டவரில்லாவிட்டால் நாம் எவ்வாறிருந்திருப்போம் என்பதைக் கண்டுகொள்ள இடைக்கிடையே அவர் நம்மை அனுமதிக்கிறார். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது என்று அவர் கூறியதை அது சரியென்று நிரூபிக்கிறது. ஆகவேதான் கிறிஸ்தவத்தின் அடித்தளம் கர்த்தராகிய இயேசுவுக்குநேராயுள்ள உணர்ச்சிகரமான ஆளத்துவ பக்தியே. ராஜ்யத்தைக்குறித்து நாம் முதலாவது அறியும்போது வரும் பரவசத்தைத் தேவனுடைய அரசுக்குள் அவர் நம்மைக் கொண்டு செல்லும் நோக்கம் என்று நாம் தவறாகக் கருதுகிறோம்; இயேசுகிறிஸ்துவோடுள்ள ஒன்றித்தலின் கருத்து என்னவென்று நாம் உணர்ந்துகொள்ள வேண்டுமென்பதே அவருடைய ராஜ்யத்துக்குள் அவர் நம்மைக் கொண்டு செல்லும் நோக்கமாகும்.

மறைந்திருக்கும் ஜீவன்

உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. கொலோ. 3:3.

கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிற ஜீவனுக்குரிய எளிய, சர்வவல்லமையுள்ள பாதுகாவலைக்குறித்து தேவஆவியானவர் சாட்சிகொடுக்கிறார்; அது நிருபங்களில் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ளது. பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கை செய்வது மிகவும் நிச்சயமற்றதுபோல நாம் பேசிக்கொள்ளுகிறோம்; ஆனால், அதற்குள்ளும் அதற்குப்பின்னாலும் சர்வவல்லமையுள்ள தேவன் இருக்கிறபடியால் அது மிகவும் கூடுதல் பாதுகாவலான வாழ்க்கையாகும். தேவனில்லாமல் வாழ முயற்சிப்பதே ஆபத்தானது. மறுபடியும் பிறந்திருக்கிற நாம், தேவனுடைய எச்சரிப்புக்குச் செவிகொடுத்து ஒளியிலிருப்போமேயானால், தேவனோடுள்ள சரியான உறவில் வாழ்வது மிகவும் எளிதான காரியம், தவறிப்போவதுதான் மிகவும் கடினமான காரியம்.

பாவத்திலிருந்து விடுதலைபெறுவது, ஆவியானவரால் நிரப்பப் படுவது மற்றும் ஒளியில் நடப்பது என்பவற்றைக்குறித்து நாம் சிந்திக்கும் போது மிகவும் உயரமும் அற்புதமுமான ஒரு மகாப்பெரிய மலையின் உச்சியைக் கற்பனைசெய்து, அங்கு நான் ஒருபோதும் வாழ்ந்துகொள்ள மாட்டேன் என்று கூறுகிறோம். ஆனால் தேவனுடைய கிருபையால் அங்கு நாம் சென்றடையும்போது, அது ஒரு மலையுச்சியல்ல, வாழவும் வளரவும் போதுமான இடமுள்ள பீடபூமி என்று கண்டுகொள்கிறோம். நான் நடக்கிற வழியை அகலமாக்கினீர் என்று கூறுவோம்.

நீங்கள் உண்மையாகவே இயேசுவைக் காணும்போது, நீங்கள் அவரைச் சந்தேகிப்பீர்களா என்று நான் சவால்விட்டுக் கேட்கிறேன். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக என்று அவர் சொல்லியிருக்க, அவரை நீங்கள் காணும்போது உங்கள் இருதயம் கலங்குமா என்று நான் சவால் விட்டுக் கேட்கிறேன்; ஏனெனில், அவர் அங்கிருக்கும்போது சந்தேகிப்பது தார்மீகமாகச் சாத்தியமற்றது. இயேசுவோடு நீங்கள் நேரடித் தொடர்புகொள் ளுகிற ஒவ்வொரு வேளையிலும் அவருடைய வார்த்தைகள் இயல்பானவை யாகின்றன. என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் என்று இயேசு சொன்ன சமாதானம் உச்சந்தலைமுதல் உள்ளங்கால்வரை எல்லாப் பாகத்துக்குமுரியது; அது அடக்கிவைக்கமுடியாத திடநம்பிக்கை. உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது, இயேசு கிறிஸ்துவின் அமைதியான சமாதானம் உங்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

அவருடைய பிறப்பும் நம்முடைய புதுப்பிறப்பும்

இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். ஏசா.7:14; மத்.1:23.

வரலாற்றில் அவர் பிறப்பு: ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும் (லூக்.1:35) என்று தேவதூதன் மரியாளுக்குக் கூறினார். இயேசுகிறிஸ்து உலகத்திலிருந்தல்ல, உலகத்துக்குள் பிறந்தார். அவர் வரலாற்றிலிருந்து முளைத்துவரவில்லை, புறம்பேயிருந்து வரலாற்றுக்குள் வந்தார். இயேசுகிறிஸ்து மனுக்குலத்தில் மிகச்சிறந்தவரல்ல, மனுக்குலத்தால் ஒருபோதும் விளக்கங்கூறமுடியாத ஒரு தனிநபர் அவர். அவர் மனிதன் தேவனாக ஆனவரல்ல, மனித அவதாரம் எடுத்த தேவன், மனித மாம்சத்துக்குள் வந்த தேவன், புறம்பேயிருந்து அதற்குள் வந்தார். அவருடைய வாழ்க்கை, எல்லாவற்றிலும் உயர்ந்ததும் பூரணத் தூய்மையானதுமாயிருந்தும், மிகவும் எளிமையான வாசல்வழியாய்ப் பிரவேசித்தது. நம்முடைய ஆண்டவரின் பிறப்பு ஒரு வருகையே.

என்னில் அவர் பிறப்பு: கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன் (கலாத்.4:19) என்றார் பவுல். நமது ஆண்டவர் புறம்பேயிருந்து மனித வரலாற்றுக்குள் பிரவேசித்தது போல எனக்குள்ளும் புறம்பேயிருந்து பிரவேசிக்கவேண்டும். என் தனிப்பட்ட மனித வாழ்க்கை தேவகுமாரனுக்குப் பெத்லகேமாக மாற நான் அனுமதித்திருக்கிறேனா? இயற்கையான பிறப்புக்கு முற்றிலும் வேறுபட்ட பிறப்பாகிய உன்னதத்திலிருந்து பிறக்காவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தின் அதிகார எல்லைக்குள் பிரவேசிக்கமுடியாது. நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும். இது ஒரு கட்டளை அல்ல; இது அடிப்படை உண்மை. கிறிஸ்து எனக்குள் உருவாகத்தக்கதாக என்னைத் தேவனுக்கு முற்றிலும் அர்ப்பணிப்பதே புதுப்பிறப்பின் சிறப்பியல்பாகும். கிறிஸ்து எனக்குள் உருவானவுடனே அவருடைய இயற்கைத் தன்மை என்மூலம் செயல்பட ஆரம்பிக்கிறது.

மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன்: இதுதான் உங்களுக்கும் எனக்கும் மீட்பின் மூலமாகச் சிறப்பாகச் சாத்தியமாக்கப்பட்டதாகும்.

ஒளியில் வைக்கப்படல்

அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ... அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். 1 யோவான் 1:7.

பாவத்திலிருந்து நாமாக விலகுவதைப் பிராயச்சித்தத்தின்மூலம் பாவத்திலிருந்து கிடைக்கும் விடுதலை என்று தப்பெண்ணம்கொள்ளுவது பெருந்தவறு. மறுபடியும் பிறக்கும்வரை ஒரு மனிதன் பாவம் என்னவென்று அறிவதில்லை. இயேசுகிறிஸ்து கல்வாரியில் சந்தித்ததுதான் பாவம். என்னிலிருக்கும் பாவம் எப்படிப்பட்டது என்பதை நான் அறிந்துகொள்ளுவதே பாவத்திலிருந்து விடுதலை அடைந்ததற்குரிய சான்றாகும். இயேசுகிறிஸ்து செய்த பிராயச்சித்தத்தின் இறுதி காரியம், அதாவது அவருடைய முழுமையான பூரணத்துவத்தைப் பகிர்ந்தளித்தது, பாவம் என்னவென்று மனிதர் அறியும்படிச் செய்கிறது.

தன்னுணர்வற்ற மண்டலத்திலும் நாம் உணர்ந்திருக்கிற மண்டலத்திலும் பரிசுத்த ஆவியானவர் பாவப்பரிகாரத்தை நம்மில் நிறைவேற்றுகிறார்; நமக்குள்ளிருக்கும் ஆவியானவரின் நிகரற்ற வல்லமையைப் புரிந்துகொள்ளும்போதுமாத்திரமே இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் (1 யோவான் 1:7) என்பதின் கருத்தை நாம் புரிந்துகொள்ளுகிறோம். நான் அறிந்து செய்கிற பாவங்களைமாத்திரம் இது குறிப்பதில்லை; எனக்குள் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவர்மட்டும் உணர்ந்துகொள்ளுகிற பாவங்களைக்குறித்த மிகவும் ஆழமான அறிவாற்றலையும் இது குறிக்கிறது.

தேவன் ஒளியிலிருப்பதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் என்று சொல்லும்போது, என்னுடைய மனச்சாட்சியின் ஒளியிலல்ல, தேவனுடைய ஒளியில் நடக்கவேண்டும்--ஒன்றையும் மறைத்துவைக்காதபடி நான் அங்கு நடக்கும்போது, அற்புதமான வெளிப்படுத்தல் உண்டாகிறது--சர்வவல்லமையுள்ள தேவன் என்னில் கண்டனஞ்செய்யத்தக்க யாதொன்றையும் காணமுடியாதபடி, இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களிலிருந்தும் என்னைச் சுத்திகரிக்கிறது. என்னுடைய மனச்சாட்சியில் பாவம் என்றால் என்ன என்னும் கசப்பான அறிவோடு அது செயல்படுகிறது. தேவனுடைய தூய்மைக்கு ஒவ்வாத எல்லாக் காரியங்களையும் பரிசுத்த ஆவியானவர் பகைக்கிறதுபோல நானும் பகைக்கும்படி எனக்குள் கிரியைசெய்கிற தேவ அன்பு உதவுகிறது. ஒளியில் நடப்பதென்றால் அந்தகாரத்துக்குரியவைகள் எல்லாம் ஒளியின் மையத்திற்கு மிகஅருகாமைக்குள் என்னை ஓட்டுகிறது என்றே பொருட்படும்.

போர் தோல்வியடைகிறதும் வெற்றியடைகிறதுமான இடம்

இஸ்ரவேலே, நீ திரும்புகிறதற்கு மனதாயிருந்தால் . . . என்று கர்த்தர் சொல்லுகிறார். எரே.4:1.

தேவனுக்கு முன்பானச் சித்தத்தின் மறைவான இடங்களில்தான் யுத்தம் தோல்வியடைகிறது அல்லது வெற்றியடைகிறது; முதலாவதாக ஒருபோதும் வெளிப்புறமான உலகத்திலல்ல. தேவனுடைய ஆவியானவர் என்னைப் பற்றிப்பிடித்திருக்கிறார்; அவரோடு தனித்திருந்து, அவருக்கு முன்பாகப் போராடி வெற்றிபெற நான் கடமைப்பட்டிருக்கிறேன். இது நிறைவேறும்வரை நான் ஒவ்வொரு வேளையிலும் தோல்வியடைகிறேன். போர் ஒரு நிமிடமோ அல்லது ஒரு ஆண்டோ எடுக்கலாம், அது தேவனை யல்ல என்னைச் சார்ந்தது; ஆனால், அதைத் தனிமையில் தேவனுக்கு முன் போராடியாகவேண்டும்; அவருக்குமுன் நான் ஒப்படைப்பின்வழியாக உறுதியோடு கடந்துசெல்லவேண்டும். தேவனுக்குமுன் யுத்தத்தில் போராடி வெற்றிபெற்ற மனிதன்மீது வேறெதற்கும் வல்லமையில்லை.

கடுஞ்சூழல்களுக்குள் பிரவேசிக்கும்வரை நான் காத்திருப்பேன், அதன்பின் தேவனைப் பரிசோதித்துப் பார்ப்பேன் என்று நான் கூறினால், என்னால் கூடாது என்பதைக் கண்டுகொள்ளுவேன். அந்நியர் தலையிட முடியாத என் ஆத்துமாவின் இரகசிய இடங்களில் எனக்கும் தேவனுக்கு மிடையே நான் காரியங்களை முடிவுசெய்யவேண்டும், அப்போது போரில் வெற்றிபெற்றாயிற்று என்கிற உறுதியோடு நான் முன்னேறிச்செல்லலாம். அங்கு தோல்விகண்டால், தேவனுடைய கட்டளைகள் எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாய் நாசம், பேராபத்து, அமைதிக்கேடு எல்லாம் நேரிடும். போரில் வெற்றியடையாததின் காரணம் நான் முதலாவது புறம்பான உலகத்தில் வெற்றிகாண முயற்சிக்கிறதே. தேவனோடு தனித்திருங்கள், அவருக்கு முன்பாகப் போராடி வெற்றிபெறுங்கள், அங்கேயே காரியத்தை என்றென்றைக்குமாக முடிவுசெய்யுங்கள்.

பிறமக்களோடு இடைபடும்போது சித்தத்தைப்பற்றிய பிரச்சனைக்கு அவர்களை வழிநடத்துவதே எடுக்கப்படவேண்டிய நிலை. அந்த வழியில் தான் அர்ப்பணம் ஆரம்பிக்கிறது. அடிக்கடி இல்லாவிட்டாலும் சிலசமயம் தேவன் நம்மை உச்சக்கட்டத்திற்குக் கொண்டுவருகிறார். வாழ்க்கையில் அது இருவழிகள் பிரியும் முக்கிய இடம்; அந்த இடத்திலிருந்து ஒன்றில் நாம் மேலும்மேலும் காலங்கடத்தும் பயனற்ற கிறிஸ்தவ வாழ்க்கைக்கு நேராகச் செல்கிறோம், அல்லது தேவனுடைய மகிமைக்காக கிரமமாகக் கூடுதல் எரிந்து பிரகாசிக்கிறவர்களாகிறோம்--அவருடைய மேன்மைக்கு என்னுடைய முழுமை.

தொடர்ச்சியான மனந்திரும்புதல்

நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால். மத்.18:3.

நமது ஆண்டவரின் இந்த வார்த்தைகள் நம்முடைய ஆரம்ப மனந்திரும்புதலுக்கு உண்மையானது; ஆனால், நம்முடைய வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியாக நாம் மனந்திரும்பிக்கொண்டேயிருக்கவேண்டும், குழந்தைகளைப்போல இடையறாது தேவனுக்குநேராகத் திரும்பவேண்டும். தேவனில் நம்பிக்கை வைப்பதற்குப்பதில் நம்முடைய புத்தியில் நம்பிக்கை வைப்போமானால், நாம் தவறான பின்விளைவுகளை உண்டாக்குகிறோம்; அவைகளுக்குத் தேவன் நம்மையே பொறுப்பாக்குவார். தேவனுடைய முன்கருதலால் புதிய நிலைகளுக்குள் நம்முடைய சரீரங்கள் கொண்டுவரப் பட்டவுடனே, நமது இயல்புவாழ்க்கை தேவஆவியானவரின் கட்டளைக ளுக்குக் கீழ்ப்படியும்படி நாம் கவனிக்கவேண்டும். ஒருதடவை நாம் அதைச் செய்தோம் என்பதால் மறுபடியும் நாம் அவ்வாறு செய்வோமென்பதற்கு எந்தச் சான்றுமில்லை. மாம்சமானதற்கு ஆவிக்குரியதோடுள்ள உறவு தொடர்ச்சியான மனந்திரும்புதலே; அந்த ஒரே காரியத்துக்குத்தான் நாம் மறுப்புக் கூறுகிறோம். நாம் வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு சூழலிலும் தேவஆவியானவர் மாற்றமில்லாதவராய் நிலைத்திருக்கிறார், அவருடைய இரட்சிப்புக்கும் மாற்றமில்லை; ஆனால், நாம் புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளவேண்டும். நாம் நம்மை மனமாற்றஞ்செய்ய மறுக்கும் ஒவ்வொரு வேளையும் தேவன் நம்மைப் பொறுப்பாக்குகிறார்; மறுப்பதின் நம்முடைய காரணம் மனப்பூர்வமான வீண்பிடிவாதமே. நம்முடைய மாம்ச வாழ்க்கை ஆளக்கூடாது, தேவனே நம்மில் ஆளுகைசெய்யவேண்டும்.

நாம் தொடர்ச்சியாக மனந்திரும்பாமலிருப்பதே நமது ஆவிக்குரிய வாழ்க்கையில் தடையாகும்; நம்முடைய வீண்பிடிவாதத்தினால் நம்முடைய பெருமை தேவனுடைய அரியணையில் உமிழ்ந்து, நான் மாட்டேனென்று கூறுகிறது. நாம் சுதந்திரத்தையும் வீண்பிடிவாதத்தையும் தேவர்களாக்கி, தவறான பெயர்களால் அவற்றை அழைக்கிறோம். தேவன் பிடிவாதமான பெலவீனம் என்று பார்க்கிறதை நாம் வலிமையென்று அழைக்கிறோம். இதுவரையும் கீழ்ப்படுத்தப்படாத பல பாகங்கள் நமது வாழ்க்கையிலுண்டு; இவ்விதமான தொடர்ச்சியான மனந்திரும்புதல்மூலமாகமாத்திரமே அவை களைக் கீழ்ப்படுத்தமுடியும். தேவனுடைய ஆவியானவருக்கு முழுப் பிரதே சத்தையும் நிதானமாக, ஆனால் திட்டமாக நாம் உரிமைகோரலாம்.

பின்வாங்கிப்போகிறவரா அல்லது பின்பற்றுகிறவரா?

அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள். யோவான் 6:66.

தேவன் என்ன எதிர்பார்க்கிறார் என்பதைக்குறித்தத் தரிசனத்தை அவருடைய வசனத்தின்மூலம் தம்முடைய ஆவியானவரைக்கொண்டு உங்களுக்குக் கொடுக்கும்போது உங்கள் மனதும் ஆத்துமாவும் களிப்படைந்தது; ஆனால், அத்தரிசனத்தின் ஒளியில் நீங்கள் நடக்காவிட்டால், நமது ஆண்டவர் ஒருபோதும் கொண்டிராத ஒரு கருத்தின் அடிமைத்தனத்திற்குள் நீங்கள் மூழ்கிவிடுவீர்கள். பரம தரிசனத்துக்கு மனதில் கீழ்ப்படியாமலிருப்பது, இயேசுகிறிஸ்துவுக்கு அந்நியமான கருத்துக்களுக்கு உங்களை அடிமையாக்கும். வேறொருவரைக் கவனித்துப் பார்த்து, அவருக்கு அந்தக் கருத்துக்கள் இருந்தும் அவர் விருத்தி அடையக்கூடுமானால் என்னால் ஏன் கூடாது? என்று கூறாதேயுங்கள். தேவன் உங்களுக்குத் தந்த தரிசனத்தின் வெளிச்சத்தில்தான் நீங்கள் நடக்கவேண்டுமேதவிர உங்களைப் பிறரோடு ஒப்பிடாதீர்கள், அவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதீர்கள்; அது அவர்களுக்கும் தேவனுக்குமிடையே உள்ள காரியம். உங்களுக்கு இன்பகரமாகத் தோன்றுகிற ஒரு கருத்து பரம தரிசனத்தோடு மோதுகிறது என்று நீங்கள் கண்டு அதைக்குறித்து விவாதிப்பீர்களானால், சொத்தைக் குறித்த உணர்வு, தனிநபர் உரிமையின் உணர்வுபோன்று இயேசுகிறிஸ்து பொருட்படுத்தாத காரியங்கள் உங்களில் விருத்தியடைய ஆரம்பிக்கும். இயேசுகிறிஸ்துவுக்கு அந்நியமான எல்லாக் காரியங்களுக்கும் இவைகள் வேராயிருக்கின்றன என்ற காரணத்தால், அவர் இவைகளுக்கு எப்போதும் எதிராயிருந்தார். ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார் இயேசு. இதை நாம் புரிந்து கொள்ளவில்லையென்றால் அதன் காரணம் நம்முடைய ஆண்டவருடைய போதனையின் உள்நோக்கத்தைப் புறக்கணிப்பதே.

நாம் முன்பு பெற்றிருந்த அற்புதமான அனுபவத்தின் நினைவில் மல்லாந்து படுத்து குளிர்காய வாய்ப்புண்டு. தேவனுடைய ஒளியினால் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்ட ஒரு அளவுகோல் இருக்குமானால், நீங்கள் அந்த அளவை எட்டாமலிருந்தாலோ, அல்லது அந்த அளவை எட்ட மனவிருப்பமற்றிருந்தாலோ அதுதான் பின்வாங்குதலின் ஆரம்பம்; ஏனென்றால், உங்கள் மனச்சாட்சி சத்தியத்துக்குக் கீழ்ப்படியவில்லை என்று பொருளாகிறது. ஒரு சத்தியம் திறந்து காட்டப்பட்டபின் நீங்கள் ஒருபோதும் முன்புபோல் இருக்கமுடியாது. நீங்கள் இயேசுகிறிஸ்துவின் கூடுதல் உண்மையான சீஷர்களாக வாழப்போகிறீர்களா அல்லது பின்வாங்குகிறவர்களாயிருப்பீர்களா என்பதை அந்தத் தருணம் தீர்மானிக்கும்.

நாம் பெற்றிருக்கிற ஒவ்வொரு நற்பண்பும்

எங்கள் ஊற்றுகளெல்லாம் உன்னில் இருக்கிறது. சங்.87:7.

நம்முடைய இயற்கையான நற்பண்புகளை நமது ஆண்டவர் ஒருபோதும் ஒட்டுப்போடுகிறதில்லை, முழுமனிதனையும் அவர் உள்ளாகத் திரும்பப் படைக்கிறார். புதிய மனிதனைத் தரித்துக்கொள்ளுங்கள்--புதிய வாழ்க்கைக்கு ஒத்த அங்கியை உங்கள் இயற்கையான மனித வாழ்க்கைத் தரித்துக்கொள்ளக் கருத்தாயிருங்கள். தேவன் நமக்குள் வைக்கிற ஜீவன் அதினுடைய சொந்தப் பண்புகளை விருத்தியாக்குகிறது; அவை ஆதாமின் பண்புகளல்ல, இயேசுகிறிஸ்துவின் நற்பண்புகளே. இயேசுவின் உயிர்த் தெழுந்த ஜீவனாகிய நீர்த்தேக்கத்திலிருந்து உங்கள் ஜீவனை இறைத்துக் கொள்ள நீங்கள் கற்றுக்கொள்ளுமட்டும், பரிசுத்தமாகுதலுக்குப் பின்னுள்ள உங்களுடைய இயற்கையான நற்பண்புகளிலும், உங்களுக்கிருக்கிற எந்த ஆற்றலிலும் நீங்கள் வைத்திருக்கிற நம்பிக்கையை எவ்வாறு அழிந்து போகச்செய்வார் என்பதைக் கவனியுங்கள். நீங்கள் உலர்ந்துபோகும் அனுபவம் வழியாகக் கடந்துசென்றால் ஆண்டவரை ஸ்தோத்திரியுங்கள்!

தேவன் நம்மில் கிரியை செய்கிறார் என்பதற்குரிய அடையாளம் இயற்கைப் பண்புகளிலுள்ள நம்பிக்கையை அவர் கெடுப்பதே. ஏனெனில், அவைகள் நாம் எப்படியிருக்கப்போகிறோமென்பதற்கான வாக்குறுதிகளல்ல, மனிதன் எவ்வாறிருக்கவேண்டுமென்று தேவன் படைத்ததின் மீந்தவையே. நாம் இயல்புப் பண்புகளில் தொங்கிக்கொண்டிருப்போம்; அதேவேளையில் தேவனோ, இயல்புப் பண்புகளின்தொடர்பில் விவரிக்கமுடியாத இயேசு கிறிஸ்துவின் ஜீவனோடு நம்மைத் தொடர்புக்குக்கொண்டுவர எப்போதும் முயற்சிக்கிறார். தேவனுடைய ஊழியத்திலிருக்கும் மக்கள் தேவனுடைய கிருபை அவர்களுக்கு ஒருபோதும் கொடுத்திராததில் சார்ந்திருப்பதையும், தற்செயலாகப் பாரம்பரியத்தினால் அவர்களிலிருப்பவைகளில் நம்பிக்கை வைப்பதையும் பார்ப்பது உள்ளதில் மிகவும் துக்கமான காரியம். தேவன் நம்முடைய இயற்கைப் பண்புகளை விருத்தியாக்கி, அவைகளை உருமாற்றுவதில்லை. ஏனெனில், நம்முடைய இயற்கைப் பண்புகள் இயேசுகிறிஸ்து எதிர்பார்ப்பதற்கு எவ்வளவு அருகாமையிலும் ஒருபோதும் வருவதில்லை. எந்த இயற்கையான அன்பும், எந்த இயற்கையான பொறுமையும், எந்த இயற்கையான தூய்மையும் அவருடைய எதிர்பார்ப்பை எட்டுவதில்லை. நமது சரீரத்துக்குரிய ஜீவனின் ஒவ்வொரு பாகத்தையும் தேவன் நமக்குள் வைத்திருக்கிற புதிய ஜீவனோடு இணக்கப்படுத்தும்போது, கர்த்தராகிய இயேசுவின் தன்மைக்கொத்த நற்பண்புகளை நம்மில் வெளிப்படுத்துவார்.

நம்மிடமிருக்கிற ஒவ்வொரு நற்பண்பும்
அவருக்கு மாத்திரமே சொந்தம்.

நாம் குறிப்பைக் கடைப்பிடிப்போம்

நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப்போகாமல், எப்பொழுதும்போல இப்பொழுதும், மிகுந்த தைரியத்தோடே . . . கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய், அப்படி முடியும். பிலிப்.1:20.

அவருடைய மேன்மைக்கு என்னுடைய முழுமை: நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப் போகக்கூடாது என்பதே எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சையும் நம்பிக்கையும் என்று பவுல் கூறுகிறார். எக்காரியத்தில் நாம் நம்மை இயேசுவுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமேன்று அவர் எதிர்பார்க்கிறாரோ அதில் நம்மை ஒப்புக்கொடுக்காவிட்டால் அதிக வெட்கமடைவோம். அவருடைய மேன்மைக்கு என்னுடைய முழுமையையும் ஒப்புக்கொடுக்கத் தீர்மானித்திருக்கிறேன் என்றே பவுல் கூறுகிறார். அந்த நிலையைச் சென்றடைவது வாதத்தாலோ தர்க்கத்தாலோ அல்ல, சித்தத்தைப் பொறுத்தது; அதற்கு அர்ப்பணிக்கப்பட்ட சித்தம் தேவை; இக்காரியத்தில் ஒருக்காலும் மாற்றமுடியாத அர்ப்பணம் தேவை. நாம் பிறருக்காகக் அக்கறைப்படுகிறோம் என்று சொன்னாலும், நம்மைப் பற்றிய மட்டுமீறிய ஆர்வமே இத்தகைய தீர்மானம் செய்யாதபடிக்கு நம்மைத் தடைசெய்கிறது. இயேசுவின் அழைப்புக்கு நாம் கீழ்ப்படியும்போது பிறர் எத்தகைய கிரயம் கொடுக்கவேண்டியதுவரும் என்று நாம் அக்கறைப்படுவோமானால் நம்முடைய கீழ்ப்படிதலினால் வரும் பலனை அவர் அறியாரென்று தேவனிடம் கூறுகிறோம். குறிப்பைக் கவனியுங்கள்; அவருக்கு யாவும் தெரியும். மற்ற எல்லாக் கருதல்களையும் அடக்கிவிட்டு, அவருடைய மேன்மைக்கு என்னுடைய முழுமையும் என்ற ஒரேயொரு காரியத்துக்காக தேவனுக்கு முன்பாக அமர்ந்திருங்கள். அவருக்காக, அவருக்காகமாத்திரமே நான் முற்றிலும் பூரணமாக வாழத் தீர்மானித்திருக்கிறேன்.

அவருடைய பரிசுத்தத்திற்கு என்னுடைய தடையில்லாமை: ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும் (வச.20) என்றும் வாசிக்கிறோம். தேவன் விரும்புகிறதைத் துல்லியமாகச் செய்ய அவரை ஒன்றும் தடுக்காது என்று பவுல் தீர்மானித்தார். தேவனுடைய மிருதுவான வழியை நாம் கவனிக்கமாட்டோமாகையால் அவருடைய ஒழுங்கு நம்முடைய வாழ்க்கையில் ஒரு நெருக்கடியைக் கொண்டுவரவேண்டும். நம்முடைய முழுமையையும் அவருக்கு என்று அவர் கேட்கும் ஒரு இடத்திற்கு நம்மைக் கொண்டுவருகிறார், நாம் விவாதிக்க ஆரம்பிக்கிறோம்; அப்போது நாம் ஏற்கவோ எதிர்க்கவோ தீர்மானித்தாகும் படியான ஒரு நெருக்கடியைத் தெய்வாதீனமாக உருவாக்குகிறார். அந்த நேரம்முதல் முக்கியமான தீர்மானம் செய்யவேண்டிய கட்டம் ஆரம்பிக்கிறது.

எந்நிலையிலேயாவது நெருக்கடி உங்களுக்கு வந்திருந்தால் உங்கள் சித்தத்தை முற்றிலும் மாற்றமுடியாதபடி அவருக்கு ஒப்படைத்துவிடுங்கள்.

நேற்றையத் தினம்

இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிறகே உங்களைக் காக்கிறவராயிருப்பார். ஏசா.52:12.

நேற்றிலிருந்து பாதுகாவல்: நடந்ததையோ தேவன் விசாரிப்பார். தேவன் வருங்காலத்துக்கு வைத்திருக்கிறவைகளை ஆண்டின் இறுதியில் நாம் ஆவலோடு நோக்குகிறோம்; ஆயினும், கடந்தகாலங்களை நினைப்பதால் கவலை எழும்பலாம். தேவனுடைய கிருபைகளைத் தற்காலம் அனுபவிப் பதைக் கடந்தகாலப் பாவங்களையும் தவறுகளையுங்குறித்த நினைவு தடுக்கலாம். ஆனால், தேவன் நம்முடைய கடந்த காலங்களின் தேவன்; எனவே, கடந்தகாலத்தை வருங்காலத்துக்கு ஆவிக்குரிய கலாச்சாரத்தின் தொண்டாக மாற்ற நம்முடைய கடந்தகாலங்களின் நினைவுகளைத் தேவன் அனுமதிக்கிறார். தற்காலத்தில் மிகவும் மேலோட்டமான பாதுகாவலுக்குள் நாம் பிரவேசியாமலிருக்கும்படி கடந்த காலத்தைக்குறித்துத் தேவன் நமக்கு நினைவுபடுத்துகிறார்.

நாளைக்கான பாதுகாவல்: கர்த்தர் உங்கள் முன்னே போவார். நாம் தோல்வி அடைந்த இடத்தில் தேவன் பாதுகாவலை வலுப்படுத்துவார் என்பது கிருபையின் வெளிப்படுத்தல். காரியங்கள் அத்தகையத் தோல்விக்குள் நம்மை மறுபடியும் தடுக்கிவிழப்பண்ணாதபடி அவர் காவல்செய்வார்; அவர் நமது பின்புறம் பாதுகாவலாயிராவிட்டால், அவைகள் நம்மைத் திட்டமாய் விழச்செய்யும். தேவனுடைய கரம் கடந்தகாலம்வரையிலும் சென்று, அதை நம்முடைய மனச்சாட்சிக்கு ஒரு கணக்குத்தீர்க்கும் அலுவலகமாக்குகிறது.

இன்றைக்கான பாதுகாவல்: நீங்கள் தீவிரித்துப் புறப்படுவதில்லை. வரப்போகிற ஆண்டிற்குள்ளே நாம் பிரவேசிக்கும்போது, தீவிரமிக்கதும் கவனமற்றது மான மகிழ்ச்சியின் வேகத்திலோ அல்லது திடீர் உணர்ச்சி காரணமான முன்கருதலின்மையோடோ அல்ல, இஸ்ரவேலின் தேவன் நமக்குமுன்னே போவாரென்ற அறிவால் வரும் பொறுமையான வல்லமையோடு செல்லக் கடவோம். நம்முடைய கடந்த காலம் சீர்செய்ய முடியாத காரியங்களை முன்வைக்கிறது; ஒருபோதும் திரும்பிவராத பல சந்தர்ப்பங்களை நாம் இழந்துவிட்டோம் என்பது உண்மை; ஆனால் தேவனோ, அழிக்கக்கூடிய இந்தக் கவலையை வருங்காலத்துக்கு ஆக்கபூர்வமான சிந்தனையாக மாற்றி அமைப்பார். கடந்தகாலம் தூங்கட்டும், ஆனால் அது கிறிஸ்துவின் மடியில் தூங்கட்டும்.

செப்பனிடப்படமுடியாத கடந்த காலத்தை அவர் கரத்தில் விட்டு விடுங்கள்; தடுக்கமுடியாத வருங்காலத்திற்குள் அவரோடு அடியெடுத்து வையுங்கள்.